# சொப்பன சுந்தரி

எண்டமூரி வீரேந்திரநாத்

சுசீலா கனகதுர்கா

திருமகள் நிலை
55.வெங்கட்நாராயணா ரோ
தி.நகர்,சென்னை-600

# கதை படிப்பதற்கு முன் ...!

ஏழைமை நிலையில், பெண்களே நிறைந்த ஒரு குடும்பம் என்றால், எப்படி யிருக்கும்?

ஆண் துணையற்றவர்களாக, அவப் பெயர், பழிச் சொற்களை நாள்தோறும் ஏற்று வாழ்வது எப்படி?

சிறு வயதிலேயே பெண் படும்பாடு.....

படிக்கத் துடிக்கும் இளநெஞ்சின் ஏக்கம்.... வறுமையும் ஏளனங்களும் இன்னல்களாகச் சூழ்கின்ற கொதிநிலை....

வறுமையில் வயிற்றுப் பாட்டுக்கே திண்டாடும் பெண் கள், வயது வந்த பெண்களாகவும் இருந்தால், அண்டை அயலார், ஆண்களும் பெண்களுமாகச்செய்யும் கொடுமைகள் தாம் எத்தனை எத்தனை... ஓ, மனிதர்களே இல்லையோ....!

ஏக்கமும் எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் எப்படி யெல்லாம், பெண்களடங்கிய ஒரு குடும்பத்தில் பொங்கிப் புரண்டு மோதி அலைகழிக்கின்றன.....

கதையல்ல இது; கண்ணால் காணும் காட்சி! எழுத்துக் வையல்ல, உணர்ச்சி நிறைந்த, உயிர் கொண்ட உண்மை யங்கள்! படிப்போர் நெஞ்சம் டதைபதைக்கும்; உலக ளை உள்ளது உள்ளபடி தோலுரித்துக் காட்டும் ...ப்பு இது.

நல்லவன் என்று நம்பி மோசம் போன ஒரு நல்லவள்; அவளுக்கு இரு பெண்கள்; இவர்களை வைத்துக் காப்பாற்றப் பெரும்பாடுபடுகின்ற ஒரு மூதாட்டி! இவர்கட்கு வரிசையாக வரும் துன்பங்கள், சோதனைகளுக்கிடையே ஒரு அன்பு நெஞ்சமாக வருகிற டாக்டர், அந்த டாக்டரின் வழியாக அக்குடும்பம் படிப்படியாக முன்னேற்றம் காணும் விந்தை-ஆறுதலான நம்பிக்கையாக வாசகர்களைக் கவர்ந்துவிடுகின்றது.

எத்தனை முதிர்ச்சியுடன் இந்த அரிய கதையை உருவாக்கியுள்ளார் ஆசிரியர் என்பதைப் படிப்போர் எளிதில் உணர்ந்து போற்றுவர்; ஆசிரியர்க்கு எமது அன்பான நன்றியுரியது.

வாழ்க்கைச் சிக்கலையும் மனிதத்தன்மை மலர்ச்சி பெறுவதற்குரிய பக்குவத்தையும் ஒருசேரத் தந்துள்ள ஓர் அரிய படைப்பு இது. அன்பர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.

— பதிப்பகத்தார்

புத்தகம் தரப்படமாட்டா

# 'சொப்பன சுந்தரி'

இன்ப அமைதி தரும் இரவு வேளை அது. அந்த நீளமான வெள்ளைக்கார் சிறகுகளை விரித்துக்கொண்டு பறந்து வந்தாற் போல அந்த விசாலமான நவீன பங்களாவிற்கு முன் வாசல் வந்து நின்றது. பங்களாவின் பெரியகேட்டுகள் திறந்து கொண்டன. கார் விர்ரென்று வேகமாய் உள்ளே வந்து போர்ட்டிகோவில் நின்றதுமே வேலையாள் ஓட்டமாய் ஓடி வந்து கார்க் கதவைத் திறந்து பிடித்துக்கொண்டு விநயமாய் நின்றான்

பங்களாவின் முன் எல்லையில் நைட் குயின் போன்ற வாசனைப்பூக்கள் மலர்ந்து குப்பென்று மயக்கத்தை உண்டாக்கின. அது எல்லையில்லாத சுகத்தைத் தந்தாற்போலிருந்தது. காரிலிருந்து ஜரிகைக் கரை போட்ட கருப்பு ஷிபான் புடவையும் கையில்லாத ரவிக்கையும் அணிந்து காதுகளிலும், கைகளிலும், கழுத்திலும், வைர நகைகள் பளிச்சிட்டுக் கொண்டிருக்க, ஒரு பெண் இறங்கினாள். அவள் காரை விட்டிறங்கி உள்ளே போனபொழுது ஃபாரின் பெர்ஃப்யூம் மணம் குப்பென்று வந்து வீசி, தானும் அந்த வீட்டு எல்லையிலிருந்த பூக்களின் மணத்தோடு போட்டியிட்டாற்போலத் தோன்றிற்று. அவள் நடையில் அப்சரஸைத் தோற்கடிக்கக் கூடிய சொகுசு இருந்தது.

நிமிர்ந்து பார்த்த விதத்தில் மகாராணியின் மிடுக்கு இருந்தது. அவளைப் பார்த்தபொழுது அழகும் செல்வமும் போட்டி போட்டுக்கொண்டு அவளிடம் சேவகம் புரிந்து கொண்டிருந்தாற்போலத் தோன்றிற்று.

அவள் படியேறி உள்ளே வந்துகொண்டிருந்தாள்.

முன் சீட்டிலிருந்து இறங்கிய பருமனான ஆள் பெரிய ரோஜாப் பூமாலையை ஒருகையிலும், 'கலைராணி மேகலா' என்ற பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட்ட பரிசுப் பொருளை இன்னொரு கையிலுமாய்ச் சுமந்துகொண்டு அவளைப் பின் தொடர்ந்து வந்தனர்.

உள்ளே வந்த அவள் விசாலமான ஹாலில் நின்று கொண்டு, 'அம்மீ' என்று கூவினாள். பதில் இல்லை. 'அம்மீ' இன்னொரு முறை பெரிதாய்க் கூப்பிட்டாள். அவள் கூவவே அவளுக்குப் பதிலானாற்போல அந்த அறைச் சுவர்கள் அக் கூவலை எதிரொலித்தனவே தவிர, அம்மாவிடமிருந்து பதில் வரவில்லை.

'அம்மா இல்லீங்கம்மா' எதிரே வந்த சமையல்காரி கோமதி பதிலளித்தாள்.

'அம்மா இல்லையா? எங்கே போயிட்டாங்க?' ஆச்சரியமடைந்தவளாய்க் கேட்டாள்.

தாய் வீட்டை விட்டுக் காலடி எடுத்து வைப்பது என்பது எட்டாவது உலக அதிசயம்! அது இன்றைக்கு நடந்திருக்கிறது என்றால், வியப்பாய்தான் இருந்தது.

'பாட்டி எங்கே?'

'அவங்களும் இல்லை.'

பாட்டி இல்லாததில் ஆச்சரியம் ஒன்றும்இல்லை. ஏனெனில், பாட்டி எப்பொழுதும் எங்கே இருப்பார் என்று



யாருக்கும் தெரியாது. அவளுக்கு மகான்கள், கோவில், கோபுரம், பஜனை, உறவினர்கள் என்று எத்தனையோ வியாபங்கள்.

'மானஸா என்ன பண்ணுகிறாள்?'

'அவங்களும் இல்லைம்மா! கோபுவை அழைச்சுட்டுப் போயிட்டாங்க.'

எல்லோரும் போயிட்டாங்களா?' மேகலாவின் கண்களில் ஆச்சரியம். அதை உடனே கோபம் விழுங்கி விட்டது. கோபத்துடன் பார்த்து, 'அவங்க போனால் போய்க்கட்டும். அந்தச் சின்னக் குழந்தையை ஏன் கூட்டிட்டுப் போனாங்க?' கேட்டாள்.

மேகலா சுவர்க்கடியாரத்தைப் பார்த்தாள். மணி பத்தேகால்.

'அவன் பால் குடிச்சுட்டுப் படுத்துக்கற வேளை. போன வாரம் வந்த ஜுரத்தால் இன்னும் பலவீனமாகவே இருக்கிறான். இவ்வளவு பேரும் ஒரேயடியாய் கச்சை கட்டிக் கொண்டு எங்கேதான் போனாங்களாம்? ஏன் போனாங்க'?

கோமதி பதில் பேசவில்லை.

'ஏன் பேசமாட்டேங்கிறாய்? உன்னைத்தான்!'

'எனக்குத் தெரியாதும்மா'. கோமதி எவ்வளவு வினயமாய்ச் சொன்னாளோ அத்தனைக்கத்தனை கோபம்பொங்கி வந்தது மேகலாவுக்கு.

'தெரியாதா? நீ வீட்டில் இல்லையா?'

இருந்தேன் என்பதாகத் தலையாட்டினாள்.

பின்னே? வீட்டில் இருக்கிறவள், வீட்டைப் பார்த்துக்கச் சொல்லி உன்னிடம் ஒப்படைத்தால், யார் யார் எங்கெங்கே

போறாங்கன்னுகூடத் தெரியாமல் சமையற்கட்டில் உட்கார்ந்துட்டிருந்தாயா? இன்னும் இங்கேயே நின்னுகிட்டுத் திருதிருன்னு விழிச்சிட்டிருக்காதே. போ அப்பால்!' கத்தினாள்.

எஜமானியின் கத்தல் அந்த வீட்டில் வேலைக்காரர்கள் அனைவருக்கும் பழக்கப்பட்டதுதான். இப்பொழுது கத்தினாலும் இன்னும் ஒரு மணி நேரங் கழித்து அவளே கூப்பிட்டு, ஏதாவது சாக்கை வைத்துக்கொண்டு மெதுவாய்ப் பேசுவாள். அனாவசியமாய்க் கோபித்துக்கொண்டு விட்டோமே என்ற பச்சாதாபத்துடன் கேட்காத பரிசுப் பொருட்களை அவளே தருவாள்.

மேகலா படியேறி மாடியிலிருந்த தன் அறைக்கு வந்தாள். அறைக்குள் வேலைக்காரப் பெண் காசி தயாராய் இருந்தாள். எஜமானி வந்ததுமே கையிலிருந்த ஹேண்ட் பேக்கை வாங்கி மேஜைமேல் வைத்தாள். மேகலா நகைகளைக் கழற்றி டிரெஸ்ஸிங் மேஜைமேல் வைத்துக் கொண்டிருக்கையில், அவசரம் அவசரமாய் நாற்காலி ஒன்றைக் கொண்டு வந்து போட்டாள், அவள் உட்காருவதற்காக.

மேகலா அந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். காசி வந்து பின்னால் நின்றுகொண்டு க்ளியோபாத்ராவைப் போல ஃபேஷனாய்ப் போட்டுக் கொண்டிருந்த அந்த உயரமான கொண்டையைச் சுற்றிலுமிருந்த பின்களைப் பிரித்து எடுத்தாள் மிக ஜாக்கிரதையாய்.

'அம்மா அவங்கள்ளாம் எங்கே போனாங்கன்னு உனக்குத் தெரியுமா காசி?' என்றாள்.

'தெரியாதும்மா. நீங்க அந்தப் பக்கமாய்ப் போனதுமே மானஸா அம்மாவும், சுபாஷ் ஐயாவும் ஏதோ உரக்கப் பேசிக்கிட்டாங்க. அதற்கப்புறமாய் அவர் போய் டாக்ஸி



கொண்டு வந்தார். மொதல்ல அம்மா போகலை. மானஸா அம்மா அவங்க அறைக்குள் போனாங்க. அவங்க என்ன சொன்னாங்களோ தெரியாது; உடனே அம்மாவும் அவங்களோடு போனாங்க.'

காசி மிக வினயமாய் மேகலாவின் மேக்கப்பைப் பஞ்சினால் மளமள வென்று துடைத்துக்கொண்டே சொன்னாள்.

மேகலாவுக்கு மிகக் கோபம் வந்தது. அவர்கள் ஒன்றும் சின்னக் குழந்தைகள் இல்லையே, எங்கே தொலைந்து போய் விடுவார்களோ என்று அவள் பயப்படுவதற்கு! சொல்லி விட்டுப் போக வேண்டும் என்ற புத்திகூடவா இல்லை? அதற்காக அவளால் கவலைப் படாமல் இருந்துவிட முடியுமா? மேகலாவுக்குச் சோர்வாய் இருந்தது. காலையிலிருந்தே மனம் சரியாய் இல்லை. இன்றைக்கு ஃபங்ஷனுக்குப் போகும்பொழுது என்றும் போல அவளோடு வர மறுத்துவிட்டார்கள், பாட்டியும் மானசாவும். அவளும் அவர்களைக் கெஞ்சவில்லை. தனியாகவே போனாள். அங்கே ஃபங்ஷன் எவ்வளவு நன்றாய் நடந்தேறிற்று? அந்தக் கைதட்டல் ஓசைகள் இன்னும் அவள் காதுகளில் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது. அந்தச் சமயத்தில் பாட்டியும் மானஸாவும் இல்லாமல் போனது மிகக் குறையாய்த் தோன்றிற்று.

மேகலா யோசனையில் ஆழ்ந்தபடியே மேஜைக்கருகில் வந்தாள் அங்கே கவர் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. மேகலா அதைக் கிழித்து அதிலிருந்த காகிதத்தை உருவிப் பார்த்தாள். அது மானஸா எழுதிய கடிதம். அதில் இவ்வாறு இருந்தது.

'அன்புள்ள அக்காவுக்கு,

மானஸா எழுதிக் கொண்டது. நேற்று நடந்த பூசலால் எங்கள் எல்லோருடைய மனங்களும் காயமடைந்து விட்டன.

'நீ, 'இது என் வீடு, என்னிஷ்டம், என் காரியங்களை ஒப்புக்க முடியாதவங்க இங்கிருந்து தாராளமாய்ப் போய் விடலாம்' என்று சொன்னாய். அதைவிட, 'என் வாழ்க்கையை என்னிஷ்டப்படி அமைத்துக் கொள்வேன். நீங்கள் யார் கேட்பது?' என்று சொல்லியிருந்தால் வாயை மூடிக் கொண்டிருந்திருப்போம்.

'இன்றைக்கு உனக்குப் பெயரும் புகழும் இருக்கின்றன. அளவற்ற செல்வமும் இருக்கிறது. உனக்கு வேண்டியவர்களும் நிறைய பேர் இருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் எல்லோரும் நீ எண்ணிக் கொண்டிருப்பது போல நேர்மையானவர்கள் ஒன்றும் இல்லை என்று எங்களுக்குத் தெரியும். அதனால் நீ அவர்கள் கையில் சிக்குண்டு விடாமல் இருக்கவேண்டுமே என்றுதான் உன்னைச் சுற்றிலும் முள்வேலியைப்போலக் காவல் காத்துக் கொண்டிருந்தோம். ஆனால் இன்று எந்த வேலி இவ்வளவு நாளாய்ப் பாதுகாவலாய் இருந்ததோ அந்த வேலியையே பயிர் வெறுக்கிறது. உன் உதாசீனங்களைப் பொறுத்துக் கொள்ளும் பொறுமை எங்களிடம் நசிந்துப் போய்விட்டது. எங்களுக்கும் தன்மானம் இருக்கிறது. உன்னைப் போல ஆடம்பரமாய் வாழ முடியாவிட்டாலும் எங்கள் வாழ்க்கையை எங்களால் வாழ முடியும்.

'இக்காலத்தில் பணமில்லாதவர்களைவிட பணம் உள்ளவர்களுக்குத்தான் கஷ்டங்கள் அதிகம். அந்தச் செல்வம் என்ற பிரகாசத்தைச் சுற்றி அபிமானிகள் என்ற புழுக்கள் நிறைய சேரும். உனக்கு எல்லாம் தெரியும்!

'அக்கா! நீ கல்யாணம் பண்ணிக்கொள்ள விரும்பினால் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் நீ தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கும் இந்த கிருஷ்ணராஜ் மனைவியைக் கொன்ற கொலையாளி! நீ போயும் போயும் உன் வாழ்க்கையை அவனோடு இணைத்துக் கொள்ளப்



போகிறேன் என்று சொல்வதைக் கேட்டு எங்களால் தாங்க முடியவில்லை. உன் நலனைக் கருதுபவர்களாய் உன்னைத் தடுப்பது எங்கள் தர்மம். அவன் தன் வார்த்தைகளின் மாயா ஜாலத்தால் உன்னை நன்றாய் மயக்கிவிட்டிருக்கிறான். அவனை மணந்துகொண்டால் நீ பெறப்போவதைவிட இழக்கப்போவதுதான் அதிகமாய் இருக்கும்.

'பேரும் புகழும் பெற்ற மேகலா யாரை மணந்துக் கொள்ளப் போகிறாள்? ஒரு கொலையாளியை! மனைவியைத் தயையின்றிக் கொன்றுவிட்ட ஒரு காதகனை! அக்கா! தயவுசெய்து இந்த வழியை விட்டு விலகி வா! உன்னை வழிக்குக்கொண்டு வர முடியாமல் போனால் நாங்களே உன் வழியிலிருந்து விலகிப் போவதுதான் நல்லது என்று நினைத்து விட்டோம். எல்லோரும் உன் தலையெழுத்து என்று உதறிவிட்டார்கள். எனக்கு மட்டும் இன்னும் முயற்சி பண்ண வேண்டும் போலிருக்கிறது.

'சுபாஷை நேற்று நீ சொன்ன வார்த்தைகள் புண்படுத்தி விட்டன. அவர் இனி ஒரு நிமிஷம் கூட இந்த வீட்டில் இருக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார். நான் அவர் மனைவி. அவரைத் தொடர்ந்து போய் விடுவதுதான் என் தர்மம். என் தர்மத்தை நான் நிறைவேற்றுகிறேன். அக்கா!

'அம்மா எவ்வளவு குமுறிக் கொண்டிருக்கிறாள் தெரியுமா? தேம்பித் தேம்பி அழுது கொண்டேயிருக்கிறாள்! அம்மாவின் மேல் உனக்கு எவ்வளவு பாசம்! என் மேலுந்தான் எவ்வளவு அன்பு! இந்த அன்பெல்லாம் உன்னுள் என்னவாகி விட்டன அக்கா? கோபுவை என்னோடு கூட்டிச் செல்ல வேண்டியதுதான். எனக்குத் தெரியும், ஏங்குவான். எவ்வளவு சந்தோஷமாய் அவனை வளர்த்து வந்தோம்? எங்கிருந்து வந்து சேர்ந்தான் இந்த கிருஷ்ணராஜ்? நம் எல்லோருடைய வாழ்க்கையிலும் சனியாய் வந்து தோன்றி யிருக்கிறான். இல்லா விட்டால் என்றாவது நீ இப்படி நடந்து கொண்டிருக்கிறாயா?

'அக்கா, கடைசி முறையாய் கை கூப்பி வேண்டிக் கொள்கிறேன். நாங்கள் எங்கள் மனதிலுள்ள வருத்தத்தைத் தெரியப்படுத்திக் கொள்வதற்காகவே இந்த வீட்டை விட்டுப் போகிறோம். நாங்கள் உண்மையாகவே உனக்கு வேண்டும் என்றிருந்தால் நீ எங்களிடம் வா! நடந்ததையெல்லாம் மறந்துவிடுவோம். எல்லோரும் ஒரே கூட்டுப் பட்சியைப் போல ஆனந்தமாய் இருப்போம். கிருஷ்ண ராஜின் மாயையிலிருந்து விலகிவா அக்கா! தயவு செய்து நீ விலகி வந்து எங்களை இத் துன்பத்திலிருந்து கடைத்தேற்று.

'இந்தவயதில் அம்மாவுக்கு நீ துக்கத்தை உண்டாக்குவது அநியாயம். கடைசியாய் சொல்கிறேன். உனக்கு கிருஷ்ண ராஜ் வேண்டுமா, நாங்கள் வேண்டுமா என்பதை நீயே தீர்மானித்துக் கொள். கிருஷ்ணராஜை விட்டு விலகக்கூடிய தைரியமும், மனத்துணிவும் உன்னிடம் இருந்தால் மட்டுமே எங்களிடம் வா. இல்லாவிட்டால் எங்கள் முகங்களைக்கூட பார்க்கத் தேவையில்லை. இதுதான் கடைசிக் கடிதம். கடைசி வணக்கம். நீ எங்களை உதறிவிடமாட்டாய் என்ற கொள்ளை ஆசையோடு பிரிந்து செல்கிறேன்.

'அக்கா! ஒரு முறை நம் சிறு வயது பிராயத்தை ஞாபகப் படுத்திக் கொள். பாட்டி நமக்காகப் பட்ட கஷ்டங்களை ஞாபகப்படுத்திக் கொள். அப்பொழுது நமக்கு யார் துணை இருந்தார்கள்? இந்த கிருஷ்ணராஜ் அப்பொழுது இருந்தானா? நாம் வறுமையோடு தன்னந்தனியாய்ப் போராடினோம். இப்பொழுது பேரும் புகழும் வந்து சேர்ந்து விட்டதல்லவா? உன்னிடம் ஒரு கிருஷ்ணராஜ் இல்லை ஆயிரம் கிருஷ்ண ராஜர்கள் வருவார்கள். உன் கண்ணசைப்பில் நடந்து கொள்ளத் தவிப்பார்கள். இதை நீ புரிந்துக் கொள்ளாதது துரதிர்ஷ்டம்.

'உன்னைப் போன்ற அழகு, பணம், புகழ் உடைய ஒரு பெண் கிருஷ்ணராஜைப் போன்ற ஒரு கொலையாளியை மணந்துகொள்ள வேண்டிய அவசியந்தான் என்ன என்று

பக்கங்களை மடக்காமலும் கிழிக்காமலும்
புத்தகத்தை கவனமாகக் கையாளுங்கள்.

கொஞ்சம் யோசித்துப் பார்! அதுமட்டுமில்லை; உன் கஷ்டத்திலும் வருத்தத்திலும் துணையாய் நின்ற எங்களை நீ இப்பொழுது இவ்வளவு வருத்தப்படுத்துவது நியாயமா? புத்திசாலியான நீயே யோசித்துப்பார்த்துக் கொள். நாங்கள் இல்லாவிட்டால் உன் வாழ்க்கை எச்சில் இலையாகிவிடும். இது சாபமிடுவதில்லை. நடக்கப் போகும் உண்மையை உனக்குத் தெரியப்படுத்துவது!

'நான் போகிறேன். அம்மாவும் என்னோடு வருகிறாள். போகும்போது கடவுளை என்னவென்று வேண்டிக் கொண்டேன் தெரியுமா? 'கடவுளே எங்க அக்காவுக்கு சீக்கிரமாய் உடம்பில் சொரணை உண்டாகும்படி செய் கிருஷ்ண ராஜ் வலை பின்னியிருக்கும் இந்த மாயாஜாலத்திலிருந்து அவளை மீட்டுக் காப்பாற்று!' என்று தான்! இந்த நிமிஷத்திலிருந்து உன்னைப் பற்றிய ஞாபகம் வரும்போதெல்லாம் இப்படித்தான் பிரார்த்தித்துக் கொள்வேன். பார்த்தாயா? கோபு உன்கட்டில் மேல் ஏறி நின்று — 'வர மாட்டேன் போ' என்று சொல்கிறான். பெயருக்கு நான் பெற்ற தாயாரே தவிர உண்மையான தாய் நீ தானே! போய் வருகிறேன்.

— உன் தங்கை மானஸா.'

கடிதத்தைப் படித்து முடித்ததும் மேகலாவின் முகத்தில் வியர்த்துக் கொட்டிற்று. கைகள் நடுங்கின. இதென்ன, இவர்கள் அத்தனைப் பேரும் அவளை விட்டு விட்டுப் போய் விட்டார்களா? கிருஷ்ண ராஜின் பேச்சை எடுக்காவிட்டால் திரும்பி வந்து விடுவார்களா? திக்பிரம்மை அடைந்து போனாள்.

அக் கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டே நாற்காலியில் சரிந்தாள். அக் கடிதம் அவள் வாழ்க்கைக்கு அவர்கள் அளித்த தீர்ப்பாய் இருந்தது. அந்தத் தீர்ப்பை சிரஸாய் வகித்து அவர்களுக்கு வேண்டியவளாய் வாழ்நாளெல்லாம் இருந்து விடுவதா? அல்லது எதிர்த்து நின்று தன்னுடையது

என்றெண்ணிய ஒரு வழியைத் தொடர்ந்து மௌனமாய்ப் போய் விடுவதா? கிருஷ்ணராஜ் கொலையாளி! கொலையாளி என்று இதே பேச்சு! அவன் ஜெயிலில் இருக்கிறான். கோர்ட் இன்னும் அவன் கொலையாளி என்று தீர்ப்பு வழங்கவில்லை. தண்டனை விதிக்கவில்லை. ஆனாலும் சரி, உலகமெல்லாம் தீர்ப்பு வழங்கிவிட்டது. அவன் கொலையாளிதான் என்று முடிவெடுத்து விட்டது. கொலையாளி என்று அவன் வாழ்க்கையில் முத்திரையும் குத்திவிட்டது, இது எவ்வளவு அநியாயம்! சில சூழ்நிலைகளில் மனிதன் சிலந்தி வலையில் சிக்குண்ட ஈயைப்போலச் சிக்கிக்கொண்டு விடுகிறான். அவன் வெளியே வர முயன்றபடி துடிதுடித்துப் போய்க் கொண்டிருக்கும் போது, இந்த உலகம் இரக்கம் காட்டாது. அந்த ஈ அதில் சிக்கிச் செத்தொழிந்தால் சந்தோஷப் படுகிறது. அது ஒரு பயங்கரமான மனத் தத்துவம்!

காசி நைட் கவுனைக் கொண்டு வந்து தந்தாள்.

'அம்மா' என்று கூப்பிடப் போன காசியை முறைத்துப் பார்த்தாள். 'என்னோடு பேசாதே! இங்கிருந்து போய்விடு' என்று எரிந்து விழுந்தாள். காசி நிசப்தமாய் நைட் கவுனை அங்கேயே வைத்துவிட்டுப் போய் விட்டாள். அதற்குள் அறைக்குள் கோமதி வந்தாள்.

'சாப்பாடு பறிமாறியிருக்கேம்மா.' அக் குரல் மிகப் பணிவாய் இருந்தது. கோமதி மட்டுமேயில்லை, அந்த வீட்டில் மிகச் சின்ன வயதுடைய காசியிலிருந்து மிகப் பெரிய வயதான செக்ரட்டரி நாகலிங்கம் வரைக்கும் அவ்வாறு பணிவாய்த்தான் பேசுவார்கள். மேகலா மிகக் கவனத்தோடு கொடுத்திருந்த பயிற்சி அது.

'எனக்குப் பசிக்கலை' என்றாள் மேகலா.

'காலையில் கூட நீங்க ஒன்றுமே சாப்பிடலை.'



'சாப்பிடா விட்டால் நான் ஒன்றும் செத்துடமாட்டேன்; என்னைப் பலவந்தப்படுத்திக் கொல்லாதே. எனக்குப் பசித்தால் நானே சாப்பிட்டுப்பேன். என்னோடு பேசாதே, என்கிட்டே யாரும் வரவேண்டாம், போயிடுங்கள். எல்லோரும் போயிடுங்க, போயிடுங்க.' மேகலா கத்தினாள்.

அவள் கத்தலுக்கு மிரண்டு போன கோமதி அவ்வறையை விட்டு ஓடிப் போனாள். போகும்போது திரும்பிப் பார்த்தாள். அடேயப்பா! மேகலா கண்களில் தெறித்து நின்ற கோபத்தீ பொசுக்கிவிடும் போலிருந்தது.

கோமதி தடாலென்று அறைக் கதவை வெறுமே சாத்தி விட்டு ஓடிப் போய் விட்டாள். அவளைத் தொடர்ந்து போன மேகலா கதவை ஓங்கிச் சாத்தித் தாழிட்டு விட்டு வந்தாள். 'உஸ்'ஸென்று தலையைப் பிடித்துக்கொண்டு சோபாவில் சரிந்தாள். எதிரே மேஜைமேல் மானஸாவின் கடிதம் தென்பட்டது. மேகலா கோபம் தாங்க மாட்டாதவளாய் உள்ளங் கையை மடக்கிக் கொண்டு அக்கடிதத்தின் மேல் ஓங்கிக் குத்தினாள். ஒருக்கால் மானஸா எதிரே இருந்திருந்தால் அக் குத்து மானஸாவின் முகத்திலேயே பட்டிருக்குமோ என்னவோ?

மேகலா நாற்காலியை விட்டு எழுந்திருந்தாள். போய் விட்டார்களாமா? அவளை விட்டு விட்டுப் போய்விட்டார்களா? அவள் அப்படி என்ன மோசமான குற்றத்தைப் பண்ணிவிட்டாள்? ஒருவனோடு பழகுவது தப்பா? கிருஷ்ணராஜோடு அவள் பழகுவதை ஆயிரம் தப்புக் கண்டு பிடித்து அவர்கள் எதற்காகத் தடுக்க வேண்டும்? அவள் என்ன சின்னப் பெண்ணா? அவள் எதிர்காலத்தைப் பற்றி அவளுக்கு அக்கறையில்லையா ?

மேகலா எழுந்து அவ்வறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடை பயின்றாள். அவர்களோடு அம்மாகூடப் போய் விட்டாள் என்றால், அது அம்மாவுக்குத் தானாகவே தோன்

றிய உத்தேசமாய் இருக்காது. அவர்கள் உருவேற்றிய யோசனை! அம்மாவுக்கு ஏற்கனவே பயம்; அவள் வாழ்க்கை என்னவாகிவிடுமோ என்ற கவலை! பணம் இல்லாத காலத்திலும் பயம்! பணம் இருக்கும்போதும் பயம்! தன்னை அவர்கள் எல்லோரும் உதறி விட்டார்களா? என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் இல்லாவிட்டால் தான் செத்துப் போய் விடுவாள் என்றெண்ணிக் கொண்டிருப்பார்களா? மேகலா தலையைச் சிலிர்த்துக் கொண்டாள்.

நான் என்ன தப்புப் பண்ணிவிட்டேன் என்று போய் அவர்களுக்கு முன்னால் கை கட்டிக்கொண்டு நிற்க முடியும் அவளால்? அவள் எந்தத் தப்பும் பண்ணவில்லை. கிருஷ்ணராஜைப் பற்றிய பேச்சையே எடுக்க வேண்டாம் என்றும் அது தன் சொந்த விஷயம் என்றும் ஆயிரம் தடவை சொல்லியிருப்பாள். ஆனாலும் அவர்கள் கேட்கவில்லை. பிடிவாதமாய்த் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

மேகலா கோபத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டாள். உடைமாற்றிக் கொண்டு நைட் கவுனை அணிந்து கொண்டாள் தோளில் வந்து புரண்ட கேசங்களை இழுத்து ரிப்பனால் கட்டிக் கொண்டாள். அவள் அக்கடிதத்தைப் படித்து விட்டு ஏன் இப்படி ஆவேசப்பட வேண்டும்? அவனைவிட்டு விட்டுப் போய்விட்டவர்களைப் பற்றி அவள் எதற்காக நினைக்க வேண்டும்?

மேகலா எழுந்து தாயின் அறைக்கு வந்தாள். அங்கே தையல்மிஷின் இருந்தது. எம்பிராய்டரி நூல்கள் இருந்தன. மேகலா அத் தையல் மிஷினைக் கையால் தடவித்தந்தாள். தாய் ஒரு பூம் பூ மாட்டைப்போன்றவள். சொந்த யோசனை எதுவும்இராது மானஸாவும் சுபாஷும் ஏதாவது உருவேற்றியிருப்பார்கள்.



மேகலா பெருமூச் செறிந்தாள்; இந்த உலகமே அவளை எதிர்த்து நின்றாலும் பரவாயில்லை. தாய் அவளோடிருந்தால் அதுவே போதும்.

மேகலாவின் கண்களிலிருந்து பொல பொல வென்று நீர் வழிந்தது. இன்றைக்கு எவ்வளவு சந்தோஷமாய் வீட்டிற்கு வந்தாள் அவள்! அம்மா எந்த ஃபங்ஷனுக்குமே [illegible] மாட்டாள். வீட்டுப் படியைத் தாண்டமாட்டாள். என்றாக்காவது ராத்திரிவேளையில் அவள் பலவந்தப்படுத்திக் காரில் வெளியே கூட்டிச் செல்வாள் அம்மாவின் உலகமெல்லாம் அந்தச் சின்ன அறைக்குள்தான். அந்தத் தையல் மிஷினும், கலர் நூல்களும், எம்பிராய்டரி துணிகளுந்தான் அவள் சிநேகிதிகள்! ஆனாலும் அவள் முகத்தில் என்றுமே அதிருப்தியைக் கண்டதில்லை. அம் முகத்தில் அப்பாவித்தனமான முறுவலும் நிர்மலமும் மட்டுமே தென்படும்.

மேகலா எத்தனையோ முறை தாயின் கழுத்தைச் சுற்றிலும் கைகளைக் கோத்துக்கொண்டு, — 'அம்மா, உன்னைப் போன்ற பசுவுக்கு என்னைப் போன்ற ராட்சசி எப்படித்தான் பிறந்தாளோ? நான் உண்மையில் உன் மகள் தானா' என்பாள். அம்மா அவள் தலையைத் தடவித்தந்து கொண்டே கன்னத்தை நிமிண்டிவிட்டுச் சிரிப்பாள்.

'அசடே! நீ புலிக்குப் பிறந்தவள்' என்று சிரிப்பாள்.

'புலிக்குப் பிறந்தவளா அல்லது பூனைக்குப் பிறந்தவளா?' திருப்பிக் கேட்டாள்.

'வாயை மூடிக்கொள்' எரிந்து விழுவாள்.

மேகலா அங்கிருந்து மானஸாவின் அறைக்கு வந்தாள். அவ் வறையைச் சுற்றுமுற்றும் ஆராய்ந்தாள். ரோஜா வண்ணத்தில் டிஸ்டம்பர் பூசிய சுவர்கள். வெள்ளை வேளேரென்ற துப்பட்டி பரப்பிய கட்டில். அழகான மேஜை விளக்கு, மானஸாவின் திருமணமான பொழுது அவ்வறையைத் தானே அலங்கரித்தது நினைவிற்கு வந்தது.

மேகலா கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள். மானஸா தான் எவ்வளவு கடுமையாய் அக் கடிதத்தை எழுதியிருக்கிறாள்! அதை எழுதும்பொழுது அன்பே உருவான அக்காவுக்கு எழுதுகிறோம் என்ற நினைப்பே வரவில்லையா! 'உன் வாழ்க்கை எச்சில் இலை ஆகப் போகிறது'— கடிதத்திலிருந்த வரிகள் நினைவிற்கு வந்தன.

'சீ'— மேகலா கண்களை மூடிக்கொண்டாள். அவ்வார்த்தைகள் கூரிய அம்பாய்க் குத்தின.

என் மானஸா சொல்லக்கூடிய வார்த்தைகளா அவை! மானஸா கல்லூரிக்குப் போய்ப் படித்த பொழுது தானே போனாற்போல மகிழ்ந்து போனாளே!

மானஸா சுபாஷைக் காதலித்தபொழுது, அத் திருமணத்திற்கு சுபாஷின் பெற்றோர்கள் எவ்வளவு சீர்களைக் கேட்டார்கள்! எல்லாவற்றிற்கும் ஒப்புக் கொண்டாள்

மானஸா குடித்தனம் நடத்திக்கொண்டு சந்தோஷமாய் இருந்ததைப் பார்த்துத் தானே அந்தச் சந்தோஷத்தை அடைந்தாற்போல மகிழ்ந்தாள். மானஸாவுக்குக் குழந்தை பிறந்தபோது அக் குழந்தையைத் தன் குழந்தையாகவே பாவித்துச் செல்லமாய் வளர்த்தாள்.

வீட்டில் வேலைக்காரர்கள் அத்தனைப் பேருக்கும் அவளைக் கண்டால் நடுக்கந்தான். அக்கறையாய் பார்த்துக் கொண்டார்கள். அவள் வீடு திரும்பியதுமே இரு கைகளையும் நீட்டிக் கொண்டே வந்து, 'தூக்கிக் கொள்' என்று அடம் பிடிக்கும் அவனைத் தூக்கிவைத்துக் கொள்வதென்றால் அவளுக்குக் கொள்ளை ஆசை. அவனைத் தூக்கி வைத்துக்கொண்டு முத்தம் கொடுப்பதில் ஆனந்தமடைவாள். பெற்ற தாயையும் விட அவ்வளவு பாசத்தை வைத்திருந்தாளே!



மானஸாவுக்கு அவள் இதயத்தில் பொங்கும் இந்தப் பாசத்தைப் பற்றித் தெரியாதா? கிருஷ்ணராஜை அவள் விரும்பியதற்காக அவர்கள் அவளை வேண்டுமென்றே துயையின்றித் தண்டித்து விட்டார்களே தவிர, அவள் மனதைப்பற்றிக் கொஞ்சமாவது யோசித்துப் பார்க்கவில்லையே!

கிருஷ்ண ராஜை அவர்கள் விரும்பவில்லை. அது சகஜந்தான். ஏனெனில் அவன் அவர்களுக்குச் சமமாய் — ஏன்?ம் அதையும்விட அதிகமாய் அவள் மனதில் ஒரு இடத்தைச் சம்பாதித்துக் கொண்டுவிட்டான். அவளை அவர்களிடமிருந்து பிரித்துவிடுவானோ என்று பயம் அவர்களுக்கு!

அதற்குள் அவள் அறைக் கதவை யாரோ டொக்டொக் கென்று தட்டிய சப்தம் கேட்டது. மேகலா மானஸாவின் அறையைவிட்டு வந்து தன் அறைக்கதவிற்கருகில் போய் கதவைத் திறப்பதற்குள் அக் கதவே உடைந்துவிடும்போல் தடதடவென்று தட்டிக் கொண்டிருந்தார்கள் யாரோ.

மேகலா சரேலென்று கதவைத் திறந்தாள் எதிரே டாக்டர் சுப்பிரமணியன் நின்று கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் மேகலாவின் பி. ஏ. நாகலிங்கம் நின்று கொண்டிருந்தான். அவ் விருவருக்கும் பின்னால் காசி, கோமதி தோட்டக்காரன், கூர்க்கா, டிரைவர் எல்லோரும் கூடி நின்று கொண்டிருந்தார்கள். டாக்டரின் முகமெல்லாம் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது.

மேகலா கலக்கத்தோடு நின்று கொண்டிருந்த அவர்களின் முகங்களைப் பார்த்தாள்.

'என்ன? என்னவாச்சு? டாக்டர் எதற்குவந்திருக்கிறார்?' என்றாள்.

'ஏன்னால்...' நாகலிங்கம் தடுமாறினான.

சுப்பிரமணியம் சொன்னார். இதென்னது எனக்கு இப்படிப் போன் பண்ணீனாங்களே? உங்க வீட்டார் அத்தனைப் பேரும் உன்னை விட்டுவிட்டுப் போய்விட்டாங்க என்றும் நீ அறைக் கதவைச் சாத்திக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாய் என்றும், கதவைத் திறக்கமாட்டேங்கிறாய் என்றும்...'

'எங்க வீட்டார் அத்தனைப்பேரும் வீட்டை விட்டுப் போயிட்டதாய் யார் சொன்னாங்க?'

மேகலா எல்லோர் முகங்களையும் கூர்ந்து பார்த்தாள். கோமதி முகத்தைக் கவிழ்த்துக்கொண்டாள். காசி எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். தோட்டக்காரன் மேற்கூரையைப் பார்த்துக்கொண்டிருந்தான். நாகலிங்கம் தடுமாற்றத்துடன் ஏதோ சொல்ல வந்து நின்று விட்டான்.

'எங்க வீட்டார் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டது நிஜந்தான். ஆனால் அந்த விஷயம் இவங்களுக்கு எப்படித் தெரிந்தது? ஓஹோ! இவங்க வீட்டில் இருக்கிற ஆளுங்களாச்சே! அந்த மகாராஜாவாய் இருந்தாலும் தன் விஷயங்களை உலகத்திற்கெல்லாம் தெரிந்துவிடாமல் ஜாக்கிரதையாய் இருக்க முடியுமே தவிர, வீட்டிலிருக்கும் வேலைக்காரங்களுக்குத் தெரியாமல் பண்ணிட முடியாது; இல்லையா? மேகலாவின் பார்வையைத் தாங்க மாட்டாதவர்களாய் அங்கிருந்து மெல்ல நழுவத் தொடங்கினார்கள் எல்லோரும்

'நான் க்ஷேமமாய்த்தான் இருக்கேன் டாக்டர். நீங்க போயிட்டுவாங்க. குட்நைட்' என்றாள். அக்குரல் மிக அழுத்தமாகவும் சர்வசாதாரணமாகவும் இருந்தது.

'குட்நைட்! என்னை உன் வேலைக்காரங்க கலங்கடிச்சுட்டாங்க. வரேன்.' அவர் போனபொழுது நாகலிங்கம் அவரை வழியனுப்பி விட்டு வர கூடவே போனான்.



மேகலா கோமதியை அழைத்தாள்.

'நீங்கள்ளாம் சாப்பிட்டாச்சா?'

அவள் இல்லை என்று தலையாட்டினாள்.

'இவ்வளவு நேரமாய் ஏன் சாப்பிடவில்லை? உடனே போய் சாப்பிடுங்கள்' எரிந்து விழுந்தாள்.

எல்லோரும் நிசப்தமாய் அங்கிருந்து போய்விட்டார்கள்.

மேகலா தன் அறைக்குத் திரும்பி வந்தாள். இம் முறை கதவைச் சாத்திக் கொள்ளவில்லை. அவர்கள் செய்த ரகளைக்கு அந்த நேரத்தில் ஆத்திரம் வந்தாலும் இப்பொழுது மிகச் சந்தோஷமாய் இருந்தது அவள் மனம் வருந்திக் கொண்டிருப்பதை அவர்களும் தெரிந்து கொண்டுவிட்டார்கள். நமக்கெதற்கு என்று அவர்கள் இருந்து விடவில்லை. அவள் தற்கொலை ஏதவது பண்ணிக்கொண்டு விடப்போகிறாளே என்று பயந்து டாக்டரை வரவழைத்து விட்டார்கள். மேகலாவுக்கு அந்த நேரத்தில் அவர்கள்பால் மிக்க நன்றி பிறந்தது.

மேகலா வெகுநேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தாள். மணி இரண்டடித்தது. மெதுவாய் எழுந்து வெளியே வந்தாள். ஹால் விளக்கைத் தவிர மீதி விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டிருந்தன. வீடு முழுவதும் மிக நிசப்தமாய் இருந்தது. மேகலாவுக்குப் பயம் ஏற்பட்டது. ஒவ்வொரு படியாய் இறங்கி வந்தாள். சிறுவயதிலிருந்தே இருட்டு என்றாலும், நிசப்தம் என்றாலும் அவளுக்குப் பயந்தான் தனியாய் இருந்ததே யில்லை.

'மானஸா, அம்மா, என்னை ஏன்விட்டு விட்டுப் போயிட்டீங்க?'— அவள் மனம் இப்பொழுது கோபமாய் இல்லை- சூனியமாய் இருந்தது.

ஹாலுக்கு நடுவில் வந்து நின்றாள். அவ்விடத்திலெல்லாம் மிகவிலையுயர்ந்த அலங்காரப் பொருட்கள் இருந்தன. மேஜை மேல் பரிசுப் பொருள் இருந்தது. இந்த ரகளையில் எல்லோரும் அந்த விஷயத்தையே மறந்து விட்டார்கள் போலிருந்தது. அவள் அப்பரிசைக் கையால் தடவினாள் எவ்வளவு நன்றாய் நடந்தது ஃபங்ஷன்! கைதட்டல் ஓசைகளும் பிளாஷ் பல்புகளின் வெளிச்சமும் நினைவில் மிதந்தன.

மேகலா அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்துக் கொண்டாள். இதில் எது நிஜம்? ஒளி மயமான அந்த வெளி வாழ்க்கையா? அல்லது இருள்மயமான இந்தத் தனிமையா? மேடையில் பரிசைப் பெற்றுக் கொண்டிருக்கையில் எத்தனையோ கண்கள் அவளை ஆர்வத்துடன் விழுங்கிவிடுவது போல் பார்த்ததை அவள் அறிவாள். அவள் அதிர்ஷ்டத்திற்கும் செல்வத்திற்கும் அசந்து போய்க் கொண்டிருந்தார்கள். அசூயை அடைந்தார்கள்கூட. ஆனால் யாருக்குத் தெரியும். அவள் வெளி வாழ்க்கைதான் ஒளிமயமானது என்றும் உள் வாழ்க்கை இருள் மயமானது என்றும்!

தன் வீட்டாரது சுகத்திற்காக அவள் எவ்வளவு பாடுபட்டிருப்பாள்? ஆனாலும் அவர்களுக்குக் கொஞ்சமும் நன்றி இல்லை அவள் மனம் சூனியமாய் இருந்தது. இத் தனிமையை அவளால் தாங்க முடியவில்லை.

இந்தச் சமயத்தில் அவளுக்குக் கை கொடுத்து ஆறுதல் அளிக்க வேண்டிய கிருஷ்ணராஜ், செய்யாத குற்றத்திற்கு நிந்தனையைச் சுமந்தபடி, ஜெயில் கம்பிகளுக்கிடையே தண்டனையை அனுபவிக்கத் தயாராய் இருக்கிறான். அவன் வாழ்க்கை ஒரு சுழற்காற்றில் சிக்கிக் கொண்டிருக்கிறது. தன் வாழ்க்கையும் அதே போல இன்னொரு சுழற்காற்றில் சிக்குண்டிருக்கிறது.

உண்மையில் அவள் வயதுதான் என்ன? இருபத்தாறு வயது நிரம்பவில்லை. ஆனாலும் எத்தனை எத்தனை அனு



பவங்கள்! சாதாரணமாய் இவ்வயதில் பெண்கள் திருமணம் பண்ணிக்கொண்டு குடும்பவாழ்க்கையில் நுழைந்து கணவன் குழந்தைகள், வீடு என்று ஒரு உலகத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பார்கள். அதென்ன தலையெழுத்தோ, சிறுவயதிலிருந்தே அவள் வாழ்க்கையைப் போலவே நடந்து வந்து கொண்டிருக்கிறது.

அவளுக்கு விவரம் தெரிந்தது முதல் வீட்டிற்கும், அம்மாவுக்காகவும், மானஸாவுக்காகவும், பாட்டிக்காகவுமே வெளியுலகத்தோடு போராடிக் கொண்டிருக்கிறாள். மேகலா பெருமூச்செறிந்தாள் அன்றைக்குப் பணம் இல்லாமல் வாழ்க்கையோடு போராட்டம்! இன்றைக்கோ பணம் அதிகமான பிறகும் போராட்டம்.

இப்பொழுதென்றில்லை; பத்துவயது சிறுமியாய் இருந்தபோதே பெரிய தாய்க்கிழவியைப் போல நடந்து கொள்வாள் அவள். வீட்டு நிலைமை அவளை அவ்வாறு செய்துவிட்டன.

வறுமையில் பிறந்ததும், புத்திசாதுரியத்தைப் பெற்றிருந்ததும் அவள் வாழ்க்கைக்கே ஒரு வரமாகவும் சாபமாகவும் ஆகிவிட்டன.

சிறுவயதில் எப்படி இருப்பாள் அவள்? மேகலாவின் மனம் கடந்த கால நினைவு வெள்ளத்தில் நீந்தத் தொடங்கிவிட்டது.

## 2

மேகலாவின் முன்னோருக்கு எந்த ஊரோ, எங்கிருந்து எப்பொழுது வந்து சென்னையில் நிரந்தரமாய் வசிக்கத் தொடங்கினார்களோ தெரியாது. மேகலாவின் பாட்டி மங்களம் மட்டும் அவ்வப்பொழுது மேகலாவைப் பக்கத்தில்

உட்காரவைத்துக் கொண்டு, 'நம் சொந்த ஊர் பத்மாபுரம். அங்கே ஜமீன்தாரிடம் உங்கள் தாத்தா பெரிய உத்யோகம் பண்ணி வந்தார்.'

என்று சொல்லிக் கொண்டிருப்பாள். தாத்தா இறந்து விட்ட பிறகு மகள் ஸ்ரீரஞ்சனியை அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்து விட்டாளாம். வந்தபொழுது உடம்பில் ஏகப்பட்ட நகைகளும் கைநிறைய பணமும், வீடு முழுவதும் நிறைய விலையுயர்ந்த சாமான்களும் இருந்தனவாம்! மேகலாவுக்கு அவள் சொல்லும் விஷயங்களைக் கேட்கக் கேட்க ஆர்வம் அதிகரிக்கும்.

அந்த வீட்டில் வாசலுக்கெதிரே சுவரில் ஓர் இளம் பெண்ணின் புகைப்படம் இருக்கும். அவள் உடம்பெல்லாம் நகைகள் தான்! கழுத்தில் சங்கிலி, காசுமாலைகள், அட்டிகை, நெக்லெஸ், மூக்குத்தி, காதுகளில் பெரிய பெரிய தோடுகள், முழங்கை வரைக்கும் வரிசையாய் வளையல்கள், கால்களில் மெட்டி, கொலுசு, ஜரிகைப் போட்ட பட்டுப்புடவை, கை நிறைய கல்வளையல்கள் இவற்றோடு நாற்காலியில் மிடுக்காய் உட்கார்ந்திருப்பாள்.

கூந்தலில் பூச்சுமை! முகத்தில் பெரிய பொட்டு, அகன்ற கன்னங்கள், இவற்றைப் பார்த்த யாருமே அது மங்களம் என்று சொன்னால் நம்பமாட்டார்கள். அந்த மூக்கையும் கண்களையும் பார்த்துத் தான் அடையாளம் தெரிந்து கொள்ள வேண்டும்.

போட்டோவில் இருக்கும் உருவம் வாயைத் திறக்காது. அதனால் அழகாய் இருந்தது. ஆனால் இந்த மங்களத்தின் வாயோ ஒரு நிமிஷம் சும்மாயிருக்காது. காலையில் எழுந்ததிலிருந்தே எதற்காவது முணுமுணுத்துக்கொண்டோ, யாரை யாவது திட்டிக்கொண்டோதான் இருப்பாள்.



மேகலாவுக்கு எட்டு வயதிலிருந்து கொஞ்சமாய் விவரம் தெரியத் தொடங்கியதால் சில சம்பவங்கள் நன்றாய் நினைவிருந்தன.

மங்களம் எவ்வளவு கத்திக்கொண்டிருப்பாளோ அத்தனைக்கு அத்தனை அவள் மகள் ஸ்ரீரஞ்சனி மௌனமாய் இருப்பாள். அவள் எப்பொழுதும் சமையல் பண்ணிக் கொண்டோ வீணை வாசித்துக் கொண்டோதான் இருப்பாள். பாட்டியைப் போலச் சிடுசிடுப்பாய் இல்லாமல் எப்பொழும் சிரித்த முகத்துடன் இருப்பாள்.

மேகலாவின் கண்ணோட்டத்தில் தாய் ஒரு தெய்வம். மேகலா அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, எத்தனையோ ஆயிரக் கணக்கான பெண்களைப் பார்த்திருக்கிறாள். ஆனால் தாயைப் போல அவ்வளவு அழகானவர்களைக் கண்டதும் இல்லை.

மாலை வேளையில் தாய் வீணை வாசித்தால் கிட்டே உட்கார்ந்து கொண்டு கேட்க வேண்டும் போலிருக்கும் மேகலாவுக்கு. ஆனால் பாட்டி அவளை உட்கார விட மாட்டாள். வீட்டிற்குள் குழாய் இல்லை. அதனால் தெருக் குழாயிலிருந்து தண்ணீர் பிடித்துக்கொண்டு வருவதற்கு அவளையும் ஒத்தாசைக்காகக் கூட்டிக்கொண்டு போய்விடுவாள். குழாய்க்கடியில் மங்களத்தின் கைதான் ஓங்கியிருக்கும். குழாய்ச் சண்டையில் அவள் வாயைத் திறந்துவிட்டால் மற்றவர்கள் பேச்சு காதில் விழாது. கையை ஓங்கிவிட்டால் எதிராளி தொலைவில் போய்விட வேண்டியதுதான்.

மானஸா மேகலாவை விட ஒரு வயதுதான் சிறியவள். ஆனாலும் எந்த வேலையும் பண்ணமாட்டாள். தாய்க்குப் பக்கத்திலேயே உட்கார்ந்திருப்பாள். அவளுடையதெல்லாம் மென்மையான விவகாரந்தான். ஒல்லியாய் இருந்ததால் தாய் எந்த வேலையும் செய்யவிடமாட்டாள். அதோடு வீணையும் கற்றுத் தந்தாள்.

மேகலாவுக்குத் தாங்க முடியாத பொறாமை ஏற்படும். தானும் கற்றுக் கொள்ள முயன்றாள். ஆனால் அவள் குரல் நன்றாக இல்லை; அபசுருதி ஏற்பட்டுவிடும். அவள் அடிக்கடி தப்பாய் பாடுவதாய்ச் சொல்லுவாள் தாய். தாய் சொன்ன ஸ்தாயியில் அவள் குரல் எடுபடாததால் மேகலாவுக்கு சங்கீதத்தின் மீதே விருப்பம் போய்விட்டது. மானஸாவின் குரல் வளம் நன்றாயிருக்கும். தாய்க்குச் சின்னப் பெண் மீது கொஞ்சம் அதிக இஷ்டம். மங்களம் மானஸாவை ஏதாவது வேலைக்காக ஏவினாலும் தாய் குறுக்கிட்டு,

'அம்மா! மானஸாவை வீணை வாசிக்க விடேன். அந்த வேலையை அப்புறமாய் நான் பண்ணிடறேன்' என்பாள்.

'அழகுதான். வீணையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டால் வாழ்க்கை விடிஞ்சுடுமா? உனக்காக நான் ஒருத்தி ராட்சசத் தாய் இருக்கேன். அதனால் பிழைத்தாய். அவளுக்கு எப்படி முடியும்? பசங்களுக்குச் சின்னவயதிலேயே வேலை வெட்டிகளைப் பழக்காமல் போனால் பெரியவங்களான பிறகு கூட நாம்பளேதான் உழைக்க வேண்டியிருக்கும். தேவையான சமயத்தில் நாம்ப பண்ணிக்கா விட்டால் எப்படி முடியும்?' என்று அலுத்துக்கொள்வாள்.

மங்களத்திற்கு வேலை எதுவும் பண்ணாமல் தாயோடேயே கழிக்கும் மானஸாவை விட, எப்பொழுதும் தன்னோடேயே சுற்றிக் கொண்டு, எல்லா வேலைகளிலும் கை கொடுத்து உதவிக் கொண்டிருக்கும் மேகலாவைக் கண்டால் தான் அதிகமாய்ப் பிடிக்கும்.

மேகலா எல்லா வேலைகளிலும் உதவி பண்ணுவாள். இன்னும் தேவையானால் அடுப்பிற்கு விறகுகளைக்கூட கோடாலியால் பிளந்து தருவாள்.

'என் தங்கமே! நாளைக்கு உனக்குக் கல்யாணமானால் உன்னோடே தான் இருப்பேன் நான். அந்த மானஸாவின்



மூஞ்சியைக்கூட பார்க்கமாட்டேன். என் காசுமாலையை உனக்குத்தான் தரப்போகிறேன்' என்பாள். அவளிடமிருந்த எல்லா நகைகளும் போய்விட்டன.

காசுமாலை ஒன்றுதான் மிஞ்சியிருந்தது. அவ்வளவு வறுமையாயிருந்த போதிலும் தாங்கிக் கொண்டாளே தவிர, அந்தக் காசுமாலையை மட்டும் இழக்கவில்லை. அவள் அந்த நகையை அணிந்து கொள்ளவும் மாட்டாள். தன்னிடம் அந்த நகை எஞ்சியிருப்பது தெரிந்தால் கடன்காரர்கள் பிடுங்கத் தொடங்கி விடுவார்கள் என்ற பயம் அவளுக்கு. மேகலாவுக்கு அதை அணிந்து கொள்ளவேண்டும் என்று ஆசையாய் இருக்கும். ஆனால் அவள் இடந்தர மாட்டாள். காசுமாலையை மேகலாவுக்குக் காட்டி விட்டுப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு,

'ஐயோ, இது இருக்கிற விஷயம் தெரிஞ்சுட்டால் வேறு வினை வேண்டுமா? கடன்காரர்கள் நம்ப உயிரை எடுத்துட மாட்டாங்களோ?'

என்று ரகசியமாய் மேகலாவின் காதில் சொல்லுவாள். மானஸாவின் மேல் என்றைக்காவது மிகக் கோபமாய் இருக்கும்போது மங்களம் அந்தக் காசுமாலையை ராத்திரி வேளையில் எடுத்து மேகலாவின் கழுத்தில் போட்டுவிட்டு,

'என்னோடு நல்லதனமாய் நடந்து கொண்டால் என்ன லாபம்னு பார்' என்பாள். திரும்பவும் காலையில் கழற்றிப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிடுவாள்.

மேகலாவுக்கு அந்தக் காசுமாலையைப் போட்டுக் கொண்டால் சரியாய்த் தூக்கம் வராது. அடிக்கடி தடவிப் பார்த்துக் கொள்வாள். காசுமாலையால் தன் அழகு பத்து மடங்கு கூடிவிட்டதைக் கண்ணாடியில் பார்த்துத் தெரிந்து கொண்டு மெய்மறந்துப் போவாள். தன்னை ஒரு ராஜகுமாரியாய்க் கற்பனை பண்ணிக் கொள்வாள்.

மேகலாவின் கழுத்தில் காசுமாலையைப் பார்த்துவிட்டு மானஸா தனக்கும் அது வேண்டும் என்று அழுது ரகளை பண்ணுவாள். ஆனால் மங்களம் தரமாட்டாள்.

'பட்வா! நீ வேலை சொன்னால் பண்ணமாட்டாய்; உனக்குக் காசுமாலை வேண்டுமோ? நான் கொடுக்க மாட்டேன். அது மேகலாவோடது. கல்யாணமான பிறகு நான் போய் அவள் வீட்டில்தான் இருக்கப்போகிறேன்; உன்னிடம் செத்தாலும் வரமாட்டேன்' என்பாள்.

அந்தச் சமயத்தில் அவள் வார்த்தைகளைக் கேட்கும் பொழுது மேகலாவின் மனம் சந்தோஷத்தால் பொங்கிப் போகும். அந்த நன்றியோடு மங்களத்திற்குச் சமையலில் கூட ஒத்தாசைப் பண்ணுவாள்.

'உனக்கெதுக்குக் கஷ்டம், உட்காரு பாட்டி! நான் கொண்டு வரேன் தண்ணீர்' என்று வெளியேயிருந்து தானே தண்ணீரையெல்லாம் சுமந்துக் கொண்டு வருவாள்.

வீட்டை பெருக்கிக் கொண்டிருக்கும்போதும், தோய்த்துக் காய்ந்த துணிகளை மடித்து வைத்துக் கொண்டிருக்கும் போதும் தான் எவ்வளவு சீக்கிரத்தில் பெரியவளாகி, கல்யாணம் பண்ணிக்கொள்வோமோ, அந்தக் காசுமாலையை அணிந்து கொள்வோமோ என்று தோன்றும்.

மேகலாசிறுவயதிலிருந்து அம்மாவை 'அம்மீ' என்றுதான் கூப்பிடுவாள். பாட்டி திட்டுவாள். ஸ்ரீரஞ்சனி மகளைக் கிட்டே இழுத்து அணைத்துச் கொண்டு கன்னங்களைத் தடவிக் கொடுத்துக் கொண்டே —'நீ அப்படியே கூப்பிடு! எனக்கு அதே பிடித்திருக்கிறது' என்பாள்.

'ஏன்?'

'ஏன்னால், நீ அப்படிக் கூப்பிட்டால் தான் சின்னப் பெண்ணாய்த் தோன்றுகிறாய். அம்மா என்று கூப்பிட்டால்



என் செல்லக் குட்டியாய்த் தோன்றாது. யாரோ பெண்ணைப் போலத் தோன்றும்'.

மேகலாவைத் தாயும் பாட்டியும் 'மேகா' என்றுதான் கூப்பிடுவார்கள் அதுவே அச்சுற்று வட்டாரமெல்லாம் பழக்கப் பட்டுப் போய்விட்டது.

சிறுவதிலிருந்தே பாட்டியின் செல்லப் பேத்தியான மேகலா, சக சிநேகிதிகளுடன் சண்டை போடுவதில் கூட பாட்டி கையாளும் முறைகளையே பின் பற்றினாள். எதிராளியின் கேசங்களைப் பற்றிக் கொண்டு சண்டை போடுவதில் அவளுக்கு நிகர் யாருமில்லை. அவர்களைக் கிள்ளுவதும் பிடித்துத் தள்ளுவதும் அவளுக்குக் கை வந்த கலை.

தெருவில், போய்க் கொண்டிருக்கும் போது யாராவது பசங்கள் சண்டைக்கு வந்துவிட்டால் மேகலா அவர்கள்மேல் பெண்புலியாய்ப் பாய்ந்து குதறி எடுத்துவிடுவாள். அவர்கள் தம் பெற்றோர்களை அழைத்துக் கொண்டு வந்து புகாரிட்டால் மங்களம் அவர்களுக்கு நயமாய் எடுத்துச் சொல்வதை விட்டு விட்டு,

'உங்கப் பசங்களை மொதல்ல அடக்கிவையுங்கள். உங்க ஜோலிக்கு வந்தால் அப்படித்தான் ஆகும்' என்று அவர்கள் மீது பாய்வாள்.

ஸ்ரீரஞ்சனிக்குத் தாய் அவர்களோடு சண்டை போடுவதைப் பார்த்தால் நாக்கைப் பிடுங்கிக்கொள்ளலாம் போலிருக்கும். அப்பால் வந்து மேகலாவின் காதைப் பிடித்துத் திருகி, 'தெருவில் அவங்களோடு சண்டைக்குப் போவாயா?' என்று தண்டிக்க முயன்றால், மங்களம் வந்து மேகலாவை விடுவித்துக் கொண்டு போய்விடுவாள்.

'போட்டால் என்ன? என் தங்கக் கட்டியோடு அவங்க மட்டும் சண்டைக்கு வரலாமா? சண்டை போட வந்தால்

கோபம் வராதா? அதனால்தான் எதிர்த்துச் சண்டை போட்டுவிட்டு வந்திருக்கிறாள். அப்படிப் பண்ணினால்தான் அவங்களுக்கு பயம் இருக்கும்.' அவள் மேகலாவின் கன்னத்தை முத்தமிட்டுவிட்டு,

'என் பேரைக் காப்பாற்றினாயம்மா! மங்களத்தின் பேத்தி என்றால் சும்மாவா?' என்று புகழ்வாள்.

'அம்மா! இப்படித்தான் அவளுக்குப் பரிஞ்சுட்டுவருவாங்களா? அப்புறமாய் அவளுக்குப்பயம் என்பதுதான் இருக்குமா அவளை நீ நன்றாய்க் கெடுக்கிறாய்' என்பாள் ஸ்ரீரஞ்சனி

'கெடுக்கிறேனா? உலக அனுபவத்தைக் கற்றுத்தரேன், எனக்குத் தெரியும்! இந்த உலகம் நாம்ப தலையைக் குனிந்துக் கொண்டு மரியாதையாய். வந்து விட்டால், பின்னாலிருந்து கூவும். நல்லகுணத்தைக் கையாலாகாத கோழைத்தனமாய் பார்க்கும். எதிர்த்து நின்று வாலையாட்டும்! உனக்கென்ன தெரியும்? வீட்டை விட்டு வெளியே வரமாட்டாய். இப்படி வெளியே போய் அந்தக் குழாயடியிலிருந்து ஒருசொம்புத் தண்ணீர் கொண்டு வா, தெரியும். உலகத்தை எதிர்த்து நிற்கணும் என்றால் எவ்வளவு வாய் இருக்கணும் தெரியுமா? அங்கே நீதி போதித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தால் காரியம் நடக்குமா? வாய் வேண்டும் பிழைக்க! வாய் வேண்டும்!'

'என்னவோ, எனக்குத் தெரியாது' என்பாள் ஸ்ரீரஞ்சனி. பெரிய பெண் மேகலா பாட்டியின் தலையீட்டால் பெரிய வாயாடியாகிவிடுவாளோ என்ற திகில் அவளுக்கு தன் அதிர்ஷ்டந்தான் இப்படியாகிவிட்டது. அவளுக்காவது நல்ல ஒருவனைப் பார்த்து மணம் செய்து வைக்க வேண்டாமா? இப்படிப்பட்ட வாயாடிப் பெண்களாயிருந்தால் யார் பண்ணிக் கொள்வார்கள்? அம்மா இதையெல்லாம் யோசித்துப் பார்ப்பதில்லையா? மானஸாவை அக்காவைப் போல நடந்து கொள்ள வேண்டாம் என்று போதிக்கத் தொடங்கினாள்.



மானஸாகூட ஸ்ரீரஞ்சனியைப் போலவே அளந்து பேசுபவள்தான்.

மேகலாவை இழுத்து அணைத்துக்கொண்டு காசுமாலையை அவளுக்குத்தான் தரப்போகிறேன் என்று சொல்லும் பாட்டியைக் கண்டால் மானஸாவுக்குப் பிடிக்காது. தாயுடனேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பாள்! அக்கா பார்த்துக் கொண்டிருக்கையில் கர்வமாய் வீணையை மீட்டிக் கொண்டே உரத்த குரலில் பாடுவாள். அந்த வீதியில் இதர பெண்கள் எல்லோரும் பள்ளிக்கூடங்களுக்குப் போய் விளையாட்டுக்களிலும் பாட்டுக்களிலுமாய் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கும் போது, மேகலா மட்டும் தண்ணீர்க் குடங்களைச் சுமந்து கொண்டும், வாசலைப் பெருக்கிக் கொண்டும், வீட்டைத் துடைத்துக் கொண்டும் இருப்பாள்.

குழாயடியில் நின்றிருக்கும் மேகலா வீதியில் பள்ளியிலிருந்து திரும்பி வரும் பிள்ளைகளைப் பார்த்தபடியே நின்றுவிடுவாள். அவர்களுடைய யூனிபாரங்களும் பைகளும் எவ்வளவு அழகாய் இருக்கும்! தம்மிடம் பணம் இல்லை என்றும் அதனால் தான் ஸ்கூலுக்குப் போக முடியாமல் போய்விட்டதென்றும் பாட்டி சொல்லக் கேட்ட மேகலாவின் பிஞ்சு மனம் அதைப்பற்றி யோசிக்கும்! பணம் வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் என்று தெரியாதா?

படித்தால் பெரியவளான பிறகு சம்பாதிக்க முடியும் என்று சொல்லுவாள் தாய்! ராத்திரி வேளைகளில் தாய் பாடம் சொல்லித்தருவாள். மேகலாவுக்குக் கணக்கு நன்றாய் வரும். கொடுத்த பாடத்தை உடனுக்குடன் தப்பில்லாமல் போட்டுக் காட்டியதுமே ஸ்ரீரஞ்சனிமேகலாவை மார்போடு இழுத்து அணைத்துக் கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிடுவாள். அந்த அன்பிற்கு மேகலாவின் மனம் புளகாங்கிதமடைந்து விடும்.

'மேகலா சுபாவத்தில் நல்லவள் தான். அம்மா கெடுத்துக் கொண்டிருக்கிறாள்' என்றெண்ணிப் பெருமூச் செறிவாள் ஸ்ரீரஞ்சனி மேகலாவுக்குப் புஷ்டியான ஆகாரமும் இல்லை. அதோடு வீட்டு வேலைகளில் அவள் கைகளும் கால்களும் சூம்பியிருந்தன. ஸ்ரீரஞ்சனியின் கண்களில் கண்ணீர் நிரம்பியது. இந்த உலகத்தில் தன்னைப் போன்ற உதவாக்கரை தாய் யாருமே இருக்கமாட்டார்கள் என்று தோன்றிற்று. தாயின் திருப்திக்காக மானஸாவை விட நன்றாய்ப் படிக்க வேண்டும் என்று மேகலா தவிப்பாள்.

மேகலாவுக்கு அடிக்கடி விநோதமான கனவுகள் வருவதுண்டு. குடத்தைக் குழாயடியில் வைத்து விட்டு, நின்று கொண்டிருந்தால், தண்ணீருக்குப் பதிலாய் குழாயிலிருந்து பணம் கொட்டுவது போல! ஆச்சரியமடைந்து போவாள். அக்குடம் நிரம்பியதுமே குழாயிலிருந்து பணம் கொட்டுவது நின்றுவிடும். இன்னும் தண்ணீர் பிடிக்கப் பலர் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இப் பணத்தில் தமக்கும் பங்கு உண்டு என்பார்களோ என்றபயம்! சரேலென்று அதை எடுத்துக் கொண்டு ஓடி வந்துவிடுவாள்.

அப்பணக்குடத்தை எடுத்துவந்து நேராய் சுவாமி படத்திற்கு முன்னால் வைத்துக் கும்பிடுவாள். கனவில் அவ்வளவு பணத்தைப் பார்த்த மேகலாவுக்குக் காலையில் எழுந்ததுமே மகிழ்ச்சியாய் இருக்கும். பாட்டியிடம் இக் கனவைச் சொன்னால்— 'என் தங்கக் கட்டிக்கு ஜமீன்தார் புருஷன் வருவான்' என்று சொல்லி நெட்டி முறிப்பாள்.

# 3

மேகலா அக்கம் பக்கத்துப் பெண்களுடன் கலந்து பழக மாட்டாள். அந்த வீதியிலிருந்த மற்ற குடும்பங்கள் எல்லாம் கலந்து பழகும். பண்டிகைகள் பிறந்தநாள், சாவு, சிரார்த்தம் போன்றவைகளுக்கு ஒருத்தர் வீட்டிற்கு இன்னொருத்தர்



வந்து போய்க் கொண்டிருப்பார்கள். இவர்கள் குடும்பம் மட்டும் விரல் சுட்டிக் காட்டினாற்போல் தனியாய் இருக்கும். ஏனோ தெரியாது — வீதியில் போவோர் எல்லாம் இந்த வீட்டை ஒரு மாதிரியாய்ப் பார்த்துக் கொண்டே போவார்கள்.

பாட்டிக்கு அவ் வீதியில் இருந்தவர்களோடு சண்டை போடுவதைத் தவிர வேறு காரியம் இருந்ததில்லை.

அம்மாவோ வீட்டைத் தாண்டி வரமாட்டாள். ஆனாலும் எல்லோரும் அந்த வீட்டை ஏதோ போல, ஒரு விநோதத்தைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டே போவார்கள். மேகலாவுக்கு அந்தப் பார்வையின் அர்த்தம் பெரியவளான பிறகுதான் புரிந்தது.

மேகலா எப்பொழுதும் குட்டையான, முழங்கால்களுக்கு மேல் ஏறிய கவுனைத்தான் அணிந்து கொண்டிருப்பாள். உடம்பிற்குத் தகுந்த, பொருத்தமான கவுன்கள் என்றுமே இருந்ததில்லை அவளுக்கு.

மேகலாவுக்கு நன்றாய் நினைவிருந்தது. அன்று மாலையில் இருட்டும் வேளையில் பாட்டி மேகலாவைக் கூப்பிட்டு 'கோமுட்டிக் கடைக்குப் போய் அரைகிலோ கடலைமாவு, அரைகிலோ வெங்காயம் வாங்கிக்கொண்டு வா' என்றாள். கோமுட்டிக் கடை என்றதுமே மேகலாவின் முகம் கசப்பை விழுங்கினாற் போலாயிற்று.

'அந்த நாராயணன் கடைக்கா? நான் போகமாட்டேன் பாட்டி! முந்தா நாள் நீ எண்ணெய் வாங்கிட்டு வரச்சொல்லி அனுப்பியபோதே கண்டபடி திட்டினான். பணம் இல்லாமல் தன் கடை வாசற்படி ஏறக்கூடாதுன்னுட்டான். இப்பொழுதே இருநூற்றைம்பது ரூபாய் பாக்கியாம். வெட்கம் மானம் இல்லையா என்று ஒரே திட்டு.'

'திட்டுவான் திட்டுவான்! அவன் காட்டில் விளையுது. பணம் யாரிடம் இருக்கோ அவங்களுக்கு தான் ராஜ்யம்னு வை. நமக்கும் என்றாவது ஒரு நாள் நல்ல காலம் வரும். பணம் தராமல் ஓடிடப் போறோமா? தராமல் இருந்துடுவோமா? கொஞ்சம் முன்னால் பின்னால் ஆகுமே தவிர, நாராயணன் மொதல்ல திட்டுவானே தவிர, அப்புறமாய்ச் சாமான்களைத் தந்துடுவாம்மா! அந்தத் திட்டுக்களையெல்லாம் நம்மைத் திட்டலை, அந்தச் சுவரைத் திட்டினான்னு எண்ணிக்கோ! நீ நகராமல் நின்னுட்டே இருந்தால், சாமானைக் கொடுத்தனுப்பிடுவான்.

'என் கண்ணோன்னோ! என் தங்கக் கட்டி! என் செல்லக் குட்டி போனால் காரியத்தை முடிக்காமல் திரும்ப மாட்டாள். என் கண்ணில்லையா?' பாட்டி அவ்வளவு தூரம் முகவாயைப் பிடித்துக் கொண்டு கெஞ்சவே, மேகலாவால் மறுக்க முடியவில்லை. சரி என்று புறப்பட்டாள்.

வீதியில் காலடி எடுத்து வைத்ததுமே மேகலா விறைப்பானாள். யுத்தத்திற்குப் போகும் சேனை வீரனைப் போல நடக்கத் தொடங்கினாள். நாராயணன் எவ்வளவு திட்டினாலும் வருந்தக்கூடாது என்று தனக்குள் சபதம் வைத்துக் கொண்டாள்.

கடையை நெருங்கியபோது அதிகக் கூட்டம் இல்லை. மேகலாவைப் பார்த்ததுமே நாராயணன் 'என்ன பொண்ணு, காசு கொண்டாந்திருக்காயா?' என்று கேட்டான்.

மேகலா இல்லை என்று தலையாட்டினாள்.

'இல்லை! பின்னே எதற்கு வந்தாய்? வேவு பார்க்கவா?'

'இல்லை. அரைகிலோ கடலை மாவும், அரைகிலோ வெங்காயமும் வேணும்!'



'என்னது? அரைகிலோ கடலைமாவும் அரைகிலோ வெங்காயமுமா?' நாராயணன் தன் கடையில் தங்க சிம்மாசனமும் வைரக் கிரீடமும் தரச் சொல்லிக் கேட்டுவிட்டாற் போலக் கோபமாய்ப் பார்த்தான்.

'பணத்தைக் கொண்டு வரவும் மாட்டாய். சரக்கும் வேண்டும். உங்க வீட்டுக்கு நூற்றுக் கணக்காய் கடனில் தருவதற்கு எங்க முப்பாட்டன் எனக்குக் கொள்ளைச் சொத்து வைத்துவிட்டுப் போகலை. இங்கே என் காலடியில் ஒட்டுகிற மண்ணைக்கூட தர மாட்டேன். போ, போ! இதப் பார், இப்படிப்பட்ட பேரத்தால் என் கடையை இழுத்து மூடவேண்டியதுதான். போ' என்று திட்டிவிட்டு, சரக்குகளைப் பார்த்துக் கொண்டே எஞ்சிய வாடிக்கையாளர்களைக் கவனிக்கத் தொடங்கினான்.

'இந்தப் பெண்ணு யாரு?' முகத்தை அந்தப் பக்கமாய்த் திருப்பிக் கொண்டு நின்றிருந்த மேகலாவைப் பார்த்துக் கேட்டார் ஒரு வாடிக்கையாளர்.

'வேறு யாரு? மங்களம்மாவின் பேத்திதான்! பாட்டியும் பேத்தியும் சேர்ந்துட்டாங்கன்னால் போதும்,ராஜியத்தையே ஜெயித்துண்டு வந்துடுவாங்க அவ்வளவு வாய்த்துடுக்குங்க!'

'ஆமாமாம். நன்றாய் சொன்னாய் நாராயணா! நேற்று குழாயடியில் இவங்க ரெண்டு பேருமாய்ச் சேர்ந்து என்னை எவ்வளவு மட்டந்தட்டினாங்க தெரியுமா? என் மேல் பாய்ந்து குதறிட்டாங்களே' — ஒருத்தி வளையல்களைத் தூக்கிக் காட்டினாள்.

'இவங்க மனுஷங்க இல்லை; ராட்சசிங்க' என்றாள் இன்னொருத்தி

'வீட்டில் தட்டிக் கேட்க ஆம்பிள்ளை இல்லாவிட்டால் அப்படித்தான் புன்னம்மா' என்ற அவள் மேகலாவை உற்றுப்

பார்த்துக் கொண்டே சொன்னாள். முந்தா நாள் பிற்பகலில் மேகலா என் பேரனைப் பிடித்துத் தள்ளியதால் முழங்காலில் தோல் வழன்று காயம் ஏற்பட்டு விட்டது'. புன்னம்மா மேகலாவின் வீட்டிற்குப் பக்கத்தில்தான் இருந்தாள். புன்னம்மாவுக்கும் மங்களத்திற்கும் ஒத்து வராது.

'இதென்ன? தந்தை இல்லையா?' என்று கேட்டான் ஒருத்தன். அவன் பார்வை மேகலாவை விழுங்கி விடுவது போல் பார்த்தன. இவ்வளவு நிந்தனைகளைக் கேட்டுக் கொண்டு இந்தப் பெண் ஊமையாய் நின்று கொண்டிருக்கிறதே! சண்டைக்காரியாய் இருந்தால் இவர்களிடமிருந்து இத்தனை வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருப்பாளா என்று தோன்றிற்று.

'தந்தையா?' புன்னம்மா மேகலாவைப் பார்த்து பக்கென்று சிரித்தாள்.

'ஐயோ ராமா?' அவள் கன்னத்தில் இடித்துக்கொண்டே சொன்னாள்:

'கல்யாணமாகாத தாய்க்குப் பிறந்த பெரிய மனுஷிங்க இவங்க! மேலுக்கு மங்களம்மாள் சொல்லிப்பாள். ராமபூஷணன் என் பெண்ணைக் கோவிலில் கல்யாணம் பண்ணிக்கிட்டான்' என்று.

'கல்யாணமும்இல்லை, கில்யாணமும்இல்லை. கல்யாணம் பண்ணிக்கிட்டிருந்தவனாய் இருந்தால் பகலில் ஏன் வீட்டுக்கு வரமாட்டேங்கிறான்? பசங்களைஏன் பார்த்துக்க மாட்டேங்கிறான்! மங்களம்மாள் லேசுப்பட்டவளா என்ன?

'மகளுக்கு வயிற்றில் குழந்தை தோன்றியதுமே மருந்துகளை விழுங்கச் செய்தாள். போகலை வேறென்ன பண்ணுவாள்.'



'என்பெண்ணுக்குக் கோவிலில் கல்யாணம் நடந்ததுன்னு பிரசாரம் பண்ணத் தொடங்கிட்டாள். இவங்க கதை யாருக்கும் தெரியாதுன்னு நினைச்சுட்டாங்க. மொதல்ல, இந்த மாதிரி கடைச்சரக்குங்களை இந்த வீதியிலேயே வைச்சுக்கக் கூடாதுன்னு நான் மொத்திக் கொண்டேனே யாராவது என் பேச்சைக் கேட்டீங்களா?'

புன்னம்மா சொன்னதையெல்லாம் கேட்டபொழுது மேகலாவின் முகத்திலிருந்த ரத்தமெல்லாம் குப்பென்று பொங்கிற்று. அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. அந்தப் புன்னம்மாவின் மேல் பாயத் துடித்தாள்.

ஆனால்,அவள் இப்பொழுது புன்னம்மாவோடு சண்டையில் இறங்கிவிட்டால், கடைக்காரன் சரக்கைத் தரவே மாட்டான். புன்னம்மாவோடு வேறொருசமயத்தில் பூசலை வைத்துக்கொண்டு இதையெல்லாம் வட்டியும் முதலுமாகத் தீர்த்துக் கொண்டு விடுவாள். அதனால்தான் மேகலா உள்ளங்கையை மடக்கிக் கொண்டு ஆத்திரத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றிருந்தாளே தவிர, மறு பேச்சுப் பேசவில்லை

புன்னம்மா சரக்குப் பொட்டலங்களைப் பையில் வைத்துக் கொண்டே 'இதன் பாட்டிகூட லேசுப்பட்வள் இல்லை. பத்மாபுரம் ஜமீன்தாரின் திவானத்தில் வேலை பண்ணி, சின்னராணியிடமிருந்த நகைகளையெல்லாம் எடுத்துக்கிட்டு எவனோடேயோ ஓடிவந்துட்டாள். அந்த வம்சமே துஷ்ட வம்சம்! இதப் பார்! இந்தப் பொண்ணு பெரிசாயிட்டால், அப்புறமாய் இந்த வீதியில் ஆம்பிள்ளைங்க யாருமே குடித்தனம் பண்ணமாட்டாங்க.' அவள் பையைஎடுத்துக்கொண்டு மேகலாவை ஒரு புழுவைப் பார்ப்பது போல் பார்த்துவிட்டுப் படியிறங்கிப் போய்விட்டாள்.

கடையில் சாமான்கள் வாங்கிக்கொண்டிருந்த எஞ்சியவர்களெல்லாம்கூட புன்னம்மாவின் வார்த்தைகளைக்

கேட்டு விட்டு மேகலாவை விழுங்குவது போலப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒருத்தன், 'இந்தப் பொண்ணின் பாட்டியோ திருடி. அம்மாவோ கல்யாணமாகாமல் குழந்தைகளைப் பெத்திருக்கிறாள். அப்படீன்னால் இந்தப் பொண்ணு எப்படியாகப் போறதோ?' என்றான்.

'எப்படியாகும்? பொண்ணு லட்டு போல இருக்குது கடிச்சி திங்கணும் போலிருக்கு. என்ன பொண்ணு! என்னை ஞாபகம் வெச்சுக்கோ! நீ பெரியவளானதும் நான்தான் உனக்கு முதல் புருஷன்'—கன்னத்தில் சிட்டிகையிட்டு விட்டுப் போய்க் கொண்டே சொன்னான் இன்னொருத்தன்.

அவன் மிகப் பெரிய ரௌடி. மங்களத்திற்கே கூட அவனைக் கண்டால் பயந்தான். அவன் என்ன சொன்னாலும் எதிர்த்து பதில் பேசவேண்டாம் என்று மங்களம் மேகலாவிடம் சொல்லியுமிருந்தாள். மேகலா அவன் சிட்டிகையிட்ட இடத்தில் கம்பளிப்பூச்சி ஊர்ந்தாற்போல அருவருப்போடு கௌனால் துடைத்துக் கொண்டாள்.

'ஏன் இப்படி இடிச்சப் புளியாய் நின்னிட்டிருக்கே? அதான் சாமான் இல்லைன்னு சொல்லிட்டேனே, போ!' நாரயணன் எரிந்து விழுந்தான்.

மேகலா நகரவில்லை. இதயத்திலிருந்து அழுகை தொண்டைக் குழிக்குத் தள்ளிக் கொண்டு வந்தது. நாராயணனைக் கெஞ்சக்கூட சக்திஇல்லாதவளைப் போல அப்படியே நின்று கொண்டிருந்தாள். அவள் தன் கண்களில் வரவிருந்த கண்ணீரை பலவந்தமாய் அடக்கிக் கொண்டிருந்தாள். ஆவேசத்தை அடக்கிக்கொண்டதால் உதடுகள் துடித்தன. மேகலாவுக்கு இப்படிப்பட்ட அவமான மெல்லாம் புதிதல்ல. ஆனாலும் ஒவ்வொரு தடவையும் வருத்தமாகவே இருக்கும். கால்கள் கடுத்துப் போகும்படியாய் மணிக்கணக்காய் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.



நாராயணன் கடைப் பையனை விரைந்து கூப்பிட்டு, 'அடேய், அரைக்கிலோ கடலை மாவையும் வெங்காயத்தையும், இப்படிக் கொண்டு வந்து போடு. இந்தப் பொண்ணு பிடிவாதக்காரி. பிடிச்சப் பிடியை விடாது. என் கடையில் சனியனைப் போல நின்னுட்டு நகராது' என்று திட்டிக் கொண்டே சொன்னான்.

பையன் சொன்னபடியே பொட்டலங்கள் கட்டிக் கொண்டுவந்தான். நாராயணன் அவற்றை மேகலாவின் கைகளில் வீசி யெறிந்தாற்போலப் போட்டான்.

மேகலா அவற்றை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தாள்.

'வாங்கி வந்தாயா?' என்கண்ணே! என்றாள் மங்களம்.

மேகலா பொட்டலங்களை அங்கிருந்த பெஞ்சியின் மேல் போட்டுவிட்டுக் கதவை ஒரு தள்ளு தள்ளினாள். உடனே தரையில் குப்புற விழுந்து அழத் தொடங்கினாள்.

ஏன்? நாராயணன் ரொம்பத் திட்டினானா?' என்றாள் மங்களம்.

மேகலா அழுது கொண்டே, கடையில் எல்லோரும் சொன்ன வார்த்தைகளை யெல்லாம் சொன்னாள்.

'எல்லோரும் நம்மை ஏன் இப்படிச் சொல்றாங்க? நான் இனி வெளியே போகவே போவதில்லை. நாளையி லிருந்து, நீயே தண்ணீர்ப் பிடிச்சுக்கோ போ.'

மங்களம் வந்து மேகலாவை இழுத்துக் கட்டிக் கொண்டாள்.

'மேகா! இப்படி உளறுவது புன்னம்மாவுக்குப் பழக்கம். நான் திருடியா? எப்பவாவது யார் வீட்டுக்காவது போய் நான் திருடியிருக்கேனா? நீ தான் பார்த்திருக்கிறாயே. சாதம் இல்லாமல் நாம்ப எவ்வளவோ தடவை பட்டினி போட்டு படுத்திருக்கிறோமே! நம்பளைக் கண்டால் அவங்களுக்கெல்லாம் பிடிக்காது. அதனால் அப்படிச் சொல்லியிருக்காங்க. நாம்ப பயந்துடக்கூடாது. நீ ஏன் சும்மாயிருந்தாய்? நாலு கொடுத்திருக்கணும்' என்று சமாதானப்படுத்தினாள்.

'எழுந்திரு, குடத்தைஎடுத்துக்கொள். நான் உனக்காகச் சுடச்சுட பக்கோடா பண்ணி வைக்கிறேன். வந்ததுமே சாப்பிடலாம்' என்றாள்.

பக்கோடா என்றதுமே மேகலாவின் நாக்கில் நீர் ஊறிற்று. முகம் மலர்ந்தது.

'அம்மா எங்கே?' என்றாள் கலக்கத்தோடு.

'குளிச்சிட்டிருக்காள்' என்றாள் மங்களம்.

என்றாவது வெளியே இவ்வாறு சொன்னார்கள் என்று வீட்டிற்கு வந்து சொன்னால், அம்மா அன்றிரவெல்லாம் சாப்பிடமாட்டாள். கதவைச் சாத்திக் கொண்டு அழுது கொண்டே உட்கார்ந்திருப்பாள். அந்தவிஷயம் மேகலாவுககு நினைவுக்கு வந்ததால், கலக்கத்தோடு அம்மாவின் அறையைப் பார்த்தாள்.

தாய் அறையில் இல்லை, குளிக்கிறாள் என்று பாட்டி சொன்னதுமே மேகலாவின் மனம் நிம்மதியடைந்தது. ஏனெனில் தாய் இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்டால், மிக வருந்துவாள் என்று தெரியும் அவளுக்கு.

மேகலாவுக்குக் கொஞ்சம் தாங்கிக் கொள்ளும் சக்தி உண்டு. எதிர்த்துப் பேசி சண்டை போட்டு விட்டு வந்திருந்தால் எந்த வருத்தமும் இருந்திருக்காது. சண்டைப் போடா விட்டால்தான் இப்படி அழுகை வரும்.



மங்களம் மேகலாவை அழவேண்டாம் என்றாள். நம்மை யாராவது ஏதாவது சொன்னால் இழுத்துக் கன்னத்தில் அறையணும். இல்லாவிட்டால் பார்வையால் முறைத்துப் பார்க்கவேண்டும்; அதுவும் முடியாவிட்டால் அந்த வார்த்தைகளை மறந்துடணும். அதானேதவிர வருத்தப்படக் கூடாது, அழக் கூடாது. அவ்வாறு அழுது கொண்டே உட்கார்ந்திருந்தால் வாழ்நாளெல்லாம் கூட அழுகைக்குப் போதாது, என்றாள்.

பாட்டி கற்றுக் கொடுத்த இப் பாடம் மேகலாவுக்குப் போகப் போக வாழ்க்கையில் பெரிய படிப்பினையாய் இருந்தது.

# 4

அதே நாள் மாலையில் இருட்டிய பிறகு, மேகலா தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்து தொட்டிகளை நிரப்பிய பிறகு, நனைந்து போன கவுனை அவிழ்த்துவிட்டு, வேறு கவுன் அணிந்து கொண்டு சமையலறையிலிருந்து பாட்டியிடம் வந்தாள்

சட்டைக்குப் போட்டுக் கொள்வதற்கு பின் இல்லை. அங்கே சுடச்சுட பக்கோடாக்கள் வைக்கப்பட்டிருந்தன.

மங்களம் சமையலறையை ஒழித்து வைக்கும் வேலையில் ஆழ்ந்திருந்தாள் பின் . தாயிடம் இருக்கிறது. போட்டுக் கொள் என்று சொன்னாள். மேகலா தாயின் அறைக்கு வந்தாள். அங்கே தாய் கண்ணாடியில் பார்த்துக்கொண்டே நெற்றிக்குப் பெரிய பொட்டு வைத்துக் கொண்டிருந்தாள்.

மேகலா தாயைப் பின்னைப் பற்றிக் கேட்பதற்குக்கூட மறந்து போய் விட்டாள்.

எப்பொழுதும் முடிந்த தலையுடனிருக்கும் தாய், என்று மில்லாதவாறு இன்று தலைக்குக் குளித்து விட்டுத் தொள தொள வென்று பின்னல் பின்னிக் கொண்டிருந்தாள். தலை நிறைய பூ வைத்துக் கொண்டிருந்தாள். முகத்திற்குப் பௌடர் பூசிக்கொண்டு வட்டமாய் பொட்டைத் திருத்திக் கொண்டிருந்தாள்.

அந்த நேரத்தில் மேகலாவுக்குத் தாயைப் பார்த்த பொழுது மிகச்சின்னவளாகவும் அழகாகவும் தோன்றினாள். அறையெல்லாம் துப்புரவாய் ஒழித்து வைக்கப்பட்டிருந்தது. படுக்கையில் அழுக்கான துப்பட்டிகள் அகற்றப்பட்டு வெள்ளைத் துப்பட்டிகளைப் பரப்பியிருந்தது. தலையணைக்குப் புதிய உறை பேடப்பட்டிருந்தது.

மேகலா பின்னாலிருந்து போய் தாயை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டு, 'அம்மீ' என்று கட்டிக் கொண்டாள். ஸ்ரீரஞ்சனி திடுக்கிட்டவளாய் திரும்பிப் பார்த்தாள்.

'நீயா?' என்றாள் சிரித்துக்கொண்டே.

மேகலா தாயின் இடுப்பைச் சுற்றிலும் கைகளைக் கோத்துக் கொண்டு, 'அம்மீ நீ எவ்வளவு அழகாயிருக்காய். ஏன் எப்பொழுதும் இப்படிப் பின்னிக்க மாட்டேங்கிறாய்? பூ வைத்துக்க மாட்டேங்கிறாய்?' என்று கேட்டாள்.

ஸ்ரீரஞ்சனியின் கண்களில் ஈரம் பளபளத்தது.

'ப்சு. போ சீக்கிரமாய் போய் சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொள்' என்றாள்.

மேகலா தாயிடமிருந்து பின்னை வாங்கிச் சட்டைக்குப் போட்டுக் கொண்டாள். அந்த வெள்ளை வெளேரென்ற படுக்கையைப் பார்த்தபோது மேகலாவின் மனம் சந்தோஷத்தால் துள்ளிற்று. சாப்பிட்ட பிறகு அங்கேயே வந்து படுத்துக் கொள்ளப் போகிறேன்' என்று அடம் பிடித்தாள்



'அங்கே வேண்டாம், இப்படி வா! என்னிடம் வந்து படுத்துக்கொள்' என்றாள் மங்களம்.

'சீ, அந்த சனியன் பிடித்த படுக்கை எனக்கொண்ணும் வேண்டாம். நான் அம்மாகிட்டேதான் படுத்துக்கொள்வேன்.

'சொன்னத்தைக் கேட்கப்போகிறாயா இல்லையா?'

'நான் ஏன் இங்கே படுத்துக்கக் கூடாது? மானஸா மட்டும் படுத்துக்க மாட்டாளா?

'மானஸாகூட படுத்துக்க மாட்டாள். போதுமா?'

மானஸா. எழுந்திரு, வா! மானஸா அக்காவைப் பார்த்து முறைத்தாள்.

மங்களம் இருவரையும் திட்டிவிட்டு, பலவந்தமாய் இழுத்து வந்து தன் பாயில் படுக்கவைத்தாள்.

அக்காவின் மேல் கோபமாய் இருந்த மானஸா மேகலா படுத்துக் கொண்டதுமே கிள்ளத் தொடங்கினாள். மேகலா எழுந்திருந்து பளீர் பளீரென்று இரண்டு கொடுத்தாள்.

'ஐயோ! நீங்க பசங்களே இல்லை, பிடாரிங்க.'

மங்களம் தான் வந்து இருவருக்கும் நடுவில் படுத்துக் கொண்டாள். ஸ்ரீரஞ்சனி வந்து அழுது கொண்டிருந்த மானஸாவை சமாதானப் படுத்திவிட்டு, 'மேகா' மானஸாவை அடிக்கக் கூடாதுன்னு எவ்வளவு தடவை சொல்லியிருப்பேன்?' என்று கடிந்து கொண்டாள்.

'பின்னே, அவள் மட்டும் என்னைக் கிள்ளலாமா?' 'அவள் சின்னவள், நீ பெரியவள். நீ அன்பாய் இருந்தால் அவளும் அன்பாய் இருப்பாள்.'

மேகலா பதில் பேசவில்லை. அவளைக்கூட மானஸா கிள்ளினாள். ஆனால் தாய் மானஸாவைத்தான் தேற்று

கிறாள். அதற்குக் காரணம் என்னவென்று மேகலாவுக்குப் புரிந்துவிட்டது. மானஸா கிள்ளியதுமே அவள் எதிர்த்து நின்று அடிக்காமல் பெரிதாய் அழுதிருக்க வேண்டும்.

மேகலா, தப்பாகிவிட்டதே என்றெண்ணி வாயை மூடிக் கொண்டு படுத்துக்கொண்டாள். கொஞ்ச நேரத்தில் இருவரும் தூங்கி விட்டார்கள்.

மாலையில் புன்னம்மாவின் திட்டுக்களால் கலங்கிப் போயிருந்த மேகலாவுக்குக் கனவில் கூட அதே சண்டைதான் வந்ததால், அன்றிரவு திடீரென்று விழிப்பு வந்தது அவளுக்கு. தாகம் எடுத்தது. பக்கத்தில் மங்களம் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள். மானஸா பாயை விட்டு விலகித் தொலைவில் தரையில் உருண்டு போய்க் குப்புறப் படுத்துக் கொண்டிருந்தாள்.

அம்மா எப்பொழுதும், 'மானஸாவை நீ நன்றாய்ப் பார்த்துக்கணும் மேகலா! எனக்கு மானஸாவும், மானஸாவுக்கு நீயும் தவிர, வேறு யார் இருக்கிறார்கள் சொல்லு?'— என்பாள்.

அந்த வார்த்தைகள் நினைவுக்கு வந்தால் மேகலாவுக்கு மானஸாவின்பால் விருப்பம் தோன்றிவிடும். தான் மானஸாவை நன்றாய்ப் பார்த்துக் கொண்டால், அம்மா தன்னை நன்றாய்ப் பார்த்துக் கொள்வாள் என்றும் புரிந்தது. தான் பெரியவள் என்ற மதிப்பு கூட உள்ளது. மேகலா துப்பட்டியை எடுத்து மானஸாவுக்குப் போர்த்தினாள்.

தண்ணீர் குடிப்பதற்காகச் சமையலறைக்குப் போனாள். சமையலறைக் கதவைத் திறக்கப் போன மேகலாவுக்குச் சிரிப்புச் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். தாயின் அறையில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. யாரோ பேசிக் கொண்டிருந்த சப்தம் கேட்டது. அறையிலிருந்து விளக்கு வெளிச்சம் ஜன்னல் வழியாய்க் கொல்லையில் வந்து விழுந்து

பக்கங்களை மடக்காமலும் கிழிக்காமலும்
புத்தகத்தை கவனமாக கையாளுங்கள்.



கொண்டிருந்தது. அறைக்கதவு சாத்தப்பட்டிருந்தது. திரும்பவும் சிரிப்புச் சப்தம் கேட்டது. தாயின் சிரிப்புதான் அது. தாய் அவ்வளவு நன்றாய்ச் சிரித்து மேகலா என்றுமே பார்த்ததில்லை.

சமையலறைக் கதவைத் திறப்பதை விட்டாள். தண்ணீர் விஷயத்தையே மறந்துவிட்டாள். மெல்லக் கொல்லைப் பக்கமாய் இருந்த ஜன்னலுக்கருகில் வந்தாள். ஜன்னல் கதவிற்குப் பாதியளவில் திரை போடப்பட்டிருந்தது. மேகலா உயரமாகவே இருந்ததால் காலைத் தூக்கமாலேயே சரியாய்த் திரைச்சீலை வரைக்கும் முகம் வந்தது. மேகலா அறைக்குள் பார்த்தாள்.

கட்டிலில் யாரோ ஒருத்தன் படுத்துக் கொண்டிருந்தான். தாய் அவன் மார்பின்மேல் தலையை வைத்துப் படுத்துக் கொண்டிருந்தாள். அவன் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். தாய் சிரித்துக் கொண்டிருந்தாள். அவன் தாயை இடுப்பிற்கருகில் கிச்சுக் கிச்சு மூட்டிக்கொண்டிருந்தான். தாய் சிரித்துக் கொண்டிருந்தாள்.

மேகலா சிலையாய் நின்றுவிட்டாள்.

தாய் அவ்வளவு சந்தோஷமாய் இருந்து என்றுமே கண்டதில்லை. அவன் எழுந்தான். அவளை எழுப்பி உட்கார வைத்தான். ஸ்ரீரஞ்சனியின் தலையைப் பிடித்துக் கொண்டு தன் தலையோடு அவள் தலையைப் பொருத்தி ஏதோ சொன்னான்.

அவள் சிரிப்பை விட்டுவிட்டு, முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டாள். அவன் முகவாயைப் பிடித்துக் கொண்டு காதில் ஏதோ ரகசியமாய்ச் சொன்னான்— அவன். அவள் முறைத்துப் பார்க்கப் போனவள், சிரித்துவிட்டாள்.

அவன் மேஜை மேல் இருந்த பர்ஸை எடுத்து ஸ்ரீரஞ்சனியின் கையில் பணத்தை வைத்தான். ஸ்ரீரஞ்சனி வாங்கிக்

கொள்ளமாட்டேன் என்பது போலத் தலையைத் திருப்பிக் கொண்டாள். அவன் பலவந்தம் பண்ணவில்லை. பர்சிற்குள் வைத்துக் கொள்ளவும் இல்லை. தலையணைக்குக் கீழே வைத்துவிட்டான். நேரத்தைப் பார்த்துக் கொண்டான்.

'போயிட்டு வரேன்.'

'திரும்பவும் எப்பொழுது வருவீங்க?' அவன் இந்தப் பக்கமாயிருந்த ஜன்னலுக்கருகில் வந்து, சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

'சொல்ல முடியாது. இதே போல நேரம் கிடைத்த போது வருவேன்!'

மேகலா சட்டென்று ஜன்னலுக்கருகிலிருந்து தள்ளி நின்றாள். சுவரோடு ஒட்டி நின்றபடி அறைக்குள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்த பேச்சுக் குரலைக் கூர்ந்து கேட்டாள்.

ஸ்ரீரஞ்சனி தீனமாய்ச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

'எனக்கு இந்தப் பணம் வேண்டாம். பசங்கள் பெரியவங்களாகிக் கொண்டு வராங்க. நாம்ப தனியாய்க் குடித்தனம் வைக்க வழி பாருங்க.' கெஞ்சுவது போல் இருந்தது அவள் குரல்.

அதான் யோசித்துப் பார்க்கிறேன்னு சொன்னேனே! என் செருப்பு எங்கே?'

'இதோ, கட்டிலடியில் இருக்கு.'

மேகலா வேகமாய் வந்து சட்டென்று பாட்டிக்குப் பக்கத்தில் பாயில் படுத்துக் கொண்டாள். குப்புறத் திரும்பிப் படுத்து இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டு பக்கத்தில் திரும்பிப் பார்க்கத் தொடங்கினாள். அறைக்



கதவுகள் திறந்துகொண்டன. அவன் இந்தப் பக்கமாய் வந்தான். தாய் பின்னாடியே வந்தாள்.

அவன் போக முனைந்த போது அவள் அவன் கையைப் பிடித்துக் கொண்டாள். அவன் திரும்பிப் பார்த்து விட்டு, அவள் தலையைத் தன் தலையோடு சேர்த்துக்கொண்டு விட்டு, பிறகு விட்டான்.

அவன் போய்விட்டான். தாய் சந்தடி செய்யாமல் மிக மெதுவாய் வாசற்கதவைச் சாத்திக் கொண்டிருந்தது கேட்டுக் கொண்டுதானிருந்தது.

அறைக்குள் போகத் திரும்பிய தாய் நின்று துப்பட்டியை எடுத்து மேகலாவுக்குப் போர்த்தி விட்டுப் போனாள். உள்ளே போய் படுத்துக்கொண்டாள். மேகலாவின் மனதில் போராட்டம் தொடங்கிவிட்டது. யார் அவன்? அவளுக்குத் தந்தையாய் இருக்குமா? தந்தையாய் இருந்தால் தம்மோடு ஏன் இல்லை? ஒரு தடவை கூட அவனைப் பார்த்ததில்லையே இதற்கு முன்னால்!

மேகலா யோசனையில் ஆழ்ந்தபடியே உறங்கிவிட்டாள். அவள் எழுந்தபோது நன்றாய் விடிந்து விட்டது.

மங்களம் சமையல் பண்ணிக்கொண்டிருந்தாள். மேகலா கண்களைக் கசக்கிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள்.

முகம் கழுவிக் கொண்டு காபியைக் குடித்த மேகலா, தயைப் பார்த்தும் பார்க்காதது போலக் கவனிக்கத் தொடங்கினாள். தாய் எப்பொழுதும் போல முடிந்த தலையுடனும், பழைய புடவையுடனும் காட்சியளித்தாள். அவளைப் பார்த்தால் நேற்றிரவு தான் பார்த்த தாய் இதுதானா என்று தோன்றிற்று மேகலாவுக்கு.

மேகலா துடப்பத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, வீட்டை யெல்லாம் பெருக்கிவிட்டுத் தாயின் அறைக்குப்

பெருக்க வந்தாள். அவ்வறை எப்பொழுதும் போலவே தான் இருந்தது. படுக்கை மீது பழைய புடவையை துப்பட்டியால் போர்த்தி யிருந்தது. தலையணைக்கு உறை இல்லை.

மேகலாவுக்குத் திடீரென்று தான் நேற்றிரவு பார்த்தது கனவு இல்லையே என்று தோன்றிற்று. கனவாய்த்தான் இருக்க வேண்டும். ஏனெனில் இப்பொழுதெல்லாம் அவளுக்கு என்னென்னவோ கனவுகள் வந்துகொண்டிருக்கின்றன.

மேகலா பெருக்கிக் கொண்டிருந்தபோது குப்பையில் சிகரெட் துண்டுகள் தென்பட்டன. அவற்றைப் பார்த்ததுமே நின்றுவிட்டாள். வீட்டைப் பெருக்குவதை விட்டுவிட்டு, அந்த சிகரெட் துண்டுகளையே இமைக்காமல் பார்க்கத் தொடங்கினாள். அப்படியென்றால், நேற்றிரவு வீட்டிற்கு யாரோ வந்த விஷயம் உண்மைதான். கனவில்லை! அந்த சிகரெட் துண்டுகளே அதற்கு சாட்சிச் சொல்லிக்கொண்டிருந்தன. தாய் அங்கு இல்லை. முன் அறையில் மானஸாவுக்குத் தலைவாரிக் கொண்டிருந்தாள்.

'அடியே, சீக்கிரமாய்ப் பெருக்கிட்டு வா! பொழுது ஏறிய பிறகு வெகு நேரங்கழித்து வேறு; எழுந்தாய் ஒவ்வொரு வேலையையும் மணிக்கணக்கில் பண்ணிகிட்டிருக்காய்' மங்கம்மா உள்ளேயிருந்து கத்தினாள்.

ஸ்ரீரஞ்சனி சீப்பை வைப்பதற்காக அவ் வறைக்குள் வந்தாள். தாயைப் பார்த்ததுமே மேகலா சரேலென்று குனிந்து கட்டிலுக்கடியில் பெருக்குவது போல உட்கார்ந்துக் கொண்டாள். அங்கிருந்து துடைப்பத்தோடு கூட ஒரு வெள்ளைக் கைக் குட்டையும் வந்தது. மேகலா அதைக் கண்கள் அகல விரியப் பார்த்தாள். பிறகு துடைப்பத்தால் அதைத் தூக்கிக் காட்டிக்கொண்டே, 'அம்மீ' என்று கத்தினாள்.



ஸ்ரீரஞ்சனி திரும்பினாள்.

என்ன?'

மேகலா மௌனமாய் துடைப்பத்தின் மேலிருந்த கைக் குட்டையைத் தாய்க்குக் காட்டினாள். அதைப் பார்த்ததுமே ஸ்ரீரஞ்சனியின் கண்கள் அகன்றன. பரபரப்புடன் பார்த்தாள். சட்டென்று பாய்ந்து வந்து அக் கைக் குட்டையை வாங்கி, உதறி மடித்து எடுத்துக் கொண்டு போய் பீரோவில் வைத்துப் பூட்டினாள்.

'அம்மீ, யாருடையது அது?'

'நீ வாயை மூடிக்கொண்டு பெருக்கி விட்டுப் போ.' எரிந்து விழுந்தாள்.

மேகலா மௌமாய் வீட்டைப் பெருக்கி முடித்தாள்.

பத்துமணி யளவில் மங்களம் மேகலாவைக் கூப்பிட்டு, கையில் நூறு ரூபாயை வைத்து, 'நாராயணனிடம் தந்து விட்டு வா' என்று சொன்னாள். மேகலா அப் பணத்தையே உற்றுப் பார்த்தாள். நேற்றிரவு இல்லாத பணம் இன்றைக்கு எப்படி வந்தது?

'ராத்திரி வந்த அந்த ஆள் தந்த பணந்தானே பாட்டி?' என்றாள்.

மங்களம் திடுக்கிட்டுப் போய்விட்டாள். 'அந்த ஆளா? யார் அந்த ஆள்?'

'ராத்திரி அம்மாவின் கட்டிலில் படுத்துட்டிருந்தாரே, அந்த ஆள்! அம்மா சிரித்துக் கொண்டே அவரோடு பேச வில்லையா?' மேகலா வார்த்தைகளை முடிக்கக்கூடவில்லை மங்களம் சரேலென்று அவள் வாயைப் பொத்திவிட்டு, தரதரவென்று சமையலறைக்குள் இழுத்துச் சென்றாள் அவளை.

'உனக்கு யார் சொன்னாங்க, இதெல்லாம்?' ரகசியமாய்க் கேட்டாள்.

'நான் பார்த்தேன் பாட்டி.' மேகலா நேற்றிரவு தாகம் எடுத்ததால் எழுந்தபொழுது நடந்ததையெல்லாம் சொல்லி விட்டாள்.

'அடிகள்ளி! படவா!' என்று அவள் மூக்கின்மேல் விரலை வைத்துக் கொண்டாள்.

'அவர் யாரு பாட்டி?'

யாரா யிருந்தால் உனக்கென்ன? போய்ப் பணத்தை நாராயணனிடம் தந்துட்டுவா! தோளைப்பிடித்து வேகமாய் முன்னுக்கு இழுத்து, 'இதப்பார்! இந்த விஷயத்தை யாரிடமாவது சொன்னாயானால் உன் நாக்கை அறுத்துடுவேன். ஜாக்கிரதை!' என்று மிரட்டினாள்.

'ஏன் அறுப்பாய்? நான் என்ன தப்புப் பண்ணினேன்? நான் நாராயணனிடம் போக மாட்டேன்' மேகலா பணத்தைத் தூக்கி எறிந்தாள்.

'போகப் போகிறாயா, இல்லையா?' மங்களம் கையை ஓங்கினாள்.

'என்னம்மா?' ஸ்ரீரஞ்சனி அங்கே வந்தாள்.

'என்னவா? வீட்டில் வளர்ந்த பசங்கள் இருங்காங்க. நீ கொஞ்சம் ஜாக்கிரதையாய் இருக்கக் கற்றுக் கொள்.'

இவங்க கேட்கிற கேள்விங்களுக் கெல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது.'

மங்களம் கோபமாய்ச் சொல்லிவிட்டு, குடத்தைத் தூக்கிக் கொண்டு போய் விட்டாள்.

ஸ்ரீரஞ்சனி மேகலாவைப் பார்த்தாள்.

பக்கங்களை மடக்காமலும் கிழிக்காமலும்
புத்தகத்தை கவனமாக கையாளுங்கள்.



'என்ன மேகா?' என்றாள். தாய் குழைவாய் கூப்பிட்ட அந்தக் குரலுக்கே உருகிப் போய் விட்டாள் மேகலா. 'நான் ஒன்றும் சொல்லவில்லைம்மா. நேற்றிரவு வந்திருந்த அவர் தந்த பணந்தானேன்னு கேட்டேன். பாட்டி நாக்கை அறுத்துடுவேன்னு திட்டுகிறாள்.'

அதைக் கேட்ட ஸ்ரீரஞ்சனியின் முகம் வெலவெலத்து விட்டது.

'ராத்திரி வந்த அவரை நீ எங்கே பார்த்தாய்?' அக் குரல் கிணற்றுக்குள்ளிருந்து வந்தாற்போலிருந்தது.

மேகலா சொன்னாள். ஸ்ரீரஞ்சனி சட்டென்று மேகலாவை இழுத்து மார்போடணைத்துக் கொண்டாள்.

'சொல்லும்மா, அவர் யார்?'

'உங்கப்பா மேகா.'

மேகலா சரேலென்று மகிழ்ச்சியோடு நிமிர்ந்து பார்த்தாள்.

'அப்பா! எங்கப்பா!' அவள் முகம் சந்தோஷத்தால் பிரகாசமாய் இருந்தது.

'ஆமாம் உங்கப்பாதான்.'

'பின்னே, அப்பாவானால் நம்மோடு ஏன் இருக்க மாட்டார்?'

'இருப்பார்! அதற்காகத்தான் முயற்சி பண்ணிட்டிருக்கார் மேகா! நீ சின்னப் பெண்ணாயிருந்தாலும் நன்றாய்ப் புரிஞ்சுக்கக் கற்றுக்கணும். உங்கப்பாவுக்கு இன்னொரு மனைவியும் குழந்தைகளும் இருக்காங்க. அவளுக்கு நம்மைக் கண்டாலே பிடிக்காது. அதனால்தான் அவரால் நம்மிடம் வரமுடியலை.'

'அப்பா அவங்களை விட்டுவிட்டு நம்மோடேயே இருக்கலாமில்லே?' அப்பாவித்தனமாய்க் கேட்டாள்.

ஸ்ரீரஞ்சனி ஒரு வினாடி பதில் பேச முடியாதவளாய் பார்த்தாள், பிறகு மேகலாவின் தலையைத் திரும்பவும் மார்போடணைத்திக் கொண்டாள்.

'அதான் சொன்னேனே, அதற்காகத்தான் அவர் முயன்று கொண்டிருக்கிறார். அவர் நம்மோடு வந்து இருந்தால், நாம்ப இந்த வீட்டை விட்டு வேறு வீட்டுக்கு மாறிப் போயிடலாம். நீயும், மானஸாவும் எல்லோரையும் போல ஸ்கூலுக்குப் போகலாம்.'

'அப்பா சொன்னாரா அம்மீ இந்த மாதிரி?' மிகச் சந்தோஷமாய்க் கேட்டாள்.

'ஆமாம்மா. நம்ப கஷ்டம் கரையேறணுமேன்னு காத்துட்டிருக்கேன் நான்.'
அதற்குள் மங்களம் உள்ளே வந்தாள்.

'என் கண்ணில்லையா, போய் நாராயணனிடம் பணத்தைக் கொடுத்துட்டு வா.'

மேகலா அதற்கு மேல் எதுவும் கேட்கவில்லை. பணத்தை எடுத்துக் கொண்டாள். அதைச் சந்தோஷமாய் ஜாக்கிரதையாய் பிடித்துக் கொண்டு நாராயணன் கடையை நோக்கி ஓடினாள். நாராயணன் கூட்டம் இல்லாமல் தனியாய் கல்லாவிலேயே உட்கார்ந்திருந்தான்.

'என்ன பொண்ணு! திரும்பவும் வந்துட்டாய்—' என்றான் அலுப்படைந்தவனாய்.

'இதோ பணம்!' மேகலா நூறுருபாயை எடுத்துத் தந்த போது, நாராயணன் ஆச்சரியமடைந்து விட்டான். அட அட அட! ராத்திரி இல்லாத பணம் விடிந்ததுமே எப்படி வந்தது? உங்க வீட்டுக் கொல்லையில் காக்காய் கொண்டு வந்துப் போட்டுதோ? ஆர்வத்தோடு கேட்டன்.



'காக்காய் இல்லை எங்கப்பா வந்து தந்தார்'—மேகலா ஆர்வத்தோடு சொன்னாள்.

'உங்கப்பாவா?' அவன் விநோதமாய்ப் பார்த்தான்.

'ஆமாம்.'

'உங்கப்பாவா?' அவன் பெரிதாய்ச்சிரித்தான். பலே அப்பா! உங்கப்பா ஏதாவது பிசாசா என்ன? ராத்திரி வந்துட்டு காலையிலேயே மாயாகிவிடுவதற்கு? அப்பாவாம் அப்பா!' மேன்மேலும் சிரிக்கத் தொடங்கினான்.

மேகலா திரும்பி வந்து விட்டாள். நாராயணனின் வார்த்தைகள் மேகலாவுக்கு வருத்தத்தைத் தரவில்லை. திரும்பி வந்து கொண்டிருந்த போது பள்ளிக்கூடத்திற்குப் போய்க் கொண்டிருந்த பசங்களை அப்படியே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். அவர்களைப் பார்த்தபொழுது அவள் உதடுகள் மகிழ்ச்சியால் பிரிந்து கொண்டன. 'அப்பா வந்து விடுவார். நானும் மானஸாவும் கூட இதேபோல ஸ்கூலுக்குப் போவோம்.

'இதே போல அழகாய் டிராஸ் பண்ணிக் கொண்டு, பையைத் தோளில் மாட்டிக்கொண்டு போவோம்.'

அன்றுமாலையில் தலைவாரிக் கொண்டிருந்தபோது 'அம்மீ, அப்பா இன்றைக்கு வருவாரா?' என்று கேட்டாள்.

'வரமாட்டாரும்மா?'

'வரமாட்டாரா? ஏன்?'

'அவருக்கு ஏகப்பட்ட வேலைகள். ஓய்வு கிடைத்தால் தான் வருவார்.'

'நாம்பளே அவரோடு இருந்தால், அவர் வேலைகளைப் பார்த்துக் கொண்டு நம்மிடம் வந்துடலாம் இல்லையா?'

'ஆமாம்மா! என் தவிப்புக் கூட அதுதான்' என்றாள் ஸ்ரீரஞ்சனி.'

அன்று காப்பிரைட்டிங் மிக அழகாய் எழுதியிருந்தாள் மேகலா. தாய் மிக நன்றாயிருப்பதாய் மெச்சினாள்.

'அம்மீ, இதைப் பத்திரமாய் வைத்திருக்கப் போறேன்'

'எதுக்கு'? என்றாள் ஸ்ரீரஞ்சனி.

'அப்பா வருவாரில்லே? காட்டப் போறேன்.'

'ஸ்ரீ ரஞ்சனி பதில் பேசவில்லை. மேகலாவை அழுத்திக் கட்டிக் கொண்டாள்.

மேகலா சில நாட்கள்வரை இரவு வேளைகளில் நன்றாய் தூங்கவில்லை. அப்பா வந்தால் அம்மா எழுப்பமாட்டாளோ என்ற பயம். ஆனால் அப்பா வரவேயில்லை. அப்பாவுக்கு ஏகப்பட்ட வேலை என்று அம்மா சொன்னாளே! ஸ்ரீரஞ்சனி யாருமில்லாத பொழுது பெட்டியைத்திறந்து போட்டோவை எடுத்துக் காட்டினாள். மேகலா மிகப் பரபரப்புடன் பார்த்தாள். அப்பா போட்டோவில் மிக நன்றாய் இருந்தாற் போலத் தோன்றிற்று.

அன்று மாலையில் ஸ்ரீரஞ்சனி மேகலாவையும், மானஸாவையும் தலைவாரிக் கொண்டு புதுத் துணிகளை அணிந்து கொள்ளும்படிச் சொன்னாள். பெண்களிருவரும் தாய் சொன்னது போலவே தயாரானார்கள். அதற்குள் வீட்டையெல்லாம் சுத்தமாய்ப் பெருக்கி அறையைச் சுத்தமாக்கியிருந்தார்கள். மங்களம் தடபுடலாய்ச் சமைத்தாள்.

இரவு ஒன்பது மணிக்கு அவர் வந்தார். டாக்ஸியிலிருந்து இறங்கிப் பணத்தைத் தந்து கொண்டிருந்த போது, மேகலா ஜன்னல் வழியாய்ப்பார்த்தாள். தந்தை சில்க்ஷர்ட் போட்டுக்



கொண்டிருந்தார். வாயில் சிகரெட் இருந்தது. அவர் உள்ளே வந்தார். மானஸாவும் மேகலாவும் சமையலறையில் பொம்மைகளைப் போல் சந்தடி செய்யாமல் உட்கார்ந்திருந்தார்கள். அவர் நேராய் அறைக்குள் போனார். கொஞ்ச நேரங்கழித்து ஸ்ரீரஞ்சனி கூப்பிட்டாள்.

'மேகா! தண்ணீர் கொண்டு வா! தங்கையைக் கூட கூப்பிடு!' மேகலா தண்ணீர் தம்ளரைக் கையிலெடுத்துக் கொண்டாள். பாவாடை புதிது; நீளமாய் கால்களைத் தடுக்கிக் கொண்டேயிருந்தது. அந்த உடையில் மேகலா கூட பொம்மையைப் போல இருந்தாள். மானஸாவை வரச் சொல்லி சைகைக் காட்டினாள். சகஜமாய் வெட்கப்படும் சுபாவமுடைய மானஸா வர மறுத்து விட்டாள். மேகலா கோபமாய் பார்த்த பிறகு மானஸாவும் வரத் தொடங்கினாள்.

மேகலா அறைக்குள் தண்ணீரைக் கொண்டு வந்தபோது அவன் கட்டிலில் உட்கார்ந்துக் கொண்டிருந்தான். தாய் மேஜை மேல் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தாள்.

'தண்ணீர் கொடு' என்றாள் ஸ்ரீரஞ்சனி.

மேகலா தந்தையிடம் தண்ணீர் தம்ளரை நீட்டினாள்

அவன் வாங்கிக்கொண்டு, 'உன்பேரென்ன? என்றான்

'மேகலா!' நிதனமாய் நிமிர்ந்து அவனைப் பார்க்கமுடியவில்லை. சந்தோஷத்தால் பைத்தியம் பிடித்து விட்டாற் போலிருந்தது.

'உன் பெயர்?' அவர் மானஸாவைக் கேட்டார்.

'மனஸா' என்றாள் அவள் கம்பியகுரலில். அவன் ஒன்றும் பேசவில்லை. ஸ்ரீரஞ்சனி சொன்னாள்:

'மானஸா வீணை நன்றாய் வாசிப்பாள். கேட்கிறீங்களா?'

'இப்ப ஒன்றும் வேண்டாம்' என்றான் அவன்.

'மேகலா கணக்கு நன்றாய்ப் போடுவாள். கையெழுத்து கூட நன்றாயிருக்கும்; பார்க்கிறீங்களா?'

அவன் பதில் சொல்வதற்குள்ளாகவே மேகலா விர்ரென்று ஓடிப் போய் புத்தகங்களைக் கொண்டுவந்து காட்டினாள்.

அவன் ஓரிரு பக்கங்களைப் புரட்டி விட்டுப் பக்கத்தில் வைத்து விட்டான். அவன் கூட இவர்களைப் பார்க்கவில்லை.

'சரி, நீங்கள் போங்கள். பாட்டியோடு சேர்ந்துசாப்பிடுங்கள்' என்றாள் ஸ்ரீரஞ்சனி.

பெண்கள் இருவரும் வெளியே வந்து விட்டார்கள். மானஸா அறையை விட்டுப் போகச் சொன்னதே போதும் என்றாற் போல ஓட்டம் பிடித்தாள். மேகலாவோ அவ்வறையை விட்டுப் போகச் சற்றும் விருப்பமில்லாதவளாய் நகர்ந்தாள்.

மேகலாவுக்குச் சாப்பாடு சகிக்கவில்லை. அடிக்கடி அவ்வறையையே திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள். தாய் அவனுக்குச் சாப்பாடு பறிமாறிக் கொண்டிருந்தாள். அவன் வேண்டாம் என்று மறுக்க மறுக்க, விழுந்து விழுந்து பறிமாறிக் கொண்டிருந்தாள் மேகலாவுக்குத் தானும் அங்கே தந்தைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு சாப்பிட வேண்டும்போல் ஆசையாய் இருந்தது. ஆனால் அந்த ஆசையை எப்படித்தான்வெளியே சொல்வது என்று தெரியவில்லை.

தந்தை அவளைத் திரும்பவும் கூப்பிடவேயில்லை. சாப்பிட்ட பிறகு தூக்கம் வந்துவிட்டது அவளுக்கு. தூங்கி விட்டாள். விழித்ததும் தாயின் அறைக்கு ஓடி வந்நாள். 'அம்மீ' கூப்பிடப் போன மேகலா தாயைப் பார்த்து அதிர்ச்சியடைந்தவளாய் அப்படியே நின்று விட்டாள்.



தாய் கட்டிலில் படுத்த படி அழுதுகொண்டிருந்தாள். முகமெல்லாம் வீங்கினாற் போலிருந்தது. கண்கள் சிவந்திருந்தன. மேகலா கூப்பிட்டதைக் கேட்டதும் புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டே, 'என்ன?' என்றாள்.

அக்குரல் துக்கத்தால் தழுதழுத்துக் கொண்டிருந்தாற் போலிருந்தது.

'அப்பா போயிட்டாரா அம்மீ?'

'ஆங்!' தாய் அந்தப் பக்கமாய்த் திரும்பிப் படுத்துக் கொண்டாள். அவள் ஏன் அழுது கொண்டிருந்தாள் என்று மேகலாவுக்குப் புரியவில்லை. கேட்கத் துணிச்சல் இல்லை. தந்தை போய் விட்டார் என்றதுமே உற்சாகம் வடிந்து விட்டது.

மேகலா வீட்டைப் பெருக்கத் தொடங்கினாள். திரும்பவும் சிகரெட் துண்டுகள் தென்பட்டன. மேகலா இன்று அவைகளைப் பார்த்து அருவருப்படையவில்லை. பொறுக்கிக் காகிதத்தில் எடுத்துப் பொட்டலம் கட்டித் தன் புத்தகங்களுக்கு இடையே அந்தப் பொட்டலத்தை ஒளித்து வைத்து விட்டு வந்தாள். மேகலாவின் கைகள் ஒரு முறை வாசனையைப் பார்த்துக் கொண்டன.

சிகரெட் வாசனை லேசாய் வந்து கொண்டிருந்தது. மேகலாவுக்கு அந்த வாசனையை உணர்ந்தபொழுது தந்தை கிட்டத்தில் இருப்பது போலவே தோன்றிற்று. நேற்றிரவு கூட அதே போலதான். தந்தையிடம் போனதுமே சிகரெட் வாசனை வந்தது! அது எவ்வளவு நன்றாயிருந்தது! சிகரெட் வாசனை என்றதுமே தந்தை நினைவிற்கு வரும்படியாய்த் தோன்றத் தொடங்கிவிட்டது.

தாய் அன்று பிற்பகல்கூடச் சாப்பிடவில்லை.

'ஏன் அழுகிறாய்? உன் தலையெழுத்தை அனுபவி! நீ நினைக்கிறதெல்லாம் நடக்காது. அவன் உன் பேச்சைத் கேட்கிற ரகம் இல்லை என்று சொன்னேனா இல்லையா நான்? கொஞ்சம் பணம் கேளுன்னு சொன்னாலும் கேட்க மாட்டாய் நீ. குடித்தனத்தை வைக்கச் சொல்லிக் கழுத் தறுப்பாயே தவிர, பணம் மட்டும் கேட்கமாட்டாய். கடைசி யில் இந்தப் பசங்களுக்கும் உனக்கும் ஏதோ குளமோ குட்டையோதான் கதியாகப் போறது. பார்த்துட்டிரு' என்று கண்டித்தாள் மங்களம்.

'எனக்கு வேண்டியது பணம் இல்லைம்மா. என்னுடை யது என்று ஒரு வீடும் அவருந்தான் வேண்டும்' என்றாள் ஸ்ரீரஞ்சனி அழுது கொண்டே.

'அப்படீன்னால் ஜென்மம் முழுக்க அழுகைதான் உனக்கு எஞ்சியிருக்கும், எழுந்து வா! வீட்டில் அரிசி இல்லாமல் பட்டினியால் வாடி மாதத்துக்குப் பதினைந்து நாள் எப்படி யும் செத்துட்டிருக்கோம். நன்றாய் சமைத்திருக்கும் நாளில் சாப்பிடாமல் இதென்ன தலையெழுத்து? வா! உனக்கும், எனக்கும், இந்தப்பசங்களுக்கும் தெய்வந்தான் துணை. நான் அப்படி நினைத்துட்டு தான் எல்லா கவலையையும் விட்டுட் டேன். நீயும் அப்படியே நம்பு! இதெல்லாம் என் தலை யெழுத்துதான்!' மங்களம் தலையிலடித்துக் கொண்டாள்.

மேகலா கவனமாய் அவ்விருவர் பேச்சையும் கேட்டாள். ஆனால் அது சரியாய்ப் புரியவில்லை. ஸ்ரீரஞ்சனி பழையபடி மாறுவதற்கு நான்கு நாள். ஆயிற்று.

மேகலாவுக்குக் கொஞ்சம் சமயம் கிடைத்து விட்டால் போதும். தாயிடம் போய் தந்தையைப் பற்றிய விவரங் களைக் கேட்கத் தொடங்கிவிடுவாள். தாய் அவளை மடியில் உட்கார வைத்துக் கொண்டு, தலையைக் கோதிக் கொண்டே சொல்லுவாள்.



'அப்பா வருவார். நமக்குன்னு ஒரு வீடும் இருக்கும்.

'நான் சமையல் செய்வேன். நாம் எல்லோருமாய் சேர்ந்து சாப்பிடுவோம். நீங்கள் ஸ்கூலுக்கும் அப்பா ஆபீசுக் கும் போயிட்டுத் திரும்பி வரும்வரை நான் எல்லா வேலை களையும் பண்ணுவேன்' என்பாள் தாய்.

'அப்ப எனக்கு வேலை இருக்காதா அம்மீ?' மேகலா நிமிர்ந்து பார்த்துவிட்டுக் கேட்டாள்.

'ஊஹூம். வேலைக்காரன் தான் இருப்பானே? அவனே பண்ணுவான் எல்லா காரியங்களையும்.'

'தண்ணீர் கூட அவனே கொண்டு வருவானா?'

'மேகலா! அப்பாவின் வீட்டிலேயே பம்ப் இருக்கும். நினைத்த இடத்திலெல்லாம் குழாய் இருக்கும். அதிலிருந்து எப்பொழுதும் தண்ணீர் வந்துட்டிருக்கும். நமக்குத் தண்ணீர் வேணுங்கிறபோது அவற்றைத் திருப்பினால், போதும்.'

'பலே ஜோராய் இருக்கும்மா' —சந்தோஷமாய்ச் சொன் னாள்.

'உம்!' ஸ்ரீரஞ்சனி இன்னும் தொடர்ந்தாள். 'உங்களுக்கு டியூஷன் சொல்லித் தர டீச்சர் வருவாங்க. லீவு வந்தால் நாம்பல்லாம் சேர்ந்து ஜூவுக்கோ, லைட் ஹவுசுக்கோ போகலாம். சாப்பாட்டையெல்லாம் கட்டிக்கொண்டு போய் அங்கேயே சாப்பிடலாம்.'

மேகலா நிமிர்ந்தாள்— 'அம்மீ! நான் அப்பா பக்கத்தி லேயே உட்கார்ந்து சாப்பிடுவேனே! வேறெங்கேயும் உட்கார மாட்டேன். நடக்கும்போது கூட அப்பாவின் விரலைத்தான் பிடிச்சுப்பேன்' என்றாள் ஸ்ரீரஞ்சனி சரி என்று தலையாட் டினாள்.

'அப்ப பாட்டி?'

'பாட்டி கூட நம்மோடேயே தான் இருப்பாங்க.'

'பாட்டி அப்ப யாரோடும் சண்டைப் போடக் கூடாது. சண்டைபோட்டால் அப்பாவுக்குப் பிடிக்காது இல்லையா?'

ஸ்ரீரஞ்சனி ஆம் என்று தலையாட்டினாள்.

அதுவரை வீணை வாசித்துக் கொண்டிருந்த மானஸா ஓடி வந்தாள். ஸ்ரீரஞ்சனி அவளை இன்னொரு பக்கத்து மடியில் உட்கார வைத்துக் கொண்டாள்.

'மானஸா வீணை நன்றாய் கற்றுக்கிட்டுப் பாட்டுக் கச்சேரி பண்ணுவாள். அப்ப எனக்கு நிறைய பெயர் கிடைக்கும். மானஸாவை எல்லோரும் புகழ்ந்து மாலைபோடுவார்கள். அப்ப மானஸா அந்த மாலைகளைக் கொண்டுவந்து என்னிடம் தந்து வணங்கிவிட்டு, என் தோளைப் பிடித்துக் கொண்டு 'எங்கம்மா' என்று எல்லோருக்கும் காட்டுவாள். அப்பாவுக்கு ரொம்பப் பெருமையாய் இருக்கும்.'

'அப்ப நான்?' என்றாள் மேகலா.

'நீயா? நீ நன்றாய் படிப்பாய். காலேஜுக்குப் போய் படிச்சுட்டுப் பெரிய உத்யோகம் பண்ணுவாய். ஏகப்பட்ட பணம் சம்பாதிப்பாய். அப்ப அப்பாவுக்கு உன் மேல் உயிராயிருக்கும். 'என் பெண் மேகலா!' என்று எல்லோரிடமும் சொல்லிப்பார் அவர். நீ கூட 'எங்கம்மா, அப்பா' என்று எல்லோருக்கும் காட்டுவாய் எங்களை.'

உடனே மேகலாவின் இதயம் ஆனந்த சாகரமாகி விட்டது.

'நிஜம் அம்மீ, நிஜம்.'—தாயைக் கட்டிக் கொண்டாள் அவள்.





# 5

மேகலா மாவு மில்லுக்குப் போகவேண்டுமென்றால் அந்த வீதியைத் தாண்டி, மெயின் ரோடை கிராஸ் பண்ணி, அங்கிருக்கும் பழக்கடைகளைத் தாண்டிய பிறகு பக்கத்திலிருக்கும் சின்ன சந்திற்குள் போகவேண்டும். மங்களம் மேகலாவுடன் நிறைய தடவை போயிருக்கிறாள். கொஞ்ச நாட்களாய் தான் மேகலா தனியாய்ப் போய் விட்டு வரப் பழகியிருந்தாள்.

மங்களம் மேகலாவிடம் அரிசி, உளுத்தம்பருப்பு போன்றவைகளைத் தந்து அனுப்பும் போது, 'ரோடை ஜாக்கிரதையாய் கிராஸ் பண்ணணும்மா. ஒரே சந்தடியாயிருக்கும். கார்களையும் ரிக்ஷாக்களையும் பார்த்து நட. ஜாக்கிரதையாய் போயிட்டு வா! நீ திரும்பி வரும்வரை எனக்கு பயமாயிருக்கும். அங்குமிங்கும் பராக்குப் பார்த்துட்டிருக்காமல் மளமளன்னு நடந்து போயிட்டு வா' என்பாள்.

இன்றைக்குக்கூட மங்களம் கோதுமை டப்பாவை மேகலாவின் தலையில் தூக்கி வைத்துவிட்டு, பையில் அரிசியைப் போட்டு அவள் தோளில் தொங்க விட்டுவிட்டு, இன்னொரு கையில் உளுத்தம் பருப்பு இருந்த தூக்கைத் தந்தாள். மேகலா எல்லா சாமான்களையும் தூக்கிக் கொண்டு அனாயாசமாய் போய் விட்டு வருவது வழக்கந்தான். மங்களம் திரும்பவும் தன் பாடத்தை ஒப்பித்தாள். மேகலா அலுப்படைந்தாள்.

'சே! எவ்வளவு தடவை போயிட்டு வந்தாலும் இந்தப் பாடம் ஒப்பிக்கிறதை மட்டும் நிறுத்த மாட்டாய். நான்

போயிட்டு வரேன். நீ எதுவும் சொல்லத் தேவையில்லை' என்று அலுத்துக் கொண்டாள்.

மேகலா ஜாக்கிரதையாய் தெருவைக் கடந்து போய் பாட்டி கொடுத்தனுப்பிய சாமான்களையெல்லாம் அரைத்துக் கொண்டு திரும்பி வந்துகொண்டிருந்தாள். அவ்விடத்தில் எல்லாம் பழக்கடைகளாய் இருந்ததால் நிறைய கார்கள் நின்றிருந்தன. மேகலா தலையில் டப்பாவைத் தூக்கி வைத்துக் கொண்டு தோளில் பையை மாட்டிக்கொண்டு, கையில் தூக்கை எடுத்துக் கொண்டு பழக்கடைகளைத் தாண்டி வந்து கொண்டிருந்தாள்.

பாட்டி எவ்வளவு சீக்கிரமாய் வரச் சொல்லியிருந்தால் மேகலா சாவதானமாய் தான், பார்க்க வேண்டியதையெல்லாம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டேதான் வருவாள். அதே போலப் பார்த்துக் கொண்டே மெதுவாய் வந்து கொண்டிருந்த மேகலாவின் கண்கள், காரைவிட்டிறங்கிப் பழக்கடைக்குள் நுழைந்து கொண்டிருந்த ஒருவனைப் பார்த்ததுமே அகல விரிந்தன.

சிகரெட் குடித்துக் கொண்டே கடைக்குள் நுழைந்து கொண்டிருந்த அவனைப் பார்த்து அவள் அப்படியே நின்றுவிட்டாள்.

அவர் யார்? சந்தேகமில்லை. அவள் தந்தையேதான்! அவள் முகத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது. உடனே விடுவிடென்று அக்கடைப் பக்கமாய் வந்தாள்.

அங்கே அவன் இடது கையால் சிகரெட்டை உல்லாசமாய்ப் புகைத்துக் கொண்டே, வலது கையால் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டிருந்த ஆப்பிள் பழத்தைப் பரிசீலித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் சிவப்பு சில்க் புடவை கட்டிக் கொண்டிருந்த ஒருத்தி நின்றிருந்தாள்.



மேகலா அவனிடம் போனாள். கையிலிருந்த தூக்கைக் கீழே வைத்து விட்டுச் சரேலென்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு. 'அப்பா!' என்றாள். அவன் திரும்பிப் பார்த்தான். வெளுத்துச் சாயம் போன கௌனோடு, தோளில் பையோடு, கலைந்த கேசத்துடன் நின்று கொண்டிருந்த மேகலாவைப் பார்த்ததுமே அவன் முகம் வெலவெலத்துப் போய்விட்டது.

உடனே புருவங்கள் நெளிந்தன. கண்களில் எரிச்சல், அருவருப்பு, வெறுப்பு தென்பட்டன. அவன் முகத்திற்கு எதிர்ப்பதமாய் இருந்தது மேகலாவின் முகம். அந்த முகம் சந்தோஷத்தால் மலர்ந்து கொண்டிருந்தது. கண்கள் மின்னிக்கொண்டிருந்தன. உதடுகள் பிரிந்து, பற்கள் பளீரென்று, ஒளிவீசின! ஒரே உதறலில் அவள் கையை உதறிக் கொண்டான் அவன்.

'அப்பாவா? யார் உனக்கு அப்பா? கண் குருடாயிடுத்தா? பைத்தியம் பிடித்துவிட்டதா?' என்று சொல்லிக்கொண்டே சரேலென்று இழுத்துக் கன்னத்தில் ஒன்று அறைந்தான். கிர்ரென்று தலை சுற்றியது மேகலாவுக்கு. அந்த அறைக்குத் துள்ளி, பின்னுக்கு விழுந்ததால், அவ்விடத்தில் அழகாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கமலாப் பழங்கள் சரிந்து விழுந்தன. மேகலாவின் தலைமேலிருந்த டப்பா கீழே விழுந்து மாவெல்லாம் சிதறிப் போயிற்று. பழங்கள் மேலெல்லாம் பௌடரைத் தெளித்தாற்போல ஆயிற்று.

ஒரு வினாடி எல்லோரும் வாயடைத்துப் போய் நின்றுவிட்டார்கள்.

கடையெல்லாம் அசிங்கமானதற்கும், கமலாப் பழங்கள் நெறியதற்கும் கடைக்காரனுக்குக் கோபம் வந்துவிட்டது.

'யாருங்க இது?' என்றான்.

'என்னவோ, எனக்குத் தெரியாது.'

'தெரியாமல் தான் வந்து அப்பாங்கிறநா அந்தப் பொண்ணு?'— சிவப்புப் புடவைக்காரி ரோஷமாய்க் கேட்டாள்.

'தெரியாதுங்கலை? எவளாவது திருடியோ அல்லது பைத் யக்காரியோ, இப்படி வந்து ரகளை பண்ணிட்டுப் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு போவது இப்பல்லாம் புதுத் தொழிலாயிடுத்து! என்னை அப்பா என்றாள். நான் இல்லைங்கிறேன். ரெண்டு பேரும் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் போது அந்தச் சமயம் பார்த்து எதையாவது லவுட்டிக்கிட்டு ஓடிடுவாங்க.'

அவன் அந்தப் பெண் தன் மகள் இல்லை என்று சொன்னதுமே கடைக்காரனுக்குத் தைரியம் வந்துவிட்டது. மேகலாவின் கூந்தலைப் பிடித்துக் கொண்டு, 'ஏன், திருட்டு மூஞ்சி! எவன் உங்கப்பன்?' என்று உலுக்கி எடுத்தான்.

மேகலா அதற்குள் பீதியடைந்துவிட்டாள்.

'அவர்தான் எங்கப்பா' என்றாள்.

'சட்! இன்னொரு தடவை அப்படிச் சொன்னாயானால் பல்லைத் தட்டிக் கொடுத்து விடுவேன். என் முகத்தையாவது நீ என்றாவது பார்த்திருக்கிறாயா?' என்று திரும்பவும் கையை ஓங்கிக் கொண்டு வந்தான்.

இதை நான் ஒரு கை பார்த்துக்கறேன், இருங்க. ஏய்! உனக்கு அவர் அப்பாவா? உங்கப்பன் யாருன்னு நான் சொல்றேன், இரு' என்று சொல்லிக் கொண்டே, கன்னத்தில் மாறி மாறி அடித்தான். மேகலா அவன் தள்ளிய தள்ளலுக் குக் கீழே விழுந்தாள். அங்கிருந்த மேஜையின் ஆணியில் சிக்கிக்கொண்டு ரௌன் சர்ரென்று கிழிந்துவிட்டது. அவன் கீழே விழுந்த மேகலாவின் கூந்தலைப் பற்றித் திரும்பவும் தூக்கி நிறுத்தினான். மேகலாவுக்குத் தன் கூந்தலே கழன்று விழுந்து விட்டதோ என்றாற்போல வலியெடுத்தது.

...ளும், கிழிக்காமலும் புத்தகத்தை கவனமாக கையாளுங்கள்.



'இந்தக் கடை முழுவதையும் அசிங்கமாக்கிட்டாய். எவன் வந்து பெருக்குவான்னு நினைத்தாய்?'

திரும்பவும் அடிக்கப் போனபொழுது இன்னொரு பெரிய மனிதன் வந்து அவனைத் தடுத்து மேகலாவை விடுவித்தான்.

'அட, விடுடா, பொம்பிள்ளை! இப்ப எந்தப் போலீஸ் காரனாவது வந்துட்டானனால், நம்பளிடமிருந்து நூறு ரூபாயைக் கறந்து விடுவான்!' என்று சிதறிக் கிடந்த டப்பா, பை, எல்லாவற்றையும் பொறுக்கி எடுத்து மேகலாவின் தலையிலும் தோளிலும் வைத்து விட்டு, 'போம்மா! போ! சீக்கிரமாய் இங்கிருந்து போய் விடு. இனி ஒரு போதும் இந்த மாதிரி திருட்டு வேஷம் போடாதே! வாங்கிய உதை களை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்'— என்று சொல்லிக் கொண்டே தோளைப்பற்றிக் கடைக்கு வெளியே தள்ளினான்.

மேகலா தூக்கத்தில் நடப்பவளைப் போல வீட்டிற்கு வந்தாள். மேகலா வரவில்லை. அந்த வழியில் நடந்து பழக்கப்பட்டுப் போயிருந்த அவள் கால்கள்தான் அவளை வீட்டிற்கு இழுத்து வந்தன. சூனியத்தைப் பார்த்தபடி வீட்டிற்குள் நுழைந்தாள். பேத்தியைப் பார்த்ததுமே மங்க ளம் பெரிதாய்க் கத்தினாள். அந்த அலறலுக்கு வீணை பாடிக்கொண்டிருந்த மானஸாவும், அவளுக்கு சங்கீதம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த ஸ்ரீரஞ்சனியும் ஓடி வந் தார்கள். ஸ்ரீரஞ்சனி மேகலாவைப் பார்த்து விக்கித்துப் போய்விட்டாள்.

மேகலாவின் ரௌன் கிழிந்து தொங்கிக் கொண்டிருந் தது. தலையிலும், உடம்பிலும், மூக்கிலும் மாவு பட்டு வெள்ளையாய் இருந்தது. கன்னங்களில் விரலடையாளம் படிந்து யாரோ நன்றாய் அடித்திருந்தது தெரிந்தது. மங்க ளம் அதற்குள் ஓடிவந்து மேகலாவின் கையிலிருந்த டப்பாக்

களைப் பக்கத்தில் வீசியெறிந்துவிட்டு, பேத்தியைக் கட்டிக் கொண்டாள்.

'யார் இவ்வளவு அக்கிரமம் பண்ணினாங்க? யார் அந்த அயோக்கியன்? அவனைக் கிழித்துச் செண்டாடிவிடுகிறேன். அவன் ரத்தத்தைக் குடிக்கிறேன்'— கத்திக்கொண்டே மேகலாவை இழுத்துக் கட்டிக் கொண்டாள்.

மேகலா அழவில்லை. சூனியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பார்வை சலனமில்லாமலிருந்தது. மேகலா பிறந்ததிலிருந்து இதுவரை அவளை அடித்தவர்கள் யாருமில்லை. அம்மா எப்பொழுதும் ஒன்றுமே சொல்ல மாட்டாள். பாட்டி வாயால் திட்டுவாள்; அடிப்பேன் என்று மிரட்டுவாளே தவிர ஒருநாளும் கையை ஓங்கியதில்லை. அந்த வீட்டில் எவ்வளவு மோசமான வறுமை தாண்டவமாடிக்கொண்டிருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு பசங்களுக்கு செல்லம் இருந்தது. மங்களம் மேகலாவின் கௌனை அவிழ்க்கப் போனவள் முதுகைப் பார்த்துவிட்டு, வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள்.

'ஐயோ, எவ்வளவு தழும்புகள்! எப்படி உயிரோடிருந்தாய்? சொல்லு கண்ணு!' என்றாள்.

'அம்மா, இப்பஅவளை ஒன்றும் கேட்காதே! ஸ்ரீரஞ்சனி கிட்டே வந்தாள். 'மேகா!' கூப்பிட்டாள். மேகலா அவ்வழைப்பிற்கு இந்த உலகத்திற்குத் திரும்பி வந்தவளாய், தாயைப் பார்த்தாள். 'யாரும்மா உன்னை அடிச்சாங்க? யாரோட சண்டை போட்டாய்?' மிகக் குழைவாய் கேட்டாள். மேகலாவின் காய்ந்துப் போன உதடுகள் அதிர்ந்தன.

'நான் ...நான்... சண்டைப் போடலைம்மா! அப்பா கண்ணில் பட்டார்... கண்ணில் பட்டதால்...

'கண்ணில் பட்டதால்?'



மேகலா ஹீனஸ்வரத்துடன் சொன்னாள். மங்களத்திற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

'என்னது? அவன் பண்ணிய காரியமா இது? நான் இதோ போய் அவன் மென்னியைத் திருகிட்டு வரேன். அவனும் ஒரு மனுஷந்தானா? அவன் பசங்களை செம்மையாய் உதைத்துக் கூந்தலைப் பற்றி இழுத்துட்டு வரேன். உன்னை மகள் இல்லை என்றானா? கேட்டாயா ஸ்ரீரஞ்சனி? நீ சுவாமி சுவாமி என்பாயே! இதோ அந்தப் பிசாசு பண்ணிய காரியத்தைப் பார்! என் பெண்ணுக்கு வேறு கதியில்லைன்னு தானே இப்படிப் பண்ணினான்? பண்ணுவான், பண்ணுவான், என் உசிர் அவனுக்குச் சாபமாகி செத்தொழிவான். பெண்டாட்டிக் குழந்தைகளோடு சேர்ந்து கூண்டோடு ஒழிந்துப் போவான். அவன் வம்சமே நாசமாய்ப் போகும்!'

மங்களம் கத்திக் கத்தி இருமல் வந்துவிட்டதால் ஓய்ந்தாள்.

ஸ்ரீரஞ்சனி சிலையாய் உட்கார்ந்திருந்தாள். மங்களம் மேகலாவின் உடம்பில் எண்ணெய் தடவினாள். ராத்திரி வெகு நேரம் வரை திட்டிக் கொண்டேயிருந்தாள். விடிந்ததும் மேகலாவுக்கு நல்ல ஜுரம் வந்துவிட்டது. உடம்பெல்லாம் வலி. மங்களம் ஒரு டாக்டரைக் கெஞ்சிக் கூத்தாடி அழைத்துவந்தாள். அவர் மருந்து கொடுத்தார். மேகலாவுக்கு மூன்று நாட்கள் வரை ஜுரம் குறையவில்லை. தூக்கத்தில், 'அடிக்காதே அப்பா, அடிக்காதே' என்று கத்திக் கொண்டிருந்தாள். மங்களம் பேத்தியை அணைத்துக் கொண்டாள்.

ஸ்ரீரஞ்சனி மட்டும் கட்டிலில் படுத்தபடி அழுது கொண்டேயிருந்தாள்.

'கடவுளே! எனக்கெதற்கு இந்தத் தண்டனை? அவரைத் தெய்வம் என்று நம்பினேனே! கல்யாணம் ஆகா விட்டாலும் பரவாயில்லை என்று சொன்னபோது, வாயைத் திறக்கவில்லையே நான்! இஷ்டப்பட்டபோது வந்தாலும் சந்தோ

ஷப்பட்டேனே தவிர, ஏன் இவ்வளவு நாளாய் வரலைன்னு கூடக் கேட்கவில்லையே! பணம்கூட நான் என்றைக்குமே கேட்டதில்லையே; அம்மா எங்கெங்கிருந் தெல்லாமோ பணத்தை யாசித்து வந்து குடும்பத்தை ஓட்டிக் கொண்டிருக்கையில், இந்தக் குடும்பம் அவளுடையதுதானே தவிர, என்னுடையதல்ல என்றாற்போலப் பார்த்தும் பார்க்காதது போல வெறுமே இருந்து வந்தேனே தவிர, 'எனக்கென்ன வழிகாட்டப்போகிறாய்?' என்றும் கேட்கவில்லையே நான்! சின்னப் பெண் தெரியாமல் நாலு பேருக்கு முன்னால் 'அப்பா' என்று சொன்னால்தான் என்ன, அதற்காக அப்படி உதைப்பதா?' ஸ்ரீரஞ்சனி அழத் தொடங்கினாள்.

மேகலாவுக்கு ஜுரம் கொஞ்சம் குறைந்தது. மானஸா, இந்த ஜுரத்தின் மூலமாய் மேகலாவுக்கு மிகவும் நெருக்கமாகி விட்டாள். ஒரு முறை மேகலாவுக்கு விழிப்பு ஏற்பட்ட போது பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு ஈ வராமல் விசிறிக் கொண்டிருந்தாள். தனக்கு அவ்வாறு மானஸா சேவை செய்ததைப் பார்த்து மேகலாவுக்கு மிகச் சந்தோஷமாயிருந்தது.

'மானஸா!' என்றாள் கையைப் பிடித்துக் கொண்டே.

'அக்கா, அப்பா நல்லவரே இல்லை. இல்லையா?' என்றாள் மானஸா.

மேகலாவின் கண்கள் 'அப்பா' என்ற வார்த்தையைக் கேட்டதுமே 'புஸ்'ஸென்றது கோபத்தால்.

'அப்பாவைப் பற்றிய பேச்சையே இனி ஒரு போதும் எடுக்க வேண்டாம் மானஸா' என்றாள். அதற்குப் பிறகு மானஸா அந்தப் பேச்சையே எடுக்கவில்லை. மேகலாவும் எடுக்கவில்லை; ஆனால் மறந்து விடவில்லை. அவ்வுள்ளத்தில் அந்தக் காயம் ஆறவே இல்லை. அது யாருக்குமே தெரியாது.

நான்கு நாட்களுக்குப் பிறகு மங்களம் எதற்காகவோ பெட்டியைத் திறந்தவள் வழக்கப்படி காசுமாலை வைத்திருந்த இடத்தில் பார்த்தாள். அதைக் காணவில்லை. மங்களத்திற்கு பகீரென்றது. அதிலிருந்த சாமான்களையெல்லாம் எடுத்துப் போட்டு நன்றாய்த் தேடிப் பார்த்தாள். எங்குமே இல்லை. 'ஐயோ!, ஐயோ!' மங்களம் கத்தினாள். அவள் கத்தலைக் கேட்டுவிட்டு மேகலாவும் மானஸாவும் ஓடி வந்தார்கள்.

'என்ன பாட்டி?' என்றாள் மேகலா.

'காசுமாலையைக் காணோமே இதில்?'

'ஆ!' மேகலா சரேலென்று ஓடிவந்தாள். 'சரியாய் பார்த்தாயா?' என்றாள். 'பார்த்தேன், நீயும் பாரு' என்றாள் மங்களம். அதற்குள் மேகலாவும் பெட்டியையெல்லாம் குப்புறக் கவிழ்த்து நன்றாய்த் தேடிப்பார்த்தாள். காணோம்!

'யாரும் வரவும் இல்லையே! என்னவாகியிருக்கும்? மானஸாவுக்குத் தருவதற்காக அம்மா எடுத்தாங்களோ என்னவோ?' என்றாள்.

'என்ன ரஞ்சனி, எடுத்தாயா?'

ஸ்ரீரஞ்சனி எடுத்தேன் என்பது போல் தலையாட்டினாள்.

'எங்கே வைத்தாய்? இப்படிக் கொண்டா! அங்கேயும் இங்கேயும் வைக்கிற சாமானா அது? என் உயிரே போயிடும்

போலிருந்தது' என்றாள் மங்களம் துணிகளைப் பெட்டியில் வைத்துக்கொண்டே.

ஸ்ரீரஞ்சனி ஆடாமல் அசையாமல் நின்றிருந்தாள். காசுமாலையைக் கொண்டு வருவதற்காக நகரவில்லை.

'ஏன் போகலை? போய் எடுத்துட்டு வா!'

ஸ்ரீரஞ்சனி இன்னும் நகரவில்லை. அவள் முகம் தடு மாற்றமடைந்தாற் போலிருந்தது.

'உன் ஜென்மத்தில் அந்த ஒன்று தான் எஞ்சி நின்றது. அதுவும் எப்பொழுதோ போயிருக்க வேண்டியதுதான், என்னுடையதில்லை என்று நினைத்துக்கொண்டு மற்றவங்க சொத்தாய்ப் பாவித்துத் தொடாமல் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். போய் எடுத்துட்டு வாம்மா.'

'அம்மா, காசுமாலை இல்லைம்மா' என்றாள் ஸ்ரீரஞ்சனி குண்டைப் போட்டு உடைத்தாற்போல. மங்களம் குனிந்து துணிகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தவள் சரேலென்று எழுந்தாள்.

'என்னது?'

'அந்தக் காசுமாலை இல்லை.'

'இல்லையா? இல்லாமல் எங்கே போச்சு?'

'உங்க ... உங்க மருமகனுக்குத் தந்துட்டேன்.'

ஸ்ரீரஞ்சனியின் கண்கள் தரையை நோக்கித் தாழ்ந்தன.

'அவருக்கு என்னவோ அவசரமாய்ப் பணம் தேவையாம். அவசரம் தீர்ந்ததும் மெதுவாய் அடமானத்திலிருந்து மீட்டுத் தந்து விடுவதாய்ச் சொன்னார்.

மங்களத்திற்கு உயிரே போய் விட்டாற் போலிருந்தது. ஒரு வினாடி மகள் என்ன சொல்லுகிறாள் என்று புரியாமல்



பார்த்தாள். தொடர்ந்து காளியைப் போல ஸ்ரீரஞ்சனியின் மேல் பாய்ந்து கூந்தலைப் பிடித்துக் கொண்டாள்.

'என்னது? அந்தச்சங்கிலியை அவனிடம் தந்துட்டாயா? எப்பொழுது? எப்பொழுதுங்கிறேன்?'

'ஒரு மாசத்துக்கு மேலேயே ஆயிடுத்தும்மா.'

'ஒரு மாசமா? என் உயிரையே எடுத்துட்டாயே நீ! யாரைக் கேட்டுத் தந்தாயடி? யாருடைய சொத்துன்னு தந்தாய்?'

மங்களம் ஸ்ரீரஞ்சனியின் கன்னங்களில் மாறி மாறி விளாசினாள்.

'என்னிடம் ஒரு வார்த்தை சொன்னாயா? எல்லாம் உன்னிஷ்டந்தானா? அந்த அயோக்யன் திருப்பிக் கொடுப்பான்னு நினைச்சுட்டாயா? உனக்கு அம்மாவைப்பற்றிய நினைப்பே வரலையா? அம்மாவுக்கு அந்த நெக்லெஸ் என்றால் எவ்வளவு உயிர் என்றுகூட ஞாபகம் வரலையா? உன்னை... உன்னைக் கொன்று குழி தோண்டிடறேன்!' மங்களம் ஸ்ரீரஞ்சனியின் கழுத்தைத் திருகத் தொடங்கினாள். மானஸா பெரிதாய் 'வீலிட்டு' அழத் தொடங்கினாள்.

'பாட்டி! அம்மாவையா கொல்கிறாய்?'

மேகலா கத்திக் கொண்டே மங்களத்தின் இடுப்பைச் சுற்றிக் கைகளைப் போட்டுப் பலமாய் இழுத்தாள். அதற்குள் ஸ்ரீரஞ்சனியும் ஒருவழியாய்த் தன்னை விடுவித்துக்கொண்டு, தன் அறைக்குள் ஓடிப் போய்க் கதவைச் சாத்திக் கொண்டு விட்டாள். மங்களம் ஓடிப்போய் கால்களாலும் கைகளாலும் அக் கதவைத் தள்ளினாள்.

'தரித்திரம் பிடித்தவளே! என் உயிரைக் கொண்டு போகத்தான் வந்து முளைத்திருக்கிறாய்! உன்னைக் கொன்றால்தான் என் மனம் நிம்மதியடையும். ஐயோ! காசு

மாலையை அவனுக்குத் தந்துட்டாயா? இது என்ன கிரக மடா! வடிகட்டின முட்டாளாயிருக்கிறாயே!' மங்களம் மார்பில் அடித்துக் கொண்டே, 'ஐயோ தெய்வமே!' என்று அழத் தொடங்கினாள்.

அவள் கத்தலுக்கும் அழுகைக்கும் வீதியில் போவோர் வருவோர் வாசலில் வந்து எட்டிப் பார்க்கத் தொடங்கினார்கள்.

மங்களம் பைத்தியம் பிடித்தவளைப் போலானாள். சரேலென்று எழுந்திருந்தாள். அழுதுகொண்டே, 'இனி என்னால் இந்த வீட்டில் இருக்கமுடியாது. ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது. என் வழியில் நான் போய்க்கிறேன். நீ செத்தொழிந்து போ!' என்று போக முயன்றபோது மேகலா அவள் கால்களைக் கட்டிக் கொண்டுவிட்டாள்.

'பாட்டி, எல்லோரும் பார்க்கிறாங்க பாட்டி. அழாதே! கத்தாதே! எங்கேயும் போகவேண்டாம்.'

'ஊஹூம், என்னால் இருக்க முடியாது. ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது.'

மங்களம் போய் விட்டாள்.

மானஸா அழுதுகொண்டே நின்றிருந்தாளே தவிர, அவளால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. மேகலா மானஸாவிடம் 'மானஸா! நான் பாட்டியோடு போறேன்; கதவைச் சாத்திக் கொள். ஜாக்கிரதை!' என்று சொல்லி விட்டு ஓடினாள்.

மங்களம் தன்னைப் பின் தொடர்ந்து ஓடிவந்து கையைப் பிடிக்கப்போன மேகலாவின் கையை ஒரு உதறு உதறினாள். 'என் ஜோலிக்கு வராதே, போ!' கத்தினாள்.

'நான் போகமாட்டேன். நீ எங்கே இருப்பாயோ, அங்கேதான் நானும் இருப்பேன்!' பிடிவாதம் பிடித்தாள் மேகலா.



மங்களம் அங்கிருந்த கோவில் மண்டபத்தில் போய் உட்கார்ந்துகொண்டாள். 'ஐயோ, என் காசுமாலை! மனசார ஒரு நாள்கூடப் போட்டுக்கலை. வீட்டில் பெண் குழந்தைங்க இருக்காங்க. எப்பொழுது என்ன அவசியம் ஏற்படுமென்னு பத்திரப்படுத்தி வைத்திருந்தேனே!' முழங்கால்களில் தலையைப் புதைத்துக் கொண்டே அழத்தொடங்கினாள் அழுதுகொண்டிருந்த பாட்டியை எப்படித் தேற்றுவது என்று புரியவில்லை மேகலாவுக்கு. மேகலாவுக்குக்கூட அழுகை பொத்துக்கொண்டு வந்தது. அந்தக் காசுமாலை என்றால் மேகலாவுக்கும் உயிர் தான்! தனக்குத் தாய் சொல்லமுடியாத அநியாயம் பண்ணிவிட்டதாய்த் தோன்றிற்று. பாட்டி அழுதுகொண்டிருந்ததைப் பார்த்து, 'அழாதே பாட்டி, சும்மாயிரு' என்று கெஞ்சத் தொடங்கினாள்.

மங்களம் அன்று முழுவதும் வீட்டிற்கு வரவேயில்லை. மேகலா தானே வீட்டிற்கு வந்து சாதத்தைக் கிண்ணத்தில் போட்டு எடுத்துவந்து பலவந்தமாய்ச் சாப்பிடச் செய்தாள். 'பாட்டி, நீ சாப்பிடாவிட்டால் நானும் சாப்பிட மாட்டேன்' —என்று பிடிவாதமாய் உட்கார்ந்துகொண்டாள். மங்களம் இரண்டு வாய் தின்றாள்.

இரவு வெகு நேரங்கழித்து, மேகலா கெஞ்சிக்கூத்தாடிய பிறகு மங்களம் வீட்டிற்கு வந்தாள். அதற்குள் அவளுடைய துக்க வெள்ளம் கொஞ்சம் தணிந்திருந்தது. வீட்டிற்கு வந்து பாயில் அழுது கொண்டே படுத்திருந்த மங்களத்திடம் ஸ்ரீரஞ்சனி வந்தாள்.

'அம்மா, நான்... நான் பண்ணியது தப்புத்தான். எனக்குத் தெரியாது. அவர் வார்த்தைகளை நம்பிட்டேன். என்னை மன்னிச்சுடு' என்றாள்.

ஸ்ரீரஞ்சனியின் முகமும் காலையிலிருந்து அழுதுகொண்டேயிருந்ததால் கன்றிப் போயிருந்தது. அம்முகத்தில்

தப்புப் பண்ணிவிட்டோமே என்ற பச்சாதாபமும் திகிலும் நன்றாய்த் தெரிந்தது.

'இனிமேல் யாரால்தான் என்ன பண்ணிடமுடியும்? எல்லோரும் படுகுழியில் விழுந்துட்டோம். இவ்வளவு நாளும் நீ மட்டும்தான் விழுந்தாய் என்று நினைச்சுட்டிருந்தேன். இப்ப என்னையும் தள்ளிவிட்டாய். எப்பொழுது என்ன தேவை ஏற்படுமோன்னு என் உயிரைப் போலப் பாதுகாத்து வைத்துட்டிருந்தேன். என் உயிரையே எடுத்துட்டாய் நீ' என்றாள் மங்களம்.

கொஞ்ச நேரங் கழித்து மங்களம் உறங்கிவிட்டாள். ஸ்ரீரஞ்சனியும் படுத்துக்கொண்டாள். மேகலாமட்டும் சுவரில் சாய்ந்தபடி யோசனையில் ஆழ்ந்துவிட்டாள். காசுமாலை நினைவிற்கு வந்ததும் மேகலாவின் மனதில் தாங்க முடியாத வேதனை ஏற்பட்டது. தந்தை எவ்வளவு கெட்டவர்! அந்த நிமிஷத்தில் அவர் இருக்கும் விலாசம் மட்டும் அவளுக்குத் தெரிந்திருந்தால் நேராய்ப் போய் தலையைப் பிளந்து விட்டு வந்திருப்பாள். அவளுக்கு மிகப் பிடித்தமான கனவை அவர் குலைத்து விட்டார்.

# 7

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு மேகலாவின் தந்தை அந்த வீட்டுப் பக்கம் தலைக்காட்டவில்லை. அவர் வருவது நின்று விட்டதால் நிலைமை மேலும் மோசமாகிவிட்டது. வீட்டில் எங்கே பார்த்தாலும் வறுமை தாண்டவமாடிற்று. குடும்பத்தை நடத்திச் செல்வது பெரும்பாடாகிவிட்டது. மங்களம் வீட்டில் தினப்படி உபயோகப்படுத்தும் பாத்திரங்களைக் கூட அடமானம் வைக்கத் தொடங்கி விட்டாள். அடமானத்திற்குப் போகும் சாமான்கள் திரும்பவும் வீட்டிற்கு வந்து சேராது.



மங்களம் அன்றைக்குத் தலையை வாரி முடிந்துக் கொண்டு, மேகலாவுக்குத் தலைப்பின்னிவிட்டுத் தோய்த்த ரவுன் ஒன்றைப் போட்டுக்கொண்டு தன்னோடு புறப்படச் சொல்லி உத்தரவிட்டாள்.

'எங்கே பாட்டி?' என்றாள் மேகலா.

'மாமாக்கள் வீட்டிற்குப் போயிட்டு வரலாம்.'

'அவங்க வீட்டுக்கா? என்னால் வர முடியாது பாட்டி.'

'இப்படிச் சொன்னால் எப்படிம்மா? இதுவரை போனாற்போல என்னால் அவ்வளவு தூரம் தனியாய்ப் போக முடியலை. நீ கூட இருந்தால் அந்த ரோடுகளை ஜாக்கிரதையாய் கையைப் பிடித்து அழைச்சுட்டுப் போவாயேன்னுதான்.'

'பெரிய மாமாவின் பசங்கள் எல்லாம் என்னை கேலிப் பண்ணுவாங்க பாட்டி.'

'கேலி பண்ணுவாங்கம்மா பண்ணுவாங்க. அதிர்ஷ்டமே நம்மைப் பார்த்து கேலியாய்ச் சிரிக்கிறது! பிறகு மனுஷங்க ஒரு கணக்கா? கேலி செய்தால் அவங்க முகந்தான் கோணிக்கும். நமக்கென்ன வந்தது? போயிட்டு வரலாம் வா! வீட்டில் ஆழாக்கு அரிசி கூட இல்லை. நேற்று ராத்திரியிலேருந்து யாருமே ஒரு வாய் கூடச் சாப்பிடலை. மானஸாவைப் பாரு, எப்படிப் படுத்துட்டிருக்கிறான்னு! தண்ணீரையே குடிச்சுக் குடிச்சு ஒரே வாந்தி எடுத்துட்டிருக்கிறாள். மாமாவைக் கேட்டு ஐம்பதோ அறுபதோ வாங்கிட்டு வரேன்.'

மேகலா தலைப் பின்னிக்கொண்டு அவளோடு புறப்பட்டாள். மங்களத்திற்கு அந்த ஊரிலேயே பலராமன், சிவராமன் என்று மாற்றாந் தாய்க்குப் பிறந்த இரு பையன்கள் இருந்துவந்தார்கள்.

பலராமன் பாங்கில் வேலை பார்த்துக்கொண்டிருந்தான். பணக்காரப் பெண்ணைத் திருமணம் பண்ணிக் கொண்டிருந்தான்; நான்கு குழந்தைகள்; சொந்த வீடுகட்டிக்கொண்டிருந்தான். நிலைமை நன்றாகவே இருந்தது.

சிவராமனுக்குக் குழந்தைகள் இல்லை. எப்பொழுதும் நாடகம், மீட்டிங் என்று சுற்றிக்கொண்டிருப்பான். சென்ட்ரல் லைப்ரரியில் குமாஸ்தாவாய் வேலை செய்து கொண்டிருந்தான். வருஷத்தில் ஆறுமாதம் லீவில்தான் இருப்பான்.

இவ்விரு மகன்களோடும் மங்களத்துக்கு சண்டைச் சச்சரவு என்றில்லைதான்! அவ்விருவரும் என்றுமே இவர்கள் வீட்டிற்கு வரமாட்டார்கள். மங்களம் மட்டும் நினைத்த பொழுதெல்லாம் அவர்கள் வீட்டிற்குப் போய் வருவாள்.

அண்ணன் தம்பிகள் இருவருமே ஒன்றாய்தான் இருந்து வந்தார்கள். சிவராமனுக்குக் குழந்தைகள் இல்லாததால், எந்தச் சச்சரவும் இல்லாமலிருந்தது. பெண்களுக்குள் ஒத்துவரா விட்டாலும் ஆண்களிருவரும் மட்டும் ஒற்றுமையாகவே இருந்து வந்தார்கள்.

மங்களம் போனபொழுதெல்லாம் இருவருள் யாரையாவது ஒருவரைக் கேட்டு ஐம்பதோ நூறோ வாங்கிக் கொண்டு வருவாள் பண்டிகைகள் வந்தால் அவர்கள் கூப்பிடாமலேயே போய் விட்டு, நன்றாய் வேலைசெய்து விட்டு மாலையில் வரும்போது சாதம், குழம்பு, கறிகள், பட்சணங்கள் எல்லாவற்றையும் மூட்டை கட்டிக்கொண்டு வருவாள். இப்பொழுதெல்லாம் பலவீனமாகி விட்டதால் அவ்வளவு தூரம் அவளால் தனியாகப் போக முடியவில்லை. வழியில் உடம்பு தள்ளாடிப் போய்விட்டல், என்ன செய்வது என்ற பயம்!

முன்பெல்லாம் இப்படி இல்லை. இப்பொழுது கொஞ்ச தூரம் நடந்தாலும் ஆயாசம் வந்து விடுகிறது. மேகலா கூட



இருந்தால் தோளில் கையைப் போட்டுக் கைத்தாங்கலாய் எவ்வளவு தூரம் வேண்டுமானலும் அழைத்துச் சென்று விடுவாள்.

மேகலா பாட்டியின் கையை ஜாக்கிரதையாய்ப் பிடித்து நடத்தி அழைத்துச் சென்றபடி, மாமாக்கள் நம் வீட்டுக்கு ஏன் வரதில்லை பாட்டி?' என்று கேட்டாள்.

'வரமாட்டாங்கம்மா, வரமாட்டாங்க. ஏன் வரப்போறாங்க! எல்லாம் என் தலையெழுத்து! உங்கம்மாவுக்கு வயசாயிட்ட பிறகும்கூட என்னால் கல்யாணம் பண்ணிவைக்க முடியலை. உங்கப்பாவைக் கண்டால் அவங்களுக்குப் பிடிக்கலை. உங்கப்பா நல்லவரில்லைன்னு உங்கம்மாவிடம் சொன்னாங்க. உங்கம்மா கேட்டுக்கலை. அவங்களுக்குக் கோபம் வந்துடுத்து. அவங்க பேர் கெட்டுப்போயிடுத்துன்னு அவங்களுக்குக் கோபம். அவங்க அரவணைப்பு கூட இல்லாமல் போயிட்ட பிறகு நாம் ரொம்பவும் திக்கற்றவர்களாகி விட்டோம்.

மேகலா கேட்டாள்: அப்பா நல்லவரில்லை என்று மாமாக்களுக்குத் தெரியும் போலும். அம்மா அவர்கள் பேச்சைக் கேட்கவில்லையா? மேகலாவுக்கு அந்த நேரத்தில் மாமாக்கள் மீதுதான் இஷ்டம் ஏற்பட்டது. மாமாக்கள் நல்லவர்கள். அதனால்தான் அப்பாவின் கெட்ட குணத்தைக் கண்டு பிடித்து அம்மாவிடம் சொன்னார்கள் போலும்!

மங்களம் பெருமூச்செறிந்தாள்,

'என்னவோம்மா! அதெல்லாம் ஒரு கதை! நீ சின்னப் பொண்ணு! சொன்னாலும் உனக்குப் புரியாது' என்றாள்.

மேகலா மங்களத்துடன் போனபொழுது பெரியமாமாவான பலராமன் வீட்டில் தான் இருந்தான். உள் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு எவர் சில்வர் தட்டில் உப்புமா சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பலராமனின் மனைவி வேணி

குழாயடியில் தம்ளர்களைக் கழுவிக் கொண்டிருந்தாள். மங்களம் வந்ததைப் பார்த்துவிட்டு முகத்தைச் சுளித்துக் கொண்டே பார்க்காததைப் போல உள்ளே போய்விட்டாள். மங்களத்தைப் பார்த்து விட்டுப் பலராமன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டனே தவிர, 'வா' என்று வர வேற்கவில்லை. வந்தவர்கள் தனக்குச் சம்பந்தமில்லாதவர் கள் என்பது போலத் தலை குனிந்தபடி உப்புமாவைச் சாப் பிடத் தொடங்கினான். மங்களம் தானே அங்கிருந்த குழா யடிக்குப் போய் காலைக் கழுவிக்கொண்டு கொஞ்சம் நீரை மேகலாவின் காலில் ஊற்றிவிட்டு, என்னடாப்பா சௌக்கி யமா? என்று விசாரித்தாள்.

பலராமன் உப்புமாவிலிருந்த முந்திரிப் பருப்பைப் பொறுக்கித்தின்றுகொண்டே. 'ஆங்,சௌக்கியந்தான். என்ன இப்படி வந்திருக்கிறாய்?' என்றான். அப்படி விசாரித்ததில் ஏளனமும் குத்தலும் இருந்தன.

'உன்னையும் மருமகளையும் பசங்களையும் பார்த்து ரொம்ப நாளாயிடுத்து பார்த்துட்டுப் போகலாம்னு வந் தேன். எனக்கு உங்களை விட்டால் வேறு யார் இருக்காங்க, சொல்லு.'

'யாருமில்லாமலா? உங்க மருமகன்தான் இருக்கானே?' பழிப்பது போலச் சொன்னான்.

'ஆங்! இருக்கான்! அவன் சரியாய் இருந்தால் எனக்கு எதுக்கு இந்தக் கஷ்டமெல்லாம்? மருமகள் எங்கே?' கொஞ்ச நேரத்திற்கு முன்னால் அவள் உள்ளே போனதைப் பார்க்கா தது போலவே கேட்டாள்.

'உள்ளே இருக்கிறாள். ஏய். உன் மாமியார் வந்திருக் காங்க, பாரு' என்று கத்திவிட்டு, காலியான உப்புமா தட் டைக் கீழே வைத்து விட்டு, 'தண்ணீர் எங்கே?' என்றாவறு உள்ளே போனான்.



உள்ளேயிருந்து வேணி வரவில்லை. உள்ள போன பலராமனும் வெளியே வரவில்லை.

மங்களம் நின்று கொண்டேயிருந்த மேகலாவை உட் காரச் சொல்லி சைகைக் காட்டினாள். அங்கே குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு பையன் மூன்று சக் கர சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தான். இன்னொரு பையன் சைனீஸ் சக்கர் விளையாடிக் கொண்டிருந்தான். ஏறக்குறைய மேகலாவின் வயதேயுடைய பெண் ஒருத்தி உட் கார்ந்து மல்லிகைப் பூவைத் தொடுத்துக் கொண்டிருந்தாள்

'நான் வரமாட்டேன்; பூத் தொடுத்துட்டிருக்கேன்.' காவேரி பதில் சொன்னாள்.

உள்ளேயிருந்து வேணி வந்தாள். அவளைப் பார்த்ததுமே மங்களம், 'சௌக்கியமா? என்று விசாரித்தாள். அவள் அது காதில் விழாதது போலவே போய், மகள் தோளைப் பிடித்து இழுத்து, 'ஹார்லிக்ஸ் குடிக்க வான்னு சொன்னால் ஏன் வரமாட்டேங்கிறாய்? ஆறிப் போயிடாதா?' என்று உள்ளே இழுத்துக் கொண்டு போனாள். மீதி பசங்கள் கூட உள்ளே போனார்கள்.

அதற்குள் ஒரு நடுத்தர வயது ஆசாமி உள்ளே வந்தான். அவரோடு கூட கனகாம்பரப் பூக்களைத் தலையில் வைத்துக் கொண்டு பட்டுப்புடவை கட்டிக்கொண்டிருந்த பருமனான ஒரு பெண்மணியும் வந்தாள்.

'பலராமா!' என்று கூப்பிட்டான். உள்ளே யிருந்து பலராமன், 'யார்?' என்று வெளியே வந்தான். அவனைப் பார்த்ததுமே அவன் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது.'

'நீங்களா? வாங்க, வாங்க. இன்றைக்கு நாங்க யார் முகத்தில் விழித்தோமோ? உங்களைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது!' என்று சொல்லிவிட்டு, 'ஏய். யார் வந்திருக் காங்க பார்' என்று கத்தினான்.

'வேணி உள்ளே யிருந்து வந்தாள். பட்டுப் புடவைக் கட்டிக்கொண்டிருந்த அவளைப் பார்த்ததுமே வேணியின் முகம் மலர்ந்தது.

'வா சித்தி! ஊரிலேருந்து எப்ப வந்தாய்?' என்று எதிரே வந்து கைகளைப் பிடித்துக்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றாள். எல்லோரும் உள்ளே போனார்கள். வாயிலி லிருந்த திண்ணையில் மங்களம் உட்கார்ந்து கொண்டாள். வந்து எவ்வளவோ நேரமாகிவிட்டது. மேகலாவுக்குக் கோபமும் எரிச்சலும் ஏற்பட்டன. 'போய் விடலாம் பாட்டி, வா' என்றாள்.

'எல்லாம் போகலாம். இரு.'

'அவங்க யாருமே நம்மோடு பேசவேயில்லையே.'

'அப்படியெல்லாம் மரியாதையை எதிர்ப்பார்க்கிற நிலை யிலா நாம்ப இருக்கோம்? உட்காரு, எரிச்சலடையாதே.' கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தாள். வேறு வழி யில்லாமல் உட்கார்ந்தாள் மேகலா.

எதிரே கம்பி போட்ட வராந்தா வழியாய் உள்ளே, வேணி வந்தவர்களுக்கு காபி பலகாரம் தந்து கொண்டிருந் தது தென்பட்டது. அவர்கள் வேண்டாம் என்ற போதிலும் வற்புறுத்தி விருந்து பரிமாறிக் கொண்டிருந்தார்கள். அவர் கள் எல்லோரும் சந்தடியாய் சிரித்துக் பேசிக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

மங்களம் அசதியால் திண்ணையிலேயே தலைப்பை விரித்துப் போட்டுக்கொண்டு, கையைத் தலைக்குக் கீழே வைத்துக் கொண்டு படுத்துவிட்டாள்.

'போகலாம் பாட்டி.' மேகலா திரும்பவும் தொண தொணத்தாள்.

பக்கங்களை மடக்காமலும் கிழிக்காமலும்
புத்தகத்தை கவனமாக கையாளுங்கள்.



'இரு, மாமாவைத் தேடிட்டு யாரோ வந்துட்டாங்களே! அவங்க போன பிறகு பேசிட்டுப் போயிடலாம்.'

'இருட்டிக் கொண்டிருக்கே?'

'இருட்டட்டும். நமக்கென்ன? பாதிராத்திரியானாலும் சரி! நமக்கென்ன பயம்? திருடங்க எடுத்துட்டுப் போறத் துக்கு நம்மிடம் என்ன இருக்கு?' வீட்டிற்குள்ளிருந்து பசங் கள் வெளியே வந்தார்கள். அவர்கள் வாழைப்பழத்தைத் தின்று கொண்டிருந்தார்கள். பழத்தை உரித்துத் தோலை மேகலாவின் மேல் விட்டெறிந்தார்கள்.

'தப்பு! அப்படிப் பண்ணக்கூடாதும்மா!' என்றாள் மங்களம்.

'போ, போ! கிழட்டுக் குரங்கு!' என்றான் பையன். மேகலா கையை ஓங்கிக் கொண்டு முன் நோக்கிப் போகப் போனபொழுது மங்களம் எழுந்து சரேலென்று அவளது கௌனைப் பிடித்தாள். 'தப்பும்மா! ஒன்றும் செய்யாதே! அவங்க வீட்டுக்கு நாம் வந்திருக்கோம்?'

'வந்தால்? மரியாதையாய்ப் பேசத் தேவையில்லையா?' மேகலாவின் கண்கள் சிவந்துவிட்டன. அச் சிறுவன் இன்னும் தூண்டப்பட்டவனாய் வந்து மேகலாவின் கூந்தலைப் பிடித்து இழுத்துவிட்டு ஓடிப் போனான்.

பசங்களுக்கு நல்ல ஆர்வம் ஏற்பட்டுவிட்டது. மேகலா வின் கௌனைப் பார்த்து கேலிபண்ணத் தொடங்கினார் கள். மங்களம் அவர்களைக் கெஞ்சிக் கூத்தாடி மேகலாவை அழைத்துக் கொண்டு வந்து தன்னிடம் அழுத்தமாய்ப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தாள். இல்லாவிட்டால் மேகலா அவர்களை நைய்யப் புடைத்து விட்டு வந்திருப்பாள்.

ஒரு மணி நேரங்கழித்து அவர்கள் வெளியே வந்தார்கள். பலராமன் அவர்களை அனுப்பிவிட்டு வந்தான். அவனைப் பார்த்துவிட்டு மங்களம் எழுந்து கொண்டே—

'நான் போயிட்டு வரேம்ப்பா' என்றாள்.

'சரி' என்றான்.

'ஒரு இருபத்தைந்து ரூபாய் இருந்தால் கொடுப்பா! வீட்டில் அரிசியே இல்லை.' மங்களத்தின் குரலெல்லாம் எங்கே போய் ஒளிந்துக் கொண்டதோ? மிக மெல்லிய குரலில் கேட்டாள்.

'ரூபாயா?'— அதைக் கேட்டதும் பலராமன் வெகுண்டான்.

'எங்களிடம் பணம் விளைகிறதுன்னு நினைச்சுட்டாயா? என்னைக் கேட்கவேண்டாம் என்றும் எங்க வீட்டுக்கு வரவேண்டாம்னும் எத்தனை வாட்டி சொல்லியிருப்பேன்?'

'அதில்லைப்பா. பசங்க ரெண்டு பேரும்கூட ரெண்டு நாளாய் பட்டினியோடேயே படுத்துக்கிறாங்க.'

'அந்தப் பாடெல்லாம் உனக்கெதுக்கு? யாரைக் கேட்டுக்கிட்டுக் குழந்தைங்களைப் பெற்றாள்? அதான் புருஷன்காரன் இருக்கானே! போய்த் தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கேட்கச் சொல்லு.

'அவளுக்கு அவ்வளவு புத்திசாலித்தனம் இருந்தால் இந்தக் குடும்பத்துக்கு இந்தக் கதியே ஏற்பட்டிருக்காதே.'

'புத்திசாலித்தனம் இல்லாமலில்லை. திமிர்! அப்ப கண் மண் தெரியாமல் போயிடுத்து. இப்பக் கண்ணிலிருந்த திரை இறங்கிடுத்து.'

அதற்குள் அங்கே பலராமனின் தம்பி சிவராமன் வந்தான். அவன் கேசங்கள் கொஞ்சம் நீளமாய் இருந்தன. வெற்றிலைப் பாக்குக் கறையால் வாய் சிவந்திருந்தது. கிராப்பை மேல் நோக்கி வாரிக் கொண்டிருந்தான். வேட்டியும் சில்க்சட்டையும் அணிந்திருந்தான். ஆளைப்பார்த்ததுமே உல்லாசப் புருஷன் என்று தெரிந்து விட்டது.



'அண்ணா' என்று வந்த அவன், அவ்விடத்தில் மங்களத்தைப் பார்த்ததுமே, 'இந்தக் கிழவி இங்கே எப்படி வந்து சேர்ந்தாள்?' என்றான்.

'பணத்துக்காக வந்திருக்கிறாள். உன்னிடம் இருந்தால் கொடு என்றான்.

'என்னிடமா?' காலியான ஜேபிகளைக் காட்டிவிட்டுச் சிரித்தான். 'அண்ணீ. கொஞ்சம் சுடச்சுட காபி கொடு' என்று கத்திவிட்டு வந்து, மங்களத்தின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, மேகலாவின் கன்னத்தைத் தட்டி விட்டு, 'இதுக்கு என்ன வயசு சித்தி?' என்று கேட்டான்.

'ஒன்பது முடிஞ்சுடுத்து' என்றாள் மங்களம்.

'சீக்கிரமாய்ப் பெரியவளாகச்சொல்லு. நான் கல்யாணம் பண்ணிக்கிறேன். உன் மருமகன் கோவேறு கழுதையாய்த் திரிஞ்சிட்டிருக்கிறாளே தவிர, குழந்தைங்களைப் பெற வில்லை.'

'மருமகள் எங்கேடா?'

'இல்லை! பிறந்த வீட்டுக்குப் போயிட்டாள். அவள் வருஷத்துக்குப் பத்துமாசம் பிறந்த வீட்டிலேயே தானே இருப்பாள்!' என்றான்.

சிவராமுக்குக் குழந்தைகள் இல்லை. யாராவது டாக்டரண்டை காட்டக்கூடாதப்பா?' என்றாள் மங்களம்.

'காட்டினேன். அவளுக்குக்குழந்தை பிறக்காது. வேறொருத்தியைக் கட்டிக்கோன்னுட்டாரு' என்று சொல்லிக் கொண்டே மேகலாவை இழுதது்க்கட்டிக் கொண்டுகன்னதில் முத்தமிட்டு விட்டு, 'என்ன பொண்ணு! நீ எனக்குக் குழந்தைங்களைப் பெற்றுத் தரயா? உன்னைப் போல ஒல்லியான அங்களைத் தான் எனக்குப் பிடிக்கும்?' மேகலா அவன் கைக

ளில் மீனைப்போல துடித்தாளே தவிர விடுவித்துக் கொள் அவளால் முடியவில்லை.

'அவளோட என்னடா உனக்கு? சின்னப் பொண்ணு அவள்' மங்களம் மேகலாவைப் பலவந்தமாய் விடுவித்தாள்

'அப்பப்பா! இது சின்னப் பொண்ணே இல்லை, பிரம்ம ராட்சசி! என் உடம்பைப் பார், எப்படிக் கிள்ளிவிட்டாள் என்று' கிள்ளுக்காயத்தைக் காட்டினான். ரோஷத்துடன் பார்த்துக் கொண்டே தொலைவில் போய் நின்று கொண்டிருந்த மேகலாவைப் பார்த்து, 'நன்றாய் ஞாபகம் வெச்சுக்கிறேன் இரு, வட்டியோடு சேர்த்துத் தீர்க்கா விட்டால் பாரு' என்றான் கறுவியபடி.

வேணி காபியைக் கொண்டுவந்து மைத்துனருக்குத் தந்தாள். மங்களத்திற்கும் மேகலாவுக்கும் தரவில்லை. கொஞ்ச நேரங்கழித்து, 'நாடகம் ஒன்று இருக்கிறது' என்று சிவராமன் போய்விட்டான். பசங்கள் எல்லோரும் உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சமையலறையிலிருந்து பேச்சுக் குரல் கேட்டது. ஐந்தோ பத்தோ கொடுத்துத் தொலைச்சு அனுப்புங்கள்.

'இல்லாவிட்டால் நகரமாட்டள். சனியனைப் போல அங்கேயே உட்கார்ந்திருப்பாள்'.

'கொடுத்தால் அப்புறமாய் நீ கோபித்துக்க மாட்டாயா?'

'நான் கோபித்துப்பேன் என்கிறீங்க. உங்களுக்கு மட்டும் இஷ்டமா? ஒரு தடவை தந்தால் பத்து தடவை வந்துடு வாங்க.'

பலராமன் ஜோபியிலிருந்து இருபது ரூபாய் நோட்டை எடுத்துத் தந்தான்.

'கொண்டு போய் நீயே கொடு.'



வேணி விடுவிடென்று வாசலுக்கு வந்தாள். 'எங்க வீட்டுக்கு இப்படிப் பிச்சைக்கு வரவேண்டாம்னு உங்க பிள்ளை கடுமையாய்ச் சொல்லச் சொன்னார். இனிமேல் வந்தால் மரியாதையாய் இருக்காது. இந்தா!' கையிலிருந்த இருபது ரூபாய் நோட்டை மங்களத்தின் மேல் வீசியெறிந்து விட்டு வேகமாய் உள்ளே போய் விட்டாள். தன் மேல் வந்து பட்டுக் கீழே விழுந்த ரூபாய் நோட்டை மங்களம் குனிந்து எடுத்துக் கொண்டு கண்களில் ஒற்றிக் கொண்டு புடவைத் தலைப்பில் முடிந்துகொண்டாள்.

'எழுந்திரும்மா, போகலாம்' என்றாள். மேகலா எழுந்திருந்தாள்.

'போயிட்டு வரோம்ப்பா' என்றாள்.

'சரி, போயிட்டு வாங்க'! பலராமன் கத்தினான் உள்ளேயிருந்து.

இருவரும் வெளியே வந்தார்கள். இரவு எட்டு மணிக்கு மேலேயே ஆகிவிட்டது. நடந்து கொண்டிருக்கையில் மங்களத்தின் கண்களிலிருந்து பொலபொல வென்று கண்ணீர் உதிர்ந்தது. துடைத்துக் கொண்டாள்.

'எதுக்கு பாட்டி அழுகிறாய்?'

'மனுஷன் தான் எப்படி எப்படியெல்லாம் வாழ வேண்டியிருக்கேன்னு நினைச்சுத்தான்! ஒரு வாய் காபி தண்ணியை நமக்குக் கொடுத்துட்டால் என்னவாயிடும் சொல்லு? நான் அந்த வயசில் இருக்கும்போது ஆறு மாட்டுக் கொட்டகைகளை வெச்சு நடத்திட்டிருந்தேன். வீட்டுக்கு வந்தவங்களுக்குத் தயிர் இல்லாமல் சாதம் போடணும்னாலே எனக்கு அவமானமாய் இருக்கும். அப்படி வாழ்ந்த நான் இன்றைக்கு இப்படிப்பட்ட அவமானங்களைப் பட வேண்டியிருக்கு சில சமயம் யோசித்துப் பார்த்தால் இதையெல்லாம் பட்டுக்

கொண்டிருப்பது நான்தானா அல்லது என் பிரேதமான்னு தோணுது.'

மேகலா மௌனமாய் இருந்தாள்.

மங்களத்திற்கு ஒட்டி உலர்ந்துப் போன மேகலாவின் முகத்தைப் பார்த்தால் வயிற்றைப் பிசைந்தெடுத்தது. எப்படி வளர வேண்டிய பெண்கள்! மேகலா பசியை மிகத் திடமாய்த் தாங்கிக் கொண்டிருந்தாள்.

இந்தப் பெண்ணிடந்தான் எவ்வளவு பொறுமை இருக்கிறது என்றெண்ணிக் கொண்டாள் மங்களம்.

'பசிக்கிறதா கண்ணூ!'

மேகலா தலையாட்டினாள்.

மங்களம் அங்கிருந்த கடைக்கருகில் நின்று மிக்ஸர் வாங்கினாள். மிக்ஸரானால் விலைக் குறைவு. சாப்பிட அதிக நேரம் வரும். அதுவே பிஸ்கெட்டாய் இருந்தால் விலை அதிகம். சட்டென்று தீர்ந்தும்விடும்.

மிக்ஸரைத் தின்றுவிட்டு, சோடாவைக் குடித்து விட்டு நடக்கத் தொடங்கினார்கள். மங்களம் உற்சாகமாய் நடக்கத் தொடங்கினாள். ஏனெனில் புடவைத் தலைப்பில் இப்பொழுதுதான் கடையில் வாங்கிக் கட்டிக் கொண்ட அரிசி, பருப்பு, காய்கறிகள் இருந்தன. அன்றிரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் மேகலாவுக்கு சாப்பாடு இதற்கு முன்னால் என்றுமே இல்லாதவாறு மிக ருசியாய் இருப்பது போல் தோன்றிற்று.





எடுத்துச் சென்ற புத்தகத்தை
கொண்டு வராயவர் மீண்டும்
புத்தகம் தரப்படமாட்டாது.

## 8

அந்த விதமாய் மங்களம் ஒரு துடுப்பைப் போல இருந்து ஏறக்குறைய எட்டு வருஷ காலம் அக்குடும்பத்தின் கஷ்டங்கள் என்ற சாகரத்தில் நீந்தி வந்து கொண்டிருந்தாள். இந்த எட்டு வருஷங்களில் மங்களம் பண்ணாத வேலை இல்லை. பணக்கார குடும்பங்களில் சமையல்காரியாய் கொஞ்சநாட்களும், பீடிசுற்றும் கம்பெனியில் சில மாதங்களும், கடையில் அரிசியைப் பொறுக்கிப் புடைத்துத் தரும் கூலியாய்ச் சில நாட்களும் வேலைசெய்து, பெரும்பாலும் தன் வாய்த்துடுக்கால் எல்லாவற்றையும் இழந்து கொண்டும் வந்தாள்.

இந்த எட்டு வருஷத்தில் மங்களம் செய்த நல்லகாரியம் ஒன்றே ஒன்றுதான். யாரோ நொடிந்துப் போய் தையல் மிஷினை மலிவாய் விற்றபோது வாங்கி மகளுக்குத் தந்தாள். அதனால் ஸ்ரீரஞ்சனிக்கு ஒரு வியாபகம் ஏற்பட்டதோடு பணமும் வரத் தொடங்கிற்று. அத் தையல் மிஷினுக்கு ஆன கடன் தீரும்வரை வீட்டில் யாருமே கண்ணயர வில்லை. பத்துபைசா மீந்தாலும் சரி, எடுத்து டப்பாவில் போட்டுச் சேர்த்து வைத்து மாதத் தவணையைக் கட்டி வந்தார்கள்.

ஸ்ரீரஞ்சனிக்கு இயற்கையிலேயே தையலில் உற்சாக மிருந்ததால் மளமள வென்று கற்றுக்கொண்டு விட்டாள். ஜாக்கெட், பாடி, கவுன் போன்றவைகளைக் கத்தரித்துத் தைக்கக் கற்றுக் கொண்டாள். தாய்க்கு மேகலாவும் மானஸாவும் உதவி செய்து வந்தார்கள்.

ஸ்ரீரஞ்சனியின் சம்பாதனை ஒரேயடியாய் வரா விட்டாலும், சில்லறையாய் வந்து தினசரி செலவுகளுக்குக் கை கொடுத்துக் கொண்டு வந்தது.

இந்த எட்டு ஆண்டுகளில் மேகலாவும் மானஸாவு கூட வளர்ந்து விட்டார்கள். அவர்களோடு கூட செலவு பெருகிற்று இந்த எட்டு வருஷத்தில் மங்களம் சந்தனமா உழைத்ததால் இளைத்துத் தேய்ந்து விட்டாள். அடிக்க ஆயாசம் வந்தது. எந்த வேலையும் அவளால் செய்ய முடி வில்லை. அவள் செய்யாவிட்டால் நடக்காது போலிருந்த இந்த எட்டு வருஷத்தில் மேகலா பாட்டி மூலமாய் நிறை உலக அனுபவத்தைக் கற்றுக் கொண்டுவிட்டாள். பாட் யிடம் நல்ல பயிற்சியைப் பெற்றிருந்த மேகலாவுக்கு இ பொழுது உலகத்தைக் கண்டால் கொஞ்சமும் பயமில்லை உலகத்தின் வாயை அடைத்துவிட அவளால் முடியும்.

மேகலா வந்தால் குழாயடியிலிருக்கும் பெண்கள் விலகி கொண்டு அவளுக்குத் தண்ணீர் பிடித்துக் கொள்ள விட் விடுவார்கள். சண்டை வந்து விட்டால் எதிராளி வாயை மூடிக்கொண்டு போய் விடும்படி பண்ணி விடுவாள் அவள் ஸ்ரீரஞ்சனி தைத்தத் துணிகளைக் கொண்டுபோய் கொடுத் விட்டுப் பணத்தை வசூலித்துக் கொண்டு வருவாள் மேகலா தெவைப்பட்டால் எதிராளியிடம் மிக விநயத்தையு காட்டமுடியும் அவளால்; அல்லது எதிர்த்து நின்று எதிரா யைப் பைத்தியம் பிடிக்கச் செய்துவிடுவதிலும் வல்லவள் மானஸா மட்டும் தன் வேலையைப் பார்த்துக்கொண் போ ய் விடுவாள். மாதவியைப் பார்த்துப் புகழு எல்லோரும் மேகலாவை ராட்சசி என்று விமரிசிப்பார்கள்.

மங்களத்திற்கு உடம்பில் சக்தி குறைந்து விட்டதால் வீட்டுவேலையெல்லாம் மேகலாவின் மீதே விழுந்தது. வீட் விஷயங்களையெல்லாம் ஒரு ஆணைப் போல பார்த்து கொள்வாள். ஸ்ரீரஞ்சனி மேகலாவைப் பார்த்து இவ தனக்கு மகனாய்த்தான் பிறந்திருக்க வேண்டியது என்றெ ணிக் கொள்வாள். மேகலா தான் துணிகளைத் தைத்து தரும் வீடுககளிலெல்லாம் அவர்களோடு ஜாக்கிரதையாய் பேசி நல்ல பெயர் வாங்கிக் கொண்டாள்.



மங்களத்திற்கு இப்பொழுது எல்லாம் எப்பொழுது பார்த்தாலும் பெண்களுக்குத் திருமணம்எப்படிப்பண்ணுவது என்ற நினைப்பு ஒன்று தான். யாராவது கொஞ்சம் தென் பட்டுவிட்டால் போதும்! 'இதோ என் இரண்டு பேத்திகள். பெரியவள் கெட்டிக்காரி. வீட்டுவேலைகளையெல்லாம் நன் றாய்:செய்வாள். சின்னவள் சாட்சாத் சரஸ்வதி தேவி தான்னு வை. வீணை வாசித்தால் அப்படியே தூங்கி விட லாம் போலிருக்கும். பார், வரதட்சணை எல்லாம் என்னால் கொடுக்க முடியாது. எப்படியோ ஒரு வழியாய்க் கல்யா ணத்தை மட்டும் பண்ணிவைத்து விடுவேன். எங்கேயாவது சம்பந்தம் இருந்தால் பாரேன்!' என்று தொடங்கி விடுவாள்.

பெண்கள் பெரியவர்களான பிறகு பெரியமாமா வரா விட்டாலும் சின்னமாமா மட்டும் அடிக்கடி வீட்டிற்கு வந்து கொண்டிருப்பான். மங்களம் அவர் வந்தால் சந்தோஷப் படுவாள்.

'அடேய்! நீ கொஞ்சம் எங்களை நன்றாய்க் கவனித்துக் கொள்ளணுண்டா' என்பாள்.

'அதற்கென்ன சித்தி? என்னிடம் பணம் இல்லாததால் பார்த்துட்டு இப்படிச் சும்மாயிருக்கேனே தவிர, பணம் இருந்தால் அண்ணாவைப் போல பிசினாறியாய் இப்படி விட்டுட்டுப் பேசாமலிருந்து விடுவேனா? என்னிடம் அழைச் சுட்டுப் போய் வைத்துப்பேனே' என்பான். மங்களம் பொங்கிப் போய் விடுவாள்.

மேகலாவுக்கு மட்டும் சிவராமனைப் பார்த்தால் கம்ப ளிப்பூச்சி மேலே ஊர்ந்தாற்போல அருவருப்பாய் இருக்கும். அவன் பேச்சும் சிரிப்பும் எரிச்சலை யூட்டும்.

அவன் வந்து விட்டால் லேசில் போய்விட மாட்டான். மங்களம் போட்ட சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு, கட்டி

லில் ஏறி உட்கார்ந்து கொண்டு, 'ஏய் மேகா! அந்தத் தலையணையை இப்படிக் கொண்டு வந்து தா என்பான்

மேகலா பதில்பேச மாட்டாள். அவன் கேட்டது காதில் விழாதது போல இருந்து விடுவாள்.

'உன்னைத்தான்... காதில் விழலை? எடுத்துட்டு வா' உத்தரவிட்டான்.

'வேணும்னால் போய் எடுத்துக்கொள்'— தம்ளர்களைக் கழுவிக் கொண்டிருந்த மேகலா திரும்பிப் பார்க்காமல் பதில் சொன்னாள்.

'என்ன திமிர்! நான் யாருன்னு தெரியுமா?' எழுந்து வந்து கேட்டான் உறுமியபடி.

'ஆங், தெரியாமல் என்ன? நாடகம் போடுகிறவன். எருமைப் போத்தைப் போல கத்தும் கிருஷ்ணன்.'

'என்ன சொன்னாய்?'

'பாட்டி! உயிரை எடுத்ததால் அன்றைக்கு நாடகம் பார்க்க வந்தேனே! நீ போட்ட அந்தக் கிருஷ்ணர் வேஷத்தைப் பார்த்த பிறகு அந்தப் பேரைக் கேட்டதுமே வாந்தி வருது!'

'சித்தி, பார்த்தாயா இதன் வாயை?'

'அதுக்கென்னடா? தலையணையை நான் கொண்டு வந்து தரேன் இரு.'

'ஏய், நான் யாருன்னு தெரியுமா?' திருப்பிக் கேட்டான்.

'யாராம்?'

'உனக்கும் உன் தங்கைக்கும் வரப்போற புருஷன்!'

'சட், போ தூர!' மேகலா அருவருப்புடன், வெறுப்புடன் பார்த்தாள்.



'எங்கே போயிடுவேன்? இங்கேயேதான் இருப்பேன். வீட்டு மாப்பிள்ளையாய் இருப்பேன் இங்கேயே! நீங்க ரெண்டு அக்கா தங்கைங்களையும் நானே கட்டிப்பேன். ஏன்? உங்கம்மா என்னைவிட நல்ல புருஷனை உங்களுக்குக் கொண்டு வந்து விடுவாளோ? பணம் செலவழித்து உங்களுக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைக்க யார் இருக்காங்க இங்கே? உங்கப்பாவா, உங்க தாத்தாவா? உங்களை யார் பண்ணிப்பாங்கங்கறேன்? உங்க ரெண்டு பேருக்கும் எப்படியும் நான் தான் கதி. ஒருத்தி என் காலைப்பிடித்து விட்டுக் கொண்டும், இன்னொருந்தி எனக்குப் படுக்கையை விரித்துப் போட்டும் என்னிடமே விழுந்து கிடப்பீங்களே தவிர—'

அவன் வார்த்தைகளை முடிக்கக் கூடவில்லை, மேகலாவின் கையிலிருந்த தம்ளர் பறந்து வந்து 'டங்'கென்று அவன் நெற்றியில்பட்டுக் கீழே விழுந்தது.

'ஐயோ!' உயிரே போனாற் போலிருந்ததால் தலையைப் பிடித்துக் கொண்டான். அவன் ரத்தம் வருகிறதா என்று பார்த்துக் கொள்வதற்குள், மேகலா புலியாய் அவன் மேல் பாய்ந்தாள். அவள் கைகள் அவன் கழுத்தைப் பிடித்துத் திருகத் தொடங்கிற்று. 'இன்னொரு தடவை சொல்லுவாயா உனக்குப் படுக்கைப் போடமாட்டோம், கொன்றுபோட்டு விட்டு மயானத்துக்கு அனுப்பி வைப்போம்.'

தலையணையை எடுத்துக் கொண்டு வந்த மங்களம்—

'ஐயோ, ஐயோ! அவனைக் கொன்று விடுவாய் போலிருக்கே!' என்று குறுக்கிட்டு அரும்பாடுபட்டு இருவரையும் பிரித்தாள். அந்த முயற்சியில் அவள் மேகலாவை இரண்டு அடிகளும் கொடுத்தாள்.

மேகலாவின் கண்கள் நெருப்பை உமிழ்ந்தன.

'பாட்டி, இந்தப் பெரிய மனுஷனை தயவு செய்து வெளியே போகச் சொல்லு. இன்னொரு தடவை இங்கே

வந்தால் கொன்று போட்டு விடுவேன். எங்கள் கல்யாணத்தைப் பற்றிப் பேச் செடுத்தால் நாக்கை அறுத்துவிடுவேன்.' மேகலா திரும்பவும் சிவராமன் மேல் பாயப் போனாள்.

மங்களமும் ஸ்ரீரஞ்சனியும் சட்டென்று மேகலாவைப் பிடித்து அறைக்குள் தள்ளிக் கதவைச் சாத்திவிட்டார்கள். மங்களம் சிவராமைக் கூட்டி வந்து கட்டிலில் உட்கார வைத்து, நெற்றிக் காயத்தின் மேல் மஞ்சளை வைத்து ஒற்றி,

'உனக்கு எவ்வளவு தடவை சொல்லியிருப்பேன், அவள் ஜோலிக்குப் போகாதேன்னு. நீ சொன்னதைக் கேட்காததோடு சரஸமாடவும் போனாய் ...'

சிவராமன் பற்களை நறநறத்துக் கொண்டே மூடிய கதவைப் பார்த்துக்கொண்டே சொன்னான்—

'இதுக்கு இவ்வளவு திமிரா! நான் விடமாட்டேன். இப்படிப்பட்ட திமிர்ப் பிடித்த கழுதைங்களை நிறைய பார்த்திருக்கிறேன். இதுக்குப் பாடம் கற்பிக்காமல் போனால் என் பேர் சிவராமன் இல்லை.'

'விடுடா, சின்னப் பொண்ணு. அவளோடு உனக்கென்ன' என்றாள் மங்களம்.

'சின்னப் பொண்ணா? சின்னப் பெண்ணாகவா இருக்கிறாள் அவள்? நீங்கள் ரொம்பவும் செல்லம்கொடுத்து அதை வயலில் மேயும் எருமைப் போத்தாய் ஆக்கிட்டீங்க. அதன் கொம்பை என்னால் உடைத்தெறிந்துவிட முடியும்.'

சிவராமன் போய் விட்டான். மங்களம் வந்து கதவைத் திறந்தாள்.

மேகலா கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். அக்கண்களில் கடுகளவுகூட பயமோ பச்சாதாபமோ இல்லை.



'பெரியவன் ஏதோ சொன்னான் என்றால், நீ அப்படிப் பாயலாமா சாப்பாட்டுச் சமயத்தில்?' மங்களம் கடிந்து கொண்டாள்.

'பெரியவனாயிருந்தால், பெரிய மனுஷத் தன்மையைக் காப்பாற்றிக்காமல் இப்படிப்பட்ட வார்த்தைகளை ஏன் பேசணும்?' என்றாள் மேகலா.

'சொல்லுவான் அவங்கவங்க வாய்க்கு வந்தபடி என்ன வேண்டுமானாலும் தான் சொல்லுவாங்க. உனக்கு எவ்வளவு தடவை சொல்லியிருப்பேன், எதையும் காதில் கேட்காதது மாதிரி போயிடணும்னு! இப்படி எத்தனைப் பேரோடுதான் சண்டை போடுவாய்?'

'அக்கா பண்ணிய தப்பு ஏதுமில்லை பாட்டி. எனக்குக் கூட ரொம்பக் கோபம் வந்தது' என்றாள் மானஸா. அக்காவைப் போல அவளுக்குத் தைரியம் இல்லை. அவளுக்கும் அந்தச் சமயத்தில் அவனை நன்றாய் அடித்து உதைத்துப் போட வேண்டும்போலதான் இருந்தது.

'நம்ப வீட்டுக்கு வந்துட்டிருந்தவன் அவன் ஒருத்தன் தான். அவனைக் கூட வராமல் பண்ணிட்டய் நீ' என்றாள் மங்களம் பழிப்பது போல.

'போகட்டும்; அப்படிப்பட்டவங்க வந்து நரகமாக்குவதை விட, வராமலிருப்பதே மேல்' என்றாள் மேகலா.

# 9

மேகலா கொல்லையில் துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தாள். பிற்பகல் வேளை. வெயில் சுளீரென்று தாக்கிற்று. அவள் நெற்றியில் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது.

மேகலா புடவையை உலர்த்திக் கொண்டிருந்தபோது, பின் பக்கத்திலிருந்து வந்து முதுகில்பட்டது ஒரு கல். திடுக்கிட்டுப் போய் சரேலென்று திரும்பிப் பார்த்தாள். கீழே விழுந்த கல்லோடு ஒரு காகிதம் சுற்றப்பட்டிருந்தது. மேகலா ஒரு வினாடி முகத்தைச் சுளித்துக்கொண்டேஅதைப் பார்த்தாள். பிறகு மெதுவாய்க் குனிந்து எடுத்துப்பார்த்தாள். அதில் இவ்வாறு இருந்தது.

'அன்பே! ஒரு முத்தம் கொடுக்கமாட்டாயா?' மேகலாவின் கண்களில் அவமானமும் கோபமும் புஸ்ஸென்று எழும்பின. சுவர் பக்கமாய் வந்து நிமிர்ந்து பக்கத்து வீடான புன்னம்மாவின் வீட்டைப் பார்த்தாள். ஏனெனில் அக்கல் அந்தத் திசையிலிருந்துதான் வந்தது.

கொல்லையில் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருந்த புன்னம்மா, சுவர்ப்பக்கமாய் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த மேகலாவைக் கண்டதுமே, கோபமாய், 'என்னம்மா' என்ன வேணும்?' என்றாள் கேலியாய். மேகலா பேசவில்லை. அவ்விடத்திலேயே கயிற்றுக்கட்டிலில் உட்கார்ந்து பேப்பர் படித்துக்கொண்டிருந்த ராமனைப் பார்த்தாள். ராமன் சிரத்தையாய் படித்துக்கொண்டிருந்தாற் போல் பேப்பரைப் பார்த்துக் கொண்டிருந்தது நடிப்புத்தான் என்று சஞ்சலத்துடன் சுழன்று கொண்டிருந்த அக்கண்களே தெரிவித்தது. ராமன் அவள் மகன். இண்டரில் பெயிலாகி வீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

'என்ன! அவனை அப்படிப் பார்க்கிறாய்?' என்றாள் புன்னம்மா.

மேகலா கையிலிருந்த கல்லை எடுத்து ராமன் மேல் விட்டெறிந்தாள்.

'ஐயோ, ஐயோ என்ன இது?' புன்னம்மா ஓடிவந்தாள்.

'அதென்னடா காகிதம்?'

...டைகளிலும் கிழிக்காமலும் புத்தகத்தை கவனமாக கையாளுங்கள்



'என்னவோம்மா எனக்குத் தெரியாது' கீழே விழுந்த காகிதத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

'ஒண்ணும் தெரியாதா? வெட்கமில்லை, இப்படிப்பட்ட கடிதத்தை எழுதுவதற்கு?' என்றாள் மேகலா.

அதற்குள் புன்னம்மா அக்கடிதத்தை எடுத்துப் பார்த்துவிட்டாள். அதைப் பார்த்ததுமே மேகலா தான் அதை எழுதினாள் என்று முடிவெடுத்துவிட்டாள்.

'அடேயப்பா! என்ன சாமர்த்தியம்! என்ன அக்கிரமம்! உனக்கு இதென்ன நாசமாய்ப் போற காலமோ?'

'அந்த நாசமாய்ப் போற காலம் உங்கப் பையனுக்குத்தான் வந்து சேர்ந்திருக்கு. அதனால்தான் அப்படிப்பட்ட கோழிக் கிறுக்கலைக் கிறுக்கி என் மேல் வீசியெறிந்தான்' என்றாள் மேகலா?

'நீ போட்டு விட்டு அவன் போட்டான் என்கிறாயே!'

'உன் அருமந்த புத்திரன் தான் என் மேல் வீசி யெறிந்தான். வேணும்னால் பார்' பின்னால் ஒட்டிக் கொண்டிருந்த மண்ணை எடுத்துக் காட்டினாள்.

அதற்குள் மங்களம் அங்கே வந்துவிட்டாள்.

'என்னது?' என்று சுவருக்கருகில் வந்தாள்.

'பார், பாட்டி' என்று மேகலா சொன்னாள்.

'நீ பண்ணிட்டு என் மகன் மேல் தள்ளிவிட்டாய்' என்றாள் புன்னம்மா.

'ஆமாம்! உன் மகன்தான் பண்ணியிருப்பான். உனக்கு வாயில் நரம்பில்லை. நேற்று நான் கண்ணால் பார்த்தேன், மேகலாவைப் பார்த்து கண்ணடித்தான் அவன்' என்றாள் மங்களம்.

'உன் பேத்திகள் பெரிய பதிவிரதைகள்! அதையே உலகத்துக் கெல்லாம் சொல்லிக் கொள்.

என்மகனை எப்படியாது உங்க பக்கமாய்த் திருப்பிக் கொண்டு விடணும்னுநாடகமாடுகிறீங்க. யாருக்கும் தெரியாதுன்னு நினைச்சீங்க?' என்றாள் புன்னம்மா.

'மரியாதையாய் பேசு' என்றாள் மேகலா.

'மரியாதையை நீ எனக்குச் சொல்ல வந்துட்டாயா? வா, வீதிக்கு வா. நாலு பெரிய மனுஷங்களைக் கூப்பிட்டு உன்னை உண்டு இல்லைன்னு பார்த்துடறேன். இந்தக் கடிதத்தைக் காட்டினால் உன் வாயில் மண்ணைப் போடு வாங்க மண்ணை!'

'வா, மண்ணை யார் மென்னுட்டு வரப்போறாங்கன்னு பார்த்துடலாம்' என்றாள் மேகலா.

அதற்குள் மானஸா போய்ச் சொன்னதால் ஸ்ரீரஞ்சனி அவ்விடத்திற்கு வந்தாள்.

'மேகா, இந்தண்டை வா, என்ன ரகளை?'

'நீ சும்மா யிரும்மா.'

'வா' என்றாள் புன்னம்மா.

மேகலா நகர்ந்தாள். புன்னம்மா காகிதத்தை எடுத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினாள். ராமன் சரேலென்று எழுந்து அக் காகிதத்தைப் பிடுங்கிக் கொண்டு,

'அம்மா, அவங்களுக்குத்தான் வெட்கமில்லைன்னால் நமக்கு இல்லையா? வேண்டாம், விடு' என்றான்.

'நீ சும்மாயிருடா, அவங்களை ஒரு கை பார்த்துடறேன்' என்றாள் புன்னம்மா.



ராமன் கலவரத்துடன் தாயின் கையிலிருந்த காகிதத்தை வாங்கிக் கிழித்தெறிந்தான். 'போகட்டும், விட்டுத்தொலை' என்று உள்ளே போய்விட்டான்

அதற்குள் ஸ்ரீரஞ்சனியும் மானஸாவும் வந்து மேகலாவை உள்ளே இழுத்துக்கொண்டு போய் விட்டார்கள்.

'கல்யாணம் கார்த்திகை ஆகாமல் ஊரிலிருக்கிற ஆம்பிள்ளைக மேல் கொழுப்புப் பிடித்து விழறாங்க' என்றாள் புன்னம்மா.

மேகலா தாயின் கையை உதறிக்கொண்டு விர்ரென்று சுவர்ப் பக்கமாய் வந்தாள்.

'ஆங், பாவம்! உன் மகன் பெரிய மன்மதன்னு அவன் பின்னால் சுற்றிட்டிருக்கிறோம். அந்த துருத்திப் பல்லும், சப்பைப்மூக்கும் வேறெங்கேயும் கிடைக்காது: என்ன அழகு!'

'என்ன சொன்னாய்?'—புன்னம்மா இடுப்பில் கையை வைத்துக் கொண்டு வந்தாள்.

அதற்குள் ஸ்ரீரஞ்சனி மேகலாவின் வாயை அழுத்திப் பொத்தினாள். ஸ்ரீரஞ்சனியும் மானஸாவும் அவளைப் பலவந்தமாய் உள்ளே இழுத்துக்கொண்டு போனார்கள்.

'அம்மா! நீ அவளைத் திட்டி புத்தி சொல்லாமல், அப்படிப் பண்ணிட்டாயே!' என்றாள் ஸ்ரீரஞ்சனி அழும் குரலுடன். மேகலாவையும் சரி, தாயையும் சரி அவளால் தடுத்துவிட முடியாது. எப்பொழுது பார்த்தாலும் வீதியில் இருந்தவர்களோடு சண்டை தான். சில சமயம் காலையிலேயே தொடங்விடும்.

'நான் என்ன பண்ணிட்டேன் நடுவில்?' என்றாள் மங்களம்.

'அவள் கல்யாணமாக வேண்டிய பொண்ணு, இப்படி வாயாடினால் நன்றாயிருக்குமா?'

'ஆங், அவள் நல்லகுணத்தைப் புரிஞ்சு கொண்டவனே வருவான்' என்றாள் மங்களம்.

'நீ அப்படித்தான் சொல்லுவாய் பாட்டி. வீதியில் அடியெடுத்து வைக்கவே பயமாயிருக்கு எனக்கு. அக்கா மேலிருக்கும் ஆத்திரத்தை யெல்லாம் என் மேல் காட்டு வாங்க' என்றாள் மானஸா.

மேகலாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ராமன் அப்படி எழுதியதற்கு அவமானமாயிருந்தது. அதோடு சேர்ந்துதாயும் தங்கையும் அவளைத்தான் நிந்திக்கிறார்கள்.

'ஆமாம், என்னோட தப்புதான். யார் என்ன சொன்னாலும் காதில் கேட்டுக்காமல், பேசத் தெரியாத ஊமையைப் போல இருந்திருக்கணும்.' மேகலா கதவை ஓங்கிச் சாத்தினாள் 'அவங்க என்னை எதுக்குச் சொல்லணுங்கறேன்? நான் என்வேலை உண்டு, நான் உண்டு என்றிருக்கும் போது என் ஜோலிக்கு ஏன் வரணும்?' — கத்தினாள்.

தாயும் மானஸாவும் பதில் பேசவில்லை.

மேகலா இன்னும் கத்திக் கொண்டே,

'யார் என்ன சொன்னாலும் கேட்டுக்கொண்டு சும்மாயிருக்கணும். தன்மானத்தைக் கொன்டு போட்டுவிட வேண்டும். நான் மனுஷியில்லை. எனக்கு எவ்வளவு வருத்தமாயிருக்குன்னு உங்களுக்குத் தெரியாது.'

மேகலாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. ,இவ்வளவு பெரிசாய் ஆகிக்கூட நான் தான் வெளியே போகணும். தண்ணீர் கொண்டு வரணும். கடைக்குப் போய் சாமான் வாங்கிட்டு வரணும். தெருவில் காலெடுத்து வைத்து விட்டால் போதும்; எல்லோரும் ஏதாவது ஒன்றைச் சொல்லிட்டிருப்பாங்க. எனக்கு அப்பா இல்லை, எங்கம்மா நல்லவள் இல்லை. எங்க பாட்டி சண்டைக்காரி! இதையெல்லாம் கேட்டுட்டு வாயை மூடிக்கொண்டிருக்கச் சொல்றாய் நீ'— மேகலா தாயை நோக்கித் திரும்பினாள்.



'நீ சிறுவயதிலேயே என் நாக்கை ஏன் அறுக்காமல் போனாய்? நாக்கில் நரம்பு இருக்கும்போது பதில் சொல்லாமலிருக்க என்னால் முடியாது.'

மேகலா கதவை வேகமாய்த் தள்ளிவிட்டு அறைக்குள் போய்க் கட்டிலில் படுத்துக்கொண்டு அழத்தொடங்கினாள். 'எல்லோரும் எப்பொழுது பார்த்தாலும் என்னை ஏளனம் பண்றாங்களே, ஏன்? நான் என்ன பண்ணிட்டேன்? வார்த்தைகளை முள்ளாய் எடுத்து வீசுகிறார்களே! எல்லாவற்றையும் தாங்கிக்கணும். பதில் சொல்லக்கூடாது. என் சார்பில் ஒருத்தரும் அவங்களை ஒன்றுமே சொல்லமாட்டாங்க. நானும் சொல்லக் கூடாதாம். ரொம்பத்தான் சொல்ல வந்துட்டாங்க.' தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழத் தொடங்கினாள்.

## 10

அன்று மாலையில்—

மேகலா காய்கறிகளை வாங்கிக் கொண்டு வருவதற்காகப் பையை எடுத்துக் கொண்டு கடை வீதிக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கையில், ஸ்ரீரஞ்சனி ஒரு காகிதத்தில் இரண்டு ஜாக்கெட்டுகளை பொட்டலமாய்க் கட்டித் தந்து, 'இதைக் காய்கறி வாங்கிட்டுத் திரும்பும் போது பாக்யலட்சுமியிடம் தந்து விட்டு வா' என்றாள்.

'பாக்யலட்சுமி யார்?' என்று கேட்டாள் மேகலா.

'பாக்யலட்சுமியைத் தெரியாதா? சுப்பராமன் வீட்டில் புதிதாய் வாடகைக்கு வந்திருக்காங்க' என்றாள். சுப்பராமன்

காலேஜில் பிரின்ஸிபாலாய் வேலை செய்து வந்தார் அவன் மனைவிகூட லெக்சரராய் இருந்தாள்.

அவர்கள் வீட்டுச் சமையல்காரி இரண்டு மாதம் ஊருக்குப் போயிருந்தபோது மங்களத்தை வைத்துக் கொண்டார்கள். அவர்கள் வீட்டில் வாடகைக்கு.போர்ஷன்கள் இருந்தன சின்ன வீடாய் இருந்தாலும் பூந்தோட்டங்களுடன் அழகாய் வசதியாய் இருந்தது.

'அவங்க யாருன்னு எனக்குத் தெரியாது . பாட்டியை அனுப்பு' என்றாள் மேகலா.

'பாட்டிக்கு இடுப்பு வலியாம். படுத்துட்டிருக்கிறாள் எழுந்திருக்க முடியாது. நீ போயிட்டு வா.'

'என்னவோ, தெரியாதவங்களிடம் எப்படிப் போவது?'

'இதில் தெரிய வேண்டிய அவசியம் பெரிசாய் என்ன இருக்கு? போய் இந்த ஜாக்கெட்டுகளைத் தந்தட்டு,

'மங்களத்தின் பேத்தி நான்' — என்று சொன்னால் அவளுக்குத் தெரிந்துவிடும். ஜாக்கெட்டுகளை வாங்கிக் கொண்டு பணத்தைத் தந்து விடுவாள். வாங்கிக் கொண்டு வா.'

'எவ்வளவு?'

'இந்த ரெண்டிற்கும் பதினாலுரூபாய் நமக்கு இதற்கு முன்னாடியே இன்னும் ஒன்பது ரூபாய் தரவேண்டியது பாக்கியிருக்கு.'

மேகலா அவற்றை வாங்கிக்கொண்டாள். மேகலா வெளியே போய் என்ன வேலை செய்யச் சொன்னாலும் செய்வாள். ஆனால் புதியவர்களுடன் பேசுவதென்றால் சங்கடமாய் இருக்கும் அவளுக்கு. போவதற்கு முன்னால் மானஸாவிடம் வந்து, 'மானஸா' நீயும் என்னோடு வரக் கூடாதா?' என்றாள்.



வீணையைத் துடைத்துக் கொண்டிருந்த மானஸா' 'நானா? ஊஹும்' என்று சொல்லிவிட்டாள் கச்சிதமாய்.

'ஆங்! நீயோ ராஜகுமாரியைப் போல வீட்டை விட்டு நகரமாட்டாய். எல்லா வேலைகளையும் நான் தான் செய்யணும்!'

மேகலா முணு முணுத்துக் கொண்டே போய்விட்டாள்.

மேகலா வீதியில் வந்ததுமே வெட்கப்படுவது போலவோ உடம்பை நாணிக் கோணிக் கொண்டோ நடக்க மாட்டாள். நேராய் நிமிர்ந்து நடப்பாள். யாராவது ஏதாவது சொன்னாலும் திரும் பிப் பார்க்கமாட்டாள். கோபம் தாங்க முடியாமல் வந்தாலேயொழிய பதில் சொல்ல மாட்டாள்.

சுப்பராமன் வீடு மெயின் ரோடைத் தாண்டியதும் இடதுபக்கமாய் வரும் இரண்டாவது சந்தில் இருந்தது. மேகலாவுக்கு சந்தின் முனையிலேயே காய்கறி வண்டியொன்று எதிர்ப்பட்டதால், அவனிடமே தனக்கு வேண்டிய காய்கறிகளை வாங்கிக் கொண்டுவிட்டாள். அங்கே புதிதாய் ஒரு வீடு கட்டிக் கொண்டிருந்தார்கள்.

மேகலாவுக்குப் புதிதாய்க் கட்டிக் கொண்டிருக்கும் வீடுகளைப் பார்த்தால் மிகச்சந்தோஷமாய் இருக்கும். அவை வீடாய் தோன்றாது! மனிதனின் எதிர்காலத்தை பகிரங்கமாய் நிர்மாணித்துக் கொள்வது போல இருக்கும். அப்படி கட்டும் வீடுகளைப் பார்க்கும்பொழுதெல்லாம் தம்வீடுநினைவிற்கு வரும். வீடு நினைவிற்கு வந்துவிட்டால் மேகலாவின் இதயத்திலிருந்து வேதனைப் பெருமூச்சு ஒன்று வெளிப்படும். அந்தச்சின்ன வீட்டில் காற்றும் வெளிச்சமும் குறைவுதான். பழைய ஓட்டு வீடு. சமையலறை முழுவதும் ஒழுகும். வீட்டுக்

காரனோ 'நீங்கள் தரும் வாடகைக்கு ரிப்பேர் ஒரு கேடா?' — என்று சொல்லி விட்டான்.

வீட்டுக்காரன் அவர்களை அந்த வீட்டைக் காலிபண்ணி விட்டுப் போகும்படியாய் நான்கு வருஷங்களாய்த் தொந்தரவுபண்ணிக் கொண்டிருக்கிறான். மங்களத்திற்கு சமையல் செய்யப் போன இடத்தில் ஒரு லாயரின் அறிமுகம் ஏற்பட்டது. அவர் வீட்டுக்காரனைக் கூப்பிட்டு, 'வீட்டைக் காலி செய்யச் சொன்னால் கோர்ட்டுக்குப் போவாங்க! ஜாக்கிரதை!' என்று மிரட்டினார். வீட்டுக் காரனுக்குக் கோபம் வந்துவிட்டது. வீட்டை ரிப்பேர் செய்யாமல் விட்டு விட்டான். மேகலாவுக்குச் சில சமயம் இது நினைவிற்கு வந்துவிட்டால் வருத்தமாய் இருக்கும்.

வறுமைதான் மனிதனை எவ்வளவு மாற்றிவிடுகிறது! அதுவே தம்மிடம் பணம் இருந்தால் வீட்டுக்காரரோடு பேச்சுக் கேட்க நேர்ந்திருக்குமா? காற்றும் வெளிச்சமும் இல்லாத அந்த வீட்டை வௌவால்களைப் போல அப்படிப் பிடித்துக் கொண்டு தொங்குவார்களா?

மேகலாவுக்கு வீதியில் நடப்பதென்றால் மிகவும் பிடிக்கும். ஏனெனில் அங்கேதான் காற்றும் வெளிச்சமும் தாராளமாய்க் கிடைக்கும். அந்த வீட்டையே வீட்டுக்காரன் சொன்ன விலைக்கு வாங்கிவிட வேண்டும் என்று ஆசையாய் இருக்கும். ஆனால் அறுபதாயிரம் சொல்கிறான்! அம்மாடி! அறுபதாயிரம்! வீட்டிலிருந்த அவர்கள் எல்லோரையும் சேர்த்து அடைமானம் வைத்தாலும் கூட அறுபது ரூபாய் தேறாதே!

மேகலா நடந்தபடியே வீட்டு விஷயத்தைப் பற்றி அலோசித்துக் கொண்டிருந்தாள். ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டும். கிழவர் எவ்வளவு நாள் சும்மாயிருப்பார்? அவர் அதிகமாய் ஊரில் இருக்கமாட்டார். அதனால் சமாளிக்க



முடிந்தது. பெண்களாயிற்றே என்றும் கொஞ்சம் விட்டுப் பிடித்துக்கொண்டிருக்கிறார். ஏதாவது ரௌடிகளை ஏவி ரகளைப்பண்ணி வீட்டை காலி செய்யச் சொல்லிவிட்டால் அவர்கள் கதி, அதோ கதிதான்! சீக்கிரத்தில் ஏதாவது ஒரு உபாயத்தைச் செய்தாக வேண்டும்.

மேகலாவுக்கு எப்பொழுது பார்த்தாலும் வீட்டுக் கவலைகள்தான். அவள் வயதுதான் என்ன? பதினெட்டு வயதான அச் சின்னப் பெண்ணின் கண்களில் இளமைக் கனவுகளுக்குப் பதிலாய் வாழ்க்கையைப்பற்றிய ஜாக்கிரதையும், கவலையுமே தென்பட்டன.

மங்களத்திற்கு வயதாகி விட்டதால், அந்த வீட்டுப்பாரம் மெல்ல மேகலாவின் தோளில் ஏறி உட்கார்ந்துக் கொண்டு விட்டது. எப்பொழுது பார்த்தாலும் வீட்டு யோசனைகள் தான். வீட்டில் அரிசி இல்லாவிட்டால் வாங்கும் வழியை மேகலாதான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேகலாவின் நடவடிக்கைகளிலும், யோசிக்கும் தோரணையிலும், ஆண்பிள்ளையின் பொறுப்பும், மனத்தத்துவமும், துணிச்சலும் தென்பட்டன. வீட்டிலிருந்த எஞ்சிய மூவரும் ஏதாவது கஷ்டம் வந்து வீட்டால் மேகலா பார்த்துப்பாள், மேகலாதான் இருக்கிறாளே என்று நிர்ச்சிந்தையாய் இருந்துவிடுவார்கள்.

மேகலவவுக்கு அந்த வீடு போய்விட்டால் என்னவாகுமோ என்ற பயமும் திகிலும் நிறைய! எங்கிருந்தாவது அறுபதாயிரம் சம்பாதித்துக் கொண்டு அந்த வீட்டை வாங்கி விட்டால்! அந்த ஊகமே மேகலாவின் மனதைப் புல்லரிக்கச் செய்தது. அவளுக்கு அத்தனை அதிர்ஷ்டம் உண்டா? அறுபதாயிரம் என்றால் சாமானியமா?

அவள் எட்டாத கனிக்கு ஆசைப்படுறாளோ? மேகலாவுக்குத் திகிலாய் இருந்தது.

இந்த உலகத்தில் ஒவ்வொருவருக்கும் எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் தம்முடையது என்ற ஒரு சின்ன வீடு இருந்து தீரவேண்டும். பறவைகள்கூட கூடு கட்டிக் கொள்கின்றனவே! வீட்டின் மதிப்பு மிக அதிகமே! ஆனால் அதைச் சம்பாதித்துக் கொள்ளும் வழிதான் தெரியவில்லை.

மேகலா யோசனையிலிருந்து மீண்டு வலதுப் பக்கத்திலிருந்த சந்திற்குள் நுழைந்தாள். அங்கேரோடு போட்டுக் கொண்டிருந்தார்கள் அங்கிருந்து மூன்றாவது வீடு சுப்பாரமனின் வீடு. அந்த வீட்டு வாசலில் பெரிய பவழமல்லிகை மரம் இருந்தது. மங்களம் சமையல் செய்ய வரும்போது அவளோடுகூட வந்த மேகலா, அவற்றைப் பொறுக்கிப் பாவடையில் கட்டிக் கொண்டு போவாள்.

மேகலா கேட்டைத் திறந்துகொண்டு அந்த வீட்டிற்குள் நுழைந்தாள். சுப்பராமன் இருந்த பெரிய போர்ஷன் பூட்டியிருந்தது பக்கத்து போர்ஷனுக்கருகில் வந்தாள். அதன் கதவு சாத்தியிருந்தது. அவள் காலிங்பெல்லை அழுத்தினாள்

'வரேன்!' — உள்ளே எங்கிருந்தோ ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

வாசல் பக்கத்திலிருந்த சுவரில் டாக்டர் கிருஷ்ணராஜ் எம். பி. பி. எஸ். என்றிருந்தது. மேகலா அந்த டிகிரியைக் கையால் தடவினாள். மேகலாவுக்கு டாக்டர் என்றாலும் லாயர்கள் என்றாலும், பெரிய படிப்புப் படித்த யாராயிருந்தாலும் மிக இஷ்டம்.

அதற்குள் கதவுகள் திறந்துகொண்டன. உள்ளேயிருந்து குள்ளமாய், வெள்ளையாய் பர்மியர்களைப் போல தலையலங்காரம்செய்து கொண்டு, வெள்ளைச் சட்டையும் சரிகை போட்ட புடவையும் அணிந்து கொண்டிருந்த ஒருத்தி எட்டிப் பார்த்தாள். அவள் கண்களுக்குக் கீழே கருப்புக் கோடுகள் தென்பட்டன. கண்கள் வேதனை மயமாய் இருந்தன.



வகிட்டிற்கருகில் கேசங்கள் நன்றாய் நரைத்திருந்தாலும் அம் முகத்தில் முதுமை இன்னும் வரவில்லை.

'யாரும்மா'' என்றாள். அக் குரல் மிகப் பரிவாய், மென்மையாய் இருந்தது.

'நான் மங்களத்தின் பேத்திங்க. எங்கம்மா ஜாக்கெட்டுகளை அனுப்பி யிருக்காங்க.' என்று பொட்டலத்தை அவிழ்த்து அவளிடம் தந்தாள்.

அவள் ஜாக்கெட்டுகளைப் பார்த்துக் கொண்டாள். கதவை இன்னும் கொஞ்சம் நன்றாய்த் திறந்து, 'உள்ளே வா! நான் இவற்றைப் போட்டுப் பார்க்கிறேன். லூசாய் இருந்தால் திரும்பவும் சரிப்பண்ணி தைத்து வாங்கிட்டு வரலாம். உட்காரு' என்று வாசல் கதவைச் சாத்தி விட்டு வந்து,

'ரோடு போட்டுக் கொண்டிருக்காங்க இல்லையா? ஒரே தூசி! உட்காரும்மா. கொசுவலைகூட கிழிந்திருக்கு. தரேன், தைத்துக் கொண்டு வந்து தா' என்று உள்ளே போனாள்.

அவள் நடையிலும் பேச்சிலும் பார்வையிலும் ஒரு கருணையும் மென்மையும் இருந்தது. அவளைப் பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்து விட்டது.

மேகலா உட்கார்ந்தாள்.

உள்ளே எந்த அறையிலிருந்தோ குழாயிலிருந்து தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்த சப்தம் கேட்டது. அந்த சப்தத்தைக் கேட்டால் மேகலாவுக்கு மிகப் பிடிக்கும். வீட்டில் குழாய் இருந்து. அதிலிருந்து தண்ணீர் கொட்டினால் அது ஒரு இனிய சங்கீதமாய்த் தான் இருக்கும். தண்ணீருக்காக வெளியே போகத் தேவையில்லை. சண்டை போடத் தேவையில்லை என்று எடுத்துக் காட்டுவது போலிருக்கும்.

மேகலாவை, சுவர்க்கம் எங்கே இருக்கிறது என்று யாரா வது கேட்டால், 'வீட்டிலேயே குழாய் இருக்கும் வீட்டில்!' என்று சட்டென்று பதில் சொல்லிவிடுவாள்.

அந்தத் தண்ணீருக்காகத் தூக்கத்தைக்கெடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. காவல் காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

மேகலா நாற்காலியில் உட்கார்ந்துக்கொண்டே அவ்வறையைச் சுற்றுமுற்றும் பார்த்தாள். அறையில் சுவர் ஓரமாய் ஒரு சைக்கிள் வைக்கப்பட்டிருந்தது அவள் உட்கார்ந்திருந்த இடத்தில் நடுவே டீபாய் போடப்பட்டுச் சுற்றிலும் சோபாக்கள் இருந்தன. அங்கே ஒரு கருப்பு டைரியும், பேடும் பென்சிலும் இருந்தன. மேஜைமேல் குடை உருவத்தில் வெள்ளை மேஜை விளக்கு வைக்கப்பட்டிருந்தது. சுவரில் டென்னிஸ் மட்டை மாட்டப்பட்டிருந்தது.

உள்ளே போகும் வாசலுக்கு மேலே சுமார் பதினாறு வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணின் போட்டோ மாட்டப்பட்டிருந்தது. இரட்டை ஜடை போட்டுக்கொண்டு ரிப்பனைக் தூக்கிக் கட்டிக் கொண்டு, கழுத்தில் முத்துமாலை அணிந்திருந்தாள் அவள்.

மேகலாவின் பார்வை அங்குமிங்கும் சுற்றிவிட்டுக் கடைசியாய் மேஜைமேலிருந்த ஸ்டெதாஸ்கோப்பின் மேல் நிலைத்தது. அதைப் பார்த்துவிட்டால். அவளுக்குச் சந்தோஷமாயிருக்கும். தன் வீதியில் ஒரு பெண் தினந்தோறும் கையில் வெள்ளைக் கோட்டை மாட்டிக் கொண்டு ஸ்டெதாஸ்கோப்பை எடுத்துக் கொண்டு டாக்டர் படிப்புப் படிக்கக் காலேஜிற்குப் போவாள். மேகலா அவளையே பார்த்துக் கொண்டிருப்பாள். அந்த ஸ்டெதாஸ்கோப்பை அவளைக் காந்தமாய்க் கவர்ந்து கொண்டிருக்கும். அப்படி ஏன் ஏற்படுகிறது என்று மேகலாவுக்குத் தெரியாது.

மேகலா அவ்வறையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள். அதற்குள் அந்த அறைக்குப் பக்கத்திலிருந்த ஒரு அறையிலிருந்து யாரோ பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்த சப்தம் கேட்டது. அவள் திரும்பிப் பார்த்தாள் அந்த அறையிலிருந்து சிவப்பாய் உயரமாயிருந்த ஒரு இளைஞன் அவள் இருந்த அறைக்கு வந்தான். அவன் கையில் ஒரு பத்திரிக்கை இருந்தது. அதைப் பார்த்துக் கொண்டே வந்தான்.

அவன் குளியறையிலிருந்து குளித்துவிட்டு வந்தாற்போல் தோன்றிற்று பச்சைக் கட்டம் போட்ட பெரிய துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டிருந்தான் குளித்தால் நெற்றியோரத்தில் கேசங்கள் நனைந்து சின்னப்பையனைப் போலத் தோன்றினான். அவன், பாட்டைப் பெரிய குரலில் பாடத் தொடங்கினான்.

கையிலிருந்த பத்திரிக்கை விளையாட்டு சம்பந்தப்பட்ட பத்திரிக்கை போலிருந்தது. அதன் அட்டையில் டென்னிஸ் பேட்டைப் பிடித்துக் கொண்டிருந்த ஒருத்தனின் போட்டோ இருந்தது.

அவன் பாட்டை நடுவில் நிறுத்திவிட்டு, 'மம்மீ, நான் குளித்துவிட்டேன்! என் பேன்ட்டும் ஷர்ட்டும்' என்று கத்திவிட்டு, திரும்பவும் பாட்டை முணுமுணுத்துக் கொண்டே அறையில் வட்டமாய்ச் சுழன்றான்.

அவனைப் பார்த்ததும் மேகலா நாற்காலியிலிருந்து எழுந்து நின்றாள். புத்தகத்திலிருந்து கண்களை அகற்றிய அவன் மேகலா அங்கிருப்பதைக் கவனிக்கவேயில்லை. புத்தகத்தைப் பார்த்துக்கொண்டே மேஜையோரத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

'எந்த பேன்ட்டும் ஷர்ட்டும் வேணுண்டா?'

தாய் பீரோவைத் திறந்த சப்தம் கேட்டது.

'எதையோ ஒன்றைத் தா!'

'சிவசங்கரன் வீட்டில் பிறந்த நாள் பார்ட்டி இருக்காம். எட்டு மணிக் கெல்லாம் வந்துவிடு.'

என்னால்வரமுடியாது மம்மீ. அவர் மகளின் டான்ஸைப் பார்க்கச் சொல்லி உயிரை எடுத்துடுவார் என்னை! அது ரொம்ப போர்!

அவன் திரும்பவும் பாடிக் கொண்டே புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான். ஆரோக்கியமான அவ்வுடலில் இடுப்பிலிருந்து முழங்கால் வரை பெரிய துண்டைத் தவிர வேறெந்த உடையும் இல்லை. உயரமான வெள்ளையான உடலில் ரோமங்கள் மண்டியிருந்த மார்பு.

'சிவசங்கரன் உன்னை வரச்சொல்லி ரொம்பவும் சொன்னார்! தாய் இரைந்தாள் உள்ளேயிருந்து.

'நான் வரமாட்டேன்!' அவன் வேகமாய் மேஜை மேல் புத்திரிக்கையைப் போட்டு விட்டுத் திரும்பினான்.

'அம்மா' என்று ஏதோ பெரிதாய்ச் சொல்லப் போன அவன், சட்டென்று நின்று விட்டான்' இரண்டடி தூரத்தில் மேகலா நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்தநமே அவன் கண்கள் அகல விரிந்தன,

அவ்வறையில் முன்பின் அறிமுகமில்லாத ஒரு பெண் இருந்ததை அடபொழுதுதான் உணர்ந்து கொண்ட அவன் சிலையாய் நின்றுவிட்டான்.

'நான்... நீங்கள்' என்று உளறிவிட்டு அதற்குமேல் என்ன பேசுவது என்று தெரியாமல் தோளைக் குலுக்கியபடி நின்று விட்டான். அவனுக்குச் சட்டென்று துண்டைக் கட்டிக் கொண்டு, தான் அங்கே நின்று கொண்டிருந்தது நினைவிற்கு வந்தது. அவன் முகத்தில் சந்தோஷமும் பரபரப்பும் ஏறபட்டன.



'மைகாட்!' அவன் பெண்ணைப் போல ஒரே பாய்ச்சலாய் உள்ளே ஓடிவிட்டான்.

மேகலா அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தாள். அவள் உதடுகளில் முறுவல் தோன்றிற்று.

'யாரம்மா அந்தப் பொண்ணு?' உள்ளே அவன் கேட்டது நன்றாய்க் காதில் விழுந்தது.

'மங்களத்தின் பேத்திடா!' தாய் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவள் வெளியே வந்தாள். ஜாக்கெட் கொஞ்சம் லூசாயிருக்கு. கொஞ்சம் பிடித்துத் தைக்கணும். கொசுவலையை அவிழ்த்துத் தரேன். ஒரே நிமிஷம் உட்காரும்மா! தரேன். இதோ என் மகனை அனுப்பிட்டு வந்துடறேன்' என்று சொன்னாள்.

'பரவாயில்லீங்க என்றாள் மேகலா உட்கார்ந்து கொண்டே.

அவள் உள்ளே போனாள்.

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு அவன் திரும்பவும் வெளியே வந்தான் இம்முறை அவன் வெள்ளை பான்ட்டும் வெள்ளை இன் ஷர்ட்டும் போட்டுகொண்டிருந்தான். கேசங்கள் நீட்டாய் இருந்தன. அவன் அந்த அறைக்குள் வந்ததுமே நேராய் மேஜைக்கருகில் போய் பேனாவையும் பென்சிலையும் ஜேபியில் போட்டுக்கொண்டான். ஸ்டெதாஸ் கோப்பைக் கையில் எடுத்துக் கொண்டு கழுத்தைச் சுற்றிப் போட்டுக்கொண்டான். காலில் செருப்பை மாட்டிக் கொண்டு சைக்கிளை வெளியே தள்ளிக் கொண்டுபோனான்.

அவன் கேட்டைத் தாண்டிக் கொண்டிருந்தபோது, மேகலா அந்தப்பக்கமாய்த் திரும்பிப் பார்த்தாள். கேட்டைச் சாத்திக் கொண்டிருந்த அவனும் கூட இந்தப் பக்கமாய்ப்

பார்த்தான். அவன் கண்களில் பரபரப்பும் சங்கோஜமும் இன்னும் போகவில்லை.

மேகலாவுக்கு அந்தப் பார்வையை வாழ்நாளெல்லாம் மறந்துப் போக முடியாது போலிருந்தது.

அவன் போனதுமே பாக்யலட்சுமி அம்மாள் வந்தாள். அவள் கையில் சுடச்சுட ஆவி கக்கிக் கொண்டிருந்த காபி தம்ளர் இருந்தது.

'எடுத்துக்கோம்மா' என்றாள்.

'வேண்டாங்க!' வினயமாய் மறுத்தாள்.

'பரவாயில்லை, எடுத்துக்கோ. இப்ப வெளியே போனவன் என் மகன். பெயர் கிருஷ்ணராஜ். டாக்டருக்குப் படித்து விட்டு உத்யோக வேட்டையில் இருக்கிறான். அவனுக்கு இன்னும் படிக்கணும்னு இருக்கு. அவர் போய் விட்டதால் எங்கள் ஆசைகள் எல்லாம் தலைகீழாகி விட்டன. தற்சமயம் கோவர்த்தனனிடம் வேலை பார்த்துட்டிருக்கிறான். மங்களத்தின் பேத்தியா? உன் பேரென்ன?'

'மேகலா!'

'எவ்வளவு நல்ல பெயர்!' அவள் உள்ளே போனாள். அவள் மேகலாவைக் கொசுவலையை அவிழ்ப்பதற்கு உதவி செய்யச் சொல்லி வேண்டினாள். மேகலா உள்ளே போனாள். அவ்வறை கிருஷ்ணராஜ் அறை போலிருந்தது. மேஜை மேலும் படுக்கை மீதும் மருத்துவப் பத்திரிக்கைகள் கிடந்தன. எங்கு பார்த்தாலும் புத்தகங்களே! அவள் அவற்றை அடுக்கி வைத்துக் கொண்டே,

'என் மகனின் சிநேகிதர்கள் இவை. புத்தகங்களைப் பார்த்துட்டால் அவனுக்கு அன்ன ஆகாரம்கூடத் தேவையில்லை' என்றாள்.



...மடம் ... புத்தகத்தை கவனமாக...

மகனைப் பற்றி அவள் சொல்லிக் கொள்ளும்போது எவ்வளவு பெருமையாய்ச் சொல்லிக் கொள்கிறாள்!

அவள் மேகலாவுக்குப் பணத்தை எடுத்துத் தந்தாள். கொசுவலையைச் சுற்றி பிளாஸ்டிக் கவரில் போட்டுத் தந்தாள்.

மேகலா அதை எடுத்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினாள். திம்பி வந்து கொண்டிருக்கையில், அவள் கண்களில் கண்ணீர் வரத் தொடங்கிற்று. பாக்கியலட்சுமி மிக மதிப்பாய்ப் பேசினாள். வேண்டாம் என்ற போதிலும் பலவந்தமாய் காபியைக் கொடுத்தாள்! மேகலாவுக்கு இப்படிப்பட்ட கௌரவ மரியாதைகளைப் பெற்றது மிகப் புதிதாய் இருந்தது.

மனம் சிறகாய்ப் பறக்கத் தொடங்கிற்று. உடம்போ வானவில்லின் மீது உட்கார்ந்து மிதந்து கொண்டே போனாற்போல் சுகமாய் இருந்தது.

மேகலா வீட்டிற்கு வந்தாள். தாயிடம் கொசுவலையைத் தந்தாள்.

மேகலா படுத்துக் கொண்டாள். மாலையிலிருந்து மந்திர ஜலம் தெளிக்கப்பட்ட தேவதையைப் போல நிசப்தமாய் மௌனமாய் இருந்தாள். சாப்பிட்டுக் கொண்டிருந்த போதும், சமையலறையை ஒழித்து வைத்துக் கொண்டிருந்த போதும், கிருஷ்ணராஜின் நினைவே வந்துகொண்டிருந்தது. அவனுடைய பரபரப்பும், சங்கோஜமும் நினைவிற்கு வந்த போது அவள் உதடுகளில் முறுவல் தவழ்ந்தது.

மேகலா கட்டிலில் படுத்தாள். தூக்கம் வராமல் புரண்டாள். அவனே கண்முன்னாடி வந்து நின்றான். வெகு நேரமாய்ப் புரண்டு படுத்துக் கொண்டிருந்தவள் விடியற் காலையில் கண்ணயர்ந்தாள்.

# 11

இரண்டு நாட்களுக்குப் பிறகு மாலை வேளையில் மேகலா ஜடைப் பின்னிக் கொண்டதும், 'அம்மா' கொசு வலையைத் தைத்து விட்டாயா? பாக்கிய லட்சுமியிடம் கொண்டுபோய்க் கொடுத்துட்டு வரேன்' என்றாள்.

'நேற்று பாட்டி எடுத்துட்டுப் போனாங்க. அவங்க ஊரில் இல்லையாம். பாக்கியலட்சுமியின் தங்கை செத்து விட்டதால் ஊருக்குப் போயிருக்காங்களாம்' என்றாள் ஸ்ரீரஞ்சனி.

'அட! அப்படியா?' என்றாள் மேகலா.

அதற்குள் வெளியே போயிருந்த மங்களம் உள்ளே வந்து கொண்டே,

'வாப்பா வா' என்று கூப்பிட்டாள். மேகலா யாராயிருக்கும் என்று திரும்பி பார்ப்பதற்குள் வாசலிலிருந்து அவளைத் தொடர்ந்து சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் வந்தது தென்பட்டது. அவன் நீல நிறத்தில் பேன்ட்டும் பெரிய பெரிய கட்டங்கள் போட்ட ஷர்ட்டும் அணிந்திருந்தான். அவன் மேகலாவைப் பார்த்ததுமே தயக்கத்துடன் நின்றான்.

மங்களம் உள்ளே வந்து கட்டிலில் உட்கார்ந்து கொண்டே, 'வாப்பா வா! இங்கே வேற்று மனுஷங்க யாருமில்லை. இது என் பெரிய பேத்தி மேகலா! இந்தா ஸ்ரீ ரஞ்சனி, இங்கே வா!' என்று கத்தினாள்.

அறையில் தைத்துக் கொண்டிருந்த ஸ்ரீரஞ்சனி மிஷினை நிறுத்தி விட்டு எழுந்து வந்தாள்.



மங்களம் அவ்விளைஞனைக் காட்டி, 'ரஞ்சனி! இவன் பிரசாத்! நம்ப குலத்தைச் சேர்ந்தவன் தான்! எதிர்த்த ராமச்சந்திரன் வீட்டில் குடியிருக்கான். அதென்னவோ மருந்துகளை விற்கிற வேலை பண்ணிட்டிருக்கானாம். எனக்கு முதுகு வலின்னு சொன்னதும் மருந்து கொடுத்தான். ரொம்ப சரளமான சுபாவமுடைய இளைஞன்' என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

'நமஸ்காரங்க!' என்றான் பிரசாத்.

ஸ்ரீரஞ்சனி கைகளைக் கூப்பினாள். மங்களம் மேகலாவைப் பார்த்து, 'மேகா' கொஞ்சம் காபி கலந்துக்கொண்டா! என் இடுப்பு வலிக்கு எவ்வளவு நல்ல மருந்து கொடுத்தான் தெரியுமா? ஒரேயடியாய்ப் போயிடுத்து' என்று அவனை நோக்கித் திரும்பி,

'இதப் பார் பிரசாத்! எங்க மேகாவின் கையால் காபி கலந்து சாப்பிட்டாயானால் பிறகு ஒரு நாள் கூட விடாமல் இங்கே வந்துவிடுவாய்! காபிமட்டுமே இல்லை, எங்க மேகா சமையல் கூட பிரமாதமாய் பண்ணுவாள். அவள் கையால் சமைத்ததை ஒருமுறை சாப்பிட்டயானால், பிறகு மகாராஜா வீட்டுச் சாப்பாடு கூட பிடிக்காமல் போயிடும் உனக்கு! அவள் வடை பண்ணுவாளே அப்பப்பா! நாக்கில் வைத்துக் கொண்டால் கரைந்து போய்விடும்!

'நீங்கள் ரொம்பவும் இப்படி வர்ணித்தீங்கன்னால் வடையைச் சாப்பிடுகிற வரைக்கும் இங்கிருந்து நகரக் கூடாதுன்னு தோணிடும். எனக்கு நாக்கில் நீர் சொட்டத் தொடங்கிடுத்து. ஏற்கனவே எனக்கு வடை என்றால் உயிர்' என்றான் அவன்.

'உட்காரு, உட்காரு' அவள் பலவந்தப்படுத்தியதன் பேரில் அவன் உட்கார்ந்து கொண்டான். ஸ்ரீரஞ்சனி நிசப்தமாய்த் திரும்பித் தன் அறைக்குப் போய் தைக்கத் தொடங்கினாள்.

'இந்த வீதியில் இருக்கிறவங்க ஒரே பொறாமை கூட்டம்! யாரைப் பார்த்தாலும் வயிற்றெரிச்சல் தான் அவங்களுக்கு. ஏதாவது ஒரு கதையை இட்டுக் கட்டி சொன்னாலேயொழிய அவங்களுக்குச் சாப்பிட்ட ஆகாரம் செரிக்காது'

'கிழிச்சாங்க! அப்படிப்பட்டவங்களை நான் ஒரே பார்வையில் தொலைவில் தள்ளி வைத்துவிடுவேன். நான் மெடிகல் ரிப்ரெஸன்ட்டேடிவ் இல்லையா? ஒரு நிமிஷத்தில் யார் யார் எப்படிப்பட்டவங்கன்னு கண்டு பிடித்து விடுவேன்!'

அவன் மங்களத்தோடு பேசிக்கொண்டிருந்தாலும் தொலைவில் சமையலறையில் காபியைக் கலந்து கொண்டிருந்த மேகலாவையே பார்த்துக் கொண்டிருந்தான். மேகலாவின் கூந்தல் நீளமாய் இருந்தது. உடம்பு ஒல்லியாய் அழகாய் இருந்தது. நடையில் ஒரு விதமான சொகுசு மிடுக்கு! தன் நடையில் அழகு இருப்பதாய் அவளுக்கே தெரியாது போலிருந்தது. ஏனெனில், அந்த நடையில் வரவழைத்துக் கொண்ட செயற்கைத் தனம் எதுவும் இல்லை.

அதற்குள் மானஸா வெளியேயிருந்து வந்தாள். ஒரு கையில் புத்தகங்களும், இன்னொருகையில் மடித்த குடையும் இருந்தன. மழைநாள் வந்துவிட்டால் குடையைக் கையில் கட்டாயம் எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்பது மங்களத்தின் உத்தரவு.

உள்ளே முன் பின் அறிமுகமில்லாத இளைஞனைக் கண்ட மானஸா தலை குனிந்து கொண்டு உள்ளே போக முயன்றபோது, பாட்டி இரைந்து கூப்பிட்டாள்.

'மானஸா! அப்படி ஏன் ஓடிப் போகிறாய்? இவன் யாரோ யில்லை. பிரசாத் என்று நம்ப மனுஷன் தான்;

பக்கங்களை மடக்காமலும் ... புத்தகத்தை கவனமாக ...



ஜாத்துச் சொந்தம் ஆகணும். நான் ஸ்டேட்பேங்க் பிரபாகரனின் வீட்டில் வேலை செய்து வந்தபோது பரிச்சியம் ஆயிற்று. ப்ரபாகரனின் மச்சினருக்கு மருமகனோட மாமா பிள்ளை. மருந்துகள் விற்கிற உத்யோகம் பண்ணிட்டிருக்கான்!'

'நான் மெடிகல் ரிப்ரேஸன்ட்டேடிவ் வேலை பண்றேன்' என்றன் பிரசாத், மானஸாவை வணங்கிவிட்டு. இந்தப் பெண் மேகலாவைவிட இன்னும் நன்றாய் இருக்கிறாள் என்று தோன்றிற்று அவனுக்கு.

'என் ரெண்டாவது பேத்தி மானஸா. மேகலாவும் இவளும் சேர்ந்து மெட்ரிக்குக்குக் கட்டலாம்னு டிட்டோரியல் காலேஜில் சேர்ந்தாங்க. ரெண்டுபேரும் பெயிலாயிட்டாங்க. மேகலா இனி செத்தாலும் பரீட்சைக்குப் போக மாட்டேன்னு சொல்லிட்டாள். இவள் மட்டும் திரும்பவும் பரீட்சைக்குப் போகிறாள்.

மானஸா அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு, மங்களம் மிகப் பரிவுடன் 'மானஸா! போய் கால் கழுவிக் கொண்டு சாப்பிடு. காலையில் எப்பொழுதோ சாப்பிட்டாய்' என்றாள்.

மானஸா அங்கிருந்து போய்விட்டாள். கிழவி அப் பெண்ணை அதிக நேரம் அவ்விடத்தில் நிற்கவிடாமல் அனுப்பி விட்டதற்கு அவனுக்கு உற்சாகம் மடிந்தது.

மேகலா காபியைக் கொண்டு வந்து கொடுத்தாள். மங்களத்திடமே இரண்டு தம்ளர்களையும் தந்தபோது, அவள், 'அவனுக்குக் கொடு' என்று உத்தரவிட்டாள். மேகலா அவனிடம் தந்தாள். அவன் அதை வாங்கிக் கொண்டே — 'இந்த எதிர்த்த வீட்டுக்குக் குடி வந்தேன். இந்த வீதியில் எனக்குத் தெரிஞ்சவங்க யாருமில்லை. உங்க பாட்டி பார்த்து விசாரித்ததும் எனக்கு உயிரே வந்தாற்

போலிருந்தது. இந்தப் பட்டிணத்தில் ஒவ்வொருத்தருக்கும் அவங்கவங்க மனுஷங்கன்னு யாராவது இல்லா விட்டால் குழப்பமாய்த்தான் இருக்கும்' என்றான்.

மேகலா தலைகுனிந்தபடி கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் சொல்லி முடித்தபிறகு அங்கிருந்து போய்விட்டாள். மங்களம் காபியைக் குடித்துக்கொண்டே திரும்பவும் தொடங்கி விட்டாள்.

'என்னவோப்பா! நாங்களும் ஒரு காலத்தில் நன்றாய் வாழ்ந்தவங்கதான். ஜமீன்தாரிடம் என் புருஷன் குதிரைகளின் கணக்கு வழக்குகளை எழுதுகிற வேலை செய்து வந்தார். அப்ப எங்களுக்கு வீடு, வாசல், நிலம் நீச்சு, மாடு கன்று, வேலைக்காரங்க என்று குடும்பம் எந்தக் குறையும் இல்லாமல் இருந்தது. இதோ இப்பப் பார்த்தாயோனோ? சொன்னாலும் யாரும் நம்பமாட்டாங்க. அந்த வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாய் இதோ இந்தப் போட்டோ ஒன்று தான் மீந்திருக்கிறது எங்களுக்கு.' பிரசாத் காபியைக் குடித்துக் கொண்டிருந்தவன் ஆச்சரியமடைந்தவனாய்,

நீ மட்டு மில்லைப்பா, நானே இப்ப இருக்கிற இந்த நிலைமை நிஜமானதா அல்லது அந்தப் போட்டோ தான் கனவா, நிஜமான்னு குழப்பத்தில் ஆழ்ந்துட்டிருக்கேன். சில சமயம் எனக்குத் தோன்றும், அந்த வாழ்க்கையை வாழ்ந்துட்டு இப்ப நகரத்தில் இருக்கேனோன்னு நினைச்சுப்பேன்.'

'பலே ஆள்தான் நீங்க!' அவன் சிரித்தான். 'நரகத்துக்கு உங்களோடு கூட உங்கப் பெண்ணும் பேத்திகளும் கூட வந்திருக்காங்கன்னு சொல்லுவீங்களா?'

மங்களம் சிரித்தாள். அவனும் சிரித்தான். அவன் பேசியதைக் கேட்டு உள்ளேயிருந்த ஸ்ரீரஞ்சனிக்கும் மானஸாவுக்கும் கூடச் சிரிப்பு வந்தது.



'நிஜந்தான்! அப்படீன்னால் இது நரகம் இல்லையா? அதுதான் கனவு? என்றாள் மங்களம் போட்டோவைக் காட்டிக் கொண்டே திரும்பவும் வேதாந்தியைப் போல் சொன்னாள்:

'அது கனவு கூட இல்லை. வாழ்க்கைதான். ஏனென்றால் பெரிய மகாராஜர்களே போயிட்டார்கள்! அந்த பத்மாபுரம் ஜமீன்தாரின் பேரன் இப்ப உத்யோகம் பண்ணிண்டிருக்கிறான். அவங்க காலடியில் துரும்பைப்போல வாழ்ந்துட்டிருந்த நாங்களும் ஒரு பொருட்டா? இந்தச் செல்வமே ஒரு மாயை தான்!'

'ஆமாமாம்' என்றான் அவன்.

'போயிட்டு வரேங்க' என்று எழுந்தான்.

'கொஞ்ச நேரம் உட்காருப்பா.'

'வேலை இருக்கு!'

'மங்களம் இரைந்து கூப்பிட்டாள். 'இந்தா மேகலா! மானஸா! ரஞ்சனி. பையன் போறானாம். சொல்லிக்கறான்.'

மூவரும் கதவிற்கருகில் வந்தார்கள்.

'போயிட்டு வரேங்க' மிகப் பணிவாய்ச் சொன்னான். ஸ்ரீரஞ்சனி தலையாட்டினாள்.

'அவ்வப்போது வந்துட்டிரு. இந்தா மறந்துட்டேன்! நாளைக்கு ஞாயிற்றுக் கிழமையோனோ? சாப்பிட எங்க வீட்டுக்கு வந்து விடு' என்று உத்தரவிட்டாள் மங்களம்.

'நாளைக்கா? பார்க்கிறேன்' என்றான்.

'பார்க்கிறதெல்லாம் கிடையாது. நீ வந்து தீரணும் உனக்கு தாங்க ஒண்ணும் பஞ்சபட்சம் படைக்கப் போற தில்லை. நாங்க சாப்பிடப் போறதையே போடுவோம்' என்றாள்.

பிரசாத் போக முயன்றவன் நின்று சொன்னான்:

'அதையே என் பாக்கியமாய் எண்ணிப்பேங்க! உண்மையைச் சொல்லணும்னால் யாராவது என்னைச் சாப்பிடக் கூப்பிட்டால், நான் என் பாக்கி வேலைகளை அப்படியே விட்டுவிட்டு வந்துவிடுவேன். பிரம்மச்சாரி வாழ்க்கையாச்சே! ஓட்டல் சாப்பாடு சாப்பிட்டுச் சாப்பிட்டு நாக்கே செத்துடுத்துன்னால் நம்புங்க!

'பாவம்' என்றாள் மங்களம் பரிதாபமாய் முகத்தை வைத்துக்கொண்டு.

'வரேங்க; உங்களைச் சந்தித்ததில் ரொம்ப சந்தோஷம், இனி எனக்குத் தனிமையால் போரடிக்காது. நான் எங்கம்மா அவங்களையெல்லாம் விட்டுட்டு இருக்கேன்னு அம்மாவுக்கு ரொம்ப வருத்தம்; அம்மாவுக்கு நான் வேளைக்குச் சாப்பிட்டேனோ இல்லையோன்னு பயம்! எங்கம்மாவுக்கு இன்றைக்கே லெட்டரில் எழுதுகிறேன்.'

'சரிப்பா! சரி, எங்களை உன் சொந்த மனுஷங்களாகவே எண்ணிக்கொள்' என்றாள் மங்களம் சந்தோஷத்தோடு.

பிரசாத் போய்விட்டான்.

மங்களம் உள்ளே வந்தாள். அங்கே படுக்கையை உதறிப் போட்டுக் கொண்டிருந்த மேகலாவைப் பார்த்து கன்னத்தைத் தொட்டு நெட்டி முறித்துவிட்டு,

'என் தங்கக்கட்டி' என்றாள். மேகலா எரிச்சலடைந்தவளாய், எதுக்கு? 'என்றாள் அவள் கைகளை விடுவித்துக் கொண்டு. 'எதுக்குன்னு இப்பச் சொல்லமாட்டேன். அப்புறமாய்ச் சொல்றேன் உனக்கே தெரிந்துவிடும்.

மேகலா அலுப்படைந்தவளாய் உள்ளே போய்விட்டாள்.





# 12

மறுநாள் பிரசாத் சாப்பிடவந்தான். மங்களம் சாப்பாட்டில் இரண்டு கறிகள், குழம்பு, பச்சடி, வடை, பாயசம் என்று ஆர்பாட்டமாய்ச் செய்திருந்தாள். பிரசாத்திற்கு மட்டுமே முதலில் பரிமாறியதைப் பார்த்து விட்டு ஆச்சரியமடைந்தவனாய், 'இதென்னது, நான் என்ன உங்க வீட்டுக்கு வாரச் சாப்பாட்டுக்கு வர்றவனா என்ன?' என்றான்.

'ஐயோ, அதெல்லாம் இல்லைப்பா' என்றாள் மங்களம் பதறிப்போய்.

'நான் உங்கள் வீட்டிற்குச் சாப்பிட வந்தேன். அதாவது உங்கள் எல்லோரோடும் ஒருத்தனாய்ச் சேர்ந்து உட்கார்ந்துச் சாப்பிடலாம் என்று வந்தேனே தவிர, நான் மட்டும் தனியாய்ச் சாப்பிடுவதற்கா வந்தேன்? ஊஹூம். என்னால் அப்படிச் சாப்பிட முடியாது' என்றாள். மங்களத்திற்கு அந்த வார்த்தைகள் மிகச் சந்தோஷத்தைக் கொடுத்தன.

மளமளவென்று பலகைகளைப் போட்டுத் தட்டுக்களை வைத்து மானஸாவையும் மேகலாவையும் கூப்பிட்டாள். ஸ்ரீரஞ்சனீ வரமறுத்தபோது, 'அந்தப் பையன் மனம் வருந்துவான். நம்ப மனுஷன் தானே! வா! நல்ல பையன். எவ்வளவு நன்றாய்ப் பேசுகிறான்! இல்லமாப் போனால், நான் நம்ப வீட்டுக்குச் சாப்பிடக் கூப்பிட்டிருப்பேனா?' என்று பலவந்தமாய் இழுத்து வந்தாள்.

சமைத்த கிண்ணங்களைக் கொண்டுவந்து அவ்விடத்தில் வைத்துவிட்டு மங்களத்தையும் சாப்பிட உட்காரச் சொல்லி வற்புறுத்தினான் அவன்.

எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்துகொண்டார்கள். இப்படி வேற்று ஆணுடன் சேர்ந்து சாப்பிடுவது மேகலாவுக்கும் மானஸாவுக்கும் இதுதான் முதல் தடவை. மேகலா பேசாமல் கம்பீரமாய்ச் சாப்பிடத் தொடங்கினாள்.

மானஸாவிடம் அவன் டிட்டோரியல் காலேஜ் சங்கதிகளை விசாரித்தான்.

'இந்தத் தடவை நீ பரிட்சை எழுது. மீதி விஷயங்களையெல்லாம் நான் பார்த்துக்கறேன். உன் நம்பர் பேப்பரில் பாஸ் என்று வராவிட்டால் பார்!' என்றான்.

மங்களம் முதலில் அவனுக்குப் பரிமாறினாலும், கொஞ்சநேரத்தில் அவனே இந்தப்பக்கத்தில் மங்களத்திற்கும் அந்த பக்கத்தில் மேகலாவுக்கும் பறிமாறத்தொடங்கினான்.

சாப்பாடு மிக நன்றாயிருந்ததாய்ப் பாராட்டினான். வடையும் பாயசமும் மேகலா பண்ணியவை என்று சொன்னாள் மங்களம்.

'இவ்வளவு நன்றாய்ச் சமைத்து நான் என்றுமே சாப்பிட்டதில்லை. உங்களுக்குப் படிப்பு எதுக்கு? சின்ன ஒட்டல் வெச்சீங்கன்னால் எக்கச் சக்கமாய் சம்பாதித்து விடலாம்' என்றான்.

சாப்பாடு முடிந்தது. அதற்குப் பிறகு அவன் வெகுநேரம் உட்கார்ந்திருந்தான். போகும் முன்னால் பையைத் திறந்து ஒரு பிடி விடமின் மாத்திரைகளையும், ஜலதோஷ மருந்துகளையும் எடுத்து மேஜைமேல் வைத்தான்.

'மேகலாவை அவற்றைச் சாப்பிடச் சொல்லுங்கள். ரொம்பவும் வீக்காய்த் தென்படுகிறாள்' என்றான்.

ஸ்ரீரஞ்சனிக்குத் தூக்கம் வருவதற்கு மாத்திரைகளைத் தந்தான். மங்களத்தின் முதுகு வலியைப்பற்றி விசாரித்துவிட்டு, மருந்தை மாற்றித் தந்தான்.



பிற்பகலில் காபி குடித்த பிறகு போய்விட்டான். அவன் போகும்போது மங்களம், 'இதப் பார்! ராத்திரி ஓட்டலில் சாப்பிடாதே! வீட்டில் பண்ணியவை நிறைய இருக்கு' என்றாள்.

'ரத்திரி நான் எப்ப வருவேனோ என்னவோ?'

'சரி விடு, உன் அறையிலேயே கொண்டு வந்து வைத்து விடுகிறேன்.'

'உங்களுக்குச் சிரமம்' என்று சொல்லி விட்டுத் தன் அறைச் சாவியைத் தந்தான் அவன்.

'இதில் சிரமம் என்னப்பா இருக்கு? நீ எங்களுக்கு யாரோவா என்ன?' என்றாள் மங்களம் சாவியை வாங்கிக்கொண்டே.

'மேகலா! பத்திரமாய் வைம்மா' என்று சாவியை அவளிடம் தந்து கொண்டிருக்கையில் அவன் மேகலாவை உற்றுப் பார்த்துவிட்டுப் போய்விட்டான்.

பிரசாத் போனபிறகு மங்களம் பேத்திகள் இருவரையும், மகளையும் உட்காரவைத்து மீட்டிங்கை நடத்தினாள்.

'இதப்பாருங்கள்; நீங்கள் அவன் வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாலே நம்ப வீட்டைச் சூறையாடி விடுவான் என்பது போல் பார்ப்பதை விடுங்கள். பையன் நன்றாயிருக்கிறான் மாதம்ஆயிரம் சம்பாதிக்கிறான். அவன் வீட்டார் கல்யாண சம்பந்தம் பார்த்துட்ருக்காங்களாம். ஆனால்அவன் தனக்குப் பிடித்தப் பெண்ணைத் தான் பண்ணிக்கப் போறானாம். அவங்க தலையீடே இல்லையாம்.

'முறைப் பெண் இருக்கிறாளாம். அந்த விதவை அத்தை இவர்களது வீட்டில் தான் இருக்கிறாளம். அத்தைப் பெண்ணைப் பண்ணிக்கொண்டால் சொத்து வருமாம். ஆனால் இவனுக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவில்லையாம். உங்கள் வரி

சையில் நல்ல பொண்ணு இருந்தால் பார்த்துச் சொல்லுங்கள் பாட்டி என்றான். அவனுக்குப் பெண் கெட்டிக்காரியாய் வேலைவெட்டி நன்றாய் செய்யத் தெரிந்தால் போதுமாம். வரதட்சணையோ சீரோ தேவையில்லையாம். பெற்றோருக்குப் பிடிக்காவிட்டால் கோவிலில் கல்யாணம் பண்ணிக் கொள்கிறானாம்.

'நம் மேகலாவுக்கும் அவனுக்கும் நல்ல பொருத்தம். அவனைப் பார்த்ததுமே தோன்றிவிட்டது. என் மனதில் இந்த ஆசை இருப்பது அவனுக்குத் தெரியாது. இப்பவே சொல்ல வேண்டாம். மெதுவாய் அவனே மேகலாவைப் பண்ணிக்கிறபடியாய் நாம்ப செய்யணும். இதற்குள்ளேயே புன்னம்மாவின் பார்வை அவன் மேல் பட்டுவிட்டது. அவளுக்கும் மகள் இருக்கிறாளே! அதோடு பையனும் ஜோராய் இருக்கான். நன்றாய்ச் சம்பாதிக்கிறான்.

'காலையில் நான் வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த போது அவன் அறைக்குப்போய் காபிக்கு வரச்சொல்லி கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். மகனோடு சிநேகம் பண்ணிக்க வைத்து விட்டு, மெதுவாய் வலையில் போட்டுக்கணும் என்பது அவள் தவிப்பு. புன்னம்மா நல்லவள் இல்லைன்னு நான் சொல்லிட்டேன் அவனிடம். அவனுக்கும் புன்னம்மாவின் தோரணை பிடிக்கலைன்னு சொல்லிட்டான். முடிந்தவரை அவனை நம்ப வீட்டிலேயே வைத்துக்கணும்.'

அவள் பேச்சு அலுப்புத் தட்டியதால் மேகலா அங்கிருந்து எழுந்து போய்விட்டாள். பாட்டி பிரசாதை மேகலாவுக்கு என்று சொல்லிவிட்டதால் மானஸாவின் உற்சாகம் வடிந்துவிட்டது.

அம்மா, அவன் மேகலாவைப் பண்ணிப்பான்னு நினைக்கிறாயா?' பேதையாய்க் கேட்டாள் ஸ்ரீரஞ்சனி.



பிரசாத் பார்க்க நன்றாய் இருந்தான். நன்றாய் சம்பாதிக்கிறான். முக்கியமாய் தாய் தந்தையரின் கட்டுப்பாட்டில் இல்லை. நன்றாய் கலந்துப் பேசுகிறான். அவன் மேகலாவை செய்து கொண்டால், அதைக் காட்டிலும் வேறு அதிஷ்டம் இல்லை. ஸ்ரீரஞ்சனிக்குப் பிடித்துப் போய்விட்டது. மங்களம் மாலையில் அவன் அறைக்குப் போய் டிபனை அங்கேவைத்து விட்டு வந்தாள் இரவு வெகுநேரங்கழித்து அவன் கொண்டே மேகலாவைச் சாவியை எடுத்துத் தரச் சொல்லி உத்தரவிட்டாள். மேகலா எழுந்து போய் சுவரில் மாட்டியிருந்த சாவியை எடுத்துத் தந்தாள்.

'என் ஞாபகமறதியைப் பார்த்தீங்களா! நேராய் அறைக்குப் போயிட்டேன். சாவிக்காக ஜேபியைத் தடவிப் பார்த்துவிட்டு எங்கேயோ தொலைந்து விட்டதாய் எண்ணி வருத்தப்பட்டேன். இங்கே தந்த நினைவே இல்லை. பூட்டை உடைத்துக் கதவைத் திறக்கலாம் என்றெண்ணிக் கல்லைத் தேடிட்டிருந்த போதுதான் ஞாபகம் வந்தது.

'சாவியைப் பெற்றுக் கொண்டபோது அவன் கை மேகலாவின் உள்ளங்கையில் உராய்ந்தாற் போல் ஆயிற்று. மேகலா முறைத்துப் பார்த்தாள். அவன் சிரித்தான்.

'தாங்க்யூ, உங்களுக்கு ரொம்ப சிரமம் தத்துட்டேன். சாரி' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான். மேகலாவுக்கு உள்ளங்கையை அவன் வேண்டுமென்றே தாக்கியதாய்த் தோன்றவில்லை. மேகலா வந்து படுத்துக்கொண்டாள்.

பாட்டியின் வார்த்தைகள் நினைவிற்கு வந்தன. பாட்டி ஒரு பைத்தியம்! அவளைப் பார்த்தபோது மேகலாவுக்கு இரக்கமாய் இருந்தது. எப்படியாவது அவளுக்கும் மானஸாவுக்கும் திருமணம் செய்து விடவேண்டும் என்பது அவள் தவிப்பு. பக்கத்திலிருந்த புன்னம்மாவால் தப்பித்தவறி வந்த

ஓரிரு சம்பந்தங்களும் கூட கைவிட்டுப் போய்க் கொண் டிருந்தது. கல்யாணத் தரகன்கூட ஒரு முறை சொன் னான்—

'இந்தப் பெண்ணுங்களுக்குக் கல்யாணத்தை உங்களால் எப்படிப் பண்ண முடியும் பாட்டி? உங்களால் எல்லாம் முடியாது' என்றான் பழிப்பது போல.

'ஏன்?' என்றாள் மங்களம்.

'இந்தக் காலத்தில் பெண்களின் கல்யாணம் பண்ற தெல்லாம் விளையாட்டா? மதிப்பும் புகழும் உடைய குடும் பங்களிலேயே வரதட்சணை, சீர் என்று தாங்க முடியாத பாரமாப் பாவிக்கிறாங்க. போகட்டும், இவ்வளவையும் எடுத்தெறிந்து விடக்கூடிய பொருள் ஒன்றிருக்கிறது 'பணம்' என்பாங்க அதை. அதை உங்களால் எப்படிக் கொண்டு வரமுடியும்? என் பேச்சைக் கேளுங்க. அந்தப் பசங்களுக்குக் கொஞ்சம் சுதந்திரம் தந்து வெளியே விடுங்க, அவங்களே யாரையாவது ஒருத்தனைத் தள்ளிண்டு வந்துடு வாங்க. நீங்கள் குலத்தைப் பற்றிக் கூட பொருட்படுத்தா தீங்க.'

மங்களம் கையிலிருந்த சொம்பால் அவனை அடிக்கப் போனாள்.

'இதென்னய்யா? பெரிசாய் சொல்ல வந்துட்டாய்! நான் என்னவோ பெரிய மனுஷனாச்சேன்னு சம்பந்தம் பார்க்கச் சொன்னால் பசங்களை ஓடிப்போகச் சொல்லி ஆலோசனை சொல்லித் தராயா? பல்லைத் தட்டிவிடுவேன்! நான் யாருன்னு நினைச்சாய்? பத்மாபுரம் ஜமீன்தாரிடம் வேலைப் பண்ணி வந்த இந்தப் பசங்களின் தாத்தாவுக்கு ரெண்டாம் மனைவி! இந்தப் பசங்க அவர் பேத்திகள்! அவங்களைப் போய் அப்படிச் சொல்கிறாயா? உனக்குத்தான் பெண்கள் இருக்காங்களே. அவங்களை ஓடிப் போகச் சொல்லு. அவங் களுக்குக் கல்யாணங்கள் பண்ணாதே! என்னைவிட உன்னி



டம் பணம் என்ன இருந்து கிழிச்சது? நீ சம்பந்தம் எந்த ஒரு குடும்பமாவது உருப்பட்டிருக்கான்னேன்? போ, போ, திரும் பவும் இந்த வீதியில் நீ கண்ணில் பட்டுவிடக்கூடாது' மங்களம் அவன் பையை எடுத்து வீசியெறிந்தாள்.

அவன் போய் விட்டான். மங்களம் தலையில் அடித்துக் கொண்டே அழத் தொடங்கினாள்.

'என் தலையெழுத்து! எவ்வளவு பேச்சுக்களை கேட்க வேண்டியிருக்கு? பணம் இவ்வளவு மதிப்பு வாய்ந்ததுன்னு தெரிந்திருந்தால் என்னிடம் இருந்த போதே எச்சில் கையால் காக்காய் ஓட்டியிருக்க மாட்டேன். நோம்புகள், விரதங்கள், உறவுக்காரங்கள் என்றெல்லாம் சொல்லித்தடபுடலாய் வாரி யிறைத்துட்டேன்.'

'இப்ப அதெல்லாம் எதுக்கும்மா? அவங்களிடம் நம்ப விஷயத்தைச் சொல்ல வேண்டாம்னு எவ்வளவு தடவை சொல்லியிருப்பேன்?' என்றாள் ஸ்ரீரஞ்சனி வருத்தத்தோடு.

'நீ அப்படித்தான் சொல்லுவாய்! என் வருத்தம் உனக் கெப்படித் தெரியும்? உன் விஷயத்தில் நான் சம்பந்தம் கிடைக்காமலா போயிடும் என்று வீம்பாய் எண்ணிக் கொண்டேயிருந்து படு குழியில் விழுந்துட்டேன். என்னிட மிருந்ததையெல்லாம் சூறையாடிவிட்டு என்னை வீட்டை விட்டுத் துரத்திட்டாங்க, என் சக்களத்திப் பசங்க. இப்ப வாசலில் போய் நின்றாலும் மூஞ்சியில் காரித் துப்பறாங்க. ஐயோ, அவளோட இவ்வளவு சொத்தையும் விழுங்கிட்டோ மேன்று கொஞ்சமாவது இரக்கம் உண்டா? கல்யாணம் ஆயிடும்னு நினைச்சுட்டிருந்த போது முப்பது வருஷமா யிடுத்து. அதற்கப்புறமாய் உன் வாழ்க்கை அவன் கையில் சிக்கிண்டு இப்படி ஆயிடுத்து! இந்தப் பசங்களுக்கு வயதாவ தற்குள் கல்யாணத்தைப் பண்ணாவிட்டால் என்னால் உயி ரோடிருக்க முடியுமா? உலகம் காக்கையாய் என்னைக் குத்திக் கொன்று விடாதோ?'

'கல்யாணம் என்றால் விளையாட்டாம்மா?' என்றாள் ஸ்ரீரஞ்சனி.

'இல்லைன்னு உட்கார்ந்துட்டால் பசங்க வாழ்க்கை சாபமாயிடாதா? நான் கண்ணை மூடிட்டால் நீ அவங்களை விட்டுட்டு எந்தக் கிணற்றில் குதிப்பாய்? அவன் மூஞ்சி! சம்பந்தம் பாருன்னு சொன்னால் இப்படியா சொல்லுவான்! அன்றைக்கு கூட அப்படித்தான். ஒரு சம்பந்தம் வாய்த்த போது, 'ஐயோ, மங்களத்தின் பேத்தியா, எங்களுக்கு வேண்டாம்' என்றானாம். நான் என்ன பண்ணிட்டேன்? நான் எனன ராட்சசியா? யாரையாவது பிடித்துத் தின்னுட்டேனா? குழந்தை கல்யாணம் பண்ணனும். பணம் இல்லை. நிஜந்தான். என்னத்தைப் பண்ணுவேன்?'

மேகலா அங்கே வந்தாள். மங்களத்தின் வருத்தத்தை மேகலா புரிந்து கொண்டிருந்தது போல வேறு யாருமே புரிந்துகொண்டிருக்க மாட்டார்களோ, என்னவோ? மங்களத்தின் தலைமேல் கையை வைத்துக் குரல் கம்மச் சொன்னாள்.

'பாட்டி! எங்க கல்யாணத்தைப் பற்றிய யோசனையை விட்டு விடு. குறைந்த பட்சம் என் கல்யாணத்தைப் பற்றிய சங்கதியையாவது! நான் இந்த வீட்டுக்கு ஆண்பிள்ளை என்று நீ எப்பொழுதும் சொல்லுவாயே! நான் ஏதாவது உத்யோகம் பண்ணி மானஸாவின் கல்யாணத்தைப் பண்ணிடறேன். எங்கள் தலையெழுத்து எப்படி இருக்குமோ அப்படி நடக்கும்.

'நீதான் எப்பொழுதும் சொல்லுவாயே, குழந்தைகளை பெற்றுவிட முடியுமே தவிர, தலையெழுத்தைப் பெறமுடியாதுன்னு! அப்படி நினைத்துக் கொண்டு விட்டு விடு. இந்த நிமிஷத்திலேருந்து இந்தக் கல்யாணப் பேச்சையே எடுக்காதே' என்றாள். அக்குரல் நயமாய்ச் சொன்னதோடு மலையத்தனை கம்பீரமும் கொண்டிருந்தது.



ஸ்ரீரஞ்சனி என்னதான் தையல் வேலைகள் பண்ணினாலும் அந்த ஆதாயம் எந்த மூலைக்கும் காணவில்லை. ஸ்ரீரஞ்சனி தாய்க்குத் தெரியாமல் கணவனுக்கு,

'குழந்தைகள் வளர்ந்து விட்டார்கள். என்னை உதறினாலும் பரவாயில்லை; குறைந்த பட்சம் அவர்களுக்காவது ஏதாவது ஒரு வழிகாட்டுங்கள்' என்று வேண்டிக்கொண்டு கடிதம் எழுதினாள்.

'எனக்கு இப்படிப்பட்ட உதவாக்கரை லெட்டர்களை யெல்லாம் எழுதவேண்டாம்! யாரைக் கேட்டு நீ குழந்தைகளைப் பெற்றாய்? நான் குழந்தைகளுக்காக என்றோ, குழந்தைகள் இல்லையே என்றோ ஏங்கி உன்னோடு என் வாழ்க்கையை இணைத்துக் கொள்ளவில்லை.

'அன்றைக்கு நீ கருவுற்றிருப்பதாய் சொன்னபோதே நான் இந்தக் குழந்தைக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று சொன்னேன்.

'நீ என்னை ஏதாவது பிளாக்மெயில் பண்ணி சம்பாதிக்கணும்னு பார்க்கிறாயோ, என்னவோ? நான் நினைத்தால் உன்னை இந்த ஊரிலேயே நிற்க முடியாமல் பண்ணிவிட முடியும். எனக்குக் கோபம் அதிகம் என்று உனக்குத் தெரியும். அனாவசியமாய் என்னைத் தூண்டிவிடாதே ஏதோ இளம் வயதில் உல்லாசமாய் இருப்பது எல்லாரும் பண்ணுகிற காரியந்தான். அதற்காக அவங்களை குடும்பாய்ப் பற்றிக் கொண்டுவிடத் தேவையில்லை. என் வியாபாரம் பெருகிவிட்டது. என் பசங்கள் பெரியவர்களாகி விட்டார்கள். இன்னொரு தடவை எனக்குக் கடிதம் எழுத வேண்டுமென்றோ என்னைச் சந்திக்க வேண்டுமென்றோ முயற்சிக்காதே. இதுதான் என் கடைசி வார்த்தை! என் மரியாதையைக் கெடுக்க எண்ணி யாருடைய தூண்டுதலால் இந்த உபாயத்தைப் பண்ணினாயோ தெரியாது! அது

உனக்கும் உன் பசங்களுக்கும் உயிருக்கே ஆபத்து என் தெரிந்துகொள்!'

ஸ்ரீரஞ்சனி கட்டிலின் சந்தில் அதை மறைத்து வைத்தி தாள். அக் கடிதத்தை ஒரு நாள் எதேச்சையாய்க் கண் விட்ட மேகலா அதை எடுத்துப் படித்தாள்.

படித்து முடித்ததும் அவள் உடம்பிலிருந்த ஒவ்வொ அணுவும் பற்றியெரிந்தது. கண்கள் சிவந்தன. ஆவேச தால் நடுநடுங்கிப் போனாள்!

அவ்விடத்தில் விளக்கைப் போடுவதற்காக வந் மங்களம், சந்தியா இருட்டில் நின்று கொண்டிருந்த பேத் யைப் பார்த்துவிட்டு, 'இதென்னது? ஏன் அப்படி நின்னு டிருக்கிறாய்?' என்றாள்.

'ஒன்றுமில்லை பாட்டி, ஒன்றுமில்லை' என்றா அதற்குள் ஸ்ரீரஞ்சனி அங்கே வந்தாள்.

காய்ந்த சருகைப் போல ஆவேசத்தால் படபடத்து கொண்டிருந்த மேகலா தாயிடம் வந்தாள்.

'அம்மா' என்று கூப்பிட்டாள்.

'என்ன மேகலா?

'எனக்கொரு வாக்குறுதி தா!'

'என்ன?'

'இனி ஒருபோதும் அப்பாவுக்குக் கடிதம் எழு மாட்டேன்னு!'

'மேகா!'

'அம்மா, உண்மையைச் சொல்றேன், நீ அப்பாவுக்கு கடிதம் எழுதினாய்ன்னு தெரிஞ்சால் நான் அந்தச் சுற் வட்டாரத்திலேயே இருக்கமாட்டேன். நீ, நீ அவருக்கு



கடிதம் எழுதினால், என்னைக் கொன்று விட்டதற்குச் சமம். நீ அவருக்குக் கடிதம் எழுதியதாய் தெரிஞ்சால் நான் இருக்கமாட்டேம்மா! என் பிணம் தான் உன் காலடியில் இருக்கும்.'

'மேகா...'

'சாப்பாடு இல்லாவிட்டால் நானும் மானஸாவும் செத்து மடிகிறோம் அம்மா! கல்யாணமாகாவிட்டால் இப்படியே கிழவிகளாகி விடுகிறோம். அதன் மூலமாய் கௌரவமாய் வாழ்கிறோம். அதானே தவிர, தயவு செய்து இப்படி... கையிலிருந்த கடிதத்தைக் காட்டி விட்டு,

'கண்டவங்க கிட்டே எங்களுக்காக யாசிக்காதேம்மா! அவங்களிடம் எங்களுக்கு அவமானம் ஏற்படும்படியாய்ச் செய்யாதே.'

மேகலா திடீரென்று ஃபிட் வந்தவளைப் போல அழத் தொடங்கினாள்.

மேகலாவைப் பிடித்துக் கொள்ள மங்களத்தால் சாத்தியப்படவில்லை. அதற்குள் மானஸா அங்கே வந்தாள் உதவிக்கு.

மேகலாவால் வெகுநேரம் வரை பழைய நிலைக்குத் திரும்ப முடியவில்லை. ஸ்ரீரஞ்சனி தப்புப் பண்ணிவிட்ட வளைப் போல் தலைகுனிந்தபடி உட்கார்ந்திருந்தாள். தன் திருமணத்தைத் தானே பண்ணிக் கொள்வாள் அது முடியாவிட்டால் இப்படியே இருந்து விடுவேன் என்றெண் ணிக்கொண்டு இதயக்கதவை மூடிக்கொண்டுவிட்டிருந்த மேகலாவின் மனதிற்குள் கதவைத் தள்ளிக் கொண்டு எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான் பிரசாத். மேகலாவுக்கு பயமாய் இருந்தது. அக்கதவைத் திறப்பதா வேண்டாமா

என்ற சந்தேகத்தில் இருந்தாள். பிரசாதோடு சிநேகமாய் இருப்பதா கூடாதா என்று எந்த முடிவிற்கும் வரமுடியாத வளாய்த் தடுமாறிக் கொண்டிருந்தாள் மேகலா.

## 13

பிரசாத் மேகலாவின் வாழ்க்கையில் சூறாவளியாய் வந்து சேர்ந்து விட்டான். யோசித்துக் கொள்வதற்கு அவகாசம்கூட இல்லாமல், ஜாக்கிரதையை மேற்கொள்வதற்கு நேரம்கூடத் தராமல், தன் சகஜமான வாக்கு சாதுரியத்தால், அவர்களுடைய சந்தேகங்களைத் தகர்த்தெறிந்து விட்டு நன்மதிப்பைத் தட்டிக் கொண்டுவிட்டான்.

அவன் காரியங்கள் எல்லாம் விநோதமாய் மேகலாவின் இளம் மனதை வசப்படுத்தும்படியாய் இருந்தன. கொஞ்சம் பரிச்சயம் வளர்ந்ததுமே அவன் ஒரு நாள் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்த மேகலாவைப் பார்த்து மங்களத்தைக் கண்டிப்பது போலச் சொன்னான்.

'பாட்டி, நீங்க பெரியவங்க உங்களுக்கு நான் சொல்ல வேண்டிய தேவையில்லைன்னு வையுங்க! மேகலா வயது வந்த பெண்! இப்படி அடிக்கடி வெளியே போயிட்டிருப்பது நன்றாயில்லை. நான்தான் பார்த்துட்டே வரேனே. அந்த வீதியில் மதிக்கத்தக்க பயல்கள் ஒருத்தன்கூட இல்லை. கேலிப்பேச்சுக்களும், பைத்தியக்கார கூவல்களுந்தான் அவங்களுக்குத் தெரிஞ்சவை!

மேகலாவைத் தண்ணீர்ப் பிடிச்சுட்டுவர அனுப்பாதீங்க. தண்ணீர்ப் பிடிச்சுட்டு வருவதற்கு ஒரு ஆளைப் பணம் கொடுத்து அமர்த்திக்குங்க. நீங்கள்ளாம் பணம் இல்லையேன்னு நினைக்காதீங்க. நீங்கள்ளாம் மாதத்தில் ஒரு வாரம் சாப்பிடுவதைத் தவிர்த்துவிட்டாவது அந்தக் காரியத்தைப் பண்ணணும்பேன் நான்'.



என்று சொல்லிவிட்டு அவனே அந்த வீதியில் அவசரமாய் ஒரு ஆளைப் பார்த்து தண்ணீர் பிடித்துக்கொண்டு வருவதற்கு அமர்த்தினான். அவனை அழைத்து வந்து குடத்தைக் கையில் தந்து, 'சாம்பய்யா! இவங்க வீட்டுக்கு எவ்வளவு குடம் தண்ணீர் வேண்டுமோ கொண்டு வந்து ஊற்று. சம்பளம் என்னைக் கேளு. அவங்களைக் கேட்காதே' என்றான்.

'என் அப்பனே! என் கண்ணே!' மங்களம் அன்போடு நெட்டி முறித்தாள்.

ஆமாம். இவ்வளவு நாளாய் எனக்குத் தோணவே யில்லையே! சின்ன வயதிலேருந்து பழக்கப்பட்ட வேலை தானே என்றெண்ணிக் கொண்டுவிட்டேன்' — என்று நினைத்துக்கொண்டாள்.

பிரசாத் போன பிறகு மங்களம் மேகலாவைப் பார்த்து,

'பார்த்தாயா? வரப் போற மனைவிக்காக இதற்குள்ளேயே எவ்வளவு அக்கறை எடுத்துக்கறான் பாரு! நான் சொல்லவில்லையா, அவனுக்கு உன்னை ரொம்பப் பிடித்திருக்குன்னு! என்னிடம் எப்பப் பார்த்தாலும் உன்னைப் பற்றியேதான் கேட்டுட்டிருப்பான். நான் சொன்னால் நீயோ எரிந்து விழுவாய்' என்றாள் மங்களம்.

மேகலா எப்பொழுதும் போல எரிச்சலடையவில்லை. அன்றைக்கு மேகலா குடத்தைத் தூக்கவில்லை. சாம்பய்யாவே தண்ணீர்ப் பிடித்துக்கொண்டு வந்து எல்லாவற்றிலும் நிரப்பி விட்டான். மேகலாவுக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது. பிரசாதின் மேல் விருப்பம் ஏற்பட்டது. அவன் உண்மையிலேயே அவள் சுகத்தைப் பற்றி யோசிக்கிறானா? மேகலாவின் மனதில் கோடையில் தூறும் மழைத் தூறலைப் போல சுகமான ஒரு உணர்ச்சி ஏற்பட்டது.

பிரசாத் காலையில் புறப்படும்போது அறைச் சாவியைத் தந்து விட்டு, டிரான்ஸிஸ்டரைக் கூட மங்களத்திடம் தந்து

விட்டு, 'பொழுது போகாமலிருக்கும் போது மேகலாவைக் கேட்கச் சொல்லுங்கள்' என்றான்.

மங்களம் மகிழ்ந்துப் போய் விட்டாள். பிரசாத் உரிமையோடு வந்து மேகலாவின் மடியில் டிரான்ஸிஸ்டரை வைத்துவிட்டு அதை எப்படி வைக்கவேண்டும் என்று திருப்பிக் காட்டினான். அவன் கைகள் தன்னையறியாமல் மேகலாவின் மார்பைத் தாக்கின! மேகலா விறைப்பானாள்!

பிரசாத் இருந்தது ஒரே ஒரு அறையில். அதைப் பெருக்கவும், தண்ணீர் பிடித்துவைக்கவும் ஒரு வேலைக்காரி பத்துரூபாய் சம்பளம் கேட்டாளாம்! ஒருத்தியை வைத்துக் கொண்டபோது அவள் நான்கு நாட்கள் பண்ணிவிட்டு, வேலையை விட்டு விட்டாளாம்.

மங்களம் இரக்கத்தோடு, 'ஒரே ஒரு அறைக்கு வேலைக்காரி எதுக்குப்பா? நாங்க யாராவது ஒருத்தர் பெருக்கிவிடுகிறோம்! கூஜாவில் தண்ணீர் வேண்டுமென்றால் இங்கேயிருந்து கொண்டு போய் வைத்துடறோம்' என்றாள்.

பிரசாத் ஏறக்குறைய தினந்தோறும் இங்கேயே தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். எப்பொழுதாவது காய்கறிகள், பிரெட், பழங்கள், பூக்கள் வாங்கிவருவான். மங்களம் அவற்றைப் பார்த்து மகிழ்ந்து போய் விடுவாள்! அவன் சாப்பாட்டை ஒரு செலவாய்க் கருதியதில்லை.

'ஆங்! இன்றைக்குச் சாப்பாடு போட்டால், நாளைக்குக் கல்யாணம் ஆயிட்டால் வாழ்நாளெல்லாம் அவன் காசில் நாம்ப சாப்பிடப்போறோம்! அவன் வேற்று மனுஷனா என்ன? மேகலாவுக்கு வரப் போற கணவன்தானே?' என்றெண்ணிக் கொள்வாள்.

பிரசாத் எப்போழுதவது பணம் தருவான். ஒரு மாதம் தந்தால் இன்னொரு மாதம் ஏதோ கஷ்டம்வந்து தாய்கடிதம் போட்டதால், அனுப்பிவிட்டதாய்ச் சொல்லுவான்.



அப்பொழுது அவன் சாப்பிடமாட்டேன் என்று அடம் பிடிப்பான் மங்களம் கெஞ்சுவாள்.

'நம் பந்தம் பணத்தால் ஏற்பட்டதா என்ன?' என்பாள். அவள் அங்குமிங்கும் அலைந்து கடனோ உடனோ வாங்கி வந்து சமைப்பதையே அவனும் சாப்பிட்டு வந்தான்.

பிரசாதுக்கு ஒரு தியேட்டர் முதலாளியை நன்றாய்த் தெரியும் அடிக்கடி அவனுக்கு ஃப்ரீபாஸ் கொடுத்து வருவார். முதலில் எல்லோரையும் கிளம்பச் சொல்லுவான். ஸ்ரீரஞ்சனி வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தால், மங்களம் கண்டிப்பாள், மேகலா கெஞ்சுவாள். அவர்கள் வார்த்தைகளைத் தட்ட முடியாமல் அவளும் வருவாள்.

எல்லோரும் சேர்ந்து போனால் வீதியிலிருப்பவர்கள் விழிப்பிதுங்கப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். எவனாவது விசிலடிக்கப்போனால் பிரசாத் அவனை ஒரு முறைப்பு முறைத்துப் பார்ப்பான். அவன் வாயில் விசில் நின்றுவிடும். மேகலாவுக்கு மிகச் சந்தோஷமாயிருக்கும்.

விவரம் தெரிந்த பிறகு மேகலாவுக்கு வெளியே போனாலும் வீட்டில் இருந்தாலும் முதல் முதலாய் நிச்சிந்தை ஏற்படத் தொடங்கிற்று. வாழ்க்கைக்கு ஆதாரம் கிடைத்து விட்டதாய்த் தோன்றிற்று. புதிய கொழு கொம்பைப் பற்றிக் கொண்டு படரத் தொடங்கிய மனம் என்ற கொடியானது இளந்தளிர்களை விடத் தொடங்கிவிட்டது. கனவுக்கொடி படரத் தொடங்கிற்று. மங்களம் எப்பொழுது பார்த்தாலும் மேகலாவை, 'அதிர்ஷ்டசாலி அதனால்தான் பிரசாதைப் போன்ற புருஷன் கிடைத்திருக்கிறான்' என்று புகழ்ந்து வந்தாள்.

பிரசாத் இப்பொழுதெல்லாம் சினிமா பாஸ் இருவருக்கு மட்டுமே வாங்கி வந்தான். 'சினிமா ரஷ்ஷாய் இருக்கு

அப்புறமாய் தரேன்னார். ஆனால் இந்த இந்தி சினிமா ரொம்ப நன்றாயிருக்காம்' என்பான்.

மங்களம் மேகலாவைப் புறப்படச் சொல்லி அவசரப் படுத்துவாள்.

'நான் தனியாகவா? மானஸா இல்லாமல் என்னால் போக முடியாது' என்பாள் மேகலா.

'எனக்குப் பரீட்சை கிட்டே வரது. நான் படிக்கணும். நீ போ அக்கா' என்பாள் மானஸா.

மேகலா பாதி விருப்பத்தோடும் பாதி விருப்பமில்லாமலும் புறப்படுவாள்.

மேகலாவும் பிரசாதும் பழகுவதற்கு இப்பொழுதெல்லாம் மானஸா கூட ஒத்துழைத்துக் கொண்டிருந்தாள். முதல் முதலில் பிரசாத் வரும்போதெல்லாம் படிப்பையெல்லாம் விட்டுவிட்டு அவனுக்கெதிரே வந்து உட்கார்ந்து கொண்டு வம்புப் பேசவேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்தாள். மங்களம் மானஸா அங்கிருந்து கிளப்பி வேறு வேலைகளை ஏவுவதற்கு அரும்பாடுப்பட வேண்டியிருந்தது. அதை உணர்ந்த மானஸா மங்களத்தின் வார்த்தைகளைப் பொருட்படுத்தாமல் அப்படியே உட்கார்ந்திருப்பாள்.

மங்களம் 'இந்த புத்திக் கெட்டவளுக்கு முன்யோசனையே கிடையாது' என்று நொந்துக் கொண்டே மேகலாவை ஒரு நாள் தனியாய் கூப்பிட்டுட்டுச் சொல்லிவிட்டாள். 'இதப்பார் மாஸனா! ,நீ விவரம் தெரிந்தவள். பிரசாத் மேகலா இருவரும் ஒருத்தர் மேல் இன்னொருத்தர் இஷ்டப்படுகிறார்கள். அவனோ வீட்டிலிருக்கிற நேரமே குறைவு - இருக்கிற கொஞ்ச நேரத்திலாவது நாம்ப அவங்களைத்தனியாய் விட்டுவிடுவோம்' என்றாள்.

'அவன் அக்காவைவிட என்னோடுதான் அதிகமாய் வம்புப் பேசுகிறான்' என்றாள் மானஸா தொய்ந்து போய்விட்ட முகத்துடன்.



மங்களம் லேசுப்பட்டவள் இல்லை. மானஸாவுக்கு பிரசாத் மீது விருப்பம் இருப்பதை உணர்ந்து அந்த விருப்பத்தை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டாள். மானஸாவை இழுத்து அணைத்துக்கொண்டு,

'பாரும்மா, அவள்பெரியவள். உன்னை விட கருப்பு ஒல்லியாய் இருக்கிறாள். உனக்குப் பக்கத்தில் நின்றுகொண்டால் அழகு குறைச்சல்தான். உனக்கென்ன, தங்கவிக்கிரகமாய் இருக்கிறாய்! மகாராணியாக வேண்டியவள். உனக்கு இந்த பிரசாத் என்ன தலையெழுத்து? கலெக்டரைப் போன்ற கணவன் வரணும். அக்காவுக்கும் பிரசாதுக்கும் கல்யாணமாயிட்டால் நம்பக் குடும்பம் தேறிவிடும். அப்ப நான் பிரசாதின் உதவியோடு உனக்காகக் கலெக்டரைத் தேடுவேன். நான் யோசித்துப் பார்க்கலைன்னு நினைச்சுட்டாயா? எல்லாவற்றையும் நன்றாய் யோசித்துப் பார்த்து தான் பிரசாதுக்கு மேகலாவை தீர்மானித்தேன்.

நீ என் பேச்சைக் கேட்டு நன்றாய்ப்படி. நீ கலெக்டர் மனைவியாவாய்னு சாஸ்திரி சொன்னார். உன் ஜாதகத்தில் அப்படி இருக்காம். அதன் லட்சணங்கள் தான் நன்றாய்த் தெரிகிறதே!

அதனால்தான் பிரசாத் நாம் தேடாமலேயே நம்ப வீட்டுக்கு வந்து நம் மேகலாவை விரும்புகிறான்' என்றாள்.

இந்த மந்திரம் மானஸாவிடம் நன்றாய் வேலை செய்தது. கலெக்டருக்கு மனைவியாக வேண்டிய ஜாதகம் தன்னுடையது என்று பாட்டி சொன்னதால், பிரசாத் மேலிருந்த ஆர்வம் குறைந்துவிட்டது. மேகலாவையும் அவனையும் தனியாய் விட்டுவிடத் தொடங்கினாள். அவ்வப்பொழுது மேகலாவிடம் போய் பிரசாதும் அவளும் சினிமாவுக்குப் போயிருந்தபோது என்ன பேசிக்கொண்டார்கள் என்பதைச் சொல்லச் சொல்லி உபத்திரவம் செய்வாள்.

'சீ, போ!' என்பாள் மேகலா லேசான கோபத்துடன்.

'அத்தான் வந்ததும் நான் எப்படியும் போகவேண்டியது தானே?' என்பாள்.

'அத்தானா? அது யாரு?' என்பாள் மேகலா.

'பிரசாத் அத்தான், அக்காள் புருஷன்!'

மேகலா தங்கையின் காதைப் பிடித்து முறுக்குவாள். மானஸா மேகலா ஏதாவது புத்தகம் படித்துக் கொண்டு தனியாய் உட்கார்ந்திருக்கும் போது வந்து கால்களைக் கட்டிக் கொண்டு,— 'அக்கா, எனக்கு என்ன தோணுகிறது தெரியுமா?' என்பாள்.

'சொல்லு!'

மானஸா புத்தகத்தைப் பிடுங்கித் தொலைவில் எறிந்து விட்டு, அக்காவின் கண்களையே கூர்ந்து பார்த்துக் கொண்டு, 'அக்காவின் கல்யாணம் ஆகும். நாங்கள் அக்கா வோடு நல்ல வீட்டுக்கு மாறிவிடுவோம். அங்கே குழந்தைகள் பிறப்பாங்க. நான் அவங்களைத் தூக்கிக் கொண்டு விளையாடுவேன்! நாங்கள் சௌக்கியமாய் இருப்போம்.;

'அப்ப உனக்குக் கல்யாணம் ஆகாத என்ன?'

'ஏன் ஆகாது. எனக்கும் எங்கக்காவும் அத்தானும் சேர்ந்து நல்ல சம்பந்தம் பார்ப்பாங்க. எங்கக்காவும் அத்தானும் மனையில் உட்கார்ந்துக் கொண்டு எனக்குக் கன்யா தானம் பண்ணிக் கல்யாணம் செய்வாங்க. பார்த்தாயா, உன்னைவிட சின்னவளாய்ப் பிறந்ததால் எனக்கு எவ்வளவு அதிர்ஷ்டம் பார்! என் அதிர்ஷ்டம் உனக்கு இல்லை.'

மேகலா கண்கொட்டாமல் மானஸாவையே பார்த்தாள். மானஸாவின் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் முத்துக்களாய் மாறி வர்ன ஜாலங்களுடன் சுந்தரக் கனவு களைத் தோற்றுவித்தன. மானஸாவின் தலையை இழுத்து அணைத்துக் கொண்டாள். அக்கண்களில் கண்ணீர் சுரந்துக்



கொண்டிருந்தது. அவள் நெற்றியில் முத்தமிட்டாள். மேகலா கண்களை மூடிக் கொண்டாள்' உண்மைதான்.

மானஸாவுக்கு அவள் அதே விதமாய்த் திருமணம் செய்து வைப்பாள். அம்மாவையும் பாட்டியையும் எல்லோரையும் சந்தோஷப்படுத்துவாள்.

இப்படிப் பட்ட வார்த்தைகளைப் பேசிவந்ததால் மேகலாவின் மனம் முற்றிலும் குழப்பங்களையும், சந்தேகங்களையும் மறந்துப் போயிற்று. பிரசாத் மீது விருப்பம் ஏற்படத் தொடங்கிற்று.

மங்களத்திற்கு ஜுரம் வந்து எழுந்திருக்க முடியாமல் போனதால், தானே போய் அவன் அறையைப் பெருக்கி விட்டு வரத்தொடங்கினாள். அவன் தாமதமாய் வந்தால் விழித்துக் கொண்டிருந்து சாப்பாடு பரிமாறுவாள். அவள் சாவிக் கொத்தைத் தந்துவிட்டுப் போகும் போது மேகலாவைச் சரேலென்று இழுத்துக் கொண்டு உதட்டில் அழுத்தமாய் முத்தமிட்டு விட்டுப் போவான்.

மேகலா காற்றில் நடுங்கும் இலைச்சரகைப்போல் நடுங்கி விடுவாள். இது தப்போ என்ற பயம்! அந்தப் பயத்தை அமுக்கிவிடும் ஆனந்தம். அவசரப்படுகிறேனா என்ற சந்தேகம் எல்லாம் சேர்ந்து அவள் மனதில் யுத்தம் புரிந்து பய முறுத்தும். கடைசியில் ஆனந்தமே வென்று பயத்தையும் சந்தேகத்தையும் அடக்கிவிடும்.

பிரசாத் மேகலா கோபப்படாததையும், தடுக்காததையும் பார்த்து, மேலும் கொஞ்சம் உரிமையை எடுத்துக் கொள்வான்.

'எனக்கு இதெல்லாம் பிடிக்காது' என்றாள் ஒரு முறை.

'உங்க வீட்டுக்கு வரவேண்டாமா நான்? உனக்குப் பிடிக்காத காரியங்களை நான் செய்யக் கூடாது. வந்தால்

எனக்கென்னவோ இப்படிப் பண்ணணும் என்று இருக்கு. என் உடம்பு உன்னைப் பார்த்ததுமே காந்தத்தால் கவரப்பட்ட ஊசியைப் போல ஆகிவிடுகிறது—' என்பான். மேகலாவால் அவன் வார்தத்துக்குப் பதில் சொல்லமுடியாது.

அவன் போகும்போது திரும்பவும் கேட்டான்.

'நாளைக்கு வரணுமா வேண்டாமா?'

'வாங்க' தடுமாற்றத்துடன் பதிலளித்தாள் மேகலா.

அவ்வார்த்தைகள் அவன் மனதிற்கு அதிக உரிமையை எடுத்துக் கொள்வதற்கு வழிக்காட்டி விட்டாற்போல ஆயிற்று. மேகலா கூடுமானவரையிலும் அவனோடு தனியாக இருப்பதைத் தவிர்த்து வந்தாள். ஆனால் அவள் ஜாக்கிரதைகள் எல்லாம் எதற்கும் பயன்படவில்லை. அவன் மிகச் சாமர்த்தியமாய் நேரத்தை ஏற்படுத்திக் கொள்வான். அவன் மங்களத்தின் வீட்டிற்கு வேளைக்கெட்ட வேளைகளில் அடிக்கடி வருவதையும், மேகலா அவனோடு சேர்ந்து அடிக்கடி சினிமாவுக்குப் போவதையும், அவன் அறைக்கு மேகலா அடிக்கடிபோய் விட்டுவருவதையும் அக்கம்பக்கத்தார் கவனித்துக்கொண்டே தான் இருந்தார்கள். அந்த வீதியில் எதிர் வீட்டில் லட்சுமணனும்பக்கத்து வீட்டில் சடகோபனும் இருந்தார்கள்.

லட்சுமணன் இரண்டு கல்யாணங்கள் பண்ணிக் கொண்டவன். ஆனால் இரண்டுமே நிலைத்து நிற்கவில்லை. மனைவிகள் ஒரு வருடத்திற்குள் இறந்து போய் விட்டார்கள். அதனால் அவனுக்குத் திரும்பவும் கல்யாணம் ஆகவில்லை. உலகம் அவனை நஷ்டஜாதகம் என்றது.

அவனுக்கு உலகத்தின் மேல் மிக ஆத்திரம் இருந்தது. சந்து கிடைத்து விட்டால் போதும் எல்லோரைப் பற்றியும் அவதூறுகளைப் பிரசாரம் பண்ணிக் கொண்டிருப்பான். சடகோபனின் மனைவி ஓடிப்போய் விட்டாள். அவனுக்குப்



பெண்களைக் கண்டாலே வெறுப்பு! அவர்களைப் பற்றி அருவருப்பாய் விவரித்து, அவர்கள் கெட்டவர்கள் என்று நிந்தித்துக் கொண்டிருப்பான்.

இளம் பெண்கள், வயதானவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் இவ்விருவரும் வீதியில் கண்ணில பட்ட எல்லா பெண்களையும் விமர்சித்து, ஏளனம் பண்ணி பழித்துக் கொண்டிருப்பார்கள். இவர்களோடு அந்த வீதியில் வேலை வெட்டி இல்லாமல் சுற்றிக் கொண்டிருக்கும் இன்னும் ஐந்தாறு இளைஞர்கள் பொழுதுபோக்குக்காகச் சேர்ந்து கொண்டார்கள்.

அவர்களுக்குக் காலையில் கண்ணை விழித்தது முதல் மங்களத்தின் வீட்டின் மீதே கண். அந்த வீட்டில் தும்மினாலும் இருமினாலும்கூடப் பெரிய செய்தியாய்ப் பிரசாரமாகிவிடும்.

ஏற்கனவே ஆண் திக்கில்லாத குடும்பம் வேறு அதோடு கூட வயது வந்து மங்களத்தின் இருபேத்திகளைக் கண்டால் அந்த வீதியில் எல்லோருக்குமே இளப்பந்தான்!

அந்த வீட்டிற்குப் புதிதாய் வந்து போய்க்கொண்டிருக்கும் பிரசாதை அவர்கள் ஆயிரம் கண்களோடு துப்பறிந்து செய்திகளை மூட்டைக் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

மங்களம் ஒன்றும் அசடல்ல! ஒரு இளைஞன் தம் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தால் உலகம் பார்த்து என்ன ஊகித்துக் கொள்ளும் என்பதை அறியாதவள் அல்ல! அதனால் குழாயடியிலும், நாராயணன் கடையிலும் பிரசாத் மேகலாவுக்கு வரப்போகும் கணவன் என்றும். அவன் இப்பொழுதே திருமணம் பண்ணிக் கொள்வதாய்ச் சொல்கிறான் என்றும் ஆனால் தான் தான் நல்ல முகூர்த்தம் வரவில்லை என்று தடுத்திருப்பதாகவும் சொல்லத் தொடங்கினாள்.

பிரசாத்தைப் பார்த்தால் பண்ணிக் கொள்ளப் போவது போலதான் இருந்தான் அதனால் அவர்கள் தற்காலிகமாய் மேகலாவைப் பற்றி வியாக்கியானம் பண்ணாமல் நிறுத்திக் கொண்டிருந்தார்கள். வீதியில் வந்தாலும் யாரும் எதுவும் சொல்லாததைப் பார்த்து மேகலாவுக்குப் புதிய வாழ்க்கையை வாழத் தொடங்கினாற்போல் சந்தோஷமாய் இருந்தது.

## 14

பிரசாத் அன்று காலையில் கட்டிலில் உட்கார்ந்துக் கொண்டு மங்களம் தந்த இட்லியைச் சாப்பிட்டுக்கொண்டே 'பாட்டி, உங்களுக்கு ஒரு நல்ல செய்தி' என்றான்.

'சொல்லுப்பா, என்ன?' என்றாள் மங்களம் இட்டிலியின் மீது நெய்யை ஊற்றிக் கொண்டே.

'எனக்கு கோயம்புத்தூரில் பருத்திக் கம்பெனியில் உத்யோகம் கிடைச்சிருக்கு.'

'இப்ப இந்த உத்யோகம் நன்றாய்தானே இருக்கு?' என்றாள் அவள்.'

'இதுவும் ஒரு உத்யோகமா? செருப்புத் தேயும்படியாய் டாக்டருங்களைச் சுற்றிச் சுற்றி வந்துக்கிட்டு! அதனால் ஃபஸ்ட்கிளாஸ் உத்யோகம். கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கலாம். நான் வேலையில் ஜாயின் ஆவதற்கு வியாழக்கிழமை போகிறேன். வீட்டை காலி பண்ணப் போறேன்னு சொல்லிட்டேன்' என்றான்.

ஊறுகாயைக் கொண்டு வருவதற்காகச் சமையலறைக்குப் போன மங்களம் தடுமாற்றத்துடன் கொஞ்ச நேரம் நின்றுவிட்டாள். திரும்பவும் வந்தபோது அவன் சொல்லிக் கொண்டிருந்தான்.



'மொதல்ல எனக்கு இந்த உத்தியோகம் ஆறுமாசத்துக்கு முன்னாடியேவந்திருக்க வேண்டியது. வரலை சும்மா எதுக்கு இருக்கணும்னு தான் இந்த மருந்துபையைக் கையிலெடுத்துக் கிட்டேன். அதான் சொன்னேனே, எங்கப்பா ரொம்பவும் தொண தொணப்பான ஆள். அவருக்கும் எனக்கும் ஒரு நிமிஷம் கூடஒத்துக்காது அவர் மீது ஆதாரப்பட்டுக்கொண்டு இருப்பது எனக்குப் பிடிக்கலை. உங்க தயவால் எனக்கு நல்ல உத்யோகம் கிடைத்து விட்டது. எப்படியோ உங்கள் தயவால் நான் ஒரு குடும்பத்தலைவனாகவும் ஆகிவிட்டால், அப்புறம் என் வாழ்க்கை ஊன்றிவிட்டாற் போலத்தான். எங்கப்பா என்னை எப்பப் பார்த்தாலும் உதவாக்கரை என்று திட்டிட்டேயிப்பார் உத்யோகத்தில் சேர்ந்து கல்யாணம் பண்ணிக்கொண்டு அவருக்கெதிரே போய் நின்று, 'நானா உதவாக்கரை, என்று ஒரு பார்வைபார்க்கவேண்டும்' பிளேட்டைக் கீழே வைத்துவிட்டுக் கர்வமாய் சொன்னான்.

'சொல்லு, சொல்லு, நன்றாய் சொன்னாய். எப்பவும் சம்பாதனை இல்லாமல் இருந்து விடுவாய்னு நினைச்சுட்டார் போலிருக்கு உங்கப்பா! என்னைக் கேட்டால் நீ போகவே கூடாது என்பேன். அவங்களே உன்னிடம் வரனும்.'

'அதுவும் பாயிண்ட்தான்' என்றாள். பிரசாத் உத்யோகம் கிடைத்து விட்டதற்கு மிக உற்சாகமாய் இருந்தான். அவன் அதிகநேரம் உட்கார்த்திருக்கவில்லை. 'நிறைய வேலையிருக்கு' அதென்னவோ இந்த வீதிக்கு வந்து ஆறு மாதம்கூட ஆகலை, எல்லோரும் பரிச்சியமாயிட்டாங்க. அப்புறமாய் வரேன்' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.'

பிரசாதிற்கு வேலை கிடைத்து விட்டதற்கு மங்களத்திற்குச் சந்தோஷமாய் இருந்தது. கடந்த இரண்டு மூன்று வாரங்களாய் கல்யாணப் பேச்சை எடுக்க வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தாள்.

ஒரு மாத காலமாகவே மேகலாவிடம் திருமணம் எப்பொழுது பண்ணிக் கொள்ளப் போகிறான் என்று கேட்கும்படி சொல்லிக் கொண்டேயிருந்தாள். ஒவ்வொரு தடவையும் இருவரும் சேர்ந்து சினிமாவுக்கோ, பார்க்குக்கோ, கோவிலுக்கோ கிளம்பினால் அவனைக் கேட்கச் சொல்லி வற்புறுத்தி அனுப்புவாள்.

எப்படி சம்பாஷணைக்குக் கொண்டு வருவது என்றும் கற்றுத் தந்திருந்தாள். ஆனாலும்; மேகலா இப்பொழுதெல்லாம் அசடாக்கிக் கொண்டிருந்தாள்!

அவர்கள் திரும்பி வந்ததுமே, 'கேட்டாயா? என்ன சொன்னான்?' என்று பரபரப்புடன் கேட்பாள் மேகலா தலையைத் திருப்பிக் கொண்டே 'இல்லை பாட்டி! அந்தப் வரலை' என்பாள் தயக்கத்துடன். மங்களத்திற்குக் கோபம் வந்துவிடும்.

'இதப்பார்! என்னவோ நினைச்சுட்டிருந்தேன். உங்கம்மாவிடம் இருக்கிற அசட்டுத்தனம் உன்னிடமும் பாதி வந்து சேர்ந்துவிட்டது போலிருக்கு! அவ்வளவு தூரம் வாயில்லாவிட்டால் எப்படி? நீ என்னைப்போல புத்திசாலின்னு நினைச்சேன்! நான் உங்க தாத்தா பரிச்சியமான பதினைந்து நாட்களுக்குள் லக்னத்தை வைத்துக் கொள்ளும்படியாய்ச் செய்தேன்! பார்த்தால் உனக்கு அடியோடு என் குணமே வரலைன்னு தோணுது' என்று அலுத்துக்கொள்வாள்.

கடைசியில் நேற்று காலையில் தானே கேட்டுவிட்டாள் காபியைத் தந்துக்கொண்டே, 'கல்யாணம் எப்பப் பண்ணிக்கிறாய்ப்பா?' என்றாள்.

'உங்க ஆசீர்வாதம் எப்பொழுது பலிக்கிறதோ அப்பொழுது! ஒரு உத்யோகத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அது கிடைத்துமே பண்ணிக் கொண்டு விடுவேன்' என்றான் உற்சாகமாய்.



மங்களம 'ஆஹா? அப்படியா?' என்றாள்.

பிறகு மகளிடம்,

'அவன் மனதிலிருக்கிற உத்தேசம் தெரிந்துவிட்டதல்லவா? இனி நாம் அவசரப்படத்தேவையில்லை. நிச்சிந்தையாய் இருக்கலாம். என் ஆசீர்வாதம் எப்பக் கிடைக்கிறதோ அப்பொழுது என்று சொன்னான் இல்லையா? அப்படீன்னால் அதன் அர்த்தம் அதானே? உத்யோகத்தை எதிர்பார்த்துட்டிருக்கானாம். ஆனால் அவனை நாம்ப அவசரப்படுத்தினாற்போல ஏன் நடந்துக்கணும்?' என்றாள்.

'உத்யோகத்துக்கும் கல்யாணத்துக்கும் என்னம்மா சம்பந்தம்?' என்றாள் ஸ்ரீரஞ்சனி.

'எல்லாம் நாம் நினைத்தாற்போலவே நடந்து விடுமா? கொஞ்சம் காத்துட்டிருக்க வேண்டாமா?' என்று மேகலாவை நோக்கித் திரும்பி, கண்களைத் தமாஷாய் உருட்டி விட்டு—

'என் தங்கக்கட்டியை என்னவோன்னு நினைச்சுட்டிருந்தேன். கள்ளி! எல்லாம் தெரியும். அவன் எல்லாவற்றையும் சொல்லி விட்டிருப்பான்.'

'இல்லை பாட்டி, எனக்கு இதெல்லாம் ஒண்ணுமே தெரியாது.' தடுமாறினாள் மேகலா.

'அளக்காதே!' என்று அப்பேச்சை எடுத்தெறிந்துவிட்டாள் மங்களம்.

பிரசாதிற்கு கோயம்புத்தூரில் நல்ல வேலை கிடைத்துவிட்டது என்ற விஷயம் அந்த வீதியில் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. குழாயடியில் எல்லோரும் மங்களத்தைப் பார்த்து, 'உன் பேத்தியின் புருஷனுக்கு நல்ல உத்யோகம் கிடைச்சுடுத்தாமே?' என்று கேட்டார்கள்.

'ஆமாம்' என்றாள் பெருமையாய்.

'பரவாயில்லை. உன் பேத்தி அதிர்ஷ்டசாலிதான்' என்றாள் ஒருத்தி.

'காலம் எப்பொழுதும் ஒரேமாதிரி இருக்காது சாவித்திரி நான் பட்ட கஷ்டங்களைப் பார்த்துக் சிரித்துக் கொள்ளப் போகிற நாள் வரும் எனக்கு.'

'பொண்ணு சாமர்த்தியசாலிதான்! நல்ல புருஷனைத் தான் பிடித்திருக்கிறாள்' என்றாள் இன்னொருத்தி.

'மங்களத்தின் புத்திசாலித் தனம் மட்டும் குறைந்து போயிடுத்தா? பேத்திக்கு எப்படியாப்பட்ட ட்ரைனிங் கொடுத்திருக்கிறாள்!' என்றாள் இன்னொருத்தி. பிரசாத் இப்பொழுதெல்லாம் சாப்பிட வீட்டிற்குச் சரியாய் வரு வதில்லை. கேட்டால் நண்பர்களுடன் சாப்பிட்டு விட்ட தாய்ச் சொன்னான். அவன் நேற்றிரவு சாப்பிட வரவில்லை, காலையிலும்கூடத் தென்படவில்லை. பிற்பகல் அவன் அறைக்குப் போய் மங்களம், 'ராத்திரி சாப்பிட வாப்பா' என்றாள்.

'நான் வருவதற்குள் இருட்டி விடும் பாட்டி' என்றான்.

'அப்படீன்னால் ஒரு காரியம் பண்றேன். நான் மேகலா விடம் கொடுத்தனுப்பி விடுகிறேன்' என்றாள்.

'உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம். நான் அங்கேயே எதையோ சாப்பிட்டு விட்டுவந்து விடுகிறேன்' என்றான்.

'ஐயோ! சிரமம் என்ன இதில்?' என்றாள்.

பிரகாத் வெளியே போகும் மும்முரத்தில் இருந்தான். மங்களம் வீட்டிற்கு வந்து விட்டாள்.

மாலை வந்தது மங்களம் மேகலாவைக் கூப்பிட்டு தலை யை வாரிப் பின்னினாள். கூந்தல் நிறையபூவைவைத்தாள்.

சில்க் பாவாடையும் வெள்ளைச் சட்டையும் தாவணியும் போட்டுக் கொள்ளச் சொன்னாள்.



'இதப்பார்! இது வெட்கப்படக் கூடிய விஷயம் இல்லை.

நாளைக்கு வியாழக்கிழமை அவன் போய் விடப்போகி றான். டிக்கெட் கூட ரிஸர்வ் பண்ணிக் கொண்டு விட்டா. நாம்ப கேட்கலையேன்னு தயங்குகிறான் போலிருக்கு. நாம்ப அவன் எப்பொழுது சொல்கிறேனோ அப்பொழுதே தயாராயிருப்பதாய் சொல்லு. கல்யாணத்தைக் கோவிலிலோ ரிஜிஸ்தர் ஆபிசிலோ அல்லது அவன் இஷ்டபப்படுகிற இடத் தில் பண்ணத் தடையில்லைன்னு சொல்லு. என்னைக் கேட் டால் இப்படிப்பட்ட விஷயங்களைத் தரகர் மூலமாய் இன்றி நாமே சுயமாய் கேட்டால்தான் நன்றாய்த் தெரிஞ்சுக்க முடி யும்! வெட்கப்பட எதுவும் இல்லை.'

மேகலாவுக்குப் போகப் பிடிக்கவில்லை. ஆனால் மங்க ளத்தின் வார்த்தைகள் மந்திரம் போட்டாற்போல இருந்தன. ஒரு சந்தர்ப்பம் தனக்கெதிரே வந்து கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறது. கதவைத் திறப்பதற்குக் கோழைத் தனத்தோடு பின்வாங்கக்கூடாது என்று தோன்றிற்று. அதைப் புரிந்து கொண்டு விட்ட மங்களம்,—' ஏன் இப் படி வேர்த்துக் கொட்டுகிறது, பைத்தியமே. நீ ஏதாவது சோப்புக் கடைக்காரனிடமா போகப் போகிறாய்? உன்னை விரும்புகிறவனண்டை போகிறாய். அவ்வளவு தானே! உன் னைப் பார்த்ததுமே அவனுக்குத் தெரிந்து விடும், நீ வாயைத் திறக்க வேண்டிய அவசியம் கூட இல்லைம்பேன். அவனே சொல்லி விடுவான் போ' என்றாள்.

'போயிட்டுவா அக்கா, என்றாள் மானஸா. மானஸவுக்கு இதையெல்லாம் பார்த்தபோது தமாஷாய் இருந்தது. தனக்கு இந்த மாதிரிய கவலையெல்லாம் வரக்கூடாது என்றெண்ணி னாள் என்றுமில்லாதவாறு அக்கா இன்றைக்கு நடுங்கிக் கொண்டிருப்பதாய்த் தோன்றிற்று. கண்களில் அப்பாவித்த னமும் பயமும் தெரிந்தன. அந்த நேரத்தில் மானஸாவுக்கு அக்காவைப் பார்த்தால் எப்பொழுதும் பார்க்கும் அக்காவாய் இல்லாமல் வேறு அக்காவாய் தோன்றிற்று.

மானஸா மேகலாவிடம் வந்து அவள் கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டுவிட்டு, 'விஷ் யூ குட்லக்! காட் ப்ளெஸ் யூ' என்றாள். ஸ்ரீரஞ்சனி சுவாமிபடத்திற்கு முன்னால் வணங்கினாள்.

மேகலா சாப்பாட்டு கேரியரை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். ராத்திரி வெகுநேரமாகிவிட்டதால் எல்லோரும் படுத்துக் கொண்டு விட்டார்கள். காரியரை எடுத்துக் கொண்டு வீதியைத் தாண்டி பிரசாத் குடியிருந்த வீட்டு பக்கமாய் போய்க் கொண்டிருக்கையில், சடகோபன் பீடியைப் புகைத்துக் கொண்டிருந்தவன் நின்று திண்ணையிலிருந்து இறங்கி நன்றாய் உற்றுப் பார்த்தான்.

மேகலா நிமிர்ந்து நடந்தபடி இந்த உலகத்தையே பொருட்படுத்தாதவளாய் பிரசாத் அறைப்பக்கமாய் வந்தாள்.

# 15

அறைக்குள் எரிந்துகொண்டிந்த விளக்கு வெளிச்சம் ஜன்னல் வழியாய் வெளியே வந்து விழுந்து கொண்டிருந்தது.

மேகலா கதவைத் தட்டினாள். ஒரு நிமிஷங்கழித்து பிரசாத் வந்து கதவைத் திறந்தான். எதிரே நின்று கொண்டிருந்த மேகலாவைப்பார்த்து விட்டு அவன் ஆச்சரியமடைந்தவனாய் நடித்தான்.

'நீயா?' என்றான்.

மேகலா கையிலிருந்த கேரியரைக் காட்டிச் சாப்பாடு எடுத்துட்டு வந்திருக்கேன்' என்றாள்.

பக்கங்களை மடக்காமலும், கிழிக்காமலும் புத்தகத்தை கவனமாக கையாளுங்கள்.



'அட! நான் சாப்பிட்டு விட்டேன்' என்றான் அவன். கேரியரை எடுத்துக் கொண்டு உள்ளே வரப்போன மேகலா நின்று விட்டாள். தடுமாற்றமடைந்தவளாய் பார்த்தாள். இவன்சாப்பிட்டு விட்டானா? அப்படியென்றால் இனிஉள்ளே போகவேண்டிய அவசியந்தான் ஏன்! வீட்டிற்குப் போவதற்காகத் திரும்பப் போனவள் திரும்பவும் தடுமாற்றத்துடன் நின்றுவிட்டாள்.

'ஏதாவது சொல்லணுமா?' என்றான் அவன். மேகலா மௌனம் வகித்தாள்.

'உள்ளே வா!' என்றான்.

மேகலா உள்ளே வந்தாள்' சாதாரணமாய் இருந்தால் மேகலா பேசத் தடுமாறமாட்டாள். எந்த விஷயத்தைப் பேச வேண்டுமென்றாலும் பயமில்லாமல் பார்த்தபடியே பேசுவாள் ஆனாள். இன்றைக்கு ஏனோ வார்த்தைகளை வாயிலிருந்து வராமல் ஊமையாகி விட்டாள்.

'உட்கார்!' என்றான் அவன்.

மேகலா அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டாள். அங்கே கட்டிலின் மேல் பெட்டி திறந்து வைக்கப்பட்டிருந்தது, பிரசாத் துணிகளை அடுக்கிவைத்துக் கொண்டிருந்தவன் அப்படியே வந்திருந்தான் போலிருந்தது. திரும்பவும் போய் அடுக்கிவைக்கத் தொடங்கினான்.

மேகலா எதுவும் பேசவில்லை. அவனும் ஒன்றும் கேட்கவில்லை. அவ்வறையில் இருவருக்குமிடையே ஒருசங்கடமான நிசப்தம் ஏற்பட்டது. அவளைக் கேள்விகள் கேட்கவேண்டும் என்றும், ஏதாவது பேசவேண்டும் என்று உற்சாகம் எதுவும் இல்லாதவனைப்போல தன் வேலையைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். கடைசியில் மேகலாவே தன் தொண்டையை செருமிக்கொண்டு கேட்டாள்.

'ஊருக்குப் போறீங்களா?'

'ஆமாம்!'

'திரும்பவும் எப்ப வருவீங்க?'

'என்னவோ தெரியாது. ஆனாலும் திரும்பி வரத்துக்கு எனக்கு இங்கே என்ன காரியம் இருக்கு?!

மேகலா நிசப்தமாய் இருந்துவிட்டாள். அவன் உடைகளை அடுக்கி வைத்துக் கொண்டே— படுக்கையைக் கட்டிக் கொண்டே மேகலாவை ஓரக்கண்ணால் கூர்ந்து கவனித்துக் கொண்டே இருந்தான். மேகலா ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

'அடடா! அதற்குள் டைம் பத்தரைமணியாகிவிட்டதே அவன் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னான் அக்குரலில் நேரம் ரொம்ப ஆயிடுத்து என்று எடுத்துச் சொன்னாற் போலிருந்தது.

மேகலா திடுக்கிட்டவளாய் சரேலென்றுஎழுந்திருந்தாள் போகத்திரும்பினாள். திரும்பவும் நின்றாள். அவன் அவள் பட்டுக்கொண்டிருந்த இந்த அவஸ்தையைப் பார்த்துக் கொண்டேதான். இருந்தான் ஆனால் தனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது போல பேசாமலிருந்தான். குறைந்த பட்டம்' என்ன?' என்று கூடக் கேட்கவில்லை.

மேகலா தைரியத்தைக் கூட்டிக்கொண்டவளாய் சட்டென்று திரும்பினாள்.

அப்படீன்னால் நீங்க திரும்பி இங்கேவரமாட்டீங்களா?'

'ஊஹூம், வரமாட்டேன்!' தலையாட்டினான்.

'அப்படீன்னால்... வந்து ... வந்து ... நம்ப கல்யாணம் எப்போன்னு பாட்டி கேட்கச் சொன்னாங்க.'

'கல்யாணமா?' அவன் அதிர்ந்தாற்போல நடித்தான்.



'கல்யாணமா?' திரும்பவும் கேட்டான்.

'நம் இருவருக்கும் கல்யாணமா?' ஆள்காட்டி விரலைக் காட்டிக் கேட்டான்.

'ஆமாம்' என்று தலையாட்டினாள்.

அடப் பாவி!, அவன் திடீரென்று பெரிதாய்ச் சிரிக்கத் தொடங்கினான்.

'நம்மிருவருக்கும் கல்யாணமா? உங்க பாட்டி கேட்கச் சொன்னாளா? அதற்காகவா நீ இவ்வளவு நேரமாய் இப்படி மென்று விழுங்கிக் கொண்டே உட்கார்ந்திருந்தாய்? நான் அப்பவே நினைச்சேன், இதென்னது புலி பூனையைப் போல உட்கார்ந்திருக்கேன்னு! உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு நான் என்றைக்காவது சொல்லியிருக்கேனோ?'

அவன் உலுக்கி எடுத்தாற்போலக் கேட்டான்.

மேகலா விறைப்பானாள். கண்கள் அகல விரிந்தன.

'உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு என்னால் வாழ முடியுமா? என்னை என் வீட்டார் வீட்டு வாசலை மிதிக்க விடுவாங்களா! ஆஹா, ஒன்றும் நினைச்சுக்காதே! மங்களத்தின் பேத்தியாய் உனக்கு இந்த வீதியில் இருக்கிற பேரையும் புகழையும் அறியாதவங்க யார்? நான் ஒருநாளும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னதே இல்லையே? நீங்களாவே உங்களுக்குள் அப்படி நினைத்துக் கொண்டிருந்தால் அதற்கு நானா பொறுப்பாளி?' அவன் திரும்பவும் சிரித்தான்.

'கல்யாணம் பண்ணிக்கிறதுன்னால் ஏதோ விளையாட்டின்னு நினைச்சுட்டிருக்காயா?' அவன் மேகலாவிடம் வந்தான்.

'எதைப் பார்த்து உன்னைக் கல்யாணம் பண்ணிப்பது உன் குடும்ப மானத்தையும் புகழையும் பார்த்தா? குடும்ப மானத்தைப் பார்க்கப் போனால் உங்கம்மா புருஷன் இல்லாமலேயே உன்னைப் பெற்றாள். உண்மையைச் சொல்லு உனக்கு அப்பான்னு ஒருத்தர் இருக்காரா? அழகைப் பார்க்கப் போனால் இந்த கருப்பு நிறத்தை, இந்த ஒல்லியான உடம்பை என்னால் எப்படிப் பண்ணிக்க முடியும்?

'எனக்குப் பெண் என்றால் துலுக்கச் சாமந்திப்பூவைப் போல குண்டாய் இருக்கணும். உடம்பு கொய்யாப்பழத்தைப் போல இருக்கணும்! நான் கல்யாணம் பண்ணிக்கிட்டால் ராஜாவைப்போல மிடுக்காய், கர்வமாய் வெளியே நடந்து போகணும். உன்னைப் போய் மனைவியாகவா? அதற்கப்புறம் என்னால் உயிரோடிருக்கத்தான் முடியுமா? கல்யாணமாம் கல்யாணம்! ஒரு தடவை தொட்டபோது எனக்கு இதெல்லாம் பிடிக்காதுன்னு சொன்னாய் இல்லையா?'

பிரசாத் பழிப்பது போலச் சொன்னான்.

அவன் முகத்தில் ஆவேசம் வந்தது.

'நாலு நாள் உங்க வீட்டைச் சுற்றி வந்துட்டதற்காகத் தாலியைக் கட்டச் சொல்றதா? போகட்டும் பாவம், ஏழைகளாச்சேன்னு உதவி பண்ணினேன். எனக்கும் இங்கே தெரிஞ்சவங்க யாரும் இல்லையேன்னு சிநேகமாய் இருந்தேன். அதற்காக உன்னைக் கல்யாணம் பண்ணிப்பேன்னு எப்படி எண்ணிட்டாய்? நான் உனக்குப் பிடிச்சுட்டால் போதுமா? எனக்கு உன்னைப் பிடிக்க வேண்டாமா? போ, போய் உங்க பாட்டியிடம் அந்த பிரசாத் நம் வலையில் விழவில்லை. வேறு யாருக்காகவாவது வடையைத் தட்டி ரெடியாய் வெச்சுக்கிட்டு காத்துட்டிருக்கச் சொல்லு ரெண்டு வடையைப் போட்டு ஒரு வேளை சாப்பாட்டைப் போட்டு விட்டு. பேத்திக்குப் புருஷனை சம்பாதித்துக் கொண்டு விடலாம்னு உங்க பாட்டி நினைச்சுட்டாள் போலிருக்கு!'



அவன் மேகலாவை ஏறயிறங்கப் பார்த்தான்.

'ஓஹோ! இதற்காகவா? இதைக் கேட்பதற்காகவா இந்த வேஷத்தைப் போட்டுக் கொண்டு வந்திருக்கிறாய்? இந்த ஜடை, பூ எல்லாம்...'

அவன் திரும்பவும் சிரித்தான்.

'நான் அப்பவே நினைச்சேன். ஏதோ தந்திரம் இருக்கும்னு! பார், நான் உன் வலையில் விழவில்லை. எல்லோரும் என்னைப் போல இருக்கமாட்டாங்க. இப்படியே நீயும் உங்க பாட்டியும் கல்யாணமாகாத இளைஞர்களைப்பார்த்து முயற்சிப்பண்ணிட்டேயிருங்க. என்றைக்காவது ஏதாவது ஒரு அப்பாவிப் பறவை உங்கக் கையில் சிக்கிக்கொள்ளும். அந்தப் பறவையை நீ புருஷனாக்கிக்கிட்டு உலகத்தையே ஆண்டுவிடலாம்!'

மேகலா அவனை ஓங்கி அடித்தாள். ஒன்றல்ல! ஒரு கையால் அல்ல. இரண்டு கைகளாலும் மாறி மாறி அறைந்தாள். மேகலாவின் மனதில் எரிமலைக் குழம்பாய்ப் பொங்கி வெளிவந்த ஆத்திரத்தை யெல்லாம் கைகளில் வரவழைத்துக் கொண்டு பலமாய் அடித்தாள். ஓரிடத்தில் இல்லை, கன்னங்களில் அடித்தாள். தலைமயிரைப் பற்றிக்கொண்டு இழுத்து அறைந்தாள். கழுத்தை நெரித்தாள். தலையால் ஓங்கி குத்தினாள். அந்த நிமிஷத்தில் மேகலா அத்து மீறிவிட்ட வன விலங்கைப் போல இருந்தாள்.

சற்றும் எதிர் பாராத இந்த எதிர்ப்பிற்குப் பிரசாத் திக்கித்துப் போய் விட்டான். ஒரு நிமிஷத்திற்கு முன்னால் மேகலாவைப் பார்த்துச் சிரித்த அவன் பற்கள் கழன்று விழுந்தாற் போல் ஆக, முகம் வீங்கிவிட்டது.

கேலியாய் பார்த்த கண்கள் வலியெடுத்தன. மேகலாவின் கையில் அவன் கேசங்கள் குருவிக் கூடாகி விட்டது. ஒரு நிமிஷத்திற்கு முன்னால் மிடுக்காய் பார்த்தபடி இளப்பமாய் பேசிய அவன், இப்பொழுது உயிரை உள்ளங்கையில் ஏந்திக் கொண்டு மேகலாவைத் தொலைவில் பிடித்துத் தள்ளிவிட்டு, தானும் தொலைவில் போய் நின்றான்.

மேகலாவுக்கு ஒரு வினாடி உடம்பில் சொரணை வந்தாற் போலயிற்று. மேகலாவின் தலைகூட கலைந்து போயிருந்தது. புடவை மேலாக்கு கிழிந்து கந்தலாய் தொங்கிக் கொண்டிருந்தது. கசங்கிய பூவைப் போலிருந்தாள்.

மேகலா சரேலென்று திரும்பினாள். அறையிலிருந்து வெளியே வந்து தூக்கத்தில் நடப்பவனைப் போல வீடு வந்து சேர்ந்தாள்.

அரை மணிக்கு முன்னால் கூந்தல் நிறைய பூக்களோடு புறப்பட்டுப்போன மேகலா, பிரசாத் அறையிலிருந்து விடுவிடென்று வந்து விட்டதை லட்சுமணன் பார்த்துக் கொண்டேயிருந்தான். அவன் அதற்குள் சடகோபனைக் கூப்பிட்டு நிறுத்தி வைத்திருந்தான். மளமளவென்று போய்க் கொண்டிருந்த மேகலாவைப் பார்த்து மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டே,

'அடேயப்பா, பார்த்தாயா! பார்த்தாயா? பொம்பிள்ளை எவ்வளவு கொழுப்புப் பிடிச்சி அலைகிறாள் பார்! இன்னும் பத்துமணி கூட ஆகலை. நாமெல்லாம் இன்னும் தூங்கக்கூடவில்லை. பயம் கியம் இல்லாமல் அவன் அறைக்குப் போயிட்டு எப்படி வருது பார்!'

'அவங்களுக்குப் பயம் ஏது? மானம் மரியாதை இருக்கிறவங்களுக்குத்தான் பயம், சங்கோஜம் எல்லாம் இவங்களுக்கு ஏது? வெட்கத்தை விட்டுவிட்டுத் திரிகிற ஜென்மங்கள்!'



'அந்த பிரசாதுக்காவது புத்தி இருக்க வேண்டாம்?'

'அவனுக்கென்ன? ஆம்பிள்ளை! புரம்மச்சாரி!'

'என்னவோ, கலிகாலம்!' என்றான் லட்சுமணன் வேதாந்தியைப்போல்.

மேகலா தடாலென்று கதவைத் திறந்து கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள். எதிரேவந்த மங்களம் அதிர்ந்து போய் விட்டாள்.

'ஐயோ? என்னது? என்னவாச்சு?' என்றாள் கலவரத்தோடு.

மேகலா கண்கள் சிவக்கப் பார்த்தாள்.

'என்னவா? இனி என்றாவது என் கல்யாணத் பற்றிப் பேச்செடுத்தால் உன்னைக் கொன்று போட்டுவிடுவேன். அதைப் பற்றியே பேசாதே!'

உள்ளங்கையை மடக்கிக்கொண்டே சொல்லிவிட்டுச், சரேலென்று அறைக்குள் போய் கட்டிலில் விழுந்து தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள்.

ஃபிட் வந்தவளைப் போல அழுது கொண்டே யிருந்த மேகலாவைத் தேற்ற அவர்களுக்கு வெகு நேரம் பிடித்தது. நடந்ததையெல்லாம் மேகலா மூலமாய்க் கேட்ட மங்களம் அதிர்ந்து விட்டாள்.

'என்ன? அப்படிச் சொன்னானா? விடியட்டும், அவனை ஒரு கை பார்த்துடறேன். நாலு பேரைக் கூப்பிட்டு மண்ணைக் கவ்வ வைக்கிறேன். இந்த மங்களத்தை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறான்?' என்றாள்.

விடிந்தது. மங்களம் பிரசாதின் அறைக்குப் போனாள். அவ்வறை வாசலில் 'அறை வாடகைக்கு விடப்படும்' என்ற போர்டு தொங்கிக் கொண்டிருந்தது.

பிரசாத் நேற்றிரவே அறையை காலிபண்ணி விட்டுச் சாவியைத் தந்துவிட்டுப் போய் விட்டானாம் மங்களம் தளர்ந்த நடையுடன் வீட்டிற்குத் திரும்பி வந்தாள். அவளுக்கு இடுப்பு உடைந்துவிட்டாற் போலிருந்தது.

# 16

ஊருக்குப் போன பிரசாத் திரும்பவும் கண்ணில் படாமல் மாயமாகி விடவில்லை. பத்து நாட்கள் ஆனதுமே திரும்பி வந்தான். இம்முறை அவ்வீதியில் பரிச்சியமான ஒவ்வொருத்தர் வீட்டிற்கும் போய் விசாரித்தான். கொண்டு வந்திருந்த அழைப்பிதழை எல்லோருக்கும் தந்தான்.

'என் கல்யாணத்துக்கு நீங்கள் எல்லோரும் கண்டிப்பாய் வரணும். கல்யாணம் நடக்கப் போகிற இடம்கூட இங்கிருந்து தொலைவில் இல்லை. பக்கத்து மெயின் பஜாரிலுள்ள சத்திரத்தில் தான்! நீங்கள் கண்டிப்பாய் வரணும்' என்று வரவேற்றான்.

பெண் இண்டர் பாசாகியிருந்தாளாம். தாசில்தாரின் மகளாம். அவரே அவனுக்கு உத்யோகம் கிடைக்கும்படி செய்தாராம். இருபத்தைந்தாயிரம் வரதட்சணையாம். ஸ்கூட்டராம். அவள் ஒரே பெண்ணாம். அவர் இருந்து வந்த வீடு அவருக்குப் பிறகு இவர்களுக்குத்தானாம்.

அவன் சொல்லிக் கொண்டிருந்த கல்யாணச் சமாச்சாரத்தை எல்லோரும் ஆவலாய் கேட்டுக்கொண்டிருந்தார்கள்! லட்சுமணன் கேட்டு விட்டான்.

'அப்ப அந்த மங்களத்தம்மா அப்படிச் சொன்னாங்களே, அதென்ன? நீ மேகலாவைப் பண்ணிக்கிறேன்னாயாமே! நாளைக்கோ நாளன்றைக்கோ கல்யாணம் என்றாளே!'



'அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க. அதென்னவோ அழைப்பிதழைத் தரலாம்னு யார் வீட்டுப்படியேறினாலும் இதே பேச்சுத்தான். என் மூளையே குழம்பிப் போயிடுத்துன்னால் நம்புங்க! எனக்குப் பின்னாடி அவங்க என்ன பிரசாரம் பண்றாங்களோ தெரியாது எனக்கு. நான் மட்டும் அவங்களுக்கு எந்த வாக்குறுதியும் தரவில்லை. எந்த ஆசையும் கடுகளவுகூட காட்டவில்லை நான்.

'நான் முதலிலிருந்தே இந்தச் சம்பந்தம் எனக்கு இருப்பதாய்ச் சொல்லிட்டே யிருந்தேன் அவங்களிடம். நான் என்னவோ அவங்களும் எங்க குலந்தானேன்னு எண்ணிக்கிட்டு அவங்களுக்குச் சாப்பாட்டுக்குக் கஷ்டமாயிருக்குமே. கொஞ்சம் பண உதவி பண்ணினாற்போலிருக்கும்னு நினைச்சு அவங்க வீட்டில் சாப்பிட்டேனே தவிர, ராம ராம என் மனதில் அப்படிப்பட்ட எண்ணம் இல்லவே இல்லை.

'பொம்பிள்ளைங்களாச்சே உதவி பண்ணலாம்னு செய்தால் அவங்க என் தலையில் இதைக் கட்டிடணும்னு பார்த்தாங்க. அந்தக் கிழவியைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா, என்ன? ரொம்ப அழுத்தக்காரி! ஒரு பேத்தியை மட்டுமே யில்லை, ரெண்டு பேரையுமே என் தலையில் கட்டிடப் பார்த்தாள் 'அக்கா தங்கைங்க ரெண்டு பேரும் சேர்ந்து ஒருத்தனைக் கட்டிக்கிட்டால் தப்பில்லை பான்னு என்னிடம் நூறு தடவை சொல்லியிருப்பாள்! நாளைக்கு என் பொண்ணுக்குப் புருஷன் இல்லைப்பா, நீயே கொஞ்சம் பார்த்துக்கோன்னு சொன்னாலும் சொல்லுவாள்னு நினைக்கிறேன்!'

பிரசாத் சொன்னதைக் கேட்டு அங்கிருந்தவர்கள் எல்லோரும் அட்டகாசமாய்ச் சிரித்தார்கள். அவர்களுக்கு பிரசாத் சொன்ன விஷயங்கள் மிக உற்சாகமாகவும், வினோதமாகவும் இருந்தன. மங்களம் மேகலாவைத் தன் மீது எப்படி ஏவிவிட்டாள் என்பதை வருணித்து வருணித்துச் சொன்னான்.

'என் வேலைக்காரியை நிறுத்திட்டாங்க. என் அறையை அவங்க சொந்த அறையைப் போல் பார்த்துப்பாங்க. என் ரேடியோவை எடுத்து தம்முடைய சொத்தைப் போல வைத்துப்பாங்க. சினிமாவுக்கு அழைச்சுட்டுப் போகச் சொல்லி மேகலா குழைந்துக் குழைந்து கேட்கும் போது என்னால் மறுக்க முடியாமல் போயிடும். வீட்டிற்குப் போய்விட்டால் போதும், அந்தப்பொண்ணு வந்து கிட்டவே உட்கார்ந்துட்டிருக்கும். சாப்பாட்டைப் பரிமாறிக்கிட்டே மேலே வந்து விழும். சில சமயம் கல்யாணம் பண்ணிக் கொண்டு விடலாமான்னு தோணும். ஆனால் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு விடுவேன்.

'நான் அவங்க யமபாசத்தில் விழுந்திருக்க வேண்டியவன் தான். ஆனால் அதிர்ஷ்டவசமாய் தப்பிச்சுட்டேன்னு வையுங்க. வேறென்னங்க? இந்தக் காலத்தில் எவ்வளவு பேர் ஆம்பிள்ளைங்களை இப்படி வலைப் போட்டுச் சிக்க வைத்துட்டு, பெற்றோர்களை விட்டுப் பிரிச்சுடறாங்க நல்ல வேளை! என் வாழ்க்கை படுகுழியில் விழுந்து விடவில்லை. எங்க குடும்பம் ரொம்ப மதிப்பான குடும்பம்! நான் எங்கேயாவது இந்த மாதிரி ஆகாவெட்டிக் காரியங்களைப் பண்ணினேன்னு தெரிஞ்சால் எங்கப்பா என் காலை உடைத்து அடுப்பில் போட்டு விடுவார். அந்தப் பயந்தான் என்னைக் காப்பாற்றிற்றுன்னு வையுங்க. நீங்க கல்யாணத்துக்கு மட்டும் வர மறந்துடாதீங்க' என்று திரும்பத் திரும்பச் சொல்லி விட்டுப் போய் விட்டான்.

பிரசாத் வந்து அழைப்பிதழைத் தந்துவிட்டு இவ்வாறு சொல்லி விட்டுப் போனதால், அந்த வீதியில் மேகலாவைப் பற்றி பெரியவதந்தி பரவத் தொடங்கிற்று. பிரசாத் மங்களத்தின் வீட்டுப் பக்கம் போகவில்லை.

அவன் அவ்வாறு ஊதிய விஷக்காற்று கொஞ்சங் கொஞ்சமாய் மேகலாவின் வாழ்க்கையில் சூறாவளியாய் வந்து சேர்ந்து விட்டது.



மங்களத்தால் அந்த வீதியில் தலையைத் தூக்கவும் முடியவில்லை. மங்களம் தலைகுனிந்தபடி வந்து கொண்டிருந்தாலும் சரி, யாராவது ஒருத்தர் நிறுத்தி, 'என்ன மங்கம்மா! அந்த பிரசாத் உங்க மேகலாவின் புருஷன்தான்னு சொன்னாயே! அவன் இப்பொழுது இன்னொரு கல்யாணம் பண்ணிக்கப் போறானாமே'? என்று கேட்டால் மங்களம் ...ரியத்தை வரவழைத்துக் கொண்டு,

ஆமாம்மா, நம்பிக்கைத் தந்து மோசம் பண்ணிட்டான். இந்தக் காலத்துப் பசங்களே அப்படித்தான்! நான் படுகுழியில் விழுந்துட்டேன்! உனக்கும் பெண் குழந்தைங்கள் இருக்கிறாங்க. நீயாவது கொஞ்சம் புத்திசாலித்தனமாய் நடந்துக்கோள்' என்பாள்.

கேட்க வந்தவள் இந்தப் பதிலைக் கேட்டு முகத்தைத் ...தாங்கப் போட்டுக்கொள்வாள்.

பிரசாத், மங்கம்மா மேகலாவை இரையாய் வைத்துத் தன்னை வலையில் போட்டுக் கொள்ள தீட்டிய உபாயங்களைப் பற்றிச் சொன்ன சில சம்பவங்கள் பலர் வாயில்புகுந்து ...று தினுசாய் பிரசாரமாயின; அந்த வீதியில் யாரைப் பார்த்தாலும் இதே வம்பு

ஏற்கனவே மங்களத்தின் குடும்பம் என்றால் அந்த வீதியில் பெரியவர்கள் சின்னவர்கள் என்றில்லாமல் எல்லோருக்கும் இளப்பந்தான். ஆண் திக்கில்லாத குடும்பம்! அதோடு ...வன் இல்லாமல் குழந்தைகளைப் பெற்ற ஸ்ரீரஞ்சனி! ...ர்ந்த பெண்களைக் கூட இப்பொழுது இந்த பிரசாத் ...றித்து விட்டுப் போய்விட்டான். அதனால் அக் குடும்பம் இன்னும் இளப்பமாகிவிட்டது.

ஐயோ இப்படியாகி விட்டதே! என்று யாரும் வருந்தவும் இல்லை; மங்களத்தின் மீதோ மேகலாவின் மீதோ இரக்கம் காட்டவும் இல்லை. தப்புப் பண்ணிய பிரசாதை யாரும் கண்டிக்கவும் இல்லை. அவன் மேகலாவை மோசம் பண்ணி

விட்டான் என்றும், அவன் அயோக்கியன் என்றும் எல்லோ ருக்கும் தெரியும். ஆனாலும் சரி, அவர்களுக்கு ஆனந்த மாய் இருந்தது. மேகலாவின் திமிர் அடங்கி விட்டது என்ற குரூர திருப்தி அது.

விடிவதற்குள் மங்களத்தின் வீட்டுச் சுவர்களிலெல்லாம் மேகலாவைப் பற்றிய அசிங்கமான வார்த்தைகள் ஏறிவிட் டன! மங்ளம் எழுதியவர்களைத் திட்டித் தீர்த்துச்சாபமிட்டு விட்டு, சாணியைக் கொண்டு வந்து அதன்மேல் அப்பினாள். வீதியில் மங்களம் போனால் சிறுவர்கள் பின்னால் தொடர்ந்து சென்று கேலி பண்ணுவார்கள். மங்களத்தின் வீட்டிற்குத் தண்ணீர் பிடித்துக் கொண்டு வரும் வேலைக் காரன்கூட.

'நான் இனி, தண்ணீர் கொண்டுவந்து ஊற்றமாட்டேன். இதென்ன குடும்பம்! இப்படிப்பட்டவங்களுக்குத் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றினால் என் பேரோடு கூட ஏதாவது ஓட்டிக் கொண்டுவிடும்' என்று சொல்லி நின்றுவிட்டான்.

மங்களத்திற்கு இடுப்புவலி அதிகமாயிருந்ததால் மேகலாவே ஒரு முறை தவலையைத் தூக்கிக் கொண்டு போனாள். வீதியிலிருந்தவர்கள் வேட்டை நாயாய் துரத்திக் கொண்டு போனார்கள்.

'ராணி அவர்கள் திரும்பவும் தண்ணீர்த் தவலையைத் தூக்கிக் கொண்டு கிளம்பி விட்டார்களே!' என்று ஒருத்தன் சொல்ல, 'பாவம், கல்யாணம் ஆயிடுத்துன்னு இறுமாப்பாய் இருந்து வந்தது. அவன் இவங்களை விட சாமர்த்தியசாலி' என்று இன்னொருத்தன்.

'இப்ப கர்ப்பமாய்த்தான் இருக்கும்' என்று இன்னொருத் தன் சொன்னான். ஒவ்வொருத்தனும் ஒன்றைச் சொன்ன போது எஞ்சியவர்கள் விழுந்து சிரிக்கத் தொடங்கி னார்கள்.



மேகலா எதுவும் பேசவில்லை. அக்கண்களில் ஆவேசம் இல்லை. செம்மை இல்லை. உதட்டில் அவசரம் இல்லை.

மேகலா வீட்டிற்கு வந்தாள். அதற்குள் வீட்டிற்கு வந் திருந்த மானஸா புத்தகங்களை மேஜை மேல் விட்டெறிந்து விட்டு, அழுதுகொண்டே சொன்னாள்.

"பாட்டி! நான் இனி டுட்டோரியல் காலேஜுக்குப் போகமாட்டேன். நான் வந்துட்டிருக்கும்போது கூந்தலைப் பிடித்து இழுத்தாங்க. 'உங்க அத்தான் எங்கே?' என்று கேட்கிறாங்க. ரங்கய்யனின் மகன் எனக்குக் குறுக்கே வந்து நின்று 'என்னாமே! எனனோடு வரயா? உன்னைக்கல்யாணம் கட்டிக்கிறேன்' என்றான்'' என்றாள்.

'சீ! பாழும் வாழ்க்கை! இதை விட சாவதே மேல்! எல்லோரும் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறாங்க.'

மானஸா முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு அழுதுகொண்டே முறையிட்டாள்.

மேகலா கண்ணீர்த் திரையிட்ட கண்களுடன் பார்த்தாள். நிலைப்படிக்கருகில் நின்று கொண்டிருந்த நிரஞ்சனி,

'அம்மா! அவங்களுக்குக் கல்யாணம் ஆகாது. கல்யா ணப் பேச்சையே எடுக்க வேண்டாம்' என்று சொன்னால் கேட்டாயா? இதப் பார்! இப்பொழுது பார்! நம்முடைய வாழ்க்கை முன்னைவிட அத்வானமாகி விட்டது' என்று நிரஞ்சனி அழத் தொடங்கினாள்.

'நான் என்ன வேண்டாத காரியத்தைப் பண்ணிட் டேம்மா? கல்யாணம் பண்ணிப்பான்னு நினைச்சேன். நம்ம வயிற்றைக் காயப் போட்டு விட்டு, அவன் பாரத்தைச் சுமந் துக்கொண்டிருந்தோம். இப்படி பண்ணுவான்னு நினைக்க லை' என்றாள் திகிலோடு.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, மேகலாவை நான்கு நாட்கள் எங்கேயாவது அனுப்பிவைத்தால் நல்லது! அவள் இங்கே இருந்தால் இவர்கள் எல்லோரும் குத்திப் பேசும் மொழிகளால் பைத்தியக்காரியாகி விடுவாள் என்றெண்ணிக் கொண்டாள் மங்களம்.

'எங்கே அனுப்பிவைக்க முடியும்? யார் இருக்காங்க நமக்கு? என்றாள் ஸ்ரீரஞ்சனி திகிலோடு.

கடந்த இரண்டு நாட்களாகவே அவர்கள் மேகலாவை கவனித்து வந்தார்கள். சாப்பிடுவதை விட்டுவிட்டாள். வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். மேகலாவைப் பார்த்தால் மங்களத்தின் உயிர் துடிதுடிக்கத் தொடங்கிற்று. ராத்திரி வேளையில் இரண்டு மூன்று தடவை வீட்டின் மேல் கல் வந்து விழுந்தது. லட்சுமணன் குடித்து விட்டு மேகலாவைப் பற்றி அசிங்கமாய்ப் பேசிக்கொண்டிருந்தான். மேகலா கேட்டுக் கொண்டே படுத்திருந்தாள். அந்த அவமானத்தை மென்று விழுங்கிக் கொண்டே செய்வதறியாமல் இருந்தாள். மானஸா— 'எனக்கு பயம்மாய் இருக்கும்மா' என்று நடுங்கிப் போய் அம்மாவிற்கருகில் ஒதுங்கிப் படுத்துக் கொண்டாள்.

மங்களம் பலராமனிடம் போய்விட்டுவந்தாள். நான்கு நாட்கள் அங்கே விட்டுவைத்திருந்தால் மேகலா பழையபடி ஆகலாமோ என்னவோ என்று ஆசைப்பட்டாள் அவள்.

மங்களம் திரும்பி வந்ததுமே ஸ்ரீரஞ்சனி பரபரப்புடன்,

'பலராம் அண்ணா என்ன சொன்னான் அம்மா! மேகலாவை அனுப்புச் சொன்னானா?' என்று கேட்டாள் ஆர்வத்தோடு.

'இல்லைம்மா! அவங்களுக்கு இந்த விஷயமெல்லாம் தெரிஞ்சு விட்டதாம். நான் சொன்ன எதையுமே காதில் போட்டுக்காமல் கண்டபடி திட்டித் தீர்த்தாங்க. நான்



நடந்து கொள்கிற விதமே முட்டாள்தனந்தானாம். அவனுக்கு இந்த விஷயத்தையெல்லாம் யாரோ சொன்னாங்களாம். அப்படியிருந்தும் வாயைத் திறந்து இதுதான் நடந்ததுன்னு சொன்னேன். அவன் மச்சினன் லீவுக்கு வரப்போகிறானாம். முடியாது என்று மூஞ்சியில் அறைந்தாற்போல சொல்லி விட்டான். என்னைத் திரும்பவும் அவன் வீட்டுப் படியேற வேண்டாம் என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டன்.'

ஸ்ரீரஞ்சனி, 'கடவுளே! எனக்கு வழியே இல்லையா?' என்று புடவைத் தலைப்பை வாயில் அடக்கிக் கொண்டு அழத் தொடங்கினாள்.

'நீ அங்கே ஏன் போனாய் பாட்டி?' என்றாள் மேகலா அவளைக் கடுமையாய் பார்த்தபடியே. எப்பொழுது அங்கு வந்தாளோ தெரியாது; கதவிற்கருகில் வந்து நின்றுகொண்டிருந்தாள். சமையலறையில் மெல்லிய முரலில் பேசிக்கொண்டிருந்த மங்களமும் ஸ்ரீரஞ்சனியும் திகைத்துப் போய் விட்டார்கள்,

மேகலா ஹீனஸ்வரத்தில் சொன்னாள்: 'நான் எங்கேயும் போகமாட்டேன். என் உயிர் போகிற வரைக்கும் இங்கேயேதான் இருப்பேன். நீங்கள் என்னை எங்கேயாவது அனுப்பி வைத்துடணும்னு பார்க்காதீங்க. என்றாள். அடுத்த நிமிஷம் மடைதிறந்தாற்போல அழுகை வந்து விட்டது. மங்களம் எழுந்து வந்து தேற்றப் போனாள். மேகலா அவளை வேகமாய்த் தள்ளிவிட்டு அங்கிருந்து போய்விட்டாள்.

நள்ளிரவு ஆயிற்று. மேகலா கட்டிலில் உட்கார்ந்திருந்தாள்!- மங்களம் பக்கத்தில் குறட்டை விட்டபடி தூங்கிக் கொண்டிருந்தாள். இன்னொரு கட்டிலில் தாய் படுத்துக் கொண்டிருந்தாள். தூக்கத்தில் கூட அவள் புருவங்கள் நெளிந்து வேதனைமயமாய் இருந்தது. மானஸா தாயிடம்

ஒதுங்கிப் படுத்துக் கொண்டிருந்தாள். அடிக்கடி தூக்கத்தி திடுக்கிட்டுப் போய் பயப்பட்டாற்போல் தாயிடம் ஒண்டி கொண்டாள். மேகலா யோசிக்கத் தொடங்கினாள்.

'நான் செய்த தப்பு என்ன? பாட்டி என்னை பிரசாதி குத் தந்து மணம் முடிக்க நினைத்தாள். அது நடக்கவில்லை பிரசாதிற்கு இஷ்டம் இல்லாவிட்டால், எனக்குச் சொல்லி யிருந்தால் போயிருக்குமே! அவன் என்னிடம் ஒருவிதமா நடந்துகொண்டு வெளியே இன்னொரு விதமாய் பொ சொன்னான். உலகம் அவன் வார்த்தைகளையே நம்பிற்று.

'பிரசாத் போய் விட்டாலும் அக்குரலும் அச் சிரிப்பு மேகலாவை விட்டுப் போகவில்லை. ஒருக்கால் வாழ்நா பூராவும் அது போகாதோ என்னவோ? அவன் சிரித்தா பழித்தான்! ஏளனம் பண்ணினான். எதைப் பார்த் உன்னைக் கல்யாணம் பண்ணிப்பேன்? மரியாதையையா மானத்தையா? அழகையா? மானத்தைப் பார்க்கப் போனா உங்கம்மா புருஷன் இல்லாமல் உன்னைப் பெற்றா அழகைப் பார்க்கப்போனால் கருப்பு நிறம். இந்த ஒல்லியா உடம்பைப் பண்ணிக்கொண்டு நான் என்ன பண்ணுவேன்!

அவன் சிரிப்பு விகாரமாய் மேகலாவின் செவிகளி எதிரொலித்துக் கொண்டிருந்தது. இரு கைகளாலு பொத்திக்கொண்டபோது இன்னும் உரக்கக் கேட்ட அச்சிரிப்பு.

மேகலாவின் உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டன உதடுகள் நடுங்கின. அவள் பார்வை தீனமாய் இருந்தது அவன் மறுத்து விட்ட அவமானத்தை விட, அவனைக் கவ வேண்டும் என்று அவள் பட்ட தவிப்பாய் அச்சம்பவங்க மாறி விகாரமாய் நினைவிற்று வந்து வெட்கத்தால் செத்து போய் விடலாம்போல செய்து கொண்டிருந் தன.

அவளுக்கு மிஞ்சியது என்ன? அவமானம்! ஏளனம் பழிப்பு! பிரசாத் அவளைப் பார்த்துச் சிரித்துவிட்டுப்போயு



உலகம் மட்டும் வாழ்நாள் பூராவும் சிரித்துப் பழித்துக் கொண்டேதான் இருக்கும். அவள் இனி உயிரோடிருக்கும் வரை இந்த வீதியில் இவர்கள் எல்லோரும் சிரிக்கும்படி யாய் வாழ்ந்து தீர வேண்டும் போலும்!

முதல் முதலாய் மேகலாவுக்கு அதைரியம் ஏற்பட்டது. இனி எவ்வளவு நாளும் உயிரோடிருக்கப் போகிறாளோ அவ்வளவு நாளும் இதே கதி தானா? காலையில் எழுந்ததினி ருந்தே சிரிப்பும் ஏளனமுந்தான்! மேகலாவுக்கு அவற்றை எதிர்த்து நிற்கசக்தி இல்லை என்று தோன்றிற்று. வாழ்க்கை மீது முதல் முதலாய் விரக்தி ஏற்பட்டது.

சீ! இதுவும் ஒரு வாழ்வா!

மேகலாகட்டிலைவிட்டு எழுந்திருந்தாள். மாடப்பிறைக் கருகில் போனாள். அங்கே தூக்கம் வருவதற்காகத் தாய்க்கு பிரசாத் தந்திருந்த தூக்க மாத்திரை சீசா இருந்தது. மேகலா அந்தச் சீசாவை எடுத்து மாத்திரைகளைக் கையில் நிரப்பிக் கொண்டாள். தண்ணீர் சொம்பைக் கையிலெடுத் துக் கொண்டு ஒவ்வொன்றாய் விழுங்கிவிட்டாள்.

பிரசாத் திருமணத்திற்கு மறுத்துவிட்டுப் போனாலும், சுகமாய் கவலையில்லாமல் செத்துப் போவதற்கு வழிகாட்டி விட்டுப் போயிருக்கிறான்.

மேகலா வந்து கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள். பத்து நாட்களாய் தூக்கமேயில்லை. மேகலா திரும்பவும் எழுந்திருந்தாள். மானஸாவின் நோட்டு புத்தகத்தை எடுத் தாள். அதிலிருந்து ஒரு காகிதத்தைக் கிழித்து இவ்வாறு எழுதினாள்.

'பாட்டி! அம்மா! மானஸா!

'எனக்கு உயிரோடு இருக்கப்பிடிக்கவில்லை. உங்களிடம் சொல்லாமல் கொள்ளாமல் இந்தக் காரியம் பண்ணி விட் டேனே என்று திட்டாதீர்கள். எனக்கு இதுதான் சரியான

வழியாய்த் தோன்றுகிறது. எந்த மனிதனாயிருந்தா... உயிரோடிருந்தால் சுகமாய், கௌரவமாய் வாழவேண்... அது கிடைக்காவிட்டால், அந்த மனிதன் உயிரோடிரு... கூடாது. இது என் நம்பிக்கை. எனக்குப் பயமாய் இல்... சந்தோஷமாய் இருக்கிறது. சுகமாய் இருக்கிறது. நா... சுகப்பட்டு விட்டதாய் நீங்கள் எண்ணிக் கொண்டு மற... போய் விடுங்கள். உங்கள் — மேகா.'

மேகலா அக்கடித்தைத் தாயின் தலையணைக்குக் கீ... வைத்தாள். கண்களில் தூக்கம் அலை அலையாய் வ... கொண்டிருந்தது. மேகலாவுக்கு சுகமாய் இருந்தது. எவ்வள... நாளாயிற்று சுகமாய்த் தூங்கி! தூக்கம் வராதவர்களு... தான் அதன் சுகம் புரியும்! மேகலா வந்து பாட்டியி... படுக்கையில் உட்கார்ந்துகொண்டாள் என்ன தூக்... என்ன தூக்கம்! கண்கள் செருகிக்கொண்டு போயின!

பாட்டியின்மேல் சாய்ந்தாற் போல படுத்துக் கொ... டாள்! உயிர் பறந்து போய்க் கொண்டிருந்தது சுகமா... கண்களுக்கு முன்னாடி கருப்பு வளையங்கள்! இருட்... வளையங்கள்! தூக்கம் என்பது இருட்டுக் குகை போலு... எங்கே போய்க் கொண்டிருக்கிறாள் அவள்! யாரிட... யருடைய இதயக் கதவைத் தட்டுவதற்கு? மேகலாவி... இமைகள் நன்றாய் மூடிக்கொண்டுவிட்டன.

## 17

மேகலாவுக்குக் காற்றில் தொங்கிக் கொண்டிருந்தா... போலிருந்தது. பிடி கிடைக்கவில்லை. ஏதோயுத்தம் நிகழ்ந்... கொண்டிருந்தது. யாருடன்? எதற்காக? அவள் இவ்வள... சேர்ந்து போய் விட்டாளே ஏன்? எங்கேயோ ஏதே சப்த... கள் கேட்டன. வாசனைகள் நெடியைப் போல வந்துகொண்... டிருந்தன. ஆனால் அவை என்ன வென்று தெரியவில்லை.



...அவளுக்கு எழுந்திருக்க வேண்டும் போலிருந்தது. பெரிய ...கல் வந்துகொண்டிருந்தது. தீவிரமான வெள்ளத்தைப் ...பால அழுகை வந்தது. வயிற்றில் ஏதோ உபாதை! வயிற் ...றைப் பிசைந்தெடுத்தாற்போல — நரம்புகளை முறுக்கினாற் ...போல — வாந்தி வருவதுபோல! என்னவாகி விட்டது அவளுக்கு? ஏன் இந்த அவஸ்தை! ஏதோ கைக்குத் தட்டுப் ...பட்டது. மேகலா தடவினாற்போல அதைப் பிடித்துக் ...கொண்டாள். மெதுவாய்க் கண்களைத் திறந்தாள்.

'எப்படி இருக்கு?' யாரோ கேட்டார்கள். அக்குரல் ...தான் எவ்வளவு பரிவாய் இருந்தது? எவ்வளவு கலக்கத்தோடு இருந்தது!

விழிப்பு வந்துடுத்தா?' திரும்பவும் கேட்டது அக்குரல்.

யாருடையது இந்த ஆண்குரல்? அப்பாவா? அப்பா அவளை அடிக்க வந்துவிட்டாரோ? அல்லது பலராமன் ...மாமாவா? மாமாவாயிருந்தால் திட்டுவார்! இவர்கள் எல்லோரும் எப்பொழுது பார்த்தாலும் மானம் மரியாதை என்றே சொல்லிக் கொண்டிருப்பார்களே! இவர்களுக்கு ...மனிதர்கள் தேவையில்லை. தன்னால் எழுந்திருக்க முடியவில்லையே, ஏன் மேகலா அழத்தொடங்கினாள். 'உஷ்! சும் ...மாயிரு' யாரோ தலையில் கையை வைத்துத்தேற்றினார்கள். அந்த ஸ்பரிசம் எவ்வளவு நன்றாய் இருக்கிறது! எங்கேயோ ...பறந்து போய்க் கொண்டிருந்த உயிரைப் பிடித்து இழுத்துக் ...கொண்டிருந்தாற்போல இருந்தது.

மேகலாவுக்கு இப்பொழுது நன்றாய் விழிப்பு வந்து ...விட்டது வெள்ளை ஆகாயத்திலிருந்து பெரிய பாம்பு ...தொங்கிக் கொண்டிருந்தது. மேகலா பயத்துடன் அதையே ...பார்த்துக் கொண்டிருந்தாள்.

'நன்றாய் விழிப்பு வந்துடுத்தா?'மேலே குனிந்து யாரோ ...கேட்கிறார்கள்.

சோர்வுடன் வந்துவிட்டது என்று தலையாட்டினாள்.

மேகலாவுக்குப் பார்வை தெளிவாய் நின்ற பிறகு கண்ணுக்குத் தென்பட்டது ஆகாயம் இல்லைஎன்றும் டாக்டரின் வெள்ளைக் கோட்டு என்றும், பாம்பு தொங்கிக் கொண்டிருந்தாற் போலத் தென்பட்டது. ஸ்டெதாஸ்கோப் என்றும் புரிந்தது.

'உன் பேரென்ன?' அவர் மேகலாவின் கையைப்பிடித்து நாடியைப் பரிசோதித்துக் கொண்டே கேட்டார்.

''மேகலா''

''வாட் எ ப்யூட்டிபுல் நேம் ! உங்கம்மா பேர்?''

''ரஞ்சனி !''

''தங்கை பேர் !''

''மானஸா!''

''வெரி குட்'' கட்டில் மேல் உடகார்ந்திருந்த அவன் சொன்னான்.

யார் இவன்? எங்கேயோ பார்த்தாற்போலிருக்கே! ஆனால் ஞாபகம் வரமாட்டேங்கிறதே!

மேகலா யோசித்துக் கொண்டிருந்தபோதே அவன் மேகலாவின் தோளைப் பிடித்து எழுப்பி உட்கார வைத்தான்.

திடீரென்று எழுந்திருந்ததால் மேகலாவுக்குச் சட்டென்று தலை கிர்ரென்று சுற்றினாற்போலிருந்தது.

வீலென்று கத்திவிட்டாள். அவன் பிடித்துக்கொள்வதற்குள்ளாகவே மேகலா கீரையாய்த் துவண்டு அவன்மேல் சாய்ந்துவிட்டாள். அவன் தன் தோளை முட்டுக் கொடுத்து மேகலாவைப் பிடித்துக் கொண்டான். மேகலாவின் தலை



அவன் தோளின் மேல் படிந்து ஒரு வினாடி ஓய்வேடுத்துக் கொண்ட பிறகு திரும்பவும் பழையபடியே ஆயிற்று.

''என்னவாச்சு?'' அவன் அவள் தோளில் ஸ்டெதாஸ்கோப்பை வைத்து பிரிசோதித்துக் கொண்டே கேட்டான்.

''தலை சுற்றுகிறது'' கண்களை மூடிக் கொண்டே சொன்னாள்.

''இப்ப?'' கொஞ்சம் பொறுத்துக் கேட்டான்.

''குறைந்துடுத்து.'' பலவீனமாய்ப் பதில் வந்தது. அவன் மேகலாவின் தோளைப் பற்றி பின்னுக்குச் சாய்த்துத் தலையணை மீது படுக்க வைத்தான்.

'நான் யார் தெரியுமா?'

மேகலா தெரியும் என்று தலையாட்டினாள்.

'யார்?'

'பாக்கிய லட்சுமி அம்மாவின் மகன். டாக்டர் கிருஷ்ணராஜ்' பலவீனமாய் வந்தது குரல்.

'வெரிகுட்! யு ஆர் பெர்ஃபெக்ட்லி ஆல் ரைட்' என்று திரும்பி, அந்த பக்கமாய்ப் பார்த்து, 'வாங்க, இனி நீங்க பேசலாம்' என்றான்.

மங்களம், ஸ்ரீரஞ்சனி, மானஸா கிட்டே வந்தார்கள்.

மங்களம் கிட்டே வந்தாள். 'பாட்டி!' தீனமாய்ப் பார்த்தாள்.

'ஏம்மா இவ்வளவு மோசமான காரியத்தைப் பண்ணினாய்?' மங்களம் சொல்லிக் கொண்டிருந்தபோது அவன் 'உஷ்' என்றான்.

'உடம்பு எப்படி இருக்கு?' மங்களம் உடனே சிரித்த முகத்துடன் கேட்டாள்.

ஸ்ரீரஞ்சனி கிட்டே வந்தாள். கிருஷ்ணராஜ் அதற்குள் எழுந்து போய் விட்டிருந்தான். அவன் பக்கத்து கட்டிலிலிருந்த பேஷன்ட்டைப் பார்க்கப் போய்விட்டான்.

ஸ்ரீரஞ்சனி கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

'அம்மா!' — பாசத்தோடு கூப்பிட்டாள்.

'மேகா!' ஸ்ரீரஞ்சனி அதற்குமேல் ஒன்றும் பேசமுடியாதவளாய் முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு அழத் தொடங்கினாள்.

'உஷ், சும்மாயிரு, டாக்டர் திட்டுவார்' என்றாள் மங்களம்.

'எப்படி இருக்கு அக்கா?' மானஸா கிட்டே வந்து தலைமேல் கையை வைத்துக் கேட்டாள்.

நன்றாய்த்தான் இருக்கு. ரொம்ப பலவீனமாய் இருக்கு, எனக்கென்ன ஆச்சு? நான் எதுக்கு ஆசுபத்திரியில் இருக்கேன்?' தீனமாய்க் கேட்டாள்.

'உடம்பு சரியாயில்லைம்மா! சமயத்துக்கு கிருஷ்ணராஜ் எவ்வளவு உதவி பண்ணினான் தெரியுமா?' என்றாள் மங்களம்.

'கிருஷ்ண்ராஜ் யாரு?'

'டாக்டர்! நம்ப பாக்கியலட்சுமியின் மகன். பாவம் அவள் கூட ரொம்ப உதவினாள். நேற்றெல்லாம் எங்களோடேயே இருந்து தைரியம் சொன்னாள். வீட்டிலிருந்து வேலைக்காரன் மூலமாய் காபி அனுப்பினாள்.'

'உஷ், பாட்டி, இது ஆசுபத்திரி! கொஞ்சம் மெல்லப் பேசு' என்றாள் மானஸா. மேகலாவுக்குத் திரும்பவும் தூக்கம் வந்து விட்டது. அன்று பிற்பகலில் மேகலாவுக்கு நன்றாய் விழிப்பு வந்து விட்டது. கையில் பொருத்தியிருந்த க்ளுகோசை எடுத்து விட்டார்கள்.



மேகலாவுக்கு நினைவிற்கு வந்தது. அன்று இரவு தான் தாய் போட்டுக் கொள்ளும் தூக்கமாத்திரைகளை விழுங்கி விட்டாள். பிறகு தூக்கம் வந்துவிட்டது. அதற்குப் பிறகு என்னவாயிற்றென்று மங்களத்தின் முலமாய்த் தெரிந்தது. மறுநாள் காலையில் கடிதத்தைப் பார்த்தார்களாம். மேகலாவை எழுப்பினால் எழுந்திருக்க வில்லையாம் மங்களத்திற்கு என்ன பண்ணுவதென்றே தெரியவில்லையாம். தெருக் கோடியிலிருந்த டாக்டர் ஊரில் இல்லை. மார்பில் அடித்துக் கொண்டே பாக்கியலட்சுமியின் வீட்டிற்கு ஓடினாள். சமயத்திற்கு கிருஷ்ணராஜ் வீட்டிலேயே இருந்தானாம்.

அவன் ஆசுபத்திரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். மங்களத்துடன் வந்தான். மேகலாவைப் பரிசோதித்து விட்டு உடனே போய் டாக்ஸியைக் கூட்டி வந்தான். வீடு முழுவதும் ஜனங்கள் கூடி விட்டார்கள். கிருஷ்ணராஜ் நான்கு மணி நேரத்திற்குப் பிறகு மேகலாவுக்கு ஆபத்து இல்லை என்றும் பயப்பட வேண்டாம் என்றும் சொன்னான்.

மங்களம், ஸ்ரீரஞ்சனி, மானஸா மூவரும் உள்ளேவந்தார்கள். மேகலா ஆசுபத்திரி கட்டிலில் மூக்கில் ட்யூபுடன் உடம்பில் நினைவில்லாமல் படுத்துக் கிடந்தாள். என்னென்னவோ கத்திக் கொண்டிருந்தாள்! அடிக்கடி கிருஷ்ணராஜ் வந்து கையைப் பிடித்து நாடியைப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

மங்களமோ, ஸ்ரீரஞ்சனியோ, மானஸாவோ ஆஸ்பத்திரிகளை இதற்கு முன்னால் பார்த்ததில்லை. அந்தக் கட்டில்களையும், நோயாளிகளையும், மேகலா படுத்துக் கிடந்த விதத்தையும் பார்த்துப் பீதியடைந்து விட்டார்கள்,

விஸிட்டர்களின் அறைக்குள் உட்கார்ந்து கொண்டிருந்த அவர்களிடம் பாக்கியலட்சுமி வந்தாள். மேகலாவைப் பற்றிக் கேட்டாள். கிட்டே போய் பார்த்தாள்.

'நீ எதுக்கும்மா வந்தாய்?' என்றான் அவன்.

'என் உயிர் அங்கே தரிக்காமல் வந்துட்டேண்டா! அந்தப் பொண்ணு பிழைக்கணுமேன்னு சுவாமிக்கு வேண்டிக்கொண்டேன். நீ ஆசுபத்திரியிலிருந்து ஒரு மணிக்கு வந்து சொல்ற வரைக்கும் என்னால் தாங்கிகிட்டிருக்க முடியலைடா.' அவள் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் வழிந்தது.

அவன் தாயின் தோளைச் சுற்றிலும் கையைப் போட்டு கிட்டே இழுத்துக் கொண்டான். 'மம்மீ' அவன் கண்கள்கூட வேதனையாய் இருந்தன. தாயை அந்தச் சமயத்தில் அவன் சின்னப் பெண்ணைத் தேற்றினாற்போலத் தேற்றிக் கொண்டிருந்தான். பிறகு அங்கிருந்த பையனோடு ஆட்டோவில் அனுப்பி வைத்துவிட்டான்.

அவள் அப் பையன் மூலமாய் அவர்களுக்குக் காபி, பலகாரம் கொடுத்தனுப்பினாள். என்றுமே யாருடைய அன்பையும் உணர்ந்திராத மங்களம் இந்த அன்பிற்கு உருகிப் போய்விட்டாள்.

'அவள் உண்மையிலேயே தெய்வந்தான் மேகா! இவ்வளவு நல்லவளை நான் கண்டதேயில்லை' என்றாள் மங்களம்.

மேகலா கேட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். அவள் இந்த வாழ்க்கை மேல் வெறுப்பும் விரக்தியும் ஏற்பட்டு வாழ்க்கையை முடித்துக் கொள்ளத் தீர்மானித்தாள். ஆனால் கிருஷ்ணராஜ் அவள் முயற்சியைப் பலிக்காமல் தடுத்துவிட்டான். அவன் உயிரைக் காப்பாற்றிவிட்டான்.



மிக உயர்ந்த காரியத்தைப் பண்ணிவிட்டோம் என்று கர்வப் பட்டுக் கொண்டிருக்கிறான் போலும்! இந்த வாழ்க்கையை ஆபத்திலிருந்து மீட்டுக் கொள்வது எளிதுதான். ஆனால் அதை தினந்தோறும் காப்பாற்றிக் கொள்வது எவ்வளவு கஷ்டம்! அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்குத் தனக்கு யார் உதவி பண்ணப் போகிறார்கள்?

மேகலா மௌனமாய் படுத்துக் கொண்டிருந்தாள். உடம்பில் அணுவளவு சக்தி கூட இல்லாதது போல பலவீனமாய் இருந்தது. தற்கொலை முயற்சி தோற்றுவிட்டதால் உலகம் தன்னைப் பார்த்து இன்னும் சிரிக்கும்! ஏளனம் பண்ணும்! இனி இரண்டுமடங்கு தாங்கிக் கொள்ள வேண்டும் போலும்! அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. இந்த கிருஷ்ணராஜ் எங்கிருந்து வந்து சேர்ந்தான் அவள் உயிருக்கு? மேகலாவுக்கு மிகக் கோபமாய் இருந்தது.

மங்களம் மேகலாவுக்கு பிரெட் துண்டுகளைப் பாலில் தோய்த்துக் கொடுத்துக் கொண்டே சொன்னாள். 'பார்த்தாயா மேகா! அந்தப் புன்னம்மாவின் வாய் அழுகிப் போகணும்! எல்லோரிடமும் போய் என்ன சொல்கிறாள் தெரியுமா?'

'என்ன சொல்கிறாள் பாட்டி?'

அதற்குள் மானஸா மங்களத்தை அழுத்தமாய்க் கிள்ளினாள். 'உன்னை டாக்டர் பேசக்கூடாதுன்னு சொல்லலை?' என்றாள்.

மங்களத்திற்கு அந்த குறிப்புப் புரிந்து விட்டது.

'நிஜந்தாம்மா' என்று வாயை மூடிக் கொண்டாள்.

# 18

இரண்டு நாட்கள் கழிந்தன.

மேகலா நன்றாய்க் குணமடைந்துவிட்டாள். மங்கள வீட்டிலிருந்து கொண்டு வந்த ரசம் சாதத்தைச் சாப்பி டாள். எழுந்து நடக்கக்கூடிய சக்தியும் நன்றாகவே வந் விட்டது. அன்று காலையில் அவளை டிஸ்சார்ஜ் பண்ண விட்டார்கள்.

வீட்டிற்கு புறப்பட்டுக் கொண்டிருக்கையில் மங்கள புடவைத் தலைப்பில் முடிந்துகொண்டிருந்த நூறு ரூபா தாளை எடுத்து மேகலாவின் கையில் வைத்துவிட்டு,

'உன் கல்யாணம் ஆனால் திருப்பதி மலைக்கு வரேன்னு முடிஞ்சு வைத்திருந்தேன். அது இந்த வழியில் உபயோக பட்டுவிட்டது. கல்யாணம் ஆசிவிட்டதுங்கிற நன்றியோ அந்த ஏழுமலையானுக்குத் தருவதைவிட உயிரை காப்பாற்றியதற்கு இந்தக் கடவுளுக்கு சமர்ப்பித்துக் கொ கிறேன். பார், நம் எல்லோருடைய சருமத்தையும் வெட்டி தந்தாலும்கூட அந்த டாக்டரின் நன்றிக்கடனைத் தீர்த் விட முடியாது.

'அதொன்றும் சர்க்கார் ஆசுபத்திரி கூட இல்லை, ஏ எளியவங்களைப் பார்ப்பதற்கு. மருந்துக்கும் மாசத்திற்கு அந்தப் பையனேதான் செலவழித்தான். அவன் காலி விழுந்து கும்பிடுவதைத் தவிர, நம்மால் வேறென்ன பண்ண முடியும்? இந்த நூறுரூபாயை அந்த டாக்டர் கையி வைத்துவிட்டு, கும்பிடு போட்டுட்டு, எங்களுக்கு இதை தவிர வேறு சக்தி யில்லைன்னு சொல்லும்மா' என்றாள்.



'நீ போய்க் கொடு பாட்டி' என்றாள் மேகலா.

'அழகாயிருக்கும்மா, உனக்கு உயிரைக் கொடுத்தவன்! நீ தினந்தோறும் கண் விழித்ததுமே அந்த டாக்டர் பேரைச் சொல்லிட்டுக் கும்பிடவேண்டும். நான் சொல்ல வேண்டி யதை யெல்லாம் அந்த டாக்டரிடம் காலையிலேயே சொல்லிட்டேன்.

'நீங்கள் ரொம்பவும் ஆகாசத்தில் ஏற்றி வைக்கிறீங்க. டாக்டராய் என் கடமையை நான் பண்ணினேன் பாட்டி! அவ்வளவுதான்' என்றான்.

'என்ன வினயம்! என்ன வினயம்! நிறை குடம் ததும் பாதுங்கிறாங்களே, அது இதைத்தான் போலும்! அந்தத் தாய்க்குத் தகுந்த மகன்தான்! பெரிய கைதான்! இதை நான் ஒருத்திதான் என்றில்லை, அந்த டாக்டரின் கைப்பட்ட ஒவ்வொரு நோயாளியுமே அப்படிச் சொன்னதை நானே பார்த்தேன். போ, போயிட்டுவரேன்னு சொல்லிட்டு அவர் காலில் விழுந்து கும்பிட்டுவிட்டு வா' என்றாள் மங்களம்.

மேகலா மங்களத்தின் பலவந்தத்தால் டாக்டர் கிருஷ்ண ராஜின் அறைக்குப் பக்கத்தில் போய் நின்றாள். மேகலா வந்தபோது கதவு சாத்தியிருந்தது. கதவை விரல்களால் தட்டினாள். 'கமின்' உரக்கக் கேட்டது. மேகலா கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனாள்.

உள்ளே கிருஷ்ணராஜ் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுக்கெதிரே ஒரு வயதான ஆள் உட்கார்ந்திருந்தார். அவர் இரட்டை நாடியாய்இருந்தார். கிருஷ்ணராஜ் அவருக்கு மருந்துகளை எழுதித் தந்து கொண்டிருந்தான். கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்த மேகலா, உள்ளே யாரோ இருந்ததால் கதவிற்கருகிலேயே தயக்கத்துடன் நின்றுவிட் டாள். அதைப் பார்த்து விட்டு அவன், 'கமின்' என்றான். மேகலா உள்ளே வந்தாள். அவன் ப்ரிஸ்க்ரிப்ஷன் எழுதிக்

கொண்டே மேகலாவை அவனுக்கெதிரே இருந்த நாற்காலியில் உட்காரச் சொல்லி சைகை காட்டினான்.

மேகலா வந்து உட்கார்ந்து கொண்டாள். அவன் எழுதிக் கொண்டிருந்தான். மேகலா அவ்வறையைப் பரிசோதித்தாள். எதிரே சுவரில் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்த தாயின் கேலெண்டர் இருந்தது. அவ்வாறு பால் கொடுத்துக் கொண்டிருந்த பெண்ணின் கண்களில் தான் எவ்வளவு தன்மயமான உணர்ச்சி! அவள் பண்ணிக் கொண்டிருந்த காரியத்தில் ஒரு புனிதம் தென்பட்டது சுவரில் இன்னொரு பக்கத்தில், கல்யாணப் பல்லக்கைச் சுமந்துப் போய்க் கொண்டிருந்த ஒரு ஓவியம் இருந்தது. இன்னொரு பக்கத்தில் மனித உடம்பின் எலும்புக் கூட்டிலிருந்த பாகங்களும் நரம்புகளும் நன்றாய்த் தென்பட்டுக் கொண்டிருந்த ஒரு போட்டோ இருந்தது.

தொலைவில் வெள்ளைத் துப்பட்டி பரப்பிய நோயாளிகளைப் பரிசோதிப்பதற்காகப் போடப்பட்ட மேஜை ஒன்று இருந்தது. ஜன்னல்களுக்கு வெள்ளையும் நீலமும் கலந்து கட்டம் போட்ட திரைச்சீலைகள் போடப்பட்டிருந்தன.

மேகலாவின் கண்கள் அங்குமிங்கும் சுழன்று விட்டு சங்கோஜத்துடன் டாக்டர் கிருஷ்ணராஜின் முகத்தின் மீது வந்து நிலைத்தது. அவன் தலைகுனிந்தபடி மளமளவென்று எழுதிக்கொண்டிருந்தான். கோணல் வகிடு எடுத்துக் கொண்டு, நீட்டாய் வாரப்பட்டிருந்த கிராப்பு அழகாய் இருந்தது. வெளிர் நீல நிறத்தில் முழுக்கைச் சட்டை அணிந்திருந்தான். கழுத்தில் அடர்ந்த நீலப்புள்ளிகள் வைத்த டை இருந்தது. வலது கன்னத்தில் மிளகு அளவிற்குச் சின்ன மச்சம் இருந்தது. குனிந்து எழுதிக் கொண்டிருந்ததால், நீண்ட மூக்கு எடுப்பாய் தெரிந்தது. அவன் விரலிடுக்கில் வழுவழுப்பாயிருந்த ரோமங்கள் மிக அழகாய் ஆண்மைக்கு எடுத்துக்காட்டாய் இருந்தது.



எழுதிக் கொண்டிருந்த அவன் திடீரென்று நிமிர்ந்ததால் மேகலா பதற்றத்துடன் பார்வையைச் சுவரில் மாட்டியிருந்த கேலண்டரை நோக்கித் திருப்பிக் கொண்டாள். அவன் எழுதிய மருந்துச் சீட்டைப் பருமனான அந்த ஆளுக்குக் காட்டி எப்படி மருந்து உட்கொள்ள வேண்டும் என்று விவரமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தான். அவர் நன்றாய்க் கேட்டுக்கொண்ட பிறகு, 'வரேன், தாங்க்ஸ்' என்றார் எழுந்து நின்று. அவர் கால்கள் சுவாதீனத்தில் இல்லாதது போலச் சிரமத்துடன் எழுந்து நின்றான்.

'உங்க மில் இப்ப எப்படி நடந்து வருகிறது?' கிருஷ்ணராஜ் எழுந்து நின்றவன் கேட்டான்.

'பரவாயில்லை. நேற்று வரை லாக்-அவுட்டில் இருந்து வந்தது. இப்ப எல்லாம் சரியாயிடுத்து.

அந்த முதலாளி என்னவோ எங்கேயோ இருக்கிறார். இங்கே ஒப்படைத் திருக்கிறவங்களுக்குச் சரிப்படவில்லை. அவங்களுக்கு இரவும் பகலும் குடித்துவிட்டு பாரில் உட்கார்ந்திருப்பதுதான் வேலை. நடுவில் எங்கள்உயிரை எடுத்துட்டிருக்காங்க. அந்தப் பக்கத்தில் மேனேஜ்மென்ட்டிற்கும் இந்த பக்கத்தில் ஊழியர்களுக்கும் எடுத்துச் சொல்லி ஈடுகட்டிக் கொண்டு போவதற்குள் உயிரே போய்விடுகிறது. ராத்திரி படுத்துக்கிட்டால் தூக்கம் வராது. பகலில் சாப்பிடக்கூட நேரம் இருக்காது. நீங்கள் டாக்டர்கள் என்னவோ ஓய்வு ஓய்வு என்கிறீங்க. எங்களுக்கு எங்கே கிடைக்கும்? ஓய்வு என்றால் கட்டிலில் படுத்துக் கொண்டால் வந்துவிடுமா? மூளை வேலை செய்யறது நின்றால் அல்லவா? அது இந்த இதயமே நின்றாலே யொழிய சாத்திய மில்லைன்னு தோணுது.' மார்பில் கை வைத்துக்கொண்டே சொன்னார்.

'நீங்கள் இப்படிச் சொன்னால் எப்படி? மொதல்ல உங்க உடம்பு சரியாய் இருந்தால்தானே முடியும்? அது சரியாய் இருக்கிறபடி பார்த்துக்க வேண்டாம்?' என்றான் கிருஷ்ணராஜ் சிரித்துக் கொண்டே.

'நம்ப கையில் என்ன இருக்கு? எல்லாம் அந்த தெய்வத்தின் கருணை! என் பெரிய பையனின் கால் உடைந்து போனதிலிருந்து எனக்குப் பைத்தியமே பிடித்து விட்டது. அடுத்ததாய் என் சின்னப் பெண்ணின் புருஷன் போனது. எனக்கோ இந்தக் கீல் வாதம் உட்கார்ந்தால் எழுந்திருக்க முடியாது. எழுந்தால் உட்கார முடியாது. எழுந்தால் உட்கார முடியாது. இதென்ன வாழ்க்கையோ! தெய்வம் அழைச்சுட்டுப் போற வரைக்கும் இப்படியே பட்டுக்கொண்டிருக்க வேண்டியதுதானே?'

அவர் மேகலாவைப் பார்த்தார்.

'இந்தப் பெண்ணின் பெயர் மேகலா.' கிருஷ்ணராஜ் பரிச்சியம் செய்தான்.

மேகலா சரேலென்று நிமிர்ந்து வணங்கினாள்.

'இவர் நித்யானந்தன். அம்பிகா மில்ஸின் மேனேஜர்!' என்று சொன்னான்.

'மேகலா! பெயர் ரொம்ப நன்றாய் இருக்கே!' என்றார் அவர்.

அவர் போய் விட்டார். கிருஷ்ணராஜ் அவரை வழியனுப்பப் போனான். மேகலா அறையில் தனியாய் உட்கார்ந்திருந்தாள். பத்து நிமிஷமாயிற்று. அவன் வரவில்லை. கால் மணி நேரம் சுழிந்தது. கிருஷ்ணராஜின் ஜாடையே இல்லை. அவன், மேகலா இங்கே காத்திருந்த விஷயத்தையே மறந்து போய் விட்டான் போலும் என்றெண்ணிக் கொண்டாள். போய் விடலாம் என்று எழுந்திருந்தாள். அதற்குள் கதவை தடாலென்று தள்ளினார்கள் யாரோ. மேகலா திரும்பிப் பார்த்தாள். கிருஷ்ணராஜ் உள்ளே வந்து கொண்டிருந்தான். அவன் தனியாய் வரவில்லை. கூட ஒரு நர்ஸும் இருந்தாள். இருவருமாய்ச் சேர்ந்து ஒரு கிழவியைப் பிடித்துக் கொண்டு உள்ளே அழைத்து வந்துகொண்டிரு



ந்தார்கள். அப்படிச் சொல்வதைவிடத் தோளில் சாத்திக் கொண்டிருந்தது. முகம் குழி விழுந்திருந்தது.

'ஐயோ கடவுளே! நான் செத்துட்டிருக்கேனே, எனக்கு உயிர் கொடுக்கமாட்டாயா?' என்று பெரிதாய்ப் புலம்பிக் கொண்டிருந்தாள்.

கிருஷ்ணராஜ் அக்கிழவியைக் கூட்டி வந்து மேஜை மேல் படுக்க வைத்தான். நர்ஸின் உதவியோடு மளமள வென்று கட்டுகள் போட்டான். இஞ்ஜெக்ஷன் தந்தான்.

'தெருவில் பார்த்து நடக்கக் கூடாது? பார்த்து நடக்காமல் இப்படியா ஓடுவாங்க?' என்று கண்டித்தாள் நர்ஸ்.

'பார்த்துதாம்மா நடந்தேன். கார் விர்ரென்று வந்துடுத்து!'

பாட்டி, எங்கே போகணும்னு சொல்லு, ரிக்ஷா கொண்டு வரச் சொல்றேன்' என்றான் கிருஷ்ணராஜ்.

'எனக்கா?' பொக்கை வாய் தெரியச் சிரித்தாள்.

'தெய்வத்தைத் தவிர எனக்கு யாருமே இல்லைப்பா' என்றாள்.

'என்னது? யாருமே கிடையாதா?'

யாருமே கிடையாது. ஒரு காலத்தில் எல்லோருமே இருந்தாங்க. மகன் மிலிடெரிக்குப் போய்ச் செத்துட்டான். என் புருஷன் எப்போதோ போயிட்டார். மருமகள் ரெண்டாங் கல்யாணம் பண்ணிகிட்டாள்.'

'நீ என்ன பண்ணிட்டிருக்காய்? வயிற்றுப் பாட்டுக்கு எப்படி நடக்கிறது, பின்னே?' தீவிரமாய்க்கேட்டான்.

'பிச்சை எடுக்கிறதுதான்! கிடைத்தால் தின்பேன். இல்லாவிட்டால் படுத்துக் கொண்டு விடுவேன். யாருமே இல்லை தம்பீ, எனக்கு யாருமே இல்லை!' கிழவி அழுது விட்டாள்.

கிருஷ்ணராஜ் அவன் தோளில் தட்டினான். பிறகு போன் ரிசீவரை எடுத்து நம்பரை டயல் செய்தான்.

'ஹலோ! இந்திரா சேவாசதனமா? பிருந்தா அவர்களோடு பேசணும். நான் டாக்டர் கிருஷ்ணராஜ் பேசுகிறேன்.'

மேகலா அக் கிழவியையே பார்த்துக் கொண்டிருந்தாள். தலை நரைத்துத் தும்பைப் பூவாய் இருந்தது. தாடைகள் ஒட்டிப் போயிருந்தன. கண்கள் குழி விழுந்திருந்தன. உடம்பெல்லாம் சுருக்கங்கள். ஒரு நிமிஷத்திற்கு முன்னால் அக் கிழவி செத்துப்போய் விடுவேளோ என்று அழுதாள்.

அவளுக்கு வாழ்க்கை மேல் இன்னும் ஆசை!

'கிருஷ்ணராஜ் பேசுகிறேன். மிஸஸ் பிருந்தா! நமஸ்காரம்! எப்படி இருக்கீங்க! லட்சுமி, கோமளி எப்படி இருக்காங்க? ஜுரம் குறைந்துவிட்டதா? நான் சாயந்திரம் வரேன்.

'அந்த மருந்தையே தாருங்கள். வந்து ... உங்க அனாதை ஆசிரமத்திற்கு இப்ப நான் ஒரு விருந்தாளியை அனுப்பப் போகிறேன். எங்க ஆசுபத்திரி பையனையும் கூட அனுப்பி வைக்கிறேன். சேர்த்துக்குங்க. நான் மாலையில் வந்து பேசுகிறேன். ஒ. கே. தாங்க்யூ' என்று போனை வைத்து விட்டான்.

பிறகு கிழவியைப் பார்த்து,

'பாட்டி! உன்னை ஒரு இடத்திற்கு அனுப்பப் போகிறேன். போ. உனக்கு அடி நன்றாய்ப் பட்டிருக்கிறது. மாலையில் ஜுரம் வரலாம். நீ போற இடத்தில் இருக்கிறவங்க உன்னை நன்றாய்ப் பார்த்துப்பாங்க' என்றான்.

'யாரப்பா அவங்க?'



'அவங்களா? உனக்கு உறவுக்காரங்கதான்! நீ தான் யாருமே கிடையாதுன்னாயே! அங்கே போனால் நிறைய பேர் உனக்கு வேண்டியவங்களாய் ஆயிடுவாங்க.' அதற்குள் பையன் வந்தான். அவனிடம் சொன்னான். கிழவிக்குத் தன்னை அவன் அனாதை ஆசிரமத்தில் சேர்க்கப் போகிறான் என்று புரிந்துவிட்டது. பையன் ரிக்ஷா கொண்டு வந்தான்.

'சாயந்திர வேளைகளில் நான் அங்கே வந்துட்டிருப்பேன். பார்க்கிறேன்' என்றான்.

கிழவி போவதற்கு முன்னால் திரும்பிப் பார்த்தாள். சட்டென்று அவன் பாதங்களில் விழுந்தாள்.

'இன்றைக்கு நான் யார் முகத்தில் விழித்தேனோ தெரியலை தம்பீ. தெய்வம் கருணை காட்டிவிட்டது. நீ தெய்வம் தம்பீ.'

கிருஷ்ணராஜ் அவளைத் தூக்கி நிறுத்தினான்.

'அப்படியெல்லாம் சொல்லாதே? தெய்வம் எங்களை டாக்டராக்கியது எதுக்காக? உங்களைப் போன்றவங்களைப் பார்த்துக்கத்தான்' என்றான்.

'நூறு வருஷம் நன்றாய் வாழணும்ப்பா நீ!'

கிருஷ்ணராஜின் கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

கிருஷ்ணராஜ் பையனிடம் கிழவியை ஒப்படைத்தான். மாசு படிந்த கூந்தலுடனும், கந்தலாடையுடனும் நாற்றமடித்துக் கொண்டிருந்த அக் கிழவியைத் தொடுவதற்கு கிருஷ்ணராஜ் சற்றும் தயங்கவில்லை. அருவருத்துக் கொள்ளவும் இல்லை. அந்த நேரத்தில் அவன் கண்களில் அன்பும் கருணையும் சேவை மனப்பான்மையும் மட்டுமே தோன்றிக் கொண்டிருந்தன.

'சாரி! ஒன் மினிட்!' அவன் மேகலாவைப் பார்த்துச் சொல்லி விட்டு உள்ளே போனான். அவன் வாஷ்பேஸினில் கைகளைக் கழுவிக் கொண்டிருந்த சப்தம் கேட்டது. அதற்குள் ஆயா வந்து அங்கே மேஜையில் ரத்தக்கறையுடனிருந்த துப்பட்டியை எடுத்துவிட்டு வெள்ளைத்துப்பட்டியைப் பரப்பிவிட்டுப் போய்விட்டாள்.

மேகலா நின்று கொண்டிருந்தாள். கிருஷ்ணராஜ் கைகளைத் துடைத்துக்கொண்டே திரும்பி வந்தான்.

'ப்ளீஸ், உட்காருங்க' என்றான்.

மேகலா உட்கார்ந்து கொண்டாள்.

'இப்ப எப்படி இருக்கு?'

'நன்றாய்த் தான் இருக்கு' — மேகலா ஹீனஸ்வரத்தில் சொன்னாள்.

அவன் மேகலாவை மேஜையில் ஏறி உட்கார்ந்து கொள்ளச் சொல்லி உத்தரவிட்டான். மேகலா உட்கார்ந்துக்கொண்டாள். ஸ்டெதாஸ்கோப்பைக் கையிலெடுத்துக் கொண்டு மேகலாவின் மார்பையும் முதுகையும் பரிசோதித்தான். அங்கிருந்து மேஜைக்கருகில் வந்தான். மேகலாவும் வந்தாள். மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு அவளை எதிரே உட்காரச் சொல்லி சைகை காட்டி விட்டு மருந்துகளை எழுதத் தொடங்கினான். மேகலா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

காகிதத்தை அவளிடம் தந்துவிட்டு, 'இந்த விடமின் மாத்திரைகளை ஒரு வாரம் சாப்பிட்டால் போதும். அந்த பலவீனம் முழுவதும் குறைந்துவிடும்' என்றான். மேகலா மௌனமாய் அக் காகிதத்தை வாங்கிக் கொண்டாள்.

அவன், இனிப் போகலாம் என்றாற் போலப் பார்த்தான்.



மேகலா அக்காகிதத்தை எடுத்துக் கொண்டு எழுந்திருந்தாள். போகமுயன்றவள் திரும்பவும் தயக்கத்துடன் நின்றாள்; அவனை நோக்கித் திரும்பினாள். தடுமாற்றத்துடன் பார்த்தாள்.

'என்ன?' மேகலாவைப் பார்த்து அவன் கேட்டான்.

'நான் ... இது ... பாட்டி ...' மேகலா கைக்குட்டைக்குள்ளிருந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவனுக்கு முன்னால் வைத்தாள்.

டிராயரைத் திறந்து சிகரெட் பெட்டியை வெளியே எடுத்துக் கொண்டிருந்த அவன் நின்றான். அதையும் மேகலாவையும் ஒரு வினாடி மாறி மாறிப் பார்த்தான். அவன் புருவங்கள் முடிச்சேறிக் கொண்டன.

'என்ன இது?' என்றான்.

'நீங்க ... நீங்க ரொம்ப உதவி பண்ணினீங்கன்னு பாட்டி சொன்னாள். உங்கள் ஃபீசு.'...மேகலா தடுமாற்றத்துடன் பார்த்துக் கொண்டே, 'இதற்கு மேல் கொடுக்க முடியலை எங்களால்' என்றாள்.

அவன் மேகலாவை ஒரு வினாடி கூர்ந்து பார்த்தான். பிறகு பென்சிலால் அந்த நூறு ரூபாய் நோட்டை மேகலாவை நோக்கித்தள்ளிவிட்டு, 'இந்தப் பணம் எனக்குத் தேவையில்லை. நான் கேட்ட ஃபீசை நீங்கள் தருவீங்களா?'

'என்ன?' சரேலென்று நிமிர்ந்து கேட்டாள்.

'நீங்கள், வாழ்க்கையில் இனி ஒருநாளும் இது போன்ற பைத்தியக்காரத்தனமான காரியங்களைச் செய்ய மாட்டேன்னு வாக்களியுங்கள். அப்படி வாக்களித்தால் அதுவே எனக்குப் பெரிய ஃபீசுன்னு நினைச்சுப்பேன்'.

அவன் மேகலாவைப் பார்த்துக் கொண்டிருந்தான். மேகலாவும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன்

கண்களுக்கு விநோதமான சக்தி இருந்தாற் போலிருந்தது அவன் மேகலாவை உட்கார் என்பது போலப் பென்சிலால் நாற்காலி பக்கமாய்க் காட்டினான். மேகலா உட்கார்ந்து கொண்டாள்.

'உங்களுக்கு வைத்தியம் பண்ணிய டாக்டராய் உங்களிடம் ஒரு வார்த்தை கேட்கலாமா? மேகலா, கேளுங்கள் என்பது போலப் பார்த்தாள்.

'இந்த மாதிரி வேலையை ஏன் செய்யநேர்ந்தது?' அவன் பார்வை அவள் மனதைத்துளைத்து வெளிக்கொண்டு வரக் கூடிய தெர்மாமீட்டரைப் போல இருந்தது.

மேகலா பதில் பேசவில்லை. தலைகுனிந்தபடி உள்ளங் கைகளைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

'ஓ. கே. காரணம் நான் கேட்கலை; அது உங்கள் பெர்சனல் விஷயம்! ஆனால் ஒன்றுமட்டும் சொல்கிறேன். தற்கொலை மிகப் பாபச் செயல் என்று நம் பெரியவர்கள் சொல்லியிருப்பதை நினைவில் வைத்துக்குங்க.'

'சில சூழ்நிலைகளில் வாழ்வது பெரிய நரகம் என்று அவங்களுக்குத் தெரிஞ்சிருக்காது. அதனால்தான் அப்படிச் சொல்லியிருப்பாங்க' மேகலாவின் பதிலில் கூர்மை இருந்தது.

நிமிர்ந்து பார்த்த அப்பார்வையில் கோபம் இருந்தது.

கிருஷ்ணராஜ் மேகலாவுக்கு நயமாய் சொல்லத்தொடங்கினான்.

'இதப்பார்! இந்த ஆவேசந்தான் வேண்டாம்என்கிறேன். கொஞ்சம் வருத்தம் ஏற்பட்டு விட்டால் வாழ்க்கையை முடித்துக் கொண்டு விடவேண்டும் என்று எண்ணுவது தப்பு. அது முட்டாள்தனம். வாழ்க்கை என்றால் பலதரப்பட்ட சம்பவங்களின் கூட்டு வருஷப்பிறப்புக்குப் பண்ற வேப்பம்பூ பச்சடியைப்போல அறு சுவையும் உண்டு. இந்த வாழ்



க்கையை நாம்ப வருத்தம், கஷ்டம், கண்ணீர், ஆனந்தம், ஏமாற்றம் என்ற செங்கல்களால் நிர்மாணித்துக் கொள்ள வேண்டும். எந்தக் கஷ்டமாவது வந்தால் பொறுமை காட்டணும்.

எதிர்த்து நிற்கணும். அதானே தவிர' கொஞ்சம் துன்பம் ஏற்பட்டு விட்டால், மொத்த வாழ்க்கையுமே வேண்டாம் என்று எடுத்து எறிஞ்சுவிடக்கூடாது.

அது கோழைகளின் லட்சணம். கோழைங்களுக்கு வாழ்க்கையில் கயிறு கூட பாம்பாய்த் தெரியும். மிகச் சின்ன சம்பவத்தை வாழ்க்கையின் பெரிய பிரச்னையாய் பாவித்து ஓடிப்போயிடுவாங்க. அவ்வாறு யோசிப்பது தவறு. நீங்கள் எதுக்கு தற்கொலை பண்ணிக்கிட்டீங்கன்னு நான்கேட்கலை அது ரொம்பத் தப்புன்னு எச்சரிக்கிறேன். அந்தத் தப்பைத் திரும்பவும் பண்ண வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.'

'வாழ்க்கையில் பெரிய அவமானம் எதிர்ப்பட்டுவிட்டால் எது தப்பு எது தப்பில்லைன்னு இங்கே புரிந்து விடும்.. என்றாள் மேகலா. அவனுக்கு என்ன தெரிந்து தன்னைக் கோழை என்கிறான்? தற்கொலை பண்ணிக்கொள்ள வேண்டுமென்றால் எவ்வளவு தைரியம் வேண்டும்? மேகலாவுக்குக் கோபம் வந்தது.

மேகலாவின் வாயிலிருந்து அவமானம் என்ற வார்த்தையைக் கேட்டதுமே அவன் சரேலென்று நிமிர்ந்தான். அவன் கண் கள் கூர்மையாய் இருந்தன.

'அவமானம்! அதென்ன அவமானம்! அவமானம்!' அவன் அந்த வார்த்தைகளே அருவருப்பாய் இருந்தற்போல நாற்காலியை விட்டு எழுந்தான். இரு கைகளையும் நீட்டிக் கொண்டே சொன்னான்.

'அவமானம்! மொதல்ல உங்கள் இளைஞர் சமுதாயம் யோசிக்கும் விதத்திலேயே கோணல் வழிதான் தோன்று

பக்கங்களை மடக்காமலும் ...
புத்தகத்தை கவனமாக ...



கிறது! அவமானம் என்கிற கத்தியை எடுத்துக்கிட்டு உங்களை நீங்களே கொலை பண்ணிக்கிறீங்க.

'என்ன அவமானம்? காதலித்த பையன் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு மறுத்துட்டால் அவமானம்! பரீட்சையில் பெயிலாயிட்டால் அவமானம்! வேலை கிடைக்கா விட்டால் அவமானம்! கல்யாணமாகாவிட்டால் அவமானம்! சிநேகிதர்கள் கேலிபண்ணிட்டால் அவமானம்! கணவன் தன்னைக்கவனிக்காவிட்டால் அவமானம். மைகாட்!' அவன் உள்ளங்கையை மடக்கிக்கொண்டான்.

'எந்தச் சின்ன காரணமானாலும் சரி, பூதக்கண்ணாடியால் பார்த்து, அவமானம் என்று நினைத்து தூக்க மருந்தை விழுங்குவது! அல்லது தூக்குபோட்டுப்பது! இல்லாவிட்டால் கெரஸினாயிலை ஊற்றிக்கிட்டு நெருப்புப்பற்றவைத்துப்பது! இது ஒரு மேட் ஜெனரேஷன்! தற்கொலை இவங்களுக்கு ஃபேஷனாகி விட்டது.

'இவங்க மட்டுமே சாகமாட்டாங்க. வீட்டிலிருக்கிற எஞ்சியவங்களையும் கொல்லுவாங்க. இப்படித் தற்கொலை பண்ணிக்கிட்ட எந்தக் குடும்பத்தையாவது பாரு! அந்தக் குடும்பம் அப்புறமாய் வாழ்நாளெல்லாம் அழுதுக்கிட்டே தான் இருக்கும். அந்த வீட்டில் அவங்களின் மரணநிழல் பழிச்சுட்டே இருக்கும். அந்த வீட்டில் பிறகு கண்ணீரின்றி பண்டிகையோ கல்யாணமோ நடக்குமா? உறவினர்கள் யார் வந்தாலும் இந்தப் பேச்சைத் தான் எடுத்துத் தீர்ப்பாங்க. அவங்க வாழ்க்கையில் சந்தோஷமே துடைத்தெறிந்து விடப்படும்! செய்யாத தப்புக்கு அவங்க அத்தனை பேருக்குமே தண்டனை! உதாரணத்துக்கு நீ தான் இருக்கிறாய்.

'உன்னைச் மசயத்தில் காப்பாற்றாமல் போயிருந்தால் இனி உங்கம்மாவின் கண்ணீர் வாழ்நாளெல்லாம் நிற்குமா? உன் தங்கை திரும்பவும் பழையபடி ஆவாளா? இன்னும்



பத்து வருஷமாவது உயிரோடிருக்கக் கூடிய உங்க பாட்டி இந்த திகிலால் ரெண்டே வருஷத்தில் செத்துடமாட்டாங்க! நாம் சாகிறதில்லை, அவங்க மனுஷங்களைத்தான் கொன்னுடறாங்க.'

மேகலா அவன் ஆவேசத்திற்குத் திகைப்படைந்தவளாய் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் முகம் சிவந்தது, மூக்கு அதிர்ந்தது.

'நான் சொல்கிறேன். அந்த உலகத்தில் தற்கொலை பண்ணிகிற உரிமை யாருக்குமே கிடையாது. ஏனெனில் வாழ்க்கை என்பது நம் ஒருத்தருக்கே சம்பந்தப்பட்டதில்லை. நம்மைச் சுற்றிலும் இருக்கிறவங்களைக்கூட சம்பந்தப் பட்டிருக்கு. எப்படிப்பட்ட கஷ்டநஷ்டங்கள் வந்தாலும் வாழ்க்கையை தைரியமாய் எதிர்த்து நிற்பதுதான் தைரியசாலிகளின் லட்சணம். வாழ்க்கையை முடித்துக் கொள்வது கோழைகளின் லட்சணம்!

'மேகலா! உன்னைப் பார்த்தால்கோழையாய்த்தோன்றவில்லை எனக்கு. நீ எதுக்கு தற்கொலை பண்ணிக் கொள்ள முயன்றாய்? உனக்கென்ன குறைச்சல்? யரோ ஒருத்தனைக் காதலித்தாய். கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைத்தாய். அது முடியவில்லை. வாழ்க்கை என்றால் அது ஒன்றுதானா? வேறொன்றும் இல்லையா? என்னவோ? இது ஏன் நிகழ்ந்ததோ யாருக்குத் தெரியும்? உன் நல்லதுக்குத்தான்நடந்ததோ என்னவோ? நாளைக்கு அவனைவிட எவ்வளவோ மடங்கு உத்தமமான கணவன் உனக்கு வருவானோ என்னவோ? இல்லாவிட்டாலும் பரவாயில்லை. உன் வாழ்க்கை உன்னோடது. உன் அம்மா, பாட்டி, தங்கை உனக்குப் போதாதா? அவங்க அன்பு உனக்குப் போதாதா? இந்த வாழ்க்கை இருக்கு பார், இது முழுவதுமாய் யாருக்குமே கிடைக்காது. யாரைப் பார்த்தாலும் ஏதாவது ஒரு குறை இருந்துட்டேதான் இருக்கும்.

'சற்று முன்னால் உனக்குப் பரிச்சயம் பண்ணினேனே அந்த அம்பிகா மில் மேனேஜரைப் பார்த்தாயா? அவர் மனைவி போய் விட்டாள். மகனுக்கு புத்தி சுவாதீனமில்லை. மருமகன் ஆக்ஸிடென்டில் இறந்து விட்டான். அவருக்கோ கீல் வாதம்! மில்லை லாக்கவுட் பண்ணிட்டாங்க. ஆனாலும் அவர் அந்த வாழ்க்கையை ஏன் பொறுத்துட்டிருக்கிறார்? இத்தனை தூக்க மாத்திரைகளை விழுங்கியிருக்கலாமே! சற்று முன்னால் வந்த அந்தக் கிழவியையும் பார். அவளுக்கு யார் இருக்காங்க? திக்கில்லாதவள். ஆனாலும் ஏன் வாழ்ந்துட்டிருக்கிறாள் பார்!

'இந்த வாழ்க்கை ஒரு மரத்தைப் போன்றது. இதன் கிளைகள் அநேகம்! ஒரு பக்கத்தில் கொஞ்சம் பூச்சி அரித்து விட்டால் மரம் முழுவதையுமே வெட்டித் தள்ளிடுவாங்களா என்ன? அந்தக் கொம்பை மட்டும் கத்தரித்து விட்டால் புதிய இலைகள் முளைத்துவிடும். நமக்கு வாழ்க்கையில் எதிர்ப்படும் பிரச்னைகள் கூட நமக்கு அடிக்கடி வரும் விஷஜுரத்தைப் போன்றவை தான். அவற்றிற்கு மருந்து சாப்பிட வேண்டும். குறைய அவகாசம் வேண்டும். அதனால் பொறுமையைக் காட்டவேண்டும் ... இந்தத் தற்கொலைக்கு முக்கியமான காரணம் என்ன தெரியுமா? உங்களுக்கு உங்கள் மேலேயே நம்பிக்கை போனது தான்! வாழ்க்கை மீது நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் போனதுதான்.

'அந்த பிரசாத் கல்யாணம் பண்ணிக்காவிட்டால் என்ன் வாயிடுத்தாம்? உன்னுடைய குறுகிய நோக்கம்! தெரிஞ்சோ தெரியாமலோ அவனை நம்பினாய்! அது தப்பு என்று தெரிந்துவிட்டது! இதில் வெட்கப்பட வேண்டியது ஒன்றுமில்லையே!'

மேகலா தலைகுனிந்தாள். 'கடவுளே! பாட்டி இவனிடம் எல்லாவற்றையும் ஒப்பித்து விட்டாள் போலிருக்கே!' என்



றெண்ணிக்கொண்டாள் தனக்குள். அம் முகத்தில் வெட்கமும் சங்கோஜமும் தோன்றின.

அவன் இரு கைகளையும் மேஜை மேல் ஊன்றிக் கொண்டே குனிந்து சொன்னான். அவன் குரலிலிருந்த ஆவேசமும் கோபமும் தணிந்து விட்டன. இப்பொழுது அக்குரல் தாழ்ந்த குரலில் மிகக் கம்பீரமாய் இருந்தது.

'மேகலா! காதலிப்பது தவறில்லை. அக்காதலை அருகதை இல்லாவனிடம் அர்ப்பணிப்பதுதான் குற்றம்! கடவுள் இந்த சிருஷ்டியில் எந்தப் பிராணிக்கும் தராத ஒரு பெரிய வரத்தைத் தந்திருக்கிறார் மனிதனுக்கு அதுதான் பகுத்தறிவு' ஏன் தந்திருக்கிறார் தெரியுமா? அதன் மூலமாய் நாம் நம் வாழ்க்கையையும் எதிராளியையும், பிற பிராணிகளையும் அன்பாய், தயவாய் பார்க்கவும், உலகத்தைப் புரிந்து கொள்வதற்குந்தான்! நம் தர்மத்தைச் சரியாய்ப் பின்பற்றும்படி சொல்வி!

'உனக்கு என்ன குறைச்சல் சொல்லு? நீ எதற்காகச் சாகப் போகணும்னு யோசித்துப் பார். உனக்குப் பணம் இல்லாமல் இருக்கலாம். அனால் உன்னை, உயிரைக் காட்டிலும் அதியமாய் நேசிக்கிற அம்மாவும், பாட்டியும், தங்கையும் இருக்காங்க. அவங்க அப்பாவிகள்! உன்னைத் தன்லைமில்லாமல் நேசிப்பவர்கள். பிரசாத் உன்னை மோசம் பண்ணியதால் நீ அவங்களைத் தண்டிக்கத் தயாராகிவிட்டாய். அவங்களை நீ எவ்வளவு துன்பப்படுத்தி விட்டாய் என்று யோசித்துப் பார்த்தாயா? நீ கண்ணைத் திறந்து 'அம்மா' என்று சொல்லும்வரை உங்கம்மா பச்சைத் தண்ணீரைக் கூட குடிக்கவில்லை. நான் நினைத்தேன்:

'இந்தப் பெண்ணிற்கு ஏதாவது ஆகிவிட்டால் இவள் பிழைக்க மாட்டாள் என்று அந்த மரணத்திரை அப்பொழுதே என் கண் முன் நிழலாடத் தொடங்கி விட்டது. ஒருக்கால் நான் ரெண்டு மரணங்களைப் பார்க்க நேரிட்டிருக்குமோ என்னவோ?'

மேகலா உதட்டைச் சுழித்துக் கொண்டாள். கண்களி லிருந்து பொலபொல வென்று கண்ணீர் வழிந்தது. 'நான் செய்தது தவறுதான்! தவறுதான்' என்றெண்ணிக் கொள்ளத் தொடங்கினாள் தனக்குள். கிருஷ்ணராஜ் கொஞ்சம் பொறுத் துச் சொன்னான்.

'உன் வயதென்ன?'

'இருபது வயது'

'இதப் பார்! எவ்வளவு சின்னவயது! வாழ்க்கையையே கொம்பு வைத்து வளைத்து விடமுடியும் என்ற உறுதி இருக்கவேண்டிய வயது. சக்தி யில்லாதவளைப் போலத் திகிலில் உறைந்து போய் விடாதே! பொருளாதாரத் தொல்லைகளையெல்லாம் அவமானமாய் பாவிக்கதே! மானஸாவின் உதவியோடு அவற்றைக் கடக்க முயற்சிப் பண்ணு. உலகம் உன்னைப் புரிந்துக்கொள்ளவில்லையே என்று வருந்தாதே. நீ உலகத்தைப் புரிந்துகொள்ள முயற் சிப்பண்ணு. உங்கம்மாவைச் சந்தோஷப் படுத்துவதைத் தவிர உனக்கென்ன வேண்டும், சொல்லு?'

மேகலா ஆம் என்று தலையாட்டினாள்.

கிருஷ்ணராஜ் சொன்னான்— 'இதப்பார்! இந்த உலகத் தில் நம் உயிரைவிட மேலானது வேறொன்றில்லை. அதற்கப் புறந்தான் எல்லாமே! வாழ்க்கையோடு நீ போராடு. ஏதாவது தெரியாமல் செய்துவிட்டால் அதை நினைத்துக்கொண்டு வெட்கப்பட்டுக் கொண்டு தளர்ந்து போய் விடாதே. இன்னொரு தடவை அப்படிப்பட்ட தப்பு பண்ணி வாழ்க் கையை வீணாக்காமல் பார்த்துக்கொள். சாரி, நான் கடுமை யாய்ப் பேசிட்டேனா?'

'இல்லை.'

அவன் ஜெபியைத் தடவிப் பர்ஸை வெளியே எடுத்து அதிலிருந்த ஒரு போட்டோவை எடுத்து மேகலாவிற்கு முன்னால் வைத்தான்.



அந்த போட்டோவைப் பார்த்த மேகலா அடையாளம் புரிந்து கொண்டாள். அன்றைக்கு அவர்கள் வீட்டிற்குப் போயிருந்தபோது சுவரில் மாட்டியிருந்த புகைப்படத்தில் இருந்த பெண்!

கிருஷ்ணராஜ் சொன்னான்:

'இந்தப் பொண்ணு என் தங்கை. பெயர் சுனிதா. ஏறக் குறைய உன் வயதுதான் போன வருடம் செத்துட்டாள் — தற்கொலை செய்து கொண்டு!' அவன் குரல் ஒரு மாதிரியாகி விட்டது.

மேகலா சரேலென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

'ஏன்!' தன்னையறியாமல் கேட்டாள். இவ்வளவு நல்ல அண்ணன் ஒருத்தன் இருக்கும் போது, அந்தத் தேவை ஏன் ஏற்பட்டது?

'ஏறக்குறைய உன் கதையேதான். காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கிறதாய்ச் சொன்னவன் ஏமாற்றி விட்டான். அதைத் தாங்க முடியாமல் போய்விட்டாள். தூக்கமாத்திரைகளைத் தின்றுவிட்டாள். நான் அப்பொழுது ஊரில் இல்லை. சமயத்துக்கு வைத்திய உதவி கிடைக்க வில்லை.'

அவன் கண்களில் ஈரம் நன்றாய்த் தென்பட்டது. பர்ஸிற்குள் வைத்துக் கொண்டே சொன்னான்:

'அதிலிருந்தே எங்கம்மா ஏறக்குறைய பைத்தியம் ஆகிவிட்டாள். அவங்களைத் தேற்றுவது என் நித்திய கடமைகளுள் ஒன்றாகிவிட்டது. எங்க வீட்டில் பண்டிகை வரதுன்னாலே எனக்குப் பயம்.

'அம்மா இப்பக் கூட சுனிதாவின் உடைகளையும் செருப் புக்களையும் அவள் எங்கிருந்தோ வருவது போலவே சித்

சித்தமாய் வைத்திருப்பாள். அவற்றை யெல்லாம் சரியாய் அடுக்கி வைத்துக்கொண்டிருப்பாள். வேண்டாம் என்றால் அழுவாள் அந்த வேலைகளைப் பண்ணினால் தன் மனதிற்கு ஆறுதல் ஏற்படுகிறது என்பாள். அவள் புத்தகங்கள், டேப் ரிகார்டுகள் எல்லாம் அப்படியே உபயோகப்படுத்துவதற்கு சித்தமாய் இருப்பதுபோல இருக்கும்.

'அவங்களால் இனிமேல் அந்த நினைவுகளை விட்டு மீண்டு வர முடியாது. சுனீதாவுக்கு அம்மா இவ்வளவு வருத்தப்படுவாள் என்று தெரிந்திருக்காது. தெரிந்தால் இந்தக் காரியத்தையே பண்ணியிருக்கமாட்டாள். அன்றைக்குத் தூக்கமாத்திரைகளை விழுங்கிவிட்டு நினைவில்லாமல் நீ படுத்துக்கிடந்தபோது உன்னைப் பார்த்த எனக்குச் சுனீதாவின் ஞாபகந்தான் வந்தது. தாங்க் காட்! உனக்குச் சமயத்திற்கு வைத்திய உதவி பண்ண முடிந்தது.

'எங்கம்மாவுக்கு ஏற்பட்ட வேதனை உங்கம்மாவுக்கு ஏற்பட்டு விடாமல் காப்பாற்ற முடிந்தது. அதனால்தான் சொல்கிறேன் மேகலா! வாழ்க்கையில் இனி ஒரு போதும் இப்படிப்பட்ட பைத்தியக்கார வேலைகளைப் பண்ணாதே. உன் வாழ்க்கை உன் ஒருத்தியுடையது மட்டுமேயில்லை' உன்னைச் சேர்ந்த அத்தனைப் பேருடையதுந்தான் என்று நினைவில் வைத்துக்கொள்' என்றான்.

மேகலா போவதற்காக எழுந்தாள். கிருஷ்ணராஜ் நூறு ரூபாய்த் தாளை எடுத்து மேகலாவின்கையில் தந்தான்.

'நான் கேட்ட ஃபீசு என்னவென்று நினைவிருக்கா?' நினைவிருக்கிறது என்று தலையாட்டினாள்.

'அதை நினைவில் வைத்துக் கொண்டிருந்தாலே போதும்; போயிட்டுவா' என்றான்.



மேகலா அவன் அறையை விட்டு வெளியே வந்தாள். மேகலாவுக்கு கிருஷ்ணராஜின் வார்த்தைகள் ஒரு கசப்பான இன்ஜெக்ஷனைப் போலவும், அது நன்றாய் வேலைசெய்தாற் போலவும், சக்தியும் பலமும் ஏற்பட்டன.

# 19

பத்து நாட்களுக்குப் பிறகு மேகலா கடைவீதியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தாள். இந்தப் பத்து நாட்களில் மேகலா நன்றாய்க் குணமாகி விட்டாள். தனியாய் உட்கார்ந்து யோசித்துப் பார்த்தபொழுது தற்கொலை பண்ணிக்கொள்ள முயற்சி செய்தது எவ்வளவு தவறானது என்பது புரிந்தது.

கொல்லையில் துணிகளை உலர்த்திக் கொண்டிருக்கும் பொழுது நிமிர்ந்து வானத்தைப் பார்ப்பாள், அங்கே நீல வானத்தில் வெண்மையான மேகங்கள் கும்பல் கும்பலாய் போய்க் கொண்டிருக்கும். கரிய பட்சிகள் ஏதோ வரிசையாய் அணிவகுத்துப் போய்க்கொண்டிருக்கும்.

செம்பருத்திச் செடிகளின் மேல் சிட்டுக்குருவிகளின் கலகல சப்தம்!

வீதியில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் சப்தம்! இதெல்லாம் விவரிக்க முடியாத ஆனந்தத்தைத் தந்துக் கொண்டிருந்தாற் போலத் தோன்றும். செத்துப் போய் விட்டிருந்தால் என்னவாகியிருக்கும்? இருள்! கரிய மையைப் போன்ற எல்லையில்லாத இருள்! மேகலாவின் தேம்பு சிலிர்க்கும் சமயத்தில் வந்து காப்பாற்றிய கிருஷ்ணராஜின் நினைவு வந்து விட்டால் அவள் மனது நன்றியால் நிரம்பி வழியத் தொடங்கிவிடும். அவன் வாழ்க்கையைப் பற்றிச் சொன்ன வார்த்தைகள், அவளுக்கு தைரியத்தையும்

உற்சாகத்தையும் புகட்டி யிருந்தன. வாழ்க்கை என்றால் இப்பொழுது எந்தப் பயமும் இல்லாமலிருந்தது.

கிருஷ்ணராஜ் அவளைப் பெரிய ஆபத்திலிருந்து மீட்டு விட்டான். வாழ்நாளெல்லாம் அவனைப் பற்றி நினைவுக்கு வரும்பொழுதெல்லாம் கையெடுத்துக் கும்பிடுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் அவளால்? அவன் அந்த க்ளினிக்கில் ஒருத்தர் கீழ் வேலை செய்து கொண்டிருந்தான். இவ்வாறு பிறர்க்கு உதவிசெய்வதால் அவனுக்கு ஏற்படும் பணச் செலவை அவன்தான் சம்பளத்திலிருந்து தந்துவிடுவானாம். மேகலாவிடமிருந்து அவன் ஃபீசு ஒரு பைசா கூட வாங்கிக் கொள்ளவில்லை. தன் ஞாபகமாய் அவனுக்குக்கூட ஏதாவது தரவேண்டும் போலிருந்தது அவளுக்கு. வீட்டில் ஒன்றுமே கண்ணில் படவில்லை.

கடைசியில் மேகலா தாய், கத்திரித்து விட்டு மூலையில் எரிந்திருந்த சின்னச் சின்ன புதுத்துணிகளின் துண்டுகளையெல்லாம் எடுத்துக் கொண்டாள். நான்கு நிறத் துணிகளை ஒன்று சேர்த்து ஒரு முயல் பொம்மையைத் தைத்து, அதில் அந்தத் துணித் துண்டுகளையெல்லாம் அடைத்தாள். கண்களுக்கு பட்டன்களை வைத்துத் தைத்தாள். அதை எடுத்துக்கொண்டு நேராய் கிருஷ்ணராஜின் க்ளினிக்கிற்குப் போனாள்.

மேகலா போனபொழுது அவன் வீட்டிற்குப் போகும் முயற்சியில் இருந்தான். மேகலாவைப் பார்த்ததும்,

'ஹலோ' என்றான்.

மேகலா பையை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தாள்.

'உட்கார்! எப்படி இருக்கிறாய்?' கேட்டான்.

'நன்றாய்தான் இருக்கேன்.'

'பைத்தியக்கார யோசனைகள் எதுவும் வரவில்லையே?' முறுவலுடன் கேட்பான்.



'ஊஹூம்' தலையாட்டினாள்.

அவள் தலையாட்டிய விதத்தை முறுவலுடன் பார்த்தான் அவன். மேகலா குனிந்து பையைத் திறந்து அதற்குள் இருந்த முயல் பொம்மையை எடுத்து அவனுக் கெதிரே மேஜை மேல் வைத்தாள்.

'இதென்ன?' அவன் வியப்போடு கேட்டான்.

'உங்களுக்காக எடுத்துட்டு வந்தேன். உங்களுக்கு நாங்கள் ஃபீசு எதுவும் தரவில்லை. இதை என் ஞாபகப் பரிசாய்த் தரலாம்னு தான் கொண்டு வந்தேன்' சங்கோஜத்துடன் சொன்னாள்.

'மைகாட்!' அவன் அந்த பொம்மையின் காதைப் பிடித்துத் தூக்கித் தன் பக்கமாய் வாங்கிக் கொண்டான், அவன் உருவத்தையும் கண்களையும் ஆர்வத்தோடு பார்த்தான்.

'ரொம்ப நன்றாயிருக்கு. ரியலீ வண்டர் ஃபுல்' என்றான்.

அப்பாராட்டில் நடிப்பு இல்லை. மேகலாவுக்கு ஆனந்தம் ஏற்பட்டது.

அதன் கன்னத்தைக் கிள்ளினான். 'இதன் பேரென்ன?' என்று கேட்டான்.

மேகலா அதற்குள் நாற்காலியை விட்டு எழுந்திருந்து விட்டாள்.! 'எனக்குத் தெரியாது' என்றாள்.

அவன் ஒரு வினாடி நின்றான். 'நான் சொல்லட்டுமா?' என்று கேட்டான்.

'உம்!'

'மேகா! ரொம்ப கரெட் பேர். நன்றாயிருக்கோனோ?' என்றான்.

மேகலாவின் கன்னங்கள் சிவந்துவிட்டன. சரேலென்று திரும்பி 'போய் வருகிறேன்' என்று கூட சொல்லிக் கொள்ளாமல் கதவைத் திறந்து கொண்டு அவள் வெளியே ஓடிவந்து விட்டாள்.

அன்று முழுவதும் வீட்டிற்குத் திரும்பி வந்த பிறகு கூட அவன் வார்த்தைகள் நினைவுக்கு வந்ததும் ஏதோ போலிருந்தது. சிரித்துக்கொண்டாள். மறுநாள் மங்களம் பாக்கியலட்சுமியின் வீட்டிற்குப் போய் அவளுக்கு அப்பளாம் இட்டுத் தந்துவிட்டு ரவாலாடு பண்ணித்தந்துவிட்டு வந்ததாய்ச் சொன்னாள். மங்களம் வரும்போது அவள் வேண்டாம் என்று மறுத்தபோதிலும் கேட்காமல் அப்பாளம் ரவாலாடுகளும் கொடுத்தனுப்பினாள்.

'எந்த வேலையாயிருந்தாலும் வேலைக்காரப் பையனிடம் சொல்லியனுப்பினால் வந்து கண்டிப்பாய் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். என்னவோ நமக்குக் கொஞ்சம் உழைப்பே தவிர அவங்களுக்கு நம்மால் வேறென்ன தரமுடியும்?' என்றாள்.

மேகலாவுக்கு பாக்கிய லட்சுமியின்பால் அபரிமிதமான இரக்கம் ஏற்பட்டது. அந்தப் புத்திர சோகத்தை அவள் எவ்வாறு தாங்கிக் கொண்டிருக்கிறாளோ! இறந்துப் போய்விட்ட சுனீதாவை விட உயிரோடிருக்கும் இவர்கள்தான் துரதிர்ஷ்டசாலிகள் என்று தோன்றிற்று.

கடை வீதியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த மேகலாவின் கண்ணில் பட்டாள் பாக்கியலட்சுமி. அவளைப் பார்த்ததுமே மேகலா மகிழ்ச்சியோடு பரபரப்பாய் ஓடி வந்தாள் அவளிடம்.

'சௌக்கியமாய் இருக்கீங்களாம்மா?'



அவள் முதலில் திகைத்துப் போனாலும், உடனே மேகலாவை அடையாளம் புரிந்து கொண்டு—

'நீயா? யாரோன்னு நினைச்சேன்' எப்படியிருக்கிறாய்?' என்று சந்தோஷமாய் கிட்டே இழுத்து அணைத்துக்கொண்டாள், அவளுக்கு அந்த வயதுப் பெண்கள் யாரைப் பார்த்தாலும் சுனீதாவின் நினைவுதான் வந்துகொண்டிருக்கும்.

'நன்றாய்தான் இருக்கேம்மா.'

'பலவீனம் எதுவும் இல்லையே?'

இல்லை என்று தலையாட்டினாள்.

'எங்கே போயிட்டிருக்கீங்க?'

'கோவிலுக்கு!' கையிலிருந்த பூக் கூடையைக் காட்டினாள். மேகலா அவளோடு கூட நடக்கத் தொடங்கினாள். அக்கூடையைத் தான் வாங்கிக் கொண்டாள் கையில்.

'நடந்து போறீங்களேம்மா?' என்றாள் மேகலா அவள் நோயாளி என்று பார்த்ததுமே தெரிந்துக்கொண்டுதான் இருந்தது. அவள் வேதனைக்கும் அக்கண்களுக்குக் கீழே ஏற்பட்டிருந்த கரிய கோட்டிற்கும் அர்த்தம் என்ன என்று இப்பொழுதுதான் புரிந்தது மேகலாவுக்கு. அவளுக்கு கிருஷ்ணராஜின் சாயல் நிறைய இருந்தது.

'கோவில் கிட்டத்தில் தானே? கொஞ்சம் நடக்கலாமேன்னுதான்' என்றாள்.

இருவரும் கோவிலுக்குள் நுழைந்தார்கள். மேகலா தானும் அவளோடு சேர்ந்து பிரதட்சணம் பண்ணினாள். அவள் தேங்காய் உடைத்தாள். பூஜாரி தந்த குங்குமத்தையும் பூவையும் மேகலாவுக்குத் தந்தாள். மேகலா குங்குமத்தை நெற்றியில் இட்டுக் கொண்டு பூவை வைத்துக் கொண்டாள். அவள் நடக்கமுடியாமல் ஆயாசப்பட்டுக் கொண்டிருந்

தைதப் பார்த்து மேகலா அவளுக்குக் கை கொடுத்தாள். இருவரும் வீட்டிற்குத் திரும்பி வந்தார்கள். அவள் ஆயாசப் பட்டதால் மேகலா தானே சாவிக் கொத்தை வாங்கி கதவைத் திறந்தாள். அவள் உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டாள். மேகலா விளக்கைப் போட்டு விட்டு அவளுக்கு மின் விசிறியைப் போட்டுவிட்டு அவள் உத்தர விட்டதன் பேரில் உள்ளே போனாள். தண்ணீர் கொண்டு வருவதற்கு. தண்ணீர் தம்ளருடன் அவள் திரும்பி வந்த போது கிருஷ்ணராஜ் உள்ளே வந்தான்

அவன் உள்ளேயிருந்து உரிமையோடு தண்ணீர் கொண்டு வந்து கொண்டிருந்த மேகலாவைப் பார்த்து நின்று விட்டான். முகத்தில் குங்குமப் பொட்டுடன் — தலையில் பூவுடன் — கையில் தண்ணீர்த் தம்ளருடன் நின்றுகொண் டிருந்த மேகலா அந்த வீட்டின் ஒரு நபராய் — உரிமையாய்த் தோன்றிற்று அவனுக்கு.

'என்னவாச்சும்மா? திரும்பவும் ஆயாசம் வந்து விட்டதா?' — தாயிடம் வந்து கேட்டான்.

அவள் ஆம் என்று தலையாட்டினாள்.

அவள் ஆஸ்துமா நோயாளி! கொஞ்சம் சுற்றினாலும், அமைதியில்லாமல் தவித்தாலும் ஆஸ்துமா வந்துவிடும்.

'எங்கே போயிட்டு வந்தாய்? கடைவீதிக்கா?' தாயின் காலிலிருந்த செருப்பையும் பக்கத்தில் கிடந்த பையையும் பார்த்துக் கேட்டான்.

'கோவிலுக்குப் போனேன்!'

'நடந்தா?'

ஆமாம் என்று தலையாட்டினாள் 'எவ்வளவு தடவை அப்படி நடந்து போகாதேன்னு சொல்லியிருக்கேம்மா!' பழித்தாற்போலச் சொன்னான்.



அவன் உடனே மேஜை டிராயரை இழுத்து அதிலிருந்த சிரெஞ்சை எடுத்து இஞ்ஜெக்ஷன் பாட்டிலில் குத்தி மருந்தை எடுத்துக்கொண்டு அவள் தோளில் குத்தினான்.

மேகலா பார்த்துக் கொண்டிருக்கையிலேயே பாக்கிய லட்சுமியின் ஆயாசம் கொஞ்சநேரத்தில் குறைந்தது.

'கிட்டேதானேன்னு நடந்துபோனேன். அந்தப் படிகளில் ஏறுவதற்குள் ஆயாசம் வந்துடுத்து. திரும்பி வரும்போது ரிக்ஷா எதையும் காணோம். பாவம். மேகலா இல்லாம லிருந்திருந்தால் ரொம்பக் கஷ்டமாகி விட்டிருக்கும்.'

'அவன் என்னவானான்?'

'சினிமா பார்க்கணும்னு சொன்னதால் அனுப் பினேன்ப்பா'

'அவனில்லாமல் வெளியே போகவேண்டாம்னு எவ்வளவு தடவை சொல்லியிருக்கேம்மா?' என்று அவன் அவள் கையைப் பிடித்து உள்ளே அழைத்துக் கொண்டு போனான். அவளைப் படுக்க வைத்துவிட்டுத் திரும்பி வந்தான்.

அதுவரை அங்கே நின்று கொண்டிருந்த மேகலா ஏனோ மேஜை பக்கமாய்த் திரும்பினாள். அங்கே கிருஷ்ணராஜின் சாமான்களோடு சேர்ந்து முயல் பொம்மையும் இருந்தது. அதன் கழுத்தில் சின்ன அட்டையில்! 'மேகா' என்று அழகாய் எழுதியிருந்தது. மேகலாவுக்குச் சிரிப்பு வந்தது மேகலாவின் கண்கள் சுனீதாவின் போட்டோவின் மீது படிந்தன. எவ்வளவு துரதிர்ஷ்டசாலி என்றெண்ணிக் கொண்டாள்.

கிருஷ்ணராஜ் வெளியே வந்தான்.

'உட்கார்' என்றான்.

'ஊஹூம், போறேன்னு' என்றாள், காய்கறிப்பையைக் கையிலெடுத்துக் கொண்டே.

'தாங்க்யூ' என்றான் அவன்.

'எதற்கு?'

'அம்மாவை வீட்டிற்குக் கொண்டுவந்து விட்டதற்கு.'

'ஆயாசம் வந்து விட்டால் அவங்களால் நகரவும் முடியாது, பேசவும் முடியாது. நீ கூட இருந்ததால் போச்சு. இல்லாவிட்டால் எனக்குத் தெரிஞ்சு நான் போய் கூட்டிட்டு வருவதற்குள் எவ்வளவு நேரமாயிடுமோ?' என்றான்.

மேகலாவுக்கு 'நீங்கள் எனக்கு நன்றி எதுவும் சொல்லக் கூடாது' என்று எதையாவது சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் எப்படிச்சொல்வது என்றுதெரியவில்லை. காய்கறிப் பையைக் கையிலெடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டாள்.

அவன் கேட் வரைக்கும் வந்து வழி யனுப்பினான். கேட்டைத் திறந்து, 'குட் நைட்' என்றான்.

மேகலாவுக்குத் திருப்பி என்ன சொல்லவேண்டும் என்று புரியவில்லை. வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டாள்.

## 20

இரவு ஒன்பது மணியாயிற்று.

கிருஷ்ணராஜ் ஆசுபத்திரியிலிருந்து வீட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். மேகலா வந்தாள். அந்தச் சமயத்தில் திடீரென்று வந்த மேகலாவைப் பார்த்து அவன் ஆச்சரியமடைந்தான்.



'பாட்டிக்கு முதுகுவலி தாங்கமுடியவில்லை. துடிதுடிச்சிட்டிருக்காங்க. தாங்க முடியாத வலியாம். மருந்து ஏதாவது இருந்தால் கொடுங்க டாக்டர்' என்றாள்.

அவன் மேகலாவைப் பார்த்தான். அவ்வளவு இருட்டையும் பொருட்படுத்தாமல் வந்திருந்த கலக்கம் அம்முகத்தில் நன்றாய்த் தென்பட்டது.

'மாத்திரைகள் தீர்ந்து விட்டதா?' நான்கு நாட்களுக்கு முன்னால் அவன் தந்திருந்தான்.

'நேற்று தான் தீர்ந்து பேச்சாம். எனக்குத் தெரியாது என்னிடம் சொல்லவில்லை.' என்றாள்.

கிருஷ்ணராஜ் மேஜை டிராயரைத் திறந்து மாத்திரைகளை எடுத்துத் தந்தான்.

'இதப் பார்! இப்படிப் பட்டவைகளையெல்லாம் எப்பொழுதும் எமர்ஜென்ஸிக்காக வாங்கி வைத்திருக்க வேண்டும். உங்க வீட்டில் ஆம்பிள்ளைங்கள் கூட இல்லை. இருட்டிய பிறகு நீ இப்படி ஓடி வருவது நன்றாயில்லை.'

அவன் மருந்துகளைத் தந்துவிட்டுக் கடுமையாய்ப் பார்த்தான். மேகலா தலையாட்டி விட்டு மருந்தை வாங்கிக் கொண்டாள்.

மேகலா புறப்பட்டுக் கொண்டிருந்தபோது அவன் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். ஒன்பது மணி அடிக்கவிருந்தது. 'தனியாய்ப் போவாயா?' என்றான்.

'போவேன். எனக்குப் பழக்கந்தான்' என்று சொல்லிக் கொண்டே போய் விட்டாள்.

கிருஷ்ணராஜ் நைட் டியூட்டிக்காக வந்திருந்த டாக்டரிடம் முக்கியமான நோயாளிகளின் விஷயத்தை ஒப்படைத்து விட்டு சைக்கிளில் புறப்பட்டான்.

வெளியே வீதி விளக்குகள் கொஞ்சதூரம் வரைக்கும் தான் பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தன. அதற்கப்புறம் இருட்டாய் இருந்தது வீதி. ஆசுபத்திரியிலிருந்து மெயின் ரோடுக்குப் போகும் அந்த வீதி ஆளரவமில்லாமல் இருந்தது. அவ்விடத்தில் வீடுகள் இல்லை. இரண்டு ஏக்கர் நிலப் பகுதியை ஒரு வியாபாரப் புள்ளி வாங்கிப் போட்டுவிட்டு அவ்விடத்தில் ஓட்டல் ஒன்றை கட்டத் தொடங்கியிருந்தான். பாதிச்சுவர்கள் எழும்பியிருந்தன. அதற்குள் முனிஸிபால் டிகாரர்களுடன் தகராறு வந்து அக்கட்டடம் அப்படியே நின்றுவிட்டது. அந்த நிலத்தைக் குறித்து கோர்ட்டில் கேஸ் நடந்து கொண்டிருந்தது.

கிருஷ்ணராஜ் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். அவன் நண்பர்கள் அந்த சைக்கிளைப் பார்த்துக் கேலி செய்வார்கள். குறைந்த பட்சம் மோட்டார் சைக்கிள் கூட இல்லாமல் இதென்ன சைக்கிள்? டாக்டர் பதவியின் மானத்தையே வாங்குகிறாய்?' என்பார்கள்.

அவன் அப்படிப்பட்ட வார்த்தைகளை யெல்லாம் பொருட்படுத்த மாட்டான். கோபமும் வராது. வீட்டிற்கும் ஆசுபத்திரிக்கும் இடையே அதிக தூரம் கூட இல்லை. பகல் சமயமாயிருந்தால் நடந்தேகூட வந்துவிடலாம்.

அவனுக்கு உத்யோகமே இன்னும் உறுதியாக வில்லை. மருத்துவம் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த போதே தந்தை இறந்து விட்டார். அவர் லெக்சரராய் வேலை செய்து கொண்டிருந்தார். நடுத்தரக் குடும்பம். தந்தை போன பிறகு அவன் படிப்பிற்கே பெரும்பாடாகி விட்டது. படித்து முடித்த பிறகும் கூட ஒரு வருடகாலம் வேலை வேட்டையில் கழிந்துவிட்டது. அவனுடன் படித்தவர்கள் நிறைய பேர் ஆஃப்ரிக்கா, அமெரிக்கா, கனடா, லிபியா என்று எங்கு வேலை கிடைத்ததோ அங்கே போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் அங்கே நிர்ச்சிந்தையாய் இருப்பதாய்க் கடிதம் வந்து கொண்டிருந்தது.



அமெரிக்காவிற்குப் போன அவன் நண்பன் பிரசன்னா கிருஷ்ணராஜிற்குக் கடிதம் எழுதினான்.

'நான் இங்கே உனக்காக ஒரு உத்யோகம் பார்த்து வைத்திருக்கிறேன். நீ இங்கே வந்தால் உறுதியான வேலையில் நன்றாய்ச் சம்பாதித்துக் கொண்டு நிம்மதியாய் இருக்கலாம். நீ உடனே வந்துவிடு' என்று எழுதியிருந்தான். அதோடு கூட பூர்த்தி பண்ணி அனுப்பவேண்டிய காகிதங்களைக் கூட அனுப்பினான். நண்பர்கள் வந்தபோது கிருஷ்ணராஜ் உடனே புறப்பட்டு வரும்படி சொல்லியும் அனுப்பினான். ஆனால் கிருஷ்ணராஜ் அவ்வாறு போக விரும்பவில்லை.

தான் அமெரிக்காவிற்குப் போய் விட்டால் தாய்? தாயை விட்டு விட்டுப் போக முடியாது. அவளை இப்பொழுது தன்னோடு கூட்டிச் செல்வதும் சாத்தியமில்லை. அவன் போய் விட்டால் அவள் தனியாய் இருக்க வேண்டியிருக்கும். தாயையும் உடன் அழைத்துக் கொண்டு போக முடிந்தால்தான் தானும் போகவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய விருப்பமெல்லாம் தன்னுடையது என்று சொந்தமாய் ஒரு க்ளினிக் வைத்துக் கொள்ளவேண்டும் என்பது ஒன்றுதான். தற்பமயம் இந்த க்ளினிக்கில் வேலை செய்துவந்தான் அவன். அந்த க்ளினிக்கில் வேலைசெய்து வந்த டாக்டர் வெளிநாட்டிற்குப் போயிருந்தார். அவர் திரும்பி வந்துவிட்டால் இந்த உத்யோகம்கூடபோய்விடும்.

சைக்கிளை ஓட்டிக்கொண்டே யோசனையில் ஆழ்ந்தபடி வந்து கொண்டிருந்த அவனுக்கு அந்த நிசப்தத்தைத் துளைத்துக் கொண்டு தொலைவில் எங்கிருந்தோ யாரோ அலறிய சப்தம் கேட்டது. அவன் திடுக்கிட்டு இந்த உலகத்திற்கு மீண்டு வந்தான். ஊன்றிக்கேட்டான். சந்தேகமில்லை. யாரோ பெண் ஒருத்தியின் குரல்தான்! அவன் சைக்கிளை

பிரேக் போட்டு நிறுத்தினான். தொலைவில் அந்த குட்டிச் சுவர்களுக்குப் பக்கத்திலிருந்து சப்தம் கேட்டது. அவன் அதற்குமேல் தாமதிக்க வில்லை. அங்கே எத்தனை பேர் இருந்தார்களோ, தான் தனியனால் இருக்கிறோமே என்றுகூடத் தயங்கவில்லை. தனக்கெதற்கு வீண் தொல்லை என்று கூட நினைக்கவில்லை. சைக்கிளை அங்கிருந்த மரத்தின் மேல் சாய்த்தாற்போல் போட்டு விட்டு,

'யாரங்கே? யாரங்கே?' என்று கத்திக் கொண்டே குட்டிச் சுவரின் பக்கமாய் ஓடி வந்தான்.

அங்கே இருட்டாய் இருந்தது.

'யார்?' பெரிதாய்க் கத்திய அவன் கத்தல் ஓசை அவ்விடத்தில் எதிரொலித்தது.

அலறல் சட்டென்று நின்றுவிட்டது.

அந்த இருட்டிலிருந்து ஒரு பெண் தடுக்கி விழுந்து கொண்டே ஓடிவந்து கொண்டிருந்தாள்! அவள் புடவை கிழிந்திருந்தது. ஜடை அவிழ்ந்திருந்தது. அழுது கொண்டே உயிரை உள்ளங் கையில் ஏந்திக் கொண்டே ஓடிவந்து கொண்டிருந்த அப் பெண்ணை விளக்கு வெளிச்சத்தில் பார்த்த அவன் விக்கித்துப் போய்விட்டான்.

'மேகலா! நீயா?' என்றான் திகைத்துப்போய், 'மேகலா! நீயா?' என்றான் திகைத்துப்போய். மேகலாவுக்கு அவனைப் பார்த்ததும் உயிர் திரும்பி வந்தாற் போலிருந்தது. அழுது கொண்டே நெருங்கி வந்தாள். அவன் தன்னையறியாமல் கைகளை நீட்டினான். அழுது கொண்டிருந்த மேகலா சட்டென்று அவன் கைகளுக்கிடையே வந்து அவன் மார்பில் ஒட்டிக்கொண்டு விட்டாள். அடுத்த நிமிஷம் அழுகை மேன்மேலும் மடை திறநத வெள்ளம் போல் வரத்தொடங்கி விட்டது. அவன் மேகலாவை மார்போடு அழுத்திக் கொண்டான். வேடனின் வலையிலிருந்து மயிரிழையில் தப்பித்துக் கொண்டு ஓடிவந்த மானைப் போல நடுநடுங்கிக் கொண்



டிருந்த மேகலாவை அவன் மேலும் மேலும் தன்னிடம் அழுத்திக் கொண்டாற்போல இழுத்து அணைத்துக்கொண்டான். அவன் கைகள் மேகலாவிற்குப் புகலிடம் தந்து கொண்டிருந்தாற்போல மார்போடு அழுத்திக்கொண்டன்.

'உஷ்! சும்மாயிரு! சும்மாயிரு! நான் யாரோ என்று நினைச்சேன்! மைகாட்!' அவன் குரல் நடுங்கிற்று.

'அதனால்தான் கேட்டேன், தனியாய்ப் போக முடியுமா என்று. எனக்கென்னவோ பயமாயிருந்தது! உஷ்! சும்மாயிரு! சும்மாயிரு!' சமாதானப் படுத்துவது போலச் சொன்னான் அவன்.

'நீங்கள் வந்திருக்காவிட்டால் நான் செத்தே போயிருப் பேன்' மேகலா ஓவென்று கதறத் தொடங்கினாள்.

'மைகாட்!' அவன் மேகலாவின் தலையைத் தடவித் தந்தான்.

'இன்றைக்கு நான் யார் முகத்தில் விழித்தேனோ?' மேகலாவிடம் பொங்கி வந்த துக்கம் அடங்குவதற்கு ஐந்து நிமிஷம் பிடித்தது.

'நான் ... நான் ... வந்துகொண்டிருக்கும்போது அவன் கூடவே வந்தான். நான் விடுவிடென்று நடந்தேன். அவன் இங்கே வந்ததும் என் கையைப் பிடித்துக் கொண்டு விட்டான். நான் எவ்வளவு திமிறியும் பயனில்லாமல் போய்விட்டது. என் வாயைப் பொத்தி, கைகளைப்பின்னுக் குச் சேர்த்துப் பிடித்துக் கொண்டு அந்த பக்கமாய் இழுத்துக் கொண்டு போனான். கால்களால் தள்ளினேன். ஆனாலும் எனக்குப் பலம் போதவில்லை. என் உயிரே போய்விட்டது என்றெண்ணினேன்.' தேம்பிக் கொண்டே அவள் சொன்னாள்.

அந்த நேரத்தில் மிகப் பயந்து போய்விட்ட சின்னக் குழந்தையைப் போலத் தென்பட்டாள் அவள்.

கிருஷ்ணராஜின் இதயத்தில் விநோதமான உணர்ச்சி ஏற்பட்டது. டாக்டராய் அவன் மனம் மேகலாவைக் கூர்ந்து பரிசீலித்தது. அந்த முகம் ஆபத்திற்கு ஆளாகிவிட்டிருந்ததே தவிர ஆபத்து ஏற்பட்டிருக்க வழியில்லை.

'நான் போய் பார்க்கிறேன். அவன் அங்கே தான் இருப்பான். நாலு உதை கொடுத்துட்டு வரேன்' என்றான் ஆவேசமாய் அவன்.

மேகலா அவன் கையைப் பிடித்துத் தடுத்தாள். 'வேண்டாம், வேண்டாம். போய்விடலாம். எனக்குப்பயமாய் இருக்கு.'

அந்தச் சமயத்தில் வீதியில் போய்க் கொண்டிருந்த ஓரிருவர் மரத்தில் சாய்ந்துக் கிடந்த சைக்கிளையும் வீதியிறக்கத்தில் நின்று பேசிக்கொண்டிருந்த அவ்விருவரையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போய்க்கொண்டிருந்தார்கள்.

'வா, போகலாம்' மேகலாவின் கையை விட்டுவிட்டுச் சொன்னான் அவன். மேகலா அவனைத் தொடர்ந்து நடக்கப் போனாள். வலதுகாலை முன் நோக்கி எடுத்து வைக்கப்போனவள் கால் வலியெடுத்ததால் 'அய்யோ' என்று நின்று காலைப் பிடித்துக்கொண்டு முழுங்காலிட்டு உட்கார்ந்து கொண்டு விட்டாள்.

'என்னவாச்சு?' என்றான் அவன்.

'கால் சுளுக்கிக் கொண்டு விட்டது போலிருக்கு. ரொம்ப வலிக்கிறது.'

அவன் மேகலாவின் தோளைப் பிடித்துத் தூக்கி நிற்க வைத்தான். காலைப் பரிசோதித்தான். அவள்கால் வலியால் துடிதுடித்துப்போனாள். அவன் கைத்தாங்கலாய்ப் பிடித்துக் கொண்டே நடத்தி அழைத்துக் கொண்டு வந்தான் வீதிக்கு,



மேகலாவின் அந்தக் கொஞ்சதூரம் நடந்து வருவதற்குள் பெரும்பாடாகி விட்டது அவன் சைக்கிளுக்கருகில் அவளை அழைத்து வந்து முன் பாகத்தைக் காட்டி, 'ஏறு' என்றான்

'நானா?' என்றாள் ஆச்சரியமடைந்தவளாய். 'வேண்டாம். நடந்தே வரேன்' என்றாள் தலையைத் திருப்பிக் கொண்டே.

'நடந்து கிழிப்பாய்! அவ்வளவு தூரம் வீடுவரைக்கும் இந்த கால் வலியோடு எப்படி நடப்பாய்? கால் வலி இன்னும் அதிகமாகும். உம், ஏறு' என்றான்.

மேகலா அதற்கு மேல் பேசவில்லை. ஏறி உட்காரப் போனாள். ஏற அவளுக்கு வரவில்லை அவன் இடுப்பைப் பிடித்துத் தூக்கி உட்கார உதவி பண்ணினான். சைக்கிளின் பக்கத்தில் எப்படிப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லித் தந்தான்.

இரவு பத்து மணியளவில் மேகலாவை சைக்கிளில் ஏற்றி உட்கார வைத்துக்கொண்டு வந்து கொண்ருந்த கிருஷ்ணராஜ் அந்த வீதியில் இருந்த ஓரிருவர் ஆச்சரியத்தோடு பார்க்கத் தொடங்கினார்கள். பத்துமணி ஆகிவிட்டதால் எல்லோரும் படுக்கப்போய் விட்டார்கள். அதனால் ஜனசஞ்சாரம் அதிகமாய் இல்லை.

மானஸா வந்து கதவைத் திறந்தாள். மேகலாவைப் பார்த்து ஆச்சரியமடைந்து விட்டாள். மங்களம் முக்கி முனகிக்கொண்டே முன்னால் உட்கார்ந்து கொண்டிருந்தாள். ஸ்ரீரஞ்சனி தாயின் முதுகிற்கு வெந்நீரில் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள். கிருஷ்ணராஜ் மேகாலவை வீட்டில் ஒப்படைத்து விட்டு,

'பெண்களை இருட்டிய பிறகு இப்படி வெளியே தனியாய் அனுப்பாதீங்க. இன்றைக்கு எவ்வளவு பெரிய ஆபத்து நேர்ந்தது தெரியுமா?' என்று நடந்ததைச் சொன்னான்.

'என்ன செய்யறதுப்பா? இந்த வீட்டிற்கு அவள் தான் ஆம்பிள்ளை! இதெல்லாம் என் தலையெழுத்து. என் மூஞ்சியில் இன்ன எழுதி வைத்திருக்கிறதோ!' என்றாள் மங்களம் தலையிலடித்துக் கொண்டாள்.

மங்களத்திற்காகத் தந்திருந்த மருந்துகள் அந்தப் போராட்டத்தில் கையிலிருந்து விழுந்துவிட்டது. கிருஷ்ணராஜ் திரும்பவும் கடைத் தெருவுக்குப் போய் மருந்துக் கடையிலிருந்து மருந்துவாங்கிவர சைக்கிளில் புறப்பட்டான்.

மேகலா உடைமாற்றிக் கொண்டிருக்கையில் ஸ்ரீரஞ்சனி ஹீனஸ்வரத்தில் கேட்டாள்.

'மேகா! உனக்கு...உனக்கு... ஒன்றும் ஆயிடலையே! அந்த அயோக்கியன் உன்னை ஒன்றும் பண்ணிடலையே!' என்றாள்.

மேகலா மறுத்துத் தலையசைத்தாள். 'இல்லைம்மா டாக்டர் சமயத்திற்கு வ ந் தா ர். இல்லாவிட்டால்... மேகலாவின் உடம்பு — அக்காட்சி திரும்பவும் நினைவிற்கு வந்து நடுங்கிற்று.

ஸ்ரீரஞ்சனி சட்டென்று வந்து மகளைக் கட்டிக் கொண்டாள். மேகலாவின் தலையை மார்போடு அழுத்திக் கொண்டாள். 'இன்றைக்கு நீ இல்லை, நான் தான் அதிர்ஷ்டசாலி நான் எழுந்த வேளையின் விசேஷந்தான்! ஏதோ மருந்து வாங்கிட்டு வரப் போயிருக்கிறாய்னு நினைச்சேனே தவிர இவ்வளவு ஆபத்து நேரும் என்று நினைக்கலை. டாக்டர் வராமலிருந்திருந்தால் இன்று என்னவாயிருக்குமோ?' அவள் அழுதுத் தீர்த்து விட்டாள்.

'ஆமாம், ஆமாம்' என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே மேகலாவின் உடம்பு நடுங்கிற்று. முதுகுத்தண்டிலிருந்து பயம் கிர்ரென்று மேலே படர்ந்தாற்போல இருந்தது. தான் வீடு வந்து சேர்ந்து விட்டாளா? இது நிஜந்தானா



சந்தேகம் இல்லையே? அவன் மனம் இன்னும் அந்த பயத்திலிருந்து விடுபடவில்லை.

கிருஷ்ணராஜ் வந்தான். அ வ ன் மங்களத்திற்கு மருந்து கொடுத்தான். ஒரு தம்ளரில் தண்ணீரைத் தானே மேகலாவிடம் தந்து, மருந்தைக் கொடுத்துவிட்டு 'இதைச் சாப்பிடு தூக்கம் வரும். விடிந்ததும் கால் வலி கூட குறைந்து விடும்' என்று பிடிவாதமாய் மருந்தை விழுங்கச் செய்தான். மானஸா படுக்கையைவிரித்துப் போட்டாள்.

கிருஷ்ணராஜ் தானே மேகலாவின் கையைப் பிடித்து அழைத்து வந்து படுக்கையில் படுக்க வைத்தான்.

'தூக்கம் வருகிறதா?' என்று கேட்டான்.

'வருகிறது? என்று தலையாட்டினாள்.

'தூங்கு. தூங்கினால் வலியெல்லாம் குறைந்து விடும்' என்றான். அக்குரலில் கு ழை வு ம் பரிவும் இருந்தன. அக்கண்களில் இரக்கமும் அன்பும் இருந்தன. அவனுக்குக் கூட அச்சம்பவம் நினைவுக்கு வந்தபோது உடம்புசிலிர்த்தது.

மேகலாவும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அக்கண்களில் பயம் இன்னும் அகலவில்லை. கொஞ்சம் ஏதாவது சப்தம் கேட்டாலும் அந்த உடம்பு தூக்கிவாரிப் போட்டது. அவன் பக்கத்தில் நின்று கைகளைப் பின்னுக்குக் கட்டிக் கொண்டு மேகலாவையே பார்த்துக் கொண்டிருந்தான். தூக்க மருந்து வேலை செய்யத் தொடங்கி விட்டதற்கு அறிகுறியாய் மேகலாவின் கண்கள் பாரமாயின.

மேகலா தன்னை யறியாமல் கையை நீட்டினாள். கிருஷ்ணராஜ் வலது கையைத் தந்தான். மேகலா அக்கையை அழுத்தமாய்ப் பிடித்துக்கொண்டாள்.

'நான் இங்கேயே தான் இருக்கேன் போயிடமாட்டான். நீ தூங்கு' கம்பீரமாய் இருந்த அக்குரல் தேற்றுவது போல இருந்தது.

மேகலாவின் கண்களில் நிம்மதி பிறந்தது! பத்து நிமிஷங்களில் மேகலா தூக்கமயக்கத்தில் ஆழ்ந்து விட்டாள் போல் தன்னை மறந்து தூங்கத் தொடங்கினாள். கிருஷ்ணராஜ் மேகலாவுக்குப் போர்வையைப் போர்த்தினான். மங்களத்திடமும் ஸ்ரீரஞ்சனியிடம் சொல்லிக் கொண்டான். ஸ்ரீரஞ்சனி அவனுக்குக் கண்ணீர் மல்க கைகளைக் கூப்பினாள். அவள் உதடுகள் லேசாய் பிரிந்தனவே தவிர வார்த்தைகள் வெளிவரவில்லை.

அவன் அந்த வீட்டைவிட்டு வெளியே வரும்போது இரவு பதினொன்றரை மணியாகி விட்டது.

## 21

தஞ்சைக்கருகில் காவேரியில் வெள்ளம் வந்துவிட்டது. அந்தச் சுற்றுப்புறத்திலிருந்த கிராமம் முழுவதும் காலரா தீவிரமாய்ப் பரவியிருந்தது. அதனால் மாநிலத் தலைநகரிலிருந்து டாக்டர்களின் கூட்டம் போய்க்கொண்டிருந்தது. அவர்களோடு சேர்ந்து கிருஷ்ணராஜையும் வரச்சொல்லி அழைப்பு வந்தது. பாக்யலட்சுமிக்கு உடம்பு சரியாய் இருப்பதில்லை. கிருஷ்ணராஜ் மங்களத்தைத் தாய்க்குத் துணையாய் வைத்துக்கொள்ளச் சொல்லிவிட்டுப் போனான்.

மங்களம் ஒரு நாள் வந்தாள். இரவு வேளையில் முதுகு வலியால் வருந்திய மங்களம் அடுத்த நாள் மேகலாவைக் கூப்பிட்டு, "அவளுக்கு என்னால் துணையிருக்க முடியவில்லை. அவள்தான் எனக்காக கண்விழித்துக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. கொஞ்சம் நீ போய் இரும்மா" என்று உத்தரவிட்டாள்.



மேகலா போனாள். இரண்டு நாட்கள் பாக்கியலட்சுமியின் வீட்டிலேயே இருந்தாள். சின்னவீடு. ஆனாலும் மிக வசதியாம் இருந்தது. தண்ணீர் வீட்டுக் குழாயடியிலேயே வந்தது. மேல் வேலைக்கு வேலைக்காரி இருந்தாள். சமைப்பதையும் சாப்பிடுவதையும் தவிர வேறெந்த வேலையும் இல்லை.

பாக்கியலட்சுமி வீட்டை நன்றாய் வைத்திருப்பாள். அவளுக்கு அந்தந்தப் பொருள்கள் அந்தந்த இடத்தில் இருக்க வேண்டும். அவள் துப்புறவாய் வைத்துக் கொண்டிருந்த சமையலறையைப் பார்த்தால் மேகலாவுக்கு மிகச் சந்தோஷமாய் இருக்கும்.

'நான் பெரியவளாகி அப்பொழுது நிறைய பணம் வந்தால் நான் அசல் இதேபோல்தான் சமையலறையை வைத்துக் கொள்வேன்' என்றெண்ணிக் கொள்வாள்.

வண்ணான் வீட்டிற்கே வந்து துணிகளை வாங்கிக் கொண்டு போய் இஸ்திரி போட்டுத் திருப்பிக் கொண்டுவந்து கொடுப்பான். அவள் எல்லோரிடமும் 'அப்பா', 'தம்பீ' என்று பேசியே வேலை வாங்கிக் கொண்டு விடுவாள். பேச்சு எவ்வளவு நிதானமோ சுபாவமும் அத்தனைக் கத்தனை மென்மையானது. வீட்டிற்கு யார் வந்தாலும் சாப்பிட ஏதாவது கொடுக்காமல் அனுப்பமாட்டாள். குறைந்தது காபியாவது குடித்துவிட்டுதான் போகவேண்டும்.

மேகலா அவள் உத்தரவின்படி, இஸ்திரிபோட்ட கிருஷ்ணராஜின் உடைகளைக் கொண்டுவந்து அவன் அறையிலிருக்கும் கண்ணாடி பீரோவிற்குள் அடுக்கி வைக்கும் போது அவளுக்கு ஏதோ போல இருக்கும். அவன் புத்தகங்களையும் உடைகளையும் தொடும்போது அவனைத் தொட்டாற்போலவே இருக்கும். மேகலா முன் அறையிலிருக்கும் மேஜையைத் துப்புறவாய் வைக்கும்பொழுது முயல் பொம்மையைப் பார்த்து நாக்கை நீட்டி அழுகு காட்டிப்

பழிப்பாள். அவனிடம் பழைய ஸ்டெதாஸ்கோப் ஒன்று இருந்தது. சமீபத்தில் புதியதாய் ஒன்றை வாங்கிக் கொண்டிருந்ததால் பழையதை மேஜை மேல் போட்டிருந்தான். மேகலா அதை ஒரு அபூர்வப் பொருளாய்த் தொட்டு பார்த்துவிட்டுத் திரும்பவும் ஜாக்கிரதையாய் மேஜைமேல் வைப்பாள். மேகலா அக்காரியங்களைப் பண்ணிக் கொண்டிருக்கும்போது இடையிடையே யோசனையில் ஆழ்ந்து போய் விடுவாள்!

அன்றிரவு அந்த அயோக்கியனிடமிருந்து தன்னைக் காப்பாற்றியபொழுது அவள் அழுது கொண்டிருந்தபொழுது அவன் எப்படி இழுத்து அணைத்துக் கொண்டான்! மேகலாவுக்கு அந்த நினைவு வந்துவிட்டால் உடம்பு காற்றில் மிதந்துகொண்டிருப்பது போலத் தோன்றும்.

கண்களை மூடிக் கொண்டு விட்டால் இன்னும் கூட அவன் கைகளுக்கிடையே அணைப்புண்டு கிடந்தாற் போலவே தோன்றும்! பாதுகாப்பு தந்தாற்போல இருந்த அந்த அணைப்பில்தான் எவ்வளவு சுகம் இருந்தது! எவ்வளவு நன்றாய் இருந்தது!

பாக்கியலட்சுமி அரிசியைப் பொறுக்கிக்கொண்டோ அல்லது வீட்டை ஒழித்து வைத்துக் கொண்டோ இருக்கும் போது தன் கஷ்டங்களையெல்லாம் சொல்லிக் கொண்டே யிருப்பாள், மேகலாவிடம்.

'பையனுக்குக் கல்யாண சம்பந்தங்கள் பார்த்துட்டிருக்கேம்மா!

அது ஒரு கடமைதான் என் வாழ்க்கையில் பாக்கியிருக்கு. அதை எவ்வளவு சீக்கிரத்தில் முடித்து விடுகிறேனோ அவ்வளவு சுகம்! அவனுக்கு மனைவி வந்து விட்டாள் வீட்டுப் பொறுப்பையெல்லாம் ஒப்படைத்து விட்டு கிருஷ்ணா ராமான்னு இருந்துடுவேன். இப்ப என்னைத் தனியாக



விட்டுவிட்டு எங்கேயாவது போகணும் என்றாலே அவனுக்குப் பயம் அப்பவானால் ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் துணையாய் இருக்கலாம், இல்லையா? இந்த ஊரிலேயே ராஜாராம் என்று பெரிய அட்வகேட் தன் தம்பி மகளைத் தருவதாய்ச் சொல்லியனுப்பிட்டேயிருக்கிறார். பெண்ணை நாங்கள் பார்த்திருக்கிறோம். நன்றாகவே இருப்பாள். பி. ஏ. படிச்சிட்டிருக்கிறாள். எனக்கு இந்தச் சம்பந்தத்தை முடித்து விடணும்னுதான் இருக்கு!'

புத்தகங்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்த மேகலா சட்டென்று நின்று விட்டாள். மேகலாவின் மனதை வானத்தில் சிறகடித்துப் பறக்கச் செய்துகொண்டிருந்த கற்பனைச் சங்கிலி பட்டென்று அறுநது விட்டது. அவள் வார்த்தைகள் மேகலாவின் இதயம் தீட்டிக் கொண்டிருந்த அழகிய ஓவியக் காட்சிகளையெல்லாம் அழிக்கத் தொடங்கி விட்டன.

மேகலா உண்மை நிலைக்கு வந்தவளாய் தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

அந்த இரண்டு நாட்கள் இருந்ததன் மூலமாய் பாக்கிய லட்சுமிக்கும் மேகலாவுக்கும் நெருக்கம் ஏற்பட்டது.

அவ்விரண்டு நாட்களும் அவள் சதா சுனீதாவைப் பற்றியே பேசினாள். ஆல்பத்தைக் காட்டினாள்.

கல்லூரியில் முதல் வகுப்பில் பாஸானதைக் குறித்துச் சொல்லி வாங்கிய பரிசுகளைக் காட்டினாள்.

அவள் நினைவெல்லாம் சுனீதாவைச் சுற்றியே இருந்ததாய்த் தோன்றிற்று மேகலாவுக்கு.

கிருஷ்ணராஜ் வந்துவிட்டான். மேகலா வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டாள்.

நான்கு நாட்களுக்குப் பிறகு மறுபடியும் பாக்கியலட்சுமி மேகலாவை வரச்சொல்லி செய்தி அனுப்பினாள்.

ராஜாராமின் தம்பி மகளின் சம்பந்தம் செட்டிலாகி விட்டதாம். மாலையில் வெற்றிலைப்பாக்கு மாற்றிக் கொள்ள போகப் போகிறார்களாம்! பெண்ணின் முகத்தில் பொட்டு வைத்து, பூவையும் புடவையையும் தருவதற்கு மேகலாவை அனுப்பச் சொல்லி கேட்டிருந்தாள் அவள். மேகலா போக முடியாது என்று சொல்லிவிட்டாள். ஏனோ தெரியவில்லை அவளுக்கு அது பிடிக்கவில்லை.

மங்களம் சும்மாயில்லை. 'இதென்ன? போக முடியாதுன்னு சொல்லிட்டால் மரியாதையாய் இருக்குமா? அவள் சொல்லியனுப்பியதே நம் அதிர்ஷ்டம் என்று நினைத்துக் கொண்டு போகணுமே தவிர, பாவம், அவளுடைய மகள் மட்டும் இருந்திருந்தால் அவள் இப்படி கேட்க வேண்டியிருந் திருக்காதே! அன்றைக்கு அவள் அந்த மகளை நினைத்துக் கொண்டு எவ்வளவு அழுதாள் தெரியுமா?'

மேகலா அதற்கு மேல் வாதாடவில்லை.

தலைப்பின்னிக்கொண்டு உடைமாற்றிக் கொண்டு புறப் பட்டு விட்டாள். மேகலா போனபொழுது கிருஷ்ணராஜ் வீட்டில்தான் இருந்தான்.

எதிரேயிருந்த அறையில் தரகரும் ஜோதிடரும் உட்கார்ந் திருந்தார்கள். அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தான். அவன் பாக்கியலட்சுமி கூடையில் வாழைப்பழங்களையும் மஞ்சள் குங்குமத்தையும் எடுத்து வைத்துக் கொண்டிருந் தாள். மேகலா வந்ததைப் பார்த்ததுமே அவள் முகம் மலர்ந் து.

'வாம்மா, வா' என்றாள் மேகலா அவள் முகத்தைப் பார்த்தாள். பாட்டி சொன்னது உண்மைதான். அவள் கண்கள் நன்றாய் அழுதிருந்தாற்போல் சிவந்து உப்பியிருந் தன. கண்களுக்குக் கீழே கருப்பு வளையங்கள் தென்பட்டன.

'நான் எடுத்து வைக்கிறேன். நகருங்கள்' என்றாள் மேகலா.



'எல்லாவற்றையும் வைத்தேனோ இல்லையோ?

ஞாபகமறதி ஜாஸ்தியாகி விட்டது!' என்று அவள் எடுத்துச் செல்ல வேண்டிய லிஸ்ட்டை ஒப்பித்தாள். மேகலா கணக்கிட்டுப் பார்த்து விட்டு 'எல்லாம் இருக்கு' என்று சொன்னாள்...

அவள் மேகலாவை உள்ளே கூப்பிட்டாள். ஜரிகைப் போட்ட பச்சைப் புடவையொன்றை எடுத்துத் தந்து, 'இதைக் கட்டிக்கோம்மா! உன் ஜாக்கெட்டிற்கு மேட்சாய் இருக்கும்' என்றாள்.

'சே! வேண்டாம்' சங்கோஜத்துடன் மறுத்தாள் மேகலா.

'கட்டிக்கொள். கட்டிக் கொண்டு தீரணும். கட்டிக்கா விட்டால் பார், என்மேல் ஆணை' அவள் சொல்லி விட்டுச் சரேலென்று அங்கிருந்து போய்விட்டாள்.

மேகலா வேறு வழியில்லாமல் கட்டிக்கொள்ள வேண்டி யிருந்தது. மறுத்தால் பிடிவாதக்காரி என்றெண்ணிக் கொண்டு விடுவாளோ என்று நினைத்து கட்டிக் கொண் டாள். கிருஷ்ணராஜ் அதற்குள் வெள்ளை உடைகளை எடுத்துக்கொண்டு தயாராகிவிட்டிருந்தான். தாய் கொடுத்த காபியை வாங்கிக் கொண்ட பொழுது அது சிந்தி பான்ட்டி லும் ஷர்ட்டிலும் கறையாகிவிட்டது.

'ஐயோ! இப்படியாயுடுத்தே, இதென்னது? சுபமாய் தாம்பூலம் மாற்றிக்கப் போற சமயத்தில்' பாக்கியலட்சுமி அதைப்பார்த்து ஒரு வினாடி சலனமில்லாமல் நின்று விட்டாள்.

'என்ன? சகுனம் சரியாயில்லையா உனக்கு? விட்டு விடலாமா?' என்றான் கிருஷ்ணராஜ் சிரித்துக்கொண்டே,

'சீ! சும்மாயிருடா! இதென்ன பேச்சு??

'பின்னே என்னம்மா, உனக்கு எல்லாம் சென்டி மென்ட்ஸ் தான்! இதில் என்ன இருக்கு சொல்லு? என்னை பட்டது காபி சிந்திவிட்டது. உன்னிஷ்டம்மா. நீ வேணும் வேணும் என்று தேடிப்பிடித்துட்டு வந்திருக்கிற பொண்ணு எனக்கென்ன வந்தது?'

'என்னவோப்பா! எனக்கு ஒவ்வொன்றுக்கும் இப்பல்லாம் பயமாயிருக்கு' என்றாள் அவள் சமையலறைக்குள் நுழைந்து கொண்டே.

கிருஷ்ணராஜ் உடைமாற்றிக் கொள்வதற்காக வேறு உடைகளை எடுத்தான். கோதுமை நிறத்தில் பான்ட்டும் ஷர்ட்டும் நன்றாகவேயிருந்தன. ஆனால் சட்டையில் மேலே இரண்டு பொத்தான்கள் இல்லை.

'நான் தைத்துத் தரேன்' என்று மேகலா சட்டையை வாங்கிக் கொண்டாள். ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டு பட்டன்களைத் தைத்துக்கொண்டிருந்தாள்.

அதற்குள் பின்னாலிருந்து பாக்கியலட்சுமி வந்து, '.. வைத்துக்கோம்மா' என்று பெரிய பூப்பந்தைத் தானே மேகலாவின் தலையில் வைத்தாள்.

'ஆயிடுத்தா?' என்று கிருஷ்ணராஜ் உள்ளே வந்தான்.

'சீக்கிரமாய் வாங்க. முகூர்த்த நேரம் தாண்டிவிடும்' ஜோதிடர் அவசரப்படுத்தினார்.

'இது கல்யாண முகூர்த்தம் இல்லையே' என்றான் கிருஷ்ணராஜ்.

'அழகாயிருக்கு. அதனதன் முக்கியம் அது அதுக்கு' என்றார் அவர்.



'அதெல்லாம் உங்கள் சப்பைக் கட்டுக்கள்! நடக்கணும் என்றிருந்தால் நடந்தே தீரும். எந்த முகூர்த்தத்தாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது அதை' என்றான் கிருஷ்ணராஜ்.

'அப்பப்பா! நீ வாதாடாமல் கொஞ்சநேரம் அவர் சொன்னபடி கேளு கிருஷ்ணா' என்று கொஞ்சினாள் தாய்.

பேன்ட்டை மட்டும் போட்டுக்கொண்டு பனியனோடு இருந்த கிருஷ்ணராஜ் மேகலாவிற்கு முன்னால் வந்து நின்றான். மேகலா மளமளவென்று தைத்துக் கொண்டிருந் தாள்.

'உம், உம் சீக்கிரமாய் ஆகட்டும் மேகலா! முகூர்த்த இருக்குத் தாமதமாயிடுத்துன்னு வை, நாளைக்கு ஏதாவது ஆச்சுன்னால் நீ சீக்கிரமாய் பட்டன் தைக்காததால்தான் என்று சொல்வாங்க'. சிரியஸாய் சொல்லப் போன அவன் .க்கென்றுச் சிரித்துவிட்டான்.

மேகலா ஷர்ட்டை அவனிடம் கொடுத்தாள். அவனைக் கிட்டத்தில் பார்த்தபோது திரும்பவும் அதே உணர்ச்சி! அவன் மார்பில் அவன் அழுத்தமான அணைப்பில்தான் தன்னைக் குழந்தையைப் போல ஒண்டிக் கொண்டிருந்த அதே உணர்ச்சி! மேகலா அவனையே பார்த்துக் கொண்டிருந் தாள்.

சட்டையை அவன் வாங்கிக் கொண்ட போதிலும் அவள் விடவில்லை. அவனும் மேகலாவையே பார்த்துக் கொண்டிருந்தான். சிவப்புக் கரைப் போட்ட பச்சைப் புடவையைக் கட்டிக் கொண்டு, லூசாக ஜடை பின்னிக் கொண்டு, தலைநிறைய பூவைத்துக் கொண்டிருந்த மேகலா கண்களுக்குப் புதிய தோற்றத்துடன் தென்பட்டாள். உடை மனிதனுக்கு இவ்வளவு மாற்றத்தை ஏற்படுத்தி விடுமா என்று தோன்றிற்று.

'என்ன யோசிக்கிறாய்? விடு' சட்டையை இழுத்துக் கொண்டே முறுவலுடன் சொன்னான் அவன். மேகலா சட்டென்று சட்டையை விட்டாள்.

அவன் சிரித்துக் கொண்டே சட்டையை மாட்டிக் கொண்டான்.

'இந்தா, இதை மறந்து போயிட்டேன். ரவிக்கைத் துண்டு, மணமகளுக்கு' என்று வந்தாள் பாக்கியலட்சுமி. மேகலா அதையும் பையில் எடுத்து வைத்தாள்.

'என்னப்பா, இனி தாமதிக்காதே டாக்ஸி கூட வந்துடுத்து!' — தரகர் கத்தினார்.

மூவரும் புறப்பட்டார்கள். கிருஷ்ணராஜ் வீட்டைப் பூட்டி விட்டு வந்தான். பின் சீட்டில் நடுவில் உட்கார்ந்து கொண்டாள் பாக்கியலட்சுமி. அவளுக்கு இரு பக்கங்களிலுமாய் உட்கார்ந்துக் கொண்டார்கள் மேகலாவும் கிருஷ்ணராஜும். பாக்கியலட்சுமி தன்னையறியாமல் கண்களைத் துடைத்துக்கொண்டாள். இந்த நாளை எவ்வளவு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் என் செல்லப்பெண்! எப்பொழுது பார்த்தாலும் அண்ணாவின் கல்யாணப்பேச்சு தான்! அந்தப்புடவையைக் கட்டிக்கொள்ளப் போகிறேன், இந்த நகையைப் போட்டுக் கொள்ளப் போகிறேன் என்று சதா சொல்லிக் கொண்டேயிருப்பாள்!

கிருஷ்ணராஜ் தாயை அணைத்துக் கொண்டான்.

'சும்மாயிரும்மா, சும்மாயிரு'-தேற்றுவது போலச் சொன்னான்.

மேகலாவுக்கு அந்தச் சமயத்தில் அவள் தான் தாயாகவும், பாக்கியலட்சுமி சின்னப் பெண்ணாகவும் தோன்றிற்று. அவன் குரலில் ஒருவித பரிவு இருந்தது. அது வருத்தத்தில் தோய்ந்து கொண்டிருக்கும் இதயத்தை வருடினாற் போலிருக்கும். அது அவனுக்குக் கடவுள் தந்த வரம் போலும்! டாக்ஸி வேகமாய் மணமகள் வீட்டை நோக்கிப் பறந்தது.



## 22

மேகலா பாக்கிய லட்சுமிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு வெற்றிலைப் பாக்கைப் பெற்றுக்கொண்டு முகூர்த்தத்தை நிச்சயம் பண்ணும் நிகழ்ச்சியை கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர்கள் நல்ல பணக்காரர்கள் தாம். வீடு சோபாக்களாலும் பிற சாமான்களாலும் அலங்காரமாய் இருந்தது. வெள்ளித் தம்ளர்களில் தண்ணீர் தந்தார்கள். காபிகளைத் தந்த கப்புக்கள் மிக அழகாயிருந்தன.

ராஜாராமின் தம்பி பீமசங்கரன் நல்ல பசையுள்ளவர். அவர் உடுத்தியிருந்த உடைகளும், கைகளில் அணிந்திருந்த மோதிரங்களும் அவர் பணபலத்தையும் டாம்பீகத்தையும் காட்டிக் கொண்டிருந்தன.

மணமகளை அழைத்து வந்தார்கள். அவள் பெயர் பானு. ஒல்லியாய் இருந்தாள். ஜரிகை பார்டர் போட்ட வெப்பு அமெரிக்கன் ஜார்ஜெட் புடவையை உடுத்திக் கொண்டிருந்தாள். கைகளிலும் கழுத்திலும் கெம்பு நகைகள். பானு அதிகமாய்ப் பேசவில்லை. அவள் சார்பில் தந்தைதான் அதிகமாய்ப் பேசினார். சிறு வயதிலே தாயை இழந்துவிட்டதால் அவரே தாயும் தந்தையுமாய் இருந்து வளர்த்தாராம். சமைக்க நன்றாய்த் தெரியாதாம்.

'ஆனாலும் நான் கற்றுத் தந்து, ஈடுக்கட்டிக் கொண்டு போய்விடுவேன், பயப்படத் தேவையில்லை' என்றாள் பாக்கியலட்சுமி.

'சிறுவயதிலிருந்தே வேலைக்காரர்களின் மூலமா வளர்ந்தவள். எனக்குக் கல்யாணம் பண்ணிவைக்க இதனால்தான் பயமாயிருந்தது. எவ்வளவோ சம்பந்தங்க வந்தன. பையனைவிட அவன் குடும்பமும் அவன் தா தந்தையருந்தான் எனக்கு முக்கியமாய்த் தோன்றிற்று. எ அதிர்ஷ்டம், நீங்கள் கிடைச்சீங்க' என்றார்.

கிருஷ்ணராஜை பானுவின் கையில் மோதிரத்தை போடச் சொன்னார்கள். கிருஷ்ணராஜ் பானுவிட போனான். நாற்காலியில் உட்கார்ந்திருந்த அப்பெண்ணின் கையைப் பிடித்து விரலில் மோதிரத்தைப் போடத் தொட கினான். மேகலா அக்காட்சியையே பார்த்துக் கொண்டிரு தாள். எவ்வளவோ மனோகரமாய் இருக்கிறது! கிருஷ் ராஜ் கண்களில் தான் எவ்வளவு ஒளி! பானுவிடம் அவ்வள உற்சாகத்தைக் காணோம். பாக்கியலட்சுமி மேகலாவின் மூலமாய் புடவையையும் ஜாக்கெட்டையும் தரச்செய்தா பானுவை எல்லோரும் அருமையாய் பார்த்துக் கொண்டா கள். காபி கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுத்தார்க எல்லோரும் குடித்தபோது பானு மட்டும் குடிக்க மறுத்த விட்டாள்.

'பானு, கொஞ்சம் குடிம்மா;'—தந்தை கெஞ்சினார்.

'வேண்டாம், டாடி' என்றாள்.

அப்படியே நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தா பாக்கியலட்சுமியும் சொன்னாள். ஆனால் பானு குடிக்க வில்லை.

பானுவும் மேகலாவும் ஏறக்குறைய சமவயதினர்கள் தான். ஆனாலும் பானு மேகலாவுடன் சிரித்தோ சிநேகபூர்வ மாகவோ எதுவும் பேசவில்லை.

பாக்கியலட்சுமியிடம், 'இந்தப் பெண் யாருங்க?' என்று கேட்டார் பீமசங்கரன்.



'எங்களுக்கு வேண்டியவங்க பெண்தான்!' என்றாள் பாக்கியலட்சுமி. மேகலாவுக்கும் அவர்கள் சமமாய்மரியாதை காட்டினார்கள்.

பானு எழுந்து உள்ளே போனார்கள். கிருஷ்ணராஜும் பாக்கியலட்சுமியும் எழுந்தார்கள். டாக்ஸியில் திரும்பி வந்து கொண்டிருக்கையில் கிருஷ்ணராஜ், பாக்கியலட்சுமி, ஜோதிடர், தரகர் முதலியவர்களுக்கிடையே திருமணப் பேச்சு நடைபெற்றது. மேகலா மட்டும் வெளியே பார்த்த படி மௌனமாய் உட்கார்ந்திருந்தாள். அந்த நிச்சய தார்த்த சடங்கைப் பார்த்த பிறகு மேகலாவுக்கு ஒன்று நன்றாய்ப் புரிந்தது. பசங்கள் தாயின் மீது ஆதாரப்பட்டுக் கொண்டிருப்பதாய்ச் சொல்கிறார்கள் எல்லோரும். ஆனால் அது உண்மை அல்ல பசங்களுக்குத்தாய் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. தந்தைதான் மிகவும் முக்கியம். தந்தை என்று ஒருத்தர் இருந்தால் பணம் சம்பாதித்துத் தந்து எந்தக் குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்வார்கள். பானுவுக்குச் சிறுவயதிலேயே தாய் இறந்துவிட்டாளாம். ஆனாலும்என்ன குறை? தந்தையே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறார்! தந்தையின் நிழல் எவ்வளவு முக்கியம் என்று தோன்றிற்று மேகலாவுக்கு.

பானுவுக்கு ஒரு பக்கத்தில் கண்ணின் இமைகளைப் போல பார்த்துக் கொள்ளும் தந்தை! இன்னொரு பக்கத்திலோ கிருஷ்ணராஜ்! அவன் அந்த மோதிரத்தைப் போடும் பொழுது எவ்வளவு அருமையாய் அக்கையைப் பிடித்தான்! ஆமாம்! இனி வாழ்நாள் பூராவும் அவனுக்கு நிழலாய் இருக்கப் போகும் கைகள் அல்லவா அவை?

சரியான திருமணம் ஆகிவிட்டால் பிறகு அந்த வாழ்க்கை எவ்வளவு நன்றாய் இருக்கும்! கிருஷ்ணராஜ் பானுவின் வாழ்க்கை எவ்வளவு சந்தோஷமாய் இருக்கும்! காட்சிகள் அவள் கண்முன் நிழலாடிக் கொண்டிருந்தன!

குழந்தைகளோடு அந்த வீடு கலகலத்துக் கொண்டிருக்கும்! அந்த வீட்டின் மகிழ்ச்சி நிலாவெளிச்சத்தைப் போல பரவிக் கொண்டிருக்கும். கிருஷ்ணராஜ் அப்பெண் தன் தந்தையைக்கூட மறந்து போய் விடும்படியாய் அவ்வளவு அருமையாய்ப் பார்த்துக் கொள்வான். பாக்கியலட்சுமியைப் பற்றியோ சொல்லத் தேவையில்லை. பானுவைத் தன் உயிரினும் மேலாய்ப் பார்த்துக் கொள்வாள். பானு எல்லா விதத்திலும் அதிர்ஷ்டசாலிதான். அங்கே தந்தை, இங்கே கணவன். மேகலாவுக்கு பானுவைப்பற்றி நினைத்தபோது கொஞ்சம் வருத்தமாய்தான் இருந்தது. அப்பெண் சிநேகமாய் ஒரு வார்த்தை பேசியிருந்தால் என்ன குறைந்துவிடப் போகிறது? தான் எவ்வளவு மகிழ்ந்து போயிருப்பாள்! இன்னும் அவளாகவே போய்ப் பேசினாள் 'நீங்கள் சினிமா எல்லாம் நிறைய பார்ப்பீங்களா?' என்று கேட்டாள்.

'நான் பார்க்க மாட்டேன். எனக்குப் பிடித்த சினிமாவே வராது' என்றாள்.

அந்தப் பதில் நறுக்கென்று இருந்தது. சிநேகபூர்வமாய் இல்லை. மேகலாவால் அதற்குமேல் ஒன்றும் பேசமுடியவில்லை.

மேகலாவுக்குத் தனக்குத் திருமணம் ஆகவேண்டுமே என்று பாட்டி தவித்துக் கொண்டிருப்பதும், எல்லோரும் சிரிப்பதும், பிரசாத் பண்ணிவிட்டுப் போன சந்திச் சிரிப்பும் நினைவுக்கு வந்து விடும். தன்னைப் போன்றவர்களுக்குத் திருமண முயற்சியையே எடுக்கக்கூடாது. உண்மையே! பிரசாத் சொன்னது போல எதைப் பார்த்து மணமகன் வருவான்? மேகலா பெருமூச்செறிந்தாள்.

எல்லோரும் வீடு திரும்பினார்கள். தரகரும் ஜோதிடரும் போய் விட்டார்கள். மேகலா போவதாய் கிளம்பியபோது பாக்கியலட்சுமி 'சாப்பிடாமல் போகக்கூடாது' என்று தடை விதித்து விட்டாள்.



விடு விடென்று சமையலறைக்குப் போய் வெண்டைக் காய் பொரியலும் சாம்பாரும் பண்ணத் தொடங்கினாள் பாக்கியலட்சுமி. மேகலா அவளுக்கு வெண்டைக் காய்களை நறுக்கிக் கொடுத்து, குக்கரில் வைக்க அரிசியைக் களைந்து வைத்து உதவிபண்ணினாள். சமையல் சீக்கிரமாகவே முடிந்து விட்டது. மேகலா மேஜைமேல் தட்டுக்களை எடுத்து வைத்தாள் கிருஷ்ணராஜ் அங்கே வந்தான்.

'மேகா, மணமகள் எப்படி இருக்கிறாள்?' என்று கேட்டான்.

ஒரு வினாடி திகைத்துப் போய்விட்ட மேகலா, உடனே ...தில் சொன்னாள்: 'நன்றாய் இருக்கிறாள்.'

'உன்னோடு நன்றாய்ப் பேசினாளா?'

மேகலா பதில் பேசவில்லை. மேகலாவைப் பார்த்து ...வன் கேட்டான்—' ஏனெனில் நீ ஏதோ கேட்டபோது ...டும் படாமலும் பதில் சொன்னதைக் கேட்டேன் நான்.

'மணமகள். அதுவும் புதியவர்கள்; நாம் அதற்கும் மேல்! ...ன பேசுவாளடா?' பாக்கியலட்சுமி சொன்னாள்.

'அதில்லைம்மா. சங்கோஜம் வேறு. பிடிவாதம் வேறு. ...றாய்ப் பேசும் சுபாவமுடையவர்கள் என்ன கேட்டாலும் ...லுடன் பதில் சொல்லுவார்கள். ஒருக்கால் அந்தப் ...ண் சுடுமூஞ்சியோ என்னவோ?' என்றான் அவன்.

'உன் மூஞ்சி! உன் சந்தேகமுகம் நீயும்! நான் தான் பேசினேனே, நன்றாகத்தான் பதில் சொன்னாள்' என்றாள் பாக்கியலட்சுமி.

'சரி! உனக்குப் பிடித்துவிட்டால் இனி தடையிலைம்மா. ...ன் முன்பே சொல்லிவிடுகிறேன். அது உனக்குப் பிடித்த ...ந்தான்' என்றான்.

'பார்த்தாயா மேகா? முன் கூட்டியே என்காலில் சங்கிலியைப் பிணைத்துக்கட்டிப் போட்டுவிட்டான் பார்! இவன் உபாயம் என்ன தெரியுமா? நாளைக்கு நான் இனி எதற்கும் முணுமுணுக்க வழி இருக்கக்கூடாதுன்னு தான்! பாக்கியலக்சிமி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

சாப்பாட்டு மேஜையில் அவள் கிருஷ்ணராஜிற்குப் பக்கத்திலேயே மேகலாவை உட்காரவைத்தாள். மூவரும்சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அவள்.

'டேய் கிருஷ்ணா! உனக்குத் தெரிந்தவன்யாராவது நல்ல பையன் இருந்தால் பாருடா' என்றாள்.

'யாருக்கும்மா?' ஆச்சரியமடைந்தவனாய்க் கேட்டான்.

'வேறு யாருக்கு? நம்ப மேகாவுக்குத் தான்.' கிருஷ்ணராஜ் மேகலாவைப் பார்த்தான். மேகலாவின் முகத்திலிருந்த ரத்தமெல்லாம் பொங்கினாற் போலிருந்தது.

'நம் வீட்டிலேயே பெண் பார்க்க ஏற்பாடு பண்ணுவோம். அந்த ஏற்பாட்டையெல்லாம் நானே பார்த்துக்கறேன்' என்றாள் அவள் பரிவோடு மேகலாவுக்கு அதைக் கேட்டதும் தொண்டைக் குழியை ஏதோ அடைத்தாற் போலிருந்தது. கண்களில் கண்ணீர்த் திரையிட்டது.

'பையன்களுக்கு என்னம்மா குறைச்சல்? நிறைய பேர் இருப்பாங்க! ஆனால் மேகலாவுக்கு எப்படிப்பட்ட கணவன் வேண்டுமோ'' என்றான் கிருஷ்ணராஜ்.

'அவள் மூஞ்சி! அவளுக்கென்ன தெரியும்?

'நிஜமாகவா; ஆச்சரியமடைந்தவனாய்ப் பார்த்தான்.

'ஆமாம். உன்னைப் போல நிதானமாய் இருக்கனும். கஷ்டம் சுகம் தெரிந்த பையனாயிருந்தால் அவங்கநிலைமையைப் புரிஞ்சுப்பான். வரதட்சணை கிரதட்சணை எதுமில்லா



மல் கல்யாணம் பண்ணிக்கிறதாய்ச் சொன்னால் நாம் எல்லோரும் சேர்ந்து தலைக்கு ஒருத்தராய் கைக் கொடுத்தால் ஆகிவிடும்.'

கிருஷ்ணராஜ் பதில் பேசவில்லை.

சாப்பாடு முடிந்தது; பத்துமணி அடித்தது.

'மேகலாவைக் கொண்டு போய் விட்டு விட்டுவா,' அவள் உத்தரவு தந்தாள்.

'சரிம்மா?' அவன் கிளம்பினான்.

இருவரும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

# 23

கிருஷ்ணாஜும் மேகலாவும் வீதியில் அடியெடுத்துவைத்தார்கள். நாராயணனின் கடை மூடியிருந்தது திண்ணையில் நான்கு இளைஞர்கள் உட்கார்ந்த சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தன் நடந்து வந்து கொண்டிருந்த மேகலாவையும் கிருஷ்ணராஜையும் பார்த்தான். உடனே பக்கத்திலிருந்தவனை முழங்கையால் இடித்தான். அவன் திரும்பிப் பார்த்தான். மேகலாவைப் பார்த்ததுமே விசிலடித்தான் உற்சாகத்துடன்.

'எங்கேயிருந்து வருதுடா பட்சி?' என்றான்.

'எங்கேயிருந்தாவது? ஏதாவது பார்க்கிலிருந்தோ அல்லது ஓட்டலிலிருந்தோதான் இருக்கும்.'

'மதம் பிடிச்சவங்களுக்கு ஊரெல்லாம் படுக்கைகள் தானே?' என்றான் இன்னொருத்தன். எஞ்சிய எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

'புதிய சிநேகிதனைப் போல இருக்கு!'

'தினம் தினம் ஒரு பட்சியைப் பிடிக்காமல் போனா வீடு எப்படிடா நடக்கும்?'

'அதில்லைடா! இந்த வீதியில் நாம்ப இவ்வளவு ஆம்பிள்ளைங்கள் இருக்கோமே, நாமெல்லாரும் கையாலாகாதவர்களாயிட்டோமாடா?'

அவர்கள் சீட்டாடுவதை நிறுத்திவிட்டு, இந்தப் பக்கமாய்த் திரும்பி தலைக்கு ஒரு விதமாய்ப் பேசிக் கொண்டார்கள் — ஏளனமாய், கேலியாய். மேகலா நேராய் நிமிர்ந்து நடந்து கொண்டிருந்தாள். அந்த வார்த்தைகள் என்ற கல்லடிகள் பட்டுப்பட்டு உள்ளம் மரத்துப்போய் விட்டிருந்த அவள் எதையும் பொருட்படுத்தாமல் அம்பாரியுடன் போய்க் கொண்டிருக்கும் யானை ராஜனைப் போல மிடுக்காய் நடந்து போய்க்கொண்டிருந்தாள். கொஞ்சமும் பதற்றமில்லை. பயமில்லை. மகாராணி தர்பாரிலிருந்து போய்க் கொண்டிருந்தாற் போல இருந்தது அது.

மேகலாவின் பொறுமைக்கும் தைரியத்திற்கும் கிருஷ்ணராஜ் வியப்படைந்து விட்டான். அவர்கள் பேச்சைக் கேட்ட அவன் உள்ளங்கை முறுக்கேறிக் கொண்டது. சுண்டினால் ரத்தம் வரும்போலாகி விட்டது அவன் முகம். ஆவேசத்தை அடக்கிக் கொண்டது மூக்கு அதிர்ந்ததைக் கொண்டு நன்றாய்ப் புரிந்தது. இன்னொருத்தன் மேலும் கேலியாய்ச் சொன்னான்.

'டாக்டர் ஃபிரெண்ட் இல்லையாடா, வயிற்றில் ஏதாவது சுமை ஏறிடுமோங்கிற பயம் இல்லை' — எஞ்சியவர்கள் திரும்பவும் கொல்லென்று சிரித்தார்கள். கிருஷ்ணராஜ் சட்டென்று திரும்பிப் பார்த்தான். ஒரே ஒரே பாய்ச்சலாய் அவர்களிடம் போனான். அவர்கள் அவன் எதற்காக வந்து கொண்டிருக்கிறான் என்று பார்ப்பதற்குள்ளாகவே



அவ்வாறு சொன்னவனின் கேசத்தைப் பிடித்துக் கொண்டு குனியவைத்து மாறிமாறி விளாசினான்.

ஒரு வினாடி எஞ்சிய மூவரும் வாயடைத்துப் போனவர்களாய் நின்றுவிட்டார்கள். கிருஷ்ணராஜ் கீழே விழுந்த அவன் சட்டையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான் திரும்பவும்.

'பெண்பிள்ளை போயிட்டிருக்கும்போது அசிங்கமாய் கத்தினால் எத்தனை ஆண்டுகள் ஜெயில் தண்டனை தெரியுமா? போலீஸ் ரிபோர்ட் தந்துட்டால் இப்பொழுதே உன்னைக் கூட்டிட்டுப் போயிடுவாங்க?'

எஞ்சிய மூன்று பேர்களும் போலீஸ் என்ற வார்த்தையைக் கேட்டதும் வாயை மூடிக் கொண்டார்கள். அதற்குள் ஆங்காங்கே இருந்த ஜனங்கள் எல்லோரும் கூடிவிட்டார்கள். கிருஷ்ணராஜ் போலீஸ் ரிபோர்ட் கொடுப்பதற்காகப் புறப்பட்டபொழுது சிலர் தடுத்தார்கள்.

'விடுங்க சார்! வேலை வெட்டியில்லாத தறுகாலிப் பசங்கள்! அப்படித்தான் உளறிக் கொண்டிருப்பாங்க. இதோடு விட்டுத் தொலைங்க' என்றார் ஒருத்தர்.

'வேலை வெட்டி இல்லாவிட்டால் ரோட்டில் போறவங்க பெண்களையெல்லாம் சொன்னால் சும்மாயிருந்துடுவாங்களா? நாளைக்கு உங்கப் பெண்ணையோ, தங்கையையோ சொன்னால் நீங்கள் சும்மாயிருந்துடுவீங்களா?'

'என் மகளாவது தங்கையாவது நள்ளிரவு வேளையில் கண்ட ஆம்பிள்ளைங்களோடு இப்படி வீட்டுக்கு வந்தால் நான் கண்டந்துண்டமாய் வெட்டிப் போட்டுவிடுவேன் அவளை' — அவன் மேகலாவை அருவருப்போடு ஏறயிறங்கப் பார்த்துக்கொண்டே சொன்னான்.

'மொதல்ல இவங்களை இந்த வீதியிலிருந்து கல்த்த கொடுங்கன்னு சொன்னால், யாருமே காதில் போட்டுக்க தில்லை' என்றான் இன்னொருத்தன்.

'அவங்க எங்கே போவாங்கடா? அவங்க வீட்டை நாமெல்லோருமாய்ச் சேர்ந்து கொளுத்திப் போட்டா தான் முடியும்' என்றான் ஒருத்தன்.

'டாக்டர், நீங்கள் மதிப்பானவர். உங்களுக்குச்சொல்ல தேவையில்லை. இவள் ஒரு மாயச் சிறுக்கி! இவள் அம்மா புருஷன் இல்லாமலேயே இதைப் பெற்றெடுத்தாள்.'

'ஷட் அப்' கத்தினான் கிருஷ்ணராஜ். 'என்னடா உளறு கிறாய்?' இன்னொருத்தன் கிருஷ்ணராஜின்மீது பாய்ந்தான் ஒருவன் அந்த இளைஞனைத் தடுத்து இழுத்துவிட்டு,

'இதென்னடா ரகளை? யார் எப்படிப் போனால் உனக்கென்னடா வந்தது?' என்று சொல்லிவிட்டு கிருஷ்ணராஜ் பக்கமாய்த் திரும்பி,

'இந்தா டாக்டர்! உமக்கு பஜார் விஷயம் தெரியாது. நீங்க போங்க. இனிப் பேசாதீங்க' என்றான்.

கிருஷ்ணராஜ் மேகலாவை வீட்டில் கொண்டு வந்து விட்டான். அவன் மேகலாவையும் மானஸாவையுமே பார்த்தான். 'மைகாட்! இந்தப் பெண்களிருவரும் இந்த வீதியில் எப்படித் தான் இருக்கிறார்களோ?' என்றெண்ணிக் கொண்டான். அவனுக்கு அவர்கள் வார்த்தைகள் நினைவுக்கு வந்ததுமே ரத்தமெல்லாம் குப்பென்று பொங்கிற்று.

'நீங்கள் வேறு எங்கேயாவது வீடு பார்த்துக் கொள்வது நல்லது. வயது வந்த பெண்கள் இருக்காங்க. வீட்டில் ஆண் துணையும் இல்லை. இப்படிப்பட்ட வீதியில் இந்த ரௌடிங்களுக்கு நடுவே இருப்பது என்றைக்காவது ஏதாவது ஆபத்தில் கொண்டுவந்து விட்டுவிடும்' என்று மங்களத்திடம் சொன்னான் கிருஷ்ணராஜ்.



'என்னத்தைச் சொல்வேன்ப்பா? வேறு வீடுன்னால் வாடகை அதிகமாய் கட்டணும். எங்கேயிருந்து கொண்டு வருவேன் சொல்லு? இத்தனை நாளாய் என் இறக்கைகளுக்குள் பொத்திக் கொண்டு எப்படியோ கொண்டு வந்துட்டேன் குடும்பத்தை. எங்களுக்கு இனி அந்தக் கடவுள்தான் கதி. தலையெழுத்து எப்படி எழுதி வைத்திருக்கிறதோ அதை மாற்ற முடியுமா?' என்றாள் மங்களம் வருத்தத்தோடு.

கிருஷ்ணராஜ் முதல் முதலாய் அந்த வீட்டைப் பரிசீலித்தான். சின்ன வீடு. அந்த வீட்டில் எங்கே பார்த்தாலும் வறுமை தாண்டவமாடிக் கொண்டிருந்தது. வயது முதிர்ந்த அப்பெரியவர்கள் இருவரையும், இதழ் விரிந்த மலர்களைப் போலிருந்த அவ்விளம் பெண்கள் இருவரையும் பார்த்த போது அவனுக்கு இரக்கம் பிறந்தது. எந்த அர்த்த ராத்திரி வேளையிலாவது எவனாவது குடிகாரன் வீட்டிற்குள் நுழைந்துவிட்டால், இவர்களுக்கு கதி ஏது? கிருஷ்ணராஜ் புறப்படுவதற்காக எழுந்தான். மேகலா அவனை வாசல்வரை வழியனுப்பி விட்டு வந்தாள்.

மேகலா வந்து உள்ளே படுக்கையில் படுத்தாள். அன்றைக்கு அவளுக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது. எவ்வளவோ ஆண்டுகளாய் மேகலா அநியாயமாய் உலகத்தாரிடமிருந்து திட்டுக்களையும் ஏச்சுக்களையும் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறாள். இது வரை ஒருத்தர் கூட அவள் பக்கமாய்ச் சார்ந்து நின்று 'இதென்ன, இப்படிப் பேசுகிறார்கள்?' என்று உலகத்தை உலுக்கி எடுத்ததில்லை. எவ்வளவோ தடவை மேகலா முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, எனக்கு அண்ணனாவது தம்பியாவது இருந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!'— என்று அழுதிருக்கிறாள்.

இன்றைக்கு கிருஷ்ணராஜ் அவள் சார்பில் நின்று கேலி செய்த அந்த ரௌடிகளை உலுக்கி எடுத்து விட்டான். அதைப் பார்த்து அவர்கள் கொஞ்சம் பின்வாங்கினார்கள்.

மேகலாவுக்குத் திரும்பவும் அதே உணர்ச்சி! அவள் கைகளுக்கிடையே நலிந்து மார்போடு ஒட்டிக் கொண்ட உணர்ச்சி! கடவுளே! வினாடி நேர உணர்ச்சியே அவளுக்கு இவ்வளவு சந்தோஷத்தைத் தந்ததென்றால் வாழ்நாளெல்லாம் அந்தப் பாதுகாப்பு கிடைத்து விட்டால்!

அவளுக்குத் தன் பேராசைக்குத் தனக்கே வெட்கம் ஏற்பட்டது, அவள் எட்டாத கனிக்கு ஆசைப்படுகிறாள். கிருஷ்ணராஜ் எங்கே, அவள் எங்கே?

## 24

ஒருவாரத்திற்குப் பிறகு—

மேகலா கிருஷ்ணராஜிடம் சேர்ந்து நித்யானந்தனுக்கெதிரே உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவர் சொல்லிக் கொண்டருந்தார்.

'தற்போதைக்கு இந்த வேலையில் சேர்ந்து கொள் சம்பளம் மாதத்திற்கு ஐநூறு ரூபாய்தான்! ஆறு மாதத்திற்குப் பிறகு ஏதாவது அவகாசம் கிடைத்தால் பெர்மெனென்ட் பண்ணி விடுகிறேன். அப்பொழுது சம்பளம் எழுநூற்றைம்பது வரும். ஒரு முறை இந்த ஃபேக்டரியில் உன் வேலை பெர்மனென்ட் ஆகிவிட்டால், அப்புறமாக உனக்கு எந்தக் கஷ்டமும் இருக்காது வாழ்க்கையில் தற்சமயம் மில்நஷ்டத்தில் நடக்கிறது. இல்லாவிட்டால் வருஷத்திற்கு மூவாயிரம் போனஸ் வரும்.

'நாளைக்கு வேலையில் வந்து சேர்ந்துடும்மா இதப்பார் நான் பெண்களையே வேலைக்கு வைத்துப்பதில்லை. இந்த டாக்டர் ரொம்பச் சொன்னதால் வைத்துக்கிட்டேன் இதற்கு முன்னால் இது போல ஒரு இளம் பெண்ணை



வேலைக்கு எடுத்துக்கிட்டால் தொல்லைகள் எல்லாம் வந்து சேர்ந்து கடைசியில் லாக்-அவுட் வரைக்கும் போய்விட்டது. நீ இந்த டாக்டரின் மரியாதையையும் என் மரியாதையையும் காப்பாற்றும்படியாய் நல்ல பெயர் எடுக்க வேண்டும். தெரிஞ்சுதா?'' என்றார்.

மேகலா, தெரிந்தது என்று தலையாட்டினாள். நித்யாநந்தன் உத்யோக ஆர்டர் காகிதத்தைக் கிருஷ்ணராஜிடம் தந்தார்.

அதை வாங்கிப் படித்த மேகலாவின் கண்கள் ஆனந்தத்தால் நாட்டியமாடின. தனக்கு இனி மாதந்தோறும் ஐநூறு ரூபாய் சம்பளம்! ஆ! ஐநூறுரூபாய்! வாழ்க்கை இனி சுகமயம்! இனி எதற்கும் கஷ்டம் இருக்காது. அக்காகிதத்தில் தென்பட்ட ஒவ்வொரு எழுத்துக்களையும் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

நித்யாநந்தன் திரும்பவும் சொன்னார்!

'பார் நீ வீடு தேடிட்டிருப்பதாய்ச்சொன்னார் டாக்டர். எங்க அவுட் ஹவுஸ் இருக்கு. எங்கள் வீடு கப்பல் போலிருக்கும் நீங்கள் அதில் இருப்பது எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லைன்னு டாக்டரிடம் சொன்னேன். ஆனால் அது ரொம்பச் சின்ன போர்ஷன். உங்களுக்குப் போதுமென்றால் இருங்கள்.'

'அந்த போர்ஷனைப் பார்க்கலாம்' என்றான் கிருஷ்ணராஜ்.

நித்யாநந்தன் சாவிக் கொத்தைக் கொண்டு வந்து தந்தார். அதற்குள் அவருக்குப் போன் வந்ததால் நின்று விட்டார். கிருஷ்ணராஜ் சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டு வந்தான். மேகலா அவனைப் பின் தொடர்ந்தாள்.

நித்யாநந்தன் வீட்டுக் கொல்லைப் பக்கத்தில் இருந்தது அந்தப் போர்ஷன். ஆஸ்பெஸ்டஸ் ஷீட் போடப்பட்டிருந்த சின்ன வீடு. அது. கிருஷ்ணராஜ் பூட்டைத் திறந்தான். சின்ன வராந்தா. அதற்கடுத்து ஒரு அறை வலது பக்கம் இன்னொரு அறையும் சமையலறையும் இருந்தன.

'சின்ன வீடுன்னு சொன்னாரே, இவ்வளவு பெரிய வீடாய் இருக்கே!' என்றாள் மேகலா வியப்படைந்தவளாய். கிருஷ்ணராஜ் சிரித்தான். 'உங்க வீட்டை விட பெரிய வீடு தான்' என்று போய் சமையலறையிலிருந்த குழாயைத் திருப்பினான். கொடகொட வென்று தண்ணீர்க் கொட்டத் தொடங்கிற்று. மேகலா குழாயிலிருந்து தங்கக்கட்டிகள் உதிர்ந்தாற் போல ஆனந்தம் தாங்க மாட்டாமல் பார்த்தாள்.

'வீடு நன்றாயிருக்கா?' என்றான்.

'ரொம்ப!' கண்கள் அகல விரியச் சொன்னாள். அவன் திரும்பவும் சிரித்தான். மேகலாவின் கண்களில் சின்னப் பசங்களுக்குத் தோன்றும் வியப்பு தென்பட்டது. அவனுக்கு அதையே பார்க்க வேண்டும் போல இருந்தது.

'வீட்டுப் பிரச்னையும் தீர்ந்துவிட்டது. நித்யாநந்தன் ரொம்ப நல்லவர். உங்களுக்குத் துணையாகவும் கூட இருப்பார்' என்றான்.

கிருஷ்ணராஜ் கதவைப் பூட்டினான். நித்யாநந்தனிடம் சொல்லி விட்டு வந்துவிட்டார்கள்.

மேகலா வீட்டிற்கு வந்தாள். மங்களத்திற்கும் மானஸாவுக்கும் ஸ்ரீரஞ்சனிக்கும் மேகலாவுக்கு உத்யோகம் கிடைத்த செய்தி மிகச் சந்தோஷத்தைத் தந்தது.

'நம் கஷ்டமெல்லாம் போயிடுத்தும்மா' என்றாள் மங்களம், மேகலாவுக்கு நெட்டி முறித்துவிட்டு.



'அக்கா! என் டிட்டோரியல் காலேஜ் அங்கிருந்து ரொம்பக் கிட்டே. நான் மறுபடியும் சேரட்டுமா?' என்றாள் மானஸா.

'சேரட்டுமாவாவது? சேர்ந்து தீரணும்' என்றாள் மேகலா.

ஸ்ரீரஞ்சனி பெண்களிருவரையுமே பார்த்துக் கொண்டிருந்தாள். மேகலாவுக்கு வேலை கிடைத்து விட்டது என்ற ஆனந்தம், வீட்டைக் காலி பண்ணிவிட வேண்டும் என்று சொன்னதுமே கரைந்து போய் விட்டது.

'இந்த வீட்டை ஏன் காலி செய்யணும்? இது நன்றாய் தானே இருக்கு?' என்றாள் மங்களம்.

'அவங்க கொஞ்ச நாளில் போகச் சொல்லிவிட்டால் என்ன பண்றது?' என்றாள் மானஸா.

'ஒன்றும் சொல்லமாட்டாங்க. ஒருக்கால் சொன்னாலும் வேறு வீடு பார்த்துப்போம். உத்யோகந்தான் இருக்கே, இனிப் பயம் எதுக்கு?'

'என்னவோம்மா' என்றாள் மங்களம்.

மேகலா வந்து மங்களத்தின் தோளில் கையை வைத்தாள்.

'பார் பாட்டி! நாம்ப நடுக்கடலில் இருக்கோம். எந்தப் பக்கத்திலாவது கரையைத் தேடிக்கொண்டு போக வேண்டும் இல்லையா? எவ்வளவு நாளைக்குத் தான் இப்படியே இருப்பது? அந்த வீடு எனக்கு மில்லுக்கும் மானஸாவுக்கு காலேஜுக்கும் கிட்டே. இந்த வீடு ரொம்ப தூரம்! தனியாய் அவ்வளவு தூரத்திலிருந்து வருவதும் சிரமமாய் இருக்கும். உனக்கு பயம் எதுக்கு பாட்டி? மாதத்திற்கு ஐநூறு சம்பாதித்துக் கொண்டு வரப் போகிற இந்த பேத்தி இருக்கும்போது?'

'என்னவோம்மா ஏனோ எனக்கு காபராவாய் இருக்கு' என்றாள் மங்களம்.

'எல்லா பயத்தையும் விடு. மேகலா பார்த்துக் கொள்வாள் என்று நினைத்துக் கொள் பாட்டி! அது சரி, மறந்து போயிட்டேனே! அங்கேயிருந்து ராமர் கோவில்கூட ரொம்ப கிட்டத்தில் தான் பாட்டி! நீ பஜனைக்குப் போகலாம்' என்றாள்.

'சரிம்மா! உன்னிஷ்டம். எல்லாவற்றிற்கும் அந்த தெய்வந்தான் துணை' — கையெடுத்துக் கும்பிட்டாள் மங்களம்.

## 25

மேகலா அன்றுகாலையில் கம்பெனிவேலையில் போய் சேருவதற்கு முன்னால் பாக்கிய லட்சுமியின் வீட்டிற்கு வந்தாள். முதல் நாள் தன் விட்டிலிருந்தே கம்பெனிக்கு போகச் சொல்லியும், பலகாரம் பண்ணி டிபன் பாக்ஸில் போட்டுத் தருவதாகவும் முதல் நாளே செய்தி சொல்லி அனுப்பியிருந்தாள் பாக்கியலட்சுமி அவளுக்கு.

மேகலா வந்ததும் அவளுக்குத் தலை வாரிப் பின்னி விட்டுப் பூவைத் தலையில் வைத்தாள். 'போய் சுவாமி படத்திற்குக் கும்பிடு போட்டு வணங்கிவிட்டுவா, டிபன் பாக்ஸைத் தருகிறேன். சமையலறையில் பொங்கல் பண்ணிக் கொண்டிருந்த பாக்கியலட்சுமி கத்தினாள்

'வெறுமே கைகளைக் கூப்பி விட்டு வந்தால் போதாது உத்யோகம் பெர்மனென்ட் ஆகணும் என்று வேண்டிக் கொள்.' மேகலா குப்பிட்டுக் கொண்டிருக்கையில் பாக்கியலட்சுமி சொல்லிக் கொண்டிருந்தது கேட்டது.



மேகலா சுவாமி அறையிலிருந்து வெளியே வந்தாள். கிருஷ்ணராஜ் ஆசுபத்திரிக்குப் போகும் மும்முரத்தில் கண்ணாடிக்கு முன்னால் நின்று டை கட்டிக் கொண்டிருந்தான். மேகலா வந்து கதவிற்கருகில் நின்றதைக் கண்ணாடியில் பார்த்து விட்டு, என்ன மேகா?' என்று கேட்டான்.

'ஒன்றுமில்லை!'

அவன் அவளை நோக்கித் திரும்பினான். அவள் சட்டென்று குனிந்து அவன் பாதங்களை வணங்கினாள்.

'அடடா! இதென்னது? இதென்ன காரியம்?' அவன் [illegible]வரத்துடன் மேகலாவின் தோளைப் பற்றித் தூக்கி நிறுத்தினான்.

'அம்மா, தெய்வத்தைத் தானே வணங்கச் சொன்னாங்க, தெய்வம் அங்கே இருக்கிறது'—அவன் பூஜையறையைக் காட்டினான்.

'ஊஹூம்! இங்கேதான் இருக்கு தெய்வம் குறைந்த பட்சம் எனக்கு!' அவனைச் சுட்டிக்காட்டிச் சொன்னாள் அவள். அவள் கண்களில் தென்பட்ட பக்தி, அன்பு, புனிதம், அப்பாவித்தனம், கம்பீரம் அவனை வாயடைக்கச் செய்து விட்டன.

அதற்குள் பாக்கியலட்சுமி கத்தினாள்:

'மேகா, இந்தா டிபன்பாக்ஸ், எடுத்து வைச்சாச்சு' கொண்டுபோ.' மேகலா போக முயன்றபோது கிருஷ்ணராஜ் அவள் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான்.

'மேகலா! நீ என்னை வணங்கினாய். நான் உன்னை விடப் பெரியவனில்லையா? ஆசீர்வாதம் பண்ணுகிறேன் என்று வலது கையை அவள் தலைமேல் வைத்து 'எங்க மேகா மகாராணி ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு, பக்கென்று சிரித்து விட்டான்.

மேகலாவும் சிரித்தாள். மேகலா டிபன் பாக்ஸைப் பெற்றுக் கொண்டதும் பாக்கியலட்சுமியையும் வணங்கினாள். 'சத்வரமே கல்யாண ப்ராப்திரஸ்து' என்று வாழ்த்தினாள் அவள்.

கிருஷ்ணராஜும் மேகலாவும் சேர்ந்தே புறப்பட்டார்கள். அவன் மேகலாவை கம்பெனி கேட்டிற்கருகில் கொண்டு விட்டான்.

'இப்படி திருதிருன்னு விழிச்சுட்டிருக்காதே! அங்கே உன்னை யாரும் விழுங்கிட மாட்டாங்க. ரெண்டு நாள் போனால் அதே பழக்கப்பட்டுப் போயிடும்' என்று எச்சரித்து விட்டு, விடை பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

மேகலா கேட்டிற்கருகில் இருந்த கூர்க்காவிடம் கார்டைக் காட்டிவிட்டு, மில்லுக்குள் நுழைந்தாள். மேகலாவுக்கு இந்த உலகத்தில் தனக்கும் ஒரு இருப்பிடம் கிடைத்து விட்டாற் போலத் தோன்றிற்று.

மறுநாள் காலையிலேயே நித்யாநந்தனின் வீட்டு அவுட் ஹவுசிற்கு மாறிவிட்டார்கள். பழைய வீட்டை விட்டுவிட்டு வரும்போது மங்களம் அழுது தீர்த்துவிட்டாள்.

'கடவுளே! இவ்வளவு நாளாய் இந்த வீட்டில் சுகமாகவே இருந்துட்டோம். இதைவிடக் கஷ்டத்தில் எங்களைத்தள்ளி விடாதே' என்றெண்ணிக் கொண்டாள். அந்த வீடு மாறியது அந்த வீட்டிலிருந்த எஞ்சிய மூவருக்கும் பிடிக்கவில்லை. மேகலாவின் பேச்சிற்கு எதிர்ப்பு இல்லை.

மாலையில் வேலையிலிருந்து வந்ததும் மேகலா மளமளவென்று வீட்டை ஒழித்து வைத்தாள். ஸ்டவ்வைப் பற்ற வைத்து ஜவ்வரிசியை வைத்தாள். தட்டில் சேமியாவை உதிர்த்துப் போட்டாள்.



'எதுக்கு இதெல்லாம்?' என்றாள் பாட்டி.

'டாக்டரும் அவங்கம்மாவும் வரப்போறாங்க! பாட்டி அவங்களுக்கு ஏதாவது தரவேண்டாமா?'

'ஐயோ ராமா! என்னிடம் ஒரு வார்த்தைகூட சொல்லாமல் போயிட்டாயே! நானே இதற்குள் ஏதாவது வடையோ பூரியோ பண்ணி வைத்திருக்க மாட்டேனோ?'

'இல்லை பாட்டி, என் கையாலேயே சுயமாய் பண்ணணும்னுதான்' என்றாள் சங்கோஜத்துடன்.

'எத்தனை மணிக்கு வராங்க?'

'ராத்திரி எட்டு மணியாகும்.'

'அதற்குள் நான் மானஸாவைக் கூட்டிக் கொண்டு கோவிலுக்குப்போயிட்டு வந்துடறேன்.'

'சரி பாட்டி' என்றாள்.

இரவு எட்டு மணிக்குப் பிறகு கிருஷ்ணராஜ் வந்தான். அவன் மட்டுமே வந்ததைப் பார்த்துவிட்டு, 'அம்மா எங்கே?' என்று கேட்டாள் மேகலா கலக்கத்தோடு.

'வரவில்லை. ஆஸ்துமா அட்டாக் வந்துவிட்டது. இஞ்ஜெக்ஷன் தந்திருக்கிறேன். படுத்துட்டிருக்காங்க வராமல் போனதற்கு ஒன்றும் நினைத்துக்கொள்ள வேண்டாம் என்றாங்க. சைக்கிளை வராந்தா இறக்கத்தில் வைத்துவிட்டு உள்ளே வந்தான் அவன்.

மேகலா நாற்காலியை எடுத்துப் போட்டாள். அவன் உட்கார்ந்து கொண்டான்.

மானஸாவும் மங்களமும் கோவிலுக்குப் போயிருந்தார்கள். ஸ்ரீரஞ்சனி சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தாள்.

மேகலா சின்ன கிண்ணத்தில் பாயசத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

'அட! நான் காபி கொடுப்பாய் என்று நினைச்சிட்டிருந்தேன்' என்றான்.

மேகலா ஸ்பூனை அவன் கையில் தரவில்லை. தானே கிண்ணத்திலிருந்து ஸ்பூனில் பாயசத்தை எடுத்து அவன் வாயில் வைத்தாள். அவன் திகைத்துப் போய்விட்டான்.

அவன் முகம் தொய்ந்தாற் போலாயிற்று.

'அசடு! நீ இவ்வளவு எமோஷனல் டைப் என்று எனக்குத் தெரியாது! பாயசம் ரொம்ப நன்றாயிருக்கு. இவ்வளவு ருசியாய் நான் என்றுமே சாப்பிட்டதில்லை' என்றான்

அதற்குள் மங்களமும் மானஸாவும் வந்து விட்டார்கள். 'அம்மா வரலையாப்பா?' என்று விசாரித்தாள்.

'இல்லை' என்றான்

மேகலா உள்ளே போய் அவர்களிருவருக்கும் பாயசத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

'உனக்காக அவளே பண்ணினாளப்பா. என்னைச் சமையலறை பக்கமே வரவிடவில்லை' என்றாள் மங்களம் கிருஷ்ணராஜ் பாயசத்தை சாப்பிட்டுக் கொண்டே,

'மேகா! நீ என்னவோ என் வாயை இனிப்பாக்கி விட்டாய். ஆனால் நான் என்னவோ ஒரு கசப்பான வார்த்தையைச் சொல்ல வந்திருக்கிறேன்' என்றான்.

'கசப்பான வார்த்தையா? அதென்ன?' தண்ணீர் கொண்டு வருவதற்காக உள்ளே போக முயன்ற மேகலா திடுக்கிட்டு நின்று கேட்டாள்.



'நான் ஐதராபாத்துக்குப் போகிறேன். அங்கே ஒரு நர்சிங் ஹோமில் வேலை கிடைத்திருக்கு. இந்த வேலை போய்விட்டாற்போலதான். ஏனென்றால் இந்த நர்சிங் ஹோமிலிருந்து அமெரிக்காவுக்குப் போயிருந்த டாக்டர் திரும்பி வரப் போகிறார். தாங்க் காட்! அவர் வருவதற்குள்ளேயே உத்யோகம் கிடைத்துவிட்டது. நான் பத்தாம் தேதிக்குள் மெட்றாஸ் வேலையில் ஜாயின் ஆயிடணும்.'

'பத்தாம் தேதியா? இன்றைக்கு நாலாம் தேதியாச்சே' என்றாள் மேகலா, மார்பில் கைவைத்துக்கொண்டு.

'ஆமாம் இந்த நாலைந்து நாட்களுக்குள் சாமான்களை எல்லாம் எடுத்துக் கட்டி அனுப்பணும். இங்கே சார்ஜை ஒப்படைக்கணும்!

'தெரிந்தவங்க சாப்பிடக் கூப்பிட்டாங்க. போகணும்' என்றான் காலை நீட்டி உட்கார்ந்து கொண்டே. மேகலா தண்ணீர் கொண்டு வரும் விஷயத்தையே மறந்து போய் அவ்விடத்திலேயே சிலையாய் நின்று விட்டாள் அவனையே பார்த்தபடி.

'தண்ணீர் வேண்டும்' என்றான் அவன் கிண்ணத்தைக் கீழ வைத்துவிட்டு.

'மானஸா! கொண்டுவா' என்றாள் மெல்லிய குரலில்

மேகலா அவனிடம் வந்தாள். 'இங்கே இன்னும் வேறு ஏதாவது வேலை கிடைக்காதா? என்றாள்.

'அசட்டு மேகா! எத்தனை டாக்டர்கள் வேலையில்லா பட்டதாரிகளாய் திரிந்துட்டிருக்காங்க! உனக்குத் தெரியாது! இங்கேயே கிடைத்தால் அங்கே ஏன் போகப் போகிறேன்?' என்றான். மானஸா தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்'

அவன் மானஸாவின் படிப்பைப் பற்றி விசாரித்தான். மங்களத்தின் ஆரோக்கியத்தைப் பரிசோதித்துதானே மருந்து

களை எழுதித் தந்தான். மங்களம் அவனைச் சாப்பி... சொல்லி வற்புறுத்தினாள்.

'சாப்பாடா? இப்ப இல்லை. ஒரு ஃப்ரெண்டிடம் ஒன்ப... மணிக்கு வரதாய்ச் சொல்லிட்டேன். இன்னொரு தட... கண்டிப்பாய் வரேன்' என்றான்.

அவன் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு புறப்ப... டான். மேகலா அவனை வழியனுப்பி வைக்க கே... வரைக்கும் வந்தாள். அவ்விடமெல்லாம் நிலாவெளிச்ச... பாலாய் காய்ந்துகொண்டிருந்தது. கேட்டிற்குப் பக்கத்தி... லிருந்த நைட் க்வீன் சுகந்தமான பூக்களை வாரியிறை... திருந்தது.

'ஆஹா! நைட்க்வீன்! என்ன [வாசனை! எனக்கு ரொ... பப் பிடிக்கும்' என்றான் அவன் மூக்கை இழுத்து வாசனை... சுவாசித்துக்கொண்டே.

'இந்த வாசனையைப் பிடித்து அப்படியே ஜேபியி... அடக்கி வைத்துக் கொள்ளணும் போலிருக்கும். ஆனா... அது முடியாதே' என்றான்.

'எனக்குக் கூட ரொம்பப் பிடிக்கும்' என்றாள் மேகலா...

'நான் க்ளினிக் வைத்தேனானால் அதற்கு முன்பக்கத்தி... இதே செடிகளைத்தான் வைக்கப் போகிறேன்' என்றான்.

மேகலா பதில் பேசவில்லை.

'போயிட்டு வரேன் மேகா' என்றான் அவன் சைக்கிளை... மிதித்துக்கொண்டே.

'ஊருக்கு எப்பப் போகணும்?' மெல்லிய குரலி... கேட்டாள்.

'அதான் சொன்னேனே, பத்தாந் தேதிக்குள்! இன்னும்... ஐந்து நாள் இருப்பேன். வரேன் அவங்கள்ளாம் எனக்கா...



...த்துட்டிருப்பாங்க. குட் நைட்' என்றான். புறப்பட்டுக் ...கொண்டே. சைக்கிளில் அவன் கண்மறைவாகும் வரைபார்த் ...துக்கொண்டே நின்றிருந்தாள் அவள் கடவுளே! ஏதாவது அற்புதம் நிகழ்ந்து அவனுக்கு இங்கேயே வேலை கிடைத்து ...விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று தோன்றிற்று.

அவளுக்கு அவன் போய்விடப் போகிறான் இந்த ஊரை ...விட்டு — வெகு தொலைவிற்கு. மேகலாவுக்கு ஏதோ ...போலிருந்தது. அவள் திரும்பி நேராய் உள்ளேபோகவில்லை. ...படிக்கட்டிலேயே உட்கார்ந்து விட்டாள். மேகலாவுக்கு ...காலையில் அந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைத்ததி ...லிருந்தே வாழ்க்கையில் எல்லாம் கிடைத்துவிட்டாற்போல ...ஆனந்தமாய் இருந்தது. கிருஷ்ணராஜ் போய்விடப் போகி ...றானாம்.'

மேகலாவிற்கு ஏனோ தெரியவில்லை, ஏதோ தனிமையும் ...துன்பமும் ஏற்படத் தொடங்கின. சொல்ல முடியாத ...வருத்தமாயிருந்தது! இந்த வருத்தத்தைப் பற்றிக் கிருஷ்ண ...ராஜிடம் சொன்னாலும் புரியாது.

'அசட்டுப் பெண்' என்று சிரித்துக் கொண்டே தள்ளி ...விடுவான்.

'மேகா! இதென்ன இங்கே உட்கார்ந்துட்டிருக்காய். ...வா, உள்ளே.' ஸ்ரீரஞ்சனி வந்து கூப்பிட்டாள். மேகலா ...உள்ளே வந்து படுக்கையில் படுத்தாள். கிருஷ்ணராஜ் போய் ...விடப்போகிறானாம்! போய்விடப்போகிறானாம்... மேகலா ...அன்றிரவெல்லாம் தூங்கவேயில்லை. அப்படியே யோசித்துக் ...கொண்டேயிருந்தாள்.

# 26

அன்று தான் கிருஷ்ணராஜ் ஊருக்குப் புறப்படவிருந்தான். பிரயாண ஏற்பாடுகள் எல்லாம் முடிந்துவிட்டன. ஐந்து நாட்களும் ஐந்து நிமிஷங்களாய்ப் பறந்து விட்டன. பாக்கியலட்சுமியின் மூலமாய்த் தெரிந்தது! கிருஷ்ணராஜிற்கு ஐதராபாத்தில் அந்த உத்யோகம், வரப்போகும் மாமனார் மூலமாய்க் கிடைத்ததாம்! அங்கிருந்து அவன் ஃபாரினுக்குப் போகும் ஏற்பாடுகள் கூட நடந்து கொண்டிருக்கிறதாம்! திருமணம் கூட ஐதராபாத்தில்தான் நடக்கப் போகிறதாம்.

மேகலாவுக்கு இந்தஐந்து நாட்களாய் உறக்கமேயில்லை. சாப்பாடு சகிக்கவில்லை. மனமெல்லாம் திகிலில் உறைந்து போயிருந்தது. அதென்ன வருத்தம் என்று அவளுக்குப் புரியவில்லை. கிருஷ்ணராஜ் அந்த ஊரைவிட்டுப் போவது பிரியமான ஏதோ பொருள் கைவிட்டுப் போய்விடப் போவது போல மனதைப் பிசைந்தெடுத்தது.

பாக்கியலட்சுமி மேகலாவைக் காலையில் ஃபேக்டரிக்குப் போவதற்கு முன்னால் வந்துவிட்டுப் போகச் சொல்லி செய்தி அனுப்பினாள்.

மேகலா போனாள். சாமான்களையெல்லவம். கட்டி பேக் பண்ணிவிட்டிருந்தார்கள். வீடு வெறிச்சென்றிருந்தது. அவள் மனதைப் போலவே தென்பட்டது அவளுக்கு அந்த வீடு.

'வந்தாயா? வாம்மா வா? இப்படி வந்து உட்காரு' என்றாள் பாக்கியலட்சுமி. மேகலா வந்து உட்கார்ந்தாள். பாக்கியலட்சுமி புதுப்புடவையையும் ஜாக்கெட் துணியையும் அவள் கையில் தந்து, 'கட்டிக் கொள்' என்றாள்.



'இப்ப எதுக்கு?' என்றாள் மேகலா.

'கட்டிக் கொள்! என் சந்தோஷத்துக்கு ஏதோ தந்தேன். மறுக்காதே' என்றாள். சின்னச் சின்ன நீலப்பூக்கள் போட்டு பெரிய பார்டருடனிருந்த காஷ்மீர் சில்க் புடவை அது! மேகலா அதற்குமேல் எதுவும் சொல்லாமல் போய் கட்டிக் கொண்டு வந்தாள். புதிய புடவையில் மேகலாவைப் பார்த்ததுமே பாக்கியலட்சுமி சந்தோஷத்துடன் —

'அழகாய் இருக்கு. என் பையன் சொல்லிட்டே இருந்தான் — உனக்கு இது நன்றாயிருக்கும் என்று. போ, கிருஷ்ணனுக்குக் காட்டி விட்டு வா. அறையில் இருக்கிறான். இந்தா, இந்தக் காபியைக்கொடுத்துவிட்டு வா, அவனுக்கு.' காலி தம்ளரைத் தந்தாள்.

மேகலா காபிதம்ளரை எடுத்துக் கொண்டு கிருஷ்ணராஜ் அறைக்கு வந்தாள். அவன் பெட்டியில் சாமான்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தான். காலடியோசை கேட்டதுமே திரும்பிப் பார்த்தான். மேகலாவைப் பார்த்ததுமே ஒரு வினாடி செய்து கொண்டிருந்த காரியத்தை மறந்து போய் அம்படியே நின்று விட்டான். அவன் கண்கள் புதிய புடவையையும், அதைக் கட்டிக் கொண்டிருந்த மேகலாவையும் வினாடி நேரம் கூர்ந்து கவனித்தன. பிறகு முறுவலுடன், 'மேகா! புடவை நன்றாயிருக்கு. பிடித்திருக்கா?' என்றான்.

'பிடித்திருக்கிறது என்பது போல் தலையாட்டினாள். மேகலா அவனிடம் வந்து காபியை நீட்டினாள். காபியை வாங்கிக் கொண்ட அவன் மேகலாவைப் பார்த்தான்—

'மேகா! நாங்க ஊருக்குப் போயிடப் போறோம். எங்களை ஞாபகம் வைத்திருப்பாயா?' முறுவலுடன் கேட்டான்.

மேகலா சரேலென்று நிமிர்ந்து பார்த்தாள். அக்கண்களில் கண்ணீர் குபுக்கென்று ததும்பி நின்றது. உதடுகள் துக்கத்தை கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாமல் அதிர்ந்து கொண்டிருந்தன. சட்டென்று மேகலா முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு அழுதுவிட்டாள். கிருஷ்ணராஜ் வாயடைத்துப் போய் விட்டான்.

'அட! இதென்ன மேகா?' அவன் காபியைக் கீழே வைத்து விட்டு மேகலாவைப் பிடித்துக் கொண்டான்.

'என்னவாச்சு மேகா? என்னவாச்சு?' தோளைக் குலுக்கிக் கேட்டான். மேகலா பதில் சொல்லவில்லை. துக்க அலைகள் அவன் கேட்கக் கேட்க இன்னும் தீவிரமாய்ப் பொங்கத் தொடங்கி—

'அட! அசட்டுப் பெண்ணே, இதென்ன?' அவன் சொல்லிக் கொண்டிருந்தபோதே மேகலாதான் அவனை நெருங்கினாளோ அல்லது அவனே அவளை இழுத்து அணைத்துக் கொண்டானோ தெரியாது, மேகலா மட்டும் அவன் கைகளுக்கிடையே வந்து அவன் மார்யில் முகத்தைப் பொத்திக் கொண்டு அழுதுகொண்டிருந்தாள். 'ஏன் எதற்கு?' என்றான் அவனுக்கு மேகலா சொல்லாமலே புரிந்து விட்டது. தாம் ஊருக்குப் போய் விடப்போகிறோம் தொலைவிற்குப் போய் விடப் போகிறோம் என்ற வருத்தம் அது! மேகலா இவ்வளவு சீரியஸாய் ஆகிவிடுவாள் என்று அவன் எண்ணியிருக்கவில்லை. மேகலாவின் மனதைவாட்டிக் கொண்டிருந்த அந்த துக்கத்தைப் பார்த்தபோது அவனுக்கு ஏதோ போலாகிவிட்டது. தன்னையறியாமல் அவன் கைகள் மேகலாவின் தலையை மார்போடு அணைத்துக் கொண்டன.

'அசட்டுப் பெண்ணே! நாங்கள் எங்கே போய்விடப் போறோம்? எத்தனை சமுத்திரங்களைத் தாண்டி போய் விடப் போறோம்? ஆஃப்டர் ஆல் ஐதாபாத் தானே! இன்றைக்கு சாயந்திரம் ரயிலேறினால் விடிந்ததுமே ஐதரா



பாத்தில் இருக்கலாம்! சும்மாயிரு! சும்மாயிரு! நான் கடிதங்கள் போட்டுக்கொண்டேயிருக்கேன். நீ பதில் எழுது, சரிதானே? இதப்பார்' அழுது கொண்டிருந்த அம் முகத்தை மலவந்தமாய்த் தூக்கி, சிவந்த கண்களையே பார்த்தபடி சொன்னான் அவன்.

'மனதில் ஞாபகம் தங்கியிருந்தால் போதும். எவ்வளவு தூரத்திற்குப் போனாலும் மறந்துட மாட்டாங்க. உன் மயல் பொம்மை என்னோடேயே இருக்கும். அதைப் பார்த்து உன்னை ஞாபகப்படுத்திக் கொண்டேயிருப்பேன் நீ என்னை எப்படி ஞாபகத்தில் வைத்திருக்கப் போறாய்? அதைச் சொல்லு!' என்றான்.

'நான் சாப்பிடும் சாதம், இருக்கும் வீடு, பண்ணுகிற உத்யோகம் எல்லாம் நீங்கள் காட்டியதுதானே? எனக்கு எப்பொழுதும் ஞாபகத்தில் இருந்துட்டேயிருக்கும்' அவள் முகம் உணர்ச்சி வசமாய் இருந்தது. அவள் சொன்ன விதம் அவன் மனதைப் பிழிந்தது.

'இதப் பார்! இந்தமாதிரி பெரிய வார்த்தைகளைத்தான் சொல்ல வேண்டாங்கிறேன். நீ வெறும் அசடு. உனக்கு எப்படி எந்த விதமாய் எடுத்துச் சொல்றதுன்னுதான் தெரியலை எனக்கு.

அவன் ஜேபியிலிருந்து கைக்குட்டையை எடுத்து அவள் கண்களைத் துடைத்தான். மேகலா அக் கைக்குட்டையைத் தான் எடுத்துக் கொண்டாள்.

அவன் போய் காபிகுடிக்கத் தொடங்கினான். மேகலா அவன் உடைகளை அடுக்கி வைக்கத் தொடங்கினாள். கிருஷ்ணராஜ் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு மேகலாவையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மேகலாவிடம் ஏதோ புதிய உணர்ச்சியைக் கண்டாற்போல் சற்று முன்னால் அவளை மார்போடமுத்திக் கொண்டபோது தோன்றிற்று.

அதற்குள் பாக்கியலட்சுமி அங்கே வந்தாள். 'கிருஷ்ண ஸ்டேஷனுக்கு முன்னாடி ராஜாராம் வீட்டிற்குப் போ அவங்களைப் பார்த்துட்டுப் போகணும்டா' என்றாள்.

'சரிம்மா' என்றான்.

மேகலா அன்றைக்கு கம்பெனிக்குப் போகாமல் இருந் விடுவதாய்ச் சொன்னாள். ஆனால் கிருஷ்ணராஜ் வி வில்லை.

'போ. போய் மாலையில் ஒரு மணி நேரம் முன்னதா வா.' என்றான். பாக்கியலட்சுமியும் அதையே சொன்னதா மேகலா வேறு வழியில்லாமல் போனாள்.

மாலையில் வேலை முடிய நான்கு மணி ஆகிவிட்ட முகம், கை, கால்களைக் கழுவிக்கொண்டு வெளியே வந் போது நாலரை ஆயிற்று. அங்கே ரிக்ஷாவோ ஆட்டோவோ எதுவுமே கிடைக்காது. ஸ்டேஷன் மிக தொலைவில் இரு தக. எவ்வளவு நேரமாய் காத்திருந்த போதிலும் பஸ் வ வில்லை. கடைசியில் ஒரு ஆட்டோ வந்தது,

மேகலா அதில் ஏறிக்கொண்டாள். வழியில் பஞ்சராகி ஆட்டோ நின்றுவிட்டது. மேகலா இன்னொ ஆட்டோவைப் பிடித்து ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தாள்.

அதற்கு இரண்டு நிமிஷங்களுக்கு முன்னால் தா ஐதராபாத் எக்ஸ்பிரெஸ் கிளப்பிப் போய்விட்டது. தொலை வில் புகையைக் கக்கிக்கொண்டு கூவிக்கொண்டே மு திரும்பி, கண்மறைவாகிக் கொண்டிருந்தது ரயில்.

மேகலா சிலையாய் நின்றுவிட்டாள், முகமெல்லா வியர்த்துக் கொட்டிற்று. பாக்கியலட்சுமிக்குத் தரவே மென்று ஸ்வீட்டுகளை வாங்கியிருந்தாள்.



மேகலாவின் மனம் நொடிந்துப் போய்விட்டது. தளர்ந்த நடையுடன் திரும்பினாள். திரும்பி வந்து கொண்டிருக்கையில் மேகலாவுக்கு பயங்கரமான தனிமையுணர்ச்சி தோன்றத் தொடங்கிற்று. கிருஷ்ணராஜைக் கடைசி முறை பார்க்கவில்லையே, பேசவில்லையே என்றிருந்தது. அவளுக்குத் தன் உடம்பில் பாதி பாகம் தன்னைவிட்டுப் போய் விட்டாற் போலவே இருந்தது.

## 27

ஒரு வாரத்திற்குப் பிறகு அவள் மாலையில் வீடு திரும்பி வந்ததுமே 'மேகா! உனக்கு ஒரு கடிதம் வந்திருக்கு' என்று கொண்டுவந்து கொடுத்தாள் தாய் ஸ்ரீரஞ்சனி.

'எனக்கா? யார் எழுதியிருக்காங்கம்மா?'

'நீயே பார்!' என்று சொல்லி விட்டு ஸ்ரீரஞ்சனி உள்ளே போய் விட்டாள்.

மேகலா கடிதத்தைப் பார்த்தாள். கிருஷ்ணராஜ் எழுதியிருந்தான். மேகலாவின் கண்கள் சந்தோஷத்தோடும் வியப்போடும் எழுத்துக்களைத் தொடர்ந்து ஓடின.

கடிதம் சுருக்கமாய் இருந்தது,

'அன்புள்ள மேகலாவுக்கு,

கிருஷ்ணராஜ் எழுதிக் கொண்டது. நாங்கள் நலம்! நீங்களும் நலமாய் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நாங்கள் இங்கு வந்ததுமே அம்மாவுக்கு உடம்புக்கு வந்துவிட்டது. இப்பொழுது கொஞ்சம் தேவலை. புது வீடு, புதுஉத்யோகம். வீட்டிலிருந்து ஆசுபத்திரி வெகு தூரத்தில் இருக்கிறது. இந்தப் பரபரப்பில் உடனே கடிதம் போடமுடியவில்லை.

நீ அன்றைக்கு ஸ்டேஷனுக்கு வருவாய் என்று மிகவும் எதிர் பார்த்தோம். ஆனால் நீ வரவில்லை. ஒருக்கால் வரமுடியா மல் போயிருக்கும் என்று நினைக்கிறேன். பாட்டி எப்படி இருக்கிறார்! இன்னும் முதுகு வலி வருகிறதா? அம்மாவுக்கு என் நமஸ்காரங்கள். மானஸா கல்லூரிக்குப் போய் வருகிறாளா?

உன் உத்யோகம் எப்படி இருக்கிறது? மேகா, நீ தான் உங்கள் வீட்டிற்கு ஆண்பிள்ளை! குடும்ப பாரமெல்லாம் இவ்வளவு சின்ன வயதிலேயே உன் தலையில் விழுந்து விட்டது துரதிர்ஷ்டந்தான். உத்யோகத்தை ஜாக்கிரதை யாய்ப் பார்த்துக்கொள்.

என் தாயார் உங்களையெல்லாம் கேட்டதாய் எழுதச் சொன்னார். என் விவாகம் ஜூன் ஆறாம் தேதிக்குத் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. அவ்விடத்திய விசேஷங்களுடனும் உங்கள் க்ஷேம சமாச்சாரங்களுடனும் உடனே பதில் எழுது.

இப்படிக்கு
ஆசிகளுடன்
கிருஷ்ணராஜ்'

மேகலாவுக்குப் படித்து முடித்ததும் சந்தோஷம் பொங்கி வந்தது. அங்கிருந்து தன் அறைக்குப் போய் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு திரும்பவும் படித்தாள். குளித்துவிட்டு வந்து படித்தாள். திரும்பவும் சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போவதற்கு முன்னால் படித்தாள்.

அவர்கள் வீட்டில் யாருக்குமே எப்பொழுதுமே கடிதம் வராது. தனக்குக் கடிதம் வந்தால் கிழித்துப் படிக்க வேண் டாம் என்று அம்மாவிடமும் பாட்டியிடமும் சொல்லவேண் டும் என்று தோன்றிற்று. ஆனால் சங்கோஜமாய் இருந்தது.



கிருஷ்ணராஜ் எழுதிய கடிதத்தில் ரகசியங்கள் எதுவும் இல்லை. அது அக் குடும்பத்தில் எல்லோருக்கும் சார்பாய் எழுதியிருந்த கடிதந்தான். ஆனால் மேகலா அவ்வாறு நினைக்கவில்லை. அது அவள் சொந்தக் கடிதமாய்த் தான்றிற்று. பெட்டியில் பத்திரமாய் எடுத்து வைத்தாள்.

மேகலா அன்றிரவே பதில் எழுதினாள். முதலில் அவனை என்னவென்று விளிப்பது என்று தெரியவில்லை. கிருஷ்ண ராஜ் என்றால் நன்றாயிருக்காது. 'டாக்டர்' என்றாலும் நன்றாயில்லை. கடைசியில் எதையும் குறிப்பிடாமல் 'உங்களுக்கு மேகலா எழுதியது' என்று தொடங்கினாள்.

'நான் இங்கே நலம். உங்கள் நலனைத் தெரியப்படுத்தவும்! அம்மாவுக்கு இப்பொழுது நல்ல ஓய்வு கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன்' என்று எழுதிவிட்டு, அன்றைக்கு ஸ்டேஷனுக்கு எப்படி வர முடியாமல் போனேன் என்றும் எழுதினாள். கடிதத்தின் கடைசியில் தனக்குப் பிரியமானவர் களைவிட்டுப் பிரிந்து விட்டாற்போல அவ்வளவு வருத்தமாய் இருப்பதாய் எழுதினாள் உடனே பதில் போடும்படி வேண் டிக் கொண்டு கடிதம் எழுதினாள்.

கிருஷ்ணராஜ் உடனே பதில் எழுதினான். இம்முறை தன்னைப் பெயரில்லாமல் விளிக்க வேண்டாம் என்றும் தன் தாய் கூப்பிடுவது போல் 'கிருஷ்ணன்' என்று கூப்பிடும்படியும் கேட்டுக் கொண்டிருந்தான். கடைசியில் 'இன்றைக்கு எனக்கு வரப்போகும் மாமனார் வீட்டிற்குச் சாப்பிடப் போயிருந் தேன்.

'அவர்கள் சாப்பாட்டில் பாயசம் போட்டார்கள். அதைச் சாப்பிட்ட பொழுது நீதான் நினைவிற்கு வந்தாய். அந்தப் பாயசம் ஒன்றும் நன்றாய் இல்லை. ஒருக்கால் என் வாழ்க்கையில் வேறு யார் கொடுத்தாலும் எனக்குப் பிடிக் காதோ என்னவோ?' என்று எழுதியிருந்தான் அவனும் பானுவும் சேர்ந்து இந்தி சினிமா பார்த்தார்களாம் கடிதத்

தின் கடைசியில் — 'நீ சரியாய்ச் சாப்பிடுகிறா இல்லையா? எனக்கு மாதத்திற்கொரு முறை உன் எடை காட்டும் கார்டை அனுப்பிவைக்க வேண்டியது. நீ கடி போட்டுக்கொண்டிரு, நான் பதில் போடுகிறேன். தா மானால் ஒன்றும் நினைத்துக் கொள்ளாதே' என்று எழு னான்.

மேகலா எடையைப் பார்த்துக் கொண்டு அக்கார் அவனுக்கு கடிதத்தோடு இணைத்து அனுப்பினாள். அ கார்டிற்குப் பின்னால்— 'நீ நேசித்தவர் உன்னை வி தொலைவிற்குப் போய் விட்டதால் உன் வாழ்க்கையெல்லா சூனியமாகவும், வெறிச்சென்றுப் இருக்கும்' என்று இருந் மேகலாவுக்கு கிருஷ்ணராஜ் அதைப் படிக்க மாட்டா என்றிருந்தது.

பரஸ்பரம் கடிதம் எழுதிக் கொள்வது தினசரி கட யாகி விட்டது. ஒருமுறை மேகலா எழுதினாள்:

'கிருஷ்ணா! இக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கை நைட் க்வீன் பூக்களின் வாசனை ஜன்னல் வழியாய் வ வீசி மூக்கைத் துளைக்கிறது. எனக்கு நைட்க்வீனி வாசனையை நுகரும் பொழுதெல்லாம் உங்கள் நினை தான் வரும். என்னால் முடியாதே தவிர, முடிந்தால் அ வாசனைகளை மூட்டைக்கட்டி இக்கடிதத்தோடு சேர்த் அனுப்பி வைத்திருப்பேன்' என்று எழுதினாள்.

அக்கடிதத்திற்கு மேகலா எதிர்பார்த்தாற்போல அவனிடமிருந்து பதில்வரவில்லை. ஒரு வாரத்திற்குப் பிற வந்தது. கிருஷ்ணராஜ் ஊரில் இல்லையாம். பானுவோ சேர்ந்து யாதகிரிக்குப் போயிருந்தானாம். கடிதத்தோடு திருமண அழைப்பிதழும் வந்தது.

'எல்லோரும் கண்டிப்பாய் வரவேண்டும்' என் பாக்கியலட்சுமி கூட எழுதியிருந்தாள். அழைப்பிதழை



பார்த்ததும் மேகலாவுக்கு ஏதோபோல ஆகிவிட்டது. மேகலா அந்த அழைப்பிதழையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். திருமணம் பெண் ஒருத்தியின் வாழ்க்கையில் மனோகரமான, இனிமையான அனுபவம்! கல்யாணத்தின் மூலமாய் வாழ்க் கைப் படகு ஒரு கரைக்கு வந்து சேரும். மேகலாவின் கண் முன்னால் எழுத்துக்கள் சிதைந்துவிட்டன. அங்கே பானு விற்குப் பதிலாய் மேகலா என்று தென்பட்டது.

அவளுக்குக் கூட தந்தை இருந்தால் இப்படிப்பட்ட ஆசை நிறைவேறியிருக்குந்தான். மேகலாவுக்கு உடனே பிரசாதின் கேலியும் சிரிப்பும் நினைவிற்கு வந்தன. மேகலா அன்றைக்குத் தெரியாமல் ரோஷத்தால் வருந்தினாள். ஆவேசப்பட்டாள். இன்றைக்குப் புரிந்துவிட்டது. பிரசாதின் வார்த்தைகளில் எந்தத் தப்பும் இல்லை என்று புரிந்தது. அவள் அதிர்ஷ்டம் அப்படி இருக்கிறது!

மேகலா அன்றிரவெல்லாம் தூங்கவேயில்லை. அதற்குப் பிறகு கிருஷ்ணராஜ் திருமணக் காரியங்களில் ஈடுப்பட்டு விட்டிருந்ததால் கடிதம் வருவது நின்றுவிட்டது.

மங்களத்திற்கு உடம்புக்கு மிகவும் வந்துவிட்டது. மேகலா நல்ல வாழ்த்து கார்டு ஒன்றை வாங்கி அனுப்பினாள். தான் வரமுடியாததற்கு வருந்தி எழுதினாள்.

கிருஷ்ணராஜிடமிருந்து பிறகு பதிலே இல்லை. மேகலா எழுதியபோது, 'கிருஷ்ணராஜ் இல்லை என்றும், மனைவியோடு வடஇந்தியர்வுக்குப் போயிருப்பதாகவும் பாக்கியலட்சுமி பதில் போட்டாள். அதுதான் கடைசிக் கடிதமாயிருந்தது.

## 28

நாட்கள் கழிந்துகொண்டிருந்தன. வாரங்கள் பறந்தன. மேகலாவின் வாழ்க்கை இப்பொழுது சீரான நிலைக்கு வந்தது. சரியான தண்டவாளத்தில் போகும் ரயிலைப் போல் போய்க்கொண்டிருந்தது.

மேகலாவும் மானஸாவும் காலையில் எழுந்திருப்பார்கள், குளித்து விட்டு ஸ்ரீரஞ்சனி போட்ட சாப்பாட்டைச் சாப்பிடு வார்கள். மானஸா புத்தகத்தையும் டிபன் பாக்ஸையும் எடுத்துக்கொள்வாள். மேகலா குடையையும் டிபன்பாக் ஸையும் எடுத்துக் கொள்வாள். இருவரும் ஒன்பது மணிக் கெல்லாம் வீட்டை விட்டுப்புறப்பட்டு விடுவார்கள். இரண்டு பர்லாங்கு நடந்த பிறகு பஸ் ஸ்டாண்டு வரும். மானஸா வலது பக்கமாய் காலேஜிற்குப் போகும் பஸ்ஸில் ஏறினால், மேகலா வலது பக்கமாய்த் தெருவைக் கடந்து சென்று கம்பெனிக்குப் போகும் பஸ்ஸில் ஏறிக்கொள்வாள்.

ஒரு மாதமான பிறகு கணக்கைப் பார்த்துக் கொண்ட போது இருவருக்கும் பஸ் செலவுக்கு மட்டுமே நூறு ரூபாய் களுக்குமேல் செலவாகியிருந்தது. அதோடு கூட சிலநாட்கள் பஸ் கிடைக்கா விட்டால் ரிக்ஷாவில் வரவேண்டும். மேகலா இந்தச் செலவைக் குறைக்கும் வழி என்ன என்று யோசித்தாள்.

மேகலா நித்யாநந்தன் மூலமாய் தவணை முறையில் தருவதாய்ச் சொல்லி சைக்கிள் ஒன்றைவாங்கிக்கொண்டாள். சிறுவயதில் பக்கத்து வீட்டுப் பையன் மூலமாய் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டிருந்தாள். பொழுது போக்காய்க்



கற்றுக் கொண்ட அப் பழக்கம் இப்பொழுது நன்கு கை கொடுத்தது.

கொஞ்சம் பயிற்சிப் பண்ணியதுமே ஓட்ட நன்றாய் வந்துவிட்டது.

மேகலா சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்த போது மங்களம் கன்னத்தில் இடித்துக் கொண்டாள்.

'எல்லோரும் சிரிக்க மாட்டாங்களோ?' என்றாள்.

'சிரிக்கட்டும்! ஸ்கூட்டர் கூட பெண்கள் ஓட்டிட்டுப் போற இந்தக் காலத்தில் இதென்ன புதுசு பாட்டி? நான் கெட்ட காரியம் ஏதாவது பண்ணிட்டேனா என்ன?' என்றாள்.

மேகலா அன்றையலிருந்து மானஸாவை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு காலேஜில் இறக்கிவிட்டு விட்டு, தான் கம்பெனிக்குப் போகத் தொடங்கினாள்.

முதல் நாள் மேகலா மானஸா இருவரையும் சைக்கிளில் பார்த்து அந்த வீதியிலிருந்த சில காலிப்பசங்கள் விசிலடித்து, கேலிப் பண்ணி ஏதாவது கத்துவார்கள். மானஸா சங்கோஜத்துடன், 'பாரக்கா? எப்படி கேலிப் பண்றாங் கன்னு!' என்பாள்.

'பண்ணிக்கட்டும். பாட்டி எப்பொழுதும் சொல்லுவாங் களே, கேலிப் பண்றவங்க வாய்தான் வலிக்கும்னு! அழகுக் காட்டுகிறவங்க வாய்தான் கோணிக்கும்னு! பாவம் இந்த சிறுதலைகளுக்கு அந்த விஷயம் தெரியாமல் கேலிப் பண்ணிட் டிருக்காங்க அவங்களைப் பார்த்து நாம்பதான் பரிதாபப் படணும். பார், அந்த பஸ் ஸ்டாண்டில் எவ்வளவு பெண்கள் இருக்காங்கன்னு! புதிய காரியம் எதையாவது பண்ணணும்னால் தைரியம் இருக்காது. சைக்கிள் ஓட்டினால் என்னவாம்? அதுவேகார் ஓட்டுகிறப் பெண்ணை விநோத

மாய், கௌரவமாய்ப் பார்க்கிறாங்க! காருக்கும் சைக்கிளுக்கும் என்ன வித்தியாசம்? பணம் ஒன்றைத்தவிர!' என்றாள். யார் கேலிபண்ணினாலும் மேகலா பொருட்படுத்தவில்லை. எல்லோருக்கும் பழகிப் போய் கேலிபண்ணுவது கூட குறைந்தது. சில நாட்களானதும் அந்த வீதியில் இன்னும் இரண்டு மூன்று பெண்கள் கூட சைக்கிள் ஓட்டத் தொடங்கி விட்டார்கள்.

மாலையில் காலேஜிலிருந்து திரும்பி வந்ததும் புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு படிக்கத் தொடங்குவாள் மானஸா. மேகலா வரும் வரை சாப்பிட மாட்டாள். காலையில் தனித்தனியாய்ச் சாப்பிட்டாலும் மாலையில் மட்டும் நால்வரும் சேர்ந்துதான் சாப்பிடுவார்கள். கடைக்குப் போகும் வேலைகளையெல்லாம் மங்களம் பார்த்துக் கொண்டாள். சமையலை ரஞ்சனி கவனித்துக் கொண்டாள். லீவு நாட்களில் பெண்களிருவரும் சேர்ந்து துணி துவைத்து இஸ்திரி போடுவார்கள். இப்பொழுது அந்த வீட்டில் பட்டினி என்பதே இல்லை.

மேகலாவுக்கு வாழ்க்கை சுவர்க்க மயமாய் இருந்தது. கம்பெனியிலும் கூட அவள் நித்தியாநந்தன் மூலமாய் வேலைக்கு வந்ததால் மற்றவர்கள் மதிப்புடன் நடந்து கொண்டார்கள்.

மேகலாவும் தங்கையும் சேர்ந்துதான் படுத்துக்கொள்வார்கள். மானஸா காலேஜ் விஷயங்களையும், மேகலா கம்பெனி விஷயங்களையும் பேசுவாள்.

மானஸாவின் கல்லூரியில் அதே குரூப்பில் மானஸாவின் தந்தையான ராமபூஷணின் மகள் கூட படித்து வந்தாள். அவள் பெயர் ரஜனி. அவளும் மானஸாவும் நன்றாகவே பழகிவந்தார்கள். கேட்டைத் தாண்டி இருவரும் வந்து கொண்டிருந்தபொழுது மகளை அழைத்துச் செல்வதற்காக வந்திருந்த ராமபூஷ்ண் காரில்உட்கார்ந்தபடியே பார்த்தான்.



மானஸாவை ரஜனி அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். அவனைப் பார்த்ததுமே மானஸா தடுமாற்றமடைந்தாள். பயந்தபடி பார்த்தாள்.

தப்புப் பண்ணிவிட்டவளைப்போலத் தலை குனிந்தாள். அவன் ஒன்றும் பேசவில்லை. மகளைக் கோபமாய்ப் பார்த்தான்.

'உம்! கண்டவங்களோட சிநேகம் எதுக்கு உனக்கு?' என்று விட்டு எரிச்சலுடன் கதவைத் திறந்தான் ரஜனி அதில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

அன்றைக்கு வீடுதிரும்பிய மானஸா புத்தகங்களைமூலையில் விட்டெறிந்து விட்டு, 'நான் இனி காலேஜுக்குப் போகப் போறதில்லைம்மா' என்று நடந்ததையெல்லாம் சொல்லி விட்டாள்.

மேகலா மாலையில் வரும்போது மானஸா சுவர்ப் பக்கமாய்த் திரும்பிக் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தாள். ரஞ்சனி அழுதுகொண்டிருந்தாள்.

'என்னம்மா ஆச்சு?' மேகலா கேட்டாள்.

'ஒன்றுமில்லை' என்றாள் ஸ்ரீரஞ்சனி.

'மானஸா அப்படி அழுதுட்டிருக்காளே, உடம்பு சரியாய் இல்லையா?' கலக்கத்துடன் கட்டிலை நெருங்கினாள்.

'மானஸா நாளையிலிருந்து காலேஜுக்குப்போகப்போறதில்லையாம்' என்றாள் மங்களம்.

'போகப் போறதில்லையா? என்னவாச்சு? ஏன்?'

மங்களம் மானஸா சொன்னதையெல்லாம் ஒப்பித்தாள். ஒரு வினாடி மேகலா சலனம் ஒடுங்கிப் போய் அப்படியே நின்றுவிட்டாள். அவள் முகத்திலிருந்த ரத்தமெல்லாம் வற்றிப் போய் விட்டது.

மங்களம் சொன்னதையெல்லாம் கேட்டதுமே சிறு லென்று போய் மானஸா போர்த்திக்கொண்டிருந்த போர் வையைப் பற்றி இழுத்து உட்காரவைத்தாள்.

'இதென்ன மானஸா. இப்படிச் சொல்லலாமா ஒரு...' மானஸா பதில் பேசவில்லை.

'நீ எதுக்காக படிப்பை விடணும்? கண்டவங்க எத் னையோபேர் படிக்கும்போது நீ படிப்பைவிடப்போகிறாயா ஏன் விடணுங்கிறே?' உலுக்கி எடுத்தாள்.

'இது...இது காலேஜ் முழுக்கத் தெரிஞ்சுவிட்டால் நன் றாயிருக்காது அக்கா. எனக்கு என்னவோபோல ஆகிவிடும்' மெல்லிய குரலில் பதிலளித்தாள்.

'என்னவோபோல ஆயிடுமா?' மேகலா பழிப்புக்காட்டி னாள்.

'உனக்கு இப்படிச் சொல்றதுக்கு வெட்கமாயில்லை! என்னவோ போல ஏன் ஆகணும்? நீ ஏதாவது தப்புப்பண்ணி னாயா? அப்படி நினைச்சால் நாம்ப உயிரோடேயே இருக் கக் கூடாது. என்னவோ போல ஆகுமாம்! இது தெரிஞ்ச நீ இல்லை, அந்த ஆள்தான் வெட்கப்படணும். நீ பேச உரிமையில்லை, நீ அந்தக் காலேஜிலேயே தான் படித்துத் தீரணும். அதுமட்டுமில்லை, எல்லாவற்றிலும் முதல் மார்க் வாங்கணும்! மேகலா ஆவேசமாய் கையை ஆட்டிக்கொண்டு பேசினாள்.

'நீ நன்றாய்ப் படித்து ஃபஸ்டில் பாசாகிப் பேப்பர்களி லெல்லாம் உன் போட்டோவைப் போட வைத்து உன்னைப் போன்ற மகளுக்குத் தந்தை என்று சொல்லிக் கொள்ள முடி யாததற்கு அந்த ஆள் வெட்கப்பட்டுத் தலையைக் குனிந்து கொள்ளும்படியாய்ச் செய்யணும்.



...னாயிருந்தால் அப்படித்தான் செய்வேன். இதப் பார். ...சால்றேன் கேட்டுக்கோ. நீ டிஸ்டிங்ஷனில் பாசாகாவிட் ...ால் என்னைக் கொன்றதற்குச்சமானம். என்மேல் ஆணை ...ன்னவோ போல ஏன் இருக்கணுங்கறேன்?'

நாம்ப எந்தத் தப்பும் பண்ணிடலைலயே நாம்ப எதுக்கு ...வெட்கப்படனும்? ஒரு மனைவியை வைச்சுக்கிட்டு அவளுக் ...க் குழந்தைகளைப் பெற்றுவிட்டு, இன்னொரு பெண்ணோ ...ம் சம்பந்தம் வைத்துக்கிட்டு கல்யாணப் பண்ணிக்கிறேன்னு ...ஏமாற்றிவிட்ட அந்த ஆள்தான் வெட்கப்படணும். நமக்கு ...க்கில்லாததால், ஆண்துணை வீட்டில் இல்லாததால், உல ...கம் நம்மைப் பழிக்கிறது. அப்படிபட்ட மோசமான காரியத் ...தைப் பண்ணியும் கூட பெரியமனுஷனைப் போல வளைய ...வந்துட்டிருக்கிற அந்த ஆளை உலகம் ஒன்றும் சொல்ல ...வில்லை... இந்தப் பாழும் உலகம் நம்மைப் போன்ற ஆதர ...வில்லாதவங்களைத்தான் பழிக்கிறது. அழவைக்கிறது. ...அதுவே பணம், மதிப்பு உடையவங்களைப் பார்த்துபூனை ...யைப் போல மூலையில் ஒடுங்கிக்கொண்டு போய் விடுகிறது ...இதெல்லாம் தெரியாமல் சொன்ன பழிப்புக்களுக்குச் சின்ன ...வயதிலெல்லாம் அழுவேன் நான்.

உலகத்துக்கு பயப்படுகிறவங்க எல்லோரும் அப்பாவிங்க, முட்டாளுங்க. புத்திசாலிகளும்தைரியசாலிகளும்உலகத்துக்கு ...என்றுமே பயப்படமாட்டாங்க. எழுந்திரு! எழுந்து மரியாதை ...யாய் சாப்பிடவா. இன்னொரு தடவை காலேஜுக்குப் போகமாட்டேன்னு சொன்னாயோ பார், உன் கழுத்தை நெறித்துக் கொன்று விட்டு நானும் கழுத்தை நெறித்துக் கொண்டு செத்தொழிவேன்' என்றாள்.

எப்பொழுதும் பாசத்துடன் இருக்கும் மேகலா அப்படி கோபமாய் கத்தியதையும் கண்கள் சிவக்க உறுத்து விழித்த தையும் பார்த்த மானஸாவுக்குப் பயம் உண்டாயிற்று. எழுந்து மெதுவாய்ச் சாப்பிடவந்தாள்.

'போகட்டும் விடேன் மேகா! மானஸாவை ஏன் கஷ்ட படுத்தணும்? அவள் வீட்டில் இருந்துகொண்டே பிரைவேட் டாய் படிக்கட்டுமே என்றாள் ஸ்ரீரஞ்சனி.

'அம்மா உனக்குத் தெரியாது. நீ பேசாதே' மேகலா எரிந்து விழுந்தாள்.

நான்கு நாட்கள் கழிந்தன

அன்று கம்பெனிக்கு விடுமுறை நாள் மாலை நான்கு மணியளவில் காலேஜ் விடும் சமயத்தில் மேகலா மானஸா வுக்காக வந்தாள். அங்கே பல கார்கள் நிறுத்திவைக்கப் பட்டிருந்தன.

மேகலா சைக்கிளை ஒரு பக்கமாய் நிறுத்தி மானஸாவுக் காகக்காத்துக் கொண்டிருந்தாள். அங்கே கொஞ்சம் தூரத் தில் ராமபூஷணன் கூட கருப்பு அம்பாஸிடர் காரில் உட்கார்ந்து மகளுக்காகக் காத்திருந்தான். அவனைப் பார்த்ததுமே மேகலாவின் இதயம் தன்னையறியாமல் தடதடத்தது. ஆனால் அதற்குள் தைரியம் பொங்கி வரத் தொடங்கிற்று. முகத்தை நிமிர்த்திக்கொண்டு மிடுக்காய் நிற்கத் தொடங்கினாள் அம்முகத்தில் யாரையும் பொருட் படுத்தாத தைரியமும், பிடிவாதமும் நன்றாய்த் தெரிந் பட்டன. காலேஜ் விட்டார்கள். பெண்கள் விதம் விதமான உடைகளில் வண்ணத்திப் பூச்சிகளைப் போல உற்சாகமாய் வெளியே வந்து கொண்டிருந்தார்கள்.

ரஜனி வந்தாள். காரில் உட்கார்ந்ததும் மேகலாவைக் காட்டி தந்தையிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள் அவன் ஆர்வத்தோடு மேகலாவையே பார்த்தான். அவன் காருக்குக் குறுக்காய் மேகலாவின் சைக்கிள் இருந்தது. அவன் பாம் பாம் என்று ஹாரனை அடித்தான். மேகலா காதில் கேட் காதது போலவே நின்றுகொன்டிருந்தாள். ஒரு ஆட்டோரிக் ஷாக்காரன் வந்து 'சைக்கிளை எடுக்கச் சொல்றாருங்கம்மா'



என்றான். 'மேகலா காதில் விழாதது போலவே பேசாம லிருந்தாள். மானஸா வந்தாள். இருவரும் மெதுவாய் நடந்து கொண்டே சைக்கிளிடம் வந்தார்கள்.

மேகலா மானஸாவை முன்னால் உட்காரவைத்துக் கொண்டு சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தாள் பின்னால் ராமபூஷணனின் கார் நகர்ந்து வந்து கொண்டிருந்தது. அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் வரிசையாய் ரிக்ஷாக்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் கார் சைக்கிளை ஓவர்டேக் பண்ணிப் போக வழியில்லை.

முன்னால் மேகலா சைக்கிளில் உட்கார்ந்துகொண்டு சாவதானமாய்ப் போய்க் கொண்டிருந்தாள். பின்னால் கார் வழிவிடச் சொல்லி பாம் பாம் என்று ஹாரனடித்து விட்டு, இனிப் பயனில்லை என்றெண்ணிச் சும்மாயிருந்தது.

சைக்கிளின் வ்யூ மிரர்ரில் பார்த்துக் கொண்டிருந்த மானஸா,

'அக்கா! அவர்தான்' என்றாள். 'பார்த்தேன்' என்றாள் மேகலா எரிச்சலுடன்.

'வழி விடு அக்கா, எல்லோரும் பார்த்துட்டிருக்காங்க' என்றாள்.

'நீ வாயை மூடிக்கொள்!' எரிநது விழுந்தாள் மேகலா.

முன்னால் போய்க்கொண்டிருந்த சின்னப் பெண் ஒருத்தி பின்னால் வந்து கொண்டிருந்த காரிலிருந்த பணக் காரப் பெரியவருக்கு சைட் கொடுக்காததோடு கூட, குறுக் காய் வேறு வந்தது அங்கிருந்த ரிக்ஷாக்காரர்களுக்குக் குஷியை உண்டாக்கிற்று. 'ஸ் ஸ்' என்று விசிலடித்தார்கள். காரிலிருந்த ராமபூஷணனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

அவன் முகம் சிவந்து விட்டது. அவமானத்தா பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. சைக்கிளை உராய்ந்துகொண்டு, கீழே தள்ளிவிட்டு விர்ரென்று வேகமா போய் விட்டான். சைச்கிளின் மேலிருந்து கீழே விழுந்தார்க மானஸாவும் மேகலாவும். ரிக்ஷாகாரர்கள் ஓட்டமாய் ஓ வந்தார்கள். சைக்கிளைத் தூக்கி நிறுத்தினார்கள். அதற்கு தொலைவிலிருந்த ட்ராபிக் போலீஸ்க்காரன் விசில் ஊதி கொண்டே ஓட்டமாய் ஓடிவந்தான்.

மேகலா தன் சைக்கிளை ஆக்ஸிடென்ட் பண்ணிவிட் வேகமாய் போய்க் கொண்டிருந்த காரைக் காட்டினா போலீஸ் அங்கிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறி உடனே போய் காரை நிறுத்தினான்.

மேகலா, மானஸா, ராமபூஷணன், ரஜனி நால்வரு மொபைல் கோர்ட்டுக்கு வந்தார்கள்.

'நான் யாருன்னு தெரியுமா?' ராமபூஷணன் கோபமாய் கேட்டான்.

'அதான் தெரியுதே! சைக்கிளை ஆக்ஸிடென் பண்ணிட்டு பயந்து ஓடிப் போய்க் கொண்டிருந்த பெரியம ஷங்க' என்றார் இன்ஸ்பெக்டர்.

'எனக்கு ஐ. ஜீயைத் தெரியும். அதிகமாய்ப் பேசினா அப்புறமாய்ப் பச்சாதாபப்பட வேண்டியிருக்கும்'— என்றா அவன் கறாராய்.

'டியூட்டி தெரிஞ்ச ஆபீசரோடு பேசிட்டிருக்கோம் மொதல்ல தெரிஞ்சுக்குங்க. உங்க மானம் மரியாதையெல்லா எங்களுக்குத் தேவையில்லை' என்றார் அவர் அதையும் வி கடுமையாய். மொபைல் கோர்ட்டார். முன்னூறு ரூபா ராமபூஷணனிடமிருந்து சைக்கிளை ரிர்பேர் பண்ணிக்கொ வதற்காகமேகலாவுக்கு வாங்கித்தந்தார்கள். நசுங்கிப் போ சைக்கிளை ரிக்ஷாவில் போட்டுக் கொண்டு மேகலா மான



வயும் அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தாள். மங்களம் பதறிப்போய் ஓடிவந்தாள்.

'இவ்வளவு நேரமாயிடுத்தே ஏன்? ஐயோ, ஐயோ! தென்ன சைக்கிள் சட்டினியாயிடுத்தே!' என்றாள்.

மேகலா உள்ளே வந்து நடந்ததையெல்லாம் உற்சாகத் டன் சொன்னாள். மங்களம் ஆச்சரியத்துடன் கன்னத்தில் க வைத்துக் கொண்டே முகத்தில் பட்ட காயத்திற்கு எண் ணய் தடவிக்கொண்டிருந்த மேகலாவிடம் வந்து,

'நல்ல காரியம் பண்ணிட்டாயம்மா! என் பேத்தின்னு ட்டிக் கொண்டுவிட்டாய்' என்றாள் பெருமையோடு.

ஸ்ரீரஞ்சனி மட்டும் மிகவும் பயந்துவிட்டாள்.

'மேகா, இப்படி தகராறு வெச்சுக்கலாமா? நீங்கள் பண்பிள்ளைங்கள். தனியாய் வேறு போயிட்டு வரவேண்டி ருக்கு வெளியே' என்றாள்.

'பயப்படாதேம்மா! அந்த ஆளால் எங்களை ஒன்றும் ண்ணிட முடியாது என்றாள் மேகலா. அன்றைக்கு மேகலா க்கு மிகச் சந்தோஷமாகவும் பெருமையாகவும் இருந்தது. பாலீஸ் ஆபீசர் அலட்சியமாய்ப் பேசியபொழுது அவன் கம் எப்படி வெல வெலத்துப் போயிற்று என்பதை அடிக் நினைவு படுத்திப் பார்த்துக்கொண்டாள். அவளுக்கு மிகப் பெருமையாய் இருந்தது. உலகம் என்றால் அப் த்தான். தப்புப் பண்ணிவிட்ட ஆளைத் தயவின்றித்தண் க்க வேண்டும்.

மேகலாவுக்கு மிகத் திருப்தியாயிருந்தது.

## 29

மங்களம் வெறுமே உட்கார்ந்திருக்கும்போது, 'இந்தப்பெண் களுக்கு எப்பக் கல்யாணமாகப் போகிறதோ' என்று அங்க லாய்த்துக் கொள்வாள். மேகலா அதைக் கேட்டதுமே,

'இதப்பார் பாட்டீ, பெண்கள் என்று என்னையும் சேர்த்துக்காதே. வேணும்னால் மானஸாவுக்குப் பார். என் விஷயத்தை எடுக்காதே' என்பாள்.

'இதென்னது? கல்யாணம் பண்ணிக்கப் போற தில்லையா நீ?'

'பண்ணிக்கப் போறதில்லை'

'ஏனாம்? இதுக்கு முன்னாடியானால் பணமில்லாமல் முடியலை. இப்ப லட்சணமாய் உத்யோகம் பண்ணுகிறாய். எவனாவது பண்ணிப்பான். முந்தாநாள் கோவிலுக்குப் போயிருந்த போது பூஜாரி சொன்னார் அவருக்குத் தெரிந்த பையன் ஒருத்தன் இருக்கானாம்.

'சீ! நீ கோவிலுக்கு சுவாமியை வணங்கப் போனாயா அல்லது இதற்காகவா?'

'ரெண்டுக்குந்தான் புண்ணியம் புருஷார்த்தம் என்பார்கள். அவருக்குத் தெரிஞ்சப் பையன் ஒருத்தன் செருப்புக் கம்பெனி யில் வேலை பண்றானாம். உன்னைப்பார்த்தானாம். பிடிச் திருக்குன்னு சொன்னானாம். அப்பா இல்லையாம். ரெண்டு தங்கை ரெண்டு தம்பிங்களாம். உத்யோகம் பண்ற பெண் வேணுங்கிறானாம்'.



'ஆமாமாம். அவங்க செலவுக்குக் கைக் கொடுக்க வேண் டாமா பின்னே?'

'இதென்ன பேச்சு? எவ்வளவு பேர்களின் மனைவிகள் உத்யோகம் பண்றாங்க! இந்தக் காலத்தில் இந்தச் செலவுங் களுக்கு ரெண்டுபேரும் சம்பாதித்தாலேயொழிய ஈடுகட்ட முடியாது.'

மேகலா இடுப்பில் கையை வைத்துக்கொண்டுகேட்டாள்.

'உன் தர்க்கந்தான் உனக்கு. நான் கல்யாணம் பண்ணிக் கொண்டு அவனையும் அவன் தம்பிதங்கைங்களையும் காப் பாற்றப் போய் விட்டால், இங்கே உங்கள் கதி என்ன வாகிறது? உன்னையும் அம்மாவையும் யார்பார்த்துப்பாங்க.'

'மேகாவின் முகத்தில் ஆவேசம் பொங்கி வந்தது.'

'இதப் பார் பாட்டி! நான் ஒன்றும் யோசிக்காமல் பேச வில்லை. எனக்குக் கல்யாணமாயிட்டால் வரப்போற அவன் உங்களைக் கவனித்துக் கொள்ளக்கூடாது என்பான். உங்களுக்குச் சாப்பாடு போடவேண்டாம் என்பான். அப்ப நான் என்ன பண்ணுவேன்? வேண்டாம் பாட்டி. வேண்டாம்.

'நான் இப்பொழுது ரொம்பச் சந்தோஷமாய், கவலை யில்லாமல் இருக்கிறேன். எனக்குப் பிக்கல் பிடுங்கலை ஏற்படுத்தப் பார்க்காதீங்க. என்னால் போராட முடியாது.

'இதென்ன பேச்சு? எப்பொழுதும் கல்யாணமே பண்ணிக்காமல் இருந்துட முடியுமா?'

'ஆங். அப்படித்தான் இருக்கப்போறேன். அதைத் தவிர வேறெதுவும் தேவையில்லை எனக்கு. கல்யாணமாகாமல் எத்தனையோ பெண்கள் இல்லையா? அவங்களில் நானும்

ஒருத்தியாய் இருந்துட்டுப் போறேன். நீ என் விஷயத்தை விட்டுவிட்டு, மானஸாவுக்குச் சம்பந்தங்களைப் பாரு. திருப்பித் திருப்பி என்னால் சொல்ல முடியாது. இதுதான் என் உறுதியான முடிவு'

என்று சொல்லி விட்டாள்.

இரவு எல்லோரும் தூங்கிவிட்டார்கள். மேகலாவுக்குத் தூக்கம் வரவில்லை.

கிருஷ்ணராஜ் போய் ஏறக்குறைய இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. அவன் மனைவியோடு வெளிநாட்டிற்குப் போயிருப்பதாய்த் தெரிய வந்தது. மேகலாவின் கண் முன்னால் ஊருக்குப் போவதற்கு முன்னால் காபியைக் கொடுப்பதற்காக அவள் போனபொழுது அவன் அவளைப் பிடித்துக் கொண்ட சம்பவம் நிழலாடிற்று. அவன் நினைவுகள் அவளை விடவே விடாது. கிருஷ்ணராஜின் அன்பும் சிநேகமும் சட்டாந்தரையைப் போலிருந்த மேகலாவின் இதயத்தில் மழை நீரைப் பொழிந்தது. அங்கே அன்பு என்ற முளை விடத் தொடங்கிவிட்ட விஷயம் கிருஷ்ணராஜுக்குத் தெரிந்திருக்காது போலும். அவள் மனதில் இவ்வளவு அன்பு புதைந்துக் கொண்டிருந்தது அவனுக்குத் தெரியவே தெரியாது போலும்! அவன் எங்கோ வெளிநாட்டில் மனைவியோடு சந்தோஷமாய் இருப்பான்! மணமாகி இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. பானு எவ்வளவு அதிர்ஷ்டசாலி! கண்ணின் இமைபோலப் பார்த்துக் கொள்ளும் தந்தை ஒரு பக்கம்! அன்பைப் பொழியும் கணவன் இன்னொரு பக்கம்! பெண்ணாய்ப் பிறந்தால் அப்படிப் பிறக்க வேண்டும். மேகலா பெருமூச்செறிந்தாள்.

அவனை அவள் மறக்கவில்லை. ஒரு வினாடி கூட மறந்து போய் விடவில்லை. அவள் வாழ்க்கையில் என்றைக்காவது கண்ணில் படாமல் போய்விடுவானா? மேகலாவின் கண் முன்னால் இன்னொரு காட்சி நிழலாடிற்று.



அவள் பேக்டரியிலிருந்து வந்து கொண்டிருக்கையில் ஒரு கார் அவளுக்கு முன்னால் வந்து நிற்கிறது. அதிலிருந்து கிருஷ்ணராஜ் இறங்கினான். அவன் அவளை யாரோ என்றெண்ணிக் கொண்டு ஏதோ கேட்கிறான். அவளே அவனை அடையாளம் புரிந்து கொண்டு, தான் இன்னார் என்று சொல்கிறாள். அவனால் நம்ப முடியவில்லை. அதற்குள் அவள் தலை நன்றாய் நரைத்து முகத்தில் சுருக்கங்கள் ஏற்படத் தொடங்கி விட்டன. அவன் தலையும் நரைத்திருக்கிறது! அவன் அவளைக் காரில் ஏற்றிக்கொண்டு தன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான். அங்கே பானு இருக்கிறாள். அவளைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறாள். கிருஷ்ணராஜ் குழந்தைகளை அழைத்து அறிமுகம் பண்ணுகிறான். அவள் அவர்களைத் தன் குழந்தைகளாய் நினைத்துக் கொள்கிறாள். அவர்களிடம் 'உங்கப்பாவை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவர் எனக்கு ரொம்ப உதவி பண்ணியிருக்கிறார்' என்பாள்.

மேகலாவுக்கு அந்த நினைவுக் காட்சி மிகவும் பிடித்திருந்தது. என்றாவது அவள் வாழ்க்கையில் இது நடந்து தீர வேண்டும். வயதான அவளும் கிருஷ்ணராஜும் சிநேகிதர்கள் ஆகிவிடுவார்கள். அதிலிருந்து இருவரும் சிறுவயது சங்கதிகளை அசைப்போட்டுக் கொண்டே சிநேகத்திற்கு இனிய எடுத்துக்காட்டாய் வாழத் தொடங்குவார்கள்.

மேகலா ஆழ்ந்து பெருமூச்சு விட்டாள்.

'எனக்குத் திருமணம் தேவையில்லை. வாழ்நாளெல்லாம் நான் ஒரு இனிய கனவாய் வாழ்ந்து விடுவேன். ஆஃப்டர் ஆல் வாழ்க்கை என்றால் என்ன? ஒரு கனவு! அவ்வளவுதானே?' என்றெண்ணிக் கொள்ளத் தொடங்கினாள்.

எடுத்துச் சென்ற புத்தகத்தை கொண்டு வராமல் மீண்டும் புத்தகம் தரப்படமாட்டாது.

## 30

மேகலா அன்று காலையில் கம்பெனிக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கையில் நித்யாநந்தன் வீட்டு வேலைக்காரன் வந்து, 'ஐயா கூப்பிடறாரும்மா' என்று சொன்னான்.

நித்யாநந்தன் இரண்டு நாட்களாய் பல்வலியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். இரண்டு நாட்களாய் வீட்டிலேயேதான் இருந்து வந்ததாய் வேலைக்காரன் சொன்னான். அவர் ஏதாவது முக்கியமான வேலை இருந்தாலேயொழிய வரச்சொல்லி ஆளை அனுப்பமாட்டார்.

மேகலா டிபன்பாக்ஸை எடுத்துக்கொண்டு போனாள். மேகலா போனபொழுது அவர் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். வலது பக்கத்துக் கன்னம் அனுமார் வாயைப் போல உப்பியிருந்தது. அதற்கு அவர் ஏதோ மருந்துப்பூச்சைப் பூசிக் கொண்டிருந்தார். கன்னம் வீங்கியிருந்த அவர் முகத்தைப் பார்த்தபொழுது உடனே சிரிப்பு வந்தாலும், அடுத்த நிமிஷமே இரக்கமாய் இருந்தது. அவர் பக்கத்தில் வழுக்கைத் தலையுடன் கண்ணாடி அணிந்திருந்த இன்னொருத்தரும் உட்கார்ந்திருந்தார்.

நித்யாநந்தன் மேகலாவைப் பார்த்ததுமே "வாம்மா, உட்காரு" என்றார்.

மேகலா உட்கார்ந்தாள்.

நித்யாநந்தன் பல் வலிக்கிடையே நிறுத்தி நிறுத்திச் சொல்லத் தொடங்கினார்:



"பாரும்மா, உன்னை ஒருமுக்கியமான விஷயத்துக்காகக் கூப்பிட்டேன். நம்ப மில்லு புடவைங்களுக்கு விளம்பர மாடலாய்க் கொடுத்துட்டிருந்த அநீதா நம்ப மில்லை விட்டு விட்டு ஸ்ரீனிவாசாமில்லுக்கு அக்ரீமென்ட் கொடுத்துட்டாள் அந்தப் பொண்ணு அங்கே போன பிறகு அவங்க விற்பனை பெருகிவிட்டது. நமக்குச் சரியான பாடல் கிடைக்கவில்லை; ஓரிருவர் கிடைத்தாங்க ஆனால், அவங்கமுகம் நன்றாயிருந்தால் உடம்பு நன்றாயில்லை.

'மேனேஜ்மென்ட்டார் என்மேல் எரிஞ்சுவிழுகிறார்கள். இந்த மாச முதல்தேதிக்குள் நல்ல மாடலைக் கொண்டு வந்து விடவேண்டியது என்று கன்டிஷன் போட்டிருக்காங்க. நான் எவ்வளவோ முயன்றேன். யாருமேகிடைக்கவில்லை.

எனக்குக் கையாலாகவில்லை என்று அவங்க சொல்றத்துக் குள்ள நானே உத்யோகத்தை விட்டு விடலாமான்னு இருக்கேன். ராஜிநாமா கடிதத்தை எழுதி டைப் கூட அடிச்சு வைத்து விட்டேன்.

'இவர் பெயர் நுஞ்சப்பன்; நம்ப பேக்டரியின் விளம்பர கன்ஸல்ட்டென்ட் இவர்.''

மேகலா அவரை வணங்கினாள்.

'இவர் எனக்குப் பல் வலியாய் இருப்பதால் பார்க்க வந்தார். கொஞ்சம் முன்னாடி நீ செம்பருத்திப்பூப்பறிச்சிட்டிருந்தபோது உன்னைப் பார்த்தார். உன்னைப்பற்றி விசாரித்தார். நான் சொன்னேன். — நீ ஏன் மாடலாய் இருக்க முயற்சிப் பண்ணக் கூடாது — என்றார்?

'நீ பண்ணவேண்டியது எதுவுமில்லை. நாங்கள் தருகிற புடவைங்களைக் கட்டிக் கிட்டுப் போட்டோ எடுத்துக்க வேண்டியதுதான். அதற்காக உனக்குக் கம்பெனிக்காரங்க ஆயிரம் ரூபாய்கள் தருவாங்க.'

கடைசி வார்த்தையைக் கேட்ட மேகலா நாற்காலியி லிருந்து துள்ளிக் குதித்தாற்போலக் கண்கள் அகல விரிய பார்த்தாள். ஆயிரம் ரூபாய்! மேகலாவுக்கு ஏற்பட்ட ஆச்சரியம் அக்கணகளில் நன்றாய்த் தெரிந்தது.

'நீ சம்மதித்தால் அந்தப் புடவைகளை இங்கேயே கொண்டுவரேன். போட்டோக்களைக் கூட இங்கேயே நம் வீட்டிற்கு முன் பகுதியிலேயே எடுப்பாங்க. என்ன சொல் கிறாய்?'

'நான்... நான்!'...

'போய் உங்கம்மாவிடமும் சொல்லிட்டு வா!'

மேகலா தலையாட்டி விட்டு எழுந்தாள். போக இரண்டடிகள் எடுத்து வைத்தாள். அதற்குள் திரும்பவும் நின்றாள். 'ஆயிரம் ரூபாய்களா! அம்மாடியோவ்!' நான் வீட்டிற்குப் போய்விட்டுத் திரும்பி வருவதற்குள் இவர்கள் மனதை மாற்றிக் கொண்டுவிட்டால்? வேறு பெண்கள் யாருக்காவது போன் பண்ணி விட்டால்?' ஊஹூம், வேண்டாம்! தன் அபிப்பிராயத்தைச் சொல்ல தாமதம் பண்ணவேண்டாம். இதில் பாட்டி முதலியவர்கள் சொல்லக் கூடிய யோசனைகள் தான் என்ன இருக்கிறது? மேகலா சட்டென்று திரும்பினாள்.

'தேவையில்லைங்க. அவங்களைக் கேட்கத் தேவையே யில்லை. போட்டோக்கள் எடுத்துக்க வேண்டியது தானே எடுத்துக்கறேன்.' என்றாள்.

உள்ளூர 'ஆயிரம் ரூபாய்கள் வரும்போது வேண்டாம் என்று சொல்லும் பைத்தியம்கூட உண்டா?' என்றெண்ணிக் கொண்டாள்.

'எதற்கும் நல்லது, உங்க வீட்டாரையும் கூடக் கேட்டு விட்டு வந்துடு' என்றார் அவர்.



'தேவையில்லை. என் பேச்சை அவங்க மறுக்க மாட்டாங்க' என்றாள் கச்சிதமாய்.

'ஆனால்...' நித்யாநந்தன் தயங்கினார்.

'ஓ. கே.! ஓ. கே.! அந்தப் பொண்ணு அவ்வளவு அழுத்தந் திருத்தமாய்ச் சொல்றபோது நமக்கெதற்கு ஆட்சேபணை?' என்றார் ஆஞ்சநேயன்.

'சரி, டைலருக்குப் போன் பண்ணுங்க. ஜாக்கெட்டுங்க வேணுமில்லையா?' எனறார் நித்யாநந்தன்.

மேகலா அவ்விடத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந் தாள். போன்கள் ஒலித்தன. டைலர் வந்தான். உடைகள் வந்தன. இரண்டு மணிநேரத்திற்குள் ஜாக்கெட்டுகளைத் தைத்துத் தந்துவிட்டான். மேக்கப்மேன் வந்தான். மேகலா வின் கூந்தலை அவிழ்த்து வாரி லூசாக கன்னத்தில் விழும் படியாய் வாரிக் கட்டினான். புடவையைத் தொப்புளுக்குக் கீழே கட்டிவிட்டாள் அவனோடு வந்த பெண்மணி. கையில்லாத ரவிக்கையைப் போட்டுக் கொண்டாள். கையில் ஒரு சிவப்பு ரோஜா மலரைத் தந்தார்கள். அந்த ரோஜாப்பூ வைக் கன்னத்தில் உரசிக்கொண்டே எங்கோ பார்த்தபடி நிற்கச் சொன்னார்கள். மேகலா நின்றாள்.

போட்டோகிராப்பர் மேகலாவின் கூந்தலைச் சரிபண்ணி விட்டு, 'அப்படி வெறுமே பார்த்தால் போதாது. விருப்பமான வரை நினைத்துக் கொண்டு நிற்பது போல இருக்கணும்' என்றார்.

மேகலாவின் கண் முன்னாடி கிருஷ்ணராஜ் மிதந்தான். அக் கண்கள் கனவில் தோய்ந்தாற் போலச் சோகமாய் ஆகிவிட்டன.

'வெரிகுட்! மார்வலெஸ்!' சட்சட்டென்று பல வித கோணங்களில் படம் எடுத்துக் கொண்டார்கள்.

போட்டோக்கள் எடுத்து முடிப்பதற்குள் மாலையாகி விட்டது. நித்யாநந்தன் இருநூறு ரூபாய்களைக் கொண்டு வந்து மேகலாவின் கையில் தந்துவிட்டு, 'இது அட்வான்ஸ். உன் அதிர்ஷ்டமும் என் அதிர்ஷ்டமும் நன்றாயிருந்து, இந்த போட்டோக்கள் நம் மேனேஜ்மென்ட்டாருக்குப் பிடித்து விட்டால் என் உத்யோகமும் எனக்குத் தரிக்கும்; உன் டணமும் உனக்கு வரும்' என்றார்.

மறுநாள் மேகலா கம்பெனிக்கு வந்தாள். நித்யாநந்தன் அவளைக் கூப்பிட்டு அந்த போட்டோக்களைக் காட்டினார். மேகலா ஆச்சரியமடைந்து விட்டாள். விலையுயர்ந்த புடவையில் ரோஜாப் பூவைக் கையில் வைத்துக்கொண்டு நிற்கும் பெண் யார்? அவள்தானா?

நித்யாநந்தன் மேகலாவிடம் ஒரு ஸ்டாம்ப் பேப்பரில் கையொப்பமிட்டுத் தரச் சொல்லித் தந்தார். மேகலா கையொப்பமிட்டாள்.

'காகிதத்தில் என்ன இருக்குன்னு படிக்காமல் இப்படிப் போட்டு விடலாமா?'—அவர் கடிந்து கொண்டார்.

'நீங்கள் ... நீங்கள் என்னை மோசம் பண்ணிடுவீங்களா?' என்றாள்

'என் மேலிருக்கிற நம்பிக்கைகாகச் சொல்லவில்லை நான். யாருமே கையெழுத்துப் போடும்போதும் பணத்தைக் கணக்கிட்டுப் பார்ப்பதற்கும் சங்கோஜப்படக்கூடாது. அது ஜாக்கிரதை சம்பந்தப்பட்ட விஷயம். இப்பவாவது படி' என்றார்.

மேகலா படித்தாள். அந்த மோனஜ்மென்ட்டார் மேகலாவுக்கு மாதத்திற்கு ஆயிரத்தைநூறு ரூபாய் வீதம் இரண்டு வருஷங்களுக்கு மாடலாய் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மேகலாவின் கண்கள் ஆச்சரியத்தாலும் ஆனந்தத்தாலும் அகன்றன.



நித்யாநந்தன் சொன்னார்.

'இனிமேல் புடவைக்கட்டிக்கிட்டு போட்டோ எடுத்துக் கொள்வதுதான் உன் உத்யோகம்னு வை! பார், ஆனாலும் இந்த வேலை அதிகமாய் இருக்காது. வேலைதான் இல்லையென்னு நீ இஷ்டப்படி சுற்றியலைந்து கொண்டிருக்கக் கூடாது. உன் உடற்கட்டு உனக்கு ரொம்ப முக்கியம் என்று தெரிந்துக்கணும். நான் சாயந்திரம் ப்யூட்டி கிளினிக்குக்குக் கூட்டிட்டுப் போறேன். அவங்க உடம்பை எப்படி ஜாக்கிரதையாய் வைத்துக்கணும்னு சொல்லுவாங்க. நீ மாதத்திற்கு நூறுரூபாய் கட்டி அந்த க்ளினிக்கில் மெம்பராய்ச்சேரு!'

'ஐயோ நூறு ரூபயா?'

'நூறுரூபாயான்னு நினைக்காதே. ஒவ்வொரு வியாபாரத்துக்கும் கொஞ்சம் முதலீடு வேணும். இந்த உன் உடம்பை அழகாய் வைத்துக் கொள்வதற்கு நீ செலவு பண்ணணும்; நீ நன்றாய்ப் பால் குடி. பழங்கள் சாப்பிடு. ஓய்வெடுத்துக் கொள். தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு எந்த வேலையும் செய்யாதே.'

மேகலா தலையாட்டினாள். நித்தியாநந்தன் மேகலாவுக்குப் பாக்கி எண்ணூறு ரூபாய்களைத் தந்தார். மேகலா அவரை வணங்கினாள்.

கையில் எண்ணூறு ரூபாயுடன் மேகலா 'ஜாக்பாட்' கட்டிய ஆளைப்போல வெளியே வந்தாள். அவளால் தன் அதிர்ஷ்டத்தையே நம்பமுடியவில்லை. எண்ணூறு ரூபாய்கள் அவள் கையில் இருந்தன. மேகலாவுக்கு இந்த உலகத்திலுள்ள பணமெல்லாம் தன் கையில் இருந்தாற்போல் தோன்றிற்று. அவள் வெளியே வந்தாள்.

# 31

அன்றையலிருந்து அதிர்ஷ்டம் மேகலாவின் வாழ்க்கை யில் நுழையத் தொடங்கிவிட்டது. அச்ரீமென்ட் மூலமாய் மாதந்தோறும் ஆயிரத்தைந்நூறு ரூபாய் வரத்தொடங் கிற்று.

மேகலாவுக்கு உடம்பை நன்றாய் வைத்துக் கொள்ளும் வேலையைத் தவிர வேறெந்த வேலையும் இல்லை. மங்களம் மிக உற்சாகமாய் தினமும் ஏதாவது பட்சணங்களையும், சாப்பாட்டில் இரண்டு கறிகள் குழம்பு, ரசம், பச்சடி என்று விருந்து சாப்பாடு பண்ணுவாள். மேகலாவுக்கு அந்தப் பட்சணங்களை எவ்வளவு சாப்பிட்டாலும் இன்னும் சாப்பிட வேண்டும் போல் இருக்கும். அவளுக்கு ஐஸ்கிரீம், சாக்லீட் என்றால் உயிர். கடைக்குப் போகும்பொழு தெல்லாம் அவற்றை வாங்கி வருவாள்.

இரண்டே மாதத்தில் மேகலா நன்றாய்ப் பருத்து விட்டாள். ஜாக்கெட் அளவு மாறிவிட்டது. அதைப் பார்த்து நித்யாநந்தன் கண்டபடி திட்டினார்.

'இதப் பாரும்மா, நீ இப்படி நாளுக்கு நாள் பருத்து விட்டால் எப்படிம்மா? இன்னும் ரெண்டு மாதம் இப்படியே இருந்தால் உத்யோகமே போய்விடும். உன்னை மாடலாய் யாரும் எடுத்துக்க மாட்டாங்க. உன் போக்கைப் பார்த்தால் வர பணமெல்லாம் சாப்பாட்டுக்கே செலவு பண்ணி விடுவ தாய்த் தோணுது. இதப் பார், நீ மாடலாய் நிரந்தரமாய் இருக்கணும்னால் இந்த அளவுப்படி உன் உடம்பை வைத் துக்க, ஜாக்கிரதை எடுத்துக் கொள்!' என்று அவர் மேகலா வின் உயரத்திற்கு அவள் இருக்க வேண்டிய எடை, மார்



பளவு, இடுப்பளவு முதலியவைகளைக் குறிப்பிட்டிருந்த ஒரு காகிதத்தை எடுத்துத் தந்தார்.

மேகலா அக் காகிதத்தை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தாள்.

மங்களம் சுடச்சுட நான்கு மைசூர்பாகுத் துண்டுகளை ஒரு தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

'மேகா! மைசூர்பாகு ரொம்ப நன்றாய் வந்திருக்கு! வாயில் போட்டால் கரைந்து போகிறது பார்'—என்றாள்.

மேகலா மைசூர்பாகுகளை ஆசையோடு பார்த்தாள். பிறகு கையிலிருந்த காகிதத்தையும் பார்த்தாள். பிறகு திடமாய் 'பாட்டி! இன்றையலிருந்து ஸ்வீட், சாக்லீட்டுகள், ஐஸ்கிரீம்கள் எல்லாம் க்ளோஸ்! நான் சாப்பிடமாட்டேன்' என்றாள்.

'என்னது? சாப்பிட மாட்டாயா? நீதானா பேசுகிறாய்?' என்றாள் மங்களம்.

'ஆமாம் பாட்டி! இப்பவே நான் பருத்து விட்டேன். இன்னும் குண்டானால் வேலை போயிடும்!'

'ஐயோ ராமா! இதென்ன கர்மம்! இதென்ன உத்யோ கம்? சம்பாதிக்கிறது சாப்பிடுவதற்காகத்தானே?'

'இந்த உத்தியோகத்தில் அப்படியில்லை பாட்டி. நீங்கள் சாப்பிடுங்கள். எனக்கு வேண்டாம்' என்று சொல்லி விட்டு அந்தப் பிளேட்டைத் திரும்பவும் கண்ணெடுத்துப் பார்க்காமல் உள்ளே போய்விட்டாள் மேகலா.

ப்யூட்டி பார்லருக்கு இரண்டு மூன்று முறை போய் தன் முகத்தை இரு மடங்காக்கிக் கொள்ள பழக்கப்படுத்திக் கொண்டாள். எல்லா பத்திரிக்கைகளிலும் மேகலா கட்டிய புடவைகளின் விளம்பரம் வரத்தொடங்கிற்று. அப் போட்

டோக்கள் மிகச் கவர்ச்சியாய், யார் இந்தப் பெண் என்று எல்லோரும் கவனிக்கும்படியாய் இருந்தன.

மேகலாவின் போட்டோக்களுக்கு ஏற்பட்ட வெற்றியைப் பார்த்து அம்பிகாமில் உரிமையாளர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது மேகாலாவைக் கொண்டு ஒரு சின்ன விளம்பர ஃபிலிம் ஷார்ட்டை எடுத்தார்கள். அதை டீ. வி. யில் காட்டத் தொடங்கினார்கள்

அதில் மேகலா ஒரு பார்ட்டிக்குப் போகிறாள். அந்த பார்ட்டிக்கு வந்திருந்த இளைஞர்கள் எல்லோரும் மேகலாவைப் பார்த்துவிட்டு,

'யார் இந்த 'சொப்பன சுந்தரி' என்று ஆர்வத்தோடு வந்து சூழ்ந்துகொள்கிறார்கள்.

மேகலா கட்டிக்கொண்டிருந்த புடவைகளைப் பார்த்து விட்டு மேகலாவை மணம் செய்துகொள்ள போட்டிப் போடுகிறார்கள். கடைசியில் ஒரு கோடீஸ்வரரின் மகனை திருமணம் பண்ணிக் கொள்கிறாள். அவன் மனைவி எப்பொழுதும் அம்பிகாமில்ஸ் புடவைகளைத்தான் கட்டிக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறான்.

அந்த விளம்பரம் எல்லோருக்கும் பிடித்து விட்டது. அந்த விளம்பரம் வெளிவரத் தொடங்கியதிலிருந்து மேகலாவுக்கு 'சொப்பன சுந்தரி என்ற பெயரே நிலைத்துவிட்டது.

இந்த விளம்பர ஷார்ட்டைப் பார்த்துவிட்டு, பிரபல ஹார்லிக்ஸ் கம்பெனிக்காரர்கள் மேகலாவுக்காக வந்தார்கள். அவர்கள் தந்த பணம் இன்னும் அதிகமாயிருந்தது.

மேகலாவுக்கு வந்த இந்த அவகாசத்தை அவள் இழக்கும்படிச் செய்யக் கூடாது என்று நித்யாநந்தன் மேனேஜ்மென்ட்டாரோடு நயமாய்ப் பேசி, எஞ்சியவர்களுக்குக் கூட தம் அனுமதியோடு விளம்பரம் தரலாம் என்று அக்ரீமெண்ட்டில் மாற்றங்கள் செய்ய வைத்தார்.



ஹார்லிக்ஸ் விளம்பரத்தைத் தொடர்ந்து இருமல்மருந்து கம்பெனியின் விளம்பரதாரர்கள் வந்தார்கள்.

இந்த விதமாய்ச் சொற்ப காலத்திற்குள்ளேயே மேகலா பிரபல மாடலாய் ஆகிவிட்டாள்.

கை நிறைய பணம்! கண்ணுக்குப் பிடித்த உடைகள். ஒரு வருடத்திற்குள் இந்த வீட்டின் நிலையே மாறிவிட்டது! வருவோர் போவோர் எண்ணிக்கை பெருகிற்று. நாற்காலிகள், சோபாக்கள் கண்ணடி கப்புகள் பிளேட்டுகள் வந்தன. போன் வந்தது! மேகலாமட்டும் அந்த வீட்டை விட்டு வேறு வீட்டிற்கு மாறுவதற்கு விரும்பவில்லை.

மேகலாவை உலகம் மதித்ததால் உறவினர்களும் மதிக்கத் தொடங்கினார்கள்.

பலராமன் மகள் பிறந்த நாளுக்கு வரச்சொல்லி மனைவி மூலமாய்ச் சொல்லியனுப்பினான். மேகலா வெள்ளித் தட்டு ஒன்றை வாங்கி மங்களத்திடம் தந்து போய் கொடுத்துவிட்டு வரச் சொன்னாள்.

போவதற்கு முன்னால் விரல் சுட்டிக்காட்டிக் கொண்டே சொன்னாள்:

''பாட்டி! இதப்பார்! அங்கிருந்து சாப்பிடுவதற்கு எதையாவது கொண்டு வந்தாயானால் பார், உன்னை இந்த வாசப்படி ஏறவிடமாட்டேன் ''என்றாள்.

''நான் எதுக்கும்மா கொண்டு வரப் போறேன்? என்னை என்ன தரித்திரம் பிடிச்சவள்னு எண்ணிட்டயா? அப்ப இருந்த தரித்திரத்தில் உங்களுக்காக அப்படிப் பண்ணினேனே தவிர, இப்ப எனக்கென்ன தலையெழுத்து? பகவான் நமக்கே இவ்வளவு தரும்போது ''என்றாள்.

அன்று காலையில் மேகலா ப்யூட்டி க்ளிக்கிற்குப் போய் விட்டு வந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள். நித்யாநந் தன் வந்தார். அவரோடு கூட குள்ளமாய் கருப்பாய் இருந்த ஒருவர் வந்தான். நித்யாநந்தன் அவனை ஸ்ரீமகள் பிக்சர்ஸின் டைரக்டர்'' என்று பரிச்சியம் பண்ணி வைத்தார்.

அந்தக் கம்பெனியின் பேர் மேகலாவுக்கு நன்றாய்த் தெரியும். அக்கம்பெனியிலிருந்து விடுதலையான சினிமாக்கள் மாதக்கணக்கில் ஓடி நல்ல வசூலைத் தந்து கொண்டிருப்பது வழக்கம்.

இவர் பெயர் சந்தானம். உன்னோடு பேசவந்தி ருக்கிறார்'' என்றார்.

மேகலா வணங்கினாள். உட்காரச் சொல்லி மரியாதை செய்தாள். உள்ளே போய் மங்களத்திடம் இரண்டு காபி களைக் கொண்டு வரச் சொல்லிவிட்டு வந்தாள்.

'சொல்லுங்கள்' என்றாள்.

''நீர் விஷயத்தைச் சொல்லும் ஓய்'' என்றான் சந்தானம் நித்யாநந்தன் சொன்னான்.

இவங்க ஒருபிக்சர் எடுக்கப் போறாங்க. நீ அதில் நடிக்க வேண்டுமாம் என்றார். 'நானா?' மேகலா வியப்படைந்து போனாள்.

''ஆமாம்மா, நீ தான்! நாங்கள் எழுதி வைத்திருக்கும் கதைக்கு நீதான் நன்றாய்ப் பொருத்தமாய் இருப்பாய். இதில் ரகசியம் எதுவும் இல்லை. நடந்த விஷயத்தையெல் லாம் சொல்லிவிடுகிறேன்.

'எங்களுக்குக் கதை ரெடியாகிவிட்டது. எல்லா ஆர்டி டிஸ்ட்களையும் புக் பண்ணிக் கொண்டு விட்டோம். நம்ப பெரிய ஹீரோ பாலசங்கரனைக் கூட புக் பண்ணிட்டோம்.



அவர் எங்களுக்கு கால்ஷீட் கூடத் தந்துவிட்டார். நாங்கள் அவரை புக் பண்ணிக்கிட்டு ஒரு பாட்டையும் ரிகார்ட் பண்ணிட்டோம். அதற்குள் எங்கள் எதிரி கம்பெனிக்காரர் ஒருவர் நம் ஹீரோவுக்கு ஷூட்டிங்கையெல்லாம் ஃபாரின் லேயே வைத்து 70.mm ல் எடுக்கப் போறதாய்ச் சொல்லி, தம் பிக்சருக்கு புக் பண்ணிக் கிட்டதால், நமக்குத் தந்த கால்ஷீட்டை விட்டுவிட்டு அவங்களுக்குத் தந்துட்டாரு அவங்க பிக்சரின் ஷூட்டிங் தொடங்கிவிட்டது. நாங்கள் படுகுழியில் விழுந்துட்டோம்.

'இந்த பாலசங்கரன் எங்கேயிருந்து வந்தான்? ஐதராபாத்தில் சோற்றுக்கு கதியில்லாமல் ரோடில் சுற்றிட்டிருந்த போது. நாங்க தான் மொதல்ல மாதத்துக்கு நூறு ரூபாய் சம்பளத்தில் வெச்சுக்கிட்டோம். அதையெல்லாம் மறந் துட்டாரு. 'நன்றி என்பதே கிடையாது இவங்களுக்கு!'

இப்படிப் பண்ணிட்டானே, நீங்க கோர்ட்டுக்குப் போகலாமில்லே?' என்றார் நித்யாநந்தன்.

'போகலாம்! ஆனால் அது ஒருவழியாய் முடியாது. இப்ப ஷூட்டிங்கை இந்தமாசத்திலேருந்து தொடங்கிடணும். அவருக்கு நாங்க போன பிக்சருக்குப் பணம் தரலை. அவரே வேண்டாம்; அப்புறமாய் வாங்கிக்கிறேன்னதால் சும்மாயிருந் துட்டோம். அந்தச் சாக்கு இப்ப அவருக்கு ஒரு அவகாசமாய் ஆயிடுத்து எங்க படத்தயாரிப்பாளருக்கு ஏற்கனவே ப்ளட் ப்ரெஷர். அவருக்குக் கோபம் வந்துட்டால் . தாயாரைக் கூட ஆபாசமாய் திட்டத் தொடங்கிடுவாரு. இந்த பிக்சரை நிறுத்தமுடியாதுன்னுட்டாரு! நேற்று டி. வி. பார்த் துட்டிருந்த போது உங்க விளம்பரத்தைப் பார்த்தேன். சொப்பனசுந்தரின்னு அம்பிகா, மில்ஸ் விளம்பரம், அதன் போர்ட்டைப் பார்த்தோம். தயாரிப்பாளருக்குப் பெண்ணைப் பிடிச்சுப் போயிடுத்து. ப்ரொட்யூசர் என்னிடம் சொல்லிட் டார்.

'சந்தானம் கதையில் ஹீரோவுக்குப்பதிலாய் ஹீரோயின் என்று மாற்றிவிடு. நம்ப பிக்சர் நின்னுடக்கூடாது. நம்ப சினிமா அவங்க சினிமா வெளியாகிற அன்றைக்கே வந்தாகணும். பண்ணித்தீரணும்' — என்றார்.

'அதனால் ராத்திரியெல்லாம் விழிச்சுட்டிருந்து கதையை ஹீரோயினுக்கு மாற்றினோம். ரொம்ப நன்றாய் வந்துடுத்து. ஹீரோவுக்குப் பதில் ஹீரோயினைப் பண்ணிட்டோம். கதையில் வேறெதையும் மாற்றத் தேவையில்லை. நான் கதையைச் சொல்றேன், கேளுங்கள்.'

என்று சாவதானமாய் அவன் சொல்லத் தொடங்கினான். அந்தக் கதை மேகலாவின் வாழ்க்கையோடு கொஞ்சம் பொருத்தமாயிருந்தது.

ஒரு ராஜா வேட்டைக்குப் போனபொழுது அங்கே ஒரு வேட்டுவப் பெண்ணோடு சிநேகமாய் இருக்கிறான். பிறகு அவர் ராஜியத்திற்குப் போய் விடுகிறார். வேட்டுவப் பெண் கர்ப்பம் தரிக்கிறாள். ராஜாவிடம் வருகிறாள். ராஜா தனக்கும் அக் குழந்தைக்கும் சம்பந்தமில்லை என்றான்.

வேட்டுவப்பெண் ஏமாற்றத்துடன் மலைப் பிராந்தியத்தில் சுற்றியலைகிறாள். அவளுக்குப் பெண் குழந்தை பிறக்கிறது. அங்கே ராஜாவுக்கும் பெண் குழந்தை பிறக்கிறது. அங்கே ராஜகுமாரி அருமையாய் வளரும்போது இங்கே வேடுவப் பெண் படாத கஷ்டங்களைப் பட்டு கொண்டே தைரியசாலியாய் வளர்ந்து வருகிறாள்.

பக்கத்து ஊர் யுவராஜா மகளைப் பண்ணிக் கொண்டால் அந்த நாடு கூடத் தம் நாடாகிவிடும் என்று ஆசைப்படுகிறான் ராஜா. மந்திரிக்கோ தன் தங்கை மகனுக்குத் தந்து மணமுடிக்கவில்லை என்ற கோபம். மந்திரியும் வேட்டு



வப் பெண்ணும் காட்டில் சந்திக்கிறார்கள். அவர் இந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு வருகிறார். யுவராஜாவுக்கு இந்தப் பெண்மீது கவர்ச்சி ஏற்படும்படிப் பண்ணுகிறார். யுவராஜா ராஜகுமாரியை மறுத்துவிட்டு வேடப் பெண்ணை மணக்கின்றான்.

ராஜா யுத்த அறிவிப்புத் தருகிறார். யுவராஜனே யுத்தத்தில் வெல்கிறான். வேடப் பெண் இரண்டு ராஜியங்களுக்கும் மகாராணி ஆகிறாள். மந்திரியின் சபதம் நிறைவேறுகிறது...

மேகலா இக் கதையைக் கேட்டுவிட்டு யோசனையில் ஆழ்ந்தாள்.

'என் வீட்டாரைக் கேட்டுவிட்டுச் சொல்றேன்'— என்றாள்.

'அம்மம்மா! நீங்க மறுத்துடக்கூடாது. இதோ ஐம்பதாயிரம், தரோம். படம் நன்றாய் ஓடினால் இன்னும் ஐம்பதாயிரம் தரோம்!' என்றான்.

'இல்லை. எங்க அம்மாவையும் பாட்டியையும் கேத்கணுமில்லையா?' என்றாள் மேகலா.

டைரக்டர் பாங்க் செக்கை எடுத்து மேகலாவிற்கு முன்னால் வைத்தான். 'உங்களுக்குப் பிடித்த எண்ணைப் போட்டுக்குங்க. மாட்டேன்னு மட்டும் மறுத்துடாதீங்க' என்று குப்பிட்டுவிட்டுப் போய் விட்டான்.

மேகலா சினிமாவில் சேரப்போவதாய்ச் சொன்னதுமே நிரஞ்சனி தீவிரமாய்த் தடை விதித்தாள்.

'மேகா! கடவுள் கிருபையால் சந்தோஷமாய் வாழ்ந்திட்டிருக்கோம். நீ இதற்கும் மேலே காலைவைக்காதே. நமக்கு இந்தச் சுகமே போதும். பணத்திற்கு எல்லை ஏது? நீ

கல்யாணம் ஆகவேண்டிய பொண்ணு. சினிமாவில் சேரணும்னால் ஆண் துணை வேணும். என்னாலும், பாட்டியாலும் உனக்கென்ன உதவி பண்ணமுடியும்? வேண்டாம், என் பேச்சைக் கேளு' என்றாள்.

'ஐம்பதாயிரம்! எவ்வளவு பணம்! அம்மாடியோவ்!'

'மேகா! போகட்டும் இந்த ஒரு சினிமாவை மட்டும் பண்ணிட்டு விட்டுவிடு!' என்றாள் மங்களம்.

'ஐயோ, நீ பணத்துக்காகப் பார்க்காதேம்மா. அவள் வாழ்க்கையைப் பார். அவள் சினிமாவில் சேர்ந்தால் அப்புறமாய் அவளை யார் கல்யாண செய்துப்பாங்க?' என்றாள் ஸ்ரீரஞ்சனி.

'எனக்குக் கல்யாணமே வேண்டாம்மா' என்றாள் மேகலா.

'உன் மூஞ்சி. இப்ப அப்படித்தான் தோணும் உனக்கு. எவ்வளவு நாள் இப்படியே இருப்பாய்? என் தலையெழுத்து தான் இப்படியாயிடுத்து. நீயும் மானஸாவுமாவது லட்சணமாய் கல்யாணம் பண்ணிக் கொண்டு குடித்தனம் பண்றதைப் பார்க்கணும்னு இருக்கே! மேகா, என் பேச்சைக் கேளேன். நமக்கு இதெல்லாம் ஒத்து வராது. உன்னால் முடியாதுன்னு சொல்லிடு.

'பெண் ஒருத்திக்கு வேண்டியது பணம் இல்லை. நல்ல புருஷன், வீடு, குழந்தைகள் தான்! நீ அப்படி இருக்கணும்னு தான் நான் விரும்புகிறேன். உனக்கு நல்ல புருஷன் கிடைக்கணும்னு தினமும் நான் தெய்வத்தை வேண்டிட்டு வரேன். என் பேச்சைக் கேளு மேகா, தயவு செய்து கேளேன்!'

ஸ்ரீரஞ்சனி கைகளைக் கூப்பியபடி அழுதாள்.

மேகலா தாயின் கைகளைப் பிடித்துக்கொண்டாள்.

'அம்மா, இதென்ன ஆவேசம்,? யார் தலையெழுத்து எப்படியிருக்கோ நமக்கென்ன தெரியும்? நீ எனக்குக் கல்யா

பக்கங்களை மடக்காமலும், கிழிக்காமலும் புத்தகத்தை கவனமாக கையாளுங்கள்.



ணம் ஆகணும், நல்ல புருஷன் வரணும்னு நினைச்சுட்டால் நடந்து விடுமா? என் தலையெழுத்துன்னு ஒன்று இருக்கு இல்லையா? அதை உன்னாலும் என்னாலும் மாற்றிவிட முடியாது. சினிமாவில் நடித்தால் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா என்ன' என்றாள் இதயமாய்.

தாய் கேட்கவேயில்லை. அன்றிரவெல்லாம் தூக்கமே வரவில்லை. மேகலாவுக்குத் தாயின் பயம் என்னவென்று அறிவாள் அவள். இப்பொழுதே வீட்டிற்கு ஆண்கள் வருவது பழக்கமாகி விட்டது. ஸ்ரீரஞ்சனிக்கு மேகலாவின் வாழ்க்கை வழி தவறிப் போய்க்கொண்டிருக்கிறதோ, திரும்பவும் தன்னைப்போல பாவ வாழ்க்கை ஏற்பட்டு விடுமோ என்ற பயம்!

மேகலாவுக்கோ இத்தனை நாளாய்த் திக்கில்லாமல் இருந்து, ரச்சுப்பேச்சுக்களையும், அவமானங்களையும் பட்ட பிறகு, பணத்தின் அருமை நன்றாய்த்தெரியத்தொடங்கிற்று. வாழ்க்கையில் வேறெந்தத் துணை இல்லாவிட்டாலும் பணம் இருந்துவிட்டால் போதும்; எல்லாத் துணைகளையும் அந்தப் பணமே ஏற்படுத்தித் தந்து விடும் என்று தோன்றிற்று.

அவளுக்கும் அவள் குடும்பத்திற்கும் சமூகத்தில் நல்ல பெயரும், மதிப்பும் வேண்டும். எல்லோரையும் விட மேலாய்த் தாம் இருக்க வேண்டும். மேகலாவுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் வந்து கதவைத் தட்டிக் கொண்டிருந்தாற் போலத் தோன்றிற்று. அவள் தயங்கிக் கொண்டிருந்தால் அந்த அவகாசம் கை நழுவிவிடும் என்று தோன்றிற்று.

அவளுக்கும் திருமணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்றுதான் இருந்தது. அவள் விரும்பிய ஆளுக்குத் திருமணம் ஆகிவிட்டது. அவன் மனைவி குழந்தைகளுடன் வெளி நாட்டில் வாழ்ந்து வருகிறான். அவள் நினைவே சற்றும் இல்லாதவனாய் வாழ்ந்து கொண்டிருக்கிறான் அவன் ஆனால் அவளோ அவனை மறந்துவிட வில்லை. அவனைத்

தவிர வேறு யாரையும் அவள் மணந்து கொள்ள மாட்டாள். இன்னொருத்தருக்கு அவள் வாழ்க்கையில் இடம் இல்லை. இதையெல்லாம் அம்மாவிடம் சொல்ல முடியாது அவளால். அம்மாவின் கனவை மானஸா நிறைவேற்றும்படி அவள் பார்த்துக் கொள்வாள். அவள் பணம் சம்பாதித்தால் மானஸாவுக்கு நல்ல சம்பந்தம் பார்த்துப் பண்ணி வைக்க லாம். அம்மாவைப் போலவே அவளும் மானஸாவின் சுகத் தைப் பார்த்துச் சந்தோஷப்படலாம்.

அவளுக்குப் பணம் வேண்டும். வந்த பணமெல்லாம் செலவுக்கே சரியா யிருந்தது. கொஞ்சம் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். அம்மா, பாட்டி, தங்கை சுகமாய் இருக்க வேண்டுமென்றால் கொஞ்சம் பணம் சேமித்து வைத் துக் கொள்வது அவசியம் திரும்பவும் தம் வாழ்க்கையில் பணக்கஷ்டம் வராமலிருக்க, அவள் ஜாக்கிரதைகளை மேற் கொள்ள வேண்டும்.

சினிமா என்றால் என்ன? அதுவும் ஒரு உத்யோகத்தைப் போன்றதுதான்! அங்கே மூளையைவிட உடற்கட்டிற்குக் கொஞ்சம் முக்கியத்துவம் வேண்டியிருக்கும்; அவ்வளவுதான் வித்தியாசம். மேகலா அக்ரிமென்ட்டில் கையொப்பமிடத் தீர்மானித்து விட்டாள்.

'அம்மாவுக்கு நான் என்னவாகி விடுவேனோ என்று பயம். நான் ஒன்றுமாகி விடமாட்டேன். எனக்கு வாழ்க்கை கற்றுத் தந்த பாடம் இருக்கிறது. யாரையுமே நம்பமாட் டேன்.

பெரியவராய் நித்யாநந்தன் இருக்கிறார். பாட்டியை எப்பொழுதும் கூடவே வைத்துக் கொண்டிருப்பேன். அதற்கும் மேல் ஏதாவது தேவைப்பட்டால் பலராமன் மாமா தான் இப்பல்லாம் நன்றாய் வந்து போய்க் கொண்டிருக் கிறாரே, அவர் உதவியை நாடுவேன்' என்றெண்ணிக் கொண்டாள்.



மேகலாவுக்குத் தான் இந்தச் சினிமா வாழ்க்கையில் கேவலம் பணத்திற்காகவே நுழைகிறோம் என்று நன்றாய்த் தெரியும். அதைக் கனவிலும் மறந்து போய்விடக் கூடாது என்றெண்ணிக் கொள்ளத் தொடங்கினாள்.

# 32

அந்தச் சினிமா அக்ரிமென்ட்டில் கையொப்பமிட்டதுமே மேகலாவின் வாழ்க்கை அமாவாசை நாளன்று வந்த தீபாவளிப் பண்டிகையைப்போல ஒளிமயமாய் மாறிவிட்டது. சினிமா மளமளவென்று முடிவடைந்தது. மேகலா குதிரைச் சவாரி கற்றுக் கொண்டாள். கார் ஓட்டக் கற்றுக் கொண்டாள்.

பிக்சர் மின்வேகத்தில் தயாராயிற்று. பிக்சர் ஷூட்டிங்கில் இருந்த போதே மேகலா மேலும் மூன்று சினிமா அக்ரி மென்ட்டுகளில் கையொப்பமிட்டாள்.

பிரபல நடிகன் பாலசங்கரன் நடித்த 'மலரம்புகள்' சினிமாவும், மேகலா நடித்த 'ராணி ரத்னாதேவி' சினிமாவும் ஒரே நாளில் ஒரே ஆட்டத்தில் பக்கத்துப் பக்கத்துத் தியேட்டர்களில் ரிலீசாயின. முதல் நாள் மேகலாவின் சினிமாவுக்கு யாருமே போகவில்லை. 'மலரம்புகள்' சினிமாவுக்கு எக்கச்சக்கமான டிக்கெட்டுகள் பிளாக் மார்க் கெட்டில் விற்பனையாயின. அந்த சினிமாவுக்கு டிக்கெட் கிடைக்காதவர்கள் வீட்டிற்குத் திரும்பிப் போகப் பிடிக்கா மல், 'ஏதோ ஒரு சினிமாவைப் பார்ப்போம்' என்றெண்ணி இந்தத் தியேட்டருக்கு வந்தார்கள்.

முதல்நாள் 'ராணி ரத்னாதேவி' ஓடிய தியேட்டரில் எண்ணி நூறு பேர் கூட இல்லை. ஒரு வாரம் ஆயிற்று 'இந்த சினிமா பரவாயில்லை, ஹீரோயின் ரொம்ப நன்றாய் இருக்

கிறாள்' என்ற பெயர் வந்தது. இரண்டாவது வாரத்தில் கொஞ்சம் சீட்டுகள் நிரம்பி விட்டன. மூன்றாவது வாரம் தியேட்டர் ஃபுல் ஆகிவிட்டது. நாலாவது வாரத்தில் கூட்டம் அதிகமாகிவிட்டது. டிக்கெட்டுகள் பிளாக்கில் விற்கப் பட்டன. 'மலரம்புகள்' சினிமாவுக்குக் கூட்டமேயில்லை. 'ராணிரத்னாதேவி' பல வாரங்களாய் ஓடிக் கொண்டிருந்தா லும் கூட்டத்திற்குக் குறைச்சலில்லை. இருபத்தைந்து வாரங்கள் கியாரண்டி என்றெண்ணியிருந்த 'மலரம்புகள்' நாலாவது வாரத்திலேயே எடுக்கப்பட்டு விட்டது.

'ராணி ரத்னாதேவி' வெற்றிப் பெற்றதால் எல்லா பத்திரிகைகளும் மேகலாவின் போட்டோக்களைப் போட்டு இண்டர்வ்யூக்களைப் பிரசுரித்தன. எல்லா ஊர்களிலும் சன்மானம் செய்தார்கள். விமரிசையாய் படம் இருபத்தைந்து வாரங்களுக்குமேல் ஓடி சாதனை செய்தது.

மேகலாவின் வாழ்க்கை திடீரென்று வானளவிற்கு உயர்ந்து விட்டது. அபிமானிகள் பெருகினார்கள். வீட்டில் போன் சதா கணகணவென்று ஒலித்துக் கொண்டேயிருந்தது. இண்டர்வ்யூக்களைக் கேட்டு வருபவர்கள், கதை சொல் கிறோம் என்று வரும் புதிய ப்ரொட்யூசர்கள், தம் படத்தில் நடிக்கச் சொல்லி கேட்கும் டைரக்டர்கள், 'சன்மானம் பண்ணுகிறோம் வாருங்கள்' என்று கூப்பிடும் அஸோஸியே ஷன்காரர்கள்! எத்தனை எத்தனைப் பேர்கள்!

போன் வைத்துக்கொண்ட புதிதில் அது மணியடிக்கும் போது அந்த வீட்டிலிருந்த எல்லோரும் உற்சாகத்துடன் செய்து கொண்டிருந்த காரியங்களைப் போட்டுவிட்டு போனை எடுக்க வேண்டும் என்ற துடிப்புடன் ஓடிவருவார் கள். இப்பொழுதோ எல்லோருக்கும் அந்த போனைக் கண்டாலே அலுப்பு!

ராணி ரத்னாதேவி இருபத்தைந்து வாரங்கள் ஓடியதை முன்னிட்டு, தயாரிப்பாளர் மேகலாவுக்கு கார் ஒன்றைப்



பரிசளித்தார். அவர் கார் சாவியைத் தந்தபொழுது மேகலாவால் நம்ப முடியவில்லை. 'நிஜமாகவா? எனக்கா?' என்றாள்.

'நிஜந்தான்! அந்த பாலசங்கரனின் கர்வத்தை அடக்கு வதற்குச் சந்தர்ப்பம் தந்தாய். ஆஃப்டர்ஆல் நடிகன் என்ப வன் யார்? தயாரிப்பாளரின் கையில் ஒரு மெழுகு! எல்லாம் என்னோடப் புகழால்தான்னு தலைக்கனம் பிடித்து அலைந் தால் அவங்களுக்கு நாங்கள் இப்படித்தான் புத்தி புகட்டு வோம்' என்றான்.

மேகலாவுக்கு அவர் சொன்னது எதுவும் புரியவில்லை. எதிரே படியிறக்கத்தில் சூரியவெளிச்சத்தில் பளீரென்று மின்னிக்கொண்டிருந்த ஃபியட் காரின் மீதே அவள் பார்வை இருந்தது.

தயாரிப்பாளர் சொன்னார்:

'இதப் பார்? எப்பவாவது உனக்குப் பேரும் புகழும் நிறைய வந்தால் அது உன் சொந்த முயற்சியால்தான் என்று கனவிலும் நினைத்துக் கொள்ளாதே! உன் புகழுக்கு எஞ்சிய டெக்னீஷியன்களின் சாமர்த்தியமும், என்னைப் போன்ற தயாரிப்பாளர்களின் பணமும் முதலீடாய் ஒன்று சேர்ந்தால் தான் எதுவுமே வரும். அதனால் எப்பொழுதும் தயாரிப் பாளர்களையும், உன் சக ஆர்ட்டிஸ்டுங்களையும், டெக்னீஷி யன்களையும் அவமரியாதை பண்ணிடாதே. இந்த வெற்றி என்னோடதுதான்னு பெருமையடிச்சிக்காதே!

'இதப் பார், சினிமா என்பது இதோ தென்படுகிறதே, இந்தக் காரைப் போன்றது. அதில் எத்தனையோ விதமான பாகங்களைச் சேர்த்து இயக்கினால்தான் அந்தக் கார் வேலைப்பண்ணும். நீயும் சுகமாய் ஏறிக்கொண்டு எங்கு வேணுமானாலும் போகவும் முடியும். நீ தன் மதிப்பைக் காப்பாற்றிக் கொள். எதிராளியை மதிக்கக் கற்றுக்கொள்

போ. நீ சம்பாதித்துக் கொள்ளப் பேர்கிற பேருக்கும் புகழுக்கும் இதுதான் முதல் உபதேசம். போயிட்டு வா' என்றார் அவர்.

மேகலா அக் காரைப் பார்த்துச் சின்னப் பெண்ணைப் போல மகிழ்ந்து போய்விட்டாள். காரைச் சுற்றிச் சுற்றி வந்தாள்; தொட்டுப் பார்த்தாள். கடைசியில் காரில் உட்கார்ந்து ஸ்டார்ட் செய்தாள்.

'எப்படி இருக்கு?' கேட்டார் தயாரிப்பாளர்.

'மார்வெலெஸ்!' என்றாள்.

'போ. நிற்காதே. பின்னால் திரும்பிப் பார்க்காதே' அவர் கையை ஆட்டினார்,

காரை ஓட்டி வந்து கொண்டிருந்த மேகலாவுக்குத் தாங்கமுடியாத சந்தோஷமாய் இருந்தது. வீட்டிற்கு வந்ததுமே ஹாரனை பாம் பாம் என்று அடித்தாள். ஸ்ரீரஞ்சனி வந்து கதவைத் திறந்ததுமே மேகலா ஓடிவந்து அவளைக் கட்டிக் கொண்டு விட்டாள். கையிலிருந்த சாவிக் கொத்தை அவள் கண்முன்னாடி தூக்கிப்பிடித்து ஆட்டிக் கொண்டே, 'அம்மீ! உன் மகள் இப்பொழுது ஒரு காரின் சொந்தக்காரியாகி விட்டாளே!' என்றாள்.

மானஸாவும் மங்களமும் வந்தார்கள். காரைப் பார்த்து விட்டு மூர்ச்சையடைந்து விட்டார்கள்

'வா அம்மீ, எங்கேயாவது போகலாம்! என்று அடம் பிடித்தாள் மேகலா. தாய் எப்பொழுதுமே வீட்டைவிட்டு நகரவும் மாட்டாள். ஸ்ரீரஞ்சனி மாட்டேன் என்றபோதிலும் கேட்டுக்கொள்ளாமல் பலவந்தமாய் இழுத்து வந்து முன் சீட்டில் தன் பக்கத்தில் உட்கார வைத்தாள். மங்களம் வீட்டைப் பூட்டிவிட்டு வந்தாள். மானஸாவும் மங்களமும் பின் சீட்டில் ஏறிக்கொண்டார்கள்.



மேகலா காரை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

'அம்மா, எங்கே அழைச்சுட்டு போறது, சொல்லு?'

'கோவிலுக்கு' என்றாள் ஸ்ரீரஞ்சனி. மேகலா தாயைக் கோவிலுக்கு அழைத்துச் சென்றாள். கோவிலில் ரஞ்சனி சிரத்தையாய்க் கைகளை ஜோடித்துக் கண்களை மூடிக் கொண்டு பிரார்த்தனை பண்ணினாள்.

வீட்டிற்குத் திரும்பி வந்ததுமே தாயின் தோள்களைச் சுற்றிக் கரங்களைப் போட்டுக் கிட்டே இழுத்துக் கொண்டே,

'அம்மா, கோவிலில் சுவாமியிடம் என்னவென்று வேண்டிக் கொண்டாய்?' என்று கேட்டாள்.

'எங்க மேகலாவுக்கு நல்ல புருஷன் கிடைக்கும்படிப் பண்ணுன்னு!'

மேகலா தாயின் தோளை உதறிவிட்டாள்.

'போ! உனக்கு எப்பொழுதும் அதே ஸ்மரணை! நீ சந்தோஷப்படலையாம்மா?' என்றாள் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டே.

'இல்லை மேகா! எனக்கு உனக்கு இந்தக் கார்களும் பங்களாக்களும் வந்துட்டாலும் சந்தோஷமாயிருக்காது. பணம் சம்பாதித்து விட்டாய் என்று சந்தோஷமாய் இருக்காது. நீ நல்லப் பையனைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டு கணவன் குழந்தைகளோடு குடித்தனம் நடத்திட்டிருந்தால் சந்தோஷமாய் இருக்கும்!'

ஸ்ரீரஞ்சனியின் இமைகள் கனத்து விட்டன.

'சில சமயம் எனக்குத் தோன்றும் — எனக்கு உன்னை இப்படிப் பார்க்கிற அதிர்ஷ்டம் இருக்குமோ இருக்காதோன்னு!'

'வாயை மூடு. புதுக் காரில் சந்தோஷமாய்ச் சுற்றாமல்' மங்களம் கடிந்து கொண்டாள்.

'என் மேகாவுக்கு இப்ப ஏன்கல்யாணம் ஆகாதுங்கறேன்! ஆயிரம் பேர் நம் காலடியில் வந்து விழுவாங்க. மேகலாவுக்கு இவ்வளவு நாளாய் ஏன் கல்யாணமாகலைன்னு எனக்கு இப்பத்தான் புரிஞ்சுது. என் கண்ணுக்கு நல்ல சம்பந்தம் வரும்; விமரிசையாய் கல்யாணமாகும். எனக்கு இப்பப் பசங்களுக்குக் கல்யாணம் ஆகுமோ ஆகாதோங்கிற கவலையெல்லாம் இல்லை. அன்றைக்கு அந்த சினிமாக் கதையைச் சொல்றேன்னு வந்தானே அந்தப் புது டைரக்டர் இல்லே, அவனுக்கு மேகலாவைக் கண்டால் ரொம்பப் பிடிச்சிருக்கு. மேகலா என்றால் கிடந்து தவிக்கிறான். அந்த இளைஞன் நன்றாய் இருக்கான். அப்பா ஜட்ஜாம். இவனுக்கு இந்த சினிமா பைத்தியமாம். மேகலாவை அவன் பண்ணிக் கொண்டால் நன்றாயிருக்கும். அடிக்கடி வந்துண்டிருப்பான்னு சொன்னேன்' என்றாள்.

அதைக் கேட்டதும் மேகலா விரைப்பானாள்

'இதப்பார் பாட்டி! நீ இந்தக் கல்யாணப் பேச்சை விட மாட்டாய்னு சொல்லு! எனக்குத் தெரியாமல் அப்படி யாரோடாவது பேசினாயானால் பார்! அப்புறமாய் எங்க பாட்டிக்குப் புத்தி சுவாதீனமில்லைன்னு சொல்லிடுவேன், உன்னிஷ்டம்' என்று பயமுறுத்தினாள்.

அன்றிரவு மங்களம் மேகலாவுக்கும் காருக்கும் மஞ்சள் நீரைச் சுற்றி திருஷ்டி கழித்தாள். மேகலாவைப் பார்த்து நெட்டி முறித்து விட்டு, 'என் தங்கமே! நீ சின்னவயதாயிருக்கும்போது ஒருத்தர் உன் ஜாதகத்தைப் பார்த்தார். இந்தப் பெண்ணோடது ஆம்பிள்ளை ஜாதகம். வீட்டுக்கு இவள்தான் ஆண்பிள்ளையைப் போலப் பாதுகாப்பு என்றார். அந்த மகான் எங்கேயிருந்தாலும் கையெடுத்துக் கும்பிடணும். அவர் சொன்னது அப்படியே பலித்துவிட்டது!' என்றாள்.



மானஸா மேகலாவிடம் வந்தாள். 'அக்கா, இன்றைக்கு எங்க பிரின்ஸிபால் என்னைக் கூப்பிட்டார். எங்க காலேஜ் ஆண்டு விழாவின்போது உன்னை சீஃப் கெஸ்ட்டாய் அழைக்கப்போறாங்களாம். உன்னைக் கண்டிப்பாய் ஒப்புக்கும்படி சொல்லச் சொன்னார். நாளைக்கு நீ எப்பொழுது ஓய்வாய் இருப்பாயோ அப்பொழுது வந்து அழைக்கிறேன்னார்!'

'என்னது? உங்க பிரின்ஸிபாலா? என்னையா?'

'ஆமாம் அக்கா!' மானஸா வந்து மேகலாவின் இடுப்பைச் சுற்றிலும் கைகளைப் போட்டுக் கொண்டாள்.

'அக்கா! காலேஜில் இப்ப எனக்கு எவ்வளவு மதிப்பு தெரியுமா? நிறைய பெண்கள் என்னோடு சிநேகம் பிடித்துக் கொள்ளத் துடித்துட்டிருக்காங்க. அந்த ரஜனி எப்படி ஆத்திரத்தால் கொதித்துக் கொண்டிருக்கிறாள் தெரியுமா?

மேகலாவின் கண்கள் கசிந்து விட்டன. மானஸாவின் தலையைத் தடவித் தந்தாள் 'மானஸா! நீ சந்தோஷமாய் இருக்கிறாயா?' என்றாள்.

'ரொம்ப! தாங்க முடியாமல்! உன்னைப் பார்த்தால் எவ்வளவு பெருமையாய் இருக்கு தெரியுமா, அக்கா? நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி!'

'மானஸா!' மேகலா மானஸாவை மார்போடு அழுத்திக் கொண்டாள். 'நீ இப்படி எண்ணிக் கொண்டிருந்தால் எனக்கு எவ்வளவு சந்தோஷமாய் இருக்கு தெரியுமா? இந்த இதயத்தில் ஆனந்த சாகரம் பொங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அம்மாவுக்குத்தான் சந்தோஷமே இல்லையாம். அதான் எனக்கு வருத்தமாயிருக்கு' உதட்டைக் கடித்து துக்கத்தை அடக்கிக் கொண்டே சொன்னாள்.

'அம்மா ஒரு பைத்தியம் அக்கா! அம்மாவுக்கு என்ன தெரியும்? எப்பப் பார்த்தாலும் கல்யாணம், கல்யாணம் என்பாங்க. நீ அந்த வார்த்தைகளைப் பொருட்படுத்தாதே' என்றாள் மானஸா.

## 33

மானஸாவின் கல்லூரி ஆண்டுவிழா மிக விமரிசையாய் நடந்தது. மேகலாவை காலேஜ் பிரின்ஸிபால் மிக மதிப்பாய் நடத்தி,— 'மேகலா உத்தம மான கலைச் செல்வி. அவள் நான் கூப்பிட்டதுமே இந்த காஜுலேக்கு வந்ததை என் அதிர்ஷ்டமாய் பாவிக்கிறேன்' என்று பேசினாள் சபையில்.

மேகலா தன் பிரசங்கத்தை முன்பே மனப்பாடம் பண்ணிக் கொண்டு சினிமா டைலாகைப் போல ஒப்புவித்து விட்டு உட்கார்ந்து கொண்டாள்.

விழா முடிந்ததுமே மாணவ மாணவிகள் நிறையபேர் ஆட்டோகிராப்பிற்காகச் சூழ்ந்துகொண்டு விட்டார்கள். மேகலா கையெழுத்துப் போட்டுத் தந்தாள்.

மேகலா கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கையில் மானஸா அங்கே வந்தாள். 'அக்கா' என்று கூப்பிட்டாள். மேகலா நிமிர்ந்து பார்த்தாள்.

மானஸாவிற்குப் பக்கத்தில் சிவப்பாய் உயரமாய் ஒரு இளைஞன் நின்று கொண்டிருந்தான்.

'அக்கா! இவர் சுபாஷ். எம். காம். படிக்கிறார். என் கிளாஸ்மேட்! வாணியின் அண்ணன்' என்று பரிச்சியம் பண்ணினாள்.

மேகலாவை அவன் வணங்கினான்.



'மானஸா எப்பொழுதும் உங்களைப் பற்றியே சொல்லிட்டிருப்பாள். இவ்வளவு நல்ல அக்கா இருப்பதைப் பார்த்தால் அவள்மேல் எனக்கே பொறாமையாய் இருக்கு' என்றான் முறுவலுடன்.

மேகலா அவனையும் மானஸாவையும் கூர்ந்து கவனித்தாள். அவன் மானஸாவைப்பற்றிஉரிமையுடன் பேசுகிறான். மானஸா அவனைப் பார்த்த பார்வையில் வெட்கம், சிருங்காரம் இரண்டும் கலந்திருந்தன.

மேகலா சுபாஷைக் கூர்ந்து கவனித்தாள். தாய்தந்தையரைப்பற்றி விசாரித்தாள். தந்தை லாயராய் இருக்கிறாராம். அண்ணன் தம்பிகள் இருவராம், ஒருத்தன் வெளிநாட்டில் இருக்கிறானாம். தங்கைகள் இருவராம். மேகலா சுபாஷின் தந்தையைப்பற்றிக் கேட்டிருக்கிறாள். அவர் மிகப் பிரபலமான லாயர். பெயரும் புகழும் நிறைய இருந்தன. நிறைய சம்பாதிப்பவரும் கூட.

அன்றிரவு வீட்டிற்குத் திரும்பிய பிறகு படிக்கப்போவதற்கு முன்னால் மேகலா மானஸாவைக் கேட்டாள்.

'இதென்ன இந்த சுபாஷ் விவகாரம்? என்னிடம் இதுவரை சொன்னதேயில்லையே?'

'அக்கா! நான் அவ்வப்பொழுது படிக்க வாணி வீட்டிற்குப் போவேன். அதன் மூலம் பரிச்சியம் ஏற்பட்டது. நாங்க மூவரும் சினிமாவுக்குப் போவோம். அவ்வளவுதான் அக்கா! அம்மா மேல் ஆணை! இதைத் த்விர வேறொன்றும் நடந்திடலை' என்றாள் பயந்துபோய்.

'எதுக்கு இப்ப அவ்வளவு பெரிய ஆணையெல்லாம் போடுகிறாய்?' என்றாள் மேகலா சிரித்துக் கொண்டே.

'நீ தான் சொல்லியிருக்கிறாயே அக்கா, நான் காலேஜுக்குப் போறது படிப்பதற்காகத்தானே யொழிய

கண்டபடியெல்லாம் நடந்து கொள்வதற்கு இல்லைன்னு நான் அதை ஒரு நாளும் மறந்துடலை.'

'கிழித்தாய். தகுந்த பையன் கிடைத்து, அவனுக்கு உன்னைப் பிடித்திருந்தும் கூட நான் பேசக்கூடாதுன்னேனா! அதுசரி, சுபாஷுக்கு உன்னைப் பிடித்திருக்கா இல்லையா! அதைச் சொல்லு' என்றாள்.

'பிடித்திருக்கு அக்கா!'

'உனக்கெப்படித் தெரியும்?' துருவிக் கேட்டாள்.

'நான் பேசாமலிருந்தாலும் என்னோடு பேசணும்னு பார்ப்பார். போன் பண்ணுவார். நான் எதற்கோ பயப்படு கிறேன்னு அவர் உத்தேசம்!'

'ராட்சசியைப் போன்ற இந்த அக்காவை நினைத்துத் தான் பயப்படுகிறேன்னு சொல்லாமல் போயிட்டாயா நீ?'

'அக்கா நீ ராட்சசி யில்லை. தேவதை' என்றாள் மானஸா.

'ஊஹும், இந்த முகஸ்துதிகளை யெல்லாம் எங்கிருந்து கற்றுக் கொண்டாய்?'

கடைசியில் மேகலா ஒரு வழியாய்ச் சொன்னாள்.

'மானஸா! அந்தக் குடும்பம் ரொம்ப நல்ல குடும்பந்தான், எனக்குத் தெரியும். சுபாஷைப் பார்த்தால் அழகாய் மட்டுமே யில்லை, புத்திசாலித்தனமும் உண்டுன்னு தெரிகிறது. ஆனால் அவனைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு நாலு மாதம் டயம் வேணும். அவன் பழக்கங்கள் என்னென்ன, ஃபிரெண்டுகள் யார் என்றெல்லாம் தெரிஞ்சுக்கணும். எனக்குத் திருப்தி ஏற்பட்டால் கல்யாணத்தை செட்டில் பண்ணிடறேன். சரிதானே?'

'அக்கா' மானஸா அவளைக் கட்டிக் கொண்டாள்.



'அசடே! இதற்குப் போய் பெரிசு பண்றாயே! உனக்கு ஞாபகம் இருக்கா? சிறுவயதில் நாம் நினைச்சுப்போம், நான் உன் கல்யாணத்தைப் பண்றேன்னு! மானஸா! சிமரிசையாய் பண்ணணும்னு இருக்கு. யாருமே பண்ணி யிராத அளவுக்கு கம்பீரமாய் பண்ணணும்னு இருக்கு. நான் எப்படியும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். உன் கல்யாணத்தைப் பண்ணியாவது அம்மாவைத் திருப்திப் படுத்துகிறேன். நீ கொஞ்சம் நாலு மாதமாவது பொறுத் துட்டிருக்கணும் ! இந்தநாலுமாதமும் அவனை நம் வீட்டிற்கு வரச்சொல்வோம். அவனைக் கிட்டேயிருந்து கவனிப்போம். மானஸா! கல்யாணம் என்பது பெண்களின் வாழ்க்கைக்கு மூச்சுக் காற்றைப் போன்றது. வரப்போற கணவனுக்கு முன்னால் எஞ்சிய விஷயங்களை எல்லாம் திரணமாய் நினைக்கணும்' என்றாள்.

மானஸாவுக்கு அக்கா தன் திருமணத்தைப் பண்ணிவைப் பதாய்ச் சொன்ன வார்த்தைகளைத் தவிர வேறெதுவும் காதில் விழவில்லை.

## 34

மேகலாவின் சினிமா வாழ்க்கை உச்சாணிக் கிளையை எட்டி விட்டது. அவளுடைய சேமிப்பு மூன்று லட்சத்தை எட்டி விட்டது. அவளுக்கு தைரியம் வந்தது. வாழ்க்கையில் இனி ஒரு போதும் தானோ தன் வீட்டாரோ பட்டினிக் கிடக்க வேண்டிய நிலைமை வராது என்று மகிழ்ந்தாள். நித்யாநந்தன் மேகலாவிடம் ஒரு முறை, — 'அம்மா, உன் சேமிப்பு நிறைய சேர்ந்துவிட்டது. கவர்மென்ட்டுக்குத் தெரியப்படுத்தி இன்கம்டாக்ஸ் கட்டினாயா?' என்று கேட்டார்.

'கவர்மென்ட்டுக்கு நான் எதற்கு தெரியப்படுத்தணும்?' என்றாள் அவள்.

'அதுதாம்மா ரூல்! சம்பாதிக்கிற ஒவ்வொருத்தரும்தான் சம்பாதிக்கிற பணம் ஒரு எல்லையைத் தாண்டிவிட்டால் கவர்மென்ட்டுக்குச் சொல்லி 'டாக்ஸ்' கட்டணும்!'

'நான் எதுக்குக் கட்டணும்? இது என் பணம்! கஷ்டப் பட்டு சம்பாதித்த பணம்! நான் சாப்பாடு இல்லாமல் பட்டினி கிடந்தபோது இந்த கவர்மென்ட் எனக்குச் சாப்பாடு போட்டதா? காப்பாற்றிற்றா?' என்றாள் மேகலா கோபமாய்.

அவர் பொறுமையாய் மேகலாவுக்கு விவரித்துச் சொன்னார்.

'இதப் பாரும்மா! உனக்கே தெரியாமல் கவர்மென்ட் பண்ணியிருக்கும் எவ்வளவோ வசதிகளை நீ அனுபவிச்சுகிட்டிருக்கிறாய். உன் வீட்டில் லைட் இருக்கிறது. தண்ணீர் வருவதறகும் விளக்கு எரிவதற்கும் கவர்மென்ட் எவ்வளவு செலவுகளை மேற்கொள்ளணும். அதுமட்டுமா?

'நீ சாப்பிடணும் என்றால் தானியங்கள் விளையணும். அந்த தானியத்திற்கு நீர்ப்பாய்ச்சணும்னால் எவ்வளவோ அணைகளைக் கட்டணும். நாம்ப போகிற பஸ், ரயில் எல்லாம் கவர்மென்ட் ஏற்பாடு பண்ணியவைதாம்.

நம்ப வீட்டில் நாம்ப சுகமாய் கவலையில்லாமல் இருக்கணும்னால், நாட்டை சேனை வீரர்கள் காப்பாற்றணும். அவர்களை கவர்மென்ட் போஷிக்க வேண்டும். நீ தெருவில் போகணும் என்றால் வீதிகளைப் போடணும். அந்த வீதிகள் சுத்தமாய் இருக்கணும். பசங்கள் படிப்பதற்கு காலேஜுகள், நோயாளிகளுக்கு ஆசுபத்திரிகள் இதையெல்லாம் கவர்மென்ட் நடத்தணும். இதற்கெல்லாம் நிறைய பணம் வேண்டும். அந்தப் பணத்தை அரசாங்கம் அநேக விதமாய் வசூல் பண்ணிக்கொள்கிறது. அதில் சம்பாதிக்கிற ஒவ்வொருத்தரும்



வரி உருவில், கொஞ்சம் பணத்தை கவர்மென்ட்டுக்குக் கட்டி இந்தச் செலவுகளை மேற்கொள்ளுவதற்கு உதவவேண்டும். சம்பாதனை இல்லாதவங்களைக் கவர்மென்ட் கேட்காது. அந்தச் சம்பாதனையைக் கூட ஓரளவிற்கு மேற்பட்டால் மட்டுமே கட்டச்சொல்லிக் கேட்கிறது. டாக்ஸ் ஏன் கட்டணும்னு இப்பவாவது புரிஞ்சுதா?' என்று கேட்டார் அவர்.

மேகலா புரிந்தது என்று தலையாட்டினாள்.

'நாட்டில் எஞ்சியவங்க எல்லோருந்தான் கட்டறாங்களே, நான் ஒருத்தி கட்டாவிட்டால் என்ன வந்தது?' என்றாள்.

'ஒவ்வொருத்தரும் அப்படி நினைத்து விட்டால் அப்ப என்னவாகும்?'

'நான் பணம் சம்பாதித்தது அவங்களுக்கு எப்படித் தெரியும்? நான் அவங்களுக்குச் சொல்லவே மாட்டேன்' என்றாள் ஆசையாய்.

'நீ சொல்லாவிட்டாலும் உனக்குப் பணம் தந்தவங்க அவங்க கணக்கில் உனக்குத் தந்ததாய்க் காட்டுவாங்க' என்றார் அவர்.

'ஐயோ!' என்றாள் 'கட்டாமலிருந்துவிட முடியாது?! என்பது போலப் பார்த்தாள்.

'கட்டாவிட்டால் உன்னை அரெஸ்ட் பண்ணிடுவாங்க. உன் பணத்தையெல்லாம் பறிமுதல் பண்ணிவிட அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு.'

'மைகாட்! நாளைக்கே கட்டிவிடுகிறேன். ஆனால் அந்தக் கணக்கு வழக்கெல்லாம் எனக்கொன்றும் தெரியாதே, என்னபண்றது?'

'இப்போதைக்கு நான் காட்டுகிறேன். ஆனால் நீ என் பேச்சைக் கேளு. ஒரு செக்ரட்டரியை வைத்துக்கொள் அவன் இந்தக் காரியங்களையெல்லாம் பார்த்துப்பான் அவனுக்கு ஒரு ஆயிரம் ரூபாய் சம்பளம் தந்தால், உனக்கு அதற்கப்புறம் இந்தத் தலைவலி இருக்காது.'

'செக்ரட்டரியா? ஆயிரம் ரூபாய் சம்பளமா?' மேகலா மார்பில் கையை வைத்துக் கொண்டாள்!

'இதப்பார்! நீ இப்படிப் பணத்தைச் செலவழிக்கணு மேன்னு பயந்து போறதை விட்டொழிக்கணும். உனக்கு ஆயிரக்கணக்கில் வரும்போது நூற்றுக்கணக்கில் செலவழிக் கறத்துக்கு என்ன வந்துடுத்து?' என்றார் அவர் கண்டிப்பது போல. 'இதப் பார் பணம் சம்பாதிக்கிறதை விட அதை மேனேஜ் பண்றதுதான் ரொம்பக் கஷ்டம். உனக்கு செக்ரட்டரி ரொம்ப முக்கியம்' என்றார் அவர்.

மேகலா சரியென்று தலையாட்டினாள்.

பத்மநாபன் மேகலாவின் செக்ரட்டரியாய் வந்தான். அவன் நடுத்தர வயதைத் தாண்டியவன். வழுக்கைத் தலை. எப்பொழுதும் தும்பைப்பூவைப் போன்ற வெள்ளை உடை களையே அணிந்துகொள்வான்.

பத்மநாபன் வந்ததுமே மேகலாவின் விஷயத்தையெல் லாம் கையிலெடுத்துக் கொண்டான்.

'முதலில் வீடு மாற வேண்டும். இது உங்கள் ஸ்டேட் டஸுக்குத் தகுந்த இடமாய் இல்லை' என்றான். அவனே எல்லா வசதிகளும் கொண்ட வீட்டைப் பார்த்தான். மேகலா அந்த வீட்டிற்கு மாறினாள்.

பத்மநாபன் மேகலாவின் வேலைகளுக் கெல்லாம் டைம் டேபிளைப் போட்டுத் தந்து அதன்படி நடக்கச் செய்தான்.



அவனுக்கு டிஸிப்ளின் முக்கியம்! எதிராளிகளையும் அதைப் பின்பற்றச் சொல்லுவான். மங்களம் எதற்காவது பெரிதாய்க் கத்தினால் பின்னாலிருந்து வந்து, 'உஷ், கத்தா தீங்க. நீங்கள் அப்படிக் கத்தினால் உங்கள் ஸ்டேட்டஸ் என்னவாகும்? நீங்கள் இப்பொழுது பிரபலமான நடிகை மேகலாவின் பாட்டி என்பதை மறந்து விடாதீங்க' என்று எச்சரிப்பான்.

மேகலா மத்தியான வேளையில் பாட்டிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து சிரித்துப் பேசி அரட்டையடித்துக் கொண் டிருந்தால் பத்மநாபன் வந்து விரலால் கதவைத் தட்டி,— 'மேடம்! இப்ப நீங்க ரெஸ்ட் எடுத்துக்கவேண்டிய நேரம். போய் ரெஸ்ட் எடுத்துக்குங்க. மாலையில் ஷூட்டிங் இருக்கு' என்பான்.

ஒருமுறை போன் கணகணவென்று ஒலித்தது. மேகலா சரேலென்று ஓடி வந்து எடுக்கப் போனபொழுது அவன் வந்து கடிந்து கொண்டே தடுத்தான்.

'மேடம்! நீங்க இப்படி வரக் கூடாது. நான் இங்கே பின்னே எதற்காக இருக்கேனாம்?' என்று தானே போனை எடுத்துக் கொண்டான்.

மறுமுனையிலிருந்து யாரோ மேகலா வேண்டும் என்று கேட்டார்கள்.

'மேடம், ரெஸ்ட் எடுத்துட்டிருக்காங்க. இப்பப் பேச மாட்டாங்க. சாயந்திரம் பண்ணுங்க' என்று அவர்கள் பதிலுக்காகக் காத்திராமல் போனை வைத்து விட்டான்.

'யார் போன் பண்ணினாங்க?' என்றாள் மேகலா.

'முதல் மந்திரியின் பி. ஏ. ஏதோ டின்னருக்குக் கூப்பிட ணுமாம்!'

'ஐயோ! அவர் கூப்பிட்டால் இல்லைன்னு சொல்ல லாமா?'

'யாராயிருந்தால்தான் என்ன? மேடம் ஓய்வெடுத்துக் கொள்ளும் நேரத்தில் பிரெசிடென்ட் கூப்பிட்டாலும் பேச மாட்டாங்கன்னு ஜனங்களுக்குப் புரியணும். இதப் பாருங்க, அதிர்ஷ்டவசமாய் உங்களுக்கு நல்ல பெயரும் புகழும் கிடைத்திருக்கு. அதை ஜாக்கிரதையாய்க் காப்பாற்றிக் கணும். போங்க, போய் ரெஸ்ட் எடுத்துக்குங்க' என்றான்.

மங்களத்திற்கு அவனைக் கண்டால் உதறல். யார் என்று கூட பார்க்காமல் எரிந்து விழுவான்.

'இந்த ராட்சசன் என் உயிரைக் கொண்டு போக எங்கேயிருந்து வந்து தொலைந்தான்? இந்தண்டை அந்தண்டை நகர விடமாட்டேங்கிறான். எப்பப் பார்த்தா லும் வாத்தியார் பிரம்பைக் கையில் வைத்துக்கொண்டு மிரட்டுவது போல மிரட்டிக் கொண்டேயிருக்கிறான்' என் றாள் மங்களம் தலையிலடித்துக்கொண்டு.

மேகலா முதல் முதலில் தானும் அவனுக்குப் பயப்பட்டுக் கொண்டிருந்தாள். பிறகு தானே யோசித்துப் பார்த்தாள். அவனுக்கு அவள் எதற்காகப் பயப்படவேண்டும்? ஆஃப்டர் ஆல் அவன் தன்னிடம் சம்பளத்திற்காக வேலைசெய்கிற ஒரு ஊழியன். அவள் தன் ஸ்டேட்டஸ்ஸையும் மறந்து போய் அனாவசியமாய் அவனுக்குப் பயப்படுகிறாள் என்று புரிந்தது. மேகலாவுக்குத் தைரியம் வந்தது,

ஒருமுறை அபிமானிகளின் சங்கத்தைச் சேர்ந்த சிலர் வந்தார்கள். அவர்களை அவன் விரட்டிக் கொண்டிருந்தான். மேகலா உள் அறையிலிருந்து திரைச்சீலையை விலக்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

அவர்களை வணங்கிவிட்டு உட்கார்ந்தாள். அவர்களின் ஊர், பெயர், படிப்பு விவரங்களை விசாரித்துக்கொண்டு அழகாய்ப் பேசிக்கொண்டிருந்தாள்.



'மேடம்!' செக்ரட்டரி ஏதோ சொல்ல வந்தான். மேகலா மிடுக்காய் உட்கார்ந்துகொண்டு, இடது கையை வீசி அவனை நிறுத்து என்பது போலச் சைகைக் காட்டி னாள்.

மேகலா அவர்களை அனுப்பிவிட்டுத் திரும்பி வருவதற் குள் அங்கே பத்மநாபன் சிவந்த கண்களுடன் வியர்வை யைக் கக்கிக் கொண்டு நின்றிருந்தான்.

மேடம்! நீங்கள் என்னை ரொம்ப அவமானப்படுத் திட்டீங்க. நீங்களே பேசிக்கிறபோது நான் ஒருத்தன் இங்கே எதற்கு?' என்றான்.

மேகலா மிக சாந்தமாய், தைரியமாய் சொன்னாள்: 'இதப் பாருங்கள்! செக்ரட்டரி என்றால் எங்களுக்கும் வெளியுலகத்திற்கும் ஒரு பாலமாய் இருக்கணுமே யொழிய குறுக்குச் சுவராய் இருக்கக்கூடாது நேற்று சுந்தர் பிலிம் ப்ரொட்யூசர் வந்தார். நீங்கள் பார்க்கவே விடவில்லை. ஏன்னால் அவருக்கும் உங்களுக்கும் ஒத்துவராது, கடந்த காலத்தில் அவர் மேலிருந்த விரோதத்தைக் காட்டிக் கிட்டீங்க. உங்களுக்குப் பிடிச்சவங்களுக்கும், உங்களை மதித்தவங்களுக்கும் மட்டுமே நீங்கள் என் கால்ஷீட்கிடைக் கும்படிச் செய்கிறீங்க. உங்க விருப்பு வெறுப்பின் மீது என் தொழில் நிர்மாணமாகிக் கொண்டிருக்கிறது. நான் உங்களை வேலைக்கு எடுத்துக்கொண்டது எனக்கு உதவிபண்றதுக்கு தானே தவிர, உங்கக் கையில் சாவிக் கொடுத்த பொம்மை யாய் ஆடுவதற்கில்லை. உங்களுக்குப் பிடித்தவங்களுக்குத் தான் என்னைப் பார்க்கத் தரிசனம் கொடுக்கிறீங்க? இதையெல்லாம் நான் கவனிக்காத முட்டாள் என்று நினைச்சுக்காதீங்க. உங்களால் எனக்கு நிம்மதி கிடைக்க வேண்டியது போக, பிரச்னைகளும், அமைதியின்மையுந் தான் வந்து சேருகிறது. நான் மாதம் ஆயிரம் ரூபாயைத்

தந்து தலைவலியை விலைக் கொடுத்து வாங்கிக்கிறேன்னு தான் அர்த்தம் இதுக்கு.'

'கத்தாதீங்க. நேற்று மயூரா ஓட்டலில் முருகன் பிக்சர்ஸ் டைரக்டர் தந்த பார்ட்டியை ஏன் எடுத்துக் கிட்டீங்க? உங்களுக்கு நான் தரும் சம்பளம் மாதத்திற்கு ஆயிரம் ரூபாய்கள் மட்டுமே.

'ஆனால், உங்களால் ஆயிரத்தைநூறு ரூபாய்களை வாடகையாய் எப்படித் தரமுடிகிறது? பெண்தானே, ஆட்டி வைத்து விடலாம் என்றெண்ணிட்டீங்க. அதானே?' கோபமாய்க் கேட்டாள்.

அவன் வாயடைத்துப் போய்விட்டான்.

'பாருங்கள், பதில் என்ன சொல்லப் போறீங்க?' உலுக்கி எடுத்தாள் மேகலா.

'நான்...நான் ராஜினாமா பண்ணிடறேன்' என்றான்.

'தாங்க்யூ... தாங்க்யூ வெரிமச்' என்றாள் மேகலா.

பத்மநாபன் போய் விட்டான்.

மேகலா ஒரு வாரத்திற்குள்ளாகவே நாகராஜன் என்பவனை செக்ரட்டரியாய் வைத்துக் கொண்டுவிட்டாள். நாகராஜன் குழந்தைக் குட்டி ஆசாமி. பொறுமைசாலி. தன் வேலையைத் தான் பார்த்துக் கொண்டு போய் விடுவதில் வல்லவன். மேகலாவுக்கு அவன் வந்த பிறகு மிக நிம்மதியாய் இருந்தது.



## 35

மேகலா டைனிங் டேபிளுக்கு முன்னால் வந்து உட்கார்ந்து கொண்டாள். அங்கே தாய், பாட்டி இருவருந் தான் இருந்தார்கள். மானஸாவைக் காணவில்லை. மேகலா சாப்பிடும் நேரத்தில் வீட்டில் இருப்பதே குறைவு. இருக்கும் போது எல்லோரும் சேர்ந்துதான் சாப்பிடுவார்கள்.

'மானஸா எங்கே?' என்று கேட்டாள்.

'படுத்துட்டிருக்காள்' என்றாள் மங்களம்.

'ஏன் சாப்பிட வரலை?'

'பசி இல்லையாம்.'

'ஏனாம்?'

'வேலை வெட்டி இல்லாததால்' சுருக்கென்று சொன்னாள். மங்களம் மேகலா எழுந்து நேராய் உள்ளே போனாள்.

மானஸா கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள்.

'மானஸா, இதென்ன. என்னவாச்சு?' கவலையோடு கட்டிலில் வந்து உட்கார்ந்தாள் மேகலா.

'ஒன்றுமில்லை அக்கா.'

'என்னிடம் ஒளிக்கலாமா? என்னவாச்சு?' மானஸாவைப் பலவந்தமாய் எழுப்பி உட்கார வைத்தாள்.

மானஸா அக்காவைப் பார்த்தாள். அக்கண்கள் வெகு நேரமாய் அழுது கொண்டிருந்தாற்போலச் சிவந்து உப்பி யிருந்தன.

'மானஸா!' தங்கை துக்கத்தால் குமுறிக் கொண்டிருந்ததைக் காணச்சகிக்கவில்லை அவளுக்கு.

'என்னவாச்சு? நான் இருக்கும்போது, என்னிடம் சொல்லாமல் ஏன் இப்படி அழுகிறாய்? என்னால் பண்ண முடியாததாய் இருந்தால் அப்ப அழுதுகொள். என்னவாச்சு சொல்லு?' கலங்கிப் போய்க் கேட்டாள்.

'அக்கா...சுபாஷ் என்னை...என்னை மோசம் பண்ணிட்டார்'

'மைகாட்' மேகலா திக்பிரம்மை அடைந்து விட்டாள்.

மானஸாவின் வயிற்றைத் தன்னையறியாமல் கூர்ந்து கவனித்தாள். தான் அவ்விருவரும் ஒருவரையொருவர் புரிந்துக்கொள்ள வேண்டுமென்ற முயற்சியில் இருவரும் சந்தித்துப் பழக ஏற்பாடுகளைப் பண்ணினாளே! மானஸா தன்னை இழந்து விடவில்லையே? தாயாகிவிடவில்லையே? மேகலாவின் இதயம் படபடத்தது.

'ஏன் அப்படிச் சொல்கிறாய்?' பயந்து போய்க்கேட்டாள் மேகலா.

'என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு வாக்குறுதி தந்தாரில்லையா? இப்ப, என்னவோ அவங்க அப்பாவுக்கு இந்தச் சம்பந்தம் இஷ்டமில்லையாம். அந்த ராமபூஷணன் தன் மகள் ரஜனிக்குத் தந்து மணம் செய்துவைக்கப் போகிறாராம். அந்தச் சம்பந்தத்தைதான் முடிக்கப் போறதாய்ச் சொல்லிட்டாராம். அவங்க அம்மாவுக்கு அவர் மேல் உயிராம். அதனால் அவங்களை மீறிக்கொண்டு என்னை மணக்க மாட்டாராம்.' என்று அவ்விருவருக்குமிடையே நடந்த சம்பாஷணைகளை ஒன்று விடாமல் சொல்லி முடித்தாள்.

மேகலா கவனமாய்க் கேட்டாள்.



'அவர் சொன்னதில் தப்பு எதுவுமில்லையே! கல்யாணம் னால் அவங்க தாய்தந்தையரின் சம்மதத்தோடுதானே டக்கணும்? நீ அந்த வீட்டு மருமகளாய்ப் பெருமையோடு லை நிமிர்ந்து போக வேண்டாமா? அந்தக் கல்யாணம் னால் அவங்க குடும்பத்தோடு உன் சம்பந்தம் ஒன்று ரணுமே தவிர சச்சரவு வரக் கூடாது. இதன் மூலமாய் ய் தந்தையரைவிட்டுத்தூரமாகிவிட்டேனே என்ற வருத் ம் அவனுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது.'

'அக்கா! நீ கூட அவருக்குச் சார்பாகவே பேசுகிறாயே' வேசமாய்ச் சொன்ன தங்கையின் கையைப் பிடித்து இழுத் ள்.

'அவனோட உன் கல்யாணம் ஆகாதுன்னு யார் சொன் ங்க உனக்கு? அவனோடேயே உன் விவாகம் நடக்கும். வலைப்படாதே. தாய்தந்தையரின் சம்மதப்படியே இத் ருமணம் நடக்கும்.'

'எப்படி அக்கா?'

அதெல்லாம் உனக்குத் தேவையில்லை! அக்காமேல் னக்கு நம்பிக்கை இருக்கா, இல்லையா?'

'இருக்கு!'

'அப்படீன்னால் எழுந்து சாப்பிட வா'

'அக்கா!'

'வேறெதுவும் பேசாதே!'— உத்தரவிட்டாள்.

மானஸா மறுபேச்சுப் பேசாமல் எழுந்து வந்தாள்

மேகலா மறுநாள் காலையில் நேராய் பெரிய மாமா ட்டிற்குப் போனாள். பலராமன் சாப்பிட்டு விட்டு ஆபீசுக் புறப்படும் முயற்சியில் இருந்தான். மேகலா வந்தது ரிந்ததுமே ஓட்டமாய் ஓடிவந்தான். மேகலா காரிலிருந்து றங்கவில்லை. நாகராஜனை அனுப்பினாள்.

நீண்ட அந்தக் காரையும் அதில் உட்கார்ந்து கொண்டிருந்த மேகலாவையும் அந்த வீதியில் இருந்த எல்லோரும் ஆர்வத்துடன் பார்த்தார்கள்.

'மேகலா, இதென்னது? உள்ளே வா! இங்கேயே உட்கார்ந்திருக்காயே, ஏன்?' என்றான்.

'உன்னோடுபேசணும். காரில் ஏறிக்கொள்' என்றாள்.

'ஊஹூம். 'நீ உள்ளே வந்தால்தான் நான் வருவேன், நான் யார்? உன் பெரிய மாமாதானே?' என்றான்.

மேகலா 'அப்படியா?' என்பது போலப் பார்த்தாள், இறங்கி உள்ளே வந்தாள்.

பலராமனின் மனைவிஓடிவந்து நாற்காலியைக் கொண்டு வந்து போட்டாள்.

'உட்காரு, என்ன விஷயம், சொல்லு?' என்றான்.

'நீ சுபாஷ் தந்தையிடம் போய்ப் பேசணும்!'

'மானஸாவைப் பண்ணிக்கிறதாய்ச்சொன்னானே, அந்த சுபாஷ்தானே?'

'ஆமாம்.'

'என்ன பேசணும்?'

'மானஸாவை சுபாஷுக்குத் தந்து கல்யாணம் பண்ணி வைக்கிறதாயும், அவங்க கேட்ட விதத்தில் கல்யாணம் பண்ணு தாயும், வரதட்சணை கிரதட்சணை என்ன வேண்டும்னு சொல்லச் சொல்லியும் தூதராய் நீ இருந்து இந்தக் கல்யாணத்தை செட்டில் பண்ணணும்.'

'சரி!'

அதற்குள் அவன் மனைவி வெள்ளித் தம்ளரில் சுடச் சுடக் காபியைக் கொண்டு வந்து கொடுத்தாள்.



மேகலா மறுத்துவிட்டாள்.

'எடுத்துக்காம்மா. ஏதோ நாங்கள் ஏழைகள் திடீரென்று வந்திருக்கிற தெய்வம் நீ. இதைவிட வேறொன்னும் தர முடியலை எங்களால்' என்றான் மாமன்.

'நான் இப்பதான் ஜூஸ் குடித்துவிட்டு வந்தேன் மாமா. என் சாப்பாடெல்லாம் டயம் பிரகாரம் நடக்கணும்' என்றாள்.

'கேட்டாயா? அவள் நம்மைப் போல் சாதாரண மனுஷி இல்லை, இஷ்டப்பட்டபோது காபியைத் தொண்டையில் ஊற்றிக் கொண்டு விடுவதற்கு! ஜூஸ் குடித்தாளாம். கேட்டிருக்காயா எப்பொழுதாவது?

என்றான் பலராமன் மனைவியிடம் பெருமையாய்.

அதற்குள் அக்கம்பக்கத்திலிருந்த தன் சிநேகிதர்களை எல்லாம் மேகலாவைப் பார்க்கக் கூப்பிட்டாள் அவள். ஆண்களும் பெண்களுமாய் பத்துப்பேர் கூடிவிட்டார்கள். மேகலா புறப்படும்பொழுது பலராமனின் மனைவி நெற்றியில் குங்குமம். வைத்துவிட்டு, கையில் பழம் ஒன்றைத் தந்தாள்.

'உனக்கு சாவதானம் கிடைக்காதுன்னு தெரியும்னு வை. ஆனாலும் நெருங்கிய உறவினர்கள். அடிக்கடி வந்துட்டிரும்மா' என்றாள்.

மேகலா வெளியே வரும்போது அந்த வீதியிலிருந்த அவர்கள் அத்தனைப் பேரும் அங்கே கூடியிருந்தார்கள். நாகராஜன் அவர்களைத் தள்ளிக் கொள்ளும்படிச் சொல்லி வழியை விலக்கித் தந்தான். மேகலா வந்து காரில் உட்கார்ந்து கொண்டான். பலராமனும் வந்து உட்கார்ந்துக் கொண்டான்.

'நீ பாங்குக்கு லீவு போடவேண்டியிருக்குமோ என்னவோ?' என்றாள்.

'ஒன்றும் தேவையில்லைம்மா.' நீ என் வீட்டிற்கு வந்ததே எனக்கு மகாபாக்கியம். நீ சொன்ன வேலையை விட அந்த உத்யோகம் ஒரு பொருட்டா?' என்றான்.

கார் ஜனங்களை விலக்கிக்கொண்டு மெதுவாய் ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. மேகலா கடைவீதிப் பக்கம் பார்த்தாள். 'அதோ! அந்தக் கடைக்குப் பக்கத்தில்தானே அன்றைக்கு மிக்ஸர் வாங்கினாள்!' மேகலாவின் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. மாமன் மறந்து போய் விட்டான் அவளால் மறந்துவிட முடியுமா?

மேகலாவுக்கு அந்த வாழ்க்கையை நினைத்துப் பார்த்த பொழுது அது ஒரு கனவாய் இருந்தது.

வழியில் மேகலா பலராமனிடம் சுபாஷின் தந்தையிடம் எப்படிப் பேசவேண்டும் என்று சொன்னாள். அவள் ஸ்டுடியோவில் இறங்கிக்கொண்டு பலராமனுக்குக் காரைத் தந்து அனுப்பி வைத்தாள்.

ராத்திரி ஷூட்டிங்கிலிருந்து மேகலா திரும்பிவரும்போது பலராமன் அங்கேயே தான் இருந்தான். 'என்ன மாமா! என்னவாச்சு?' என்றாள்.

'எல்லாவற்றையும் பேசிட்டேம்மா. நான் போனால் வேலையாகாமல் இருக்குமா? நான்யார், மேகலாவின் மாமா வாச்சே!'

'என்ன சொன்னார் அவர்?' கேட்டாள்.

'முதலில் பிகு பண்ணிக் கொண்டார். நீ என்னவானா லும் இந்தக் கல்யாணம் நடந்தே தீரணும்னு சொன்ன தாய்ச் சொன்னேன். அதனால் சாந்தமடைந்தார். அந்த ராமபூஷணன் முப்பதாயிரம் போய் வரதட்சணை தருவ தாய்ச் சொல்லியிருந்தாராம். நான் ஐம்பதாயிரம் தரேன் னேன். பெண்ணுக்கு ஏதோ சீர் என்றார். சரின்னேன்.



...சியில் ஒப்புக் கொண்டுவிட்டார். நல்ல நாள் பார்த்து ...னம் வைத்துக்கலாம்னார்.'

'அவங்களுக்கு என்ன பதில் சொல்லப் போறாராம்?'

'என்ன சொல்லப் போறாரோ தெரியாது!'

'சரி! புரோகிதரைக் கூப்பிட்டு நல்ல நாள் பார்! எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் ...னத்தை வைக்கச் சொல்லிடு.'

'சரி, நீ அவ்வளவு சொல்லணுமா? நான் கூட இருந்து என் கையால் இந்தக் கல்யாணத்தை எந்தக் குறையும் இல்லாமல் நடத்திவைக்கிறேன் போதுமா?' என்றான்.

'தாங்க்ஸ்' என்றாள் மேகலா.

# 36

மானஸா — சுபாஷ் விவாகம் நிச்சயமாயிற்று. நிச்சிய தார்த்தம் நடந்து முடிந்தது. பலராமனின் தலைமையில் சடங்கு எந்தக் குறையும் இல்லாமல் விமரிசையாய்நடந்தது. மேகலா உற்சாகமாய் எல்லாவற்றையும் நடத்திவைத்தாள். மேகலா காட்டிய மரியாதைகளுக்கு சுபாஷ் தாய் தந்தையர் மகிழ்ந்து போனார்கள்.

விவாகத்திற்கு முன்னால் சுபாஷ், — 'அக்கா! உங்களுக்கு என் நன்றியை எப்படித்தான் எடுத்துச் சொல்றதோ தெரியலை. நீங்கள், நடக்கவே நடக்காதுன்னு எண்ணியிருந்ததை நடத்திக் காட்டிட்டீங்க ராமபூஷணன் தந்தைக்கு நண்பர். அப்பா அவர் பேச்சை எப்படி மீறினாரோ அதான் ஆச்சரியமாய் இருக்கு! எது என்ன வானாலும் நானும் மானஸாவும் வாழ்நாளெல்லாம் உங்களுக்குக் கடமைப் பட்டிருக்கோம்' என்றான்.

மானஸாவோ அக்காவைக் கட்டிக் கொண்டுவிட்டாள்

'நான் ரொம்ப அதிரிஷ்டசாலி அக்கா' என்றாள்.

திருமணம் மிக விமரிசையாய் நடந்தது. பலராமன் லீவு போட்டுவிட்டு எல்லா வேலைகளையும் கவனித்துக் கொண்டான். சிவராமனும் கூட 'எனக்கும் ஏதாவது வேலையிருந்தால் சொல்லுங்கள்' என்று வந்தான்.

அவனுக்கு இப்பொழுது மேகலாவைப் பார்த்தால் பயம். மேகலா தென்பட்டுவிட்டால் ஒதுங்கிப் போய் விடுவான். இரண்டு மாதங்களுக்கு முன்னால் சூதாட்டம் ஆடியதால் போலீசார் பிடித்து அரெஸ்ட் பண்ணி விடவே, பலராமன் தலையில் அடித்துக் கொண்டு ஓடி வந்து, மேகலாவிடம் சொன்னபோது, மேகலா தனக்குத் தெரிந்த போலீஸ் அதிகாரிக்குப் போன் பண்ணி, அவனை விடுவித்தாள். அதிலிருந்து அவன்கூட மேகலாவின் வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருந்தான். மங்களம் சிவராமனுக்குச் சாப்பாட்டைப் பறிமாறிக்கொண்டே,

'அடேய்! நீ இப்படி தறுதலையாய்ச் சுற்றிக்கொண்டிருந்தால் மேகலாவின் மானம் போயிடும்டா. அவள் மாமன் நீ. சுற்றி அலையாதே' என்று கண்டிப்பாள். சிவராமனின் மனைவி சமீபத்தில் இறந்து விட்டாள். அவன் உத்யோகம் கூட வாய்க்கும் கைக்கும் எட்டாமல் இருந்தது. அவன் அடிக்கடி வந்து மங்களத்திடமிருந்து பத்தோ இருபதோ வாங்கிக் கொண்டு போவான்.

மேகலா மானஸாவுக்கு நகைகளைப் பண்ணினாள். அத்துடன் சேர்த்து தாய்க்கு வைரத் தோடும், கைகளுக்கு வளையல்களையும் கழுத்திற்குச் சங்கிலியும், மோதிரமும் பண்ணினாள்.



மங்களம் பட்டுப்புடவைகளைப் பார்த்துக்கொண்டிருக்கையில் மேகலா கிட்டே வந்தாள். 'பாட்டீ, கண்ணை மூடிக்கோ' என்றாள்.

'எதுக்கு?' என்றள் மங்களம்.

'மூடிக்கோங்கறேன்.'

மங்களம் கண்களை மூடிக்கொண்டாள்.

மேகலா பின்னுக்கு மறைத்து வைத்துக்கொண்டிருந்த காசுமாலையை எடுத்துப் பாட்டியின் கழுத்தில் போட்டாள். கழுத்தில் ஜில்லென்று படவே மங்களம் கண்களைத் திறந்தாள். கழுத்தில் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தது காசுமாலை.

'மேகலா! இதென்ன? எனக்கெதுக்கு?' என்றாள்.

'மேகலாவின் பாட்டி மூளி கழுத்தோடு இருக்கலாமா? பாட்டி, காசுமாலையைப் போட்டுக் கொண்டதும் உன் முகம் எவ்வளவு களையாய் இருக்கிறது பார்த்தாயா?' என்றாள் குறும்புடன்.

'என் கண்ணே' மங்களம் கட்டிக் கொண்டாள். எல்லோருக்கும் காட்டினாள்.

மேகலா தாயை எப்பொழுதும் விலையுயர்ந்த புடவைகளை உடுத்திக் கொண்டு நகைகளையெல்லாம் போட்டுக் கொள்ளச் சொல்வாள்.

;எனக்கெதுக்கு மேகா? வயதுப் பெண் நீ தான் போட்டுக்கணும்' என்பாள் ஸ்ரீரஞ்சனி.

'அப்படிச் சொல்லாதேம்மா. வயதானவங்க தான் இன்னும் நிறைய நகைகளைப் போட்டுக்கணும். நீ இப்படி நல்ல புடவைங்களைக் கட்டிக்கொண்டு நகைகளையெல்லாம்

போட்டுக்கொண்டு என்கண் முன்னாடி வளையவந்துட்டிருந்தால் என் மனதுக்கு எவ்வளவு நிம்மதியாய் இருக்கு தெரியுமா?' என்றாள்.

'அசடு'—ஸ்ரீரஞ்சனி சிரித்துக்கொண்டாள்!

திருமணம் நெருங்கிக் கொண்டிருந்தது. சுபாஷின் தந்தை 'மணப்பீடத்தில் யார் உட்கார்ந்துக்கொண்டு கன்யாதானம் பண்ணப் போறாங்க?' என்று கேட்டார்.

'வேறுயார்? எங்கப் பெரிய மாமாவும் மாமியுந்தான்!'

'தந்தை இருக்கும்போது அவங்க எதுக்குக் கன்யாதானம் பண்ணணும்?' என்றார் அவர்.

'தந்தையா? எங்களுக்குத் தந்தை இல்லை என்பது உலகமறிந்த உண்மையாச்சே' என்றாள் மேகலா.

'உலகத்துக்கென்ன தெரியும்? கண்ணுக்குத் தென்பட்டதே நிஜம் என்று நினைச்சுக்கும். அம்மா, உங்கப்பா யாரோ இல்லை. என் நண்பர்தான். அதனால்தானே அவர் மகளை மருமகளாக்கிக்கலாம்னு நினைத்தேன்! அதற்குள் நீ உன் தங்கையைத் தரேன்னு செய்தி அனுப்பினாய். நான் அவருக்கு வாக்குக் கொடுத்திருந்தேன். சுபாஷ் மானஸாவைத் தவிர வேறு யாரையும் பண்ணிக்க மாட்டேன்னு பிடிவாதம் பிடித்தான். எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை. அப்ப உங்கப்பாவிடம் நிலைமையைச் சொன்னேன். அவர் நல்லவர். என்ன சொன்னார் தெரியுமா? எனக்குரஜனியும் ஒன்றுதான், மானஸாவும் ஒன்றுதான்! இருவரும் என் மகள்கள்தான்! நீ சுபாஷுக்கு மானஸாவைப் பண்ணிக் கொண்டால் எனக்குச் சந்தோஷந்தான்' என்றார். அவர் உங்களைச் சந்திக்கத் தவிச்சுட்டிருக்கார். உங்கப்பா இருக்கும்போது யாரோ கன்யாதானம் எதுக்குப் பண்ணணும்?'

மேகலா உதட்டைச் சுழித்தாள். முகம் சிவந்தது.



'யாரு அப்பா? யாரு பொண்ணு? அவர் என் தந்தையும் இல்லை. நாங்களும் அவர் மகள்களும் இல்லை.' நறுக்கென்று சொன்னாள் மேகலா.

'இப்படி ஆவேசப்பட்டால் எப்படி? ஏதோ சூழ்நிலைக் கோளாறால் அவர் கஷ்டப்பட நேர்ந்து அதனால் உங்களை அரவணைக்க முடியாமல் போயிட்டாருன்னே வெச்சுப்போம்! அதற்காக நீங்களிருவரும் தந்தை மகள் இல்லைன்னு ஆயிடுமா?'

'உங்களோடு எங்கள் உறவு முறைகளையெல்லாம் வாதாடிக் கொண்டிருக்கும் பொறுமை எனக்கில்லை. இந்தக் கல்யாணத்தில் எங்க மாமாதான் கன்னியாதானம் பண்ணுவார். இதில் மறுபேச்சு கிடையாது. மொதல்லேயே சொல்லிட்டேன்' என்றாள் மேகலா கச்சிதமாய்.

அவருக்கு மிகக் கோபம் வந்து விட்டது. விருட்டென்று போய்விட்டார்.

'பேசக்கூட ஓழிவில்லாத பெரிய மனுஷி நீ என்று தெரியும்மா! நீ ஒன்றும் சொல்லத் தேவையில்லை. இதோ நான் முன்பே சொல்லிடறேன். உங்கப்பா வந்து கன்னியாதானம் பண்ணினால் தான் இந்தக் கல்யாணம் நடக்கும். இல்லாவிட்டால் நடக்காது. இந்த லக்னத்தில் இந்தக் கல்யாணம் நடக்குமா இல்லையான்னு நீங்கள் எனக்கு இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் செய்தியைச் சொல்லியனுப்பிடுங்கள். நான் போகிறேன்' என்று கிளம்பிவிட்டார்.

அவர், போகத் தொடங்கவே, மேகலா கத்தினாற்போல் கூப்பிட்டாள்.

'நில்லுங்கள். இந்தக் கல்யாணம் நடக்க வழியில்லை. இப்பொழுதே சொல்லிட்டேன். உங்கள் பையனுக்கு வேறு சம்பந்தம் பார்த்துக்குங்க' என்றாள்.

‘சரிம்மா, சரி, பெண் பிள்ளை உனக்கே இவ்வளவு அகம் இருந்தால் ஆண்மகாராஜன் எனக்கு எவ்வளவு நெஞ்சுறுதி இருக்கணும்! இதப் பார், உன் தங்கைக்கு உன்னால் வேறு கல்யாணம் பண்ண முடியுமோ என்னவோ, ஆனால் என் மகனுக்கு நிமிஷத்தில் பண்ணிட முடியும் என்னால். உன் பிச்சைக்காரக் காசைப் பார்த்து உங்க சம்பந்தத்துக்கு ஒப்புக் கொண்டு விடலை நான். என் மகன் விருப்புகிறானேன்னுதான் தலை குனிந்தேன். உங்கப்பாவை எனக்கு நன்றாய்த் தெரியுமாதலால் சரின்னு சொன்னேன். நீ பெற்ற தந்தையையே மறுக்கிறாய். இனி எங்களை எப்படி மதிப்பாய்? இப்படி திடீர்னு வந்த காசால் கண் மண் தெரியாமல் நடந்துக்கிறவங்களை நிறைய பேரைப் பார்த்திருக்கேன் நான்.

என் மகனிடம் இந்தச் சம்பந்தம் நமக்கு வேண்டாண்டா! எல்லாம் பெண்பிள்ளைங்களின் நாட்டாண்மையாய் இருக்குன்னு ஆதியிலிருந்தே தலையில் அடித்துக் கொண்டேன் நான். அவன் என் பேச்சைக் கேட்கலை. அவனும் பாழும் கிணற்றில் விழுந்து எங்களையும் அதில் தள்ளி விட்டான். சீ. சீ!’

அவர் பெரிதாய் கத்திக் கொண்டே போய்விட்டார்

வீடு முழுவதும் திடீரென்று நிசப்தமாகி விட்டது. மேகலா சலனமில்லாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தாள் ஒரு பக்கத்தில். அடுத்த அறையில் படத்தயாரிப்பாளர்களும் டைரக்டர்களும் உட்கார்ந்திருந்தார்கள். பார்க்க வந்திருந்த சில அபிமானிகளும் இருந்தார்கள். மேகலாவுக்கு நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலிருந்தது. விருட்டென்று உள்ளே போகத் திரும்பினாள். அங்கே மானஸாவும், ஸ்ரீரஞ்சனியும் மங்களமும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் மேகலாவுக்கு ஒரு வினாடி வாய் வார்த்தைப் பெயரவில்லை. பிறகு ‘கேட்டீங்களோனோ

பக்கங்களை மடக்காமலும், கிழிக்காமலும் புத்தகத்தை கவனமாக கையாளுங்கள்.



நீங்களும்?’ என்றாள். உடனே தன் அறைக்கு ஓட்டம் பிடித்தாள்.

மேகலா மேஜைக்கு முன்னால் வந்து சிலையாய் நின்று கொண்டிருந்தாள் அப்படியே அதற்குள் நாகராஜன் வந்தான். ‘அம்மா, சமையல்காரங்கவந்திருக்காங்க. ஸ்வீட்டு என்னென்ன பண்ணணும்? டின்னருக்கு எத்தனை பேர் வரப்போறாங்கன்னு கேட்கிறான்’ என்றான்.

மேகலா அவனை நோக்கித் திரும்பாமலேயே சொன்னாள்.

‘இந்தக் கல்யாணம் நடக்கப்போறதில்லைன்னு சொல்லிடுங்க.’

‘அம்மா, அழைப்பிதழ்களையெல்லாம்கூட அனுப்பிட்டோம். இப்ப...’ பதறிப் போய்ச் சொன்னான்.

‘எத்தனையோ கல்யாணங்கள் கூடத்தான் மணமேடை வரைக்கும் வந்துட்டு நின்னுப்போயிருக்கு. அவற்றில் இதுவும் ஒன்று. இதப் பாருங்கள், முன் அறையில் எனக்காகக் காத்துட்டிருக்காங்க’

‘அவங்க கொஞ்சம் முன்னாடியே போயிட்டாங்கம்மா. உங்க மனது சரியாயில்லை. அப்புறமாய் வரோம்னு சொல்லச் சொன்னாங்க’ என்றான்.

மேகலா பெருமூச்செறிந்தாள். ‘சரி’ என்றாள்.

நாகராஜன் போய்விட்டான். சமையல்காரனிடம், ‘அம்மா பிஸியாய் இருக்காங்க, அப்புறமாய் வாங்க. என்று சொல்லியனுப்பி விட்டான்.

இரவு வந்தது. மேகலா கட்டிலில் உட்கார்ந்துக் கொண்டிருந்தாள். அந்த வீட்டில் மாலையிலிருந்தே மிகப் பயங்கரமான நிசப்தம் சூழ்ந்துகொண்டிருந்தது. மேகலாவிடம் வருவதற்கு யாருக்குமே துணிச்சல் இல்லை.

கடைசியில் மானஸா கதவைத் திறந்துகொண்டு வந்தாள்.

மேகலா காலடியோசைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள்

மானஸா எதிரே நின்றிருந்தாள்.

'என்ன மானஸா?' என்றாள்.

'அக்கா...' மானஸாவின் தொண்டையை அழுகை அடைத்தது.

'என்ன?'

'இந்தக் கல்யாணத்தைப் பற்றி என்ன தீர்மானித்திருக்கிறாய்?'

'என் முடிவைத்தான் சொல்லிட்டேனே!' அமைதியாய் பதிலளித்தாள்.

'அதை மாற்றிக்க முடியாதா?'

'முடியாது!'

'அக்கா...எனக்கு...எனக்கு இவ்வளவு விஷத்தைத் தந்து விடு.' நடுங்கும் குரலில் சொன்னாள்.

'மானஸா!'

'இவ்வளவு நடந்த பிறகு நான் எந்த முகத்தை வைத்துக் கொண்டு வாழமுடியும் சொல்லு? என் வருத்தம் உனக்குப் புரியமாட்டேங்கிறது. அப்பா வந்தால் என்ன தப்பு சொல்லு? அப்பா அவ்வளவு தூரம் சொன்னது கூட நம் அதிர்ஷ்டம் இல்லையா?'

'மானஸா!' மேகலா கட்டிலை விட்டு எழுந்திருந்தாள் சரேலென்று.

'என்ன சொன்னாய்? இப்படிப் பேசுவது நீதானா!' மானஸாவைப் பிடித்து ஆவேசமாய் உலுக்கினாள்.



'ஆமாம், நான் தான் சொல்றேன். இதில் நீ அவ்வளவு தூரம் மறுக்க வேண்டிய காரணம் என்ன இருக்குன்னுதான் புரியலை எனக்கு. இன்னும் சொல்லப் போனால் இந்த விதத்திலாவது நாம் ஒன்றாய் இணையப்போவதற்குச் சந்தோஷப்படணும்.' மேகலா மானஸாவை வேகமாய்த் தள்ளி விட்டாள்.

'நீங்கள்ளாம் அந்த ஆள் செய்த அவமானத்தை மறந்துப் போயிட்டீங்க. போலிருக்கு இல்லை இல்லை; நீங்கள் அவமானப் படவேயில்லையே! அவமானப்பட்டது நான் தானே! அதை என்னால் மறக்கமுடியாது. மறக்கமாட்டேன், இந்த மனதில் அந்தக் காயம் இன்னும் ஆறவேயில்லை!

'அவமானம்! அவமானம்! எப்பப் பார்த்தாலும் இதே பேச்சுத்தான்! அப்படிப்பார்த்தால்மாமா நம்மை அவமானப் படுத்தவில்லையா? அவரோடு மட்டும் நீ எதுக்கு ராஜியானாய்? ஒன்றுமே நடக்காதது போலச் சாதாரணமாய் ஏன் பேசுகிறாய்? உலகம் உன்னை அவமானப்படுத்த வில்லலயா? உலகத்தோடு ஏன் ராஜியானாய் அக்கா? இதைவிட எந்த விதத்தில் மோசமாயிட்டார் அப்பா?'

மானஸா உலுக்கி எடுத்தபோது மேகலா பதில் சொல்ல முடியாதவளானாள். கட்டிலில் பொத்தென்று சரிந்தாள். 'உனக்குத் தெரியாது மானஸா! என் வருத்தம் என்னன்னு உனக்குப் புரியலை. என்னால் மாமாவையும் உலகத்தையும் கூட மன்னித்துவிட முடியும். ஆனால் அவரைக் கனவிலும் என்றால் மன்னிக்கமுடியாது. அவர் எனக்குத் தந்தையில்லை' நானும் அவருக்கு மகள் இல்லை.'

'சரி, இதைவிட இந்தக் கல்யாணம் எனக்குப் பிடிக்கலைன்னு ஒரே வார்த்தையில் சொல்லிட்டுப் போயேன். பாடு சந்தோஷம், என் வாழ்க்கை இதெல்லாம் உனக்குத்

இல்லைன்னு சொல்லு. உனக்கு உன் பிடிவாதந்தான் முக்கியம். நீ உண்மையாகவே என்னை விரும்பினால் இந்த கல்யாணத்துக்கு எப்படியோ ஒரு வழியாய் ஒப்புக்கொண்டு பல்லைக் கடித்துக் கொண்டு, கண்ணை மூடிக்கொண்டு பொறுத்துட்டிருப்பாய் இதையெல்லாம்' என்றாள் மானஸா ஆவேசத்துடன். 'இப்பப் புரியுது அக்கா இந்தக்கல்யாணத்தை நீ எனக்காகப் பண்ணலை. தங்கைக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறோம் என்று பெருமையைக் காட்டிக்க...'

'மானஸா!'— கத்தினான் மேகலா.

'இந்தச் சம்பந்தத்தை எனக்காக நீ செட்டில் பண்ணவில்லை. அவருக்குப் பாடம் கற்பிக்கத்தான் பண்ணினாய். நீ பணக்காரி என்று அவர் மூஞ்சிக்கு முன்னால் சிரிப்பதற்காகத் தான் இதையெல்லாம் பண்ணினாய். ஏன் இதையெல்லாம் தொடங்கினாய்? எந்தத்தொல்லையுமில்லாமல் நானும் சுபாஷும் ஏதாவது ரெஜிஸ்தர் மேரேஜ் பண்ணிக் கொண்டிருப்போமே! உன் பிடிவாதத்தால் எங்களை நாசம் பண்ணினாய் நான் ரொம்ப அதிர்ஷ்டசாலின்னு நினைச்சேன், எவ்வளவு அதிர்ஷ்டசாலின்னு இப்பத்தான் புரியுது...' மானஸா அழுதுக் கொண்டே அங்கிருந்து போய் விட்டாள்.

மேகலா அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தாள். மானஸாவைத் தொடர்ந்து ஓடக்கூட சக்தியில்லாதவளாய் அப்படியே கட்டிலில் சரிந்தாள். மானஸாதான் என்னென்ன வார்த்தைகளைப் பேசிவிட்டாள்! மேகலாவின் இதயம் சுக்குநூறாகிவிட்டது.

கொஞ்ச நேரங் கழித்து ஸ்ரீரஞ்சனி அங்கே வந்தாள். 'மேகா' என்று மெல்லிய குரலில் கூப்பிட்டாள்.

மேகலா திரும்பிப் பார்த்தாள்.



ஸ்ரீரஞ்சனி மேகலாவிற்கு அருகில் வந்தாள். 'மேகா! நான் என்றுமே உன்னை எதுவுமே கேட்கவில்லை. இன்றைக்கு பகவதி பிட்சாம் தேஹின்னு கேட்கிறேன்.!

'அம்மீ ஆச்சரியத்தோடு! நிமிர்ந்தாள்.

'மானஸாவின் கல்யாணம் சுபாஷோடு நடக்கட்டும். வேண்டாம் என்று மறுக்காதே. அவர்... அவர் வரார் என்றால் அதைவிட வேண்டியது வேறென்ன இருக்கு? இவ்வளவு நாளாய் நான்பட்ட துன்பத்திற்குப் பரிகாரம் கிடைக்கப்போகிறது. அவர் உங்களைத் தன் குழந்தைகளாய் ஏற்றுக்கொண்டு நாலு பேருக்கு முன்னால் அந்த சத்தியத்தை தான் ஒப்புக்கொள்கிறார். இவ்வளவு நாளும் உலகம் என்னை ஒரு தாசியாய் எண்ணிக் கொண்டிருந்தது. கெட்டுப்போனவளாய்ப் பழித்தது. நான் வாழ்ந்து கெட்டவளே தவிர கற்பிழந்தவள் அல்ல என்று ருசுவாகப் போகிறது.

அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு மானஸாவுக்குக் கல்யாணம் பண்ணி கன்யாதானம் பண்ற நாள் என் வாழ்க்கையில் வரப் போறதுன்னால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கிறது—அந்தச் சந்தோஷத்தில்! எனக்கும் ஒரு கணவர் இருக்கிறார். நானும் ஒருத்தருக்கு மனம் வாக்கால் மனைவி! என் குழந்தைகள் தந்தையில்லாத கெட்டவழியில் பிறந்த குழந்தைகள் அல்ல. தந்தை தன் குழந்தைகள் தான் என்று ஒப்புக்கொள்கிற அவகாசம் வந்துவிட்டது. ஒரு நாளாவது பெருமையோடு நான் நிமிர்ந்து இந்த உலகத்தைப் பார்க்கக் கூடிய அவகாசத்தைக் கொடு மேகா! என்ஜென்மம் கடைத் தேறி விட்டதுன்னு நினைச்சுப்பேன். உன்னைப் பெற்றதற்கு என் ஜென்மம் சாபல்யமடைந்து விட்டதுன்னு நினைச்சுப்பேன்.'

'அம்மீ!' என்றுமே அதிகமாய்ப் பேசியிராத ஸ்ரீரஞ்சனி இவ்வளவு பேசியதைக் கேட்டு, மனம் உருகிப் போய் விட்டது மேகலாவுக்கு. ஸ்ரீரஞ்சனி மேகலாவின் தலையை மார்போடு அழுத்துக் கொண்டாள்.

'மேகா! எந்தத் தாயுமே குழந்தைகளை பிட்சைக் கேட்கக்கூடாது. ஆனால் நான் கேட்கிறேன். இவ்வளவு நாளாய் நடைப்பிணமாய் வாழ்ந்து வந்தேன் நான். அவர் வந்து குடித்தனம் வைத்தாலேயொழிய வெளியுலகத்திற்கு என் மூஞ்சியைக் காட்டக்கூடாது என்றெண்ணிக்கொண்டிருந்தேன். தெய்வம் என் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து விட்டது போல இந்த அவகாசம் வந்திருக்கிறது. அவளுக்கு இந்தப் புத்தி பிறந்ததே என் பாக்கியம். அன்றைக்கு பலராமன் மாமா கூடச்சொன்னார்—இப்பொழுது அவர் எல்லோரிடமும் நீ தன் மகள்தான் என்று சொல்லிக் கொள்கிறாராம்.'

மேகலாவின் உதட்டில் விரக்திப் புன்னகை யொன்று நெளிந்தது. 'பைத்தியக்காரி அம்மா!' அந்தச் சமயத்தில் தாயின் தீனமான முகத்தைப் பார்த்தபோது மேகலாவுக்குக் கோபம், பிடிவாதம் எல்லாம் பாகாய் கரைந்துப் போய் விட்டது. அவள் இடுப்பைச் சுற்றிலும் கைகளைக் கோர்த்துக் கொண்டு சின்னப் பெண்ணைப் போலப் பார்த்துக் கொண்டே,

'உன் பேச்சை என்னால் தட்ட முடியுமாம்மா?' என்றாள்.

'என் தங்கமே!'—குனிந்து நெற்றியில் முத்தமிட்டாள் ஸ்ரீரஞ்சனி.

மேகலா விலைமதிப்பு வாய்ந்த பரிசு கிடைத்துவிட்டாற் போல் தாயின் கழுத்தைச் சுற்றிலும் கைகளைக் கோர்த்துக் கொண்டாள். அதற்குள் மங்களம் அங்கே வந்தாள். மேகலா மேஜைமேலிருந்த பணத்தை எடுத்துக் கீழே போட்டு விட்டுச் சரேலென்று அதை எடுத்துக்கொண்டு தன் கண்களில் ஒற்றிக்கொண்டு, தாயின் கண்களில் பாட்டியின் கண்களில் அதை ஒற்றினாள். 'என்ன இது?' என்றாள் மங்களம். 'என் இஷ்டதெய்வம் பாட்டி! பின்னே, என்னைக் காலால் உதைத்



தவங்களை என் காலடிக்கு இழுத்துக் கொண்டு வந்து விட்டதே' என்றாள்.

மானஸாவின் திருமணம் சுபாஷோடு மிக விமரிசையாய் நடந்தேறிவிட்டது. மானஸாவின் தாயும் தந்தையும் மணப் பலகையில் உட்கார்ந்து கொண்டு சாஸ்திரோக்தமாய் கன்யாதானம் பண்ணிக் கொடுத்தார்கள்.

திருமணம் நடந்துகொண்டிருந்தபோது மணமேடைக்கு அருகில் இருக்க வேண்டிய மேகலா, ராமபூஷணனின் காற்றுக்கூட தன்மேல் படுவதை விரும்பாதவளாய் தூரத்தில் போய் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபத்தில் மானஸாவும் சுபாஷும் மணமக்களாய் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கருகே ஸ்ரீரஞ்சனி, ராமபூஷணன் இருவரும் உட்கார்ந்து திருமணச் சடங்குகளை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

மேகலாவுக்குத் திடீரென்று தனிமை வந்து சூழ்ந்துக் கொண்டாற்போலிருந்தது. ஒரு வினாடி அன்பு ததும்பிய கண்களோடும் குறுகுறு சிரிப்போடும் சுபாஷைப் பார்த்துக் கொண்டிருந்த தங்கையை தன்னைமறந்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள் மேகலா. மானஸாவின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்து கொண்டிருந்தது.

அவள் வாழ்க்கையில் என்றுமே அப்படிப்பட்ட அதிர்ஷ்டம் வராதே? மேகலாவுக்கு விநோதமாய் எப்பொழுதும்போல கிருஷ்ணராஜ் நினைவிற்கு வந்தான். இதெல்லாம் அவன் போட்ட பிச்சைதான் என்றெண்ணிக் கொண்டாள். அவன் அவளை மரணத்திலிருந்து தப்பிக்க வைத்ததோடு கூட வாழ்க்கைப்பாட்டிற்கும் வழிவகுத்துத் தந்தானே! அவன் இப்பொழுது அவளுக்குப் பக்கத்தில் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று தோன்றிற்று.

மங்கள வாத்தியங்கள் முழங்கின. தாலிகட்டியாகி விட்டது. பெண்ணின் வாழ்க்கையில் தான் இது எவ்வளவு அபூர்வமானது! மேகலாவுக்கு மானஸாவைப் பார்த்த பொழுது சந்தோஷமாய் இருந்தது. மானஸாவிடம் போய் அட்சதையைத் தெளித்து ஆசி வழங்கிவிட்டு வந்தாள்.

மேகலாவுக்கு மானஸாவைவிடத் தாயைப் பார்த்தால் தான் சந்தோஷம் இன்னும் இருமடங்காயிருந்தது விளக்கு வெளிச்சத்தில் அவள் மேனியில் அணிந்திருந்த ஆபரணங்கள் ஒளியைச் சிந்திக் கொண்டிருந்தன. காதோரத்தில் நரைத் திருந்த போதிலும் பூச்சூடிக்கொண்டு, பெரிய பொட்டு வைத்துக் கொண்டு, பட்டுப்புடவை கட்டிக்கொண்டிருந்த அம்மா இதுவரைக்கும் என்றுமில்லாத அழகுடன் தென் பட்டாள். கணவன் ஏதோ கேட்டபோது பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் திருப்தியையும் பெருமையையும் கண்டபோது மேகலாவுக்குத் தன் ஜென்மம் சாபல்யமடைந்து விட்டது என்று தோன்றிற்று. தாய் இவ்வாறு நாலு பேருக்கு முன்னால் வந்ததும், மிகச் சந்தோஷமாயிருந்ததும் மேகலாவுக்கு மிகத் திருப்தியைத் தந்தது.

திருமணம் முடிந்த பிறகு மானஸா, சுபாஷ், ஸ்ரீரஞ்சனி, ராஜபூஷணன் நால்வரும் திருப்பதிக்குப் புறப்பட்டார்கள்.

மேகலா நாகராஜனின் மூலமாய் எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்தாள்.

மேகலாவுக்கு ஷூட்டிங் இருந்தது. மானஸா ஊருக்குப் போவதற்கு முன்னால் மேகலாவிடம் வந்தாள். மானஸாவின் உற்சாகத்தைப் பார்த்தால் எந்தப் பெண்ணுமே விரும்பியவனைத்தான் கைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லும்படியாய் இருந்தது.

'அக்கா நான் போயிட்டு வரேன்' என்றாள் மானஸா.



'கடிதம் போட்டுட்டிருப்பாயோன்னோ?' — கேட்டாள் மேகலா.

'கண்டிப்பாய். ஒரு வாரத்திற்குள் வந்துவிடுவோம், நீயும் வநதால் நன்றாயிருக்கும்.'

'எனக்கு ஷூட்டிங் இருக்கே!'

'ஆமாமாம். அம்மாடியோவ்! ஷூட்டிங்கிற்கு அப்புறந் தான் எந்த வேலையுமே. அக்கா. எனக்கு உன் வேலை தான் உயிர். உனக்கும் முன்பாக நானே அதற்கு அடி பணிவேன்.

மேகலா மானஸாவின் கன்னத்தை நிமிண்டினாள் சிரித்துக் கொண்டே.

'வரேன் அக்கா' என்றாள்.

மேகலா வாசல் வரையிலும் வந்து தங்கையை வழி யனுப்பினாள். மானஸா ஏறிய கார் போய் விட்டது.

'அம்மா! ஷாட் ரெடி!' நாகராஜன் வந்தான்.

மேகலா செட்டிற்குத் திரும்பி வந்தாள்.

டைரக்டர் சொல்ல வேண்டிய வார்த்தைகளை எப்படிச் சொல்ல வேண்டும் என்று சொன்னார். கேமிரா ரெடியாக இருந்தது. விளக்குகள் எரிந்தன.

மேகலா சொன்னாள். டைரக்டர் 'கட்' என்று கத்தினார். 'நீங்க டைலாக்கைத் தப்பாய்ச் சொல்றீங்க' என்றார்.

மேகலா திரும்பவும் சொன்னாள். திரும்பவும் 'கட்' என்று கத்தினார். மேகலாவால் அன்றெல்லாம் சரியாகவே நடிக்க முடியவில்லை. 'தலையை வலிக்கிறது' என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டாள்.

வீடு முழுவதும் நிசப்தமாயிருந்தது. மங்களம் தூங்கிக் கொண்டிருந்தாள். மேகலா கட்டிலில் வந்து படுத்துக் கொண்டாள். வீட்டில் தாய் இல்லை. மானஸா இல்லை. இந்நேரத்தில் அவர்கள் திருப்பதிக்குப் போய்ச் சேர்ந்திருப்பார்கள்.

மேகலாவுக்குத் தனிமை வாட்டிற்று. 'இந்தப் பணம் தன் வீட்டாரைத் தன்னிடமிருந்து பிரித்து விடுமோ?' என்று தோன்றிற்று. மேகலாவுக்கு ஏனோ அன்று மாலையிலிருந்தே திகிலாய் இருந்தது. இதுவரை தன் வீட்டாரைப் பிரிந்து இருந்ததில்லை. மானஸாவும் சுபாஷும் அவளை வரச் சொல்லி அழுத்தமாய்க் கூப்பிட்டிருந்தால் அவள் போயிருப்பாள். ஆனால் அவர்கள் அப்படிக் கூப்பிடவில்லை. அவர்கள் அவளையும் விட அவள் வேலையைத் தான் முக்கியமாய்க் கருதுகிறார்கள்.

மறுநாள் ஹீரோ கீழே விழுந்து கால் உடைந்து விட்டதாம். ஷூட்டிங் எல்லாம் ஒரு வாரத்திற்கு கேன்ஸலாகி விட்டது. ஒரு வாரம் என்ன பண்ணுவதென்று மேகலாவுக்குப் புரியவில்லை.

மானஸாவுக்குச் சீக்கிரமாய் வந்துவிடச் சொல்லி போன் பண்ணலாம் என்று பார்த்தாள். ஆனால் அவர்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாறிவிட்டிருந்ததால் கிடைக்கவில்லை.

மேகலாவுக்குப் பொழுது போவதே கஷ்டமாயிருந்தது. நித்யாநந்தன் மாரடைப்பால் இறந்து விட்டாராம். மேகலா ஆஸ்பத்திரிக்கு ஓடினாள். அவர் பசங்களைத் தேற்றுவதும், அவருக்குத் தகனக் கிரியைகளுக்கு ஏற்பாடு பண்ணுவதும் மேகலாவின் பங்காகி விட்டது. தன் வாழ்க்கையில் ஒரு நல்ல மனிதரை இழந்து விட்டோம் என்று தோன்றிற்று மேகலாவுக்கு.



மேகலா வீட்டிற்குத் திரும்பி வந்தபோது மானஸாவும் சுபாஷும் ஊரிலிருந்து திரும்பி வந்து விட்டிருந்தார்கள்.

ஸ்ரீரஞ்சனி மேகலாவிடம் வந்தாள். 'மேகா! இந்த குங்குமப் பிரசாதத்தை இட்டுக் கொள். என் மேகாவுக்கு மனசுக்குப் பிடிச்சவன் கணவனாய் வரணும்னு எல்லா கோவில்களிலும் வேண்டிக் கொண்டேன். ஒரு சாமியார் என் ஆசை வெகு சீக்கிரத்திலேயே நிறைவேறிடும்னார்' என்றாள் சந்தோஷமாய்.

'அவருக்கு எவ்வளவு கொடுத்தாயம்மா?' என்றாள் மேகலா.

'என் மோதிரத்தைக் கொடுத்துட்டேன்' என்றாள் ஸ்ரீரஞ்சனி.

'அப்படிச் சொல்லு. மொதல்ல எனக்குக் கணவன் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி அவருக்குத் தங்க மோதிரம் கிடைக்கும் யோகம் இருந்திருக்கு' என்றாள் சிரித்துக் கொண்டே.

'அப்படிச் சொல்லாதே மேகா! சில பேரின் வாக்குப் பலித்துவிடும்' என்றாள்.

'பைத்தியக்காரி அம்மா!' மேகலா விரக்தியாய் சிரித்துக் கொண்டாள்.

'எனக்கு நீ இருந்தால் போதும்; வேறு யாருமே தேவையில்லை' தாயின் இடுப்பைக் கட்டிக் கொண்டே சொன்னாள். தாயைப் பார்த்தபோது மேகலாவுக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது.

# 37

மேகலா நகரத்திற்கு நடுநாயகமான இடத்தில் வீடு கட்டத் தொடங்கியிருந்தாள் பிளான் பிரகாரம் ஐந்து லட்சங்களில் முடிவடையும் என்றிருந்த வீடு தொடங்கி பாதி கட்டி முடிவடைவதற்குள் ஆறு லட்சங்கள் ஆகிவிட்டன. முடிவடைந்தபோது பத்து லட்சங்கள் ஆகிவிட்டிருந்தன.

மேகலா தன் இருபத்தைந்தாவது பிறந்த நாள் அன்றைக்கு கிரகப்பிரவேசத்தைப் பண்ணினாள். அதே நாளன்று மேகலா நடித்த இரண்டு சினிமாக்கள் விடுதலையாயின. அவ்விரண்டும் பாக்ஸ் ஆபீஸ் ரிகார்டை சிதறடித்து பெரும் வெற்றியைச் சாதித்துவிட்டன மேகலாவின் பெயர் இருந்தாலே போதும் சினிமா வெற்றியடைந்துவிடும் என்று சொல்லுமளவிற்கு நிலைமை ஏற்பட்டிருந்தது.

மேகலா புது வீட்டில் வீட்டைச் சுற்றிலும் நிறைய பூந்தோட்டங்களைப் போடச் செய்தாள். மேகலா அந்த வீட்டிற்கு வருவதற்கு முன்னால் தோட்டக்காரனிடம் வீட்டைச் சுற்றிலும் ஐந்தாறு நைட் க்வீன் செடிகளை வைக்கும்படிச் சொன்னாள்.

'அவ்வளவு செடிங்க எதுக்கும்மா?' என்றான் தோட்டக்காரன் ஆச்சரியம் அடைந்தவனாய்.

'உனக்குத் தெரியாது; வை. எனக்கு இஷ்டம் அது. நான் வீட்டில் எந்த மூலையிலிருந்தாலும் அந்த வாசனை என் மூக்கை குப்பென்று வந்து தாக்கணும்.'



மேகலாவின் அறையில் வலது பக்கத்து கதவைத் திறந்தால் கண்ணாடிக் கதவுகளோடு கூடிய வராந்தா. அதற்குப் பக்கத்திலேயே ரூஃப் கார்டன் இருந்தது.

வீடு பெரிதாகி விட்டதால் வேலைக்காரர்களும் பெருகினார்கள். நகரத்தில் பிரபலமான சமையல்காரன் மேகலா வீட்டில் சமையல் வேலைக்கு நியமிக்கப்பட்டான். எப்பொழுது பார்த்தாலும் யாராவது வந்து கொண்டேயிருந்ததால் கேட்டிற்கருகில் கூர்க்கா வந்து சேர்ந்தான். அதைத் தவிர டிரைவர், மேகலாவின் கைக்கீழ் எடுபிடி வேலை பண்ணி வந்த காசி எல்லோருமாய் மேகலாவையே நம்பியிருந்தார்கள்.

சுபாஷ் குடும்ப அங்கத்தினனாய் வந்து சேர்ந்து விட்டதால் வீட்டில் சந்தடி ஏற்படத் தொடங்கிற்று. சுபாஷுக்கு எந்த வேலை வெட்டியும் இல்லாமல் வீட்டோடு சும்மாயிருந்து கொண்டிருந்தது வெட்கமாயிருந்தது பொழுதும் போகவில்லை. ஒவ்வொன்றுக்கும் மேகலாவின் பணத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது சங்கோஜத்தை ஏற்படுத்திற்று. அதையுணர்ந்து மானஸா மேகலாவிடம் சுபாஷுக்கு ஏதாவது வியாபகம் கற்பித்துத் தரும்படி வேண்டிக் கொண்டாள்.

அதே சமயத்தில் பலராமன் மேகலாவிடம், 'பாரும்மா, உனக்குப் பேரும் புகழும் வந்திருக்கு, நன்றாய்ச் செலவழித்துக் கொண்டு தர்பாராய் இருக்கிறாய். எல்லாம் நன்றாய்த்தான் இருக்கு. ஆனால் பெரியவனாய் உன்னிடம் ஒரு வார்த்தைச் சொல்லணும். இந்த சினிமா தொழில் நிரந்தரமில்லாததும்மா. நம் கண் முன்னாடியே எத்தனை நடிக நடிகைகள் பார்த்துட்டிருக்கிறபோதே சரிந்து விழுந்துட்டாங்க! அந்த பாலசங்கரனைப்பார்! இப்ப அவன் இருக்கிற இடம் தெரிகிறதா? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளணும்மா! நீ உன் பணத்தைக் கொண்டு ஏதாவது பிஸினெஸ்

ஸில் முடக்கினால் நல்லதும்பேன். என்னவோ நாட்கள் எப்பொழுதும் ஒரே மாதிரி இருக்காதில்லையா?' என்றார்.

அதைக்கேட்டதும் மேகலாவுக்கு தேடப்போன மூலிகை காலுக்குத் தட்டுப்பட்டாற்போல ஆயிற்று. வியாபாரம் ஏதாவது வைத்துத் தந்தால் சுபாஷுக்கு ஒரு வியாபகமாயும் இருக்கும்.

'என் உத்தேசங்கூட அதுதான் மாமா. நீ ஏதாவது யோசனை இருந்தால் சொல்லு, பார்ப்போம்' என்றாள்.

அதைக் கேட்டதும் பலராமனுக்கு உற்சாகம் பிறந்து விட்டது.

'நீ உம் என்று சொல்லணுமே தவிர லட்சம் பிஸினெஸ்கள் இருக்கு. நம் ஸ்டேட்டஸுக்குத் தகுந்தபடி பெரிய வியாபாரமாய் இருக்கணும். எல்லா முதலீட்டையும் உன்னையே போடச் சொல்லிடுவேன்னு நினைத்தாயா? பாங்க்கில் நானும் கடன் வாங்கறேன். நான் பாங்கில் வேலை செய்கிறவனாதலால் எந்த பாங்கிலிருந்தாவது கடன் வாங்கித் தரமுடியும். ஒரு பங்கு நீ போட்டால் மூன்று பங்கு கடனை நான் வாங்கித் தரேன்' என்றான் உற்சாகமாய்.

'சரி மாமா!' என்றாள்.

மேகலா பலராமன், சுபாஷ் இருவரையும் கலந்தாலோசித்தாள். கடைசியில் கூல் ட்ரிங் ஃபேக்டரி வைப்பதாய் ஒப்பந்தம் ஏற்பட்டது. 'மேகலா கூல்டிரிங்க்ஸ்' அபாரமாய் இருப்பதாய்ச் சொன்னார்கள். மேகலாவுக்குத் தன் பெயரை வைக்கப் பிடிக்கவில்லை. ஆனால் சுபாஷ் அதைத்தான் வைக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடித்து ஒப்புக்கச் செய்தான்.

கூல்டிரிங்க்ஸ் பேக்டரியின் ஆரம்ப விழா நடந்தது. மேகலா பாங்கியிலிருந்து கடன் பெற்றுக் கொண்டாள்.



கூரெண்டி கையொப்பம் போட்டாள். பேக்டரியில் மேகலாவோடுகூட சுபாஷ், பலராமன் இருவரும் பார்ட்னராய்ச் சேர்ந்தார்கள்.

'சுபாஷ் பலராமைப் பார்த்து, இந்தக் கழுத்தறுப்பு ஒன்று எதுக்கு வந்து சேர்ந்தது?' என்று சிடுசிடுத்துக் கொண்டான் தனக்குள். பலராமனோ முகத்தைக் கடுகடுப்பாய் வைத்துக் கொண்டு, என்னைக் காவல் போடுவதற்காகத்தான் இவனைக் கொண்டுவந்து வைத்திருக்கிறாள்' என்று எரிச்சலடைந்தான்.

பேக்டரி நிறைய தொல்லைகளையெல்லாம் கடந்து நன்றாய் வேலைசெய்யத் தொடங்கிற்று.

மானஸாவுக்கு இதற்கிடையே மகன் பிறந்தான். மேகலா மிகவும் மகிழ்ந்து போனாள். அந்த வீட்டில் அச் சிறுவனை எல்லோரும் உயிராய் பாவித்தார்கள்.

மேகலாவின் வாழ்க்கை, வேலை, பணம் பெயர், புகழ், உறவினர்கள், இன்கம்டாக்ஸ், ஃபங்ஷன்கள், பட்டங்கள் பரிசுகள், — இதற்கிடையே சுழன்றோடிக் கொண்டிருந்தது.

ராமபூஷணன் அடிக்கடி வந்துகொண்டிருந்தான். மேகலா சில சமயம் ஷூட்டிங்கிலிருந்தோ, ஃபங்ஷனிலிருந்தோ வீடு திரும்பும்போது அவன் டைனிங் டேபிளுக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு ஸ்ரீரஞ்சனி சாப்பாடு பரிமாறிக் கொண்டிருக்க, சிரித்துப் பேசிக்கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருப்பது கண்ணில் படும். மானஸாவுக்கும் சுபாஷுக்கும் ராம பூஷணன் மீது மதிப்பு அதிகம்.

மானஸா தந்தை மேலிருந்த கோபத்தை என்றோ மறந்து விட்டாள்.

அவன் மானஸாவின் மகனைத் தூக்கிக் கொஞ்சி கொண்டிருந்தால் மானஸாவும் சுபாஷும் சந்தோஷமா பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் அவ்வாறு சிரித்து பேசி மகிழ்ந்துக் கொண்டிருக்கும்போது மேகலா மட்டும் தொலைவில் இருந்து கொள்வாள். அவர்களை அவ்வாறு பார்க்கும்போதுமேகலாவின் மனதில் விநோதமான உணர்வு ஒன்று தோன்றும் அவர்கள் எல்லோரும் ஒன்றாகிவிட்டாற் போலவும் தான் மட்டும் வேறாகித் தொலைவில் இருப்பது போன்ற பாவனையும் தோன்றும். இவ்வுணர்ச்சி மனத்தைக் கசக்கிப் பிழியும்.

மேகலா எவ்வளவோ தடவை நினைத்துக் கொள்வாள் அவர்—அவர் குறைந்தது ஒரு தடவையாவது அவளைக் கிட்டே அழைத்து,

'மேகா! உன் சிறுவயதில் என்னால் தப்பு நேர்ந்திடு தம்மா; நீ அந்தச் சப்பவத்தை மறந்துப் போயிடு! உன்னைக் கண்டால் எனக்கு இஷ்டந்தான். நீ என்மகளாய் இருப்பதற்கு தான் பெருமையடைகிறேன்' என்று சொல்லியிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். மேகலாவின் மனதில் கரடு தட்டிப் போயிருந்த அந்த அவமானம் கருகிப்போய் விட்டிருக்கும். ஆனால் ராமபூஷணன் வாய்விட்டு ஒரு நாள் கூட மேகலாவுடன் பேசியதில்லை. அதோடு கூட மேகலா தன்னைத் தந்தையாய் மதிக்கவில்லை என்றும், தன் சொந்த விஷயத்தில் தலையிட விடுவதில்லை என்றும் ஜாடையாக வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருப்பார்.

ஒருமுறை மானஸா அவளிடம், 'அக்கா, அப்பாதான் எப்படியும் இருக்காரே! சுபாஷும் பார்த்துப்பார். அப்பா இருக்கும்போது, பலராமன் மாமா இன்னும் எதுக்காக உன் பணவிவகாரங்களைக் கவனித்துக்கணும்?' கேட்டாள்.

'இந்த வார்த்தைகளை நீயே சொல்கிறாயா அல்லது யாராவது சொல்லச் சொன்னாங்களா?'



'அப்பா, அம்மாவிடம் நாலைந்து தடவைகள் சொல்லிக் கொண்டிருந்ததை நானே கேட்டேன்.'

'என் விஷயத்தை நான் பார்த்துப்பேன். எனக்கு யாருடைய தலையீடும் தேவையில்லை' என்றாள் மேகலா துடிப்பாய்.

'அதில்லை அக்கா! நீ சங்கோஜப்படுகிறாயோன்னு தான் சொன்னேன். வேறெந்த உத்தேசம் இல்லை. உனக்குக் கோபத்தை வரவழைத்திருந்தால் மன்னித்து விடு' என்றாள் மானஸா.

'எனக்குக் கோபம் ஒன்றுமில்லை மானஸா'

மேகலாவுக்குத் தாயின் முகத்தைப் பார்த்தால் மட்டும் இதையெல்லாம் தாங்கிக் கொள்ளும் சக்தி வந்துவிடும். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு அவள் தாயின் முகத் தில் சந்தோஷத்தைப் பார்க்கிறாள். அது போதும் என்று தோன்றும். அம்மாவுக்காக ராமபூஷணன் வருவதைப் பொறுத்துக் கொண்டாள்.

மெல்ல மெல்ல ராமபூஷணனின் பெண்களும் பையனும் கூட வரத்தொடங்கினார்கள். ரஜனியின் தம்பியும் தங்கை யையும் மானஸாவை அக்கா என்றும் ஸ்ரீரஞ்சனியைப் பெரியம்மா என்றும் கூப்பிடத் தொடங்கினார்கள்.

மேகலாவுக்கு எப்படித்தான் பழக்கப்பட்டதோ தெரியாது. பண விஷயத்தை மட்டும் தன் கைக்குள்ளேயே வைத்துக் கொண்டிருந்தாள். நாகராஜன் மேகலாவின் மேல் பாசம் வைத்திருந்தான். இதர வேலையாட்களும் 'அம்மா' 'அம்மா' என்று சொந்தக் குழந்தைகளையும்விட அதிகமாய் அவள் மேல் அன்பு வைத்திருந்தார்கள். மேகலா அவர்களுக்கு அடிக்கடி பரிசுகளை வழங்கி வந்தாள். பிறந்த நாளுக்குத் துணிமணிகளைத் தருவாள்.

'சாப்பிடுங்கடா! சாப்பிடுங்க! நன்றாய்த் தின்று கொழுத்தட்டீங்க' என்றான் சுபாஷ் ஒரு முறை அவர்களைப் பார்த்துக் கேலியாய்,

சமையல்காரன் கொஞ்சம் திமிர்பிடித்தவன்,

பேச்சு கேட்டுத் தாங்கிக் கொள்ளமாட்டான்.

'உங்களைவிடவா தம்பி?' என்றான்.

'என்னடா உளறுகிறாய்?' சுபாஷ் உடனே அவன் தலைமயிரைப் பிடித்துக் கொண்டான்.

'மரியாதையாய் விடுங்க, அவ்வளவு ஆகாத வார்த்தையை நான் இப்ப என்ன சொல்லிட்டேன்? எனக்கும் கை இருக்கிறது. நானும் உங்கள் மயிரைப் பிடித்துக்கொள்ள முடியும்.' அவன் எதிர்த்து நின்றான்.

சுபாஷ் அவனை அடித்தான். 'உட்கார்ந்து தின்பதால் உடம்பு கொழுத்துப் போய் விட்டதடா உனக்கு' என்றான்.

'அந்த வார்த்தை உனக்கே பொருந்துமேய்யா! நான் ஒன்றும் உட்கார்ந்து தின்னலை; உழைத்துச் சாப்பிடுகிறேன்' சுபாஷைத் தள்ளிவிட்டுச் சொன்னான். மாலையில் மேகலா வந்தபோது வீட்டில் பெரிய ரகளையாகியிருந்தது.

'அவனை இந்த நிமிஷமே கழுத்தைப் பிடித்துத்தள்ளு. நான் கெட் அவுட் என்று சொன்னபோது நீ யார் போகச் சொல்றதுக்கு, எங்க எஜமானியம்மா சொல்லணுமே தவிர என்கிறான்'-சுபாஷ் கத்தினான்.

மேகலா பொறுமையாய் நடந்ததையெல்லாம் கேட்டாள். சமையல் காரனுடன் மோதிக் கொள்ளக்கூடாது என்ற புத்திகூட சுபாஷுக்கு இல்லை. சமையல்காரனை இருக்கச் சொன்னாலோ சுபாஷை அவமதித்ததாய் ஆகும்.



உண்மையில் சமையல்காரன் மீது தப்பேயில்லை. அவன் இதற்கு முன்பே பலதடவை 'சுபாஷ் ஐயா ரொம்பவும் எடுத்தெரிந்து பேசுகிறாரம்மா, நீங்கதான் எனக்கு எஜமானி. தாயைப் போலப் பார்த்துக்கிறீங்க. என் மேல் ஏதாவது தப்பு இருந்தால் நீங்கள் அதைச் சொல்லி என்னை அடித்தாலும் பட்டுக் கொள்கிறேன். ஆனால் யாருடைய பேச்சையோ கேளுன்னால் என்னால் கேட்டுட்டிருக்க முடியாது, நீங்க தர சம்பளத்தை எங்கே போனாலும் என்னால் சம்பாதித்துக் கொண்டுவிட முடியும்' என்று எச்சரித்திருந்தான்.

மேகலா மானஸாவிடம், சுபாஷை சமையல்காரன் ஜோலிக்குப் போக வேண்டாம் என்று சொல்லச் சொன்னாள். அதைக் கேட்டு மானஸாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

'அவருக்கு அவ்வளவு தூரம் தெரியாதா அக்கா? அந்தச் சமையல்காரன் பெரிய திருடன்! உனக்கும் எனக்கும் சண்டையை மூட்டிவைக்கப் பார்க்கிறான். அவனுக்கு நீயே கொஞ்சம் புத்தி சொல்லு' என்றாள்.

மேகலாவின் நிலைமை மோசமாகிவிட்டது. இந்தப் பக்கத்தில் மானஸா, சுபாஷ், ராமபூஷணன் ஒரு பக்கம். அந்தப் பக்கத்தில் மங்களமும் பலராமனும் ஒரு பக்கம்! இந்த இரு பிரிவினருக்கும் ஒருத்தருக்கொருத்தர் சரிப்பட்டு வராது. வீட்டிலிருந்த வேலைக்காரர்களோ இன்னொரு பக்கம். இவர்கள் சமயத்திற்குத் தகுந்தபடி இந்தப் பக்கமோ அந்தப்பக்கமோ சேர்ந்து ரகளையை அதிகமாக்கிக்கொண்டிருப்பார்கள்.

சுபாஷுக்குக் கோபம் அதிகம். அதனால் வீடு எப்பொழுதும் ரணஅரங்கமாய் இருந்து வந்தது. இவர்களையெல்லாம் ஈடுகட்டிக் கொண்டு போவது பெரும் பாடாயிருந்தது மேகலாவிற்கு.

சமையல்காரனின் கலாட்டாவிற்குப் பிறகு மேகலா நன்றாய்யோசித்துப் பார்த்தாள். இதில் அவன்தப்பு எதுவும் இல்லாமலிருக்கலாம். ஆனால் அவனை நீக்காவிட்டால் சுபாஷ் வேலைக்காரர்களுக்கு முன்னால் இளப்பமாகிவிடு வான். அவள்வாழ்நாள் பூராவும் மானஸா — சுபாஷ் நிழலில் வாழ்ந்து வரவேண்டியவள். அவர்களை இளப்பமாக்கக் கூடாது.

அவர்களைத் தவிர தனக்கு யாரும் அதிகமில்லை என்று ருசுவாக்கிக் கொள்ளவேண்டும் என்று நினைத்தாள் உடனே மேகலா அவனுக்குத் தர வேண்டிய சம்பளங்களைத் தந்து வேலையிலிருந்து நீக்கிவிட்டாள். சுபாஷ் மாலையி லேயே இன்னொரு சமையல்காரனை அழைத்து வந்து விட்டான். அவன் சுபாஷின் ஆள். எஞ்சிய வேலையாட்களை யெல்லாம் பொருட்படுத்தவில்லை அவன்.

ஆனாலும் எஞ்சியவர்கள் இதைப்பற்றி மேகலாவிடம் சொல்லவும் பயப்பட்டார்கள். அவர்களும் மெல்ல மெல்ல மேகலாவைக் காட்டிலும் சுபாஷைக் கையில் போட்டுக் கொள்ள முயற்சிக்கத் தொடங்கினார்கள்.

இவர்கள் எல்லோருடைய சச்சரவுகளையும் பொறுமை யாய்க் கேட்டுப் பரிகாரம் பண்ண முயன்று கொண்டிருப் பான் நாகராஜன்.

ஆனால் மேகலா அமைதியாயிருக்க அவன் பண்ணும் எந்த முயற்சியும் பலிக்காது. சுபாஷுக்கு நாகராஜனைக் கண்டால் பிடிக்காது. நாகராஜனை முதலில் இந்த வீட்டை விட்டுத் துரத்தவேண்டும் என்றெண்ணத் தொடங்கினான் அவன்.





## 38

'இந்தோ அமெரிக்கன் கல்சரல் அம்பாஸிடர்ஸ் எக்ஸ் சேஞ்சு' — நிகழ்ச்சியின் கீழ் இந்திய அரசாங்கம் மேகலாவை ஆறு வாரங்கள் அமெரிக்காவிற்கு அனுப்பத் தீர்மானித்துக் கொண்டது.

மேகலா ஷூட்டிங்கில் இருந்தபோது அரசாங்கம் அனுப் பிய இந்த உத்தரவு கிடைத்தது ஷூட்டிங்கை இடையி லேயே நிறுத்திவிட்டார்கள். எல்லோரும் மேகலாவைப் பாராட்டினார்கள். மேகலா டில்லியில் அரசாங்கக் கட்சியி லிருந்த சில பிரமுகர்களின் மூலமாய் இந்த அவகாசம் கிடைக்கும்படியாய் முயற்சிப் பண்ணியதைத் தெரிந்து பலர் பொறாமையால் அவளைப் பற்றித் தீய பிரச்சாரங்களைச் செய்யத் தொடங்கினார்கள்.

மேகலாவுக்குத் தாங்க முடியாத சந்தோஷமாய் இருந்தது. எங்கு பார்த்தாலும் கௌரவம், பட்டங்கள், சன்மானங்கள்! பத்திரிக்கைகள் எல்லாம் இச் செய்தியைச் சிறப்பாய் பிரசுரித்தன. மேகலாவின் பிரயாண ஏற்பாடுகள் எல்லாம் நடக்கத் தொடங்கின.

மேகலாவுடன் யார் போவது என்ற கேள்வி எழுந்தது பலராமனுக்குத் தான் கூடப் போக வேண்டுமென்று ஆசையாய் இருந்தது. ஆனால் சுபாஷும், மானஸாவும் இந்த அவகாசத்தை நழுவவிட விரும்பவில்லை.

'அப்ப குழந்தை...?' என்றாள் மேகலா.

'அம்மாவும் பாட்டியும் இருக்கும்போது குழந்தைக்கு என்ன பயம்?' என்றாள் மானஸா.

மேகலாவைக் காட்டிலும் மானஸாவுக்கும் சுபாஷுக்கும் தான் இன்னும் உற்சாகமாயிருந்தது.

'சனியன் பிடித்த உடம்பு சரியாயில்லை. இல்லாவிட்டால் நானே போவேன்' என்றாள் மங்களம்.

'நான் ஜூனில் நடிக்கப் போற 'இராமர் கதை' சினிமாவினை அவங்க வெளிநாட்டில் தான் ஷூட்டிங் எடுக்கப் போறாங்க. அப்ப நீ வரலாம் மாமா' என்றாள் மேகலா.

'சரி! என்னவிருந்தாலும் நாங்கள் வேற்று மனிதர்கள் தானே?' என்றான் பலராமன்.

மேகலாவுக்கு வருத்தம் ஏற்பட்டது.

பிரயாணத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் நடந்தன. செகரட்டரி நாகராஜனும் கூட வந்தான்.

பம்பாயிலிருந்து நள்ளிரவு வேளையில் 707 போயிங்கில் புறப்பட்ட மேகலாவுக்கு நியூயார்க்கில் கென்னடி ஏர்போர்ட்டில் அடியெடுத்து வைத்ததுமே அபூர்வ உலகத்தின் கதவுகள் திறந்து கொண்டு விட்டாற் போலிருந்தது. அங்கிருந்த அவ்வளவு நாட்களும் ஓய்வு என்பதே இல்லாமல் சுற்றி யலைந்து கொண்டிருந்தாள்.

சுபாஷும் மானஸாவும் சிறு குழந்தைகளைப் போல லீவு நாட்களைக் கழிக்க வந்த மாணவர்களைப் போல உற்சாகமாய், இருந்தார்கள். அவர்களைப் பார்த்தபோது சந்தோஷத்தையெல்லாம் அவர்கள் தான் அடைந்துக் கொண்டிருந்தாற் போலத் தோன்றிற்று. மானஸா தாய்க்கும், பாட்டிக்கும், மகனுக்கும், மாமியார், மாமனாருக்கும், நாத்திகளுக்கும் ஏகப்பட்ட சாமான்களை வாங்கிக் குவித்தாள். சுபாஷ் நண்பர்களுக்குப் பரிசுகளை வாங்கினான்.

மேகலா வாஷிங்டன் சிகாகோவில் நிறைய இந்தியரைச் சந்தித்தாள். கனடாவிற்குப் போய் நயாகரா நீர் வீழ்ச்சி



யைப் பார்த்தாள். சான்ஃபிரான்ஸிஸ்கோ, லாஸ்ஏஞ்ஜில்ஸ், ஹஸ்டன், ஃப்ளாரிடா — எங்கு போனாலும் தமிழர்கள் தென்பட்டதைப் பார்த்து ஆச்சரியமடைந்தாள்.

மேகலா ஹாலிவுட்டிற்குப் போனாள். எம். ஜி. எம். ஸ்டுடியோவைப் பார்த்தாள். சினிமா எடுக்கும் விதத்தில் நமக்கும் அவர்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருந்தது புரிந்தது. டெக்னிகலில் நாம் மிகவும் பின் தங்கியிருக்கிறோம் என்று புரிந்தது.

மேகலா எல்லா ஊர்களையும் சுற்றி விட்டுத் திரும்பவும் நியூயார்க்குக்கு வந்தாள். ஊருக்குத் திரும்பிப் போக இன்னும் நான்கே நாட்கள் தான் இருந்தன. சுபாஷும் மானஸாவும் இந்த நான்கு நாட்களும் நியூயார்க்கில் இருந்து சுபாஷின் உறவினர்களைப் பார்க்க ஏற்பாடு பண்ணிக் கொண்டார்கள்.

மேகலாவுக்கு மிகக் களைப்பாய் இருந்தது. ஜலதோஷம் வேறு பிடித்துக் கொண்டது.

'அம்மா நீங்க ரொம்ப களைப்பாய் இருக்கீங்க. ஓய்வெடுத்துக்குங்க. இல்லாவிட்டால் திரும்பிப் போகும் போது லண்டனில் தாங்க முடியாமல் போயிடும்' என்றான் நாகராஜன்.

'இந்த நான்கு நாட்களும் நான் எங்கேயுமே நகரப் போறதில்லை' என்றாள் மேகலா.

அன்று மாலையிலேயே வாஷிங்டனிலிருந்து பிரகாஷ் என்று ஒருத்தன் வந்தான். அவனுக்கு மதுரை சொந்த ஊராம். அவனுக்கு வாஷிங்டனில் இந்தியாவிலிருந்து இறக்குமதி பண்ணி விற்கும் ஊறுகாய்கள், அப்பளங்கள், கைத்தறிப் புடவைகள் போன்றவைகளை விற்கும் வியா

பாரமாம்! அவன் குடும்பமே மேகலாவின் அபிமானிகள் தாம் என்று சொன்னான்.

'மேகலா மூன்று வாரங்களுக்கு முன்னால் வாஷிங்டனுக்கு வந்திருந்தபொழுது தான் ஊரில் இல்லை என்றும், வியாபார ரீதியாய் சான்ஃபிரான்ஸிஸ்கோவுக்குப்போயிருந்த தாகவும் சொன்னான். மேகலாவைத் தன்னோடு வாஷிங்டனுக்கு வந்து தம் குடும்பத்தாரிடையே இரண்டு நாட்கள் இருக்கச் சொல்லி திரும்பத்திரும்ப வற்புறுத்தினான். அவன் மனைவி, மகள்கள், மகன்கூட வந்தார்கள்.

'நீங்கள் என் வேண்டுகோளைப் புறக்கணித்து விடக் கூடாது. எங்கள் விருந்தோம்பலை ஏற்றுக்கொண்டு தீர வேண்டும்' என்று பலவந்தப் படுத்தியதால் மேகலாவால் தட்ட முடியவில்லை. 'நாங்கள் உங்களைத் தொந்தரவிற்குள்ளாக்க மாட்டோம். புரோகிராம்கள் எதற்கும் ஏற்பாடு பண்ணமாட்டோம். வெறுமே எங்கள் குடும்ப அங்கத்தினராய் எங்களோடு கழித்தால் போதும்' என்றான்.

மேகலாவால் மறுக்கமுடியவில்லை. சுபாஷும் மானஸாவும் வாஷிங்டனை முன்பே பார்த்துவிட்டதால் இப்பொழுது வர மறுத்துவிட்டார்கள்.

'அக்கா! அதற்குள் நாங்கள் சுபாஷின் சொந்தக்காரர்களையெல்லாம் பார்த்து விடுகிறோம்' என்றாள் மானஸா.

மேகலா நாகராஜன் உடன்வர பிரகாஷ் குடும்பத்தோடு புறப்பட்டாள்.

பிரகாஷ் மேகலாவை வெறுமே கூப்பிட்டு விடவில்லை என்று பிறகுதான் தெரிந்தது. அவன் இந்தியாவிலிருந்து மேகலாவின் உதவியோடு ஃபிலிம்களை வாங்கி இங்கே வாரத்திற்கொரு முறை தமிழ்ப்படங்களைக் காட்ட வேண்டும் என்ற உத்தேசத்தில் இருந்தான். அந்த விவரங்களைப் பேசவேண்டும் என்பது தான் அவன் முக்கிய நோக்கம்.

பக்கங்களை மடக்காமலும், கிழிக்காமலும்
புத்தகத்தை கவனமாக கையாளுங்கள்



மேகலா அவனுக்குத் தேவையான விவரங்களைச் ன்னாள். தன்னால் முடிந்த உதவியைச் செய்வதாய் க்களித்தாள்.

மாலை வந்தது. பிரகாஷ் தெரிந்த நெருங்கிய குடும்பத் ரை தேநீருக்காகக் கூப்பிட்டிருந்தான். எல்லோரும் ந்தார்கள். அவர்கள் மேகலாவை என்னென்னவோ ள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மேகலாவுக்குத் தலை சுற்றுவது போலிருந்தது. கண்கள் றிக் கொண்டிருந்தன. காபி குடிக்கும்போது வாய்க்கு யே தெரியவில்லை. அவ்விடத்தில் உட்கார்ந்திருக்கவே டமாய் இருந்தது.

'என்னவாச்சு?' மேகலா துள்ளி விழத் தெரியவே பிரகா ன் மனைவி பிடித்துக் கொண்டே பதற்றத்துடன் ட்டாள்.

'தலைசுற்றுகிறது'— எழுந்திருக்கப் போன மேகலா பாவில் சரிந்துவிழுந்தாள். அதற்குப்பிறகு என்னவாயிற் ன்று மேகலாவுக்குத் தெரியாது. கண்களுக்கு முன்னால் ள் திரைப் படர்ந்தது. மேகலாவுக்குத் திரும்பவும் நினைவு ந்தபோது மிகச் சின்னதாய் எங்கிருந்தோ பேச்சுக் குரல்கள் ட்டுக் கொண்டிருந்தன. மேகலா மெதுவாய்க் கண்களைத் ந்தாள். ஒரு வினாடி தான் எங்கே இருந்தோம் என்று யவில்லை.

'அம்மீ!' என்றாள் மெல்லிய குரலில்.

'விழிப்பு வந்துடுத்தா?' யாரோ கேட்டார்கள்.

மேகலாவின் கண்கள் பாரமாய்ப் பிரிந்துகொண்டன. ரே ஒரு ஆள் பேன்ட் ஜேபியில் கையைவிட்டுக் ாண்டே நின்றபடி அவளையே உற்றுப் பார்த்துக்கொண் ந்தான்.

'எப்படி இருக்கு?' மெதுவாய்க் கேட்டான் அவன். அந்த அறிமுகமில்லாத ஆளைப் பார்த்துவிட்டு மேகலா எழுந்திருக்கப் போனாள். ஆனால் தலை பாரமாய் இருந்ததால்,

'ஆ! ஐயோ' என்று முனகினாள் வலியால். அவன் மேகலாவின் தோளில் கையை வைத்துப் படுக்க வைத்தான்.

மேகலா கண்களை மூடிக்கொண்டாள். தலை வெடித்து விடும்போல பாரமாய் இருந்தது. கொஞ்ச நேரத்தில் குறைந்தது. திரும்பவும் கண்களைத் திறந்தாள். எதிரே இருந்த ஆள் இன்னும் அப்படியே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

மேகலாவுக்கு மெதுவாய் நினைவு நன்றாய் வந்து விட்டது. பிரகாஷ் வீட்டிற்கு வந்ததையும் மாலையில் விருந்தினர்கள் எல்லோருடனும் காபிக் குடித்துக் கொண்டே பேசிக்கொண்டிருந்தபோது நினைவு தப்பி விழுந்து விட்டதும் நினைவிற்கு வந்தது.

மேகலாவுக்கு விழிப்பு நன்றாய் வந்து விடவே எழுந்திருக்கப் போனாள்.

'வேண்டாம் எழுந்திருக்காதே' என்றான் அவன். அவன் அதற்குள் மேகலாவின் கையை எடுத்து நாடியைப் பரிசோதித்துக் கொண்டிருந்தான்.

அவனை எங்கேயோ பார்த்தாற்போலிருந்தது. மேகலா கொஞ்சநேரம் மேற்கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு திரும்பவும் அவனைப் பார்த்தாள். அவன் மேகலாவையே பார்த்துக் கொண்டிருந்தான். மேகலா தடுமாற்றத்துடன் பதறிப்போய் எழுந்தாள்.

'நீங்கள்...நீங்கள்' குழறினாள்.

'என்னை உங்களுக்கு அடையாளம் தெரிந்துவிட்டதா?' என்றான் அவன் தாழ்ந்த குரலில்.



அதற்குள் பிரகாஷும் அவன் மனைவியும் அங்கே வந்தார்கள்.

'விழிப்பு வந்துடுத்தா? வெரிகுட்! அம்மாடி! பயந்து செத்துட்டோம்னால் நம்புங்க. நீங்கள் திடீரென்று தலை சுற்றி விழுந்துட்டீங்க. நினைவு இல்லை. என் கால்கள் நடுங்கத் தொடங்கிவிட்டன. ஏற்கனவே எனக்கு பி. பி. உண்டு. உடனே ஓடிப்போய் இவனை இழுத்துக் கொண்டு வந்துட்டேன்.' அவன் கிருஷ்ணராஜைக் காட்டி விட்டு,

'எங்க டாக்டர் ஃபிரெண்ட் இவன். பெயர் கிருஷ்ணராஜ்!' என்று பரிச்சயம் பண்ணினான்.

மேகலா வணங்கவும் மறந்துப் போய் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'ராஜ்! மிஸ் மேகலா! தமிழர்களின் அழகு நடிகை' என்றான் பிரகாஷ்.

'இவளை எனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்'— என்றான் கிருஷ்ணராஜ்.

அதற்குள் தொலைவிலிருந்து போன் மணியடித்தது. பிரகாஷ் போனான். அவன் மனைவிகூட மகன் கூப்பிட்டதால் எழுந்து போய் விட்டாள்.

அறையில் கட்டிலில் உட்கார்ந்துக் கொண்டிருந்த மேகலாவும், கட்டிலுக்கருகில் நின்று கொண்டிருந்த கிருஷ்ணராஜும் எஞ்சி நின்றார்கள் தனியாய்.

கிருஷ்ணராஜ் மெதுவாய்ச் சொன்னான் — 'எனக்கு மேகா என்று ஒரு பெண்ணைத் தெரியும். அந்த மேகாதான் இந்தப் பெண் என்றால் என்னால் நம்பவே முடியவில்லை' சந்தேகத்துடன் பார்த்தான்.

மேகலா சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து கையை நீட்டி ஆவேசமாய், 'நான் மேகாதான்! அந்த மேகாவே தான்' என்றாள் இரைந்து.

கிருஷ்ணராஜ் சரேலென்று கலக்கத்துடன் அவள் கையைப் பிடித்துக் கொண்டான். மேகலாவின் உடம்பு ஜுர தாபத்தால் கொதித்துக் கொண்டிருந்தது. மேகலா இருமடங்கு ஆவேசத்துடன் அவனோடு சண்டைப் போடுவது போல சொல்லத் தொடங்கினாள்.

'மேகா உயிரோடுதான் இருக்கிறாள் என்று உங்களுக்கு ஞாபகம் இருக்கா? இந்த மேகலாவுக்கு ஒரு முறை உயிரை மீட்டுத் தந்தோம் என்றாவது ஞாபகம் இருக்கா? மை காட்! இது...இது நிஜந்தானா? நிஜமாய்த் தான் நான் உங்களைப் பார்க்கிறேனா? அல்லது ஜுரத்தால் வந்தக் கனவா இது?'— பாதி ஜுரதாபத்தாலும் பாதி உணர்ச்சி வசத்தாலும் வெளி வந்தன வார்த்தைகள். கிருஷ்ணராஜ் மேகலாவை சமா தானப்படுத்துவது போலத் தலை மீது கையை வைத்தான்.

'மேகலா சரேன்று முன்னுக்கு வந்து அவன் இடுப்பைச் சுற்றிலும் கைகளைக் கோத்துக் கொண்டு வயிற்றில் முகத் தைப் புதைத்துக் கொண்டாள். 'என்னை விட்டு விட்டுப் போயிடாதீங்க, ப்ளீஸ்! ப்ளீஸ்' என்றாள்.

அவன் எதுவும் பேசவில்லை. அவன் தொண்டையை ஏதோ அடைத்தாற்போல இருந்தது. 'உன்னை...உன்னை இப்படிப் பார்த்தது எனக்கு ரொம்பச் சந்தோஷமாய் இருக்கு. இவ்வளவு ஆனந்தமாய் நான் என்றுமே உணர்ந்த தில்லை' என்றான் பரபரப்புடன் அவன்.

கொஞ்ச நேரத்தில் அவனுடைய இதமான வார்த்தை களால் சாந்தமடைந்தவளாய் மேகலா தலையணையில் சாய்ந்து படுத்துக்கொண்டாள். மேகலாவின் கைகள் மட்டும்



அவன் கையை விடமால் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டி ருந்தன. பிரகாஷ் அறைக்குள் வந்தான். கட்டிலுக்குப் பக் கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த கிருஷ்ணராஜ்மேகலாவின் கையை விடுவித்துக் கொண்டு எழுந்திருக்கப் போனான். ஆனால் மேகலா விடவில்லை கிருஷ்ணராஜ் சந்தோஷத் துடன் பிரகாஷிடம் சொன்னான்:

'மேகலா யாரோ இல்லை. எனக்கு நன்றாய்த் தெரியும்'

'அப்படியா? வெரிகுட்! அப்படீன்னால் உனக்கு ஃபீசு கொடுக்க வேண்டிய வேலை எனக்குத் தப்பிச்சுதுன்னு சொல்லு' என்றான் சிரித்துக்கொண்டே.

## 39

தொடர்ந்து இரண்டு நாட்கள் மேகலா வாஷிங்டனிலேயே இருந்தாள். கிருஷ்ணராஜ் மறுநாள் வந்து மேகலாவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சொன்னான். மேகலாவை விட்டு நீங் கிய ஜுரம் நாகராஜனைப் பற்றிக் கொண்டதால் அவன் படுத்து விட்டான். கிருஷ்ணராஜ் அவனுக்கு மருந்து கொடுத்து நன்றாய் ஓய்வெடுத்துக் கொள்ளும்படி சொன்னன்.

கிருஷ்ணராஜ் இருந்து வந்தது. சின்ன அபார்ட்மென்ட் டில் ஜாம்பியாவிலிருந்து வந்திருந்த ஒரு நீக்ரோ இளை ஞனும் அவனோடு அந்த அறையில் தங்கியிருந்தான். அவன் பெயர் சாம்சன். அவன் டிபார்ட்மென்டல் ஸ்டோரில் வேலை பண்ணி வந்தான்.

மேகலாவும் கிருஷ்ணராஜும் வந்தபோது அவன் பரபரப்போடு வெளியே வேலையாய்ப் போய்க் கொண்டி

ருந்தான். இவனைப் பார்த்து கையாட்டி விட்டுப் போய் விட்டான்.

சோபாவில் உட்கார்ந்த மேகலா அந்த அறையைக் கவனித்தாள். அவள் கண்கள் சட்டென்று ஓரிடத்தில் நின்றுவிட்டன. அங்கே மேஜைக்கு மேல் கிருஷ்ணராஜ் பானுவின் திருமணப் போட்டோ அதற்குப் பக்கத்தில் கண்ணாடிப் பெட்டிக்குள் முயல் பொம்மை கழுத்திலிருந்த அட்டையில் 'என்னைப் போன்றவங்களுக்குத் தீங்கு இழைக்காதீர்கள்! மேகலா!' — என்ற எழுத்துக்கள் இருந்தன. மேகலா சிலையாய் நின்றுவிட்டாள். அவள் கிருஷ்ணராஜிற்கு அந்த பொம்மையைக் கொடுத்த சம்பவம் நினைவிற்கு வந்தது. அவள் இமைகள் கண்ணீரால் பாரமாகிவிட்டன.

கிருஷ்ணராஜ் கோப்பையில் காபி கொண்டு வந்தான்.

எனக்கு இங்கே வந்த பிறகு நன்றாய் சமைக்க வந்து விட்டது. சாம்சன் கூட அடிக்கடி சொல்லுவான், நான் டாக்டராய் இருப்பதைவிட எந்தப் பணக்கார வீட்டிலாவது சமையல்காரனாய் இருந்தால் வாழ்க்கை கவலையில்லாமல் கழிந்துப் போகும்—என்பான்' என்று சிரித்துக்கொண்டே காபியை நீட்டிய அவன் அப்படியே நின்று விட்டான்.

மேகலாவின் கண்களில் கண்ணீரைப் பார்த்துவிட்டு, 'என்ன'? என்றான் தன்னை யறியாமலேயே.

மேகலா முயல் பொம்மையைச் சுட்டிக் காட்டிவிட்டு,

'இந்த பொம்மையைப் பார்த்து ஷாக் அடித்து விட்டது. எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. எனக்கு அந்த வாழ்க்கையையெல்லாம் நினைத்துப் பார்த்தால் அது நான்தானா என்றே ஆச்சரியமாயிருக்கு. இந்த எட்டு ஆண்டுகளில் நான் வாழ்க்கையில் பல ஆயிரக்கணக்கான மைல் தூரம் நடந்து வந்து விட்டாற்போல இருக்கு '



கிருஷ்ணராஜ் அவளையும் முயல் பொம்மையையும் மாறி மாறிப் பார்த்தான்.

'நானும் நீ எனக்குத் தெரிஞ்ச மேகலா என்றால்நம்பமுடியாமல் போனேன். அந்த முயல் பொம்மை நான் எங்கே போனாலும் என்னோடு வந்துவிடும். இதுவரை தற்கொலைப் பண்ணிக்க முயன்று காப்பாற்றப்பட்ட சுமார் பத்து பேருக்காவது இதைக்காட்டி உன்னைப்பற்றிச் சொல்லியிருப்பேன்' என்றான்.

'என்னவென்று சொல்லுவீங்க?' ஆர்வத்துடன் கேட்டாள்.

'நீ கல்யாணம் பண்ணிக்கிட்டு குழந்தைக் குட்டியுடன் இருப்பாய்னு நினைத்தேன். ஆனால் என் ஊகம் இவ்வளவு தலைகீழாய் ஆகும்னு நினைத்திருக்கவில்லை.' என்றான் தோளைக் குலுக்கிக் கொண்டே.

'நீங்கள் இந்தியாவுக்கு ஒருதவைகூட வரவேயில்லையா?' மேகலா கேட்டாள்—

'ஏன் வரலை? இந்த எட்டாண்டுகளில் இரண்டு தடவை வந்தேன். வந்த போது, ஏதோ ரகளை, அவசரம் என்று அதற்கே சரியாகிவிட்டது.'

கிருஷ்ணராஜ் மேகலாவை பால்கனிக்கு வரச்சொல்லி அழைத்தான். அது நாலாவது மாடியாயிருந்ததால் பால்கனிக்குப் போய் அங்கிருந்து கீழே பார்த்தால் வீதியில் போகும் கார்களும் மனிதர்களும் தென்பட்டார்கள். கிருஷ்ணராஜ் அக்கம்பக்கத்து மனிதர்களைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். மேகலா காபியைக் குடித்துக் கொண்டே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் கொஞ்சம் சதைப்பிடித்துப் பருமானாய் இருந்தான். அவன்

இவ்வளவு உயரமானவன் என்பதை மேகலா மறந்து விட்டிருந்தாள். கன்னத்திலிருந்த மச்சத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'உனக்கு ஜுரம் இப்பத்தான் தணிந்திருக்கு. அதனால் வெளியே ஓட்டலில் சாப்பிடுவது நல்லதில்லை. வீட்டில் நானே சமைத்துப் போடுகிறேன்' என்றான்.

மேகலா தலையாட்டினாள்.

அவன் சமையலறைக்குப் போனான். சின்ன வீடாய் இருந்தாலும் மிக வசதியாய் இருந்தது. சமையலறையில் பாத்திரங்களைக் கழுவுவதற்கு மின்சார வசதிகள் இருந்தன.

கிருஷ்ணராஜ் ஃப்பிரிட்ஜிற்குள்ளிருந்து பட்டாணிகளை வெளியே எடுத்து உரித்தான். மேகலா தானும் வந்து உதவி செய்தாள். அவன் கேரட்டுகளைத் துண்டாக்கினான். சாதத்தை வடித்தான். டொமேட்டோ சூப் பண்ணினான். வெஜிடெபிள்களைப் போட்டு வேகவைத்து கறி பண்ணினான். அலமாரியிலிருந்து எலுமிச்சங்காய் ஊருகாய் பாட்டிலை எடுத்தான்.

மேகலா பிளேட்டுகளைக் கழுவி மேஜையை ஒழித்து எடுத்து வைத்ததைப் பார்த்து தடுத்தான்.

'ஏன் தடுக்கிறீங்க?' என்றாள்.

'நீங்கள் எனக்கு இப்பொழுது விருந்தாளி தெய்வம்! நீங்கள் வேலை செய்தால் பாவம் வந்துவிடும்.'

மேகலா வந்ததிலிருந்தே பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவன் மேகலாவைக் கொஞ்சநேரம் 'நீ' என்றும் கொஞ்ச நேரம் 'நீங்கள்' என்றும் விளித்துக் கொண்டிருக்கிறான்.

மேகலா அவன் அவஸ்தையைப் பார்த்துச் சொன்னாள்.



'இதப்பாருங்க! நான் விருந்தாளி தெய்வமோ, பிசாசோ இல்லை! இந்த டாக்டரின் பழைய நோயாளி நான் நீங்கள் என்னை 'நீ' என்று கூப்பிடவேண்டும். 'நீங்கள்' என்று கௌரவம் பண்ணினால் உங்களுக்குப் பாவம் வரும். உங்களுக்கு உதவி பண்றது எனக்குச் சந்தோஷமாய் இருக்கு. வேண்டாம் என்று மரியாதைப் பண்ணி என் சந்தோஷத்தைக் கெடுத்துடாதீங்க.'

மேகலா சொன்ன விதத்தைப் பார்த்து அவன் பக்கென்றுச் சிரித்துவிட்டான்.

'ஆல்ரைட் மேகா! நான் உன்னை நீ என்றே சொல்றேன். ஆனால் ஒரு நிபந்தனை.'

'அதென்ன?'

'நீயும் என்னை டாக்டர் என்று சொல்லக்கூடாது. ராஜ் என்றுக் கூப்பிடு. உன்னை இப்படிப் பார்த்துக் கொண்டிருந்தால் உண்மையைச் சொல்லட்டுமா, சிறுவயது தோழியைப் பார்க்கிறாப் போல இருக்கு.'

'தாங்கயூ' என்றாள் மேகலா.

இருவரும் சாப்பிட உட்கார்ந்து கொண்டார்கள்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் கிருஷ்ணராஜ் சொன்னான்.

பானு ரெண்டு வருஷமாய் இந்தியாவிலேயே தான் இருக்கிறாள். நானும் ஒரு மாதத்தில் அங்கே வந்துவிடுவேன். இங்கே கன்ட்ராக்ட் முடிந்துவிட்டது. புதிய கன்ட்ராக்டில் கையொப்பமிடப்போவதில்லை. நான் என்றாவது இந்தியாவுக்குத் திரும்பி வந்துவிடவேண்டியவன் தான். அங்கே ஒரு நவீன வசதிகளோடு கூடிய க்ளினிக் ஒன்றை திறப்பதற்குத் தேவையான பணத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்காகவே

இவ்வளவு நாளாய் இங்கே வேலை செய்தேன். அங்கே இருந்தவரை உத்யோகம் கிடைப்பதே பெரும் பாடாயிருந்தது! க்ளினிக் திறந்தபோதிலும் பிராக்டீசு சொற்பமாகவே இருந்தது.

ஒரு நாள் ஒரு நோயாளி வந்தான். சமயத்தில் அவனுக்கு ஆக்ஸிஜன் கொடுக்க முடியவில்லை. அந்த நோயாளி இறந்து விட்டான். அன்றிரவு என் உத்தேசம் மாறிவிட்டது. நான் க்ளினிக் வைத்தால் நவீன வசதிகளுடன் நோயாளிகளுக்கு சௌகரியமாய் இருக்க வேண்டும் என்று தோன்றிற்று. அதே மாதத்தில் நான் அமெரிக்காவிற்கு வந்து விட்டேன். நான் வந்த பிறகு ஒருநாளும் வருத்தப்பட்டதில்லை. என் நாட்டிற்குத் திருப்பிப் போய் விடவேண்டும் என்ற உத்தேசத்தை என்றுமே மறந்துவிடவில்லை. பானுவுக்கு என் தோரணை பிடிக்காது.'

மேகலா அவன் சொன்னதைக் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள்.

'அம்மா எப்படி இருக்காங்க?' பாக்கியலட்சுமியைப் பற்றி விசாரித்தாள் மேகலா.

'சௌக்கியந்தான். முதலில் நான் இங்கே வந்து வேலையில் சேர்ந்ததுமே அம்மாவையும் பானுவையும் கூப்பிட்டேன். அம்மா ஒரு வருடம் என்னோடு வந்து இருந்தாங்க. ஆனால் அலர்ஜி வந்துவிட்டதால் இந்தச் சூழ்நிலையோடு பொருந்திவராமல் திருப்பிப் போயிட்டாங்க. பானு அம்மாவை நன்றாய்தான் பார்த்துக் கொண்டாள். நான் முதலில் அம்மாவை இந்தவயதில் தனியாய் விடுவதற்கு திகிலடைந்து போனேன். ஆனால் அம்மா கவலைப்படவேண்டாம் என்றும், தான் பானுவிடம் சௌக்கியமாகவே இருப்பதாகவும் எழுதினாள். ஒரு முறை போனேன். அம்மா நன்றாகவே இருந்தாங்க. பிறகு நான் இங்கே வந்துவிட்டேன். என்னோடு பானுவும் வந்தாள்.'



அவன் ஒரு வினாடி நிறுத்திவிட்டுச் சொன்னான்.

'எங்கள் துரதிர்ஷ்டம். எங்களுக்குக் குழந்தைகள் இல்லை. பானுவுக்கு அந்த அதிருப்தி நிறைய உண்டு. சில நாட்கள் இங்கேயும் சில நாட்கள் இந்தியாவில் பெற்றோர்கள் வீட்டிலுமாய் தனக்குப் பிடித்தாற்போல இருப்பாள். வருவதாக எழுதியிருந்தாள். ஆனால் தந்தைக்கு உடம்பு சரியில்லாததால் வரமுடியவில்லை. அவருக்கு பானு ஒரே மகளாதலால் அவளை விட்டு அவரால் இருக்க முடியாது.'

இருவரும் சாப்பிட்டார்கள். கிருஷ்ணராஜ் மார்க்கெட்டில் புதிதாய் ரிலீசான ரிகார்டுகளைப் போட்டுக் கேட்கச் செய்தான். மேகலாவை பால்கனியில் நிற்க வைத்து போட்டோக்களை எடுத்தான்.

மாலை வந்தது. கிருஷ்ணராஜ் காரை எடுத்துக் கொண்டு வந்தான். மேகலா அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். கிருஷ்ணராஜ் ஓட்டிக் கொண்டிருந்தான். ஒளிவிளக்குகளுக்கிடையே இரவு வேளையில் வாஷிங்டன் மிக அழகாய் இருந்தது கிருஷ்ணராஜ் தெருக்களின் பெயர்களையும் ஓட்டல்களையும் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். மேகலா கேட்டுக் கொண்டிருந்தாள்; அவள் பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

'அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துக் கொண்டு, அவன் பேசியதைக் கேட்டுக் கொண்டே வந்தபொழுது மேகலாவுக்குத் தன்னுடையது என்று ஒரு உலகம் ஏற்பட்டு விட்டாற்போலிருந்தது. இது கனவா, நினைவா என்று தோன்றிற்று. கனவாகவே இருந்தால் இந்த நிமிஷத்தில் இந்தச் சந்தோஷத்தை தன் அணு அணுவிலும் ஜீரணித்துக் கொண்டு கண்களை மூடி உட்கார்ந்திருக்க வேண்டும் போலிருந்தது. உண்மையாயிருந்தால் இந்த இனிமையான நினைவிலேயே எஞ்சிய வாழ்க்கையையெல்லாம் வாழ்ந்து விடலாம் என்ற தைரியம் ஏற்பட்டது.

வாஷிங்டனில் இருந்த இரண்டு நாட்களும் இருவரும் சேர்ந்தே இருந்தார்கள். சேர்ந்து சாப்பிட்டார்கள். சேர்ந்து சுற்றினார்கள். ஒருத்தரைப் பார்த்தால் இன்னொருத்தருக்குச் சந்தோஷமாய் இருந்தது.

நாகராஜனுக்கு ஜுரம் தணிந்தது. அவனும் கிருஷ்ண ராஜின் அபார்ட்மென்ட்டிற்கு வந்தான். விருந்தினர்கள் இருந்ததால் சாம்சன் வீட்டிற்கு வரவில்லை.

இரவு வெகுநேரம் வரை பேசிக்கொண்டேயிருப்பார்கள்.

'மேகா! இனி படுத்துக்கொள். உனக்கு உடம்பு கெட்டு விடும்' என்பான் கிருஷ்ணராஜ் சிரித்துக்கொண்டே.

'உடம்புக்கு வந்தால் எனக்கென்ன பயம்? டாக்டர் எனக்குப் பக்கத்திலேயே இருக்குப்போது!' என்பாள்.

'என்னால் இன்னும் நம்பவே முடியவில்லை, நீ பழைய மேகாதானா என்று! நீ வாழ்க்கையில் இவ்வளவு முன்னுக்கு வந்தும், பேரும் புகழும் அடைந்தும், இவ்வளவு பணக்காரி யாய் இருந்தும் கொஞ்சமும் மாறாதது எனக்கு விநோதமாக வும் சந்தோஷமாகவும் பெருமையாகவும் இருக்கிறது.'

எனக்கும் உங்களைப் பார்த்தால் அப்படித்தான் இருக்கு.'

'நானா? நான் என்னத்தைச் சாதித்துவிட்டேன்?'

'நீங்கள் தயவான ஒரு டாக்டர்! எனக்குத் தெரிந்த கிருஷ்ணராஜாகவே இருக்கீங்க. எல்லா டாக்டர்களையும் போல பணப்பைத்தியம் என்ற கெட்ட பழக்கம் உங்களுக்கு இன்னும் வரவில்லை.'

'மேகா! நான் இங்கே சம்பாதித்தேன். அதை இந்தியா வில் சேர்த்து வைத்திருக்கிறேன்.'



'இருக்கலாம். ஆனால் அதொன்றும் சுயநலத்திற்காக இல்லை. சாம்சன் காலையில் சொன்னார் நீங்கள் உங்கள் செலவில் எவ்வளவு சிக்கனமாய் இருக்கீங்கன்னு! யாருக்காக? நோயாளிகளுக்காகத்தானே? நீங்கள் வேணும் என்றால் அதைக்கொண்டு சுகப்பட முடியாதா?'

'ஓ! மேகா! இனி நீ படுத்துக்கொள்.' தலையணையை சரியாய் வைத்தான் அவன்.

மேகலா கட்டிலில் வந்து படுத்தாள். அவன் போர்வை யைப் போர்த்தி விட்டான். 'எப்படி இருக்கு? உனக்கு ஜுரம் வந்து தணிந்திருக்கும் விஷயத்தையே மறந்து போய் நன் றாய்ச் சுற்றிவிட்டோம். ரொம்ப களைப்பாய் இருக்கா? ஒரு கப் ஹார்லிக்ஸ் தரட்டுமா'? என்றான்.

'வேண்டாம்' என்றாள்.'

'தூக்கம் வரலையா?'

'ஊஹூம்!'

'ஏன்?' நாற்காலியை இழுத்துப்போட்டுக் கொண்டே அதில் உட்கார்ந்தான்.

'தூங்கிட்டால் இந்த அருமையான கனவு சிதறிப்போய் விடுமோன்னு பயம்.'

'பைத்தியம்!' அவன் சிரித்தான்! நீ மாறவேயில்லை'.

அவன் நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்தாற்போல உட்கார்ந்துகொண்டு கண்களை மூடிக்கொண்டான். இரு வருக்குமிடையே திடீரென்று கம்பீரமான நிசப்தம் ஏற் பட்டது.

வெகு நேரங் கழித்து தூக்கம் கலையவே, திடீரென்று கை பாரமாய்த் தோன்றியதால், கண்களை மூடிக் கொண்டி ருந்த கிருஷ்ணராஜ் திடுக்கிட்டுக்கண் விழித்துப் பார்த்தான்.

எதிரே மேகலா தூங்கிக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் கை மட்டும் அவன் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டிருந்தது.

அவன் மெதுவாய்க் கைகளை விடுவித்துக் கொண்டு கட்டிலில் சரியாய் வைத்தான்.

அவனுக்கு அந்தச் சமயத்தில் தூங்கிக் கொண்டிருந்த மேகலாவைப் பார்த்தால் அப்பாவித்தனமாய் தென்பட்டது. இளமையின் பொலிவோடு இருந்த அம் முகத்தைப்பார்க்கப் பார்க்க அவன் மனம் பரவசமடைந்தது. இவளுடையது தான் எவ்வளவு அற்புதமான வாழ்க்கை என்று தோன்றிற்று.

மேகலாவுடன் சேர்ந்து கிருஷ்ணராஜ் நியூயார்க்கிற்கு வந்தான். மானஸாவுக்கும் சுபாஷுக்கும் கிருஷ்ணராஜைப் பரிச்சியம் பண்ணி வைத்தாள். மானஸா கிருஷ்ணராஜுடன் முற்றுபுள்ளி வைத்தாற்போலப் பேசினாள். கிருஷ்ணராஜிற்குத் தெரிந்த பழைய வாழ்க்கையை நினைவு படுத்திக் கொள்ள மானஸாவுக்குப் பிடிக்கவில்லை. அதையெல்லாம் கேட்டால் சுபாஷுக்கு முன்னால் சிறுமையாகி விடலாம் என்ற பயம். சுபாஷுக்கு அதெல்லாம் ஒன்றுமே தெரியாது. அவர்கள் ஆதியிலிருந்தே பணக்காரர்கள்தான் என்ற உத்தேசம் அவனுக்கு.

மேகலாவை வழி அனுப்பஅரசாங்க அதிகாரிகள் வந்தார்கள். மேகலா அவர்களுடன் மிடுக்காய், கம்பீரமாய் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்து கிருஷ்ணராஜ் பரவசமடைந்து போனான்.

விமான நிலையத்திற்கு வந்தார்கள். மேகலா பிளேனுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கையில் திடீரென்று கிருஷ்ணராஜ் பக்கமாய்த் திரும்பிக் கேட்டாள்.



'நீங்கள் கடிதம் போடுவீங்க இல்லையா?'

அவன் போடுவேன் என்பதுபோலத் தலையாட்டினான்.

'இந்தியாவுக்கு வந்தால் எனக்குத் தெரியப்படுத்தணும். நான் பம்பாய், டில்லி எந்த இடமாயிருந்தாலும் சரி, நீங்கள் வந்து இறங்கப் போகும இடததிற்கு வந்து உங்களை வரவேற்கத தயாராய் இருப்பேன்'.

'அசட்டு மேகா' என்றான் கிருஷ்ணராஜ்.

'நான் போனதுமே அம்மாவைப் போய்ப் பார்க்கிறேன். லெட்டர் போடுகிறேன்.' வாக்குறுதி தந்தாள்.

'சரி!' அவன்கூடத் திகிலோடு சொன்னான்: 'மேகா! இந்த ரெண்டு நாளும் நீ என்னிடம் சூறாவளியாய் வந்து விட்டுத் திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறாய். என்னால் இன்னமும் நம்பவே முடியவில்லை' என்றான்.

'எனக்குக் கூட அப்படித்தான் இருக்கு.'

'நேரமாகிறது, வா அக்கா' என்றாள் மானஸா.

மேகலா கிருஷ்ணராஜிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு முன் நோக்கி நடந்தவள் திரும்பிப் பார்த்தாள். கிருஷ்ணராஜ் சிரித்துக்கொண்டே கையாட்டினான்.

அவனைப் பார்த்தால் மேகலாவுக்குப் பாதி உயிரை அவனிடத்திலேயே விட்டு விட்டு வந்தாற்போல இருந்தது.

மேகலா விமானத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். மானஸா ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால் மேகலாவின் செவிகளில் அது ஏறவில்லை. பின்னுக்குச் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள். பிளேன் ரன்வேயின் மேல் ஓடி, காற்றில் எம்பிக் கொண்டிருந்தது. மேகலாவிற்கு உடம்பு மிக லேசாகிவிட்டாற்போல் பாவனை ஏற்பட்டது.

மேகலாவின் கண்களில் மெல்ல மெல்ல ஈரம் ஊறிற்று. இந்த அமெரிக்கப் பயணம் ஒரு அற்புதமானால், அமெரிக்காவில் கிருஷ்ணராஜைச் சந்தித்ததும், அவனோடு கழித்ததும் இன்னொரு பெரிய அற்புதம். மேகலாவின் மனமெல்லாம் திருப்தியாலும் சந்தோஷத்தாலும் நிரம்பி வழிந்தது. தாங்க முடியாத தனிமையாகவும், சூனியமாகவும் இருந்தது. இரட்டை உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப்பட்டாள் அவள்.

## 40

மேகலா இந்தியாவுக்கு வந்ததுமே கிருஷ்ணராஜுக்குக் கடிதம் எழுதினாள். கடிதத்தில் சங்கோஜத்தை விட்டுவிட்டு 'டாக்டர் அவர்களுக்கு' என்று எழுதாமல், 'டியர் ராஜ்' என்று எழுதினாள்.

'ஏறக்குறைய எட்டு வருஷங்களுக்குப் பிறகு நாம் இப்படிச் சந்தித்துக் கொண்டது என் வாழ்க்கையில் மறக்க முடியாத அபூர்வ நிகழ்ச்சி! எனக்கு இன்னும் கண்களை மூடிக் கொண்டால் அங்கே உங்களுக்குப் பக்கத்தில் இருப்பது போல் மகிழ்ந்து உணர்கின்றேன். என் மனம் அங்கிருந்து பிரிந்து வரமாட்டேன் என்கிறது. நான் வந்ததுமே ஷூட்டிங்கில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது ஆறு வாரங்கள் இல்லாமல் வேலைத் தொந்தரவு அதிகமாயிருக்கிறது. கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டு ஐதராபாத்திற்குப் போய் அம்மாவைப் பார்க்கிறேன். உடனே கடிதம் எழுதுவீர்கள் அல்லவா?— மேகா'— என்று எழுதினாள்.

கிருஷ்ணராஜ் உடனே பதில் போட்டான். 'மேகா! நீ எழுதியகடிதம் கிடைத்தது. நான் இங்கிருந்து வர இன்னும் நாலைந்து மாதமாகலாம். எனக்கும் கூட இப்பொழுது நீ வந்ததெல்லாம் கனவுதானோ என்று தோன்றுகிறது.



என்னிடமுள்ள போட்டோ நிஜம் என்று தெரியப்படுத்துகின்றன. நீ பால்கனியில் நிற்கிற போட்டோ மிக அழகாய் விழுந்திருக்கிறது. இத்துடன் அனுப்பியிருக்கிறேன், பார்' என்று எழுதினான்.

மேகலா அந்த போட்டோக்களைப் பார்த்தாள். உடனே பதில் எழுதினாள். இருவருக்குமிடையே கடிதம் போக்குவரத்து நடந்து கொண்டிருந்தது. நாகராஜனிடம் மேகலா சொல்லிவிட்டாள் கிருஷ்ணராஜிடமிருந்து வரும் கடிதங்களைத் திறந்துப்பார்க்காமல் கொண்டுவந்து கொடுக்கச் சொல்லி. இதைச் சொன்னபொழுது சுபாஷ் அவ்விடத்திலேயே தான் இருந்தான். அவன் அடுத்த தடவை கிருஷ்ணராஜிடமிருந்து கடிதம் வந்தபோது எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அதில் தனிப்பட்ட விஷயங்களோடு, சிருங்கார விஷயங்களோ எதுவும் இல்லை. சுபாஷ் கடிதத்தைத் திரும்பவும் ஒட்டிப் பார்த்த பொழுது முடியவில்லை.

கிழித்துப் படித்தாற்போல் தெரிந்து விடுமே என்ற பயத்தால் கிழித்துத் தூளாக்கி விட்டெறிந்து விட்டான். மேகலா ஓரிருமுறை— 'எனக்கொண்ணும் கடிதம் வரவில்லையா?' என்று கேட்டாள். மேகலா கிருஷ்ணராஜுக்கு கடிதம் ஏன் எழுதுவதில்லை?' என்று கேபிள் தந்தாள். அதற்கும் பதில் வரவில்லை கிருஷ்ணராஜ் வீட்டிற்குப் போன் இல்லை. மேகலாவுக்கு வேலை தொல்லை அதிகமாயிருந்தது. தினந்தோறும் இரண்டு ஷிப்டுகளில் வேலை செய்து கொண்டிருந்தாள். ஒரு நிமிஷம்கூட ஓய்வில்லை.

கிருஷ்ணராஜிடமிருந்து முற்றிலும் சங்கதியே இல்லாமல் போய்விட்டது. அவனுக்கு என்னவாயிற்றென்று தெரியவில்லை. பிரகாஷிற்குப் போன் பண்ணினாள். அவன் ஒரு மாதத்திற்கு முன்னால் இந்தியாவுக்குப் போய் விட்டான் என்று தெரிவித்தான்.

மேகலா அதிர்ந்துவிட்டாள். கிருஷ்ணராஜ் இந்தியாவுக்கு வந்து ஒரு மாதமாகிறதா? அவனுக்குத் தெரியவே தெரியாதே! இந்தியாவுக்கு வந்த அவன் அவளுக்கு அதைத் தெரியப்படுத்திக் கடிதம் எழுதாதது விநோதமாய் இருந்தது. ஐதராபாத்திற்கு நாகராஜனை அனுப்புவோமா அல்லது தானே போவோமா ஒன்று யோசனையில் ஆழ்ந்தாள். நாகராஜன் இல்லை. தங்கை மகளுக்குத் திருமணம் என்று ஒரு வாரம் லீவு போட்டு விட்டுப் போயிருந்தான்.

மேகலாவுக்கு நிதானமாய் யோசித்துப் பார்க்க நேரமில்லை. ஷூட்டிங், ஷூட்டிங்! நாளன்றைக்குப் புறப்பட்டு பெங்களூருக்கு அவுட்டோருக்குப் போக வேண்டும். அங்கே பத்து நாட்கள் ஷெட்யூல் இருக்கும்.

மேகலா அன்றைக்குத் தாமதமாய் வீட்டிற்கு வந்தாள். காசி மேகலாவின் கூந்தலை வாரிக்கொண்டே, 'அம்மா! உங்களைத் தேடிக் கொண்டு ஒருத்தர் வந்திருக்கிறார். ரொம்ப நேரமாச்சு. விஸிட்டர்ஸ் ரூமில் உட்கார்ந்திருக்கிறார்' என்றாள்.

'இப்ப என்னால் யாரையும் சந்திக்கமுடியாது. எனக்கு உடம்பு சரியாயில்லைன்னு சொல்லு' என்றாள் அலுப்படைந்து.

'அதை முன்னாடியே சொல்லிட்டேம்மா. நீங்க விஸிட்டருங்க யாரையும் விடவேண்டாம்னீங்க இல்லையா? அவர் போகவில்லை ஒரு நிமிஷம் பேசிட்டுப் போகிறேன் கிறார்.'

'எனக்கு உடம்புச் சரியாயில்லைன்னு சொல்லுங்க.'

எரிந்து விழுந்தாள் மேகலா.

விஸிட்டர்கள்! விஸிட்டர்கள்! மேகலாவுக்கு அலுத்துப் போய்விட்டது! அவர்கள் எவ்வளவோ தூரத்திலிருந்து



வருவார்கள். என்னென்னவோ பேசவேண்டுமென்று உற்சாகப்படுவார்கள். அவள் மனம் சாந்தமாய் இருந்து அவள் ஓய்வாய் இருந்தால் பரவாயில்லை.

காலையிலேயே டூரிஸ்ட் பஸ் வந்து நின்றுவிடும். ஜனங்கள் அவள் வீட்டிற்கு முன்னால் வந்து இறங்கி, 'மேகலா! மேகலா வேண்டும்!' என்று கத்துவார்கள். ராத்திரியில் தாமதமாய் வந்து நன்றாய்த் தூங்கிக் கொண்டிருக்கும்பொழுதும் கூட எழுந்து தீரவேண்டும். தூக்கக் கலக்கமாயிருக்கும்; அழுகை வரும். சிலசமயம் அவள்வீட்டில் இல்லாதபோது இல்லை என்று சொன்னாலும் நம்ப மாட்டார்கள். வீட்டிலேயே இருந்து கொண்டு இல்லை என்று சொல்லிவிட்டாள் என்ற அவநம்பிக்கையோடு வெளியே வரச் சொல்லிக் கூச்சலிடுவார்கள்.

மேகலாவின் வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிஷமும் அவர்களுக்கே சொந்தமானது என்பதுபோல நடந்து கொள்வார்கள். அவர்கள் பேசும் பேச்சுக்களாவது நன்றாயிருக்குமா என்றால் அதுவும் இல்லை. போரடிக்கும். அதனால் தான் இப்பொழுதெல்லாம் செட்டில் இருக்கும்போது விஸிடர்களை வர விட வேண்டாம் என்று கச்சிதமாய்ச் சொல்லி விட்டாள். வேலை கெட்டு விடுகிறது. அவர்களுக்கு ஆட்டோகிராப்புகள், அவர்களோடு போட்டோக்கள், அவர்களோடு பேச்சு—தன் தொழிலில் செலுத்தும் கவனத்தை விட இவை அதிகமாகிவிடுகின்றன. மேகலா தொப்பென்று வந்து கட்டிலில் சரிந்தாள்.

கொஞ்சநேரம் தனிமை கிடைத்துவிட்டாலும் போதும்; கிருஷ்ணராஜைப் பற்றி ஞாபகம் வந்து விடும். காசி திரும்பி வந்தாள்.

'போய் விட்டாரா?' கேட்டாள்.

'போயிட்டாரும்மா! அப்பப்பா! நான் எரிந்து விழுந்த பிறகு தான் போனார். எவ்வளவோ நேரமாய் உட்கார்ந்திருந்தார். ரெண்டுமணி நேரத்திற்கு மேல் ஆயிற்று.'

'மானஸாவும் சுபாஷும் எங்கே போனாங்க?'

'சுபாஷ் ஐயாவின் தங்கைக்குப் பிறந்த நாளாம் அங்கேயே சாப்பாடுகூடவாம். அம்மா வரலைன்னு சொன்னபோதும் கட்டிப் பிடிச்சி அழைச்சுட்டுப் போயிட் டாங்க. உங்கப்பா கூட போயிருக்கார்.'

மேகலா கேட்டுவிட்டுப் பேசாமலிருந்தாள். அவர்கள் எல்லோரும் ஒன்று என்ற உணர்ச்சி சுருக்கென்று தைத்தது இது உண்மைதானா அல்லது அவள்தான் தவறாய்ப் புரிந்துகொள்கிறாளா? அவளால் எந்த முடிவிற்குமே வர முடியவில்லை.

காசி சிவப்பு ரிப்பனைக் கொண்டுவந்து மேகலாவின் கூந்தலை வாரிக் கட்டி விட்டாள். மேகலாவின் வேலை களைப் பண்ணிக்கொண்டே, மானஸா தன் நாத்திக்காக வாங்கிய தங்கச் சங்கிலியைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந் தாள். பாட்டி வீட்டில் இல்லையாம். ஏதோ ராமாயண நாடகத்திற்குப் போயிருக் கிறாளாம். வீடெல்லாம் நிசப்தமா யிருந்தது.

மேகலாவுக்குச் சூடான பாலைக் கொண்டு வருவதற்கா கக் கீழே போனாள் காசி. மேகலா அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடக்கத் தொடங்கினாள். வீட்டிற்குத் திரும்பி வந்ததுமே தாயோ மானஸாவோ பாட்டியோ தென்படாமல் போனால் எப்படியோ இருக்கும் மேகலாவுக்கு. பயங்கரமான தனிமை வாட்டத் தொடங்கிவிடும். அவள் இதுவரை ஆயிரம் தடவை சொல்லியிருப்பாள்-அப்படி எல்லோருமாய்ப் போக வேண்டாம் என்று. ஆனாலும் அவர்கள் கேட்க மாட்டார்கள்.

அவர்கள் விஷயந்தான் அவர்களுக்குப் பெரிது.

கைகளைப் பின்னுக்குக் கட்டிக்கொண்டு அங்குமிங்கும் சுற்றி வந்து கொண்டிருந்த மேகலா, மறுநாளைய தன்



ப்ரோகிராமைப் பார்ப்பதற்காக டைரியை எடுக்க மேஜைக் கருகில் வந்தாள். அதற்குப்பக்கத்தில் விஸிட்டிங்கார்டு ஒன்று இருந்தது மேகலாவின் கண்கள் பரபரப்பை அடைந்தன. அதைக் கையில் எடுத்துக் கொண்டாள். அதில் கிருஷ்ணராஜ் எம். டி. என்றிருந்தது. கார்டிற்குப் பின்னால்—

'மேகலா! நான் காலையில் இந்த ஊருக்கு வந்தேன். இன்றிரவே திரும்பவும் பம்பாய்க்குப் போகிறேன். உன்னைச் சந்திக்க முயன்றேன்— முடியவில்லை— ராஜ்' என்றிருந்தது.

'காசி! காசி!' மேகலாவின் கத்தலால் அந்த அறையே அதிர்ந்தது.

பால் தம்ளரை எடுத்துக்கொண்டு மாடிக்கு வந்து கொண்டிருந்த காசி, அந்தக் கத்தலுக்கு மிரண்டு போய்ப் பார்த்தாள். அதற்குள் மேகலா ஓட்டமாய் ஓடி வந்தாள் காசிக்கு எதிராய்.

'இந்தக் கார்டை எப்பொழுது தந்தார்?'

'அவர் தாம்மா கொஞ்சம் முன்னாடி நான் போகச் சொன்னவர்!'

'இவரா! உனக்கு புத்தியில்லையா? என்னிடம் ஏன் சொல்லவில்லை?'

'உங்களிடம் சொன்னேன்ம்மா!'

'மூடு வாயை!' கத்தினாள். காசி மறுபேச்சுப் பேசாமல் நின்று விட்டாள்.

மேகலா கையிலிருந்த கார்டை இன்னொரு முறை பார்த்தாள்.

'மைகாட்!' மேகலா திரும்பி அறைக்கு ஓடிவந்தாள். இரவு உடையைக் களைந்தெறிந்து விட்டுப் பீரோவைத் திறந்து கைக்கு அகப்பட்ட புடவையையும் ஜாக்கெட்டையும்

எடுத்துக் கட்டிக் கொண்டாள். உடனே கார்ச் சாவியைக் கையிலெடுத்துக் கொண்டு கீழே ஓடினாள்.

டிரைவர் இல்லை. வீட்டிற்குப் போய் விட்டான். மேகலா கரேஜிலிருந்து காரை வெளியே எடுத்தாள்.

கார் விர்ரென்று பறந்தது மேகலா நேரத்தைப் பார்த்துக் கொண்டாள். அவளால் சமயத்திற்கு ஸ்டேஷனுக்குப் போக முடியுமா? அவனைப் பார்க்க முடியுமா? அவள் வீட்டிலிருந்து கொண்டே பார்க்க மறுத்துவிட்டாள். கடவுளே மேகலாவுக்கு கார் எதன் மேலாவாது போய் மோதிக் கொண்டு விடுமோ என்று தோன்றிற்று.

காரை ஸ்டேஷனுக்கு வெளியே நிறுத்தி வைத்துவிட்டு உள்ளே ஓடினாள். ரயில் பிளாட்பாரத்தில் புறப்பட தயாராய் இருந்தது. மேகலாவுக்கு அழுகை வந்தது. இந்த மகாசமுத்திரத்தில் எங்கே இருக்கிறானோ? எங்கே என்று தேடுவாள்? அவளுக்கு அதைரியம் ஏற்படவில்லை. அந்தக் கோடியிலிருந்து இந்தக் கோடி வரையிலும் பெட்டிகளில் தேடிக் கொண்டே வந்தாள். ரயில் புறப்படப் போவதாய்க் கூவிற்று.

மேகலா தேடிக்கொண்டே முன்னுக்குப் போய்க் கொண்டிருந்தாள். மேகலா முன்னுக்குப் போய்க் கொண்டிருந்த போது திடீரென்று தாண்டி வந்துவிட்ட பெட்டி ஒன்றிலிருந்து, மேகா என்ற குரல் கேட்டது. மேகலா விருட்டென்று திரும்பினாள் அங்கே பெட்டியின் வாசலுக்கருகில் கிருஷ்ணராஜ் நின்று கொண்டிருந்தான். மேகலா அவனிடம் ஓடிவந்தாள்.

'எனக்கு நீங்கள்...நீங்கள் என்று தெரியலை' மேகலாவுக்கு அதற்கு மேல் வார்த்தைகள் வெளிவருவது பெரும் கஷ்டமாயிருந்தது. மேகலா கம்பியைப் பிடித்துக் கொண்டு பெட்டிக்குள் ஏறிக் கொண்டிருந்தபோது அவன் கையைக் கொடுத்தான்.



'நீங்க எப்ப வந்நீங்க?'

'காலையில்.'

'நேராய் என்னிடம் ஏன் வரலை? வருவதாய் எனக்கு ஏன் செய்தி அனுப்பலை?'

அவன் பதில் பேசவில்லை.

'உங்களுக்கு நான் மன்னிக்கமுடியாத அபராதம் பண்ணி விட்டது நிஜந்தான். ஆனால் எனக்கு நீங்கள் என்று தெரியாது. தெரிந்தும் உங்களுக்கு அப்படி அபராதம் பண்ணுவேன்னு எப்படி நினைச்சுட்டீங்க?' ரோஷமாய்ச் சொன்னாள்.

'தட்ஸால் ரைட்!'

அதற்குள் ரயில் நகர்ந்தது. கிருஷ்ணராஜ் கலக்கத்துடன் சொன்னான். 'ரயில் புறப்படுகிறது, நீ இறங்கு.'

'நீங்க இறங்குங்க.'

'நானா? நான் போகணும்!'

'எங்கே?'

'பம்பாய்க்கு. அங்கிருந்து நாளை . இரவு அமெரிக்காவுக்குப் போகிறேன்.'

'மைகாட்! மேகலா தன்னையறியாமல் சட்டென்று அவன் இரு கைகளையும் பிடித்துக் கொண்டாள்.

'நிஜமாகவா?'

'நிஜமாய் தான் மேகா. நீ இறங்கு. ரயில் வேகத்தை மேற்கொள்ளப் போகிறது.'

'நான் இறங்கமாட்டேன். உங்களோடு வந்துடப் போறேன்'

அக் கண்களில் உறுதி தென்பட்டது.

# 41

மேகலா பம்பாய்க்கு வந்ததுமே சென்னைக்கு நாகராஜனுக்குப் போன் பண்ணி, தான் பம்பாயில் குறிப்பிட்ட ஓட்டலில் இருப்பதையும், பணத்தை எடுத்துக் கொண்டு அவனை உடனே வரச்சொல்லியும், ஒரு ஃபிரெண்டுடன் சேர்ந்து எதிர்பாராமல் பம்பாய்க்கு வந்து விட்டதாகவும், வீட்டில் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லும்படியும் சொன்னாள்.

மேகலாவும் கிருஷ்ணராஜும் பக்கத்துப் பக்கத்து அறைகளை எடுத்துக் கொண்டார்கள். கிருஷ்ணராஜ் ஏனோ தளர்ந்து போய் விட்ட மனிதனாய்த் தோன்றினான். அவன் கண்களில் ஆனந்தமோ உற்சாகமோ இல்லை. இந்தியாவில் செட்டிலாகி விடவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டிருந்த அவன் திரும்பவும் அமெரிக்காவுக்குப் போகிறான்.

இனித் திரும்பி வரப்போவதில்லை என்றும் அங்கேயே செட்டிலாகி விடப்போவதாகவும் சொல்கிறான்.

'ஏன்? என்னதான் ஆச்சு?' மேகலா கலங்கிப் போய்க் கேட்டாள். கிருஷ்ணராஜ் பதில் பேசவில்லை. சிகரெட் புகைத்துவிட்டு அதன் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டிக் கொண்டே, 'என் கனவெல்லாம் இப்படிச் சாம்பலாகி விட்டது. நான் இப்பொழுது நடைப்பிணம்' என்றான்.

'என்னவாச்சு? என்னிடம் சொல்லக்கூடாதா?' என்றாள் மேகலா.



'சொல்லக்கூடாதுன்னு ஒன்றுமே இல்லை மேகா. இதில் ரகசியம் எதுவும் இல்லை.' கிருஷ்ணராஜ் சொல்லத் தொடங்கினான்.

மேகலா போனபிறகு அவன் கடிதங்கள் எழுதினானாம். ஆனால் அவை மேகலாவுக்கு ஏன் கிடைக்கவில்லை என்று தான் புரியவில்லையாம். தாய் போய் விட்டதால், அவன் எதிர்பாராமல் நினைத்ததை விட முன்னதாகவே இந்தியாவுக்கு வந்துவிட்டான்.

ஐதராபாத்துக்கு வந்த அவனுக்குத் தாய்க்கு நான்கு மாதங்களாகவே உடம்பு சரியாயில்லை என்றும், அந்த விஷயத்தை பானுவோ மாமனாரோ தனக்குத் தெரியப் படுத்தவேயில்லை. என்றும் தெரிந்து அதிர்ந்து விட்டான். தாய் இந்த இரண்டு மாதங்களாய் மருந்து இல்லாமலும் சரியான சாப்பாடு இல்லாமலும் எவ்வளவு மோசமான நிலைமையில் இருந்தாள் என்பதை வேலைக்காரர் மூலமாகவும், அக்கம்பக்கத்தார் மூலமாகவும்,தெரிந்து அதிர்ச்சியடைந்து விட்டான். பானு, தாயை மிக நன்றாய்ப் பார்த்துக் கொள்வதாய்த் தெரிவித்து எழுதியிருந்த கடிதங்கள் எல்லாம் பொய். அவன்எழுதிய கடிதங்களைஅவளிடம் தரவேயில்லை. தாயார் எழுதிய கடிதங்களையும் தனக்குப் போஸ்ட் பண்ணவில்லை. தாய், 'மகன் வந்துவிடுவான், வந்ததும் என் கஷ்டங்கள் எல்லாம் கரையேறிவிடும்' என்றெண்ணிக் கொண்டு அவன் வரவுக்காக நாட்களை எண்ணிக் கொண்டே காத்திருந்தாளாம்.

'அவங்க இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியவே தெரியாதா?' கேட்டாள் மேகலா.

'தெரியாது. பானுவும், என் மாமனாரும் சேர்ந்து நன்றாய் நாடகமாடிட்டாங்க. நான் அவங்க பேச்சை நம்பி அம்மா அவங்க நிழலில் சுகமாய் இருப்பதாய் நினைத்துட்

டேன் கவலையில்லாமல் வெளிநாட்டில் இருந்துட்டேன். மேசா யாராயிருந்தாலும் சரி, வயோதிக காலத்தில் தாய் தந்தையரைச் சுகமாய் வைத்துத் தாங்காவிட்டால் அவங்க கொலைகாரர்களை விட மிகப் பாவிகள் என்பேன். நான் என்ன பண்ணிட்டேன் பார்த்தாயா? அம்மாவை வயதான காலத்தில் தனியாய் விட்டுவிட்டேன். கடைசியில் இன்னும் மோசமானது என்னவென்றால், அவங்க எனக்காகக் கடைசி காலத்தில் தவிச்சிட்டிருந்தபோது, நோயால் வருந்திக் கொண்டிருந்தபோது வராமல் போயிட்டேன், வந்து பார்க்காமல் போயிட்டேன்.' அவன் தாங்கமுடியாத வருத்தத்திற்கு ஆளாகி முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டான்.

மேகலா எழுந்து வந்தாள். அவன் தலைமேல் தன் கையை வைத்தாள். 'ராஜ்! இதில் உங்க தப்பு எதுவுமில்லையே! அவங்க உங்களை மோசம் பண்ணிட்டாங்க. அவங்களை உலுக்கி எடுக்காமல் போயிட்டீங்களா?'

'சும்மா யிருப்பேனா? வேலைக்காரர்கள் குறுக்கிட்டுத் தடுத்துட்டாங்களே தவிர, இல்லாவிட்டாலும் அன்றைக்கே அவள் உயிர் என் கையில் போயிருக்கும். கழுத்தை அப்படித் திருகிட்டேன். கொன்று போட்டிருந்தாலும் நன்றாயிருக்கும், எனக்குக் கொஞ்சம் நிம்மதியாவது கிடைத்திருக்கும்.'

'பானு ஏன் அப்படிப் பண்ணினாள்? தந்தைக்கு இல்லாவிட்டால் அவளுக்காவது புத்தி வேண்டாமா? வாழ்நாள் பூராவும் சேர்ந்து இருக்கப் போகிறவர் இல்லையா நீங்க?'

கிருஷ்ணராஜ் முகத்தில் தாங்க முடியாத வருத்தம் ஏற்பட்டது.

'உம்! வாழ்நாள் பூராவும்! பானு என்னை முட்டாளடித்து விட்டாள் கல்யாணமான புதிதிலேயே அவள் சுபாவமும் என் சுபாவமும் ஒத்துவராமல் போயிற்று. அவள்



செல்லமாய் வளர்ந்தவள். அகம்பாவம் அதிகம்! எப்பொழுது பார்த்தாலும் மற்றவங்கதான் அவளைச் சந்தோஷப் படுத்தணும். இல்லாவிட்டால் அவங்களுக்கு நரகத்தை ஏற்படுத்திவிடுவாள். நான் அவள் மீது கோபமோ எரிச்சலோ அடையாமல் புரிந்துக்கொள்ள முயன்றேன் கூடவே அமெரிக்காவுக்குக் கூட்டிச் சென்றேன்.

தந்தையில்லாமலிருந்ததால் நான் என்அன்பால் அவளை வெற்றிக்கொண்டு விடலாம் என்றெண்ணியிருந்தேன். பானு அங்கே இருக்க விரும்பவில்லை.

'பானு விரும்பும் சுதந்திரம் விபரீதமாய் இருக்கும் சிநேகிதர்களோடு சேர்ந்து மனம்போனபடி சுற்றுவாள் யாரும் எதுவும் கேட்டுவிடக்கூடாது. ஓரிரண்டு தடவை நயமாய் எடுத்துச் சொல்லப் போன அம்மாவைக் குதறி விட்டாள். ஆனாலும் நான் பொறுத்துக் கொண்டிருந்தேன். அவளை நேசிக்கவும், ஈடுக்கட்டிக் கொண்டு போகவும் முயன்றேன். பானு இந்தியவுக்குப் போய் விடப் போவதாய்ச் சொன்னபோதும் சரி என்றேன்.

மனைவி இருந்தும் பிரம்மச்சாரியாய் வாழ்ந்துவந்தேன், பானு இந்தியாவுக்கு வந்தாள். தந்தைக்கு உடம்பு சரியில்லை என்றதெல்லாம் வெறும் கண்துடைப்பு என்று இப்பொழுது புரிகிறது எனக்கு. கடிதங்களை மட்டும் இனிக்க இனிக்க எழுதுவாள் — அம்மாவும் தானும் மிக அந்நியோனியமாய் இருப்பதுபோல. அத்துடன் அம்மாவும் பானு தன்னைப் படுத்திய பாட்டைப்பற்றி எனக்குத் தெரியப்படுத்தவில்லை. இவ்வளவு நாளாய் நான் ஒரு மாயவலையில் சிக்கிக் கொண்டிருந்திருக்கிறேன்.

'மேகா! இதுமட்டுமில்லை. அந்தத் தந்தையும் மகளும் என்ன பண்ணினார்கள் தெரியுமா? நான் மாதந்தோறும் அங்கிருந்து நிறைய பணம் அனுப்புவேன் பானுவின் பெயருக்கு! அதிலிருந்து ஒரு பைசா கூட செலவழிக்க

வேண்டாம் என்றும், அது க்ளினிக்கிற்காக என்றும் எவ்வளவோ தடவை சொல்லியிருந்தேன். செலவழிக்கவில்லை என்று எழுதினாள். ஆனால் எல்லாம் பொய் தான் நான் அனுப்பிய பணத்தையெல்லாம் சிநேகிதர்களோடு சுற்றி உல்லாசத்திற்கும் ஷோக்கிற்கும் செலவழித்துவிட்டாள். பானுவின் தந்தைக்குக் குதிரைப் பந்தயப் பைத்தியம் உண்டு. அது பானுவையும் தொற்றிக்கொண்டுவிட்டதுபோலிருந்தது. நான் அனுப்பிய பணத்தையெல்லாம் விருந்து விநோதங்களுக்கும், நண்பர்களோடு சுற்றித்திரிவதற்குமே செலவழித்துவிட்டாள். பேங்கில் ஒரு பைசா இல்லை: என் வாழ்க்கைக் கனவுகளையெல்லாம் கிள்ளி எறிந்து விட்டார்கள். நான் இப்பொழுது திரும்பவும் எட்டு வருஷத்திற்கு முன்னால் இருந்த நிலைமைக்கு வந்து சேர்ந்திருக்கிறேன்.

‘அமெரிக்காவில் வேலையை விட்டுவிட்டு வந்துவிட்டேன் அல்லவா, எனக்கு இப்பொது வேலையும் இல்லை. நிற்க நிழல் இல்லை. என் எதிர்காலம் என்னவென்று எனக்கே தெரியவில்லை. நான் வாழ்ந்து தீரணும் என்றால் சாகமுடியாது. க்ளினிக் வைக்க வேண்டும் என்ற என் ஆசை வேரோடு சமாதியாகிவிட்டது. இனி எங்கேயோ ஒரு மாறு மூலையில் வயிற்றுப்பாட்டிற்காக டாக்டராய் உத்யோகம் பண்ணி நாட்களைக்கழிக்கணும். அதனால் நான் அமெரிக்காவுக்குப் போய்விடப்போகிறேன். நான் வேலை பார்த்த ஆசுபத்திரி அதிகாரிகளிடம் நான் வந்து விடுவதாகவும், இனி அங்கேயே நிரந்தரமாய் வேலை செய்வதாகவும் தெரியப்படுத்தினேன். அவர்கள் வரச்சொல்லி தெரியப்படுத்தினார்கள்.

என் பிரயாண ஏற்பாடுகள் எல்லாம் முடிந்து விட்டன. அதனால்தான் நான் போகிறேன். இனி எனக்கும் இந்த நாட்டிற்கும் சம்பந்தமில்லை. இனி நான் திரும்பிவரப் போவதில்லை! போவதற்கு முன்னால் உன்னை ஒரு தடவை பார்க்க வேண்டும் என்று தோன்றிற்று. வீட்டிற்குப் போன்



பண்ணினால் இல்லை. என்றார்கள். ஸ்டுடியோவிற்கு வந்தால் விசிட்டர்களை வர விடாமாட்டோம் என்றார்கள். உன் வீட்டிற்கு வந்தேன். வேலைக்காரி வந்து நீ களைப்பாய் இருக்கிறாய், பார்க்க முடியாது என்று சொன்னபோது ஒரே ஒரு நிமிஷம் பார்த்துப் பேச விரும்புவதாய்ச் சொன்னேன். வேலைக்காரி என்னை அவமானப்படுத்திப் பேசியனுப்பி விட்டாள் என் பெயரை சொல்லும்படி கார்டைத் தந்து விட்டு வந்தேன். நீ இப்படி கண்ணில் படாமல் போயிருந்தால் நம் சிநேகம் கூட ஒரு கானல் நீர் என்று எண்ணிக் கொண்டிருந்திருப்பேன். நீ வந்து நல்ல காரியம் பண்ணினாய்.

‘மேகா! உன்னிடம் இதையெல்லாம் சொன்னபிறகு என்னை இந்த ஒரு மாதகாலமாய் வாட்டி எடுத்துக் கொண்டிருந்த துக்கம் கொஞ்சம் தனிந்தாற்போல நிம்மதியாய் இருக்கு.’

மேகலா எப்பொழுது வந்து அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாளோ எப்பொழுது அவன் தலையை தன் மார்போடு அழுத்திக் கொண்டாளோ தெரியாது. மேகலாவுக்கு அவனைப் பார்த்தால் அந்தச் சமயத்தில் வழிதவறிவிட்ட சிறுவனைப் போலிருந்தது.

பானு அவன் வாழ்க்கையையும், கனவுகளையும், சந்தோஷத்தையும் சமமாய் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய மனைவி அவன் மனவிளக்கை அணைத்து விட்டாள். அது இப்பொழுது உயிருக்கு மன்றாடியபடி படபடத்துக் கொண்டிருக்கிறது. மேகலா அது அணைந்துவிடாமலிருக்கத் தன் கைகளைக் குறுக்காய் வைக்கத் தீர்மானித்துக் கொண்டு விட்டாள். மேகலா அவன் தலையில் கைவைத்துத் தடவிக் கொண்டிருந்தாள். அந்த ஸ்பரிசத்தில் இரக்கம் தெரிந்தது. கருணை தெரிந்தது எல்லாவற்றையும் விட முக்கியமாய் சிநேகம் என்ற அமிர்தம் இருந்தது.

அதற்குள், கதவையாரோ டொக்டொக் என்று தட்டிய ஓசை கேட்டது. மேகலா மெதுவாய்க் கிருஷ்ணராஜை விட்டு விலகி, எழுந்துபோய்க் கதவைத்திறந்தாள். எதிரே நாக ராஜன் ப்ரீப்கேசுடன் நின்று கொண்டிருந்தான். பையன் அவனுக்குப்பின்னால் பெட்டியைப் பிடித்துக் கொண்டு நின் றிருந்தான்.

'குட் ஈவினிங் மேடம்' என்றான் நாகராஜன்.

'வாங்க உள்ளே' என்றாள்.

'உங்கள் உடைகளைக் கொண்டுவந்திருக்கேன்' பெட் டியைக் காட்டிச் சொன்னான்.

'தாங்க்யூ' என்றாள். நாகராஜன் வந்துவிட்டான் என் றால் இனி மேகலாவுக்குக் கவலையே இல்லை எல்லா ஏற்பாடுகளையும் அவனே பார்த்துக்கொள்வான்.

இரவு வந்தது.

கிருஷ்ணராஜும் மேகலாவும் சேர்ந்து சாப்பிட்டார்கள். கிருஷ்ணராஜ் நேரத்தைப் பார்த்துக்கொண்டே, 'என் பிளே னுக்கு டயமாயிடும். நான் கொஞ்சம் முன்னாடியே போக ணும்' என்றான்.

'நீங்கள் போகப் போவதில்லை' என்றாள் மேகலா. அவன் வியப்போடு நிமிர்ந்து பார்த்தான் அவளை. மேகலா உறுதியான குரலில் சொன்னாள்.

உங்கள் டிக்கெட்டை நான் கேன்ஸல் பண்ணிட்டேன். நீங்கள் போகப் போவதில்லை.

'மேகா!' அவன் சரேலென்று எழுந்திருந்தான்.

'உனக்கு புத்தி கித்தி பிசகிடுத்தா? நான் போகணும்'

'தப்புப் பண்ணியது ஒருத்தரானால் தண்டனையை விதிப்பது இன்னொருத்தருக்கு ஞாயமில்லை உங்கள்

பக்கங்களை மடக்காமலும், கிழிக்காமலும்
புத்தகத்தை கவனமாக கையாளுங்கள்.



மனைவி உங்களை மோசம் பண்ணியதால், நீங்கள் இந்த நாட்டைப் பிடித்து ஆட்டுவிப்பது நன்றாயில்லை. இங்கே சில அனாதைகளுக்கு உங்களால் ஆகவேண்டிய உபகாரங் கள் நிறைய இருப்பதை நீங்கள் மறந்துட்டீங்க!'

'நான் என்ன பண்ணுவேன்? என்னிடம் பணம் இல்லையே?

என் வயிற்றுப் பிழைப்புக்கே நான் தேடிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறேன்!'

'பணம் பிரச்னையே இல்லை பாங்குகள் கடன் தருகின் றன.'

வியாபாரம் பண்ணி நன்றாய்ப் பணம் சம்பாதித்தவங்க நிறையபேர் எப்படிப்பட்டதற்கும் முதலீடு போடத் தயா ராய் இருக்காங்க.

'என்னைக் கொல்லாதே மேகா! என் வருத்தம் என்ன வென்று உனக்குப் புரியாது. என்னால் இங்கே இருக்க முடியாது. இருந்தால் பானுவின் தந்தை என்னை விட்டு வைக்கமாட்டார். இந்த ஒரு மாதகாலமாகவே நான் அவங்களிடம் நரகத்தை அனுபவித்துட்டேன். எனக்குப் பைத்தியமே பிடிக்கும்படிப் பண்ணிட்டாங்க. என்னால் அவங்களை எதிர்த்து நிற்க முடியாது' என்றான் ஆதர வில்லாமல்.

'நீங்கள் அவ்வளவுகோழை என்னு நினைக்கவேயில்லை'

'ஆல்ரைட்! அவங்களை நான் பொருட்படுத்தவில்லை. ஆனால் நான் எங்கே இருக்க முடியும்? எந்த ஆசுபத்திரியில் உத்யோகம் கிடைக்கும்? என்னால் இங்கே இப்படி இருந் தால் எனக்குச் சதா என் க்ளினிக்கைப் பற்றியே ஞாபகம் வந்துட்டிருக்கும். வருத்தமாய் இருக்கும் உத்யோகந்தான்

பண்ணம்னு இருந்தால் இங்கே பண்றதைவிட அமெரிக்காவே மேல்'!

'உங்களை இங்கே உத்யோகம் பண்ணச்சொல்லி யார் சொன்னாங்க?'

'பின்னே என்ன பண்ணுவேன்?'

'க்ளினிக் வெச்சுக்குங்க.'

'ஆனால் எப்படி? பணம் எங்கிருந்துவரும்?' அவன் கோபமாய்ப் பொறுமையின்றிச் சொன்னான்.

'பணத்தைப் பற்றிய கவலையே உங்களுக்கு வேண்டாம்.'

மேகலா கொஞ்சம் பொறுத்துச் சொன்னாள்.

'ஒரு காலத்தில் நீங்கள் எனக்குப் 'பிராணதானம்' பண்ணினீங்க. அன்றைக்கு நான் உங்களுக்கு ஒன்றுமே தரவில்லை. நீங்கள் என் வறுமையை இரக்கத்தோடு பார்த்தீங்க. இன்றைக்கு நான் வாழ்க்கையில் மிகவும் முன்னுக்கு வந்துட்டேன். அனாதை ஆசிரமங்களுக்கும், அபிமானிகளின் சங்கங்களுக்கும், இன்னும் எத்தனையோ சங்கங்களுக்கும் கை கொடுத்துட்டிருக்கேன். அப்படிப்பட்ட நான் உங்களைப் போன்றவங்களுக்கு — ஆதரவில்லாத எத்தனையோ பேருக்கு உபகாரம் பண்ற உங்களுக்கு நான் உதவி பண்றதில் தப்பில்லைன்னு நினைக்கிறேன்.'

'மேகா!—'

'பொறுங்கள். அவசரப்படாதீங்கள். நான் இனாமாய் ஒன்றும் தரவில்லை. நீங்கள் எனக்கு நன்றிக்கடன் பட்டு விட்டேனே என்று பயப்படவும் தேவையில்லை. க்ளினிக் வைத்துக் கொள்வதற்கு எங்கிருந்தாவது கடன் வாங்கித் தருகிறேன். அந்த உபகாரமாவது என்னால் செய்ய



முடியும்னு நினைக்கிறேன். அந்தப்பணத்தை நீங்கள் கடனாய் வாங்கிக் கொண்டு மெதுவாய்ச் சில ஆண்டுகளில் தீர்க்கலாம், சொல்லுங்கள். இப்படிப்பண்ணினால் நான் உங்களை அவமானப் படுத்தியதாய் ஒன்றும் ஆகிவிடாதே? உங்களுக்கு நினைவிருக்கோ இல்லையோ! எவ்வளவு தடவை நான் கடிதங்களில் எழுதியிருப்பேன் — நீங்கள் மெட்றாசிலேயே பிராக்டீசு வைக்கணும்னு!'

அவன் நினைவிருக்கிறது என்று தலையாட்டினான்.

'அது இந்த விதமாய் நடக்கும் என்று நான் எண்ணியிருக்கவில்லை. எனக்கு ... எனக்கு ரொம்பச் சந்தோஷமாய் இருக்கு' என்றாள்.

அவன் ஆச்சரியமடைந்தவனாய் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

'மேகா! நீ வருவதற்குள் நான் ஏறியரயில் போய் விட்டிருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும், இல்லையா? நான் இந்த நேரத்தில் இருந்திருப்பேன்' என்றான்.

'நிஜந்தான். ஆனால் தெய்வசங்கல்பம் வேறு விதமாய் இருக்கிறது. அவருக்கு நீங்கள் போவது பிடிக்கவில்லை. அதனால்தான் எனக்கு ரயில் கிடைத்தது' என்றாள் மேகலா. அவன் மேகலாவையே பார்த்துக் கொண்டிருந்தான். மேகலா மனத்தளவில் எவ்வளவு உயர்ந்து விட்டாள் என்று தோன்றிற்று.

# 42

மேகலா சென்னைக்கு வந்து விட்டாள். விமானநிலையத்தில் இறங்கி, காரில் நேராய் வீட்டிற்கு வந்து, உள்ளே போய்க் கொண்டிருந்தபோது ஹாலில் உட்கார்ந்து கொண்டிருந்த சுபாஷும் ராமபூஷணனும் மேகலாவை ஏறயிறங்கப் பார்த்தார்கள்.

மேகலா நேராய்த் தன் அறைக்குப் போய் விட்டாள். மானஸா கூடவே வந்தாள்.

'அக்கா! ஏன் அப்படிப் போனாய்? நீ ஷேமமாய் இருக்கிறாய்னு தெரிந்த பிறகு எங்களுக்கெல்லாம் உயிரே வந்தது, தெரியுமா?' என்றாள்.

மேகலா மானஸாவிடம் எதையும் ஒளித்து வைக்கவில்லை. நடந்ததையெல்லாம் சொல்லிவிட்டாள்.

'மானஸா! நான் போகாமல் போயிருந்தால் கிருஷ்ணராஜ் போயிருப்பார். தாங்க காட்! ரயில் கிடைத்தது என் அதிர்ஷ்டந்தான்னுவை' என்றாள்.

மானஸா உள்ளூர ஏற்பட்ட அதிருப்தியை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. நயமாய் எடுத்துச் சொல்லுவது போல.

'அக்கா! மற்றவங்க பிரச்னைகளில் தலையிடுவது நல்லதில்லைன்னு தோணுது. இந்த நாட்டில் இருப்பதும் போய் விடுவதும் அவரோட பெர்சனல் விஷயம். உனக்கு நான் சொல்லவேண்டியதில்லை' என்றாள்.



'இல்லை மானஸா! கிருஷ்ணராஜால் சிலபேருக்காவது நன்மை ஏற்படும். அவரைத் தடுத்து நிறுத்தியது நான் பண்ணிய நல்ல காரியமாய் நினைக்கிறேன். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு' என்றாள்.

மானஸா பதில் பேசவில்லை.

மேகலாவுக்கு கிருஷ்ணராஜை சென்னைக்கு அழைத்து வந்தது மிகச் சந்தோஷமாய் இருந்தது. அவனுக்காக ஒரு சின்ன வீட்டைப் பார்த்தார்கள். அவன் முதலில் கொஞ்ச நாட்கள் எங்கேயாவது உத்யோகம் பண்ணிக் கொண்டே மாலை வேளையில் க்ளினிக்கைப் பார்த்துக் கொள்ளும் ஏற்பாடுகள் நடந்தன.

மேகலா அம்பிகா மில் முதலாளியுடன் பேசினாள். அந்தக் கம்பெனிக்கு மெடிகல் அட்வைஸராய் வேலையில் சேர்ந்தான். ஜனசஞ்சாரம் அதிகமாய் உள்ள இடத்தில் க்ளினிக் வைப்பதற்காக இரண்டு அறைகளைப்பார்த்தார்கள் ஆயாவும் நர்சும் அப்பாயிண்ட் ஆனார்கள். மேகலா தானே தேங்காய் உடைத்து திறப்பு விழாவை நடத்தினாள்.

'முதல் இஞ்ஜெக்ஷன் எனக்கே குத்தக்கூடாதா?' என்றாள்.

'உனக்கா? குத்தமாட்டேன். நான் ஏழைகளின் டாக்டர். உன்னைக் கொண்டு திறப்புவிழாவைப் பண்ணினால் பணக்காரக்களின் டாக்டராயிடுவேன்' என்றான் சிரித்துக் கொண்டே.

'பானுவுக்கு லெட்டர் எழுதினீங்களா?' என்றாள்.

அவன் முகத்தில் மௌனம் ஏற்பட்டது. அந்தக் கேள்வி காதில் விழாதது போலவே தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மேகலா சொன்னாள்— 'ராஜ்! எந்த மனைவியும் கணவனை இழக்க விரும்பமாட்டாள். பானு இதற்குள் நடந்ததற்கெல்லாம் பச்சாதாபப் பட்டிருப்பாள். பானுவுக்கு இன்னொரு சான்ஸ் கொடுங்கள். உங்கள் மேல் ஏற்பட்டிருக்கும் இந்த விரோதம் போவதற்கு மற்றொரு முறை முயற்சி பண்ணுங்கள்' என்றாள்.

'பானு! அம்மா விஷயம் ஞாபகத்திற்கு வந்தால் பானுவின் முகத்தில்கூட விழிக்கக்கூடாதுன்னு இருக்கு.'

'நடந்ததை மறந்துவிட்டு வாழ்க்கையைத் தொடருவது தான் மனிதப்பண்பு! நடந்ததையெல்லாம் மறந்துவிடுங்கள். பானுவும் நீங்களும் சேர்ந்து இருந்தால் நீங்கள் சந்தோஷமாய் இருப்பீங்கன்னு வையுங்கள்: அப்ப இது உங்களை அவ்வளவாய் பாதிக்காமல் போகலாம்.'

'அசம்பவம் மேகா, அசம்பவம்' அவன் கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டான்.

'மனிதன் என்ற பிறகு வாழ்க்கையோடு ராஜியாகித் தீர வேண்டியதுதான். நீங்கள் இந்த ஊரிலேயே செட்டிலாகி விடத் தீர்மானித்திருக்கீங்க. புதிதாய் க்ளினிக் வைக்கப் போறீங்க. மனைவியோடு மனஸ்தாபம் கொண்ட டாக்டர் என்று சொன்னால் நோயாளிகளுக்கு அவ்வளவு ஈடுபாடும், கௌரவமும் ஏற்படாது. ராஜ், ப்ளீஸ்' என்றாள்.

கிருஷ்ணராஜ் யோசனையில் ஆழ்ந்துவிட்டான். பிறகு ஆழ்ந்து பெருமூச்சு விட்டுவிட்டு, 'சரி மேகா! நீ சொன்னது போல மனிதன் வாழ்க்கையோடு ராஜியாகித் தீரவேண்டியது தான் ஆல் ரைட் பானுவுக்கு லெட்டர் போடுகிறேன்.' என்றான்.

மேகலாவுக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது.



வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருக்கையில் மேகலாவின் கண் முன்னால் கிருஷ்ணராஜும் பானுவும் சந்தோஷமாய் குடித்தனம் செய்வது போலவும், தான் அவர்கள் குடும்பத்திற்கு நெருக்கமாய் சிநேகமாய் இருப்பதுபோலவும், பானு தன்னை அன்போடு பார்ப்பது போலவும் சுந்தர காட்சிகள் நிழலாடின.

மேகலா வீட்டிற்கு வந்தாள். நாகராஜன் காத்துக் கொண்டிருந்தான்.

'மேடம்.' அவன் சொல்லமுடியாமல் தவித்தாற் போலிருந்தது. முகம் மிக வருத்தத்தோடும், கலக்கத்தோடும் இருந்தது. மாடிக்குப் போகத் திரும்பிய மேகலா நின்றாள் 'என்ன?' என்றாள்.

நாகராஜன் மென்று விழுங்கினான் சொல்லமுடியாமல்.

'சொல்லுங்கள், என்ன?' என்றாள் இரைந்து.

'அம்மா, நீங்கள் இப்ப நடிச்சிட்டிருக்கிற அந்த 'கல்யாணம்' படத்தயாரிப்பாளர் சீதாபதி என்ன பண்ணிட்டார் தெரியுமா? நீங்கள் சொல்லாமல் பம்பாய்க்குப் போயிட்டீங்கன்னு உங்களை அந்தப் படத்தின் கதாநாயகி ரோலிலிருந்து தள்ளிவிட்டு, அந்த ஜலஜாஸ்ரீயை வைத்துக் கொண்டு விட்டார். அதோடு சும்மாயில்லை. நீங்கள் திடீரென்று தன்னிடம் சொல்லாமல் ஷூட்டிங்கிற்கு வராமலிருந்ததால் தனக்கு நஷ்டம் வந்துவிட்டதாய் உங்கள் மீது கேசு போட்டிருக்கிறார். இதோ நோட்டீசு' கையிலிருந்த காகிதத்தைக் காட்டினான்.

மேகலா வாங்கிப் படித்தாள். பிறகு கடுகளவும் தளர்ந்து போய்விடாமல் தடுமாற்ற மில்லாத குரலில், 'நாகராஜ்சார்' என்றால் ரெண்டு நாள்தானே போச்சு? அந்த ரெண்டு நாளைக்கு எவ்வளவு நஷ்டமானாருன்னு

கேட்டு அதைக் காட்டி விடுங்கள். செக்கில் கையெழுத்துப் போட்டு விடுகிறேன். அவர் என்னை அப்படித் தள்ளியது உங்களுக்கு ஆச்சரியமாய் இருக்கோ, என்னவோ? எனக்கொன்றும் இல்லை அந்த டைரக்டருக்கு என்னை வெச்சுக்கப் பிடிக்கலை. அந்த ஜலஜாஸ்ரீயை வெச்சுக்கணும்னு முதலிலிருந்தே பார்த்தார். ஆனால் ப்ரொட்யூசர் கேட்கலை. டைரக்டருக்கு இப்ப நல்ல அவகாசம் கிடைத்துவிட்டது. எனக்கொண்ணும் வருத்தமில்லை. ஏனெனில் அந்தப் படத்தின் கதையை என்னிடம் சொன்னதற்கும் இப்ப எடுப்பதற்கும் சம்பந்தமில்லாமல் இருக்கு. என்னைத்தள்ளிட்டு அவங்க என் வயிற்றில் பாலை வார்த்துட்டாங்க. அவங்க பணத்தை அவங்களிடமே திருப்பித் தந்துடுங்க' என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

நாகராஜன் மேகலா போன திசையையே பார்த்தப்படி தலையைச் சொரிந்துக்கொண்டான். அந்தப்படத்தின் கதை நன்றாயில்லாமல் போகலாம். ஆனால் 'அவர்கள் தந்த பணம் மட்டும் அபாரம். அவ்வளவு பணத்தை வாபஸ் தருவது என்றால் சும்மாவா? இதென்ன இவள் விழலுக்கு நீரிரைத்தாற்போல செய்கிறாளே!' என்றெண்ணிக் கொண்டான். மேகலா போனதும் சுபாஷ் அங்கே வந்தான்.

'என்ன சொன்னாள்?' என்றான். நாகராஜன் சொன்னான்.

'ரெண்டு வார்த்தை சொல்லி ராஜியாகமல் அவ்வளவு பணத்தையும் திருப்பித் தருவதா? நாகராஜன் சார்! உங்க எஜமானிக்குக் கொஞ்சம் புத்தி கலங்கிப் போயிருக்கு. நீங்கள் அப்புறமாய் நயந்து சொல்லுங்கள்' என்றான். நாகராஜன் சரி என்றான்.

ஆனால் மேகலா கேட்டுக் கொள்ளவில்லை நாகராஜன்.



'இன்னொரு தடவை யோசித்துப் பார்த்துக்குங்கம்மா என்றபோது,

மேகலா — 'என்னைப் போய் அவங்க காலில் விழச் சொல்கிறீங்களா? நான் எப்பவாவது செட்டிற்குத் தாமதமாய் வந்திருக்கேனா? எவ்வளவு தடவை ராத்திரி வேளைகளில் ஓய்வு கூட இல்லாமல் வேலை பண்ணியிருக்கேன்? அவங்களுக்குக் கொஞ்சமாவது அந்த நன்றி இருக்கா? அப்படிப்பட்டவங்களை விட்டுவெகு தூரத்தில் இருக்கணும். அவங்க என்னை மட்டந்தட்டுவதற்காகத் தள்ளியிருக்காங்க. நீங்கள் நான் சொன்னபடி செய்யுங்கள்' என்றாள்.

மேகலா அந்தப் படத்தை விட்டது வீட்டார் யாருக்குமே பிடிக்கவில்லை. மிக வருத்தமாயிருந்தது அவர்களுக்கு.

மேகலா உட்கார்ந்திருந்தபொழுது அக்கௌண்டென்ட் மேகலா கூல் டிரிங்க்ஸ் ஃபைல்களைக் கொண்டு வந்தான். மேகலா கம்பெனியின் வரவு செலவு கணக்குகளைப் பார்த்தாள். கம்பெனி வைத்ததிலிருந்து வருடத்திற்கு மூன்று நான்கு லட்சங்களுக்குக் குறையாமல் நஷ்டம் வந்து கொண்டிருந்தது. கம்பெனிக்காக பாங்கிலிருந்து வாங்கிக் கொண்ட கடனை மேகலாதான் கட்டவேண்டியிருந்தது.

அந்தக் கணக்குகளைப் பார்த்தபோது, மேகலாவின் தலை கிர்ரென்று சுற்றியது. அவள் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாள்? ராத்திரியும் பகலுமாய் வெயிலிலும் மழையிலுமாய்ப் பாடுபட்டுச் சம்பாதித்தப்பணத்தை பாங்க் கடனுக்குக் கட்டிக்கொண்டேயிருக்கிறாள். ஆனால் கடன் அப்படியே இருந்தது.

மேகலா மாமாவையும் சுபாஷையும் கூப்பிட்டுக் கேட்டாள். இருவரும் எனக்குத் தெரியாது என்று சொல்லி விட்டார்கள். அதோடு இருவரும் சண்டைபோட்டு அடித்துக்

கொள்ளத் தயாராகிவிட்டார்கள். அவர்களிருவரையும் சமாதானப் படுத்துவதற்குள் மேகலாவின் உயிரே போய் விட்டது.

அன்றிரவு மேகலா கோபுவுடன் விளையாடிக் கொண்டிருக்கையில், மானஸா வந்து கிட்டே உட்கார்ந்து கொண்டே சொன்னாள்.

'அக்கா—அவர் மேல் உனக்குச் சந்தேகம் இருந்தால் கம்பெனி விவகாரங்களைப் பார்த்துக்க வேறு யாரையாவது வெச்சுக்கச் சொல்றார்' என்றாள்.

மேகலாவுக்கு வருத்தம் ஏற்பட்டது. 'இவ்வளவு பேச்சு எதுக்கு மானஸா? கணக்குப் பார்த்துப்பது தப்பா? நஷ்டம் வந்தால் ஜாக்கிரதையாய் இருக்கணும்னுஎண்ணுவது தப்பா? கொஞ்சம் ஜாக்கிரதையாய் பார்த்துக்கச் சொல்லு. இதெல்லாம் இந்தப் பயலுக்காகத்தானே?' என்றாள் கோபுவைக் காட்டி.

'நிஜந்தான் அக்கா' என்றாள் மானஸா சந்தோஷமாய்.

# 43

கிருஷ்ணராஜின் கடிதம் கிடைத்ததும் பானு தந்தையோடு சேர்ந்து வந்துவிட்டாள். ராஜாராமின் வீட்டிற்கருகிலேயே வீடு பார்த்துக் கொண்டார்கள். பானுவும் கிருஷ்ணஜுராம் மேலுக்கு ஒற்றுமையாய் இருப்பது போலவேதான் இருந்தார்கள்.

மேகலா கிருஷ்ணராஜைக் கொண்டு பாங்குக் கடனுக்கு மனு போடச் செய்தாள். தன் பிக்ஸெட் டிபாஸிட் பணத்தை உத்திரவாதமாய் வைத்துப்பணம் தரும்படியாய்ச் செய்தாள்.



நர்சிங்ஹோமிற்கு பஸ் வசதி நன்றாகவே இருந்தது. உண்மையில் வசதியான இடத்தில்தான் நிலம் வாங்கியிருந்தார்கள்.

மேகலாவுக்கு வீடு கட்டித் தந்த இஞ்ஜினீயரை வரவழைத்தாள். அவர் அனுபவசாலி; நல்ல பெயர் எடுத்தவர். குறைந்த இடத்தில் வசதியாய் இருக்கும்படியாய் பிளான் போடுவதில் அவருக்கு நிகர் அவர்தான்.

மேகலா ஒருநாள் அவரையும் கிருஷ்ணராஜையும் தன் வீட்டிற்குச் சாப்பிட அழைத்தாள். தன் அறையில் இருவரையும் உட்கார வைத்து அவ்விருவரும் நர்சிங்ஹோம் எப்படி இருக்க வேண்டும் என்று வாதாடிக்கொண்டிருக்கையில் கிருஷ்ணராஜுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அந்த விவரங்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாள். மாடியில் கிருஷ்ணராஜின் குடும்பம் இருந்து கொண்டு கீழே நர்சிங்ஹோம் கட்டுவதாய் ஏற்பாடயிற்று.

பேச்சு வார்த்தைகள் முடிவடைவதற்குள் மாலையாகி விட்டது. டிரைவர் இஞ்ஜினீயரை இறக்கிவிட்டு விட்டு வருவதற்காகப் போனான். மேகலா போன் வந்ததால் பேசிக் கொண்டிருந்தாள்.

கிருஷ்ணராஜ் திறந்திருந்த கதவு வழியாய் ரூஃப் கார்டனுக்கு வந்தான். அங்கே பலவிதப் பூஞ்செடிகள் பசுமையாய் வளர்ந்திருந்தன. அங்கிருந்து சூரியன் அஸ்தமனமாகிக் கொண்டிருந்த காட்சி கண்ணுக்கு விருந்தாய்த் தென்பட்டுக் கொண்டிருந்தது.

'ராஜ்! என்ன யோசிச்சிட்டிருக்கீங்க?' பின்னாலிருந்து வந்த மேகலா கேட்டாள்.

குட்டிச்சுவரின் மேல் கைகளை ஊன்றிக் கொண்டிருந்த அவன் திரும்பிப் பார்த்தான். 'இவ்விடத்தில் எவ்வளவு

நன்றாயிருக்கிறதுன்னு பார்த்துக் கொண்டிருக்கிறேன்'
என்றான்.

நீங்கள் நின்று கொண்டிருக்கிற இந்த இடம் இருக்கிறதே
இது எனக்கும் பிடித்தமான இடம். மனம் நன்றாயில்லாத
போது நான் இங்கே வந்து நின்று தனிமையை அனுபவிச்சுக்கொண்
டிருப்பேன். உங்களை எவ்வளவோ தடவை ஞாபகப்படுத்திக்
கொண்ட இடம்கூட இதுதான்' என்றாள். இருட்டிவிட்டது.
நைட்க்வீன் பூக்களின் மணம் காற்றில் குப்பென்று வந்து
வீசிற்று.

'இந்த வாசனை நினைவுக்கு வந்துவிட்டால் உங்களைப்
பற்றி ஞாபகம் வந்துவிடும். இந்த வீட்டில் தோட்டம்
போட்ட செடிகளை வைக்கச் சொன்னேன்; உங்களுக்கு
நினைவிருக்கா?' அன்றைக்கு நித்யாநந்தன் வீட்டு கேட்டு
கருகில் நடந்த சம்பாஷணையை நினைவு படுத்தினாள்.

கிருஷ்ணராஜிற்கும் ஞாபகம் வந்தது.

மேகலா அவன் ஆசுபத்திரியைப் பற்றியும், அதில் வாங்
கப்போகும் சாதனங்களைப் பற்றியும் பேசினாள். மேகலா
காட்டிய உங்சாகத்தையும், அவன் யோசனைகளைப் பங்
கெடுத்துக் கொள்ளும்விதத்தையும் பார்த்த அவனுக்கு ஏதோ
போலிருந்தது. பானுவை அவன் இப்படித்தான் இருக்க
வேண்டும் என்று விரும்பினான். இருவரும் சேர்ந்து இப்படிப்
பேசி முடிவெடுக்க வேண்டும் என்றும், சந்தோஷத்தைப்
பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் நினைத்தான்.
ஆனால் அவன் துரதிர்ஷ்டம் பானுவுக்கு ஆசுபத்திரியைப்
பற்றிப் பேச்செடுத்தாலே ஆத்திரம் வரும். 'அந்தச் சனியன்
பிடித்த விஷயமெல்லாம் எனக்கெதுக்கு? வீட்டில்கூட இதே
தானா?' என்பாள்.

பானுவுக்குக் கணவன் என்றால் சினிமாவுக்கு அழைத்துச்
சென்று, சீட்டாடிக்கொண்டு, சேர்ந்து குதிரைப் பந்தயத்
திற்குப் போய்க் கொண்டு, அவள் சிநேகிதிகளுடன் உல்லாச



மாய்ப் பொழுது போக்க வேண்டும். ஆனால் கிருஷ்ண
ராஜுக்கு பானுவின் சிநேகிதிகளோடு ஒத்து வராது. அவர்
களைப் பார்த்தால் எரிச்சல். தந்தையோ கணவனோ சம்
பாதித்துப் போட்டால் அந்தப் பணத்தைத் தாம் தூம்
என்று செலவழித்துக் கொண்டு, தாம்தான் எல்லோரையும்
விட உயர்ந்தவர்கள் என்று கர்வம் பிடித்து அலைபவர்கள்.

எட்டு ஆண்டுகளாய் இருந்தும் அவனை மாற்றிவிடாத
வெளிநாட்டு வாழ்க்கை பானுவை ஒரே வருஷத்தில் மாற்றி
விட்டது பானுவின் பேஷன்கள் மாறிவிட்டன. சிநேகிதர்
களும் மாறிவிட்டார்கள். தன் சங்கதியைத் தவிர மற்றவர்
களைப் பற்றி யோசித்துப் பார்க்கும் சுபாவமே பானுவிடம்
இல்லை. ஆணுக்கு மனைவி என்பவள் ஒவ்வொரு நிமிஷமும்
துணையாகவும் நிழலாகவும் இருக்க வேண்டியவள்; அதிலும்
இப்படிப்பட்ட தொழிலுக்கு அர்ப்பணமாகிவிட்ட ஆளாய்
இருந்தாலோ கேட்கவே வேண்டாம்.

ஆனால் வீட்டில் இப்படிப்பட்ட சுகம் கிடைக்காது.
டிரைவர் வந்தான். மேகலா கிருஷ்ணராஜை காரில் அனுப்பி
வைத்துவிட்டுத் திரும்பி வந்தபோது, மாமாவும் சுபாஷும்
அவ்விடத்திலேயே இருந்தார்கள். இருவர் பார்வையும் சூலங்
களாய் இருந்தன.

'மேகா! நீ ஓய்வாய் இருந்தால் இந்தக் கணக்கைக்
காட்டுகிறேன்' என்றான் பலராமன்.

'இப்ப வேண்டாம் மாமா, என்றாள் மேகலா.'

பலராமன் மங்களத்திடம், பொண்ணு மேல் ஒரு கண்
வெச்சுட்டிருக்கணும் எப்பொழுதும். இந்த டாக்டர் வலை
போடுகிறான் போலிருக்கு. அவன் க்ளினிக் கட்டிட்டிருக்கும்
போது நடுவே இவள் ஒருத்தி வேலையைக் கெடுத்துக்
கொண்டு நாளெல்லாம் அவங்களோடேயே ஏன் உட்கார்ந்
துட்டிருக்கணும்?' என்றான். சுபாஷ் கூட மானஸாவிடம்

'உங்க அக்காவுக்கு அந்த டாக்டர் என்றால் அவ்வளவு ஆசை எதுக்கு? இதற்கு முன்னாடியே ரெண்டு பேருக்குமிடையே ஏதாவது கதை கிதை உண்டோ?' என்றான்.

'சீ சீ! அதெல்லாம் இல்லை. அக்காவுக்கு அவரை நன்றாய்த் தெரியும்; அவ்வளவுதான்' என்றாள்.

'இதைவிட தெரிஞ்சவங்களையெல்லாம் பார்த்திருக்கிறேனே! இவள் அவங்களிடமெல்லாம் எப்படி இருக்காள்னு எனக்கா தெரியாது?' என்றாள் சுபாஷ்.

## 44

மேகலா படுக்கையில் படுத்துக்கொண்டு கோபுவுடன் விளையாடிக்கொண்டிருந்தாள். அவனுக்குப் பேச்சு நன்றாய் வந்துவிட்டது. மேகலா வீட்டில் இருந்தால் அவளிடந்தான் இருப்பான். மேகலாவுக்கு அவனோடு விளையாடிக்கொண்டிருந்தால் எஞ்சிய துன்பங்கள் எல்லாம் மறந்து போய் மனம் சந்தோஷமாய் இருக்கும்.

அதற்குள் மங்களம் அங்கே வந்தாள். 'மேகா அந்தப் பையன் வந்திருக்கான். படியேறி வந்ததால் மூச்சிரைத்துக் கொண்டிருந்த போதிலும் முகம் மலரச் சொன்னாள் இதை.

'எந்தப் பையன் பாட்டீ?' என்றாள் மேகலா.

'உனக்கு அன்றைக்குச் சொல்லவில்லை? சரஸ்வதி மோகனின் ம க ன் ! இஞ்ஜினீயரிங் படிச்சிருக்கான்னு சொன்னேனே! வரதராஜன்! அந்தப் பையன்தான்! ராஜா வாட்டம் இருக்கான். உன்னைக் கண்டால் அவனுக்கு உயிராம். ஒரு சினிமா பாக்கியில்லாமல் பார்த்துடுவானாம். நான் ரொம்ப நேரமாய் பேச்சுக் கொடுத்து எல்லா விஷயங்களையும் தெரிஞ்சுக்கிட்டேன்.' குறும்பாய்ச் சொன்னாள்.



'இப்ப இந்த நீட்டி முழக்கல் எல்லாம் எதுக்காக?'

'ஒரு முறை கீழே வாயேன். அவனோடு பேசு. அவன் தாய் தகப்பனுக்குக் கூட உன்னை ரொம்பப் பிடிச்சிருக்காம் உனக்கு அவனைப் பிடிச்சுட்டால் அப்புறமாய் அந்த ஏழுமலையானுக்கு நான் முடிஞ்சு வெச்சிருக்கிற காணிக்கையைச் சமர்ப்பிக்கும் யோகம் கிட்டும்!'

கோபுவுடன் விளையாடிக் கொண்டிருந்த மேகலா எழுந்து நின்று இடுப்பில் கையை வைத்துக்கொண்டே, 'பாட்டீ! நான் எவ்வளவு சொன்னாலும் நீ இந்தச் சம்பந்தங்கள் பார்க்கிறதை விட மாட்டாய்னு சொல்லு' என்றாள் கோபமாய்.

மங்களம் மேகலாவின் முகத்தில் தென்பட்ட கோபத்தைப் பார்த்துத் தணிந்தாள். நயமாய் சொல்லுவதுபோல,

'அது இல்லைம்மா! உன் கல்யாணத்தைக் கண்ணால பார்க்காமல் செத்துடுவேனோன்னு பயமாயிருக்கு. உன் கல்யாணம் ஆயிடுத்துன்னால் அப்புறமாய் எனக்கு எந்த ஆசையும் இல்லை. என் உயிர் நிர்ச்சிந்தையாய் போகும். மேகா! நீ எவ்வளவு அசடு பார்! என்னதான் நீ நன்றாய்ச் சம்பாதித்தால் மட்டும் கணவன் இல்லாவிட்டால் உனக்கு என்ன சுகம் சொல்லு? நீ எவ்வளவு நன்றாய்ப் பார்த்துக் கொண்டாலும் இவன் உன் வயிற்றில் பிறந்த மகன் எப்படி ஆவான்?'

மானஸாவின் மகனைக் காட்டிச் சொன்னாள்.

'எல்லாம் நாம்ப எண்ணிக்கிறதில் இருக்கு.'

'வாழ்நாளெல்லாம் உன்னால் சினிமாவில் நடிச்சுட்டு உட்கார்ந்திருக்க முடியுமா? உன் புருஷன், உன்வீடு, உன் குழந்தைங்கள் என்று உனக்கு இருக்க வேண்டாமா? நீ உன் குழந்தையைத் தூக்கி இப்படிக் கொஞ்சிக் கொண்டிருப்ப

தைப் பார்க்கணும்னு தவிக்கிறேன் நான்! பைத்தியக்காரி! தங்கையின் குழந்தையைப் பார்த்து இவ்வளவு மெய் மறந்துப் போகிறாயே! உன் மகனாகவே இருந்தால் எவ்வளவு சந்தோஷப்படுவாய்!'

'சரி போதும், நிறுத்து!'

'கணவன், குழந்தைகள் இல்லாத பெண்ணின் வாழ்க்கை இலையுதிர்ந்த மரத்தைப் போலன்னு சொல்லுவாங்க.'

'கிழிச்சாங்க. அப்படிச் சொன்னவங்களுக்குப் பெண்களைப்பற்றிச் சரியாய் தெரிஞ்சிருக்காது.'

'சரி போகட்டும்மா! இது என் கடைசி முயற்சி. இனி ஒரு நாளும் உன்னைக் கேட்கமாட்டேன். போதுமா? ஒரு முறை கீழே வா. எனக்காக என் கண்ணோன்னோ?' முகவாயைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

மேகலா சரேலென்று அக் கையைத் தள்ளி விட்டாள்.

'இவ்வளவு சம்பாதித்திருக்கேன். எனக்கென்ன குறைஞ்சுடுத்துன்னேன்? இப்ப எனக்குக் கல்யாணம் ஆகாவிட்டால் என்னவாயிடப்போறது?' என்றாள் மேகலா.

'அதாம்மா! என்பயம்கூட, அதேதான். இவ்வளவு பணம் உன் பேரில் இருப்பதால் உனக்குப் புருஷன் என்கிற ஒருவனும் ரொம்பத் தேவை. இவங்கள்ளாம் வெல்லத்தைச் சுற்றி மொய்க்கிற ஈயைப் போன்றவங்கம்மா! உன் தங்கையும் அவள் புருஷனும் உன்னை வைத்துக் காப்பாற்றிடுவாங்கன்னு நினைச்சுடாதே!'

மங்களம் அந்தச் சுற்று வட்டாரத்தில் மானஸாவும் சுபாஷும் இல்லை என்று தெரிந்துகொண்டு குரலைத் தாழ்த்தியபடி சொன்னாள்:

பக்கங்களை மடக்காமலும் ...
புத்தகத்தை கவனமாக கையாளுங்கள்.



'அந்த சுபாஷைப் பார்த்தாயா? உன்னிடம் வரும்போது எப்படி இருந்தான், இப்ப எப்படி இருக்கான்? அவன் ஐந்து லட்சம் போட்டு வீடு வாங்கியிருக்கான், பார்த்தாயா? அப்பன் கடன் கொடுத்ததாய்ச் சொல்கிறான். எல்லாம் பொய்.' திரும்பவும் குரலை உயர்த்தி,

'இப்படிப் பட்டதை யெல்லாம் நாம்ப வெளியே சொல்லிக்கக் கூடாது. இந்த வரதராஜன் இருக்கான் பார்: புத்திசாலி ரொம்பப் பொறுமைசாலி படித்தவன். நல்ல குடும்பம், ஒரு தடவை வந்து அவனோடு பேசும்மா.'

'சே சே! நீ இப்படி சம்பந்தம் பார்க்கறதை விடவே மாட்டாய்! இவ்வளவு வயதான பிறகு இப்ப எனக்குக் கல்யாணம் எதுக்கு?' என்றாள். மங்களம் கன்னத்தில் இடித்துக் கொண்டாள். 'என்ன வயசு? இருபத்திரெண்டுதானே?'

'சட்! ஊராரிடமெல்லாம் சொல்ற பொய்யை என்னிடம் ஏன் சொல்கிறாய்? எனக்கு இருபத்தொன்பது!'

'நீ அப்படித் தென்பட்டால்தானே? யாருமே எப்படித் தென்படறாங்களோ அப்படி வயதை நினைச்சுக்கணும், வா என் பேச்சைக் கேளு.' இனி ஒருபோதும் உன்னை இப்படிக் கேட்கமாட்டேன்.'

'நிஜமாகவா?'

'சத்தியமாய்! இந்தச் சம்பந்தம் எப்படியாவது குதிர்ந்து விடாதா? அதற்கப்புறம் நான் கேட்கவேண்டிய தேவையே இருக்காது. பையன் எவ்வளவு சிவப்பாய் இருக்கான் தெரியுமா?'

மேகலா அப்படியா என்பதுபோல் பார்த்தாள். 'சரி வா' என்றாள் மங்களம் முன்னால் நடந்து கொண்டிருக்க, மேகலா படியிலிருந்து இறங்கி வந்தாள். ஹாலிலிருந்த சோபாவில் சிவப்பாய் உயரமாய் இருந்த ஒருவன் கால்மேல்

கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் மேகலாவைப் பார்த்ததுமே படித்துக் கொண்டிருந்த பேப்பரைப் பக்கத்தில் வைத்துவிட்டுச் சட்டென்று எழுந்து நின்றான்.

மங்களம் மேகலாவைப் பரிச்சயம் பண்ணினாள். 'எங்க மேகலா, அப்பா! இவளுக்கு இப்ப இவ்வளவு பேரும் புகழும் வந்திருக்கே தவிர, சின்ன வயதிலெல்லாம் மங்களத்தின் பேத்தி என்றுதான் சொல்லுவாங்க' என்றாள் பெருமை யோடு. அவன் மேகலாவை வணங்கினான். மேகலா சோபாவில் உட்கார்ந்துகொண்டு அவனையும் உட்காரச் சொன்னாள்.

'நான் இதோ வரேன், பேசிட்டிருங்க.' மங்களம் வரத ராஜன் பாராதவாறு மேகலாவைக் கிள்ளிவிட்டு உள்ளே போனாள்.

மேகலா அவனைப் பார்த்தாள். அவன் நல்ல ஆரோக் கியத்துடன், சிவப்பாய் இருந்தான். மேகலா பார்த்ததைப் பார்த்து வெட்கப்பட்டவனாய்க் கண்களைத் தாழ்த்திக் கொண்டான். நிமிர்ந்து மேகலாவைப் பார்க்க முடியாத வனாய் சங்கோஜப்பட்டுக் கொண்டிருந்தான். மேகலா அவன் அவஸ்தையைப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள்.

'என்ன படிச்சிருக்கீங்க?'

'எம் இ... பைனல் இயர்.'

'உத்யோகம் பண்ணப் போறீங்களா அல்லது வியாபாரமா?'

'அப்பா ஃபாரினுக்கு அனுப்புவதாய்ச் சொல்கிறார் '

'அங்கேயே செட்டிலாயிடுவீங்களா அல்லது இங்கே திரும்பி வருவீங்களா?'



'எங்க உறவுக்காரங்க எல்லோரும் அங்கேயே தான் இருக்காங்க. அப்பா எப்படிச் சொல்றாரோ அப்படிச் செய்வேன்!'

'உங்க ஹாபி என்னென்ன?'

'உங்க சினிமாக்களைப் பார்ப்பது!' டக்கென்று பதிலளித்தான். மேகலாவுக்கு அந்த பதில் சந்தோஷத்தைத் தரவில்லை.

'உங்களுக்கு வரப்போற மனைவி எப்படியிருக்கணும்?'

அவன் சிரித்து விட்டுப் பேசாமலிருந்தான். மேகலா வுக்கு அவன் நேராய் நிமிர்ந்து உட்காராமல் நாணிக் கோணிக் கொண்டு உட்கார்ந்திருந்தது வெறுப்பைத் தந்தது.

மங்களம் காபி கொண்டுவந்தாள். அவன் மங்களத்தோடு நன்றாகவே பேசினான். மேகலா பேசினால்தான் வெட்கப் பட்டான். அவன் போய் விட்டான்.

'எப்படி இருக்கான்!' மங்களம் ஆர்வத்துடன் ஓட்டோடி வந்த கேட்டாள்.

'பாட்டி, அவனுக்கு என்ன வயசாம்?'

'இருபத் தொன்பது!'

'பொய் சொல்லாமல் நிஜத்தைச் சொல்லு!'

'அதென்னவோ, இருபத்தாறாம். ஏன், எதுக்கு?'

'ஒன்றுமில்லை!'

'வயசு கிடக்கு! உனக்குப் பிடிச்சிருக்கா அவனை, அதைச் சொல்லு!'

'ஏன் பிடிக்காது பாட்டி? அவன் அவங்கப்பாவுக்குக் கைக் குழந்தை. இந்தக் குழந்தையை நான் கல்யாணம்

பண்ணிக்கிட்டால் அப்புறமாய் குழந்தைங்களே தேவை யில்லை. இவனையே ஒரு குழந்தையாய் நினைச்சுக்கலாம்.'

'இதென்ன, ரொம்பத்தான் இளப்பமாய் பேசுகிறாய்.'

'அப்படித்தான் பாட்டி! அந்தப் பெரிய மனுஷன் என்னைப் பார்த்ததுமே நாணிக் கோணிக்கொண்டான். என்னை ஒருவயது வந்த பெண்ணாய் அவன் பார்க்கவில்லை; பிரபல நடிகை மேகலாவாய்ப் பார்க்கிறான். அவனால் ஜென்மத்திலும் எனக்கு முன்னாடி ஃப்ரீயாய் இருக்க முடியாது பாட்டி. பாவம் அந்தப் பையன்! நிஜமாய் நல்ல பையனாய் தான். இருக்கான். அவனை நான் எதற்குத் துன்பப்படுத்தணும்? அவனுக்குத் தகுந்த பெண்ணைப் பண்ணிக் கொண்டால் சுகப்படுவான்!'

'அப்படீன்னால் உனக்குப் பிடிக்கலைங்கிறாயா? பையன் அவ்வளவு அழகாய் இருந்து படித்தும் இருக்கான். இன்னும் வேறென்ன வேண்டும்?'

'எனக்கு என்ன வேணும்னு உனக்குச் சொன்னாலும் புரியாது பாட்டி. நான் கல்யாணம் பண்ணிக்கப் போறவன் நான் பெரிய நடிகை என்றும், பேரும் புகழும் பெற்றவள் என்றும் நான் மறந்து போகும்படிச் செய்கிறவனாய் இருக்க ணும். தன் வாழ்க்கையில் நான் ஒரு அபூர்வ வரம் போன்ற வள் என்று பாவிக்கணும். கல்யாணம் பண்ணிக்கணும்னு எனக்கு மட்டும் இல்லையா, என்ன? நான் சரியான ஆளைத் தேடிட்டுதான் இருக்கேன். எல்லோரும் என்னை நடிகை மேகலாவாய் விரும்புகிறாங்களே தவிர, என்னை எனக்காக விரும்பவில்லை. அவங்க கண்ணெல்லாம் நான் சம்பாதித்த பணத்தின் மீதும், பெயரின் மீதுந்தான் இருக்கிறதே தவிர, என் மேல் இல்லை. அவங்களுக்கு என் பணந்தான் வேண்டும் தவிர, நான் தேவையில்லை. தாங்க்காட்! கல்யா ணம் என்றால் ஒரு பிரம்மை என்று ஆகாமல் பாடம் கற்றுத்



தந்துட்டான் பிரசாத்! கல்யாணமானால் சுகப்படணும் பாட்டி!

'இந்த நடிக வாழ்க்கையைத் திரணமாய்ப் பாவித்து அதை விட்டு விடக்கூடிய நிலையில் இருக்கணும். அப்படிப் பட்ட சக்தியை வரப்போற அவன் வழங்க வேண்டும். இல்லாவிட்டால் கல்யாணம் என்றால் கஷ்டங்களை மூட்டைக்கட்டிக் கொண்டதாய்த்தான் ஆகும். இதுகடைசி முயற்சி என்று சத்தியம் பண்ணிட்டாய். இனி இந்தக் கல்யாணப் பேச்சை என்னிடம் எடுக்காதே!'

'அழகாய் இருக்கும்மா! அப்ப என்னவோ பணம் இல்லா மல் உன் கல்யாணம் ஆகலை. இப்ப என்னவோ, பணம் அதிகமாய் போய் உன் கல்யாணம் ஆகவில்லை. உன் ஜாதகத்தில் கல்யாண யோகமே இல்லையோ என்னவோ?' அந்த ஏழுமலையானுக்கு நான் முடிந்துகொண்டிருக்கிற காணிக்கையைச் சமர்ப்பிக்கும் யோகம் உண்டோ, இல்லையோ?' மங்களம் மன வருத்தத்துடன் நினைத்துக் கொண்டாள்.

## 45

'நாகராஜன் சார்! பத்மாசினி பிக்சர்ஸ் அவர்களிட மிருந்து வாங்கிக் கொண்ட அட்வான்ஸைத் திருப்பித் தந் துடுங்க. நான் அந்த பிக்சரில் நடிக்கப் போறதில்லைன்னு சொல்லிடுங்க' என்றாள்.

'இதென்னம்மா இது?' என்றான் நாகராஜன் ஆச்சரியத் தோடு. அந்த பிக்சர்ஸார் ஷூட்டிங்குகளை ரோம், பாரீஸ், சுவிட்சர்லாந்து முதலிய இடங்களில் சினிமாஸ்கோப்பாய் எடுக்க வேண்டுமென்று முயற்சி பண்ணிக் கொண்டிருந் தார்கள். மேகலா அப்படத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே சந்தோஷமாகவே ஒப்புக் கொண்டிருந்தாள்.

மேகலா அவன் சந்தேகத்தைப் புரிந்து கொண்டவளாய்—

'சுமார் ஐந்தாறு வருஷமாய் காலில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டு இந்த அவுட்டோருக்காகச் சுற்றிச்சுற்றி எனக்கு அலுத்துப் போய் விட்டது. கொஞ்ச நாள் வீட்டை விட்டு நகராமல் இருக்கணும் போலிருக்கு. இதப் பாருங்கள், நிறைய நாள் அவுட்டோர் இருந்தால் கால்ஷீட்டுகளை இனி நீங்கள் தரவேண்டாம். இனிமேல் நான் ஞாயிற்றுக் கிழமைகளில் வேலைசெய்யப் போறதில்லை. ராத்திரி எட்டு மணிக்குப் பிறகு ஸ்டுடியோவில் இருக்க மாட்டேன். இதற் கெல்லாம் ஒப்புக் கொண்டவங்களுக்கு மட்டுமே கால்ஷீட் தாங்க. சினிமாக்கள் குறைந்துவிட்டாலும் பரவாயில்லை. வருஷத்துக்கு ரெண்டோ மூன்றோ போதும்!'

'இப்படிச் சொன்னால் எப்படி மேடம்?'

'ஏன்? எதுக்கு?'

'ரெண்டோ மூணோ ஒப்புக்கொண்டால் உங்கள் பெயரில் இருக்கிற கடன்களையெல்லாம் எப்படித் தீர்ப் பீங்க?' என்று நாகராஜன் வரிசையாய் 'மேகலா கூல் டிரிங் க்பேக்டரி'யின் பெயரில் இருந்த கடன்களையும், கட்ட வேண்டிய இன்கம்டாக்சுகளைப் பற்றியும் நினைவு படுத் தினான்.

நாற்காலியை விட்டு எழுந்திருக்கப் போன மேகலா, நின்று அப்படியே பின்னுக்குச் சாய்ந்துகொண்டாள். யோசனையில் ஆழ்ந்து விட்டாள். இந்தக் கடன்களை அவள் ஏன் வாங்கினாள்? இதைத் தீர்ப்பதற்காக அவள் இத்தனைக் கஷ்டப்பட்டு சம்பாதித்துக் கொண்டிருக்கிறாள். எவ்வளவு சம்பாதித்தாலும் ஏதோ ஒன்றிற்குக் கட்ட வேண்டியிருக் கிறது. அதனால் பணத்திற்குத் தட்டுப்பாடாகவே இருக் கிறது. முன்னைவிட இன்னும் அதிகமான ரேட்டும் வாங்கு கிறாள்.



இந்தப் பணமெல்லாம் என்னவாகிக் கொண்டிருக்கிறது? மேகலா தீர்க்கா லோசனையில் ஆழ்ந்துவிட்டாள்.

மேகலா பத்மாசினி பிக்ஸாரின் படத்தில் நடிக்கப்போவ தில்லை என்று அட்வான்ஸைத் திருப்பித் தந்து விட்டதை யறிந்து வீட்டிலிருந்தவர்கள் எல்லோரும் திகைத்துப் போய் விட்டார்கள். திரும்பவும் வெளிநாட்டுப் பயணம் போகலாம் என்று சப்புக் கட்டிக் கொண்டிருந்த சுபாஷுக்கும் மானஸா வுக்கும் இது பெருத்த ஏமாற்றமாயிருந்தது.

அந்த ப்ரொட்யூசர் மேகலாவை விட்டுவிடவில்லை. பணத்தை இருமடங்கு தருவதாய்ச் சொன்னார். மும்மடங் கும் உயர்த்தினார். கடைசியில் படத்தின் லாபத்தில் பாகம் தருவதாயும் சொன்னார். ஆனால் மேகலா எந்த ஆசைக்கும் கரைந்து போய் விடவில்லை. ஒப்புக்கொள்ளவே முடியாது என்று மறுத்துவிட்டாள். சுபாஷ் அந்தப் பணம் சாமானிய மில்லை என்றும் ஒப்புக்கொள்ளும்படியும் சொன்னான். பலராமனும் பலவந்தப்படுத்தினான்.

ஆனால் மேகலா ஒப்புக்கொள்ளவில்லை. தன் அபிப் பிராயத்தை மாற்றிக் கொள்ளவில்லை. அதே கால்ஷீட்டை சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலுத் எடுக்க விருந்த இன்னொரு சின்ன படத்தயாரிப்பாளருக்குத் தந்து கையெழுத்தும் போட்டுவிட்டாள்.

மேகலா நடிக்கப் போவதில்லை என்று தெரிந்த பத்மா சினி பிக்ஸர்ஸாரின் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் கை நழுவிவிட்டார் கள். அதன் பலனாய் அந்த பிக்ஸர் நின்று போய்விட்டது. அந்தப்ரொட்யூசர் வெகுண்டெழுந்தார். 'என்னை இப்படிப் பண்ணினாளா? நான் யாருன்னு காட்டிவிடுகிறேன். பெரிய நடிகை என்று தலைக்கனம் பிடித்து அலைகிறாள் போலிருக்கு!' அந்த ப்ரொட்யூசர் கோபத்துடன் சபதம் செய்தார்.

பத்திரிச்கையாளர்களைக் கூப்பிட்டார். மேகலாவின் நடத்தை சரியாயில்லை என்றும் தலைக்கனம் பிடித்து நடந்து கொண்டதால், தானே அவளைத் தள்ளிவிட்டு வேறு புதிய நடிகையைக் கொண்டு படம் எடுத்துக் கொண்டிருப்பதாகவும் ஸ்டேட்மென்ட் தந்தார். ஆனால் எல்லா பத்திரிக்கைகளிலும் மேகலாவின் துடுக்குத்தனத்தைப் பற்றி விதம் விதமான செய்திகள் வரத் தொடங்கின. ஆனால் மேகலா அவற்றைப் பொருட்படுத்தவில்லை

கிருஷ்ணராஜின் நர்சிங்ஹோமிற்காக இஞ்ஜினீயர் பிளானைத் தயாரித்து அனுப்பினார் மேகலா அவற்றை எடுத்துக் கொண்டு அவனிடம் போனாள். கிருஷ்ணராஜ் கடைசி நோயாளியைப் பார்த்து அனுப்பிவிட்டு வந்தான்.

மேகலா அவன் உட்கார்ந்துகொள்ளும் நாற்காலியில் உட்கார்ந்து பிளானைப் பரப்பிக்காட்டினாள். கிருஷ்ணராஜ் மேகலாவிற்குப் பக்கத்தில் நின்று கொண்டு அதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தான். மேகலா விவரித்துச் சொன்னாள். அங்கங்கே செய்ய வேண்டிய மாறுதல்களைப் பென்லால் குறிப்பிட்டாள். கிருஷ்ணராஜ் மேகலாவின் புத்தி கூர்மையையும் யோசிக்கும் திறனையும் கண்டு வியப்படைந்தான்.

மேகலா பிளானைப் பக்கத்தில் வைத்துவிட்டு, கைப்பையைத் திறந்து செக் புத்தகத்தை எடுத்து செக்கில் ஒரு லட்சம் ரூபாய்க்கு எழுதிக் கையொப்பமிட்டு, கிருஷ்ணராஜிடம் தந்தாள். அதைப்பார்த்து அவன் ஆச்சரியமடைந்தான்.

'மேகலா! இதென்ன?' என்றான்.

'நீங்கள் கட்டப் போகிற ஆசுபத்திரிக்கு நன்கொடையாய் நான் உங்களுக்குத் தரவில்லை.' என்னைப் போன்ற துரதிர்ஷ்டசாலிகளுக்கு நீங்கள் செய்யும் உபகாரத்தில் கொஞ்சம் பங்கெடுத்துக் கொள்கிலேன்.' எனக்கு இந்த அருகதை இருக்குன்னு நினைக்கிறேன்.'



கிருஷ்ணராஜ் மேகலாவையே பார்த்துக்கொண்டிருந்தான். அக்கண்களில் நிர்மலம் இருந்தது. அம்முகத்தில் அபூர்வமான பண்பு இருந்தது. இழுத்துவாரி கேசங்களைக் கட்டிக்கொண்டிருந்தாள். செவிகளுக்கும் கைகளுக்கும் கழுத்திற்கும் முத்துநகைகள்! வெள்ளை வாயில் புடவை—கஞ்சிபோட்டு விறைப்பாய் இருந்தது. அப்புடவை மூலமாய் ஒல்லியாய் இருக்கும் மேகலா கொஞ்சம் பருமனாய், கம்பீரமாய்த் தோன்றினாள். அவள் அவ்வாறு உட்கார்ந்திருந்தது ப்ரிஸ்க்ரிப்ஷன் எழுதிக்கொண்டிருந்த டாக்டரைப் போலத் தோன்றிற்று.

'என்ன அப்படி பார்க்கிறீங்க?' முறுவலுடன் கேட்டாள்.

ஊஹூம், என் கண்களுக்கு நீ டாக்டராய்த் தென்படுகிறாய்!'

மேகலாவின் கண்கள் படபடத்தன.

'தாங்க்யூ! என்ஜென்மத்தில் இதைவிட நல்ல காம்ப்ளிமென்ட் இருக்காதுன்னு நினைக்கிறேன்' என்றாள். அவன் அந்த முயல் பொம்மையையும் அவளையும் மாறிமாறிப் பார்த்தான். ஒருகாலத்தில் ஆதரவின்றி பத்துருபாய் ஃபீசு கூடத்தரக் கதியில்லாமலியிருந்த மேகலா இன்று அவன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மிடுக்காய் ஒரு லட்சத்திற்கு செக் தந்திருக்கிறாள்! அது அவன் வாழ்க்கையிலேயே அருமையான தருணமாய்த் தோன்றிற்று.

மேகலா தினமும் ஷூட்டிங் ஆனதுமே நேராய் கிருஷ்ணராஜின் க்ளினிக்கிற்கு வந்துவிடுவாள். இருவரும் உட்கார்ந்து நர்சிங் ஹோமைப் பற்றிப் பேசித்தீர்த்துக் கொள்வார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் மேகலாவே பார்த்துக் கொண்டாள். அந்தப் பொறுப்புக்களை இஞ்ஜினீயரிடம் ஒப்படைத்து விட்டிருந்தாள்.

ஒரு நாள் மிக எளிமையாய் மேகலா தானே தேங்காயை உடைத்து நர்சிங் ஹோமிற்குத் திறப்பு விழாவை நடத்தினாள். அங்கே கேமிராக்கள் இல்லை. சந்தடி இல்லை.

'மேகா! உனக்கு எப்படி நன்றி தெரிவிப்பதுன்னே தெரியலை. இன்றைக்கு யோசித்துப் பார்த்தால், அன்றைக்கு நான் நம் நாட்டை விட்டு அமெரிக்காவுக்குப் போறேன்னது எவ்வளவு முட்டாள்தனம்னு புரிகிறது. நீ சரியான சமயத்தில் வந்து என்னைக் காப்பாற்றிவிட்டாய். நீ உன்மையில் என் உயிர் சிநேகிதி. சிநேகம் என்றால் இதுதானே மேகா? வாழ்க்கையில் எதிரடி பட்டு மனிதன் திகிலடைந்துப் போகும் பொழுது கை கொடுத்து உதவுவது! தாங்க்யூ மேகா' என்றான்.

மேகலா பதில் பேசவில்லை. கண்ணீரை அடக்கிக் கொள்ள பெரும்பாடு படவேண்டியிருந்தது.

மேகலா ஷூட்டிங்கிலிருந்து வரத்தாமதமானால் கிருஷ்ணராஜுக்குப் போன் செய்வாள். சில சமயம் மேகலா போகும் பொழுது நோயாளிகள் எல்லோரும் போய் விட்ட பிறகும் அவளுக்காகக் காத்திருப்பான் அவன். மேகலாவைப் பார்க்காமல் அவன் வீட்டிற்குப் போகமாட்டான்.

பானு அவனோடு சுமுகமாய் இருந்ததாகவே தோன்றிற்று. மேகலா ஒரு முறை அவர்கள் வீட்டிற்குப் போனாள். பானு கிருஷ்ணராஜின் மேல் மிக அன்பு இருப்பதுபோல் பேசினாள்.

இந்த நாட்டில் இருந்தால் என்ன வரும்? அமெரிக்காவாயிருந்தால் எவ்வளவோ சம்பாதிக்கலாம். நீங்கள் அவரை அமெரிக்காவுக்குப் போகும்படிச் சொல்லுங்கள்; உங்கப் பேச்சை அவர் தட்டமாட்டார் கேட்பார்' என்றாள்.

மேகலாவால் பதில் பேசமுடியவில்லை. பானுவுக்கும் கிருஷ்ணராஜுக்கும் அபிப்பிராயங்களில் ஒற்றுமை இல்லை என்று புரிந்துகொண்டாள்.





## 46

மேகலா மகாபலிபுரத்திற்கு அவுட்டோர் ஷூட்டிங் போனாள். இரண்டுநாட்கள் ஷூட்டிங் நடந்தது. மூன்றாவது நாள் ஷூட்டிங்கை முடித்துகொண்டிருந்த லாரிஒன்று பிரேக் ஃபெயிலாகி விட்டதால் காரின் மேல் வந்து மோதி விட்டது. ஆனாலும் டிரைவர் சாமர்த்தியத்தால் காரைத் திருப்பிவிட்டதால் கார் தெருவிலிருந்து பள்ளத்தில் சரிந்து விட்டது. மேகலாவுக்கும் டைரக்டருக்கும் நல்ல அடிகள் பட்டுவிட்டன. டிரைவருக்கு கால் ஃபிராக்சராகிவிட்டது.

மறுநாள் பேப்பரில் இச்செய்தி வெளிவந்து விட்டது. இரண்டுநாட்கள் ஷூட்டிங்தவிர்க்கப்பட்டுவிட்டது. மேகலாக்கு முகத்திலும், முழங்கையிலும் முழங்காலிலும் அடிபட்டிருந்தது. லேசாய் ஜுரம் வந்து, டாக்டர் பேண்டேஜ் கட்டி நன்றாய் ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொல்லியிருந்தார்.

மேகலா கெஸ்ட் ஹவுசில் தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையில் படுத்துக்கொண்டிருந்தாள்.

அங்கிருந்து ஜன்னல் வழியாய்ப் பார்த்தால் தொலைவில் சமுத்திரம் தென்பட்டது.

மேகலாவைப் பார்க்க விஸிட்டர்கள் கூடிவிட்டார்கள். அவர்களை அப்புறப்படுத்தி மேகலா ஓய்வெடுத்துக்கொள்ளும்படியாய்ப் பார்த்துக் கொண்டான் நாகராஜன்.

பிற்பகலில் நாகராஜன் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்து கொண்டே,- 'அம்மா, டாக்டர் வந்திருக் கிறார்' என்றான்.

கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த மேகலா கண்ணைத் திறந்து பார்த்தாள். 'எந்த டாக்டர்?' என்று கேட்பதற்குள் ளாகவே கிருஷ்ணராஜ் உள்ளே வந்து விட்டான். அவன் உடைகள் மாசடைந்திருந்தன. கிராப் கலைந்திருந்தது. நேராய் மேகலாவிடம் வந்தான்.

'மேகா, எப்படி இருக்கிறாய்? நன்றாய் அடிபட்டு விட்டதா?'

மேகலா எதிர்பாராமல் அவனைப் பார்த்ததால் மகிழ்ச் சியடைந்தவளாய் எழுந்து உட்கார்ந்துக்கொண்டாள். 'பரவாயில்லை' என்றாள்.

அவன் மேகலாவின் நெற்றியில் கைவைத்துப்பார்த்தான்.

'ஜுரம் இருக்கிறது' என்றான். காயங்களைப் பரிசோதித்து விட்டு, 'அம்மாடா! காலையில் காபி குடித்துக் கொண்டிருக்கும்போது பேப்பரில் இந்தச் செய்தியைப் பார்த்தேன். என் உயிரே போய் விட்டாற்போல ஆயிற்று. பானு ஏதோ சொல்லிக் கொண்டேயிருந்தாள். என் காதில் அதொன்றும் விழவேயில்லை. சரேலென்று சட்டையை மாட்டிக்கொண்டு வந்து விட்டேன். பஸ் ஸ்டாண்டிற்கு வருவதற்குள் பஸ் போய்விட்டிருந்தது. லாரி ஒன்று வந்து கொண்டிருந்தது. அதில் ஏறி வந்துட்டேன். ஆக்ஸிடெண்ட் என்று எழுதியிருந்தாங்க. காயம் சொற்பம் என்றார்கள். ஷூட்டிங் தள்ளிப் போடப்பட்டது என்றும் எழுதியிருந் தார்கள். சொற்பம் என்றால் ஷூட்டிங் ஏன் தள்ளிப் போடப் படும் என்று நினைத்தேன்.'

அவன் பரபரப்பைப் பார்த்த மேகலாவுக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது.



'முதலில் குளியுங்கள்' என்றாள்.

காசி கிருஷ்ணராஜ் குளிப்பதற்கு ஏற்பாடு பண்ணினாள். நாகராஜன் இஸ்திரிபோட்ட தன் வேட்டியைத் தந்தான். மேகலா கிருஷ்ணராஜின் உடைகளை அர்ஜென்ட் வாஷிங்கிற்குத் தரச்சொல்லி உத்தரவிட்டாள். காசி. கொண்டுவந்து கொடுத்த தேநீரை இருவரும் குடித்தார்கள்

'அம்மாடா! உன்னைப் பார்த்த பிறகு தான் என் உயிரே திரும்பி வந்தது. மானஸா ஏன் உன்னோடு வரவில்லை' என்று கேட்டான்.

'மானஸாவின் நாத்திக்குக் கல்யாணம்' என்று சொன்னாள்.

கிருஷ்ணராஜ், மேகலா உட்கொண்டு வந்த மருந்து களைப் பார்த்தான். அவற்றை மாற்றித் தந்தான். 'நளைக்கு நன்றாய் குறைந்து விடும்' என்றான்.

அன்றிரவு திரும்பிப் போய் விடுவதாய்ச் சொன்னான். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. க்ளினிக்கிற்கும் பேக்டரிக்கும் கூட லீவுதான். மேகலா அவனை இருக்கச் சொல்லி வேண்டினாள். அவனால் மறுக்க முடியவில்லை.

பிற்பகலில் இருவரும் ஒன்றாய்ச் சாப்பிட்டார்கள். மேகலாவிடம் திரும்பவும் அதே உணர்ச்சி! அவன் முன்னிலையில் விநோதமான தைரியமும் நிம்மதியும் ஏற்படு கின்றன. வாழ்க்கையில் பயம் ஏற்படுவதில்லை. தனக்கு என்னவானாலுமபயமில்லை என்று தோன்றுகிறது. இந்த மலையத்தனை பலம் பாங்க்கில் பத்து லட்சம் ரூபாய்கள் இருந்தாலும் வருவதில்லை. மேகலாவுக்குத் தன் மனதில் என்ன இருக்கிறது என்று தனக்கே புரியவில்லை.

'மேகலாவுக்கு இன்னும் ஜுரம் இருந்தது. முகம்சோர்ந்து போய் பலவீனமாய் இருந்தது. கிருஷ்ணராஜ் மேகலாவிடம்

தான் அமெரிக்கவில் டாக்டராய் இருந்த அனுபவங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்.

அதற்குள் நாகராஜன் உள்ளே வந்தான். அவன் கையில் ஒரு டெலிகிராம் இருந்தது. அவன் வாயெல்லாம் பல்லாய் இருந்தது. சிரித்துக் கொண்டே கையிலிருந்த தந்தியைக் காட்டி, 'கங்கிராஜுலேஷன்ஸ் மேடம்! அண்ணாமலை யூனிவர்சிடியினர் உங்களுக்கு டாக்டரேட் கௌரவப் பட்டம் தந்திருக்காங்க. அடுத்தமாதம் ஆறாம்தேதி அண்ணாமலை நகரில் விழா இருக்காம்' என்றான்.

'நிஜமாகவா?' மேகலா கட்டிலிலிருந்து ஒரே பாய்ச்சலாய் எழுந்தாள். அவன் கையிலிருந்த டெலிகிரமைப் பிடுங்கிக் கொண்டு பார்த்தாள். 'மைகாட்!' தாங்க முடியாத சந்தோஷத்தால் உள்ளங் கைகளைக் கன்னங்களில் அழுத்திக் கொண்டாள்.

கிருஷ்ணராஜ் அதற்குள் மேகலாவின் கையிலிருந்த டெலிகிராமை வாங்கிப் பார்த்தான். அவனுக்கும் தாங்க முடியாத சந்தோஷம் ஏற்பட்டது. கையை நீட்டி, 'கங்கிராஜுலேஷன்ஸ் மேகா! நீயும் இப்பொழுது ஒரு டாக்டர்! ஹலோ டாக்டர் மேகலா!' என்று சொல்லிக் கொண்டே சட்டென்று மேகலாவை முழங்கால்களைச் சுற்றிலும் கைகளால் கட்டிக் கொண்டு அலாக்காய் தூக்கி விட்டான். காசி கைகளைத் தட்டினாள். நாகராஜன் கூட கைதட்டிச் சிரித்துக் கொண்டிருந்தான். அதற்குள் இந்த விஷயம் தெரிந்த யூனிட் ஃபோட்டோகிராப்பர்கள் கேமிராவை மாட்டிக்கொண்டு ஓடி வந்தார்கள்.

கிருஷ்ணராஜ் மேகலாவைத் தூக்கிவிட்டான். மேகலா அவன் தோள்களில் கைகளை ஊன்றிக் கொண்டு, சிரித்துக் கொண்டே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கேமிராக்காரன் மளமளவென்று இரண்டு போட்டோக்களை எடுத்துவிட்டான்.



'நோ அவுட்சைடர் ப்ளீஸ்!' நாகராஜன் போட்டோ கிராப்பரின் தோளைப்பிடித்து வெளியே இழுத்துக்கொண்டு போய்க் கதவைச் சாத்தி விட்டான். போன் கணகணத்ததால் காசி ஓடிப் போனாள்.

மேகலாவும் கிருஷ்ணராஜும் தனித்து எஞ்சி நின்றார்கள் அறையில்.

'சந்தோஷமாய் இருக்கிறாயா மேகா?' முகவாயைத் தூக்கிப் பிடித்துக்கொண்டே கேட்டான் கிருஷ்ணராஜ்.

'ரொம்ப! இந்தச் சுபச் செய்தியை உங்களோடு சேர்ந்து பங்கிட்டுக் கொண்டது இன்னும் இன்னும் ஆனந்தமாய் இருக்கிறது!' மேகலாவின் தொண்டையை ஏதோ அடைத்தது. கிருஷ்ணராஜிற்கு அப்பொழுதுதான் தான் மேகலாவை அலாக்காய்த் தூக்கியதே நினைவிற்கு வந்தது. இருவர் கண்களும் ஒன்றையொன்று சிறைப் பிடித்து விட்டாற்போல அப்படியே நின்று விட்டன. மேகலாவின் கைகள் அவன் தோள்களை அழுத்திப்பிடித்துக் கொண்டிருந்தன.

அவன் மெதுவாய், மிக மெதுவாய் மேகலாவைக் கீழே இறக்கிவிட்டான். மேகலா கட்டிலில் உட்கார்ந்துக் கொண்டாள். அவன் அப்படியே நின்று கொண்டிருந்தான்.

மேகலாவின் இதயம் விநோதமாய்ப் படபடத்துக் கொண்டிருந்தது. இங்கே யாருமில்லாமல் இருந்தால், தானும் அவனும் மட்டுமே இருந்தால்! மேகலாவுக்கு அவன் கழுத்தைச் சுற்றிலும் கைகளைப் போட்டுக் கொள்ள வேண்டும் போலிருந்தது. அவன் மார்பில் தலையைப் புதைத்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது. அவனுக்குத் தொலைவில் இருக்கமுடியாது போலிருந்தது. அவன் உடம்பிலிருந்த ஏதோ காந்தசக்தி மேகலாவின் உடலை மிகப் பலமாய் அவன் பக்கமாய் இழுத்துக் கொண்டிருந்தது.

அதற்குள் நாகராஜன் வந்து விட்டான். 'மேடம்! நீங்க டிரெஸ் பண்ணிக்கிறீங்களா? ப்ரொட்யூஸரும், டைரக்டரும், ஹீரோவும், எஞ்சியவர்களும் உங்களைக் கங்கிராஜுலேட் பண்ண வராங்க' என்றான்.

'காசி! எங்கே போயிட்டாய்? என் புடவை, ஜாக்கெட்டுகளைக் கொண்டு வா' என்றாள் மேகலா.

கிருஷ்ணராஜ் அங்கிருந்து போய்விட்டான். டைரக்டரும், ப்ரொட்யூசரும், ஹீரோவும் மற்றவர்களும் வந்தார்கள். ப்ரெட்யூசர் பூங்கொத்தைத் தந்து விட்டு, 'எங்கள் சினிமா ஷூட்டிங்கில் இருக்கும்போது உங்களுக்கு இந்த வெற்றி வந்தது எங்கள் அதிர்ஷ்டம்' என்றார்.

எல்லோரும் நின்று கொண்டு வரிசையாய் போட்டோக்களை எடுத்துக் கொண்டார்கள்.

அவர்களோடு உட்கார்ந்து தேநீர் குடித்துக் கொண்டே பேசிக் கொண்டிருந்த மேகலாவின் மனம் அவ்விடத்தில் இல்லை. ஜன்னல் வழியாய்க் கிருஷ்ணராஜ் தென்பட்டான்.

அவன் தொலைவில் புல் தரையைச் சுற்றியிருந்த இரும்புச் சங்கிலியைப் பிடித்துக்கொண்டே ஏதோ யோசனையில் ஆழ்ந்துப் போய் நின்றிருந்தான்.

மேகலாவுக்குத் திரும்பவும் அதே உணர்ச்சி! பின்னாலிருந்து சின்னப் பெண்ணைப் போல அவனிடம் ஓடிப் போய் அவன் கையைப் பிடித்துக் கொள்ளவேண்டும்; அவனுக்கு அண்மையில் இருக்கவேண்டும்......



# 47

மேகலா அண்ணாமலை யூனிவர்சிடியினர் வழங்கிய டாக்டரேட் கௌரவப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டபோது, அவள் கண்கள் குளமாகிவிட்டன. சிறுவயதில் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டுமென்றும் படிக்க வேண்டுமென்றும் எவ்வளவோ பாடுபட்டது நினைவிற்கு வந்தது. மாலையில் வீடு திரும்பியதும் காசி, 'அம்மா உங்களைப் பார்க்க வரப் போவதாய் மாதர்சங்கத்து செக்ரட்டரி பங்கஜாட்சி போன் பண்ணினாங்க' என்றாள்.

'நான் வீட்டில் இல்லைன்னு சொல்லு' என்றாள் மேகலா.

'அதில்லைம்மா!...'

'மேற்கொண்டு எதுவும் பேசாதே!' எரிந்துவிழுந்தாள். ஃப்ளவர் ஷோ எக்ஸிபிஷன் ஒன்று இருந்தது. அதை மேகலா திறந்து வைப்பதற்காக முக்கிய விருந்தினராய்ச் செல்ல இருந்தாள்.

மேகலா ரெடியாகி மளமளவென்று கீழே இறங்கி வந்தாள். மேகலா வாசலைத்தாண்டி வெளியே வந்து கொண்டிருக்கையில் ராமபூஷணன் தென்பட்டான். அவன் என்றுமில்லாதவாறு மேகலாவைப் பார்த்துச் சிரித்தான்.

'எங்கே போகிறாயம்மா?' என்று கேட்டான். மேகலா நின்று விட்டாள். உலகத்தில் எட்டாவது அதிசயத்தைப் பார்த்தாற்போல் சலனமில்லாமல் நின்றுவிட்டாள்.

'சரி, புறப்பட்டு விட்டாயோனோ, போயிட்டு சீக்கிர மாய் வந்துடு' என்றான் அவன்.

மேகலா காரை நெருங்கினாள். ராமபூஷணன் பெரிதாய் இரைந்து கத்தினான். 'அடேய் எவண்டா அங்கே? அம்மா வந்துட்டிருக்கும் போது கார்க் கதவைத் திறந்து பிடித்துக் கணும்னுகூடத் தெரியாதா?'

தொலைவில் கூர்க்காவோடு பேசிக்கொண்டிருந்த டிரைவர் ஓட்டமாய் ஓடிவந்தான். அதற்குள் ராமபூஷணன் கதவைத் திறந்து மேகலாவுக்காகப் பிடித்துக்கொண்டான். டிரைவரைப் பார்த்துக் கோபமாய் 'உங்களுக்கு அவ்வளவு சப்பளம் கொடுக்கறது எதுக்காக? தீவட்டித் தடியன்களாய் நிற்பதற்காகவா? அவளோட நல்ல குணத்தைப் பார்த்து நீங்கள் தலைக்குமேல் போறீங்க' என்று கத்தினான்.

கார் ஸ்டார்ட் ஆயிற்று. மேகலா வந்துகொண்டிருந்த போது இது கணவா நினைவா என்று தோன்றிற்று. அவ்வாறு நடந்துகொண்ட விதத்தையும் காட்டிய பரிவையும் பார்த்து மேகலாவுக்குத் தலை சுற்றிற்று.

சுமார் இரண்டுமணி நேரங் கழித்து மேகலா ஃப்ளவர் ஷோவைத்திறந்து வைத்துவிட்டு, அவர்கள் தந்த தேநீரைக் குடித்துவிட்டு ஷூட்டிங் முடிந்ததும் வீட்டிற்கு வந்தாள்.

வீட்டில் தந்தையும் சுபாஷும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீரஞ்சனியும் மானஸாவும்கூட அவ் விடத்தில்தான் இருந்தார்கள். ராமபூஷணனின் மடியில் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தான் கோபு. மேகலா மாடிக்குப் போக முயன்றபோது மானஸா வந்து கூப்பிட்டாள். 'அக்கா இப்படி வா!'

மேகலா நின்றாள். 'ஏன்?'



'இனி வேலையில்லையே! உனக்கு எப்போதும் வேலை மாயாது. வீட்டிலிருக்கிற கொஞ்ச நேரமாவது எங்களோடு இரேன். அப்பா கூப்பிடுகிறார், வா' என்றாள்.

'என்ன விஷயம், சொல்லு.'

சுபாஷ் கூட எழுந்து வந்தான்.

'வந்து உட்காருங்க. உங்களோடு ஒரு முக்கியமான விஷயம் பேசணும்' என்றான்.

'என்ன?'

'அட! நீங்க வந்து இப்படி உட்காருங்க. எங்களை இப்படி வேற்று மனிதர்களைப் போல் பாவித்துப் பேசுறீங்களே ஏன்?' மேகலா திரும்பிவந்தாள். அங்கிருந்த சோபா பக்கத்தில் வந்து நின்றாள். உட்காரவில்லை. ராமபூஷணன் குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்தான்.

'சொல்லுங்க, என்ன விஷயம்?' யாரையும் பார்க்காமலேயே கேட்டாள்.

சுபாஷ் கொஞ்சம் தடுமாறினான் முதலில். பிறகு தைரியமாய்ச் சொல்லிவிட்டான்: 'பாருங்கள், உங்களுக்கு ஒரு சுபச் செய்தி சொல்லப் போறோம்'.

'என்ன?'

'உங்கப்பா முனிஸிபல் எலெக்ஷனில் நிற்கப்போறார். நாம்ப சும்மா பணம் சம்பாதித்துட்டால் போதுமா? கொஞ்சம் வெளியே சுற்றிப் பேரும் புகழும் கிடைக்கிற வேலைகளையும் செய்யணும். அவர் நின்றால் நீங்கள் கான்வாஸிங்கிற்குப் போனீங்கன்னு வையுங்க, ஓட்டுக்கள் மழையைப் போல வந்து விழும். இங்கிருந்து தொடங்கினால் மெதுவாய் அரசியலில் இறங்கலாம். நமக்குப் பணம் மட்டுமில்லை, வெளியே அதிகாரம்கூட இருக்கணும்.

இருந்தால் ரொம்ப நன்றாயிருக்கும். இதில் நீங்கள் மறுப்பதற்கு எதுவுமில்லைன்னு தெரியும்; உங்களைக் கேட்கவே தேவையில்லைன்னு கூடச் சொன்னேன். எந்த மகளுக்குத்தான் தந்தை பெரியமனிதராய் வந்தால் பிடிக்காது? ஆனால் உங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லி விடவேண்டாமா?'

மானஸா கிட்டே வந்து நின்று சந்தோஷத்துடன் சொன்னாள்.

'ஆமாம் அக்கா? அப்பாவை நாம்ப எப்படியாவது இந்த நகரத்து மேயராக்கிடணும். நம்மை மேயரின் பெண்கள் என்று சொன்னால் எவ்வளவு மதிப்பு! அந்தத் தந்தையின் மகள்களாய் நமக்கு எவ்வளவு பெருமை!'

மேகலாவுக்குப் புரிந்துவிட்டது. காலையில் ராமபூஷணன் காட்டிய பரிவிற்கும், அன்பாய் பேசியதற்கும்பின்னால் இருந்த சுயநலம் புரிந்து விட்டது. மேகலாவுக்கு ஆவேசம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது உள்ளங்கைகளை மடக்கிக்கொண்டே நின்றிருந்தாள்.

'சொல்லு அக்கா!' என்றாள் மானஸா.

மேகலா மானஸாவை நோக்கித் திரும்பினாள். அம் முகத்தில் ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது. 'மானஸா! மொதல்ல இந்த விஷயத்தைச் சொல்லு! யார் தந்தை? யார் மகள்?' கடுமையாய் உலுக்கி எடுத்தாற் போலக் கேட்கவே மானஸாவின் முகம் பொலிவிழந்தது.

ராமபூஷணனைக் காட்டி விட்டு, 'இதென்ன அக்கா? அவர் நம்ப தந்தை! நாம்ப அவர் மகள்கள்' என்றாள்.

'அவர் எனக்குத் தந்தையில்லை. நானும் அவருக்கு மகள் இல்லை. என் தந்தைன்னு சொல்லிக்கிறத்துக்கு ஒன்று அவருக்கு புத்தியாவது கலங்கிப் போயிருக்கணும், அல்லது பைத்தியமாவது பிடித்திருக்கணும்!'



'மேகலா!' ராமபூஷணன் எழுந்து நின்று கத்தினான். அவன் கத்தலுக்கு மேகலா சற்றும் சலிப்படைந்து விடவில்லை. பயமோ கியமோ இல்லாமல் நேரிடையாய்ச் சொன்னாள்.

'ஹும்! தந்தையாம், தந்தை! இப்படிப்பட்டவங்க மூலமாய் தந்தை என்ற சொல்லுக்கே அவமதிப்பு ஏற்படுகிறது.'

'மேகலா! நான் உன்தந்தை இல்லையா? உங்கம்மாவைச் சொல்லச் சொல்லு.' ராமபூஷணன் சிவந்த கண்களுடன் கத்தினான்.

மேகலா தாயை நோக்கித் திரும்பினாள். ஸ்ரீரஞ்சனி பயந்து போய் கலக்கத்துடன் நின்றிருந்தாள். 'அம்மா சொல்லாமல் என்ன? நிறைய தடவை சொல்லியிருக்காங்க. எங்கம்மா சொன்ன தந்தையும், நாங்கள் ஊகிச்சுக்கிட்டிருக்கிற தந்தையும் நீங்கள் இல்லவே இல்லை. தந்தையாம் தந்தை! ஹும்! குழந்தைகளைப்பெற்றுவிட்ட மாத்திரத்தில் தந்தைன்னு சொல்லிக்க அதிகாரம் இல்லை. அவர்களை வளர்க்கணும்.'

மேகலாவின் கண்களில் கண்ணீர் பொங்கிவந்தது. சிறகு முளைக்காத அக்குஞ்சுகளை சிறகு முளைக்கிற வரைக்கும் தன் அன்பு என்ற கூட்டில் பத்திரமாய் வைத்துக் கொண்டு உலகத்தின் பிடியிலிருந்து காப்பாற்றணும். பணம் இருக்கிறது, இல்லை என்பதைப் பற்றியெல்லாம் இல்லை

அவங்களுக்குப் பாதுகாப்பு என்பதைத் தரணும். அப்படிப் பார்த்துக்கிட்டவங்கதான் அவங்கதந்தை ஆவாங்க. நீங்களோ? நீங்கள் தந்தை என்ற சொல்லுக்கே வெட்கக் கேடானவர்! உங்களைப் போன்ற ஆளுக்கு மகளாய்ப் பிறந்தது என் துரதிர்ஷ்டம்!'

மேகலா சுபாஷை நோக்கித் திரும்பினாள். 'உங்கள் மாமனார் மேயராகணும்னு தவிப்பாய் இருந்தால் நீங்கள் ஏதாவது பண்ணிக்குங்க. இதில் என்னை மட்டும் இழுக்க வேண்டாம். என்னால் கடுகளவு உதவியும் பண்ண முடியாது.

மேகலா போகத் திரும்பியவள் திரும்பவும் நின்று திரும்பிப் பார்த்துச் சொன்னாள். 'அது மட்டுமில்லை; பிரெஸ் கரங்க யாராவது என்னைக் கேட்டால் இவர் எப்படிப்பட்ட சுயநலவாதி என்றும், பெற்ற மகளை நாலுபேருக்கு முன்னால் திருடி என்றும். பைத்தியக்காரி என்றும் எப்படி அவமானப்படுத்தினார் என்றும்சொல்லியேதீருவேன் நீங்கள் யாருமே என்னைத் தடுத்து நிறுத்திவிட முடியாது!'

மேகலா திரும்பியவள் படியேறி விர்ரென்று ஓடி விட்டாள்.

எல்லோரும் சிலையாய் நின்றுவிட்டார்கள். ராமபூஷணன் ரயில் எஞ்ஜினைப் போல மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கியபடி நின்று கொண்டிருந்தான். 'என்ன திமிர்! எவ்வளவு அகம்பாவம்!' பற்களை நறநறத்தான்.

சுபாஷின் முகம்கூட கோபத்தாலும் அவமானத்தாலும் சிவந்து விட்டது. 'அப்படித்தான் பண்ணுவாள் மாமா, அப்படித்தான் பண்ணுவாள்! பணம் சம்பாதிக்கிறாளோனோ, அந்த மயக்கம் இது!'

'அக்காவுக்கு புத்தி கலங்கிட்டாற்போல இருக்கு. இப்பல்லாம் அவள் நடவடிக்கை ஏதோ போலதான் இருக்கு' என்றாள் மானஸா.

'ஸ்ரீரஞ்சனி! கேட்டாயா, உன் பெரிய பெண்ணின் உளறலை?; ராமபூஷணன் கத்தினான்.

ஸ்ரீரஞ்சனி காற்றில் படபடக்கும் காய்ந்த சருகைப் போல நடுங்கிக் கொண்டே பதிலளித்தாள்.



'நான் நல்லதனமாய் சொல்றேங்க. அவள் மனசுலஏதோ வருத்தம் இருக்கு. அவளுக்குச் சின்ன வயதிலிருந்தே கோபம் அதிகம். மனதிலிருப்பதை வெளியே கக்கி விடுவாள்' என்றாள்.

சுபாஷ் கூட ஸ்ரீரஞ்சனிக்கு சார்பாய்ப்பேசினான் 'அவள் இல்லைன்னால் நாம்ப கையில் வளையலை மாட்டிக் கொண்டு பொட்டையைப் போல சும்மாயிருந்துடுவோமா? மாமா? இல்லைங்கறதுக்கு அவள் இஷ்டந்தானா எல்லாம்? நம்ப பேச்சை மறுத்துட்டு அவளால் உயிரோடு இருந்துட முடியுமா? நீங்க எலெக்ஷனில் நிற்கப் போறீங்க, ஜெயிக்கவும் போறீங்க. அந்த விஷயத்தையெல்லாம் நானும் மானஸாவும் பார்த்துக்கறோம்' என்றான்.

'தாங்யூ! இதப்பார்! மேகலா என்னை அவமானப்படுத்திட்டாள். மேகலா மன்னிப்புக் கேட்டுக்கற வரைக்கும் இந்த வீட்டுக்குள் திரும்பவும் நான் காலெடுத்து வைக்க மாட்டேன். தெரியுமா?' என்றான்.

'சரி! நீங்க இந்த வீட்டுக்குத் திரும்பி வராமல் போனால் நாங்களே இந்த வீட்டைவிட்டு வெளியே போயிடறோம்' என்றான் சுபாஷ்.

## 48

மேகலாவின் வாழ்க்கையில் திடீரென்று இருள் வந்து சூழ்ந்துக் கொண்டது. மேகலா நடித்த சினிமாக்கள் நான்கு வரிசையாய் தோல்வியடைந்தன. முதல் நாள் டிக்கெட் கிடைக்கவில்லை. இரண்டாவது நாள் தியேட்டரில் கூட்டமேயில்லை. சினிமா நன்றாயில்லை என்ற செய்தி கிட்டாதவர்களின் மூலமாய்க் காட்டுத்தீயாய் பரவிவிட்டது.

மேகலா அந்த சினிமாக்கள் தோல்வியடைந்ததற்கு வருந்தவில்லை. தான் செய்த தவற்றிற்குத் தண்டனையை அனுபவித்து விட்டதாய் நினைத்தாள். அந்த சினிமாக்களை நன்றாயில்லை, டைரக்டர்கள் பெயர் பெறாதவர்கள், ப்ரொட்யூசர்களுக்கு மேகலாவின் பெயரால் பணத்தைச் சம்பாதித்துக் கொண்டுவிட வேண்டும் என்ற ஆசை இருந்ததே தவிர, மீதி விஷயங்களில் கொஞ்சமும் அனுபவமில்லை. தான் அந்தப் படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டேயிருந்திருக்க மாட்டாள். ஆனால் கடன்கள்! கடன்கள்! மேகலா கூல் டிரிங்க்ஸ் பேகடரிக்காக வாங்கியிருந்த கடனைக் கட்டுவதற்குப் பணம் தேவையாயிருந்தது. ஏதோ ஒரு சினிமா என்று ஒப்புக் கொண்டுவிட்டாள். மேகலாவுக்கு இப்பொழுது தான் தெரிந்தது, தான் எவ்வளவு தப்புப் பண்ணி விட்டோம் என்று.

அந்த பேக்டரி மேகலாவின் தலையில் சுமையாகி விட்டது.

மேகலா பலராமைக் கூப்பிட்டாள். 'மாமா, அந்த மில்லை விற்று விடுகிறேன். யாராவது இருந்தால் பாரு' என்றாள். பலராமன் இரண்டாவது நாளே அழைத்து வந்தான். பேச்சுவார்த்தைகள் நடந்தன. மேகலா விற்று விட்டாள். அந்தப் பணம் பாங்கில் வாங்கிக் கொண்ட கடன் முழுவதையும் அடைக்க சரியாகிவிட்டது. மேகலா பாங்குக் கடனைத் தீர்த்து விட்டு அம்மாடா என்று நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண்டாள்.

பலராமன் அதற்குப்பிறகு வருவதை நிறுத்திக் கொண்டு விட்டான். மேகலாவுக்குப் பிற்பாடு தெரிந்தது; பலராமன் தானே மேஜர் பார்ட்னராய் இருந்து பணத்தைக் கொண்டு வந்து தந்திருக்கிறான். மில் அவன் மனைவியின் பெயரில்; அவனே உண்மையில் வாங்கிவிட்டான். இந்த விவரம் தெரிந்ததுமே மேகலாவுக்கு அருவருப்பாய் இருந்தது.



வேண்டியவர்கள் என்று அவள் நம்பினாள். அவன் அவ்வாறு மோசம் பண்ணிவிட்டான். மேகலாவுக்கு மிகவும் விரக்தியாய் இருந்தது. அந்த மில்லை வாங்கியதால் அவள் அடைந்த லாபந்தான் என்ன? இவ்வளவு நாளாய் வட்டியாய் கட்டிய லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம்! அமைதியின்மை, அக்கடனைத் தீர்ப்பதற்காக அவள் மோசமான சினிமாக்களுக்கெல்லாம் ஒப்புக்கொண்டது! போகட்டும், இப்பொழுதாவது துணிந்து விற்றுத் தொலைத்து இச்சுமையை நீக்கிக் கொண்டோமே என்று நிம்மதியடைந்தாள்.

அன்று மேகலா சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் சுபாஷ் வந்தான்.

'அக்கா! ஒரு லட்சம் ரூபாய்க்கு செக் எழுதிக் கொடுங்க' என்றான்

'ஒரு லட்சமா? எதுக்கு?'

'உங்கப்பாவின் எலெக்ஷன் ஃபண்டுக்கு நிதி.'

'உங்கப்பா' என்ற வார்த்தையை வேண்டுமென்றே அழுத்தி உச்சரித்தான்.

'என்னிடம் இல்லை. என்னால் சல்லிக்காசும் தரமுடியாதுன்னு முன்பே சொல்லிட்டேன்!' முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அவள்.

'அந்த டாக்டரின் நர்சிங் ஹோமுக்கு மட்டும் லட்சம் ரூபாய்களைத் தாரைவார்க்கலாம். பேரும் ஊரும் இல்லாத கண்டவங்களுக்கு அவ்வளவு பணத்தை வாரியிறைக்கலாம், பெற்ற தந்தைக்குக் கொஞ்சம் பணம் தரக்கூடாதா?'

மேகலா கத்தினாள்: 'சுபாஷ்! மரியாதையாய் பேசுங்க.'

'என்ன மரியாதை? நீங்க எங்களுக்கு மரியாதை தந்தால் நாங்களும் உங்களுக்குத் தருவோம். நீங்கள் அவனோடு சுற்றிகிட்டுப் பெரிசாய் மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கீங்க, இல்லையா? உங்கள் நாடகம் யாருக்குத் தெரியாதுங்கறேன்? தினமும் ராத்திரி பத்து மணி வரைக்கும் நீங்களும் அவனும் சேர்ந்து காரில் ஊரெல்லாம் சுற்றுவதில்லையா? அவன் மனைவி லபோ திபோன்னு அடித்துக் கொண்டு அழவில்லையா? அவன் உங்களை நன்றாய் வலை போட்டுவிட்டான். எங்களைத் தொலைவிற்குத் தள்ளிவிட்டு இதையெல்லாம் சூறையாடிக்கலாம்னு நினைச்சிட்டிருக்கானோ, என்னவோ?'

மேகலாவுக்குப் புரிந்துவிட்டது. சுபாஷ் சண்டை போட வந்திருக்கிறான். அவளிடம் கிருஷ்ணராஜின் பெயரை இழுத்து வம்பில் மாட்டிச் சண்டைப் போடப் பார்க்கிறான்! மேகலா சாந்தத்தை வரவழைத்துக் கொண்டே, 'நீங்கள் ஆயிரம் சொல்லிக்குங்க, எனக்கொண்ணும் பயம் இல்லை.'

'ஆமாம் வெட்கத்தை விட்டுவிட்டால், போறது! மரியாதையாய் செக் எழுதிக் கொடுத்துடுங்க.'

'நான் கொடுக்க முடியாது! கொடுக்க முடியாது!'

'கொடுக்கப் போறதில்லையா?'

'ஆமாம்'

'மானஸா! கோபுவைத் தூக்கிட்டுவா. இந்த வீட்டில் நாம்ப இருக்கத் தேவையில்லை. இவள் வேணடுமென்றே நம்பளைத் துரத்தியடிக்கிறாள். ஆமாம் நாம்ப இருந்தால் தடை! நாம்ப போயிட்டால் அந்த டாக்டர் சுதந்திரமாய் வீட்டுக்கு வரலாம்.'

மானஸா சுபாஷைப் பிடித்துக் கொண்டு, 'சே! இதென்னங்க உங்க ரகளை? வேலைக்காரர்கள் எல்லோரும் கேட்கிறாங்க. கொஞ்சம் அந்தண்டை போங்க' என்று தோளைப் பிடித்து அப்பால் தள்ளினாள்.



'அவள் செக் தரப்போறாளா அல்லது நம்மை வீட்டை விட்டுத் துரத்திடப்போறாளான்னு கேளு. சாயந்திரத்திற்குள் எனக்கு விஷயத்தைச் சொல்லிடச் சொல்லு' என்று உறுமிவிட்டுப் போய்விட்டான்.

மானஸா அழுதுகொண்டே சொன்னாள்: 'அக்கா! அவருக்கு ரொம்பப பிடிவாதம் வந்துவிட்டது. சொல்லு உனக்கு எது உயர்த்தி? அந்தப் பாழாய்ப் போன ஒரு லட்சமா? என்னைப் போய்விடச் சொல்கிறாயா? இருக்கச் சொல்கிறாயா? சொல்லு அக்கா' என்றாள்.

மேகலா பதில் பேசவில்லை. மௌனமாய்ப் போய் செக் புத்தகத்தை எடுத்து வந்து ஒரு லட்சத்திற்கு எழுதித் தந்தாள். மேகலாவுக்கும் நன்றாய்த் தெரியும்! ஒரு லட்சத்தை அவர்களுக்குத் தருவது என்றால் அந்தப் பணத்தைத் தீக்கிரையாக்கி சாம்பலாக்கி விட்டாற்போலத்தான்! அந்தப் பணத்தைச் சம்பாதிக்க அவள்தான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள்? இவர்கள் உல்லாசமாய் கரைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஆசைகளுக்கு எல்லை இல்லை. இன்றைக்கு முனிஸிபல் எலெக்ஷன், நாளைக்கு இன்னும் என்ன ஆசை வருமோ?

மேகலாவுக்கு திடீரென்று மிகத் தனிமை வந்து சூழ்ந்து கொண்டுவிட்டது. அவளைப்பற்றி யாருமே யோசித்துப் பார்ப்பதில்லை அவள் எவ்வளவு கஷ்டப்பட்டு அந்தப் பணத்தைச் சம்பாதித்திருப்பாள் என்று புரிந்துகொள்ள மாட்டார்கள். இப்பொழுது அவர்களுக்கு அவளிடம் தப்பு கண்டு பிடிக்க ஒரு சாக்குக் கிடைத்துவிட்டது.

நேற்றுவரை பலராமன் மாமாவைத் திட்டிக்கொண்டிருந்தார்கள், இப்பொழுது கிருஷ்ணராஜை! இவர்களைத்தவிர வேறு யாருமே என் எல்லைக்குள் நுழைந்துவிடக் கூடாது.

அதற்குள் போன்வந்தது. மேகலாபோய் எடுத்தாள். மறுமுனையிலிருந்து முன்பின் அறியாத குரல்.

'மேடம்! உங்களுடையதும் உங்கள் டாக்டர் ஃபிரெண்டுடையதும் போட்டோக்கள் என்னிடம் உள்ளன. நீங்கள் ஏதாவது செட்டில் பண்றேன்னு சொன்னால் அந்தக் கதை பேப்பரில் வராமல் பார்த்துப்போம்!'

'என்ன சொல்கிறாய் நீ!?'

உங்களுக்குத் தெரியாதது என்ன இருக்கு? நீங்கள் நல்ல பெயரும் புகழும் எடுத்திருக்கிங்க. உங்கள் கதையைப் பேப்பரில் போட்டால் பணம் நிறைய கொடுப்பாங்க எனக்கு! ஆஃப்கோர்ஸ்! எனக்கு அவ்வளவு பேராசை இல்லை. நீங்கள் கொஞ்சமாய் கொடுத்தாலும் போதும்!'

'ஷட் அப்' போனை வைத்துவிட்டாள்.

திரும்பவும் போன் ஒலித்தது.

'அவ்வளவு தாங்கிறங்களா?' மறுமுனைக் குரல் கேட்டது.

'அவ்வளவுதான்' வைத்துவிட்டாள்.

அடுத்தவாரம் மேகலாவை அன்றைக்கு டாக்டரேட் பட்டத்தைப்பற்றி டெலிகிராம் வந்தபொழுது நைட் கவுனுடன் கிருஷ்ணராஜ் தூக்கிக் கொண்டிருந்த போட்டோக்கள் பத்திரிக்கைகளில் வெளிவந்து விட்டன. அதன் கீழே அசிங்கமானவார்த்தைகள் வெளிவந்திருந்தன. முன்பு அசிங்கமான வார்த்தைகளைச் சுவரில் எழுதினார்கள். இப்பொழுது பேப்பர்களில் எழுதியிருக்கிறார்கள் என்றெண்ணிக் கொண்ட மேகலா, அந்தப் பேப்பரைக் கிழித்து நெருப்புக் குச்சியைப் பற்றவைத்தாள்.





...நடக்காமலும், கிழிக்காமலும்
...ந்தை கவனமாக கையாளுங்கள்.

## 49

மேகலாவை ஹீரோயினாய் எடுத்துக் கொள்வதாய்ச் சொல்லியிருந்த இரண்டு பிரபல சினிமா கம்பெனிகள் மேகலாவை விட்டுவிட்டுப் புதிதாய் முன்னுக்கு வந்து கொண்டிருந்த வேறொரு பெண்ணை ஹீரோயினாய் புக் செய்து கொண்டுவிட்டார்கள். அந்தப்படங்கள் மூலமாய் போன பெயரைத் திரும்பவும் பிடித்து நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த மேகலாவுக்கு இது ஏமாற்றத்தைத் தந்தது. கலைஞர்களின் வாழ்க்கையிலுள்ள சாபக்கேடு இதுதான் போலும்! தம் வாழ்நாளில் உச்சாணிக்கிளையை எட்டுவதையும் அதலபாதாளத்தில் சரிந்து விழுவதையும் — ஆகிய இரண்டையுமே பார்த்து விடுவார்கள். மேகலா ஜாக்கிரதை! புத்திசாலித்தனம் எல்லாம் எதற்குமே பயன்படாமல் போய்விடும் என்று எச்சரித்தது அவள் மனம்!

மேகலாவுக்குத் தாங்கமுடியாத தனிமை வாட்டிற்று. பகிர்ந்து கொள்பவர்கள் இல்லாவிட்டால், மலைப்பாம்பாய் ஆளையே விழுங்கிவிடக்கூடிய பயங்கரமான தனிமை!

மேகலா காரை எடுத்துக்கொண்டு கிருஷ்ணராஜின் க்ளினிக்கிற்குப் புறப்பட்டாள்.

மானஸாவுக்கும் சுபாஷுக்கும் கிருஷ்ணராஜ் பரம விரோதியாய்த் தோன்றுகிறான். அவள் என்ன தப்பு பண்ணிவிட்டாள்? தன் பணம் அவனுக்கு ஒரு ரூபாய் கூட தரவில்லையே! ஆசுபத்திரிக்கு நன்கொடை கொடுத்தாள். அது தப்பா? அதை கிருஷ்ணராஜிற்குச் சொந்தமாய் எடுத்துக் கொடுத்துவிட்டாற்போல வருந்துகிறார்களே, ஏன்? சுபாஷ்

தன் நண்பர்கள் நன்கொடை என்று வந்தபோதெல்லாம் அவர்களின் சங்கங்களுக்கு சந்தாக்கள் தந்ததில்லையா? தன் ஸ்டேட்டஸ்ஸைக் காட்டிக்கொள்ள வேண்டும் என்று பெருமையாய் அவளைக்கொண்டு பெருமளவிற்கு நன்கொடைகளைத் தரச்சொன்னதில்லையா? பலராமன் மாமா தன் பெருமையைக் காட்டிக் கொள்வதற்காக தன் வீதியில் கட்டிக் கொண்டிருக்கும் கோவிலுக்கு ஐம்பதாயிரம் தரச் சொன்னாரே அவளைக் கொண்டு! இன்னைக்கு அவள் சந்தோஷத்திற்காக ஆசுபத்திரிக்குத் தந்தபோது தப்புக் கண்டுப் பிடிக்கிறார்கள்!

அவள் பணத்தை அவள் இஷ்டப்பிரகாரம் செலவழித்துக் கொள்ள முடியும் என்றுகூட ஏன் தோன்றவில்லை அவர்களுக்கு? அவள் செலவழிக்கும் ஒவ்வொரு பைசாவையும் அவர்கள் ஜாக்கிரதையாய்க் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். மானஸாவுக்கு எவ்வளவு நகைகள் பண்ணித்தந்திருக்கிறாள்? சுபாஷ் தியேட்டர் கட்டிக் கொள்ளப் போவதாய் சொன்னபோது எவ்வளவு பணம் கடன் தந்தாள்? அதில் ஒரு பைசாவையாவது அவள் திருப்பிக் கேட்டாளா? திரும்பி வாங்கிக் கொள்ளவில்லையே! அவர்கள் தம் மனிதர்கள்தானே என்றெண்ணிக் கொண்டாள்.

அவர்கள் சந்தோஷமே தன் சந்தோஷம் என்றெண்ணிக் கொண்டாள். இன்றைக்கு அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்துகொண்டு அவளைத்தப்பு கண்டுபிடிக்கிறார்கள்.

மேகலாவுக்கு மானஸாவின் மேல் மிகக் கோபம் வந்தது. சுபாஷாவது போகட்டும் வேற்றுமனிதன். மாதவிக்குச் சிறு வயதிலிருந்தே அவள் மனம் தெரியாதா? கணவனிடம் ஒரு வார்த்தை நயமாய் எடுத்துச் சொல்லக்கூடாதா? 'அக்கா நமக்கு இவ்வளவு பண்ணியிக்கிறாளே' என்று ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையா? ஊஹூம் சொல்லமாட்டாள்! மானஸாவுக்குக்கூட தனக்குச் சேரவேண்டிய டணத்தை



யாரோ சூறையாடிக்கொண்டு போய்க் கொண்டிருப்பது போல பாவனை! கிருஷ்ணராஜிற்கு அவள் என்ன பண்ணி விட்டாள்? எப்பொழுதாவது ஓட்டலுக்குப் போனாலும் அவளைக் காபிக்குப் பணம் தர விடமாட்டான்.

'மேகலா! நீ வெளியுலகத்துக்குப் பணக்காரி. எனக்கு இல்லை. எனக்கு என் சின்ன வயதுத் தோழி மேகலாதான் நீ இன்னும். நான்தான் உன்னைப் பார்த்துக்கணும்' என்பான். மேகலாவுக்கு ஏதோ போலிருக்கும்.

யோசனையில் ஆழ்ந்து போய் மேகலா காரை ஓட்டிக் கொண்டே கிருஷ்ணராஜின் க்ளினிக்கைத் தாண்டி முன் நோக்கிப் போகப் போனவள் சட்டென்று தன் தப்பைப் புரிந்து கொண்டாள். காரை ரிவர்ஸில் கொண்டு வர வழியில்லை. அது சின்ன சந்து. ரிச்ஷாக்கள் நிறுத்தியிருந்ததால் நகரவும் வழியில்லை.

மேகலா நடந்து க்ளினிக்கிற்குள் நுழைந்தாள். அங்கே நோயாளிகள் யாருமே இல்லை. மேகலா உள்ளே நுழையப் போனவள் அப்படியே நின்றுவிட்டாள். உள் அறையிலிருந்து கிருஷ்ணராஜின் குரல் ஆவேசமாய் பெருத்தக் குரலில் கேட்டுக் கொண்டிருந்தது.

என்னிடம் சல்லிக் காசு இல்லை. இப்பொழுது என்றில்லை, இனி என் ஜென்மத்தில் உனக்கு ஒரு பைசா கூடத் தரமாட்டேன். ஐந்தாயிரம் வாங்கிக் கொண்டு மூன்று நாள் கூட ஆகலை. திரும்பவும் பணம் என்கிறாயா! என்னிடம் இல்லை.'

பானுவுன் குரல் கூட ஆவேசமாய்க் கேட்டது.

'பெண்டாட்டி கைச் செலவிற்குப் கணம் கேட்டால் இல்லைங்கிறீங்களே, உங்களுக்கு வெட்கமில்லை?'

'இல்லை, போதுமா?'

'ஆமாம் எனக்குத் தர உங்களிடம் பணம் இருக்காது. அந்த ஆசுபத்திரிக்குத் தாரை வார்க்க மட்டும் ஆயிரக் கணக்கில் இருக்கும். அவ்வளவு பணம் இல்லாதவர் லட்சக் கணக்கில் செலவழித்து எப்படிக் கட்டிட்டிருக்கீங்களாம்?'

'உனக்குச் சொன்னாலும் புரியாது. போ, நோயாளிகள் வருவாங்க, ப்ளீஸ்!'

'வரட்டும். கருணை வள்ளல் என்று உங்களுக்குப் பெரிதாய் பெயர் இருக்கு, இல்லையா? உங்கள் குட்டு அவங்களுக்கும் வெளியாகட்டும். பாவம், உலகத்தார் கண்ணோட்டத்தில் கருணைவள்ளல்! கட்டிய மனைவியிடமோ காலதேவன்!'

'உன்னிஷ்டப்படி எதை வேணும்னாலும் சொல்லிக் கொள், போ!'

'நான் போக முடியாது. நீங்கள் பணம் தந்தால் தான் போவேன்!'

'என்னிடம் இல்லைன்னு சொன்னால் ஏன் கேட்டுக்க மாட்டேங்கிறாய்?'

'அதைத்தான் கேட்கிறேன், ஏன் இல்லைன்னு? ராவும் பகலுமாய் இந்தக் கிளினிக்கைக் கட்டிக் கொண்டு அழுதுட்டிருக்கீங்களே, சம்பாதித்தப் பணமெல்லாம் என்னவாகிக் கொண்டிருக்கிறது?'

'கங்கையில் போட்டுவிட்டேன், போதுமா?'

'அந்த கங்கை எங்கே இருக்குன்னு எனக்கும் தெரியும். இந்த டிராயர்தானே?' பானு மேஜை டிராயரை இழுத்த சப்தம் கேட்டது.

'பானு, அந்தப் பணத்தைத் தொட்டால் சும்மாயிருக்க மாட்டேன்' கத்தினான் கிருஷ்ணராஜ்.



இருவரும் போராடிக் கொண்டிருந்த சப்தம் கேட்டது. ஸ்டூல் கீழே விழுந்தது. கிளாஸ் தம்ளர் கலகலவென்று நொருங்கிற்று.

'அந்தப் பணத்தை வை அங்கே!'

'முடியாது. என் கையை விடுங்க.'

மேகலா திரும்பிப் போய் விடுவோமா என்று தடுமாறினாள். பானு ஆவேசமாய் சொல்லிக் கொண்டிருந்தாள்.

'வெட்கமில்லை உங்களுக்கு? எனக்குக் குழந்தைப் பிறப்பதற்கு வழியில்லாத துப்புக்கெட்டவர்! குறைந்தபட்சம் பணத்தையாவது எடுத்துத் தருவதற்கு மூக்கால் அழுகிறீங்களே!'

'அடுத்த நிமிஷம் இருவரும் அடித்துக்கொண்ட சப்தம் கேட்டது.

கிருஷ்ணராஜ் மூச்சிரைக்க, நடுங்கும் குரலில் சொன்னான்.

'ஆமாம் உண்மையைச் சொன்னாய். நான் கையாலாகாதவன் தான். பணத்தையெல்லாம் நீ ஃபிரெண்டுங்களை ஜமா சேர்த்துக் கொண்டு குதிரைப் பந்தயத்திற்கும், ப்ளூ ஃபிலிம்களை வாங்குவதற்கும் கரைத்துக் கொண்டிருக்கும் போது, உன்னை அடக்கிவைக்க முடியாமல் பார்த்தும் பார்க்காதது போல விட்டுக் கொண்டிருக்கிறேன். அம்மாவை அப்படி இம்சித்துக் கொன்றும் கூட திரும்பவும் உன்னோடு ராஜியாகி, சேர்ந்து வாழ்ந்துட்டிருக்கேன். உன்னை மாற்றணும்னு துடிக்கிறேன். வீட்டுக்கு வரும் உன் ஃபிரெண்டு உன் படுக்கையில் உன்னோடு சேர்ந்து படுத்திருந்ததைப் பார்த்தும் உன்னைக் கொலை செய்ய முடியாமல் போனேனே, நான் உண்மையிலேயே கையாலாகாதவன் தான்! அவ்வப்பொழுது நீ ஏதாவது கதைகளைச் சொல்லி என்னை நம்பவைத்து விடுகிறாயே தவிர, நீ மாறவே

மாட்டாய். எனக்குத் தெரியும், உன்னை மாற்றணும்னு நான் பண்ணுகிற முயற்சியிலேயே என் வாழ்க்கையே முடிந்து விடும்!'

பானு அழுதுகொண்டே சொன்னாள்;

'எனக்கு நீதி போதிக்கிறீங்களே, நீங்கள் ரொம்ப ஹரிச்சந்திரனா? அந்த மேகலாவோடு சுற்றுகிறீர்களே! உங்க ரெண்டு பேரின் ரோமன்ஸூம் பத்திரிக்கையில் ஏறிடுத்தே!'

'ஷட் அப்! அதற்கெல்லாம்கூடக் காரணம் நீதான். வீட்டிலிருந்த போட்டோக்களை எடுத்துட்டுப்போய் பணத்துக்காக ஆசைப்பட்டு அந்த பேப்பர்க்காரனிடம் தந்தாய். நீ பண்ணாத நீச்ச காரியம் ஏது? நீ என்னை என்ன வேணுமானாலும் திட்டிக்கொள். அந்தப் பெண்ணின் ஜோலிக்கு வராதே! அந்தப் பெண்ணின் பெயரை எடுத்தாயானால் சும்மாயிருக்க மாட்டேன்!' அவன் குரலில் கோபம் புஸ்ஸென்று சீறிக் கொண்டு வந்தது.

பானு கேலியான குரலில், 'ஆஹா பாவம்' எவ்வளவு வருத்தமோ? காதலியல்லவா? ஆமாமாம்! நீங்கள் எப்படியும் குழந்தைகளைப் பிறக்கச் செய்யும் சாமர்த்தியமில்லாதவர் என்று தெரிந்துகொண்டிருப்பாள். உங்களோடு எவ்வளவு சுற்றிச் சீரழிந்தாலும் வயிற்றில் சுமை ஏறாது அல்லவா? வாக்கியத்தை முடிக்கக்கூட வில்லை.

'வுட் அப்! யூ டெவீல்! கெட் அவுட் ஃப்ரம் மை க்ளினிக். கெட் அவுட் ஃப்ரம் மை லைஃப்! அவன் அறையே அதிரும் படியாய்க் கத்தினான். அவன் தள்ளிய தள்ளலுக்கு பானு அடுத்த அறையில் வந்து விழுந்தாள்.'

வெளியேவந்த பானு படியிறங்கிப் போய்க்கொண்டிருந்த மேகலாவைப் பார்த்தாள். உடனே பொறாமையும் துவேஷமும் நிரம்பிய குரலில் பார்த்தபடியே நீ இங்கே —இருக்கிறாயா? உனக்கு வெட்கமில்லை? உலகத்தில் வேறு ஆம்பிள்ளைங்களே கிடைக்கவில்லையா, என்புருஷனுக்குப் பின்னால் சுற்றிட்டிருக்கிறாய்! உன்னால் எங்கள் குடும்பம் நாசமாயிடுத்து. நான்செத்து ஒழிந்துடறேன். செத்தால் உங்கள்பீடை ஒழியும். செத்துப் பிசாசாகி உங்க ரெண்டு பேரையும் பிடுங்கித் தின்னாதபோனால், பார்' என்று அங்கிருந்து ஓட்டமாய் ஓடிப்போய் வெளியே இருந்த ஆட்டோவில் ஏறிக்கொண்டு போய் விட்டாள்.



போய் விடலாம் என்று படியிறங்கிய மேகலா நின்று விட்டாள். ஒரு வினாடி தடுமாறினாள். திரும்பவும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டாள்.

திரைச்சீலையை விலக்கிக்கொண்டு மேகலா உள்ளே அடியெடுத்து வைத்தாள். அங்கே அறை முழுவதும் சாமான்கள் சிதறிக்கிடந்தன கிருஷ்ணராஜ் இரு கைகளையும் தலையில் வைத்துக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

'ராஜ்' மெல்லிய குரலில் கூப்பிட்டாள்.

அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவன் முகமெல்லாம் நகங்களால் பிராண்டினாற்போல ரத்த காயங்களுடன் இருந்தது. அவன் கண்களில் வருத்தம் தேங்கி நின்றது. புயலுக்கு முறிந்துவிழுந்த மரத்தைப் போல தீனமாய் இருந்தான் அவன். எப்பொழுதும் முறுவல் பூத்துக்கொண்டிருக்கும் அம்முகம் தீனமாய் இருந்தது.

மேகலாவின் உயிர் துடித்துடித்தது. ஒரே பாய்ச்சலாய் ஓடிப்போய் அவனை இழுத்து அணைத்துக் கொண்டு மார்போடு சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றும், அவனைவருந்த வேண்டாம் என்று தேற்றவேண்டும் என்றும் தைரியம் சொல்ல வேண்டுமென்றும் இருந்தது. ஆனால் பலவந்தமாய் சக்தியைத் திரட்டிக் கொண்டாள்.

'மேகா' நீ...நீ வந்து எவ்வளவு நேரமாகிறது?' பயந்து போய் கேட்டான்.

'ரொம்ப நேரமாச்சு!'

'நீ...நீ கேட்டாயா?'

'கேட்டேன்.!

அவன் கண்களில் வருத்தமும் செய்வதறியாத தன்மையும்!

'சாரீமேகா, ஐயாம் சாரீ. நான் உனக்கு ஃபிரெண்ட் என்று சொல்லிக் கொள்ளக்கூட தகுதியில்லாதவன். நீ எனக்கு ஆதரவுதந்தாய். நானோ உன்னை எல்லோரும் திட்டும்படியாய்ச் செய்துட்டேன். நான்...நான் எவ்வளவு கையாலாகாதவன் பார். அவன் கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டான்.

மேகலா அவனுக்கெதிரே வந்து நின்றாள்.

சிநேகமயமான குரலில் மெதுவாய்ச் சொன்னாள்:

'ராஜ்! எதற்காக இவ்வளவு வருத்தப்படுகிறீர்கள் நீங்க? பானு பேசிய அந்தப் பேச்சில் ஒன்றுகூட உண்மை இல்லைன்னு நம் இருவருக்குமே தெரியும். பானு தவறாய்ப் புரிந்துகொண்டிருக்கிறாள். புரிந்து கொண்டு போகட்டும். ஒரு நாள் அவளே அவசரப்பட்டு விட்டோம் என்றும் நம்மிருவரையும் அநியாயமாய்ச் சொல்லிவிட்டோம் என்றும் தெரிந்துகொள்வாள். ஏன் இவ்வளவு ஆவேசப்படுகிறீர்கள்?'

அவன் நிமிர்ந்தான்.

'பானு புரிஞ்சுப்பாளா? பானுவா? மேகா, நானும் இந்த எட்டாண்டுகளாய் அப்படித்தான் பிரம்மையில் ஆழ்ந்து போயிருந்தேன். எதையும் புரிஞ்சுக்கணும் என்றால் மனிதனிடம் யோசிக்கிற சக்தி இருக்கணும். பானுவிடம் அது



சூனியம். எப்பப்பார்த்தாலும் தன் சொந்த சுகம், சொந்த லாபம், சந்தோஷம்! — இதைத்தவிர வேறொன்றும் தெரியாது. இதெல்லாம் அவளை வளர்த்த தந்தையின் தப்பு. சிறுவயதிலிருந்தே செல்லம் கொடுத்து தாம் அதிகாரம் பண்ணப்பிறந்தவர்கள் என்ற அகம்பாவத்தை ஊட்டி விட்டார்.

'பானுவால் என்னைப் புரிந்து கொள்ளவே முடியாது. நானோ அவளாகவே என்னைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றும், அவளை என் அன்பால் மாற்றிவிட வேண்டுமென்றும் முயன்றேன். எனக்குப் பெண்கள் லிப்ஸ்டிக் உபயோகிப்பது பிடிக்காது. ஆனாலும் பானுவுக்கு லிப்ஸ்டிக் பிடிக்கும் என்று வாங்கிக் கொடுப்பேன். ஆனால் எனக்கு கேபேஜ் பிடிக்கும். என் இஷ்டப்படி பானு ஒருநாள் கூட நடந்துக்கொள்ள மாட்டாள். அவளுக்குப் பிடிக்காவிட்டால் வீட்டிலேயே அது பண்ணக்கூடாது. நான் வேண்டுமென்றால் யார் வீட்டிற்காவது போய் சாப்பிடவேண்டும். மனைவியாம்! மனைவி!

'ஒரு நாள் எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு சாப்பாடு போடமாட்டாள். ராத்திரி வேளையில் நான் க்ளினிக்கிற்குப் போனால் நிம்மதியாய் தூங்கிக்கொண்டிருப்பாள். எனக்காக ஒருநாள்கூட சாப்பாடு சூடாய் இருக்காது. ஆறிப்போன அந்த சாதத்தை விழுங்கிவைக்கணும். இல்லாவிட்டால் பட்டினியோடு படுத்துக்கொள்ள வேண்டும். என் விருப்பம் என்ன, என் சந்தோஷம் என்ன என்பதெல்லாம் அவளுக்குத் தேவையில்லை. அவளுக்காகவே நான் பாடுபடவேண்டும். குழந்தை பிறக்கவில்லை என்று என்னைத் திட்டுகிறாள். நாங்களிருவரும் அந்நியோன்னியமாய் குடித்தனம் பண்ணியது எண்ணி நான்கு நாட்கள்கூட இல்லையே!

கல்யாணமானதிலிருந்தே யுத்தந்தான். அம்மா என்னிடம் இருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. அதிலிருந்துதான் சண்டையே ஆரம்பமாயிற்று. அம்மாவை

விடமாட்டேன் என்று சொன்னதால், தந்தை மகள் இருவருக்கும் கோபம்! 'கிழவி', 'கிழவி', என்று சொன்னதைக் கேட்டுத் தாங்கமுடியாமல் போனேன். ஃபாரினுக்கு வந்தபோதும் கோபந்தான். அம்மா என்னோடு வந்து விட்டதற்கு.

'பானுவுக்கு எப்படிப் பழக்கமாயிற்றோ தெரியாது. ப்ளூஃபிலிம் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. அவற்றைப் பார்ப்பதும், குரூர திருப்தி அடைவதும் வழக்கம் அந்தச் சமூகத்திற்குள் நீதி அநீதி என்ற துலாக்கோல் கிடையாது. ஆனந்தமடைவது ஒன்றுதான் அவர்களுடைய லட்சியம். நான் இங்கே வந்த பிறகு தான் எனக்கு இது தெரிந்தது. நான் ஒரு புதைச் சேற்றில் சிக்கிக் கொண்டு விட்டேன். பானுவை என்னால் தள்ளவும் முடியலை, வைத்துக்கவும் முடியலை. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தேன். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்து அதிலேயே திருப்தியடையலாம்னு தீர்மானித்துக் கொண்டுவிட்டேன். ஆனால் இதைக் கூட அவள் பண்ணவிடவில்லை.

'சம்பாதித்தப் பணத்தையெல்லாம் தனக்கே தரச் சொல்கிறாள். நான் அந்த ஆசுபத்திரியைக் கட்டுவதும் அவளுக்குப் பிடிக்கவில்லை. எப்பொழுதும் யுத்தந்தான். என்னால் துன்பப்படுவதாகவும் நான் அவளை அலட்சியப் படுத்துவதாகவும் எல்லோரிடமும் என்னைப்பற்றிச் சொல்லி அவர்கள் இரக்கத்தைச் சம்பாதித்துக் கொள்வாள். நானோ அவள் என்னை எப்படி நரகத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறாள் என்று ஒருவரிடமும் போய்ச் சொல்லமாட்டேன். அதனால் யாருக்குமே தெரியாது. இதன் மூலமாய் தேவைப்பட்ட இரக்கம் கிடைத்துவிடும் அவளுக்கு.

'மேகா! மனிதனுக்குக் கல்யாணம், குழந்தைகள் என்பதெல்லாம் பெரிய சூதாட்டம். அதில் அவன் ஜெயிப்பதும் தோற்றுப்போவதும் புத்திசாலித்தனத்தின் மீது ஆதாரப்



பட்டிருக்கவில்லை, அதிர்ஷ்டத்தின் மேல் ஆதாரப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தோன்றுகிறது. நான் இந்த விஷயத்தில் நன்றாய் தோற்றுவிட்டேன். இனி என் தலையெழுத்து இவ்வளவுதான். வாழ்நாளெல்லாம் ஒரு யுத்த ரணகளந்தான். இதோடு போராட எனக்குச் சக்தி இல்லை.'

பிரவாகமாய் அவன் வாயிலிருந்து மடைதிறந்துகொண்டு வெளிவந்த வார்த்தைகளை மேகலா கேட்டுக் கொண்டிருந்தாள் அவன் மிகவும் தளர்ந்து போய் விட்டிருந்தான். பத்து வயது கூடி விட்டவனைப்போல் சோர்ந்து போய் இருந்தான். அவன் கண்களில்— அநியாயமாய் அடிப்பட்ட சின்ன நாய்க்குட்டி வாலைச் சுருட்டிக் கொண்டு போன அவலம் தென்பட்டது.

மேகலாவுக்கு திடீரென்று தோன்றிற்று — வாழ்க்கை ஏன் இப்படி அப்பாவிகளையும் நல்லவர்களையும் அநியாயமாய் தண்டிக்கிறது?

'ராஜ்! உங்கள் தைரியம் என்னவாச்சு? நம்மை உலகம் என்ன சொல்லுமோ என்பதை அல்ல நாம் பார்க்க வேண்டியது. நாம் வாழ்க்கையில் சரியான வழியில் போகிறோமா இல்லையா என்பதைத்தான் பார்க்க வேண்டும். எனக்கு மட்டும் நாமிருவரும் சரியான வழியில்தான் போய்க் கொண்டிருப்பதாய்த் தோன்றுகிறது.

லட்சியத்தைக் குறிகோளாய் வைத்துக் கொண்டிருக்கும் எந்த மனிதனுமே மேடு பள்ளங்களைப் பொருட்படுத்த மாட்டான். நீங்கள் பானுவின் வார்த்தைகளைப் பொருட் பொருட்படுத்தாதீங்க' என்றாள்.

கிருஷ்ணராஜுக்கு மேகலாவின் வார்த்தைகள் கொஞ்சம் ஆறுதலளித்தாற் போலிருந்தன.

'மேகா! நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி! உன்னைப் போன்ற சிநேகிதியின் நிழல் கிடைத்ததற்கு' என்றான்.

'நானும் உங்களைப் பார்த்து அப்படியே தான் நினைத்துக் கொள்கிறேன்' என்று உள்ளூர நினைத்துக் கொண்டாள் மேகலா.

## 50

மேகலா அவுட்டோர் ஷூட்டிங்கிற்காகப் பெங்களூருக்குப் போய்விட்டு, அச்சுற்று வட்டாரங்களில் ஷூட்டிங்கை முடித்துக் கொண்டு திரும்பி வந்தபோது இஞ்ஜினீயர் போன் பண்ணினார்.

'பானு முந்தாநாள் காலையில் கெரஸினாயிலை ஊற்றிக் கொண்டு தீப்பற்றவைத்துக் கொண்டு செத்துவிட்டாள். அது தற்கொலை இல்லை என்றும் கொலை என்றும், கிருஷ்ணராஜ் பானுவின் மேல் கெரஸினாயிலை ஊற்றித் தீப்பற்ற வைத்து விட்டான் என்றும் பானுவின் தந்தை கோர்ட்டில் வழக்குப் போட்டிருக்கிறார். கிருஷ்ணராஜை போலீசார் அரெஸ்ட் பண்ணிவிட்டார்கள்.

அதைக் கேட்டதுமே மேகலாவின் உயிரே பறந்துபோய் விட்டாற்போல ஆயிற்று. மேகலா உடனுக்குடன் பயணமாகிப் புறப்பட்டு வந்துவிட்டாள்.

அதற்குள் பத்திரிகைகளிலெல்லாம் கிருஷ்ணராஜ், மேகலா பானு முதலியவர்களின் போட்டோக்கள் வெளி வந்துவிட்டன. மேகலாவுடன் சம்பந்தம் கொண்ட கிருஷ்ணராஜ் மனைவியைக் கொன்றுவிட்டு, சாமர்த்தியமாய் அதைக் கொலை என்று மாற்றிவிட்டதாய் எழுதியிருந்தன. மேகலாவைப் பற்றியும் கிருஷ்ணராஜைப் பற்றியும் விதம் விதமான புகார்கள் பிறந்தன.



கிருஷ்ணராஜ் ஜெயிலில் இருந்தான். அவன் தனக்கு லாயர் தேவையில்லை என்றும் ஜட்ஜ் எப்படித் தீர்ப்பளிக்கிறாரோ அப்படியே ஆகட்டும் என்றும் சொன்னான், மேகலா லாயர்களைக் கலந்தாலோசித்தாள்.

நகரத்திலேயே பிரபலமான லாயரை கிருஷ்ணராஜ் சார்பில் வாதாட நியமித்தாள்.

வீட்டிலிருந்தவர்கள் எல்லோரும் அதை எதிர்த்தார்கள். சுபாஷ் வெகுண்டெழுந்தான். மேகலா ஜெயிலிலிருந்த கிருஷ்ணராஜைப் பார்ப்பதற்காகப் புறப்பட்ட பொழுது சுபாஷ் வந்தான்.

'எங்கே போறீங்க?' தெரிந்தே கேட்டான்.

'கிருஷ்ணராஜைப் பார்ப்பதற்கு! பயமில்லாமல் சொன்னாள்.

'உலகம் முழுவதும் என்ன நினைச்சுட்டிருக்கு தெரியுமா உங்களுக்கு?' கடுகடுப்பாய்க் கேட்டான்.

'உலகம் என்னை எத்தனையோ தடவை என்னென்னவோ சொல்லியிருக்கு. நான் ஒருநாளும் அவற்றைப் பொருட்படுத்தியதில்லை.'

'இப்ப உங்க நிலைமை வேறு; உங்கள் வாழ்க்கை உங்கள் ஒருவருடையது இல்லை, எங்கள் எல்லோருடையதுந்தான். நீங்கள் கிருஷ்ணராஜைப் பார்க்கப் போகக் கூடாது. நீங்கள் போனால் பத்திரிக்கைகள் எழுதிய கதைகள் எல்லாம் நிஜம் என்று ருசுவாக்கினாற்போல ஆகும்'.

'நான் பத்திரிக்கைகள் எழுதுகிற கிசு கிசுக்களுக்கு பயப்படுகிறவள் இல்லை'.

'உங்கள் கௌரவத்தைப் பற்றி யோசியுங்கள்'.

'எனக்காக உயிரைக்கொடுக்கும் கிருஷ்ணராஜைக்காட்டி லும் எனக்கு எந்தக் கௌரவமும் பெரியதில்லை'.

'நாங்களுங்கூடவா? சொல்லிடுங்க'.

எங்கள் எல்லோரையும் விட உங்களுக்கு அவன்தான் முக்கியமா?'

'நீங்கள் எப்படி நினைத்துக்கொண்டாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை'.

மேகலா போய்விட்டாள்.

'நில்லுங்கள். நீங்கள்போகக் கூடாது. நான் சொல்றேன் மரியாதையாய் வீட்டிற்குப் போங்கள்.'

அதிகாரமாய் இருந்தது அக்குரல். மேகலா விறைப் பானாள். அவனை நோக்கித் திரும்பினாள்.

'நீங்கள் உடம்பு கொழுப்புப் பிடித்து குடும்ப மானத் தைக் குலைத்தால், உங்கள் உறவினறாய்த் தடுக்கும் அதி காரம் எனக்கு உண்டு'.

மேகலாவின் முகம் சிவந்தது.

'குடும்பமானமா? யாருடைய குடும்பமானம்? இந்த வீடு என்னோடது. நீங்கள் என் வீட்டில் வந்து இருக்கீங்க. உங்கள் வீட்டில் நான் இல்லை என் நடத்தை உங்களுக்கு அவ்வளவு அவமதிப்பாய் இருந்தால் நீங்கள் தயங்காமல் இந்த வீட்டை விட்டுப் போய் உங்கள் மானத்தைக் காப்பாற் றிக்கலாம்'.

மேகலா விடுவிடுடென்று போய்விட்டாள்.

சுபாஷின் கண்களில் நெருப்பு ஜுவாலை சுடர்விட்டது.

விவகாரம் ரொம்ப தூரத்துக்கு வந்து விட்டது. அந்த மனைவிகூட செத்துட்டாள் இல்லையா? இனி இவங்க



ரெண்டு பேரையும் யாராலுமே பிடிக்க முடியாது. பற்களை நறநறத்தான் அவன்.

'அக்கா என்ன, இவ்வளவு வெட்கங்கெட்டுப் போயிட் டாளே!' என்றாள் மானஸா.

❋ ❋ ❋

மேகலா ஜெயிலிலிருந்த கிருஷ்ணராஜைப் பார்ப்பதற் காக வந்தாள். அவன் முதலில் யாரையுமே பார்க்கமுடியாது என்று மறுத்து விட்டான். மேகலா திரும்பவும் சொல்லிய னுப்பியதால் தட்ட மாட்டாதவனாய் ஒப்புக்கொண்டான்.

மேகலா வந்தாள்.

அவன் மேகலாவை பார்க்கவில்லை; எங்கோ பார்த்தபடி பெருமூச்செறிந்தான்.

'ராஜ்!' மேகலாவின் மனதிலிருந்த வருத்தம் வேதனை எல்லாவற்றையும் குழைத்துக் கொண்டு வெளிவந்நாற் போலிருந்தது அவ்வழைப்பு. அவன் கீழே பார்த்துக் கொண்டே தாழ்ந்த குரலில் சொன்னான்.

'மேகா! உன்னை இப்பொழுது உன் வீட்டாரும், என்னைச் சேர்ந்தவர்களும் பலவிதமாய்ப் பேசறாங்க. இன்னும் இப்படிப் பண்ணினாயானால் காக்கையாய் குதறத் தொடங்கிடுவாங்க. வேண்டாம். தயவு செய்து என்னைப் பற்றி மறந்து விடு. எனக்காக ஒன்றும் செய்ய வேண்டாம். என்னை இனி அந்தக் கடவுளால்கூடக் காப்பாற்றமுடியாது டாக்டராய் நான் செத்துட்ட பிறகு நோயாளிங்களுக்கு சேவை செய்யாமல் என்னால் உயிரோடிருந்துவிட முடியுமானு நினைக்கிறாயா? வேண்டாம், மேகா! வேண்டாம்! என்னால் அந்தப் பயங்கரமான நரகத்தைத் தாங்கிக்க முடியாது. எனக்குத் தூக்குதண்டனை கிடைத்தாலே நல்லது. அது எவ்வளவு சீக்கிரமாய் வருமோ அவ்வளவு நல்லது.' அவன் குரல் விரக்தியாய் இருந்தது.

'ராஜ்! உங்கள் தைரியம் எல்லாம் என்னவாயிடுத்து?'

'தைரியமா? முதுகெலும்பு மட்டுமேயில்லை, கையும் காலும் உடைத்தெறியப்பட்ட மனிதனால் இனி எந்தச் சக்தியால் நிற்க முடியும் மேகா? பானு உயிரோடுடிருந்த போது மட்டுந்தான் என்றில்லை, செத்த பிறகும் என்னை வாட்டுகிறாள். பானு விரும்பியது கிடைத்துவிட்டது. உலகத்தாரிடமிருந்து வேண்டிய இரக்கம் அவளுக்குக் கிடைத்து விட்டது. போ, மேகா! தயவுசெய்து போ! என்னைப்பற்றி மறந்துவிடு. என் ஜோலிக்கு வராதே! இந்த உலகம் நம்மிருவரின் பெயரையும் சேர்த்து இன்னும் விகாரமாக்கும் நிலைமைக்குக் கொண்டு வந்துடாதே?' அவன் கைகளைக் கூப்பினான். மேகலாவின் உதட்டில் குறுநகைப் படர்ந்தது.

'உலகமா? அதைப் பற்றி உங்களுக் கென்ன தெரியும்? எனக்கு நன்றாய்த் தெரியும். அது அப்பாவிகளை எவ்வளவு இம்சிக்கும் என்று என்னைக் காட்டிலும் வேறு யாருக்கும் தெரிந்திருக்காதோ என்னவோ?' என்றாள்.

'நேரமாயிடுத்து'— சூபரிண்டென்ட் எச்சரித்ததால் மேகலா திரும்பி வந்து விட்டாள்.

மேகலா வீட்டிற்கு வந்தாள். எல்லோரும் மௌனமாய் ஏதோ போல் இருந்தார்கள். மேகலாவின் காலை வந்து கோபு கட்டிக்கொண்ட பொழுது மானஸா வந்து அவன் முதுகில் ஒன்று கொடுத்துவிட்டு அப்பால் இழுத்துச் சென்று விட்டாள். மேகலா டேபிளுக்கு முன்னால் வந்து உட்கார்ந்திருந்த பொழுது யாருமே சாப்பிட வில்லை.

'அவங்க யாருக்குமே பசியில்லையாம்மா' என்றான் சமையல்காரன்.

மேகலா வந்து அறையில் உட்கார்ந்து கொண்டாள். கிருஷ்ணராஜைக் காப்பாற்ற வேண்டும். தன் வாழ்க்கையையே பணயம் வைத்தாவது சரி, அவனைக்காப்பாற்றிவிட



வேண்டும். அவள் காதலித்தவன் மட்டுமேயில்லை அவன். மனிதப்பண்புடைய டாக்டர்! நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சேவை செய்பவன். தன் வாழ்க்கையை ஏழை எளியவர்களுக்கு அர்ப்பணிக்கும் தயாளன். அவனைக் காப்பாற்றித் தீர வேண்டும். அவன் காப்பாற்றப்பட்டால் அவளைப் போன்ற ஆதரவில்லாத எத்தனையோ பேருக்கு உபகாரம் கிட்டும்.

வீட்டிலிருந்தவர்கள் கூட எதிர்க்கிறார்கள். ஆனால் மேகலா கடுகளவும் பயப்படவில்லை. ஏனெனில் மேகலாவுக்கு, தான் இப்பொழுது போய்க் கொண்டிருந்தது கானல் நீரை நோக்கி இல்லை என்றும் குளிர்ந்த நிழலை நோக்கித் தான் என்றும் நன்றாய்த் தெரியும்.

உலக நிந்தனையைப் பற்றிச் சொன்னான் கிருஷ்ண ராஜ். கிருஷ்ணராஜுக்கு மேகலாவைப் பற்றித் தெரியாது. மேகலாவுக்குச் சிறு வயதிலிருந்தே உலகத்தாரின் நிந்தனைகளைக் கண்டால் பயம் இல்லை; பொருட்படுத்தும் சுபாவமும் இல்லை. உலகத்தை எதிர்த்துப் பழக்கப் பட்டிருந்தாள்.

மேகலா அன்றிரவெல்லாம் உறங்கவில்லை. மறுநாள் மாதர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோருமாய்ச் சேர்ந்து மேகலாவுக்கு சன்மானம் வழங்கவிருந்தார்கள். 'கலாராணி' என்ற பட்டத்தைத் தரப் போகிறார்கள்.

மேகலா அந்த விழாவுக்கு வர மாட்டேன் என்று மறுத்தாள். அவர்கள் காரியதரிசி வந்து கெஞ்சினார்.

'மேடம்! நாங்கள் ரெண்டு மாதத்திற்கு முன்னாடியே டிக்கெட்டுகளை விற்றுவிட்டோம். ஆயிரக்கணக்கில் சேமித்து அதை முதல்மந்திரியிடம் வெள்ள நிவாரண நிதிக்காக உங்கள் கையால் வழங்க விரும்புகிறோம். இதென்ன ரகளைகள் மேடம்? பழமரத்தின் மேல்தான் கல்லை விட்

டெறிவாங்க. வெறும் மரத்தின் மேல் எறிய மாட்டாங்க.
நீங்க அதையெல்லாம் பொருட்படுத்தாதீங்க. யாரோ,
எதையோ எழுதிட்டாங்கன்னு நீங்க ஏன் டயப்படறீங்க?
நீங்க வராமல் போனால் எங்களை ஜனங்கள் பிய்த்துக்
குதறிவிடுவாங்க!' அவருடைய பயம் அவருக்கு.

மேகலா விழாவிற்குப் போனாள். அவளோடு
நாகராஜனைத் தவிர யாரும் வரவில்லை. மானஸா தலைவலி
என்று வரவில்லை. மங்களம் பலராமனின் வீட்டிற்குப்
போயிருந்தாள். மேகலா மட்டுமே போனாள் — விழா மிக
நன்றாய் நடந்தது. மேகலா மிகச் சந்தோஷமாய்த் திரும்பி
வந்தாள். திரும்பி வந்தபோது வீட்டில் யாரும் இல்லை.
பட்சிகள் பறந்துப்போய் விட்ட கூடாய் இருந்தது அது.

மேஜை மேல் மானஸா எழுதிய கடிதம் இருந்தது.
மேகலாவுக்கு அதைப்படித்தபோது வாழ்க்கையில் என்றுமே
யார் மீதும் ஏற்பட்டிராத கோபம் வந்தது. உடன் பிறப்பு
என்ற வார்த்தையே பழிப்பது போலிருந்தது அது.

ஹாலில் இருந்த கடியாரம் டங் டங் என்று மூன்று மணி
அடித்தது. மேகலா திடுக்கிட்டுப்போய் நிமிர்ந்து பார்த்தாள்.
எத்தனை மணி நேரமாயிற்றோ அவள் இப்படியே உட்கார்ந்
திருக்கிறாள். அறையில் விடியற்காலையின் குளிர்ச்சிப்
பரவிக் கொண்டிருந்தது.

மேகலாவுக்கு அந்தவீட்டில் தான் தனியாய் இருக்கிறோம்
என்பது நினைவிற்கு வந்தது. தாய் மானஸா, சுபாஷ்
தன்னை விட்டுவட்டுப் போய் விட்டார்கள். இவ்வளவு
நாளாய் அவள் அவர்களுக்காகச் செய்த ஒரு நல்ல காரியம்
கூட அவர்களுக்கு ஞாபகத்தில் இல்லை. அவள் காட்டிய
அன்பால் அவர்களைத் தடுத்து நிறுத்திவிட முடியவில்லை.

மேகலாவுக்குத் திடீரென்று சொரணை வரத்தொடங்
கிற்று. அவளுக்கு அழுகைப் பொத்துக்கொண்டு வந்து



விட்டது. அந்தப் பெரிய ஹாலின் நடுவே இருந்த சோபாவில்
சரிந்து மேகலா தன்னந்தனியாய், சின்னப் பெண்ணைப்
போல அழுது கொண்டிருக்கையில், அறைக்குள் வந்து
வீசிய விடியற்காலை காற்று இரக்கம் ததும்பப் பார்த்துக்
கொண்டிருந்தாற்போலிருந்தது. தொலைவில் எங்கிருந்தோ
கூவிக்கொண்டிருந்த சேவலின் கூவல், இந்த உலகமே
இப்படித்தான் என்று எச்சரித்துக் கொண்டிருந்தாற்போல
இருந்தது. மேகலா கொஞ்ச நேரத்தில் தன்னையே தான்
தேற்றித் தேற்றிக் கொண்டாள். சீ! நான் இவ்வளவு கோழை
யாய் யோசித்துக் கொண்டிருக்கிறேனே, இதென்ன? இதற்கு
முன்னால் உலகமே எதிர்த்து நிற்கிறது என்றெண்ணிக்
கொண்டிருந்தேன். இப்பொழுது வீட்டாரும் உலகத்தா
ரோடு சேர்ந்து விட்டார்கள். நான் இவர்களுக்கு மட்டும் ஏன்
பயப் பட வேண்டும்? நல்லவேளை இப்பொழுதாவது இவர்
களின் சொரூபத்தைத் தெரிந்துக் கொண்டேனே! இதுவும்
நல்லதற்குத் தான்—என்றெண்ணிக் கொண்டாள். ஆனாலும்
கூட அவளால் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அதற்குள் போன் மணியடித்தது. திடுக்கிட்டு மேகலா
கண்களைத் துடைத்துக் கொண்டே எழுந்து போய் எடுத்
தாள்.

'ஹலோ!' என்றாள்.

'ஹலோ மேகா! நான் பலராமன் மாமா பேசுகிறேன்.
பாட்டியை ஆசுபத்திரியில் சேர்த்திருக்கோம். ஹார்ட்
அட்டாக். பிழைக்கமாட்டாள் என்கிறார் டாக்டர். உன்னை
வரச் சொல்கிறாள். வருகிறாயா?' என்றான்.

பலராமன் ஆசுபத்திரியின் பெயரைச் சொன்னான்.

மேகலா அரைமணிக்கெல்லாம் அந்த ஆசுபத்திரிக்கு
வந்து சேர்ந்தாள். இரண்டு தடவை, 'பாட்டி, பாட்டி' என்று
மேகலா கூப்பிட்ட பிறகு பிரயாசையுடன் கண்களைத்
திறந்து பார்த்தாள்.

'பாட்டி. நான்தான் மேகா' என்றாள்.

'மேகா' கையால் தடவினாள்.

'நான்தான் பாட்டி' கையைப் பிடித்துக் கொண்டாள்.

'மேகா!' மங்களம் எதற்கோ தடவினாள்.

'என்ன? என்ன வேணும்?'

'என் லேஸ் பை எங்கே?' அது எப்பொழுதும் அவள் இடுப்பிலேயே இருக்கும்.

'இதோ!' பக்கத்திலிருந்த அதை எடுத்துத் தந்தாள். மங்களம் பலவீனமான கைகளால் அதைத் தடவித் திறந்து ஒரு சின்ன துணி முடிச்சை எடுத்துத் தந்தாள்.

'இதென்ன பாட்டி?'

'உன் கல்யாணத்துக்காகக் கட்டிய முடிப்பு. எப்பவாவது உன் கல்யாணம் ஆனால் திருப்பதிக்குப் போய் ஏழுமலை யானுக்கு என் முடிப்புக்காணிக்கையைச் செலுத்திவிடு.'

'பாட்டீ!' மேகலா ஓவென்று கதறிவிட்டாள்.

'பைத்தியமே, எதுக்கு அழுகிறாய்? நீ எப்போதும் சினிமாவில் நடிச்சிட்டிருக்க முடியாது. ஆனால் சம்பாதித்த பணம் போதும். நல்லப் பையனாய்ப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கோ.' முனகலுடன வெளிவந்தது வார்த்தை. மேகலா அழுதுவிட்டாள்.

பொலபொலவென்று விடிந்து கொண்டிருந்தபோது, மங்களம் போய் விட்டாள். மேகலாவை மேலும் தனிமை பீடிக்கத் தொடங்கிற்று.



# 51

ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு நாள் மேகலா லாயர் வீட்டிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தாள். காரில் ஏறப்போனபொழுது ஸ்கூட்டரிலிருந்து இறங்கிய ஒருத்தன், 'மேடம்! ஆட்டோகிராப் தரமுடியுமா?' என்று புத்தகத்தை நீட்டினான். மேகலா கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந் தபோது அவன் சட்டென்று ஜேபியிலிருந்து ஒரு சீசாவை எடுத்து மேகலாவின் முகத்தின் மீது தெளிக்கப் போனான். மேகலா சரேலென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டாள். கன்னத்திலும் கழுத்திலும் கூந்தலிலும் பட்டு விட்டது அந்தத் திரவம். அடுத்த நிமிஷமே தகதகவென்று எரியத் தொடங்கிற்று. புடவையும் சட்டையும் வெந்து போய் விட்டன. டிரைவர் நடந்தது தெரிந்து ஓடி வருவதற்குள்ளா கவே அவன் ஸ்கூட்டாரில் ஏறிப் பறந்து விட்டான். லாயர் ஓட்டமாய் ஓடி வந்தார். மேகலாவை ஆசுபத்திரியில் சேர்த்தார்கள். ஆஸிட்பட்ட இடங்களில் சருமம் வெந்து விகாரமாகிவிட்டது.

மேகலாவுக்கு அந்தப் புண்கள் ஆறுவதற்கு வெகுநாட் கள் ஆகி விட்டன. 'பெயரும் புகழும் வழங்கிய சுகங்களில் இதுவும் ஒன்று என்று தோன்றிற்று.

மேகலா சோர்ந்துப் போய் கண்களைத் திறந்து பார்த்த பொழுது எதிரே ஸ்ரீரஞ்சனி நின்று கொண்டிருந்தாள்.

'மேகா!' பதற்றத்துடன் கூப்பிட்டாள்.

மேகலாவால் தன் கண்களையே தான் நம்ப முடியவில்லை.

பக்கங்களை மடக்காமலும் கிழிக்காமலும்
புத்தகத்தை கவனமாக

'அம்மீ! அழுகிறாயா? ஏன்?'

ஸ்ரீரஞ்சனி அழுதுகொண்டே சொன்னாள்: 'மேகா! நான் எவ்வளவு பாவி பார்! அவங்களோடு சேர்ந்து உன்னைக் கஷ்டப்படுத்திட்டேன். அவங்க எனக்குச் பசப்பு வார்த்தைகளைச் சொன்னார்கள். நானும் அவங்களோட வந்துட்டால் நீ எப்படியாவது மாறிப்போயிடுவாய்னு சொன்னாங்க. நீ கேட்பாய் என்ற ஆசையில் போனேன். நான்—நான் அப்படிப் போயிருக்கக்கூடாதுன்னு இப்பத்தான் தெரிகிறது. நீ ஆம்பிள்ளை இல்லாத குறையைத் தீர்த்தாய் எனக்கு. நானும் ஒரு மனுஷியாய் இந்தஉலகத்திற்கு முன்னால் தலைநிமிர்ந்து நிற்கிற அதிர்ஷ்டத்தைத் தந்தாய். உனக்குத் துன்பம் வந்ததைப் பார்த்தும் நான் கண்ணிருந்தும் குருடியாய் அவங்க பேச்சையே கேட்டேன். ஆனால் உன் துன்பத்தைக் காண சகிக்கவில்லை எனக்கு உன் மேல் ஆஸிடை ஊற்றிட்டாங்கன்னு கேட்டதுமே என்னால் பொறுக்கமுடியாமல் போயிடுத்து. இந்தக் காரியத்தைப் பண்ணியது யார் தெரியுமா! அந்த கிராதகன்தான்! உன்னைப் பெற்ற அத்தப் பாவி மனுஷன்தான்! அவர் நம் பணத்தைப் பார்த்துட்டு நம்ப பக்கமாய் வந்து சேர்ந்துக்கொண்டார்.

எலெக்ஷன் என்றதுமே என் நகைகளையெல்லாம் தந்து என் பெயரில் இருந்த பணத்தைத் தந்தேன். அவருக்கு என் பணத்தின் மேல் தானே தவிர, என்மேல் அன்பில்லைன்னு தெரிஞ்சுது. உன்னைப் பார்க்க வந்தபோது போகக்கூடாது என்றும் போனால் திரும்பித் தன் வாசலை மிதிக்கக்கூடாது என்றும் சொன்னான் சுபாஷ். நான்...நான் வந்துவிட்டேன். மேகா என் மேல் கோபமில்லையே?' என்றாள்.

'அம்மீ! நீ வந்துவிட்டாய். எனக்கு...எனக்கு நீ இருக்கிறாய். எனக்கு இனி எந்தப் பயமும் இல்லை' என்றாள் மேகலா கண்களை மூடிக்கொண்டே. மேகலாவுக்கு மிகவும் நிம்மதியாயிருந்தது.



எடுத்துச் சென்ற புத்தகத்தை
கொண்டு வராமல் மீண்டும்
புத்தகம் தரப்படமாட்டாது

## 52

சுமார் ஆறுமாதங்கள் ஓடிவிட்டன. கிருஷ்ணராஜ் இன்னும் ஜெயிலில் தான் இருந்தான். கேசு நடந்துகொண்டே இருந்தது. இந்த ஆறுமாதங்களில் மேகலாவின் வாழ்க்கையில் நிறைய மாறுதல்கள் வந்துவிட்டன. சினிமா வாழ்க்கையிலிருந்து முற்றிலுமாய் ரிடயர் ஆகிவிட்டாள்.

மேகலா தான் இருந்த வீட்டை விற்றுவிட்டாள். இருந்த கொஞ்சநஞ்சம் கடன்களையும் தீர்த்துவிட்டார்கள். மேகலாவுக்கு டிரைவர் காசி இருவரையும் தவிர வேறு வேலையாட்கள் இல்லை.

மேகலாவுக்கு இப்பொழுது வாழ்க்கை மிக அமைதியாகவும் நிர்ச்சிந்தையாகவும் இருந்தது.

சுபாஷும் மானஸாவும் வரவும் மாட்டார்கள், பேசவும் மாட்டார்கள். மேகலாவுக்குப் பொழுது போவது கஷ்டமாய் இருந்தது. ஆனாலும் அவளுக்குத் திகிலாய் இல்லை. தன்னிடம் வீட்டை விற்று கடன்களைத் தீர்த்தபிறகு மீந்திருந்த பணத்தைக் கொண்டு கிருஷ்ணராஜ் தொடங்கி அஸ்திவாரம் வரைக்கும் எழும்பி அப்படியே நின்று போயிருந்த ஆசுபத்திரியை முடிக்கத் தொடங்கினாள். முடிவடைந்துக் கொண்டிருந்த அதைப் பார்த்தபோது மிகச் சந்தோஷமாய் இருந்தது மேகலாவுக்கு.

கிருஷ்ணராஜ் விடுதலையானான். அவனை அழைத்துச் செல்வதற்காக மேகலா வந்தாள். ஆடம்பரமில்லாத எளிமையாள உடையலங்காரங்களுடன் எதிர்ப்பட்ட மேகலாவைப் பார்த்து அவன் கண்கள் பனிக்க, 'மேகா! எனக்குப் புனர்

ஜென்மத்தை வழங்கினாய் நீ. உன் நன்றிக்கடனை எப்படித் தீர்த்துப்பேன்?' என்றான்.

'என்னைப் போன்ற ஏழைங்களுக்குச் சேவை செய்து' என்றாள் மேகலா.

'நீ ஏழையா?'

'ஆமாம். ஏழை என்றால் நிறைய பேர் பணம் சம்பந்தப் பட்டதால் நினைக்கிறாங்க. அந்த ஏழைமையைப் பொறுத் துக் கொள்ள முடியும். ஆனால் இன்னொரு ஏழைமை இருக் கிறது. அது மனிதர்களின் மனதில் அன்பு சம்பந்தப்பட்ட வறுமை! அன்பு கிடைக்காத வறுமை! யாருமே தனக்கு நெருக்கமானவர்களிடமிருந்து பெறும் அன்பானது மிக விலைமதிப்பு வாய்ந்தது. இந்த உலகத்தில் அதை எந்தச் செல்வத்தாலும் மதிப்பிட்டுவிட முடியாது!'

'மேகலா! அந்தக் கன்னத்தில் அதென்ன?' அவன் சட்டென்று கேட்டான். மேகலா சுருக்கமாய்ச் சொன்னாள். அவன் சிலையாகிவிட்டான் கொஞ்ச நாளாய் மேகலா தன் கண்ணெதிரே வராமல் கடிதங்கள் மூலமாகவே தொடர்பு கொண்டு வந்ததற்குக் காரணம் என்னவென்று புரிந்து விட்டது.

'மேகா! என்னால் உனக்கு எவ்வளவு கஷ்டம்! இல்லையா?' என்றான் தொண்டை அடைக்க.

'இருவருக்கும் எத்தனையோ கஷ்டங்கள் ஏற்பட்டா லும், அந்தக் கஷ்டங்களுக்கிடையே நம்மை ஒருவர்க் கொருவர் துணையாய் அருளியிருக்கிறார் கடவுள்.

அது நம் அதிர்ஷ்டம் இல்லையா?' என்றாள் மேகலா. அவள் கண்களும் கலங்கிவிட்டன.

'ஆமாம்' என்றான் அவன்.



'வாங்க!' காரின் கதவைத் திறந்து பிடித்துக் கொண் டாள். கிருஷ்ணராஜ் வந்து ஏறிக் கொண்டான்.

'என்னை எங்கே கூட்டிட்டுப் போகிறாய் மேகா?'

கிருஷ்ணராஜ் மெல்லிய குரலில் கேட்டான்.

'தெய்வ சன்னிதிக்கு!'

அவன் பதில் பேசவில்லை அவன் என்றுமே கோவிலுக் குப் போகமாட்டான். மனித சேவையைக் காட்டிலும் பெரிய தெய்வசேவை இல்லை என்பான்.

கார் ஒரு பெரிய கட்டிடத்திற்கு முன்னால் வந்து நின்றது. மேகலா இறங்கினாள். கிருஷ்ணராஜ் வியப்போடு சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே இறங்கினான். எதிரே அவன் கண் முன்னால் இரட்டைமாடிக் கட்டிடம் தென் பட்டது. அக் கட்டிடம் முடிவடைந்து விட்டது. ஆனால் இன்னும் டிஸ்டம்பர் பூசப்படவில்லை. அங்கங்கே இன்னும் முடிக்க வேண்டிய வேலைகள் பாக்கி இருந்தாற்போலத் தோன்றிற்று. அங்கு கலர்த் தோரணங்கள் கட்டியிருந்தன. கேட்டிற்குக் குறுக்காய் சிவப்பு ரிப்பன் கட்டியிருந்தது. கிருஷ்ணராஜ் வியப்போடு பார்த்தான். கட்டிடத்திற்கு 'ஏழைகளின் சிகிச்சை நிலையம்' என்ற அழகான எழுத்துக் களுடன் பெரிய போர்டு தொங்கிக் கொண்டிருந்தது. அதிலேயே கீழே, 'டாக்டர் கிருஷ்ணராஜ் எம். டி.' என்றிருந்தது. 'மை காட்' என்றான் அவன் பேராச்சரியத் துடன்.

அவன் ஜெயிலுக்குப் போகும்பொழுது, அஸ்திவாரத் துடன் மட்டுமே இருந்தது இந்த நர்சிங்ஹோம் இப்பொழுது நன்றாய் முடிவடைந்து, அவனுக்காகக் காத்திருந்தாற் போலிருந்தது.

அவன் திரும்பி மேகலாவைப் பார்த்தான். மேகலா கார் போர்டிலிருந்து வெள்ளிக் கத்திரிக்கோலை எடுத்து வந்து கொடுத்தாள். அவன் ரிப்பனைக் கத்தரித்தான்.

உள்ளே நுழைந்ததுமே முன் எல்லையில் அடர்த்தியாய் வளர்ந்திருந்த நைட்க்வீன் செடிகள் இரண்டு மூன்று தென் பட்டன.

ஆசுபத்திரிக்குள் நுழைந்ததுமே கிருஷ்ணராஜ் திக் பிரம்மை அடைந்து போய் அப்படியே நின்றுவிட்டான். அவன் க்ளினிக்கில் இருந்த சாமான்கள் எல்லாம் இங்கே கொண்டு வரப்பட்டிருந்தன அவன் சரேலென்று மேகலாவைத் திரும்பிப் பார்த்தான் மூர்ச்சையடைந்து விழாதக் குறையாய். அறைகள் எல்லாம் தயாராய் இருந்தன. டிஸ்டம்பர் பூசப்பட்டு சாமான்களைக் கொண்டுவர வேண்டும், அவ்வளவுதான்.

அவன் அறைகளையெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு அவன் பெயர்ப்பலகை இருந்த அறைக்குள் வந்தான். அங்கே மேகலா நின்று கொண்டிருந்தாள். 'எஸ். டாக்டர்' தலையைக் குனிந்துகொண்டு வேடிக்கையாய் வணங்கினாள்.

அவன் மேகலாவையே பார்த்தான்.

அந்த நேரத்தில் மேகலா தெய்வச்சிலையைப் போலத் தென்பட்டாள். அவன் கண்களில் தென்பட்ட ஆனந்தத்தையும் வியப்பையும் கண்டதும் மேகலாவின் மனதில் பரவசம் ஏற்பட்டது. மேகலா அவனுக்கருகில் வந்தாள். அவன் கண்களில் நீர் பளபளத்துக் கொண்டிருந்தது.

'மேகா!' தன்னை யறியாமல் கைகளை நீட்டினான். மேகலா அவன் கைகளுக்கிடையே வந்தாள். சட்டென்று சிறு குழந்தையைப் போல அவனை அழுத்தமாய் கட்டிக் கொண்டுவிட்டாள்.



அவன் கம்மிய குரலோடு சொன்னா தெய்வ சன்னிதிக்குக் கூட்டிட்டுப் போவதாய் என்னிடம் எவ்வளவு புனிதமான ஆலயத் கொண்டு வந்திருக்கிறாய்! மேகா! உண் தெய்வ சந்நிதிதான்! இதில் குடிகொண்டி நீ தான்! ஏழை எளியவர்களுக்கு வைத்தியம் இந்த தெய்வத்திற்கு நான் காட்டும் கற்பூ லையா?' அவன் குரல் நெகிழ்ந்தது

இவ்வளவு நாளாய் நான் பணந்தான் தெய றெண்ணக் கொண்டிருந்தேன். ஆனால் என் வாழ்க் உங்கள் வரவிற்குப் பிறகு அன்பே தெய்வம் எ தோன்றிற்று. பணத்தை வெல்லக் கூடியதும், துச்சம மதிக்கக்கூடியதும் அன்பு ஒன்றுதான் போலும்!' கண்க மூடிக் கொண்டே பரவசத்துடன் சொன்னாள் அவள்.

இன்றைக்கு மேகலாவுக்குத் தன்னுடையது என் எதுவுமே இல்லை எல்லாவற்றையும் ஆசுபத்திரிக்கே செ வழித்து விட்டாள். ஆனாலும் மேகலாவுக்குக் கடுகளவு திகில் ஏற்படவில்லை. ஏனெனில் இப்பொழுது மேகலாவுக் கிருஷ்ணராஜ் என்ற மலையத்தனை செல்வம் இருக்கிறான் அந்தப் பெருமையும் தைரியமும் அம் முகத்தில் நன்றாய் தென்பட்டன.

மேகலா கண்களைத் திறந்தாள் குருஷ்ண ர தோளில் கைகளை ஊன்றிக் கொண்டு சிரித்தாள். களில் என்றுமே அனுபவித்தறியாத சந்தோஷ தியும் இருந்தன. அவை ஆனந்த சாகரமாய் மி டிருந்தன கிருஷ்ணராஜ் மேகலாவை பார்த்தான். அவன் கரங்கள் மேகலாவை ணைத்துக் கொண்டன.

முடிந்தது.